...பதிதுணை.

தேவேந்திர நாத்

மாயாஜால விநோதம்

இரண்டு பாகமும்.

OFFICE ... REGISTRAR ... 6 JAN 1927 MADRAS

இவை

அநேக நூல்கட்குக் கிரந்தகர்த்தரும்,

ககோள சித்தாந்த கணித சாஸ்திரக்ஞரும்,

இயந்திர கணித பரிசோதகரும்,

மெஸ்மரிஸ ஹிப்நாடிஸ பராக்கிரமியு மாகிய,

சதாவதானம்

செழுமணவை - சித்திரக்கவி

தேவேந்திரநாத பண்டித ரவர்களால்

இயற்றப்பட்டு,

059

கேளம்பாக்கம்

அ. மதுரை முதலியா ரவர்களால்

பிரசுரிக்கப்பட்டது.

ACL-TML 01175

ஷண்முகானந்த புத்தகசாலை,

நெ. 32, நைனியப்ப நாய்க்கன் வீதி, பார்க்—வுன், மதராஸ்.

...ஸ்டர் காபிரைட்] 1926 [இதன் விலை ரூபா 1 0 0

Printed at the
Ganesa Press, Vepery,
Madras.

35
1334

உ
ணபதி துணை.

...்வந்திர நாத்

மாயாஜால விநோதம்.

முதற் பாகம்.

விநாயகர் வணக்கம்.

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுரை
சகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

1. விநாயகர் மாயமாய்ப்போகுதல்

ஓர் பெரிய படிகாரத்துண்டை நெருப்பிலிட்டுப் பொரிக்க அது பூரித்து பெருமனுகத் தோன்றும். அதை மெல்லிய கத்தியைக்கொண்டு, ...ன்னப்படாமல் விநாயகரைப்போல சீவி வைத்துக்கொண்டு, சபையிலிருப் ...வர்களைப் பார்த்து நான் இந்த விநாயகரை என்னுடைய மந்திர சக்தி ...னுல் பாதாளத்திற்குப் போகச் சொல்லுகிறேன் பாருங்களென்று சொல்லி, சோடசோபசாரத்துடன் பூசை முதலானவைகளைச் செய்து விநா...யகர் அஷ்டோத்திர மந்திரத்தை வாயினிடமாகச் சொல்லிக்கொண்டே விநாயகர்பேரில் மண்ணை அள்ளிப்போட்டு கொஞ்சம் ஜலந் தெளிக்க விநா...யகர் மாயமாய்ப் போய்விடுவார். அதன் பிறகு முன் மூடின மண்ணைக் ...ளரிக் காண்பிக்க விநாயகர் இல்லாமல் வெறு மண்ணைக் கண்ட ஜனங் ...ள் உனக்கு விநாயகர் வசியமென்று சொல்லி ஆச்சரியப்படுவார்கள்.

2. மணலைக் கிளரி விநாயகரைக் காட்டுதல்.

அப்பட்டமான வெள்ளை மெழுக்கைக் கொண்டுவந்து விநாயகரைப் ...போல் அடக்கமாக உருவஞ்செய்து ஒருவருக்குந் தெரியாது கையடக்கமாக ...வத்துக்கொண்டு, அனைவர்களையும் பார்த்து முன் மாயமாகப் போய் ...க்கொண்ட விநாயகரை மறுபடியும் என் குருவின் அனுக்கிரகத்தி... ...க்கிறேன் பாருங்களென்று சொல்லி, முன் மாதிரி விநாயக... ...லிக்கொண்டே, கையில் வைத்திருக்கும் விநாயகரை ...தெரியாது மறைத்துவிட்டு, அர்ச்சனை முதலிய ...எவர்கள் எதிரிலும் மேற்படி மண்ணைக் கிளரி ... ஆச்சரியப்படுவார்கள். ஆனால் இப்போ... ...செய்து காண்பிக்கும்போது உருவுக... ...மல் இருக்கவேண்டும். ஏனெ... ...ப்படும் பக்ஷத்தில் பார்ப்பவர்...

... MADRAS

ரை அந்

அ விநாயகவை
தயான காந்தத்தைச்சொ மல், ப
ணங்களால் விநாயகரைச் சித்தரித்து அ கூடியிருக்கு
சனையில் மேலே இரும்பாணியிருக்கும்விடப தற்குச்சரியா
விநாயகரைவைத்து, பயபக்தியுடன் பூசைசெ வர்களையும்பார்த்
இதோ விநாயகர் ஆகாயமார்க்கத்தில் எழும்பப்போ பாருங்களென்
சொல்லி, சோடசோபசாரத்துடன் கற்பூரஆலாத்தியை ாண்பிக்க வி
யகர் மேலெழும்புவார். இவ்விநோதத்தைப்பார்த்தவர்களெல்லாம் உனக்
விநாயகர் வசியமென்று கொண்டாடுவார்கள். ஆனால் மேலேயிருக்கு
இரும்பாணிக்கும், கீழேயிருக்கும் பிள்ளையாருக்கும் நடுவில் துப்பட்டியை
கொண்டு திரைகட்டிவிடவேண்டும். கற்பூரஆலாத்தியெடுக்கும்போது சட
கென்று அத்திரையை யெடுத்துவிட்டால் மேலிருக்கும் இரும்பாணியான து
கீழிருக்கும் காந்தத்தையிழுக்கும். இச்சூதுதெரியாமல் இருக்கும்பொருட்
தான் முன்ஜாக்ரதையாக எல்லாவற்றையும் சேகரித்துக்கொள்ளவேணும்

4. சகல வேலைகளுக்கும் அஞ்சனம்

கரும்பூனை, கீறிப்பிள்ளை, இரட்டைவால் அரணை, திகைப்பூண்டு பூச்
பேய்ப்பீர்க்கன் விரை, புல்லாமணக்கன் விரை இவைகளையெல்லாம் ஒ
நிறையாக எடுத்து பேய்ப்பீர்க்கன் சாற்றில் ஒரு சாமம் ஊறப்போட்
எடுத்துலர்த்தி, மறுபடியும் ஆற்றுத்தும்மட்டிக்காய் சாற்றில் 1-சாம
உலர்த்தி, அதன்பின்பு அவைகளை யெல்லாம் ஓர் புதுப்பாண்டத்திலிட்டு
குழித் தைலம் வாங்கி, அதற்குச் சரிபாகம் ஐங்கோலத்தைலஞ் சேர்த்து
பிறகு, ரசம், சங்கு பாஷாணம், முப்பூ, இவைகளை வகை ஒன்றுக்கு ஒ
கழஞ்சு சேர்த்து, கல்வத்திலிட்டு, மைபதம் வருமளவும் அரைத்து செப்பு
சிமிளில் அடக்கஞ் செய்து, ஜாலக்காளை வெள்ளைப் புஷ்பத்தினால் அர்ச்சி
துப் பிறகு, ஸ்ரீரீம், கிரீம், கிலியும், சவ்வும், ஐயும், அவ்வும், உவ்வும், அவ், கூ,
கூ, நீலகண்டி மஹாதேவி யென்று லக்ஷத்தியெட்டுரு செபிக்க அஞ்சனத்
திற்கு மூர்த்திகரமுண்டாகும். அதன்பிறகு அம்மையைக்கொண்டு நீ என்
னென்ன வேலைகளை மனதில் நினைக்கின்றாயோ அதது அம்மாதிரியாகவே
எதிரிகளுக்குத் தோன்றும்.

5. மஹேந்திரஜாலஞ் செய்தல்.

முன்சொன்னமையை கையில்பூசிக்கொண்டு, மண்ணை அள்ளி ஜலாக
காளைத்தியானித்து, எட்டுதிக்குகளிலும்போட பார்ப்பவர்களுக்கு பெரிய
பெரியமலைகளும், குன்றுகளும் இருக்கின்றமாதிரி தோன்றும்.

6. சமுத்திரஜாலஞ் செய்தல்.

முன்சொன்னமையை இரண்டுகைகளிலும் பூசி ண்
ளைத்தியானித்து மண்ணையள்ளி நாலுதிக்குகளிலும்போ
கள், பட்டணங்கள், சமுத்திரமுதலியவை தோ

7. இந்திர ஜாலஞ்

முன் தயாரித்த மையைப் பொட்டிட்டு
தடவி, விசறிவிட பார்ப்பவர்களுக்கு
கையில் மையைத் தடவிக்கொ
றனென்று நான்கு திக்கிலு

...ர்ப்பவர் கண்களுக்குப் பெருத்த சேனைகள் திரண்டு வருகிறதைப்போலத் ...ான்றும் சல்மலையாள பகவதி இந்த நூலேணியை வாங்கிக்கொள் ளென்று ஆகாயத்தில் விட்டெறிந்தால் அது அந்தரமாகவே ஏணியைப் போல் நிற்கும். இம்மையை வாழைக்கட்டைக்குத் தடவி சபையில் ஆனை, குதிரை பன்றி மனிதன் முதலியதில் எதை நீ மனதில் தியானித்து வெட்டுகிறாயோ அதைப்போலவே பார்ப்பவர் கண்களுக்குத் தோற் றும். இதல்லாது கல்யாணப் பூசுணிக்காயை வெட்ட ஆனைத்தலையும் நல்லதொரு பூசுணிக்காயில் தடவிவெட்ட குதிரைத் தலையும் கெச் சக்காய்க்குத் தடவி வெட்ட மனிதன் தலைகளும் வந்துவிழும் அதைப் பார்ப்பவர்களெல்லாம் பிரமித்து உனக்கு காளிகாதேவி உச்சாடனமென்று கொண்டாடுவார்கள். நீ மறுபடியும் எல்லா தலையும் ஒன்றுசேர்த்து ஜலந் தெளித்து சல் பகவதி ஓடிப்போவென்று சொல்ல மாயமாய் விடும்.

8. நினைத்த தேவர்களைக் காட்டுதல்.

சிறுமுன்னையென்னுஞ் செடிக்கு ஆதிவாரமும், அமவாசையும் சேர்ந்த தினத்தில் முப்பலியுடன் பொங்கலிட்டு, மஞ்சள் காப்புகட்டிவிட்டு வந்து விடவும், மறு ஆதிவாரஞ்செய்து பானக பூசையுடன் அவ்வேரை அறுமல் பிடிங்கிவந்து நிழலிலுலர்த்திப் பொடிசெய்து, அப்பொடியை வெள்ளைவஸ் திரத்தில்வைத்துத் திரித்து, ஐங்கோலத்தைலத்தில் ஊறப்போட்டு வைத் துக்கொண்டு, வேடிக்கையாக ஜனங்களைப்பார்த்து, நீங்கள் உங்களுடைய மனதில் என்னென்ன தேவர்களை நினைக்கின்றீர்களோ அவர்களையெல்லாம் நான் காட்கிறேன் பாருங்களென்றுசொல்லி, காராம்பசுநெய்யை ஓர் அகலி லூற்றி, முன் ஊறவைத்திருக்கும் திரியைப்போட்டு விளக்கைக்கொளுத்தப் பார்த்தவர்களெல்லாம் தங்கள்தங்கள்மனதில் என்னென்ன தேவதைகளை நினைத்தார்களோ அது அந்தந்தமாதிரியே அவர்களுக்குத் தோற்றும்.

9. கத்தியை விழுங்குதல்.

முன் சொன்னமையை பெரிய பட்டாகத்தி ஒன்றுக்கு தடவி, சனங்க ளைப்பார்த்து நான் இந்தகத்தியை விழுங்கிவிடுகிறேன் பாருங்களென்று சொல்லி, வாய்க்கு நேராகவைத்துக்கொண்டு மேற்படி மையைத் திலர்த மிட்டுக் கத்தியைப் பின்புறம்விட்டுவிடப் பார்த்தவர்கண்களுக்கு உண்மை யாகவே நீ கத்தியை விழுங்கிவிட்டதாகத் தோற்றப்படும்.

10. பட்டணங்களைத் தோன்றச்செய்தல்.

இருட்டுக்காலமாயிருக்கும்போது வேடிக்கையாகப் பத்துபதினைந்து பெயர்களைக்கூட்டிக்கொண்டு ஓர் மைதானத்திற்சென்று அவர்களைப் பார்த்து நான் இம்மைதானத்தைப் பட்டணமாகச்செய்கிறேன் பாருங்க ளென்றுசொல்லி, மையைக் கையில்பூசிக்கொண்டு மண்ணையள்ளி சல் மலை யாள்பகவதி இம்மண்விழுந்த இடமெல்லாம் பட்டணங்களை உண்டுபண்ணு வாயென்று நான்குதிக்குகளிலும் விசறிவிட பார்ப்பவர்கண்களுக்கு பட்ட ணங்களும், வீதிகளும், கோயில்களும் குளங்களும் ஜனங்களுமாகத் தோன்றும். எல்லோரும் ஆச்சரியப்பட்டு உன்னைப்புகழ்வார்கள்.

11. கோகர்னவித்தை செய்தல்.

ஓம் அவ்வும் உவ்வும் மவ்வும் ஸ்ரீம் இரீம் கிலியும் வயநமசி ஓம் குறளிவருவாய் என் வேலைகளைத்தடையின்றிச் செய்வாய் என்று லக்ஷம்உரு செபித்து முன்சொன்னமையைக் கையிலெடுத்து நினைத்தவிடத்ததைத் தொட அவ்விடமெல்லாம் பத்தலபத்தலாகக் கிழ்யும் பார்த்தவர்கள் பிர மி...ார்கள்.

12. கேஜகர்ண வித்தை செய்தல்

முன்சொல்லிய மையை இரண்டு கைகளிலுந் தொட்டுக்கொண்டு குறளியைத் தியானித்து இரண்டு கால்களையுந் தொட்டால் பார்ப்பவர் கண்களுக்குக் காதுகள் ஆடுவதைப்போன்று தோன்றும்.

13. ஜனங்களை ஆடும்படிச் செய்தல்

ஓர் கொம்பிற்கு சாம்பிராணியை ஐங்கோலத் தைலத்திற் கலந்து பூசிக் காயவைத்து பிறகு நமசிவய ஓம் கிலீம் சவ்வும் அய்யும் சர்வ பசாசு பூதங்களும் அக்ருஷணி என்று லக்ஷமுரு கொடுத்து தூபதீபங் காட்ட அப்புகைபட்ட ஜனங்களெல்லாம் ஆடுவார்கள் மகா வேடிக்கையாயிருக்கும்.

14. பார்வை அஞ்சனஞ் செய்தல்

ஆமை-1. சொரியாந்தவளை-1. முதல் கோழிமுட்டை-1. சமாதிவைத்த பிணத்தின் எலும்பு பலம்-2. புத்தீசல் பலம்-2. நிலவாகை விதை பலம்-2. மாக்கொடி விராகனெடை-3. இவைகளையெல்லாம் பூந்தயில மிரக்கி, ஓர் சுத்தமான கல்வத்தில் ஓர் விராகனெடை அஞ்சனக் கல்லைப்போட்டு முன் தைலமும் ஆள்காட்டிக் குருவியின் கருவையும் விட்டு மைபோல ஒரு சாம மரைத்து செப்புச்சிமிளில் வைத்துக்கொண்டு ஆஞ்சநேயரையும் அஞ்சன தேவியையும் பூசித்து வெற்றிலையில் தடவி நல்லெண்ணெய் விளக்கில் பார்க்க களவு ஏவல் தெய்வம் பூதப்பசாசு முதலியவைகளெல்லாம் நன்ருகத்தெரியும்.

15. இதுவும் பாதாள அஞ்சனஞ் செய்தல்

தேவடியாள் கை வெற்றிலையோடு ஊமையின் கை மஞ்சளைச்சேர்த்து அதனுடன் காந்தம் நீலம் செங்கழுநீர்வேர் தலைமஞ்சங்கொடி கோரோசனை குங்குமப்பூ இவைகளை வகையொன்றுக்கு ஒரு விராகனெடையாகக் கல்வத்தில் போட்டு மாடப்புராவின் உதிரத்தாலரைத்து பனிரெண்டு பலம் சிகப்பு நெய்விட்டுக் குழைத்து செப்புச்சிமிளில் பத்திரப்படுத்தி அதைக் காளியின் முன்பாக எட்டுநாள் புதைத்துவைத்து ஒன்பதாவதுநாள் எடுத்து புனுகு சவ்வாது இவ்விரண்டும் வகைக்கு ஒருவிராகனெடை சேர்த்துக்குழைத்துப் பிறகு சர்வலோக வசிகரீ-கிரீம்-ஓம் என்று லக்ஷத்தியெட்டு உருவுகொடுத்துத் திலர்தமிட ஸ்திரீபுருடர்களிருவரும் உனக்கு வசியமாவார்கள்.

16. இதுவுமது.

வேர்ப்பலாக்கொட்டையைக் கருக்கினதூள் விராகனெடை 10. அஞ்சனபாஷாணம் விராகனெடை 1. இவைகளைச் சுத்தியாக கல்வத்திலிட்டு ஒரு சாமம் முத்துக்கொட்டை எண்ணெவார்த்தரைத்து செப்புச்சிமிளில் வைத்துக்கொண்டு முன் அஞ்சனத்திற்கு செபித்தமந்திரத்தை ஆயிரத்தெட்டுவிசைசெபித்து ஒருவாரம் பூமியில்புதைத்துவைத்தெடுக்கசித்தியாம்.

17. நெருப்பு உண்டாகச்செய்தல்.

தீமுறுகல்பாஷாணத்தை கடுகுபிரமாணமாகத் துணித்து தாடையிலடக்கிக்கொண்டு வேடிக்கையாக பலபேர்கள் முன்னிலையில் வைக்கோலைக்கொண்டுவந்து போடச்சொல்லி ஏதோ மந்திரம்சொல்லுகிறதைப் போல் மொணமொணவென்று வாயை அசைத்துக்கொண்டேயிருந்து காற்றுவாட்டமாக யிருக்கும்போது சமயம்பார்த்து வாயிலிருக்கும் பாஷா

பாஷ

ணமானது வைக்கோலில்விழும்படியாக ஊத குபீரென்று பத்தியெரியும் பார்ப்பவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டு உனக்கு அக்கினிமந்திரம் தெரியுமென்று நினைத்துக்கொள்வார்கள். இதிலிருக்கும் தந்திரத்தை யாரும் அறியமாட்டார்கள்.

18. நெல்லைப் பொறியாக்குதல்.

தேவையான நெல்லை சுண்ணம்புக்கால்வாயின்கீழ் புதைத்துவைத்து சுண்ணம்புகொளுத்தியபின் னெடுத்துவந்து பத்திரப்படுத்திக்கொண்டு, சிநேகிதர்களைப்பார்த்து நான் பச்சைநெல்லைத் தீயில்லாமல்பொறித்துக் காட்டுகிறேன் பாருங்களென்றுசொல்லி ஜாலக்காளைத்தியானித்து ஓர் முறத்தில் முன்தயாரித்திருக்கும் நெல்லைப்போட்டு மொணமொணவென்று மந்திரஞ்சொல்லிக்கொண்டே ஜலந்தெளித்துப்பிரட்ட பளபளவென்று பொறியும். பார்த்தவர்களெல்லாம் உன்னை மெச்சிக்கொண்டாடுவார்கள்.

19. வஸ்திரத்தைக் கொளுத்திக் காட்டுதல்

முன்னதாகவே (ஸ்பிரிட்) என்னும் திராவகத்தைச் சேகரஞ்செய்து வைத்துக்கொண்டு சனங்களைப் பார்தது ஓர் கைக்குட்டையை வாங்கிக் கொண்டு அதை மேற்படி ஸ்பிரிட்டில் நனைத்துக்கொளுத்த பத்தியெரியும் அதைப் பார்த்தவர்கள் குட்டை வெந்துவிட்டதென்றே நினைப்பார்கள். அந்தசமயம் ஓம்காளி ஓடிவாகாளி ஆங்காரகாளி என்று சொல்லிக்கொண்டு அதை எரியும்போதே அவித்து ஜலத்தில் நனைத்துப் பிழிந்துக்காட்ட குட்டை பழுதில்லாமலிருக்கும்.

20. முள்ளின்மீது உட்காருதல்

செப்பு நெருஞ்சிச் செடிக்கும் ரத்தன்புருஸ் செடிக்கும் ஆதிவாரத்தில் பொங்கலிட்டு தூபதீபங் காட்டி, காப்புக்கட்டி மறு ஆதிவாரம் தன்னுடைய பக்ஷி அரசாயிருக்கும்போது சென்று வேர் அறுமல் பிடுங்கிவந்து ஒன்றுக்கொன்று தலைமாற்றி குளிசத்திலடைத்து ந-ம-சி-வ-ய என்னும் மந்திரத்தை ஆயிரத்தெட்டு விசை செபித்துவைத்துக்கொண்டு பிறகு எப்போதேனும் சமயம் வந்தபோது பந்தயங் கட்டிக்கொண்டு மேற்படி குளிசத்தை வாயிலடக்கிக்கொண்டு முள்ளின்பேரில் உட்கார முள் தைக்காது பார்த்தவர்களெல்லாம் உன்னை மஹா சித்த புருடனென்றே சொல்லுவார்கள்.

21. சர்வ வசியம்.

றீம்-ஐயும்-கிலியும்-ஸ்ரீம்-சவ்வும்-இறீம்-கிலீம்-ஓம் என்ற மந்திரத்தை லக்ஷத்தியெட்டுதரஞ் செபிக்கச் சித்தியாகி சகலநன்மையுமுண்டாவதுடன் தரித்திரமும் விலகும்.

22. வாயில்பந்தங்கொளுத்தி வைக்குதல்.

ஆலாத்தி கற்பூரத்தைமென்று நன்ருகக்குதப்பித் துப்பிவிட்டு, பந்தத்தைக்கொளுத்தி வாயில்வைத்துக்காட்ட ஆச்சரியப்படுவார்கள்கைசுடாது.

23. கரைத்தமஞ்சளை எடுக்குதல்.

கொஞ்சம் நல்லமஞ்சளை அரைத்து நீரில்கரைத்து எல்லோருக்குங் காட்டிவிட்டு மறுபடியும் கரைத்தமஞ்சளை எடுக்கின்றேன் பாருங்களென்று சபதங்கூறி நீர்முள்ளிவிரையைத் தூளாக்கிக்கலந்த விபூதியை முன்னதாகவே தயாரித்து வைத்துக்கொண்டிருந்து அதை மந்திரஞ்செபித்து ஜலத்

தில்போடுகிறபாவனையாகப் போட்டுத் துழாவியெடுக்க மஞ்சளைப்போல் உருண்டையாகவரும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்பட்டு உனக்குக் கங்கா பவானி வசியமென்று சொல்லுவார்கள்.

24. ஓட்டமாக ஓடுதல்.

விழுதியிலையைக் கொஞ்சமெடுத்துமென்று வாயிலடக்கிக்கொண்டு எவ்வளவுதூரமானாலும் ஓட்டமாக ஓடலாம் நிற்கவேண்டுமானால் எதாகிலும் ஓர் மரத்தைப்பிடித்துத்தான் நிற்கவேணும்.

25. வாட்டிலோடு மேல்லுதல்.

நாயுருவிவேரையாகிலும் வேளைவேரையாகிலும் மென்று நன்றாக வாயெல்லாம் படும்படி குதப்பிவிட்டு வேரை வாயில் அடக்கிக்கொண்டு சீசாஓட்டை மெல்ல வாயறுபடாது.

26. பச்சைப்பாம்பு மேயுதல்.

ஓர் பச்சைப்பாம்பைப் பிடித்துவந்து அதன்வயிற்றில் பிடிக்கும்படியான ஆமணக்கன்கொட்டையைத்திருத்துப் பூமியில் புதைத்து பயிராக்கிச் செடியானவுடன் அதில் காய்க்கும்படியான கொட்டையை எண்ணெயாடி வைத்துக்கொண்டு வேண்டும்போது தமாஷாக பருத்திப்பஞ்சினால் திரி போட்டு முன் எண்ணெயையூற்றி விளக்கேற்ற அவ்விளக்குப் பிரகாசம் எவ்வளவுதூரந்தெரிகிறதோ அவ்வளவுதூரமும் பச்சைப்பாம்புமேய்கிறமாதிரியே தெரியும்.

27. மணலை மேல்லுதல்.

குன்றியிலையைமென்று வாயிலடக்கிக்கொண்டு எவ்வளவுமணலையேனும் கூசாது மெல்லலாம்.

28. வசியஞ் செய்தல்.

சீதாதேவி செழுங்கழுநீர் சூரியகாந்தி முல்லை கோழியவரை வெண்ணைக்காவளை செவ்வலரி கரிசலாங்கண்ணி இவைகளின்சாறு வகைக்கு விராகனெடை 1. கோரோசனை புனுகு பச்சைகற்பூரம் இவைகள் வகைக்கு விராகனெடை கால், பெண் மது விராகனெடை ஒன்று சேர்த்து அரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு மோகினி மந்திரத்தை ஆயிரத்தெட்டுரு செபித்து பொட்டிட்டுவரப் பார்த்த ஜனங்களெல்லாம் உன்னை வணங்கி வசியமாவார்கள்.

29. இதுவுமது

அழிஞ்சில் சமூலத்தைக் கொண்டுவந்து நிழலிலுலர்த்தித் தூளாக்கி அதை பெண்ணின் சீலையில் வைத்துத் திரியாக்கி முன்மாதிரி கொளுத்தி மை வாங்கி திலர்தமிட்டுக் கடலாடையுடுத்த இக்காசினியின்கண் ஆகாத வசியமுமுண்டோ?

30. இதுவுமது:

கஸ்தூரிமஞ்சள் காந்தம் கோரோசனை இலவங்கம் பச்சைக் கற்பூரம் சாதிக்காய் மதனப்பூ இவைகளை வகைக்குக் கால்விராகனெடையாகயெடுத்து வெள்ளைத் துணியில் வைத்து அதனுடன் தலைப்பிண்டக் கொடியை வைத்துத் திரித்து அதின்மேல் கருப்பு பட்டுத் துணியைச் சுருட்டி மண்டை ஓட்டில் காராம் பசுவின் நெய்யூற்றி அதில் மேற்படி

திரியைப் போட்டுக் கொளுத்தி மை வாங்கி அம்மையில் புனுகு-சவ்வாது சேர்த்துக் குழைத்துச் சிமிளில் அடக்கஞ் செய்துக்கொண்டு உன் குல தேவதைக்குப் பூசைபோட்டு மையைத் திலர்தமிட மனிதர் தேவர் இராக்ஷதர் பைசாசர் முதலியவர்களும் வசியமாவார்கள்.

31. இதுவுமது

நன்ருக முத்தி தேறின ஆடாதோடைக் கிழங்குக்கு பொங்கல் பூசை முதலியதுகளைச் செய்து எடுத்துக்கொண்டு வந்து அதனுடன் அதின் பழமும் கோரோசனையுங் கூட்டி அரைத்து வெள்ளைத் துணியில் தடவித் திரியாக்கி காயவைத்து ஓர் மண்டையோட்டில் சாரைப்பாம்பு நெய்யையூற்றி திரியைப்போட்டு எரித்து மை வாங்கி அதனுடன் புத்துத் தேனைவிட்டுக் கல்வத்திலரைக்க கல்வம் வெடித்துக் காணும் அது சமயம் பயப்படாது எடுத்துப் பரணியில் வைத்துக்கொண்டு கணபதி ஆஞ்சநேயர் அஞ்சனு தேவி இவர்கள் மூவரையும் பயபக்தியுடன் பணிந்து மசி-நசி யென்ற மந்திரத்தை எட்டு நாள் விடாது அந்தி சந்தி செபித்து அதன் பிறகு கணபதியைப் போற்றி கண்களில் தீட்டிப்பார்த்தால் உலகத்திலுள்ள சகல பொருள்களும் தோன்றும்.

32. இதுவுமது

வெள்ளிக்கிழமையதினம் தன்னுடைய பக்ஷி அரசாயிருக்கும்போது மிளகுச்சாரணை செடிக்கு பொங்கலிட்டுக் காப்பு கட்டி மறு வெள்ளிக்கிழமைய தினம் தூபதீபத்துடன் பலிகொடுத்து வேரைப் பிடுங்கி வந்து குளிசமாடி கட்டிக்கொண்டால் ஸ்திரீகள் வசியமாவார்கள்.

33. இதுவுமது

ஊமத்தை செம்முள்ளி பொன்னுங்காணி சிவந்த கஞ்சா செங்குவளை பொன்னுவாரை புல்லாமணக்கு சென்னுயுருவி வேர் இவைகளின் சாறு வகைக்கு விராகனெடை ஒன்ருக யெடுத்து அதனுடன் புனுகு சவ்வாது கோரோசனை மூன்றையும் மேற்படி அளவே சேர்த்து புத்துத் தேன் காராம்பசு நெய் சிற்றண்டக்கரு இவைகளை விட்டரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு வாலையைப் போற்றித் திலர்தமிட்டுவர, எவ்வளவு அவலக்ஷண அங்கயீனமுள்ள மாதர்களாயிருந்தாலும் புருஷர்கள் மோகித்து அவர்கள் கேட்டதைக் கொடுப்பார்கள்.

34. இதுவுமது

றீம் ஐயும் கிலியும் ஸ்ரீம் சவ்வும் இறீம் கிலீம் ஓம் என்னும் மந்திரத்தை லக்ஷத்தி யெட்டுருவு செபிக்க வசியமாகும்.

35. ஜாலக்காள் வசியம்

மஞ்சள் கிழங்கில் பெண் உருவஞ் செய்து சித்திர மூலக்கொடியை அதின்பேரில் சுற்றி, ஜாகினி டாகினி, ஜாலக்காள் தேவி நீ ரா, ரா ரா யென்று லக்ஷத்தியெட்டுருவு செபிக்க வசியமாகி சதா உன்னுடன் விளையாடிக் கொண்டிருப்பாள்.

36. கண்கட்டு மை ஜாலம்.

கால்கழஞ்சு சங்கு பாஷாணத்தில் 10-குன்றியிடை பாதரசத்தைச் சேர்த்து ஊர்க்குருவி வாயினுட் செலுத்தி, அபானவாய் முதலியவைகளைத் தைத்து ஓர் குடுவையில் போட்டு ஒரு படி கள்ளு வார்த்து ஓர் மரத்து

விரகினால் எரித்து எட்டொன்றாகக் காய்ச்சி அஸ்தி ரோமம் முதலியவை களைப் போக்கி பேய்க்கருப்பன் சாற்றால் மைபோலரைத்து வெள்ளைத் துணியில் தடவி நிழலிலுலர்த்தித் திரி செய்து தலைமண்டையோட்டில் ஐங்கோலத் தைலம் வார்த்து மேற்படி திரியைப்போட்டு தீபமேற்றி மை வாங்கி ஜாலக்காளைத் தியானித்து சிமிளில் வைத்துக்கொண்டு தேவை யான வித்தைகளை நினைத்தது நினைத்தபடி விளையாடலாம்.

37. பாப்பாகும் வித்தை.

கண்கட்டுமையைத்தொட்டு வைக்கோலில் தடவி சபையில்போட பார்ப்பவர்கண்ணுக்குப் பாம்பாகத் தோற்றும்.

38. குளவிகளாகும் வித்தை.

கண்கட்டுமையைக் கையில்தொட்டு புளியனிலைக்குத்தடவி ஜாலக் காளைநினைத்துச் சபையில்போட பார்ப்பவர்கள்கண்களுக்குக் குளவிகளா கத்தோன்றும்.

39. சாரைப்பாம்பாகும் வித்தை.

ஜாலக்காளைநினைத்துக் கண்கட்டுமையை தென்னை ஓலையில் தடவிப் போட, பார்ப்பவர்கண்களுக்கு சாரைப்பாம்பாகத்தோன்றும்.

40. பக்ஷிகளாகும் வித்தை.

ஜாலக்காள் மந்திரத்தைச்செபித்து மையையெடுத்து எந்தப்பக்ஷிக ளின் இரகில்தடவி சபையில் போடுகிறாயோ அந்தப்பக்ஷிகளைப்போலவே பார்ப்பவர்கள்கண்களுக்குத் தோன்றும்.

41. தேள் உற்பத்தியாகும் வித்தை.

வேப்பிலையில் மையைத்தடவி மந்திரத்தைச்செபித்து சபைமுன் போட பார்ப்பவர்கள் கண்களுக்கு தேள்களைப்போலத் தோன்றும்.

42. சகலவித்தைகளும் ஆடும் ஜாலம்.

மேற்படி மையைக் கையில் பூசிக்கொண்டு என்னவேணுமென்று நினைத்துச்சபையில் நினைக்கின்றோமோ அது அப்படியே பார்ப்பவர்கள் கண்களுக்குத் தெரியும் ஆனால் ஒவ்வொன்றுக்கும் ஜாலக்காளைத் தியா னித்து மையைத்தொடவேண்டும்.

43. பேயாட்டுதல்

ஓர் தட்டில் விபூதியைப் போட்டு யங்-சிங்-வய-நமவென்று பேய் பிடித் தவர்கள் எதிரில் செபித்துக்கொண்டிருந்தால் எவ்வளவு துன்மார்க்கமாகிய பேயாயிருந்தாலும் ஓடிவிடும்.

44. இதுவுமது.

தட்டில் விபூதியைப்போட்டு வங்-மங்-சிங்-சிவயநமசியென்று பேய்பிடி த்தவர்கள் எதிரில்செபித்து விபூதியையெடுத்து அவர்கள்மேல் போட்டால் விடாதபேயாயிருந்தாலும் முடியையெடுத்துக்கொடுத்துவிட்டு போய்விடும்.

45. அடிக்கும் உடுக்கையை உடைக்குதல்

உடுக்கையடிப்பவன் எதிரில்உட்கார்ந்துக்கொண்டு ஐயும்-கிலியும்சௌ வும் உடுக்கையைக் கட்டு ஐயும்-கிலியும் சுவஹாவென்று மனதில் செபித்

துக்கொண்டேயிருக்க, அடித்துக்கொண்டிருக்கும் உடுக்கையானது நாள் நாளாகப் போய்விடும். ஆனாலும் இது மகா பாதகமான வேலையானதால் கூடாது.

46. இதுவும் எதிரியை மாரணஞ் செய்தல்

நாபியைச் சுட்டு மூளை செதுக்கி, ஐங்கோலக் கருவைத் தடவி எதிரி யின் மலத்திற்போட, எதிரிக்கு மலசலங் கட்டி வருத்தப்படுவான். மறு படி, அதை யெடுத்து ஜலத்திற் கழுவிவிட துன்பங்கள் நிவர்த்தியாகும்.

47. விளைவுகளைக் கெடுத்தல்

சித்திரமூலச் செடிக்கு ஆதிவாரத்தில் மஞ்சள் நூல் காப்பு கட்டி தா யென்னும் எழுத்தை லக்ஷத்தியெட்டு தரஞ் செபித்து வேரைப் பிடுங்கி குளிசமாடி, ஓர் புதுக்குடுவையில் போட்டு, அதனுடன் கருவையுஞ்சேர்த்து நல்ல பலனைக் கொடுக்கின்ற தோட்டம், வயல் முதலிய விடங்களில் புதைத்துவிட்டால், பலிதமெல்லாம் பாழாய்ப்போகும். மறுபடியும் புதைத் ததை யெடுத்துவிட்டு பசுங் கோமயத்தை மூன்று நாள் தெளிக்க, எப்போ தும்போல் பலனைத் தரும்.

48. வசியம்

ஒரு சிட்டுக்குருவியைப் பிடித்து அதின் குடலை யெடுத்துவிட்டு ஊசிக் காந்தமும், வெள்ளைப் பாஷாணமுஞ் சரியிடை அதன் வயிற்றில் வைத்து தைத்துவிட்டு, ஒரு படி தென்னங்கள்ளை பாண்டத்திலிட்டு அதில் மேற்படி குருவியைப்போட்டு, அடுப்பின்மீதேற்றி, ஒரு மரத்து விரகினுலெறித்து, வற்றியபின்னெடுத்து, உரோமம் முதலியவைகளைப் போக்கி கல்வத்தி லிட்டு அதனுடன் மரக்கொடி, ஊமத்தன் வித்து, சுழல் வண்டு, குழியானை மின்மினிப்பூச்சி இந்திரகோபப்பூச்சி தொட்டால்வாடிசமூலம் செந்நா யுருவி கையாந்தகரை வேர் திகைப்பூடுபூச்சி ஆடையொட்டி ஐவிரலி கெஞ்சா ஈப்புலி இவைகள் வகையொன்றுக்கு கால் பலவீதமாகச்சேர்த்து பேய்க்கருப்பன் சாற்றாலரைத்து துவரைப்பிரமாணமாகக் குளிகை செய்து நிழலிலுலர்த்தி இங்-இங்-சிங்-சிங்-சுவஹாவென்று ஆயிரத்தெட்டுரு செ பித்து பலவித பலகாரங்களில் கொடுத்துவிடும் பக்ஷத்தில் வசியமாம்.

49. இதுவுமது.

பொன்னுவாரை வேரை நிழலிலுலர்த்திக் குழித்தைலம் வாங்கி அத னுடன் கோழிமுட்டை வெண்கரு கொடி புனுகு பச்சைக்கற்பூரம் கோரோசனை இவைகள் வகை ஒன்றுக்கு விராகனெடை 1 சேர்த்து அரைத்து வராகியைத் தியானித்து திலர்தமிட புருஷர்களெல்லாம் வசிய மாகி கேட்டதைக் கொடுப்பார்கள்.

50. இதுவுமது

மின்மினிப்பூச்சி சுழல்வண்டு தலைப்பேன் குழியானை இவைகளைப் பேய்க்கருப்பஞ் சாற்றாலரைட்டி உளுந்து பிரமாணம் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது நாதத்தில் இழைத் துக்கொடுக்க வசியமாவார்கள்.

51. இதுவுமது

முன் சொன்ன வுப்பை நாதத்தில் குழைத்து அதில் களிப்பாக்கை ஊறவைத்து வைத்துக்கொண்டு தேவையானபோது வெத்திலைப்பாக்கில்

கலந்துகொடுக்க வசியமாவார்கள். ஆனால் இம்மாதிரியான வசியவேலை களைச்செய்து பத்தினி பாதர்களின் பாவத்திற்காளாகாமலிருப்பதே அறிவுடையோர்களுக்கழகாம்.

52. இதுவுமது

பதக்கு பசுங்கோமயத்தைப் புதுப்பாண்டத்திலிட்டு, ஓர் சாதி விரகா லெரித்து நீர் சுண்டியபின் அதிலிருக்கும் உப்பை யெடுத்து வைத்துக் கொண்டு வேண்டுமானபோது நாதத்தில் இழைத்துக்கொடுக்க வசியமாகும்.

53. மேற்படி வசியங்களுக்கு முறிவு

உயிர்போன ஆட்டின் உணியும், விடத்தேர் பட்டையும் தண்ணீரி லரைத்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு அறுசுவையிலாகிலும் சாப்பாட்டிலாகிலும் கொடுக்க மருந்தின் வேகம் முறிந்துபோகும்.

54. வராகியை வசியஞ்செய்தல்.

சிவன்-கணபதி-கந்தன்-பெருமாள்-வயிரவன்-ஐயன்-அநுமான்-கறுப்பன்-காளி இவ்வொன்பது பேர்களுடைய மெழுக்கை வகைவொன்றுக்கு இரண்டுபலமாகயெடுத்து, ஆக பதினெட்டுபலத்தையும் ஒன்றாகமத்தித்து அதில் ஐங்கோலக்கரு-ஐங்காயக்கரு-சுடலைக்கரு இம்மூன்றையுஞ்சேர்த்து வராகியைப்போல் உருவஞ்செய்து அதற்கு யம்-பம், யம்-பம் மயானருத்திரா கட்டு-கட்டு குட்டியே நீ எரி-எரி யென்று மயானருத்திரனைத் தியானித்து லக்ஷத்தியெட்டு உருகொடுக்க வசியமாகும். பிறகு உன்பகையாளியைப்போல் ஓர் உருசெய்து மேற்படிமந்திரத்தைத் தேவையானமட்டுஞ் செபித்து, குப்பியில் அப்பாவையை முடக்கிவைக்க அவன்முடமாகி கஷ்ஷடப்படுவான் இதனுடன் மேற்படி பாவைக்கு சுடலைக்கருவைக்கொண்டு முன்மந்திரத்தை சொல்லிக்கொண்டே முள்ளினல்கில்களில்குத்த எதிரிக்கு அதிகத்துன்பமாகி வருத்தப்படுவான் அப்போது நீ மனமிரங்கி குத்தியிருக்கும் முள்ளைப்பிடுங்கிவிட்டு பதுமையை நீரில்கரைத்துவிட எதிரி யாதொரு துன்பமுமில்லாது வாழ்வான்.

55. இதுவுமது.

கருப்புநாயின் பக்கவிலாவெலும்பு காக்கைநரம்பு சுடலைக்கரு ஐங்கோலக்கரு இவைகளையெல்லாம் சமயெடையாகயெடுத்து அரைத்து நாணத்திற்பூசி ஓம் - ஸ்ரீரீங்-கங்-சங்-ஐயும்-ரீம்-ரங் - லா-லீ-லு-மங்-சிங்-சிவயநமவென்று லக்ஷமுருசெபித்து பூசைபலிமுதலியதுடன் எதிரியின்பெயரைதியானிக்க எதிரிமரணமாவான் மறுபடியும்முன்போல் நாணத்தைக் கழுவி மந்திரத்தை நிறுத்திவிட எதிரிஎப்போதும்போலிருப்பான்.

56. இதுவுமது

அந்திசந்திகளில் சத்திபூசையுடன் ஐயும்-கிலியும் சுவஹாயென்று லக்ஷத்தியெட்டுரு வராகியைதியானித்து 1-மண்டலம் வரைக்கும் செய்து வந்தால் வராகிவசியமாகி நீ நினைத்தகாரியத்தையெல்லாம் தடையின்றி முடிப்பாள்.

57. இதுவுமது

நரிபாலில் அரிசியைக்கலந்து சுடலைக்கருசேர்த்து அன்னஞ்சமைத்து வராகிபூசையைச்செய்து பகைவனுக்கிட்டால் அவன் பயித்தியமேரித்திரிவான் பிறகு நீ அவனை அழைத்து குட்டித்தக்காளிச்சாற்றில் பிள்ளையறை

த்து மூன்றுநாள் ஆறுவேளை கொடுத்து உப்பு புளி முதலியவைகளை நீக்கி மூன்றுநாள் மறுபத்தியம்வைத்து 7-ம்நாள் ஸ்நானஞ்செய்துவைத்து 8-வது நாள் சகலமும்கூட்ட நிவர்த்தியாகும்.

58. பெண்களைப்பிரிக்கும் வகை.

ஆதிவாரமிரவில் கழுதைபிரண்டமண்ணும், மயிரும், தச்சன்உளிச்செதில் முச்சந்திகூடுமிடத்தின்மண் குடிபோனவீட்டின்மண் காடாற்று முன்எடுத்த மயானச்சாம்பல் இவைகளையெல்லாம் ஒன்றாய்க்கலந்து ஓம் ஸ்ரீரீம் பிரிய நசி நசியென்று இரண்டுபேர்களுடைய பெயரையும் அச்சாம்பலில்தலைமாறியெழுதி செபித்துக் கலைத்துவிட்டு மறுபடியும் பேரை ஓர் புது ஓட்டில் தலைமாறியெழுதி ஐங்கோலந்தடவி முன்மந்திரத்தை ஆயிரத்தெட்டுரு செபித்து சீலையில்முடிந்து ஒருவருக்குந்தெரியாமல் பகையாளியினுடைய வீட்டிறப்பில் சொருகிவைத்தால் இருவரையும் ஒருவரைவிட்டு ஒருவரைப்பிரித்து அலையச்செய்யும்.

59. இதுவும் வசியம்.

குண்டுமணிப்பருப்பு பேய்புடலம்விரை நாய்ப்பாகல்விரை சாதிக்காய் கோரோசனை காந்தம் இவைகளை வெள்ளைச்சாவல்இரத்தமும் பொன்னுவாரைத்தைலமும் சமயெடையாகவிடுத்து மைபோலரைத்து செப்புச்சிமிளில் வைத்து வசி யென்னும் மந்திரத்தை ஆயிரத்தெட்டுருசெபித்து பொட்டிடக் கண்டமாதர்கள் வசியமாவார்கள்.

60. இதுவுமது

கள்ளிக்கட்டையைத்துளைத்து அதில் தேவையான களிப்பாக்கை வைத்து அக்கள்ளிக்கட்டை யிஞ்லேயேமூடி மூன்றநாள்பொறுத்து நாலாம் நாளெடுத்து மறுபடியும் நாதத்தில் ஊறவைத்து மற்றநாள் எடுத்துக் காயவைத்து பாக்குடன்கலந்துகொடுக்க வசியமாம் ஆனால் இது கெர்ப்பவதிகட்கு ரொம்பவும் கெடுதியைச் செய்யும் ஒருக்கால் தெரியாது கொடுத்துவிட்டால் அவர்களுக்கு வெள்ளையைப்போல் நீர்வடியும் அதையறிந்து உடனே பாலில்சீரகமிட்டு காய்ச்சிக்குடிக்க நீங்கும் அல்லது 15-நாள் காலைமாலை வெந்நீரினால் ஸ்நானஞ்செய்துவர சாந்தியாகும்.

61. ஜலத்தில் விளக்கேரிதல்.

வெண்மையானசீலைத்துண்டில் அத்திப்பாலைத்துவட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு திரியாக்கி அதை அகலிலிட்டுத்தண்ணீரைவிட்டுவிளக்கேற்ற நன்றாகயெரியும் பார்ப்பவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

62. பீநாற்றமுண்டாகும்படி செய்தல்.

எருமுட்டைப்பீநாறிசெடியின் விரையையிடித்து வஸ்திரகாயஞ்செய்து அதன்வேரையும் அதில்சேர்த்து அரைத்து மாத்திரையாகவுருட்டி வைத்துக்கொண்டு நாலுபேர்களிருக்குமிடத்தில் ஓர்மாத்திரையை யெடுத்து ஒருவரின்மேல் தடவ பீநாற்றமுண்டாகும் பார்த்தவர்கள் உன்னை மந்திரவாதியென்று மெச்சுவார்கள்.

63. பொதுவேலைகள்

இதுவரையில் சொல்லிவந்த தம்பனவேலைகளில் ஆகாதகாரியம் ஒன்றுமில்லை. மூளையைமாத்திரம் ஒவ்வொரு வேலைகளுக்கும் சுத்திசெய்தேஉபயோகிக்கவேண்டும். உன்னுடைய மனதில் என்னநினைத்து மையை எட்டி

முளைக்குத்தடவுகிருயே அது அப்படியே பலிக்கும். இதில் சொல்லாத வித்தைகளையெல்லாம் சகலமு மறிந்தபெரியோர்களின் வாயிலாக அறிந்து செய்வதே உத்தமம். ஏனென்ருல், "தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப் போட்டலும்வராது" என்று நமது ஆன்ரோர் சொல்லியபடி, மேற்படிவேலைகளெல்லாம், யாருக்குச்செய்யலாம் யாருக்குச்செய்யக்கூடாது என்று அறிவதுடன் நாம் ஒன்று நினைக்க அது ஒன்று ஆய்விட்டால் கஷ்டத்திலும் கஷ்டமல்லவா? இன்னென்று இப்பேர்ப்பட்ட கெடுதியாகிய வேலைகளையெல்லாம் தமாஷாக செய்து திருப்தியடையலாமேயொழிய கெட்டயெண்ணங் கொண்டுசெய்தால் அதிஞல் நாம் அடையும்பாவத்திற்கும் எல்லையுண்டோ? ஆகையால் ஒவ்வொருவரும் நன்மைகடைப்பிடி என்பதையோர்ந்து நடக்க வேண்டும்.

64. புருடர்களை வசியமாக்குதல்

புல்லாமணக்கு என்னும் செடியைக்கண்டு காப்புகட்டி சர்வசாபமும் படபடசுவாஹாயென்று 108-உருஜெபித்து வேரராமல் பிடிங்கிவந்து அதை வெள்ளைத்துணியில் சுத்தி மாத விடாயான மூன்று நாளும் மர்மஸ்தானத்தில்வைத்திருந்து நாலாநாளெடுத்து வேரில் 1-விராகனெடையும் துணியில் 1-விராகனெடையும் மாக்கோடி 1-விராகனெடையுஞ் சேர்த்து அவளுடையசிறுநீரிஞலேயே அரைத்துக்குளிகைசெய்து நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டுபலகாரங்களிலாவது சாப்பாட்டிலாவது பெண்கள்புருடர்களுக்குக்கொடுத்தால் அவர்கள்வசியமாகி கேட்டதைக்கொடுப்பார்கள்.

65. சாதம்வேகாமல்படி செய்தல்

ஆற்றுதும்மட்டி வடக்கேபோகும் வேரை செவ்வாய்க்கிழமையதினங் கொண்டுவந்து முன்எட்டிமுளைக்குத்தடவின மையைத்தடவி அரிசிகொதிக்கும்போது அதில்போட்டுவிட்டால் சாதம்வேகாது மறுபடியும் அதையெடுத்துவிட்டு வேறு உலைவார்த்து வைத்தால்வேகும் ஆனுல் இது மகாபாதகமென்று நான்உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

66. குட்டிச்சாத்தான் வசியமாகுதல்

ஓர் தேவாங்கை வாங்கி பத்திரமாகத் தீனிமுதலானதுங்கொடுத்து வளர்த்துக்கொண்டே வந்தால் அது பழகி நம்முடன்கூடவேயிருக்கும் அதுசமயம் அதின் கண்களில் வடியும்படியான பீளையை தினந்தோறும் நாம் நமது கண்களுக்கு மையைப்போல் தீட்டிப்பழகிக்கொண்டபிறகு, கொஞ்சம் நெல்லுப்பொறியுடன் தேவாங்கையெடுத்துக்கொண்டு ஊர்கோடியில் உட்கார்ந்துக்கொண்டிருந்தால் மாடுகளெல்லாம் மேய்ந்துவிட்டு வீட்டுக்குத்திரும்புஞ்சமயம் அம்மாடு கூட்டத்திலுள்ள காளைமாடானது எல்லா மாட்டிற்கும் முன்னதாகவரும். அப்போது அக்காளைமாட்டின் இரண்டு கொம்புகளின் மத்தியில் சாத்தானுனது குந்திக்கொண்டிருக்கும் அதைப் பார்த்து நம்மிடத்திலிருக்கும் தேவாங்கானது தன் கண்களில் ஜலம் விட்டழுகும் அச்சூதையறிந்து தாமதப்படாமல் பீளையை கண்களுக்குத்தீட்டிக் கொண்டு மடியிலிருக்கும் நெல்லுப்பொறியை கீழே இறைத்துவிட்டால் அதைப் பொறுக்கித்தின்ன சாத்தானுனதுகிழிறங்கும் அப்போது ஓம், இரீம், வா வா என்று ஆயிரத்தெட்டுருகொடுத்து அதை வசியஞ்செய்துக் கொண்டு பிறகு ஈயத் தகட்டில் மேற்படிமந்திரத்தை யெழுதி அதன் கீழ் எதிரியின்பேரையெழுதி, ஐங்கோலக்கரு சுடுகாட்டுக்கரு இவைகளை அத் தகட்டிற்குப்பூசி பூசையில் வைத்து முன் சொன்ன மந்திரத்தை லட்சத்தி எட்டுதரஞ் செபித்து பூசிக்கும் பக்ஷத்தில் சாத்தானுனவன் நமக்குப்பணிந்துநாம் சொல்லும்வேலைகளை தடையின்றிச் செய்வான்.

67. சத்தியை வசியஞ்செய்தல்

இம்-உம்-கம்-ரமாங்-சிங்-ஆயி-டாகினி - மாசினி-விஷ்ணுசகோதரி - சர்வாணி-உமை-தேவி-பராசத்தி-ந-வ-சி யென்று வெள்ளிக்கிழமை பூசநக்ஷத்திரத்தில் லக்ஷமுரு கொடுக்க வசியமாகும் பிறகு பில்லி எவல் சூன்யமிவைகளுக்கு ..ரீங்காரத்துடன் சுடலைக்கருவை ஒண்டி மூலிகைக்குத்தடவி குளிசமாடி மேற்படி மந்திரத்தை செப்புதகட்டிலெழுதி கட்டினுல் எப்பேர்ப்பட்டபிரம ராட்சத முனிகளுங்கதறியோடும்.

68. கரும்பாலையில் ரசம் வராமல்படி செய்தல்

முன் செய்துவைத்திருக்கும் எட்டி மூளையை மேற்படி கிழமை அவிட்ட நக்ஷத்திரமாகப் பார்த்து, காளிக்குப் பூசை பலி முதலியது கொடுத்து பயபக்தியுடன் பூசித்து அம்மணி என்று கரும்பாலையின் பக்கத்தில் வைத்துவிட்டால் ஆலையில் சாறு வராமல் அவஸ்தைப்படுவார்கள். மறுபடியும் எடுத்துவிட்டால் வரும்.

69. திராவகங்கள் இரங்காமல்படி செய்தல்

செவ்வாய்க்கிழமையதினம் காளியைத் தியானித்து எட்டிமூளைக்கு மையைத் தடவி, முன்போல் மந்திர மூதலிய பூசைகள் செய்து திராவகங்கள் தைலங்கள் முதலிய ரசங்களை இறக்கும் அடுப்பின்கீழ் புதைத்து வைத்துவிட்டால் கொஞ்சமாகிலும் இரசமிரங்காது. மறுபடியும் மூளையைஎடுத்துவிட்டு அவ்விடத்தைச் சுத்திசெய்து இறக்கினுல் இறங்கும்.

70. சுண்ணும்புக்காளவாயை வேகாது செய்தல்

குருவாரம் மரணயோகமாகப் பார்த்து அவ்வேளையில் எட்டி மூளைக்கு மையைத் தடவி, காளியைத் தியானித்து பூசித்து சுண்ணும்புக்காளவாயில் சொருகிவிட்டால் எத்தனை நாளானபோதிலும் சுண்ணும்பு வேகாது. மூளையை யெடுத்து சுத்தஞ் செய்தால்தான் வேகும்.

71. கருமான் உலை வேகாமல்படி செயதல்

எந்தக் கிழமையிலாகிலும் எட்டிமூளைக்கு மையைத் தடவி முப்பலியுடன் காளியைத் தியானித்து கருமான் உலையில் புதைத்துவிட்டால், ஒருடின் எண்ணெயை யூற்றி கரியைப் போட்டு ஊதினுலும் இரும்பு வேகாது பார்ப்பவர்கள் ஆச்சரியப்பட்டு யாரோஎன்னமோசெய்துவிட்டார்களென்று முழிப்பார்கள் அது சமயம் நீ மஹா மந்திரவாதியைப்போல் நேம நிட்டையுடன் குளித்து பட்டை பட்டையாக விபூதி தரித்து மொண மொணவென்று மந்திரம் செபித்துக்கொண்டே தந்திரமாக மேற்படி மூளையைப் பிடுங்கிவிட்டு கோமய முதலானதுகளால் அவ்விடத்தைச் சுத்தஞ் செய்யச் சொல்லி அதன் பிறகு கொளுத்த கருமானுலை தாராளமாக வேகும் பார்ப்பவர்களெல்லாம் உன்னை மகா மந்திரவாதி யென்று மெச்சுவார்கள்.

72. செங்கல் சூளையை வேகாமல்படி செய்தல்

சுவாதி நக்ஷத்திர தினம் செவ்வாய்க்கிழமையாகப் பார்த்து பானக பூசையுடன் மந்திரத்தினுல் காளியைத் துதித்து எட்டிமூளைக்கு மையைத் தடவி செங்கல் சூளையில் புதைத்துவிட்டால் சூளையானது வேகாது பச்சைக் கல் பச்சையாகவே யிருக்கும். முதலாளியானவன் குய்யோ முறையோவென்று கத்துவான். அது சமயம் நீ அவனுக்குத் தேறுதல் சொல்லி கோமய முதலானதுகளைத் தெளித்து எப்போதும்போல் கட்டை அடுக்கி

முளையை எடுத்துவிட்டு தீயைக் கொளுத்த நன்ருகப் பற்றி யெறியும் அனைவரும் உன்னைப் புகழ்வார்கள்.

73. வண்ணன் வெள்ளாவியை வேகாமல்படி செய்தல்

மேற்படி முளையை நன்ருகச் சுத்திசெய்து மேற்படி மையை எப்போதும்போல் அதற்குத் தடவி ஞாயிற்றுக்கிழமை பூராட நக்ஷத்திரத்தில் ஸ்ரீ காளிகா தேவியைத்தொழுது வண்ணனுடைய வெள்ளாயடுப்பில் புதைத்துவிட்டால் அய்யோ! அவன் எவ்வளவு தீயைப்போட்டு கொளுத்தினுலும் வெள்ளாயானது வைத்தது வைத்தபடியே யிருக்கும். அதைப் பார்ப்பவர்களும் அய்யோ பாவம்! எவனே படுபாவி! வேணுமென்றே அக்கினியைக் கட்டிவிட்டான் என்று பரிதாபப்படுவார்கள். அது சமயம் நீயும் பரிதாபப்பட்டு வண்ணனை கற்பூரம்-பழம்-தேங்காய்-புஷ்பம்-அவல்-கடலை-சாம்பிராணிவத்தி-விபூதி உருண்டை-மஞ்சள் நூல் முதலானவைகளை சேகரஞ் செய்யச்சொல்லி சாணியினுல் பிள்ளையார்பிடித்து அருகம்புல் சூடி மந்திரஞ் செய்வதுபோல் பாவனைக்காட்டி அடித்திருக்கும் முளையைப்பிடுங்கிவிட்டு சுத்தஞ்செய்து வெள்ளாயைக் கொளுத்த நன்ருகத் துணிகளெல்லாம் வேகும்.

74. வியாபாரமில்லாபடி செய்குதல்

நன்ருக வியாபாரமாகுங்கடையாகப்பார்த்து மேற்படி எட்டி முளையை சுத்தஞ்செய்து மையைத்தடவி வியாழக்கிழமை அஸ்தமயவேளையில் மந்திரத்துடன் காளியை வெள்ளைப்புஷ்பத்தினுல் அர்ச்சித்து புதைத்துவிட்டால் பட்டென்று வியாபாரமெல்லாம் நின்றுவிடும் அதைக்கண்ட கடைக்காரனும் மற்றவர்களும் ஒன்றுந்தோன்ருதவர்களாய் பிர்மித்து வாயில்வந்ததையெல்லாம்பேசுவார்கள். அவ்வேளையில் நீ தாராளமாகச்சென்று கடைக்காரனுக்கு தைரியஞ்சொல்லி அவல்-கடலை-சுண்டல்-பழம்-தேங்காய் முதலிய சகலச் சாமக்கிரியைகளைச் சேகரஞ்செய்யச்சொல்லி, சாணியினுல் பிள்ளையார்பிடித்துவைத்து அதற்கு அருகம்புல்லுடன் எருக்கம்பூவைச்சூட்டி மந்திரஞ்செபித்து பூசைசெய்து பிறகு காளியைத்தியானித்து பலவித புஷ்பங்களினுல் அர்ச்சித்து நமஸ்கரித்து மேற்படி முளையையெடுத்துவிட எப்போதும்போல் வியாபாரமாகும். அனைவரும் உன்னை மெச்சி நீ மஹா மந்திரவாதியென்று கொண்டாடுவார்கள்.

75. காகிதத்தில் பலவிதபலகாரங்களைச் சுடுதல்.

நல்ல முரட்டுக்காகிதத்தில் ஓர்கடாய்தயாரித்து அதன்பின்புரம் பிரண்டையை அரைத்து தளமாகப்பூசி காயவைத்து சிறுகற்களைக்கொண்டு அடுப்பமைத்து அதின்பேரில் மேற்படி காகிதக்கடாயில் எண்ணெயையூற்றி அவரவர்களுக்குத் தேவையான மிட்டாய்வகைகளைச் செய்து சாப்பிடலாம்.

76. பழத்தை அறுக்க இரத்தம் காட்டுதல்.

செம்பருத்திபுஷ்பத்தின் ரசத்தை ஓர்கூர்மையுள்ள மேஜைகத்திக்குத் தடவி வெய்யலில் காயவைத்து முன்னதாகவே வைத்துக்கொண்டு பிறகு, சபையில்இருப்பவர்களைப்பார்த்து இதோபாருங்கள் இந்தபழத்தையறுத்து இரத்தங் காட்டுகிறேனென்று சொல்லி பழத்தை அனைவருக்குங்காட்டி (ஏதோ மந்திரம்சொல்லுகிறதைப்போல் மொணமொணவென்று வாயை அசக்கி) சல்மலையாளபகவதி யென்று மேற்படிகத்தியைக்கொண்டு அறுக்க இரத்தங்கொட்டும். பார்ப்பவர்கள்ரொம்பவும் ஆச்சரியப்படுவார்கள்.

77. சாப்பாடு அதிகமாகக்கொள்ளுதல்.

சிவிங்கியின்வேரைச் சிறியதுண்டாக நறுக்கிக் கைகுட்டையில் முடிந்துவைத்துக்கொண்டு சபையில் சாப்பிடஉட்கார்ந்தபோது சிநேகிதராயுள்ளவர்கள் ஒருவர்க்கொருவர் சபதமிட்டுக்கொண்டு சாப்பிட்டால் மேற்படி வேரை யார்முடிந்து வைத்திருக்கின்றார்களோ அவர்கள்தான் அதிகமாகப் புசிப்பார்கள். ஆனால் சாப்பிடும்போது வேரை முகர்ந்துகொண்டே சாப்பிடவேண்டும். இதைப்பார்ப்பவர்கள் இவன் மகோதரனா குண்டோதரனா என்று ஆச்சரியப்படுவார்கள்.

78. மணலை அல்வாயாகச்செய்துகாட்டுதல்.

ஒருபலம் சீனாகற்கண்டு ஒருபலம் பாதம்பிசின் கால்விராகனிடை குங்குமப்பூ இம்மூன்றையும் மணல்போல் தூள்செய்துவைத்துக்கொண்டு மணலை ஒரு தட்டில்கொட்டி அனைவருக்குங்காட்டி நான் இதை அல்வாயாகச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி ஓர் பெரிய துப்பட்டியால் அதைமூடி பார்ப்பவர்களுக்குத் தெரியாமல் தந்திரமாக அதைக்கீழேகொட்டிவிட்டு துப்பட்டியில் இருக்கும் கள்ளஅரையில் முன் தயாரித்த தூளை கொட்டிவைத்திருக்கவேண்டும் மேற்படி தூளைக்கொட்டி அனைவர்களும் பார்க்க மிதமாகத் தண்ணீர்தெளித்து மறுபடியும் சற்றுமூடி திறந்துபார்க்க அசல் அல்வாயைப்போல் கட்டியிருக்கும் அதையறுத்து அனைவர்களுக்குங் கொடுத்து சாப்பிடச்சொல்லலாம் ஆனால் துப்பட்டியில் கள்ளஅறை முதலானதுகளை முன்னதாகவே தயாரித்துக்கொள்ளவேண்டும்.

79. காளி வசியமாகுதல்.

அரிகாளி-ஒடிகாளி-சூலகபாலகாளி-மோடிதேவி பூமிகாளி ஓம்காளி ஓம்பிடாரி மாகாளி மோடிகாளி, மந்த்ரமாகாளி ஓம் ஆம் கோதண்டரூபீ அம்மணி ஆளிவாகனத்தின்மீது ஆரோகணித்து என்னை யாவர்களும் மெச்ச உன் விருதாகிய குடை கொடி சாமரமுதலிய விருதுகளோடு ஆய்கார ஓங்காரத்துடன் என்னெதிரில் வருவாயென்று வெள்ளிக்கிழமைதோறும் பயபக்திவினயத்துடன் பணிந்துவருவாயாகில் அம்மணி! ஸ்ரீமஹாகாளியானவள் பிரசித்தமாகி நீ கேட்டவரத்தைக்கொடுத்து சதாவுன்னுடன் விளையாடிக்கொண்டிருப்பாள்.

80. பந்தாடுதல்.

நல்ல செம்பருத்திப்பஞ்சைக்கொண்டு கெட்டியாக உதிராமல்படி பந்து ஐந்து செய்து அதனுடன் மேற்படி மரத்தினாலேயே செய்த பந்தடிக்குங்கோலைக்கொண்டு சபையில் அனைவர்களும் பார்க்கும்போதே மேற்படி பந்துகளைப்போட்டு, மேற்படிகொம்பினால் அடிக்க எத்தனையோ பந்துகள் விளையாடுகிறதைப்போன்று தெரியும் அனைவர்களும் ஆச்சப்பட்டு உன்னை மெச்சுவார்கள்.

81. எட்டிமுளை வித்தையாடுதல்.

எப்படியென்றால், கொடி சீலை சவத்தைலம் ஜங்கோலத்தைலம் இந்நான்கையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு மைபோலரைத்து வைத்துக்கொள்ளவும் பிறகு ஓர் சுத்தமானவிடத்தைச் சந்தனத்தால் மெழுகிக் குங்குமத்தால் கோலமிட்டு அதில் ஓர் செம்பில் கலசம்வைத்து யநம யங் வங் சிங் சுவாஹாவென்று காளியைத்தியானித்து லக்ஷமுருஜெபித்து எட்டிக்கொம்ப கூறாகபென்சிலைப்போல் சீவி அதற்கு மேற்படி மையைத் தடவி

மறுபடியும் காளியைத்தியானித்து பூசைசெய்துவைத்துக்கொண்டால் உலகத்தில் ஆடாதவித்தைகளெல்லாம் ஆடலாம் செய்யாத வேலைகளெல்லாம் செய்யலாம்.

82. செக்கில் எண்ணெய்வராமல்படி செய்தல்.

ஞாயிற்றுக்கிழமை கேட்டைநக்ஷத்திரமாகப்பார்த்து பூசைமுதலானைதுகளுடன் மேற்படி எட்டிமுளையை செக்கின்பக்கத்தில் அடித்துவைத்துவிட்டால் எண்ணெய்வராது நாள்பத்தானாலும் எவ்வளவு பிரயாசைப்பட்டாலும் ஒரு ஆழாக்குகூடவராமல் தவிப்பார்கள். அதைப்பார்த்து பரிதாபப்பட்டு மந்திரம்செய்து நிவர்த்திசெய்கிறவன்போல் வேடங்காட்டி அம்முளையை எடுத்துவிட்டால் எப்போதும்போல் எண்ணெய்வரும் மறுபடியும் அவ்விடத்தைகோமயமுதலியவைகளால் சுத்தஞ்செய்யவேண்டும்.

83. புதியனுவை உற்பத்திசெய்தல்

வைக்கோல் கூளத்தைப் பனைவெல்லத்தில் நன்றாகப்பிசறி ஊறவைத்துப்பின்பு கல் மண்கட்டிகளில்லாது ஓர் பாத்திக்கட்டி அதில் மேற்படி வைக்கோலைச் சமமாகப்பரப்பி அன்றாடம் தவராது வெல்லத்தண்ணிதெளித்து வரும்பக்ஷத்தில் சிலநாளில் நாத்தாகி செடியாகும் இது புதிதாகத்தயாரிக்கப்படுவதினால் (புதியனு) என்று பெயர்பெற்றது.

84. மனிதன் தலையில் எண்ணெய்க்காய்ச்சுதல்

ஆனைலத்தி சிமட்டி தெள்ளினசாம்பல் இவைகள் மூன்றையும் சமயெடையெடுத்து ஜலம் விட்டரைத்து உரல்போல அரைஅடிஉயரமும் நான்குஅங்குல அகலமுமாக அடுப்பைப்போல் குமிள்வைத்து செய்து நிழலில் உலர்த்தி தமாஷாக ஒருவன்தலையின்மீது வைத்து அதற்குமேல் தகரத்தாற் செய்த கடாய்ஒன்றுவைத்து அதில் கிரோசின்எண்ணெயைவிட்டு அது கொதியெழும்பும்போது தண்ணீரைத்தெளிக்க குபீரென்றெரியும் பார்ப்பவர்களெல்லாம் ஆச்சரியப்படுவார்கள். ஆனால் அடுப்புவைத்துகட்டும் ஆளைமாத்திரம் அடுப்புவைக்கும் அளவிலிருந்து பெரிய துப்பட்டியால் மறைத்துவிடவேண்டும் இல்லாவிட்டால் தண்ணீர்தெளிக்கும்போது குபீரென்று கிளம்புகிற தீயானது ஒருசமயம் ஆளைச்சுட்டாலும் சுட்டுவிடும்.

85. மரத்தை பாழாகச்செய்தல்.

மரத்தின் ஆணிவேரைத்துளைத்து பாதரசத்தைவிட்டு அடைத்துவிட்டால் சிலநாளில் பட்டுவிடும்.

86. தென்னைமரங்களைக் கெடுத்தல்

தென்னைமரத்தின் குருத்தில் கடுக்காயைப்பதியவைத்து சிறிது ஜலம் விட்டுவைக்க சிலநாளில் பட்டுப்போகும். ஆயினும் இதுவும்பாகத்தொழிலே பனைமரத்தையும் இம்மாதிரி செய்யலாம்.

87. தீபத்தைப்பார்த்தவுடன் கூத்தாடுதல்.

ஆதிவாரத்தில் பிறந்தகோலமாக அரைநாண்கயர் முதலியதுகளில்லாமல் நிர்வாணமாக இருந்துகொண்டு இரட்டைவால்பல்லியின் வாலைக் கத்தியால் துணிக்க அத்துண்டு கீழேவிழுந்து துடிக்கும் அப்போது அதன்கூட நீயும் உன்மனம்போனபடி கூத்தாடி (ஜிம்) என்னும் மந்திரத்தைச் சொல்லிக்கொண்டேயிருந்து துடிக்கின்றது அடங்கினதும் நீயும் ஆட்டத்தையும் மந்திரத்தையும் விட்டு விட்டுப் பிறகு அவ்வாலை திரியில்வைத்து சுருட்டி

விளக்கில்போட்டு நல்லெண்ணெய் விட்டுக்கொளுத்த அதைப்பார்த்தவர்க ளெல்லாம் கூத்தாடுவார்கள்.

88. நரசிங்கமூர்த்தியை வசியஞ்செய்தல்

இதற்கு விதிதப்பாது ஆசாரத்துடன் தர்ப்பணம் யாகம் ஓமம் அன்ன தானம் தேவதாபூசை குருபூசை முதலியதுகளைச் செய்து பிறகு நேமநிஷ் டையுடன் ஓம் சிங்கமுக வா ஓம் ஓம் பிசாசு பேய் பொடிப்பட்டோட நர சிங்கராஜா ஆணை ஸ்ரீம் கிலீம்சுவாஹா வென்றுஇலட்சம் உருசெபிக்கசித்தி யாகி நினைத்ததெல்லாம் கைகூடும் மேற்படி மந்திரத்தை ஓர் ஓலை நறுக்கில் யெழுதி துஷ்ட மிருகங்கள் வாசஞ்செய்யும்படியான காட்டில்வைத்து விட் டால் அதுகளெல்லாம் அவ்விடத்தைவிட்டு ஓடிப்போய்விடும்.

89. சோளம் பொறிக்குதல்

முழுசோளத்தைத் தேவையானமட்டுங் கொண்டுபோய் சுண்ணும்புக் காளவாயினடியில் புதைத்துவிட்டு வந்துவிடவும். அவர்கள் காளவாய் எரியவிட்டபின்பு போய் புதைத்ததை யெடுத்துவந்து வைத்துக் கொண்டு சமயம்வந்தபோது தமாஷாக நாலுபேர்கள் மெச்சும்படியாக அவர்கள் எதி ரில் துணியைவிரித்து அதில் சோளத்தைப்போட்டு(மொணமொணவென்று மந்திரம் சொல்லுகிறதைப்போல் வாயைஅசைத்து) தண்ணீர் தெளிக்க பள பள வென்று பொரியும் அதைப்பார்த்தவர்க ளெல்லாம் நீயேதோ அக்கினி வசியம்வைத்திருக்கின்ருயென்று மலைப்பார்கள் ஆகையால் ஒவ்வொரு வித் தைகளையும் செய்துபார்த்தால்தான் தெரியும்.

90. அதிகமாக சாருயங்குடித்தல்

நெல்லி அடையைமென்று கொஞ்சந்தின்றுவிட்டு 1-மணி சாவகாஸமா னதும் கொஞ்சம் நெல்லி அடையை மென்று வாயிலடக்கிக்கொண்டு எவ் வளவு சாராயமேனும் நல்ல ஜலத்தைப்போல தாராளமாகச் சாப்பிடலாம்.

91. அந்திரமாக உலக்கையைநிற்கவைக்குதல்

ஓர் அகலபோகணியில் ஜலம்விட்டு பூண்கட்டிய உலக்கையை அதன் மத்தியில் சரியாகவைத்து சாயாது விட்டுவிட்டால் அப்படியேநிற்கும் இதற் குயாதொருமந்திரமுமில்லை தந்திரந்தான்.

92. கருங்கல்லை உடைத்துக்காட்டுதல்

ஒரு அடி ஒண்ணரையடியிருக்கும் கருங்கல்லின்மீது ஆவாரை வேலன் முருக்கன் இவைகளின் விறகுகளைப்போட்டு தீக்கொளுத்தி நன்ருக எரிந்த பின் சுண்ணும்பு நீரால் அவித்துவிட்டுவந்துவிடவும் மறுநாள் நாலுபேர்முன் னதாக பந்தயங்கட்டிக்கொண்டு மேற்படி கல்லைக்கையினுல் ஓங்கிக்குத்த தூள் தூளாகப்போய்விடும்.

93. காகங்களை மயக்குதல்

கல்தாரத்தை நெய்விட்டரைத்து சாதத்தில்கலந்து காக்கைகளுக்கு வைக்கத் தின்றவுடன் மெய்மறந்து அவ்விடத்திலேயே தடுமாறி நிற்கும். உடனேகொஞ்சமஜலந்தெளித்து தெளியச்செய்யாவிடில் மஹாபாதகமாம்.

94. பாம்புகளைத் தடைசெய்குதல்

பாம்பைக்கண்டதும் வெள்ளுளியில் உப்பைவைத்து நசுக்கி அதின் பேரில்போட அது அப்புறம் இப்புறம் அசையாது நின்றுவிடும்.

95. இதுவும் கத்தியை வசியஞ்செய்தல்

முன்சொன்ன மந்திரத்தை அமாவாசையும், சூரியக்கிராணமும், ஞாயிற்றுக்கிழமையும் வருகிறதினத்தில் ஒண்டிமூலிகை என்னுஞ்செடிக்கு காப்பு கட்டி பொங்கல் முதலியதுகளுடன் செபித்து வேரைப்பிடுங்கி குளிசமாடி கட்டிக்கொண்டால் எவல் பில்லி முதலிய துஷ்டதேவதைகள் அணுகாது.

96. கார்த்திகை வீரியார்ச்சுன மந்திரம்

ஓம் ஆம்ஸ்ரீம் கிலியும் கார்த்திகை வீரியார்ச்சுன சுவாஹா என்று ஆயிரத்தியெட்டுருவை பூரணத்தில்நின்று செபிக்கச் சித்தியாகுமென்று என் குருநாதருடைய அனுக்கிரகத்தினால் நான் சொல்லுகிறேன். மேற்படி மந்திரத்தை செபிக்கும்போது பூரணகலசம் ஸ்தாபனஞ்செய்து செபிக்கவும்.

97. விளைவுகள் பெருக்கும்படி செய்தல்

ஞாயிற்றுக்கிழமையதினம் நாயுருவிச்செடிக்குப் பொங்கல் பலி முதலியனதுகளுடன் பூசைசெய்து மஞ்சள்நூல் காப்புகட்டி தூபதீபத்துடன் ஸ்ரீம் என்ற பீஜாக்ஷரத்தை லக்ஷமுருசெபித்து வேரைஅறுது பிடிங்கிக்குளிசமாடி ஓர் புதுக்குடுவையில் போட்டுமூடி தோட்டம் வயல் முதலிய விளைவுகளுள்ளவிடத்தில் புதைத்துவிட்டால் யாவரும் பிரமிக்கும்படியாக நல்ல பலனைக் கொடுக்கும்.

98. விஷமேற்றும் வேடிக்கை.

ஆண்கெச்சைக்காயினுள்ளிருக்கும் பருப்பை நன்றாக யெடுத்துவிட்டு அதில் செம்போத்து நாக்கு, காக்கை நாக்கு, உடும்பு நாக்கு, கீழ்க்காநெல்லிவேர் காமப்பால் இவைகளை சமயெடையாகக் கிரணம்பிடிக்கும்போது மேற்படி காய்க்குள் செலுத்தி அத்துவாரத்தை கொசுகின் மெழுகால் மூடி வைத்துக்கொண்டு தேள்கொட்டி வந்தவர்கள் கையில் காயைக்கொடுத்து மொணமொணவென்று மந்திரஞ்சொல்லி அதை இன்னொருவர் கையில் கொடுக்க விஷமானது அவர்களுக்கேறும். அதை மறுபடி இன்னொருவர் கையில் கொடுக்க இவனைவிட்டு அவனுக்கு விஷமேறும். இப்படி மாற்றி மாற்றி எத்தனைபேர்களுக்கு அக்காயை கொடுக்கின்றோமோ அவர்களெல்லாம் விஷத்தால் துன்பப்படுவார்கள். கடைசியாக அக்காயைக் கீழேபோட்டுவிட்டால் விஷமானது பூமியைப் பற்றும். யாவருக்குந் துன்பமிருக்காது.

99. மாடனை வசியஞ்செய்தல்

விஷத்தினால் இறந்துபோன மனிதனைக் கொளுத்தி காடாற்றுமுன் அவ்விடத்திலுள்ள கரியை யெடுத்து அதனுடன் ஐங்கோலத்தைச்சேர்த்து அரைத்து அந்த மையினால் முகத்தை வீங்கினமாதிரி தோன்றும்படியெழுதி அதின்கீழ் எதிரியினுடைய பெயரை வலப்புறம் மாற்றியெழுதி மாடனைத் தியானித்து மதுமாங்கிஷத்துடன் பூசைபோட்டு காரீயத்தகட்டில் மாடன் சக்கரத்தையெழுதி அதற்கு ஆதிவாரத்தில் (ஓம் நமோ பகவதே ஓம் படு சுவாஹா) யென்று லக்ஷமுருசெபித்து முப்பலியுடன் பூசித்து அதில் எதிரியின்பேரை நாட்டி ஐங்கோலம் தடவி மாடனைத் தியானித்து உன்வசமாக்கிக்கொண்டு ஓ மாடா! இந்தா கல் என்று ஓர் சிறிய கல்லையெடுத்து மேற்படித் தகட்டின்பேரில் வைக்க மாடனானவன் எத்தனைபேர் பார்த்திருந்தாலும் கல்லையும் மண்ணையும் குப்பைகளையும் இன்னும் என்னென்ன அவன் கைக்கு அகப்படுகிறதோ அதையெல்லாம் வாரிவாரி எரிவான். அந்தசமயம்

எதிரியின்பாடு சமணன் கையின் பேனைப்போல திண்டாட்டமாகிவிடும். ஐந்துநிமிஷமாகிலும் அவனை சும்மாவிடாது. நீ மறுபடியும் அத்தகட்டிற்குப் பூசியிருக்கும் மையைக் கலைத்துவிட்டு, அதை பாலில் சுத்தஞ்செய்ய எதிரிக்கு யாதொரு தொந்திரவு மிருக்காது.

100. இருதலைக்கொள்ளியை வசியஞ்செய்தல்

ஸ்நானபானநேமநிஷ்டையுடன் சிவ-வசி யென்று லக்ஷத்தியெட்டு உரு செபித்து அக்கினியை ஓர்மஞ்சள் துணியில் சுருட்டி காரீயத்தகட்டில் (ஓம் நமோ பகவதே, ஓம்படு சுவஹா) யென்றுவரைந்து அதன்பேரில் எதிரியின் பேரை யெழுதி ஐங்கோலம் சுடலைக்கருதடவி முன்மந்திரத்தை ஆயிரத்தெட்டு உரு செபிக்க இருதலைக்கொள்ளியானது வசியமாகி உன் கண்களுக்குத் தோன்றும். அப்போது நீ அதைப்பார்த்து ஓ இருதலைக்கொள்ளி நீ உடனேபோய் என் பகைவர்களுடைய வீட்டைக்கொளுத்தென்று சொல்லிவாய்மூடுமுன்பே கொளுத்திவிடும். மந்திரம் செபிக்கும்போது அக்கினியைத் துணியுடன் மூட்டையாகத் தகட்டின் பேரில் வைத்து செபிக்க வேண்டும்.

111. மலக்குட்டியை வசியஞ்செய்தல்

ரீம் இரீம் வா-வா மலக்குட்டியென்று ஆயிரத்தெட்டு உரு சிவந்த மலரால் கொடுக்கும்பக்ஷத்தில் அது உனக்கு வசியமாகும். நீ அதை வணங்கி முப்பலியுங் கொடுத்துப் பணிந்தால் அதினால் அனேகவிதமான வேலைகளெல்லாம் நடக்கும்.

102. மலசலமடைக்கும் வித்தை

மூன் பகைவர்களைக் கெலிக்கச் செய்த உப்பைக் கொண்டுவந்து உமிழ்நீரி விழைத்துக்கொண்டு தாளிப்பனையோலையில் அவன் பெயரை மாறியெழுதி, அதின்மேல் உப்பைபூசி எதிரி சிறுநீர்விட்டயிடத்தில் மண்ணைக் கிளரி அதில் ஓலையை வைத்து, அதின்மேல் ஒரு வேலன்முள்ளைக் குத்தி பெருவிரலால் பூமியிலிறங்க அழுத்திவிட, அவனுக்கு மலசலங் கட்டிவிடும். முள்ளை எடுத்துவிட ஒன்றுமிருக்காது இதற்கும் அந்த மூலமந்திரமே.

103. அடங்கின நாடி எழும்பும் வித்தை.

ஐந்து விரற்கடை அகலமும் ஒரு முழ நிகளமுமுள்ள ஓர் வெள்ளைத் துணியை செய்யில் நனைத்துப் பிழிந்து, ஆணுக்கு வலதுகை மணிக்கட்டிலும் பெண்ணுக்கு இடதுகை மணிக்கட்டிலும் சுற்றி கட்டிவைத்து ஒரு மணி நேரஞ் சென்றபின் அவிழ்த்து நாடியைப் பார்க்க நன்றாக வோடும்.

104. இரத்தத்தைக் கையிலேற்றும் வித்தை.

அரை விராகனெடை பாதரசத்தை நோயாளியின் உள்ளங்கையில் விட்டு, அதனுடன் முள்ளங்கியிலைச்சாறும் விட்டு வலதுகைப் பெருவிரலால் அரைக்கித் தேய்க்க, அந்த ரசம் இடது உள்ளங்கையிலிறங்கிவிடும். கொஞ்சமேனும் வெளியிலிருக்காது. அப்படியிரங்கிய இரசத்தின் மகிமையால் அவனுடைய நோய்களெல்லாம் விலகும்.

105. மேற்படி இரசத்தைக் காலில் இறக்கும் வித்தை

மேற்படி நோயாளியின் உள்ளங்கையில் இறக்கிய ரசத்தை, காலில் இறக்கவேண்டுமானால், அவன் கால் பெருவிரல்களில் சாணியை அப்பி,

நாற்காலி அல்லது ஒரு திண்ணையின்பேரிலுட்கார வைத்து, இரண்டு கால்களையுங் கீழே தொங்கவிட, அந்த ரசமானது கால்களில் அப்பிய சாணியில் வந்து தங்கிவிடும்.

106. புழு வெட்டு நீங்கும் வித்தை

புழு வெட்டினுல் மயிர்கள் உதிர்ந்தவிடத்தில் ஈப்புலி யென்னும் பூச்சியைப் பிடித்துத் தேய்த்துக்கொண்டு வர, உதிர்ந்த மயிர்களெல்லாம் பழையபடி முளைத்துச் செழிப்பாயிருக்கும்.

107. மயிர் உதிரும் வித்தை

பொன்னரிதாரத்தைத் தண்ணீரிலரைத்து மயிர் வேண்டாதயிடத்தில் தடவி மறுநாள் காலையில் வென்னீர்விட்டுக் கழுவ உரோமங்களெல்லாம் ஜாடாவாய் உதிர்ந்துவிடும்.

108. திருடு கண்டுபிடிக்கும் வித்தை

ஒரு கோழிமுட்டைக்கு மஞ்சள், குங்குமமிட்டு புஷ்பஞ் சூட்டி தரையை மெழுகி சக்கரம்போட்டு அதன் நடுவில் கோழிமுட்டை வைத்து, பூசை முதலானதுஞ் செய்து மூடிவிட்டு, அங்குள்ளவர்களைப் பார்த்து நகையெடுத்தவர்களுக்கு கோழிமுட்டை எப்படிப் பெருத்துயிருக்கின்றதோ அதைப்போல அவர்கள் வயறும் பெருத்துப்போய்விடுமென்று சொல்லி, தந்திரமாக ஓர் பாத்துமுட்டையைச் சம்பாதித்து, கோழிமுட்டையை மறைத்து வாத்துமுட்டையைக் காட்ட, பார்த்தவர்கள் பயந்து நகையைக் கொண்டுவந்து போட்டுவிடுவார்கள்.

109. இதுவுமது

தந்திரமாக ஓர் உலக்கைக்குப் பெருங்காயமரைத்துப் பூசி, மஞ்சள் குங்குமம் புஷ்பஞ் சூட்டி, பூசை செய்து ஓர் அறையில் நட்டுவிட்டு சந்தேகமுள்ளவர்களைப் பார்த்து, அவ்வறையிலிருக்கும் உலக்கையை ஒவ்வொருவரும் தொட்டு கண்ணிலொத்திக்கொண்டு அங்கிருக்கும் விபூதியை யெடுத்து நெற்றியிலிட்டுக்கொண்டு வரவேண்டும். திருடினவர்கள் கை உலக்கையின்பேரில் பட்டமாத்திரம் உலக்கையானது அவர்களை அடிக்கும். பிறகு எங்கள்பேரில் பழி வேண்டாமென்று சொல்லி, ஒவ்வொருவராக உள்ளே போய்வரும்படி விட்டு, அவர்கள் வரும்போது அவர்களின் கையை முகர்ந்து பார்க்க சாம்பிராணி வாசனை வரும். திருடினவர்கள் பயத்தால் உலக்கையைத் தொட்டால் அடிக்குமென்று தொடாமல் சும்மா வந்துவிடுவார்கள். அதைக் கண்டுபிடித்து அவர்களிடம் வசூலிக்கவும்.

110. ஏவல், சூன்யங்களைக் காட்டும் வித்தை

சிலர் வீட்டுகளில் ஏதாவது நோய் ஜெனித்து அது ஒரு பத்து நாள் தீராவிட்டால், அவர்கள் யாரோ ஏவல் செய்துவிட்டார்கள். சூனியம் வைத்துவிட்டார்கள் என்று நோயின் காரணமறியாமல் அங்கலாய்த்துக் கொள்வார்கள் அப்பேர்ப்பட்டவர்களிடம் பணம் பறிக்கும் விதம் எப்படியென்றால், ஓர் தவளையைப் பிடித்து, அதன் வயற்றில நாலைந்து வேலன் முள்களைக் குத்தி, தலைகீழாக ஓர் கிணற்றில் கயர்கட்டித் தொங்கவைத்துவிட்டு மைபோட்டுப் பார்க்கும் பாவனையாகப் பார்த்து அவர்களை அக் கிணற்றுக்கு அழைத்துக்கொண்டு போய் மேற்படி தவளையைக் காட்டி, அதிற்குத்தியிருக்கும் முள்ளைப் பிடுங்கிக்காட்ட அவர்கள் உண்மையான மந்திரமென்று நம்புவதுந் தவிர, அவர்களைப் பீடிக்கும் நோயும் விலகும்.

111. திரேகஞ் சுறுக்கும் வித்தை

மரவெட்டையை இரண்டாய் வெட்ட ஒரு துண்டு வளையம்போலும், ஒரு துண்டு நிகளமாயும் விழும். அதில் வளையம்போலிருப்பதைச் சட்டி ஓட்டில் வைத்து மேலோடு மூடிப் புடம்போட பஸ்பமாகும். அப்பஸ்பத்தை சுண்ணும்பில் கலந்து தாம்பூலத்தில் உபயோகிக்க வயது தளர்ந்த கிழவிகளும் கட்டுமஸ்தாய் விடுவார்கள்.

112. திரேகம் பெறுக்கும் வித்தை

முன் கூரிய மரவெட்டையை வெட்டின துண்டில் நிகளமாயிருக்கும் துண்டை யெடுத்துப் புடம்போட்டு பஸ்பமாக்கி, அதை சுண்ணும்பிற் கலந்து சிறு வயதுள்ள பெண்கள் தாம்பூலத்துடன் தரிக்கும்பக்ஷத்தில் வாலப்பருவந் தளர்ந்து கிழப்பருவம் வந்தெய்தும்.

113. இரசத்தை பஸ்பம் செய்யும் வித்தை

கொஞ்சம் பாதரசத்தை உள்ளங்கையில் விட்டு அதின்பேரில் நெய்ச்சி படிச்சாற்றைவிட்டு கை பெருவிரலால் அரக்க அது குழைந்து பஸ்பமாகி விடும். அதைத் தகுந்த நோய்களுக்கு அனுபானத்திலிட தீரும். ஒருக்கால் இரசவேக்காடுண்டாகில், சிறுகீரைவேர், அவுரிவேர் இவ்விரண்டையும் கியாழமிட்டுச் சாப்பிட வேக்காடு தணியும்.

114. இதுவுமது

வடத்தாரி வேரை சூரணித்துக்கொண்டு, முன்போல் இரசத்தைக் கையில் விட்டுக்கொண்டு, மேற்படி சூரணத்தை ஒரு சிட்டிகைபோட்டு அரக்க பஸ்பமாகிவிடும். அதையும் அனுபானத்தில் கொடுக்க வியாதிகள் தீரும். வேக்காட்டிற்கு முன்மாதிரி கியாழம் சாப்பிடவும்.

115. வாந்திபேதி நிற்கும் வித்தை

சாம்பிராணி கற்பூரம் பெருங்காயம் இம்மூன்றையும் ஓரிடையா யெடுத்து சாம்பிராணியைப் பொடித்து கற்பூரத்தை தூளாக்கி அதோடு பெருங்காயஞ் சேர்த்து ஒன்ருக மத்தித்து, வேளை ஒன்றுக்கு சுண்டைக்காய் வீதம் மணிக்கொரு விசை கொடுத்து ஜலங் கொடுத்துக்கொண்டு வர குணமாகும்.

116. சண்டாளக்கரு

கழுதையின் கொழுப்பை அகலில் போட்டு விளக்கேற்றி வைத்தால் அவ்விடத்திலுள்ள பூதம் பிசாசு முனி தெய்வம் இதுகளெல்லாம் அலறியோடிவிடும் இக்கருபுதையலெடுப்பதற்கு மிகவும் சிரேஷ்டமானது.

117. வேறு - வசியவித்தை

சுடுகாட்டில் பிணத்தைச் சுற்றிவந்துடைக்கும் தோண்டியோட்டில் கொஞ்சமெடுத்து அங்குப்பிணஞ்சுட்டகரியினுல் இன்னுனுக்கு இன்னுள் வசியமாகவேணுமென்று எழுதி தான் நினைத்த பெண் படுக்கைதலைமாட்டண்டை புதைத்துவைக்க அவள் இவன்மேல் மோகமாகிவருவாள்

118. சத்துரு கெடும்வித்தை

இந்த(நமசிவாய)என்னும்எழுத்தை சுடுகாட்டுப்பானை [illegible]
அதின்கீழ் அவன்பெயரை மாறி யெழுதி கருபூசி [illegible]

செபித்து அதைச் சாணியிலறைந்து எதிரியின்வீட்டிறப்பில் சொருகிவிட அவன் குடும்பத்துடன் நாசமாவான் இது மிகவும் பாதகமானதொழில்.

119. சத்துரு மாரணவித்தை

பிணம் வருவதற்குமுன் அவ்வீதியில் ஆழாக்கு கடலையை இறைத்துவிட்டு பிணம்போனபிறகு அதைப்பொறுக்கி யெடுத்துக்கொண்டு பிணஞ்சுட்டதைலமும் காடாற்றுமுன் எடுத்தகரியும் எலும்பும் சாம்பலுங் கொண்டுவந்து சாம்பலைப்பரப்பி அதின்மேல் நமசிவய வென எழுதி அதற்குள் நசி மசி யெழுதி கடலையும் வைத்து வாலைமந்திரத்தை 1008 செயித்து அவைகளை அப்படியேசத்துருவின்வீட்டின்மேலெறிய அவன்மாறணமாவான்.

120. எதிரிமாரணம் பேர்மாறி

இந்த ஓம் சிங் மங்கென தாளிப்பனையோலையில் எழுதி ஓம் வடுகாயா ராரா சுவாகாயென்று 108 உருவு அபதீபபலிகொடுத்து ஓடையின் ஓரத்திற் புதைத்து 8-நாள் விடாது மேற்படி உருவைக்கொடுக்க எதிரிபடுவான் சக்கரத்துக்கு ஐங்கோலம் பூசவும்.

121. சுரம் அதிகரிக்கும் வித்தை

புழுக்களிருக்குந் தேன்கூண்டைப் பிழிந்த ரசத்தில் சுருக்குக்கொடுத்துக் கட்டின லிங்கத்தை சுரங்கண்டவர்களுக்கு இழைத்துக்கொடுக்க சுரமதிகரித்து எந்தமருந்தினாலுந்தீராது வருந்துவான்.

122. மேற்படி சுரந்தீரும் வித்தை

நல்ல தேனில் சுருக்குக்கொடுத்த லிங்கத்தை மேற்படி சுரங்கண்டவர்களுக்கு இழைத்து கொடுக்க சுரமகலும் இல்லையேல் வேறெவ்வித மருந்துகளைப்பிரயோகித்தாலுந் தீராது.

123. வயிற்றுவலி வரும்வித்தை

வெள்ளையை தண்ணீரிலரைத்து அதில்கொஞ்சம் அரிசியைப்போட்டு பிறட்டிக்காயவைத்து எடுத்துக்கொண்டு தேவையானபோது அதில் நாலரிசியை யெடுத்து தின்பண்டங்களில் கொடுக்க சாப்பிட்டவர்களுக்கு வயற்றுநோயுண்டாகி எந்தமருந்தினாலும் தீராமல் அவஸ்தையைக்கொடுக்கும்.

124. மேற்படி நோய் தீரும்தீராதென அறியும் வித்தை

உள்ளங்கையகலம் பன்றியிரைச்சியை சிலேசாக அறுத்து அதை நோயாளியின் உள்ளங்கையில் வைத்துக்கட்டி ஒருமணிநேரம் பொருத்து அதை அவிழ்த்து நாய்க்குப்போட அதைத்தின்றநாய் வாந்தியெடுத்தால் பிழைப்பான் இல்லாவிடில் மரணமாவான்.

125. உப்பு உரைக்காதிருக்கும் வித்தை

ஓர் சிறிய உப்புக்கல்லைக் கையில்வைத்துக்கொண்டு ஒருசமார்த்தியமானவனை அழைத்து உனக்கு நல்ல அறிவுயிருக்கின்றதா? சுயபுத்தியிருக்கின்றதாவென்று கேட்டால் அவனுக்கு கோபம்வரும் அந்த சமயம் அவனைப் [illegible] அப்படி நல்லபுத்தியிருந்தால் நான் உன் நாக்கின்மேல் வைக்கும் [illegible]ல நாக்கை அசையாது இன்னதென்று சொல்பார்ப்போம் என்று [illegible]கின்மேல் இக்கல்லைவைக்க அவன் இன்னதென்று சொல்லத் [illegible]ப்பான் அது அண்ணாக்கில் தட்டினால் மாத்திரம் உப்பென்

126. நாக்குப்பூச்சிகளைக் கரைக்கும் வித்தை

கொஞ்சம் நாக்குப்பூச்சியைப் பிடித்து மண்ணில்லாமல் சுத்தஞ்செய்து ஓர் பித்தளைப்பாத்திரத்தில்போட்டு அதின்மேல் விபூதியைப்போல கொஞ்சம் இந்துப்புத்தூளைப்போட அப்பூச்சியானது நீரைப்போலக் கரைந்துவிடும் அதற்குமேல் நமக்கிஷ்டமான வேலைகளைச்செய்துக்கொள்ளலாம்.

127. நாக்குப்பூச்சி நாசமாகும் வித்தை.

நெல்லை அவிக்கும்போது அதில் தேங்காய்ப்பத்தையைப்போட்டு அவித்து இறக்கிய பின்னெடுத்து நாக்குப்பூச்சிகள் பிடித்திருக்குங் குழந்தைகளுக்குத் தின்னக்கொடுக்க அதுகள் தின்னவுடன் பேதியாகி நாக்குப்பூச்சிகளெல்லாம்கூண்டு கூண்டாக வந்துவிடும்.

128. இதுவமது பெரியவர்களுக்கு

காராமணியை உப்புபோடாமல் வேவித்து இரவுபோஜனஞ்செய்துபடுக்கைக்குப்போகும்போது ஒருகால்படி தின்றுவிட்டு படுத்துக்கொண்டு மறுநாள்காலை யெழுந்தவுடன் கொஞ்சம் விளக்கெண்ணெய் சாப்பிட பேதியாகிவயற்றிலுள்ள பூச்சிகளெல்லாம் கொத்து கொத்தாய் வந்துவிடும்.

129. கண்களில்வுறிய ரவைதுணுக்குகள் விழும்வித்தை

வேலைகள் செய்யும்போது தனக்குந்தெரியாமல் கண்ணுடிப்பிசர்களாவது ரவைப்பிசர்களாவது கண்களில் விழுந்து அரிக்குமாகில் உடனே கூத்தன் குதம்பைவேரை வாயில்போட்டு மென்று அந்த ரசத்தைவிழுங்கி ஓர் காகிதத்தைத் தரையில் வைத்து கண்ணைச் சிமிட்டுவானுகில் அதில் அந்த ரவைகள் வந்து விழும்.

130. கருவுகளின் வித்தை

ஏழுவூர்களிற்சென்று அங்கங்கே கொஞ்சம் பன்றிபுட்டைகளைச் சம்பாதித்து எல்லாவற்றையும் ஓர்குடுவையில் போட்டு குழித்தைலமிறக்கி அதைப்பலவித வேலைகளுக்கும் அஷ்டகர்மகிரியைகளுக்கும் உபயோகப்படுத்த நல்ல பலிதமாகும்.

131. தூமாதேவிக்கரு வித்தை

பன்றிமலம் மனிதர்மலம் ஒணுன்கொடி இம்மூன்றையுங் குழித்தைலமிறக்கி பேதன வித்துவேஷண மாறணசக்கரத்திற்குத்தடவி உருகொடுத்தால் நல்லவேலைகளைச்செய்யும். இதைத்தரையிற் புதைத்து சிலநாள்பொருத்துப்பார்த்தால் அகப்படாது. பகையாளியினுடைய வீட்டில்தெளித்தால் நாசமாய்ப்போகும் இது மிகவுங்கெட்டது.

132. நிலம்புரண்டி மூலிகையின் ஜாலம்

நிலம்புரண்டியென்பது சாதாரணமாகப் பூமியின்மேலேயே படர்ந்திருக்கும் ஓர் பச்சிலைப்பூண்டு அது மனிதர்களின் வாடைபட்டமாத்திரத்தில் பூமியைப்புரண்டிக்கொண்டு உள்ளேபோய்விடும். அதற்காகத்தான் அதற்கு நிலம்புரண்டிமூலியென்று பெயருண்டானது. அதைக் கண்டறிந்து காப்புகட்டி எடுத்துவந்து சகலவேலைகளையும் நினைத்தது நினைத்தபடி செய்யலாம் அதைக்கண்டுபிடிக்கும்விதம் யெப்படியெனில் நம்முடையகையில் ஓர் தேங்காய்கொட்டையை வைத்துக்கொண்டுபோனுல் அதுயிருக்கும்படியான விடத்தில் அக்கொட்டையானது தானுய்வெடித்துவிடும். அதுவும் பூமியிலிறங்காது. அதுதான் அதற்கு அடையாளம்.

133. துடப்பஞ் சுழலும் ஜாலம்

ஒரு கனத்த துடப்பக்குச்சியை நன்றாகமுறுக்கி அதன்முனையில் ஓலையினால்செய்த தமாஷான உருவுவொன்றைச்சொருகி அதை மண்ணில் புதைத்துநிற்கவைத்து அதன்மேல் கொஞ்சம் ஜலந்தெளிக்க அது கரகரவென்று சுழலும். பார்ப்பவர்கள் ஆச்சர்யப்படுவார்கள்.

134. கை, கால்களை முடங்கச்செய்யும் வித்தை

காட்டுமரவட்டையைக் கொன்று காயவைத்திடித்து வஸ்திரகாயஞ் செய்து அப்பொடியை பல தின்பண்டங்களில் கலந்துகொடுக்க மூன்றுநாளில் கை கால் அசைக்கமுடியாமல் முடங்கிவிடும். அதற்குச்சாந்தி, தாமரைக்கிழங்கை வேகவைத்து இறுத்த தண்ணீரைக் குடித்து அக்கிழங்கைத் தின்ன சௌக்கியமாம். இதுவும் 10-நாளைக்குள் செய்யவேண்டியது.

135. திரேகத்தை முடக்கும் வித்தை

மடையானை ஓர் ஓட்டிலிட்டு அதற்குக் கீழாநெல்லிச்செடிகளைக் கத்தை யாகக் கட்டிக்கொண்டுவறுக்க, அது வெந்ததும் வேகாததுமாய் மக்காசோளத்தைப்போல பொரியும், அந்த சமயம் அதையெடுத்துக் கல்வத்திற்போட்டு கண்ணாடிரசம்விட்டரைத்துத் தூள்செய்து தின்பண்டங்களிலேனும் சாப்பாட்டிலேனும் மூன்றுநாள் கொடுக் திரேகத்தை இனியில்லாத கஷ்டமேயில்லையென்று சொல்லும்படியாக முடக்கிவிடும். இதற்கு மாற்று கிடையாதாகையால் இதைச் செய்கிறது மகாபாவம்.

136. துட்டுகள் அசையும் ஜாலம்

எட்டு காலணாவை ஒன்றோடொன்று நெருங்கியிருக்க வரிசையாக வைத்து மற்றொரு காலணாவை சற்றுதள்ளியே வைத்து 8-வது காலணாவை ஒருவனைக்கொண்டு பெருவிரலால் அழுத்தியிருக்கச்செய்து தனியே வைத்திருக்கும் 9-வது காலணாவை நாம் நம்முடைய சுட்டுவிரலால் தட்ட அது 8-வது பைசாவிற்பட்டு சற்று நகரும். மற்ற பைசாக்களும் அவ்வாறு சற்று நகர்ந்துவிடும். பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

137. மாதக்கந்தாய பலனறியும் வித்தை

இம்மாதம் மழையுண்டா இல்லையாவென்று சுவாமியைப் பிரார்த்தித்து ஆமணக்கன்கொட்டையை ரவுண்டாக மூக்கு உள் சுத்தி விருக்கும்படி வைத்து அதன்நடுவில் நல்லெண்ணெயால் விளக்கேற்றிவைத்து ஓர் புதிய கூடையைப்போட்டு மூடிவிட்டு மறுநாள் காலையில் தூபதீபங்கொடுத்துத் திறந்து பார்க்க ஒருமுத்து தள்ளுண்டிருந்தால் ஒருபோகமும் இரண்டுமுத்து தள்ளுண்டிருந்தால் இரண்டுபோகமும் மூன்றுமுத்து தள்ளுண்டிருந்தால் மூன்றுபோகமும் சிறிது முத்துகள் தள்ளுண்டு கலந்திருந்தால் மழையினால் வெள்ளமும் அக்கொட்டைகளெல்லாம் ஒன்றுடனொன்று தாறுமாறாயிருக்கில் மழையில்லையென்றும் அறியவேண்டியது. இப்பழக்கம் சில கிராமங்களில் நாளது வரையும் வழங்கும்.

138. வருடக்கந்தாயமறியும் வித்தை

காட்டு முருக்கமரத்தின் காயை அறுத்து அதை அவ்விடத்திலேயே உடைத்துப்பார்க்க அதனடியில் ஓர் விரை இல்லையாகில் முதற்போகமில்லையென்றும இரண்டு விரைகளில்லையாகில் இரண்டாம் போகமில்லையென்றும் முடிவில் மூன்று கொட்டைகளில்லையாகில் மூன்றுபோகமும் மழையில்லாமல் நாடெங்கும் விளைவுகள் குன்றிவிடுமென்று சொல்லவும்.

139. முலைப்பால்சுரக்கும் வித்தை

தலைப்பேன்களில் பத்து பேன்கள் பிடித்து ஓர் வெற்றிலையில் மடித்து பாலில்லாதவர்களுக்குக் கொடுத்து மென்றுதின்றுவிடச்செய்தால் கங்கை யாக பால் சுரக்கும். ஆனால் மேற்படிமருந்தை வரிசையாக மூன்று நாள் கொடுக்கவும்.

140 மாரணவித்தை

ஆதிவாரம் அரசுமாரணவேளையாகப் பார்த்து ஊமத்தன்செடி யருகிற் சென்று சாபனிவர்த்திசெய்து வாலைமந்திரத்தை ஆயிரத்தெட்டு உருசெபித்து நம்நிழல் அச்செடியின்மேற்படாமல் இரண்டிலைகளைக்கிள்ளி அதில் நமது சிறுநீர் இரண்டுதுளிவிட்டுக் கலக்கி அச்சாற்றை நமது நெற்றியில் தீட்டிக்கொண்டு எதிரியின் முகத்தைநோக்க எதிரிமாரணமாவான்.

141. பேதன வித்தை

தும்பைச்செடிக்குச் சனிவாரம் சாயங்காலவேளையில் சாபநிவர்த்தி செய்து காப்புகட்டி பிறகு விரோதிகளாகிய இருவருடையபேர்களையுந் தலை மாற்றியெழுதியதிற்கட்டி சிவசிவசித்து சிவசித்து மாயசித்து மயேஸ்வரி சித்து இன்னானையும் இன்னாளையும் பிரி-பிரி-மசி-வசி-வசியவயந யென்று ஆயிரத்தெட்டு உருசெபித்து மறுநாள் ஞாயிற்றுக்கிழமை உதயத்தில் ஆயிரத்தெட்டு உரு செபித்து அதை வேரோடு பிடுங்கி இரண்டாகக் கிழித்து இரண்டிலும் இரண்டு சீட்டை வைத்துச்சுருட்டி ஒன்றை ஊர்பிடாரிகோயில் பலிபீடத்திலும் மற்றொன்றை தலைதூரத்திலுள்ள பிடாரிகோயில் பலிபீடத்திலும்வைக்க ஒருவரைவிட்டு ஒருவரைப்பிரித்து ஓடச்செய்யும்.

142. பகைவரைக் கெலிக்கும் வித்தை

ஓர் ஊமையின்கையில் காசுகொடுத்து உப்பும் புது சட்டியும் வாங்கி வரச்செய்து மறுபடியும் அவனையே அதை அடுப்பின்மீதுவைத்து வறுக்கச் சொல்லி அது சாம்பலானவுடன் அதில் விபூதியைக் கலந்து ஐயுங் கிலியும் ஆம் ஓம் சுவாஹாயென்று ஆயிரத்தெட்டு உரு செபித்து அவ்விபூதியையிட்டுக்கொண்டுபோனால் பந்தயங்கள் கேசுகள் முதலானதும் வெல்லும்.

143. ஸ்திரீ வசியம்

ஆணுக்குப்பெண்ணும் பெண்ணுக்குஆணுமாக பேய்மிரட்டியிலையை யறுத்து அதில் வெள்ளைப்பூண்டு திரியைவைத்துக்கசக்கி அந்தரசத்தை உச்சந்தலையில்தேய்த்து அரக்க வசமாவார்கள். ஒரேசெடியில் குள்ளமாகயிருப்பது பெண்ணென்றும் நிகளமாகயிருப்பது ஆணென்றும் அறியவும்.

144. வண்டித் தானாக ஓடும் ஜாலம்

மூங்கில் பத்தைகளால் வண்டியின் பார்போலக் கட்டி, காகிதம் ஒட்டி, கடையிலிருக்கும் நூல்வண்டி சக்கரத்தை நாலு கொண்டுவந்து சக்கரங்களாக மாட்டி, பாரின்மேல் மூங்கில் சுப்பலால் படல் கட்டி, அதற்குங் காகித மொட்டி வண்டியைப்போல சிங்காரித்துத் தரையில் காற்று வாட்டமாகப் பார்த்துவைக்க அது டிராம் வண்டியைப்போல நேராக ஓடும் பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

145. தேள் விஷந் தீரும் வித்தை

எருமைமாட்டின் காதிலிருக்கும் குரும்பியை யெடுத்துவைத்துக் கொண்டு தேள் கொட்டிவந்தவர்களுக்கு அதிற் கொஞ்சமெடுத்து மூலைப்

பால் விட்டிழைத்துக் கொட்டின வாயில் வைக்க விஷந் தீர்ந்து வாதனைகளும் அற்றுவிடும்.

146. நட்டுவேக்காளி விஷந் தீரும் வித்தை

முன் சொன்ன குரும்பியில் மூலைப்பாலும் வெள்ளைப்பூண்டுச்சார் ஒரு துளியும் விட்டுக் குழைத்துப்போட நட்டுவக்காளி விஷந் தீரும்.

147. கோழி பிடிக்கும் ஜாலம்.

கட்டியாகவுள்ள கூழிலேனும் களியிலேனும் ஓர் சிட்டிகை மூக்குத் தூளை வைத்து மூடி கோழியின் முன்போட அதைத் தின்றவுடனே அவ்விடத்திலேயே சுருண்டு விழுந்துவிடும். உடனே யாதொரு தடையுமில்லாமல் பிடித்துக்கொள்ளலாம்.

148. ஈயைப் பிடிக்கும் வித்தை.

கனமாகவுள்ள ஜாண் துடப்பக்குச்சியை யெடுத்துப் பிளந்து பேர் பாதியில் ஒடித்துவிட்டு பிளக்காத மற்ற மிகுதியின் முனையில் ஓர் மெல்லிய ஊசியேனும் நாகதாளியின் முனை முள்ளேனும் சொருகி மற்றொரு குச்சியைப் பேர்பாதியில் பிளந்து அதில் முக்கால் ஜாண் நீளமிருக்கத் தரித்து அதை வில்லாக வளைத்து மத்தியிற் பிளவிலூன்றி மற்றொரு முனையை முன் முனையிற் பிடித்து அதன் பிறகு மேல் வில் முனையைப் பிடித்து அடித்துண்டைவிட, முனையிலிருக்கும் ஊசியானது நீ எதிற்குறி பிடித்தாயோ அதிற் போய் பாயும். எரும்புகள்கூட சில சமயங்களில் அகப்பட்டுக் கொள்ளும்.

149 வீட்டை நாசமாக்கும் வித்தை.

மரங்களின்மீது படர்ந்திருக்கும் கொத்தான் செடியைக் கண்டுபிடித்துக்கொண்டு வந்து எந்த வீட்டில் போடுகிறோமோ அந்த வீடு நாசமாகிவிடும். எப்பக்கம் சொருகி வைக்கின்றோமோ அப்பக்கம் இடிந்து விழுந்துவிடும். இது வேலியில் கொல்லைப்பல்லியை நிகர்த்தது. இடையர்கள் இதை யரைத்து மோரிலும் தயிரிலும் கலக்குவதுண்டு.

150. சித்துகள் விளையாடும் வித்தை

எந்த மரத்தின்பேரில் கொத்தான் படர்ந்திருக்கின்றதோ, அந்த மரத்தைச் சுற்றிலும் வரகு வைக்கோலைப்போட்டுக் கொளுத்த கிழங்குள்ள விட மாத்திரமெரியாமல் மற்றதெல்லா மெரிந்துவிடும். அதையறிந்து அவ்விடத்தைத் தோண்டிப்பார்க்க, கிழங்கு அகப்படும் அதை யெடுத்துவைத்துக் கொண்டு அனேக சித்துகள் விளையாடலாம்.

151. மச்சங்கள் மிதக்கும் ஜாலம்

பேன்கொட்டை கெஞ்சா வேர்க்கடலை எரு இந்நான்கையும் ஒன்றாய்ச் சேர்த்தரைத்து எடுத்துக்கொண்டு போய் குளம் குட்டை மடுவு துறவு இவைகளில் போட்டுக் கலக்கிவிட அதைத் தின்ற மீன்களெல்லாம் போதையினால் மேலே மிதந்துவிடும். சுலபமாக வாரிக்கொள்ளலாம்.

152. சாதாரண முட்டை குஞ்சுகள் பொரிக்கும் ஜாலம்.

ஓர் பெட்டியில் பஞ்சைப்போட்டு, அதின்மேல் கோழிமுட்டைகளை வரிசையாகவைத்து அதின்மேலும் பஞ்சைப்போட்டு நன்றாக மூடிவிட்டு காற்று புகாதயிடத்தில் பத்திரமாக வைத்து இருபது நாள் கழித்து எடுத்

துப் பார்க்க குஞ்சுகளாயிருக்கும். அதற்குத் தீனி முதலியவைகளை நாம் சிறிய குருவிகளுக்கு என்னமாய் கொடுக்கின்றோமோ அம்மாதிரி கொடுக்க வேண்டும். பெட்டியில் மூடுகிறது மாத்திரம் காற்று புகாதபடி வெகு பந்தோபஸ்தாயிருக்கவேண்டும்.

153. வசியஞ் செய்யும் ஜாலம்.

நாம் எந்த ஸ்திரீயின்பேரில் இச்சை படுகிறோமோ அவளுடைய தலை மயிரில் இரண்டு அல்லது மூன்றெடுத்து உள்மூலஞ் சேர்த்து முருங்கமரத்தின் மேல்கிளையில் கட்டிவிடவும். மறுபடியும் நாம் அவளைக்கோறி மேற்படி முருங்கை மரத்தருகில் எப்போது போகிறோமோ அப்போது அவள் அங்கு வந்திருந்து நம்மிஷ்டத்தைப் பூர்த்தி செய்வாள். ஆனால் இதற்கு மஹா மந்திரம் 1008 செபிக்கவேண்டியது.

154. புட்டியில் வேடிக்கைக் காண்பிக்கும் ஜாலம்

துணி நெய்யும் நூலில் ஓர் ஐம்பது யிழை நைசானதாக யெடுத்து ஒன்றாகச் சேர்த்து அதின்மேல் நாலு அல்லது ஐந்து யிழை நூல் சுற்றிக்கொண்டே வந்து ஒரு முழ நிகளத்திற்கு முறுக்கி, சாம்பிராணித் தூளில் பிறட்டி, மறுபடியும் முறுக்கிப் பிறட்டி நன்றாய் நூலைத் தேய்த்து ஒரு முனையைக் கொளுத்தி வெள்ளைக் கண்ணாடி புட்டியின் வாய்புறத்தில் காட்ட அங்கு வெடித்துக் கீற்றுண்டாய் விடும். நீயும் கீற்றுண்டான வாய் புறத்தின்மேற் றீயைக் காட்டிக்கொண்டே வர, அது பிளந்துக்கொண்டே வரும். அப்போது அதை இரண்டு பிளவாக்கி அதற்குள் புகத்தக்க ஏதாகிலும் ஓர் வஸ்துவை நுழைத்து மறுபடியும் புட்டியை கீற்றுகள் தெரியாதபடி மூடிக்காட்ட பார்ப்பவர்கள் உனக்கு மலையாள பகவதி வசியமென்று கொண்டாடுவார்கள். ஆனால் புட்டியை ஒட்டுகிறது மாத்திரம் ஒருவருக்குந் தெரியக்கூடாது. எப்படியென்றால் கோழிமுட்டையை யுடைத்துக் கொஞ்சங் கருவெடுத்து ஓர் பீங்கான் தட்டில் வைத்து ஒருவாரம் பனியில் வைத்துப் பிறகு அதனுடன் நவாச்சாரத்தை சேர்த்து அரைத்து மெழுகாக்கி அதைப் புட்டியின் பிளப்பில் தடவி இரண்டையும் ஒன்றுசேர்த்து அழுத்தி விட்டு முன் திரியைக் கொளுத்திக் காட்டிக்கொண்டே வர ஒட்டிக் கொண்டே வரும் பிளவு தெரியாது.

155. பேயாடும் வித்தை.

தேரை ஒன்றைப்பிடித்து அதற்குச் சமன் நல்லபெருங்காயஞ் சேர்த்து அரைக்கவும் அப்படியரைக்கும்போது யெழுகால்செய்தஆணியைக்கொண்டு ஓர் எலுமிச்சம்பழத்தைக் குத்தி அதில் ஒரு துண்டை வாயில்போட்டுக்கொண்டு அரைக்கவும் இல்லாவிடில் உனக்கும் பேய்மருளுண்டாகும் பிறகு அறைத்தமருந்தை கொஞ்சம் மேலேதடவினாலும்சரி அல்லது விறட்டியில் தடவி யெறியவிட்டு அப்புகைபட்டாலும் சரி அவர்களுக்கெல்லாம் பேய் பிடித்தவர்கள்போன்று துணிமணிகளையெல்லாம் எறிந்துவிட்டு கூத்தாடுவார்கள் முன்சொல்லிய பழத்தை வாயில்போட்டு மெல்ல அந்தக்குணம் மாறிவிடும்.

156. உப்புமணிசெய்யும் விதம்.

புத்தமணலைப்போலிருக்கும் ஓடில்லாத கடல்நுரையைப் பத்துபலமெடுத்துவந்து தூளாக்கி ஒரு சட்டியில் பேர்பாதி அடியில் பரப்பி அதின் ஏழாங்காய்ச்சல் பொட்டிலுப்பை இரண்டுபலங்கட்டியாகவைத்து அதன் மேல் மீதிநுரையைப்போட்டு மூடி அதற்குமேல் சட்டிமூடி சீலமண் வலு

வாகச்செய்து எரிக்க அது உருகிக்கட்டிவிடும் அதையெடுத்து மேற் கரடு களையெல்லாம் நன்றாய்சுரண்டிவிட்டு மூங்கிற்குருத்தும் வெண்காரமுஞ் சேர்த்தரைத்து கவசஞ்செய்து குக்கிடபுடம்போட அவ்வுப்பு மணியாகும். அந்தமணி 1-பலம் 4-பலம் தண்ணீரைக்குடிக்கும் கரையாது.

157. இரசமணி செய்யும் வித்தை.

மணத்தவளைவாயில் கொஞ்சம் பாதரசத்தைவிட்டு சட்டியில்வைத்தெரிக்க அந்த இரசம் மணியாய் கட்டிவிடும் அதையெடுத்து ஆறைக்கீரையை யரைத்து கவசித்து சீலைசெய்து புடம்போட வெளுத்து மணியானது பளபளப்பாயிருக்கும். அந்தமணி 1-பலம் 2-3-பலம் பாலைக்குடிக்கும்.

158. வெள்ளிக்கிலிட்டு வித்தை.

வெள்ளியைத்தகடடித்து அதை ஒரு கோப்பையிலாகிலும் தட்டைப் பீங்கானிலாகிலும் போட்டு அதில் நைட்ரிக்ஆவிட் கொஞ்சம்விடக்கரைந்துவிடும் உடனே சைனட் ஆப் பொடாஷியம் கொஞ்சம்விட்டு அதில் பின் சாக்குக்கட்டியென்னும் சீமைச்சுண்ணும்புத்தூளைப்போட்டுக் கிளர மெழுகைப்போலாகிவிடும். அதைப்பித்தளை செம்பு நகைகளின்மேல் கொஞ்சம் பூச வெள்ளிக்கிலிட்டாகும் அதைமெருகேற்றிட வெள்ளியைப்போலவே யிருக்கும் உலர்ந்துவிட்டால் தண்ணீர்விட்டுக்குழைக்க குழம்பாகும்.

159. போன்கிலிட்டு வித்தை.

பொன்னைத் தகடடித்துத் கத்தரித்து ஒரு யேனத்தில்போட்டு புளு செட் ஆவிட் கொஞ்சம்விட கரையும் அதன்பின் பெரெடிக் ஆவிட் கொஞ்சம்விட்டு சீமைசுண்ணும்பைப்போட்டுக் கிளர உருண்டையாய்விடும் அதைக் கொண்டு முன்மாதிரி கிலிட்டிடவும் ஆனல் இது பித்தளையின்மேல் ஏராது கட்டாயம் யேற்றவேண்டுமாகில் முன்வெள்ளிக்கிலிட்டேற்றி அதன்பின் இதையேற்றவும்.

160. அரிசியை சாதமாக்கும் வித்தை

சுண்ணும்புக்கால்வாய் கொளுத்துமுன் நமக்குத்தேவையான நெல்லை கால்வாயினடியில் புதைத்துவிட்டு கால்வாய் வெந்தபிறகு அந்த நெல்லை யெடுத்துவந்து அரிசியாகக்குத்தி அதை ஓர் குடுவையில்போட்டுத் தண்ணி தெளித்து கொஞ்சநேரம்வைத்து எடுத்துக்காட்ட சாதமாயிருக்கும் ஆச்சரியப்படுவார்கள். இதை தின்னக்கூடாது.

161. பல்லுகள் உதிரும் வித்தை.

மேற்படி அரிசியிற் கொஞ்சம் சர்க்கரைக்கலந்து சத்துருவுக்குத் தின்னக்கொடுக்க அவன் தின்னல் மறுநாளைக்குள் அவன்பல்லுகள் விழுந்துவிடும். மற்றபேர் தின்னக்கூடாது.

162. சத்துரு கெடும் வித்தை.

சத்துருக்களின் பெயரைச் சீட்டிலெழுதி அதனுடன் அவனுக்குண்டாகவேண்டிய வியாதியையுமெழுதி பச்சைத்தவளையின்வாயில் போட்டு அதனுடன் அவனுடையமலத்தையும்போட்டு சுடுகாட்டில் புதைத்து அதன் நாலுகால்களுக்கும் நாலு ஆணி அடித்துவிட்டு வந்துவிடவும் அவன் நோயால் துன்புப்படுவான்.

163. வேறு எதிரி மாரண வித்தை.

ஊர்வண்ணான் சோறெடுத்துக்கொண்டு போகும்போது அவனுக்குத் தெரியாமல் அசசோற்றில்கொஞ்சம் எடுத்துக்கொண்டுபோய் ஆவாரைச செடியண்டை குழிதோண்டி அதில்சோற்றைவைத்து அதின்மேல் ஒரு சாவலைவிட்டு அதின்மேல் பந்தல்போட்டு பாவைசெய்து பெயரைச் சீட்டி லெழுதி கொழுக்கட்டையைச்சுட்டு அதில்விரல்கனந்திரிபோட்டு விளக் கேற்றிவைத்துவிட்டு திரும்பிப்பாராமல்வந்துவிட எதிரி மாரணமாவான் முன்சொன்னதற்கும் இதற்கும் மூலமந்திரம் ஓம் ஐயும் கிலியும் சவ்வும் என்று 108 செபித்தால் போதுமானது.

164. பிருவினை செய்யும் வித்தை.

ஆதிவாரத்தில் காட்டவுரிச்செடிக்குக் காப்புக்கட்டி பேரை ஓர் சீட்டி லெழுதி இருவரும் பிரிந்துபோகவென்று கட்டி எட்டாம்நாள் சென்று அதன் வடக்குவேரைக்கொண்டுவந்து பகையாளியின் வீட்டிறப்பில்சொருகி வைக்க அவர்களைப்பிரிவுசெய்து ஓட்டிவிடும்.

165. பகைவரைத் துன்பஞ்செய்யும் வித்தை

ஞாயிற்றுக்கிழமையில் காட்டவுரிச்செடிக்குக் காப்புகட்டி 15-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை சென்று அதன் ஆணிவேரூமல் பிடுங்கிவந்து எதிரியின் நீர்க்குழிமண்களில் வைத்தரைத்து சுட்லையிலெரித்து அச்சாம்பலை அவன் நடக்கும்வழியில் தூவிவிட்டால் அவனதை மிதித்துச் சிறுநீர்கட்டி மகா பாதைப்படுவான்.

166 எதிரி மடியும் வித்தை

எதிரி தேள்முதலிய விஷங்களால் வாதைப்படும்போது வெள்ளறுகை எலுமிச்சம்பழவீதம் அரைத்துஉள்ளுக்குக்கொடுக்க மடிவான் உடனே கத் திரிபிஞ்சு ரசத்தைக்கொடுக்க பிழைப்பான்.

167. வேறு திருடுபிடிக்கும் வித்தை

ஓர் காகிதத்தில் நமக்குச் சந்தேகமானபேர்வழியின் பெயரை அம் மான்பச்சரிசியின்பாலில் எழுதி அதை நன்றாகமடித்து அதற்கு மந்திரஞ் செபித்து அங்குள்ளவர்களைப்பார்த்து நான் இப்போது ஒரு மந்திரஞ்செய்கி றேன் அதினால் திருடினவர்களின் பெயரை கண்டுகொள்ளலாமென்று சொல்லி அக்கடிதத்தைப்பிரித்து எல்லோருக்குங்காட்டிமந்திரஞ்செபித்துக் கொண்டே கற்பூரப்புகைபிடிக்க அதில் அனுமானமுள்ள பெயர்கள் நன்று கத்தெரியும். அதைக்காட்ட திருடினவர்கள் பயந்து சொத்தைக் கொடுத்து விடுவார்கள்.

168 இதுவுமது

முன்போல சந்தேகமுள்ளவரின் பெயரை அம்மான்பச்சரிசிபாலில் தன்கையிலெழுதிக்கொண்டு யாவர்களுமிருக்குஞ் சபையில் அனைவர்களை யும்பார்த்து நான் இப்போது என்னிஷ்டதேவதையை நினைக்கப்போகி றேன் அத்தேவதை நான் பூசைசெய்கிறது உண்மையாயிருக்கும்பக்ஷத்தில் திருடினவர்கள் பெயரை என் உள்ளங்கையில் காண்பிக்கும் இல்லையேல் காண்பிக்காது என்று சொல்லிக்கொண்டே ஏழெட்டுத் துண்டுக்கடுதாசி களைக் கற்பூரத்தில் கொளுத்தி அதையெடுத்து கையில் வைத்துக்கொண்டு இரண்டுள்ளங்கையையும் ஒன்றின்மேலொன்றாக வைத்து சற்றுநேரம் கண்

மூடி செபித்துக்கையைக்காட்ட பாலில் கறி ஒட்டிக்கொண்டு பேர் நன்ருகத்தெரியும் திருடினவர்கள் பயந்து கொண்டுவந்து கொடுத்துவிடுவார்கள்.

169. நீர் இரங்காது செய்யும் வித்தை.

ஒருபுட்டியில்சாம்பலைப்பரப்பி அதன்நடுவில் ஒருதலைப்பூண்டைபேர்பாதியில் புதைத்து ஒருதேளைப்பிடித்து அதில்விட்டு அத்தேளை இருபத்திரெண்டாம்நாள் அதேமணிவேளையில் எடுத்துவிட்டு மேற்படி பூண்டை எதிரிகளின் மூத்திரம்பேய்ந்தவிடத்தில் புதைத்துவிட்டால் மூத்திரமடைத்து ரொம்பவும் பாதைப்படுவான் அதை மறுநாள் அதேடயத்தில்எடுத்துவிட்டு பாலைக்காய்ச்சி முன்னேகொடுத்து 4 கை மோர் பின்னேகொடுக்கவும் நிவர்த்தியாகும்.

170. மறைவு மை வித்தை.

வெண்மையாகிய பட்டையுள்ள மண்ணுளிப்பாம்பின் பிச்சியில் முன் சக்கல்லை சேர்த்தரைத்து உருண்டையாக்கிக் காயவைத்து யெடுத்துக்கொண்டு தேவையானபோது அதைத் தேனிலிழைத்து திலர்தமிட்டுக்கொண்டு போக யாவர்களுங் காணமாட்டார்கள். அதைக் கலைத்துவிட யாவர்களுங் காணுவார்கள்.

171. ஆயுதங்கள் பர்யாதிருக்கும் வித்தை

மேற்படி மச்சக்கல்லை நத்தைச்சூரி வேருடன் வைத்துஅறைத்து திரேகத்திற் பூசிக்கொண்டு சண்டை முகத்தில் சென்று சண்டையிட்டால் எவ்விதமான ஆயுதமாயிருந்தாலும் மேலே படாது.

172. பாதாள அஞ்சன வித்தை

கரிமஞ்சள் நுனியைக் கறுக்கி அதில் அஞ்சனக் கல்லும் மச்சக்கல், லும், சரியிடை சேர்த்து குழியானை கோரோசனையுடன் காராம்பசு நெய்யிலரைத்து வெற்றிலையில் ஒரு மிளகளவு தடவி, விளக்கின் முன்பாகப் பார்க்கப் பாதாளத்திலுள்ள வஸ்துக்களெல்லாம் நன்ருய்த் தெரியும். ஆகிலும் இதற்கு ஆஞ்சனேயர் உச்சாடனம் வேண்டும்.

173. இருமருந்து

களிவெட்டையாயுள்ள பாக்கை மூன்றெடுத்து மெல்லாமல் விழுங்கிவிட்டு அதை மறுநாள் காலை மலத்தில் கண்டெடுத்துச் சுத்தஞ்செய்து பொடியாக்கி அதில் கொஞ்சம் சின்னியிலை சேர்த்தரைத்து அல்லது $1\frac{1}{2}$ கெச்சக்காய் பிரமாணம் கறிபதார்த்தங்களில் மூன்று நாள் அடுத்தடுத்து ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணுமாகக் கொடுக்க வசியமாவார்.

174. மீளான் வித்தை

மீளானில் கொஞ்சம் வீரமும் பாம்பு விஷமுஞ் சேர்த்து அரைத்து புட்டியில் பதனமாக வைத்துக்கொண்டு தேவையானபோது பகையாளிகளுக்கு ஓர் யீர்க்கின் முனையில் கொஞ்சமெடுத்துத் தெளித்துவிட, அது பட்டவிடமெல்லாம் பத்தல் பத்தலாய் வெடித்து இரணமாகி ரொம்பவும் தொந்திரவைக் கொடுக்கும்.

175. இதற்கு முறிவு வித்தை

மாட்டின் மாமிசத்தைக் கொண்டுவந்து ஆவி போகாது வாயைக்கட்டி வேவித்து அப்புகையைப் பிடிக்க மேற்படி இரணங்களெல்லா மாறி சுகப்படும்.

176. கட்டிகள் உண்டாகும் வித்தை

எலுமிச்சம்பழத்தில் கொஞ்சந் துளை செய்து பாதரசத்தை விட்டு எதிரியின் வாசற்படியண்டை பள்ளந்தோண்டி அவன் பேரைச் சொல்லி அவனுக்குக் கட்டியுண்டாகவேணுமென்று நினைத்துக்கொண்டே புதைத்து விட்டு வந்துவிடவும். அதை அவன் தாண்டிக்கொண்டு செல்லச்செல்ல அவனுக்கு திரேகமெல்லாங் கட்டிகளுண்டாகி வருத்தப்படுவான் அதை எடுத்துவிட எப்போதும்போலிருப்பான்.

177. ஆனைக்கல் மை வித்தை

பூநீறுக் கட்டியிலுள்ள வழலைக்கல்லும் மயானச் சாம்பலுஞ் சேர்த்து சிகப்புச் சாவலின் இரத்தம் விட்டரைக்க அது கறுத்து மைபோலாகும். அதைக்கொண்டு சகல துஷ்ட வேலைகளையுஞ் செய்யலாம். அது பட்ட விடம் பாழாகும். சண்டைச் சச்சரவுகள் விளையும்.

178. மாடுகள் அழியும் வித்தை

உலர்ந்த ஓலைவாளைக் கருவாட்டைப் புல்லில் வைத்து எவ்வித மாட்டுக்கேனும் தின்னக்கொடுக்க அது தின்ற ஒரு மணி சாவகாசத்திற்குள் விண்ணுலகடையும்.

179. பற்களின் புழுக்கள் சாகும் வித்தை

கீழ்க்காய் நெல்லிச் செடிக்கி ஆதிவாரம் உதையத்தி[illegible] கன்னி நூலால் காப்பு கட்டி, பழம் பச்சரிசியுடன் தூபதீபங் க[illegible] மசி-நசி யென்று 108 உரு கொடுத்து பேரைச் சொல்லி பல்லிலுள்ள புழுக்கள் சாகவேண்டுமென்று சொல்லி, வேராறுமல் பிடுங்கியெறிய பல்லிலுள்ள புழுக்கள் சாகும்.

180. கைகால் முடக்கும் வித்தை

கருவங்கத்தை ஓர் ஓட்டில் வைத்துருக்கி அது உருகும்போது கீழா நெல்லிக் கத்தையைக்கொண்டு துழாவ, வங்கம்மடியும். அது நன்றாய் பஸ்பமானதும் அதில் பாதரசம் கொஞ்சம் விட்டு மத்திக்க மெழுகைப்போலத் திரண்டுவிடும். அதை ஒரு மட்டித்துணியில் வைத்துப்பிழிய அதிலிருக்கும் ரசமானது கீழே விழுந்துவிடும். அதில் ஓர் அரிசிப் பிரமாணமெடுத்துத் தின்பண்டங்களில் கலந்து உள்ளுக்கேற்ற கை கால் முடங்கிவிடும். அவுரி வேர் கியாழமிட்டுக் குடிக்க நிவர்த்தியாகும்.

181. நோய்கள் அதிகமாகும் வித்தை

நோயாளிகளுக்கு வைத்தியர்கள் மருந்து கொடுத்து நோய் தீர்ந்து விட்டதன் பின் அது மறுபடியும் அதிகப்படவேண்டில் இரண்டிழை தாளகத்வத யிழைத்து அதனுடன் ஏதாவதொரு கட்டு மாத்திரையைக்கூட யிழைத்து உள்ளுக்கேற்றிவிட முன்னுள்ள நோய் தீர்ந்தது மறுபடியும் பழையபடி வந்துவிடும். முறிவு அவுரிவேர் கியாழம்.

182. மச்சக்கல் வித்தை

சுறு மீனுக்குச் சாதாரணமாகவே தலைகளில் கற்களிருக்கும். அதையெடுத்து தலைப் பேறுபெற்றவள் முலைப்பாலிலிழைத்து, நெற்றியிலிட்டுக்கொண்டு செல்ல இருளுள்ள விடமெல்லாம் வெளிச்சமாகத் தோன்றும். மேலும் இக்கல்லைப் பத்திரமாக வைத்திருந்தால் இன்னும் பலவித வேலைகளைச் செய்யலாம்.

183 சத்துருவை வசியஞ் செய்தல்

முன்னெடுத்த கல்லை கோரோசனையுடன் சேர்த்து தேன் விட்டிழைத்து உள்ளங்காலில் தடவிக்கொண்டு போனால் யாவர்களும் வசியமாவார்கள். பகையாளிகளும் பணிந்து வருவார்கள். வசியத்தில் இதற்குமிஞ்சின வசியங் கிடையாது. ஆனால் கோரோசனை மாத்திரம் பசுமாட்டு தாயிருக்கவேணும்.

184. சகல வழக்குகளும் வெல்லும் வித்தை

தலைப்பேறு பெற்றவளுடைய முலைப்பாலில் முன் கல்லையும், பொரிகாரத்தையு மிழைத்து இதில் சந்தனஞ் சேர்த்து நெஞ்சுக்குழியில் தடவிக்கொண்டுபோக செலிக்காத வழக்குகளெல்லாம் செலிக்கும்.

185. பேய் பிசாசுகள் விலகும் வித்தை

கோழிப்பிச்சில் முன்னெடுத்த கல்லை அரைத்து நெற்றியிலும் புருவத்திலும் தடவிக்கொண்டு போனால் அவ்விடத்திலுள்ள பூதப் பிசாசுகளெல்லாம் உன்னைக் கண்டபோதே அபயம் அபயமென்று கதறி ஓடிப்போய் விடும்.

186. பேய் பிசாசுகள் பணிசெய்யும் வித்தை

முன் மையை இட்டுச் சென்றபோது தன்னைக் கண்டு அலறின பேய் பிசாசுகளின்மேல் ஓர் எலுமிச்சங் கனியை விசறி யெறிந்துவிட்டு திரும்பிப் பாராமல் வந்துவிட்டால் நாம் அன்றையிரவு நித்திரை செய்யும்போது அந்த எலுமிச்சங் கனியானது நமது கால்மாட்டில் வந்திருக்கும். அதைக் கண்டெடுத்துப் புசித்துவிடும்பக்ஷத்தில், அன்றைய தினத்திலிருந்து உன் ஆயுளுள்ளளவும் உனக்கு அப்பேயானது அடிமை வேலைகளைச் செய்யும்.

187. காப்பி இங்கிசெய்யும்வித்தை

சாதாரண கறுப்பு இங்கி 1 அவுன்ஸ் வெள்ளை சர்க்கரை ஒன்றரை திரானுஞ்சேர்த்துக் கலக்க நல்ல இங்கியாகும்.

188. இதுவுமது

ஊதாயிங்கி 8 பலம் கிலசரின் 6 பலஞ் சேர்த்துக்கலக்கி ஒருநாள் வைத்திருந்து மற்றுநாள் கலக்கி யெழுத வெகுநன்றாயிருக்கும்.

189. இதுவுமது

பதமாக காய்ச்சிய வெள்ளை சர்க்கரைபாகில் ஒன்றரைடிராமெடுத்து தேவையான இங்கியை 1 அவுன்ஸ் சேர்த்துக் கலக்கி யெழுத நன்றாயிருக்கும்.

190. கண்ணாடியின்மேல் எழுதும் இங்கியின்வித்தை

சோடியம் ஸிலிகேட் 4 பலம் சைளிஸ் ஒயின் 1 பலம் இவையிரண்டையும் புட்டியில் விட்டுக்குலுக்கி எழுதுக்கம்பியைக்கொண்டு கண்ணாடியின் மேல் எழுதிக்காட்ட ரொம்பவும் விநோதமாயிருக்கும்.

191. இரகசியகடிதமெழுதும் இங்கியின் வித்தை

நைட்ரேட் ஆப்பீஸ்மத் என்பதைதண்ணீரில்கலந்து பேனாவைத்தொட்டுக்கடிதத்தின்மீலெழுத காய்ந்தபிறகு ஒன்றுமே தெரியாது படிக்கும்போது தண்ணீரிற்றோய்த்துதான் படிக்கவேண்டும் தண்ணீர் படாவிட்டால் எழுத்துகள்தெரியாது.

192. டிராயிங் எழுதும் இங்கியின் வித்தை

அதிக சூடாகிய ஜலத்தில் வெடிகாரத்தை யரைத்து அதில் ஸெல்பரிக் என்னும் ஆசிட்டைச் சேர்த்து கரைத்தபின்பு தட்டையாகிய பீங்கானில் கொஞ்சம் விட்டுக்கொண்டு அதனுடன் இண்டியன் இங்கியைச்சேர்த்துடிராயிங்பேனவைக் கொண்டு எழுதியபின் ஆல்கஹால் திராவகத்திற்கழுவிசுத்தஞ்செய்யவும்.

193. கண்ணுடியின்மேல் எழுதும் வித்தை

ஒரு கண்ணுடி பில்லையின்பேரில் மெழுக்கை நன்றாகயுருக்கிதடவி அதில் எழுதவேண்டிய விஷயங்களை ஓர்கூறிய ஊசியைக்கொண்டு முனைக் கண்ணுடியையெழுதி பேரிப்சல்பெட் 3 பங்கும் அமோனியம் பிளோரைட் 1 பங்குமாகப் புட்டியில் விட்டுக் கரைந்தபின் கெந்தகத்திராவகம்போதுமானதுவிட்டுக்கலந்து கண்ணுடியின் மேல் தடவி 1-மணி நேரங்கழித்து நன்றாகக்ழுவிக்காண்பிக்குமுன் எழுதின எழுத்துக்களெல்லாம் ரொம்பவும் நன்றாகத்தெரியும்.

194. அழியாத இங்கிசெய்யும் வித்தை

ஐங்கால் பச்சை கால்பங்கு நவாச்சாரம் ஒண்ணரைபங்கு ராம்பிளாக்குஅரைபங்கு ஜலம் எட்டேகால்பங்குமாகஓர்புட்டியில்விட்டு ஆறவைத்துத் தேவையானபோது நன்றாக குலுக்கி எழுத எக்காலமும் அழியாது.

195. சூட்சுமவசியம்

மார்பின் அழுக்கைத்திரட்டி யெடுத்து அதிற்கொட்டைக்கறந்தச்சார் விட்டு மத்தித்து மிட்டாய்கடை ஜீராவிற்கலந்து தின்பண்டத்திற்கொடுக்க வசியமாவார்கள் ஆணுக்குப்பெண்ணும் பெண்ணுக்குஆணுமாகச்செய்யவும்.

166. கிளுவையை பிடிக்கும் வித்தை

ஏரிகளிலாகிலும் குளங்களிலாகிலும் கிளுவைகள் இருந்துதாஞல் அவைகளைப்பிடிக்கும் தந்திரமாவது ஓர் பெரிய வண்ணன் சாலுக்காகிலும் பெரிய பானைக்காகிலும் அடுப்புகரியை அரைத்துப்பூசி அதின் மேல் சுண்ணம்பினல் புள்ளிகள்வைத்து ஜலத்தில் விட்டுவிடவும் இதைப்பார்த்தகிளுவைகளெல்லாம் பயந்து ஓடிப்போகும் மறுபடியும் நாலைந்து நாள்வரை இப்பானை அத்தண்ணீரிலேயே மிதக்கின்றதைப்பார்த்து பயந்தெளிந்து எப்போதும் ஜலத்திற்சேர்ந்து விளையாடிக்கொண்டிருக்கும் அப்போது அப்பானையைத்தலைமேற் கவிழ்த்துக்கொண்டு சந்தடிசெய்யாமல் ஜலத்திலிறங்கி வேண்டுமானபக்ஷிகளைக்காலைப்பிடித்து ஜலத்திலேயே வலித்துக்கொள்ள சந்தடியில்லாமல் இருக்கும்.

197. பணங்கள் இறங்காத வித்தை

ஆதிவாரங்காலையில்தும்பச்செடியண்டைச்சுத்தமாகபொங்கலிட்டுதூபதீபத்துடன் மஞ்சள் நூல் காப்புகட்டி நசி மசி யென்று ஆயிரத்தெட்டுருவு செபித்து உச்சிவேரராமல் பிடிங்கிக்கொண்டு பனைமரத்தண்டை சென்று இவ்வேரின் காற்று அம்மரத்தின்மேல்பட பிடித்துக்கொண்டே போய் கடைசிமரத்தண்டைபோட்டுவிட்டு வந்துவிட கள் இறங்காது மறுபடியும் அதை யெடுத்துவிட்டு பசுங்கோமயந்தெளித்துசுத்தஞ்செய்ய கள்இறங்கும்.

198. வேறு வசியம்

ஆதிவாரங்காலையில் கொட்டைக்கரந்தைச்செடியை சுத்தஞ்செய்து தூபதீபங்கொடுத்து சாப நிவர்த்திசெய்து அதிதேவதாபிரதிதேவதாஎன்று 1008 உருசெபித்து ஆணி வேராமல் பிடுங்கிவந்து அதனுடன் பேயத்தியைச்சேர்த்து பேய்க்கருப்பன் சாற்றாலாட்டி சுண்டைக்காய் பிரமாணம் குளிகை செய்து நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டு வேண்டுமானபோது மூன்று குளிகையை எடுத்துக் காலின்பெருவிரல் இரத்தத்தில் நனைத்துக் காயவைத்துலர்த்தி வாழைப்பழத்தில் மூன்றுநாள் கொடுக்க வசியமாம் ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணுமாகச் செய்யவேண்டும் முறிப்பு வெள்ளைச் சர்க்கரை.

199. ஆடுமேந்தை அதமாகும் வித்தை

வாழைமரத்திலுள்ள தேரையை ஆதிவாரங்காலையில் பிடித்து ஆட்டின் தலைக்கொம்பொன்றில் அதைத்துறுத்து வாயை மூடி ஆட்டுமந்தைகளுள்ளவிடத்தில் புதைத்துவிட்டால் அம்மந்தைகள் நாசமாகும் எடுத்துவிட்டால் எப்போதும்போல சுகப்படும். 8-நாளையில் எடுத்துவிடவும்.

200. மாடுகேள் அதமாகும் வித்தை

ஓர் கன்னிக்கோழிமுட்டையைநன்றாகக்கழுவிமஞ்சள்பூசிகுங்குமமிட்டு வேப்பிலையுடன் வைத்து மாட்டுத்தொழுவத்திலுள்ள ஓர் கூச்சைப்பிடுங்கி அதனடியில் மேற்படிஇரண்டையும்வைத்து மேலே எப்போதும்போல் கூச்சைஅடித்துவிட அங்குள்ளமாடுகளெல்லாம் நசியும் அதையெடுத்துக் குளங்குட்டைகளில் போட்டுவிட எப்போதும்போல் சுகப்படும்.

201. உதிரஞ்சோரியும் வித்தை

கொள்ளுக்காவேளைக்கு நாயிற்றுகிழமையதினம் சாப்பு கட்டி கருங்கோழிபலிகொடுத்து பிடுங்கிவந்து ஓம் இரத்தக்காட்டேரி மவ்வுஞ் சவ்வும் ரத்தகாளி பத்திரகாளி வா வா நானினைத்தபேரைக்கொல்லுகொல்லு ஜாடு ஜாடுமுடக்கு முடக்கு அவளைவிடாதே விடாதே முன்னும் பின்னும் அடக்கு அடக்கு உதித்ததை ஆத்து ஆத்து என்று 1008 உருசெபித்துஅதை அவளுடைய வீட்டிறப்பிற் சொருக அவளுக்கு உதிரங்காணும்.

202. மூலிகை பிடுங்கும் வித்தை

வியாதியுள்ளவர்களின் பேர்களுக்குத் தக்க மூலிகைகளை ஆதிவாரம் சூரியோதயத்திற் செய்து சுத்தியாக பழம்-வெல்லம்-தாம்பூலம் சாபநிவர்த்தி செய்து ஆம்-ஊம்-சிம்-கிலி-ஓம்-றீங்-திங்-என்பதாய் நூற்றியெட்டு உரு செபித்து காப்புகட்டி உச்சி வேரறாது பிடுங்கிப் போட்டுவிட்டு வந்துவிட வியாதி நீங்கும்.

203. தீராதசுரந் தீரும் வித்தை

முன் சொன்னபடி ஞாயிற்றுக்கிழமை காலையில் கஞ்சாங்கோரைச் செடிக்கி காப்புகட்டி முன்மந்திரம் 108 செபித்து வேரைப் பிடுங்கிப்போட தீராத சுரந் தீரும்.

204. முறை சுரந் தீரும் வித்தை

ஞாயிற்றுக்கிழமை காலையில் முன்மாந்திரி நன்னாரி செடிக்குக் காப்பு கட்டி வேரறாது பிடுங்கி எரியும்பக்ஷத்தில் ஒன்றுவிட்டொரு நாள் வருகிற முறை சுரந் தீரும்.

205. மூன்று முறை சுரந் தீரும் வித்தை

முன்மாதிரி முதியார் கூந்தல் செடிக்குக் காப்புகட்டி வேரைப்பிடுங்கி யெறிய மூன்றுமுறை சுரந் தீரும்.

206. நாலா முறைச் சுரந் தீரும் வித்தை

நாயுருவிச் செடிக்கு ஞாயிற்றுக்கிழமை காலையில் முன்மாதிரி செய்து வேரறுமல் பிடுங்கி யெரியும்பக்ஷத்தில் நாலாமுறைச் சுரந்தீர்ந்து சௌக்கிய மாகும்.

207. கட்டிகள் பிளவைகள் ஆறும் வித்தை

எம்மாதிரிகட்டிகளானாலும் பிளவைகளானாலும் புறையோடுகிற புண்க ளானாலும் தீரவேண்மோகில் முன்மாதிரியே ஞாயிற்றுக்கிழமையதினம் க்கையாந்தகரைசெடிக்குச்செய்து முன்மந்திரத்தைச் செபித்து வேரைப் பிடுங்கிக்கொண்ட சிலநாளில் இரணங்களெல்லாமாறும்.

208. அரையாப்புகட்டி ஆறும் வித்தை

நேமநிஷ்டையுடன் அருகம்புல்லிருக்குமிடத்தைச் சுத்தம்செய்து காப் புகட்டி பேரையும் சீட்டிலெழுதிக்கட்டி முன்மந்திரத்தைச் செபித்து ஆணி வேரறுமல் பிடுங்கியெறிய அரையாப்புக்கட்டி ஆறும்.

209. பல்லரணை தீரும் வித்தை

பற்களின் ஓரத்தில் அரணைவால்போன்று கட்டிக்கொண்டு அவஸ்தைப் படுத்தும் நோய் தீரவேண்டுமோகில் முன்மாதிரி பற்பாடகச்செடிக்குச் செய் துபிடுங்கியெறிய நிவர்த்தியாகும்.

210 சொத்தைப்பல் நல்லபல்லாகும் வித்தை.

துவரைச்செடிக்கு சீட்டெழுதிக் காப்புகட்டி முன்மாதிரி தூபதீபங் கொடுத்து வேரைப்பிடுங்கியெறிய சொத்தைமாறி நல்லபல்லாகிவிடும்.

211. துடைவாழை தீரும் வித்தை.

துளசி செடிக்கு ஞாயிற்றுக்கிழமையதினம் தூபங்கொடுத்து ஓலையில் பேரையெழுதிக் காப்புகட்டி முன்மந்திரத்தை நூற்றியெட்டு செபித்து வே ரைப்பிடுங்கி போட துடைவாழை தீரும்.

212. இரத்த மூலந் தீரும் வித்தை

இரத்தமூலந் தீரவேண்டுமாகில் ஞாயிற்றுக்கிழமையதினம் நறுந்தாளிச் செடிக்கு சாபநிவர்த்தி செய்து நேம நிஷ்டையுடன் காப்புகட்டி, பேரை ஓர் சீட்டிலெழுதிக் கட்டி தூபதீபங் கொடுத்து முன் சொல்லியிருக்கும் மந்தி ரத்தை நூற்றியெட்டு செபித்து, ஆணிவேரறாது பிடுங்கி யெறியும்பக்ஷத் தில் நிவர்த்தியாகும்.

213. சீழ் மூலந் தீரும் வித்தை

எட்டிமரத்திற்கு முன்மாதிரி எல்லா வேலையுஞ் செய்து வேரை யெழு திக்கட்டி முன்மந்திரத்தைச் செபித்து பிடுங்கி யெறிய சீழ் மூலந்தீரும்.

214. சிலந்தி கடி தீரும் வித்தை

செருப்படைச் செடிக்கு முன்மாதிரி பேரை எழுதிக் காப்பு கட்டி தூபதீபங் கொடுத்து முன் மந்திரத்தைச் செபித்துப் பிடுங்கி யெறிய சிலந்தி கடி தீரும்.

215. சோகை, காமாலை தீரும் வித்தை

கற்றாழைச் செடிக்கு முன் கருமங்களைச் செய்து, பேரை யெழுதிக் கட்டி மந்திரஞ் செபித்துப் பிடுங்கி யெறிய சோகை, காமாலை தீரும்.

216. மூலந் தீரும் வித்தை

முன்மாதிரி முள்ளிச் செடிக்குச் செய்து பிடுங்கி யெறிய மூல நோய் தீர்ந்து சௌக்கியமாகும்.

217. காக்கை வலி தீரும் வித்தை

காக்கணஞ் செடிக்கு முன்மாதிரி பேருடன் காப்பு கட்டி பிடுங்கி யெறியும்பக்ஷத்தில் காக்கை வலி தீரும்.

218. கருடமாலை தீரும் வித்தை.

கவிழ்தும்பைசெடிக்கு மேற்படி தூபதீபங்கொடுத்து சீட்டெழுதிக் கட்டி மந்திரஞ்செபித்து பிடுங்கியெறிய கருடமாலை தீரும்.

219. கரப்பான் தீரும் வித்தை.

கலியாணப்பூசினிச்செடியை முன்சொல்லியபடிசெய்து பிடுங்கியெறிய கரப்பான் தீரும்.

220. விப்புருதி தீரும்வித்தை.

விஷ்ணுகிரந்தி செடிக்கி முன்சொன்னபிரகாரம் எல்லாவேலைகளையும் செய்துப் பேரெழுதிக்கட்டி தூபதீபங்கொடுத்துப் பிடுங்கியெறிய விப்புருதி தீரும்.

221. பௌத்திரந் தீரும் வித்தை.

சிலந்திநாயகம் என்னும் செடிக்குக் காப்புகட்டி முன்போல எல்லா வேலைகளையுஞ்செய்து பிடுங்கியெறிய பௌத்திரந்தீரும். இதுவரையிலும் சொல்லிவந்த வியாதிகளுக்கெல்லாம் அந்தந்த மூலிகையருகிற்சென்று அவர்கள்பெயரைச் சீட்டெழுதிகட்டி அதின்மேல்மஞ்சள் நூல் காப்புகட்டி மந்திரத்தை நேமநிட்டையுடன் 108-உருசெபித்து உச்சிவேரறாமல் பிடுங்கி யெறிந்தால் சௌக்கியமாகும்.

222. மாடுகளின் புண்ணாறும் வித்தை.

மாடுகளுக்குக் கழுத்திலேனும் மற்றஎந்த யிடங்களிலேனுமிருக்கும் புண்கள் ஆறாமலிருக்குமாகில் அவைகளை ஆதிவாரங்காலையில் தும்பைச் செடியருகில் இட்டுக்கொண்டுபோய் நிற்கவைத்து இதன்புண் ஆறவேண்டு மென்று தியானித்துச் சூரியனைப்பார்த்து பிறகு தும்பைச்செடியை பார்க்க வேண்டும் இப்படி மூன்றுவிசை செய்து அச்செடியைபபிடுங்கி எருக்கன் செடியின்மேற்போட்டு மாட்டை ஓட்டிக்கொண்டுவர புண்களெல்லாம் ஆறிப்போகும்.

223. இனிப்புமாதளை புளிக்கும் வித்தை

இனிப்பாண மாதளஞ்செடியை நட்டுப்பயிராக்கின மறுவருடம் புளித் தக் காடி ஜலத்தை நாள் ஒன்றுக்கு அரைபடி வீதம் அதன் வேரில் வார்த் துக்கொண்டு வரும்பக்ஷத்தில் அது பெரியதாகி பலன் கொடுக்கும்போது அம்மாதளையின் காயானது மிகவும் புளிப்புள்ளதாயிருக்கும்.

224. புளிப்புமாதளை இனிக்கும் வித்தை

மேற்சொன்னபடியே ஒருவருடஞ்சென்றபிறகு அவ்வேரில் மனிதருடைய மூத்திரத்தை தினமொன்றுக்குக் காற்படிவீதம் நாற்பது நாள் விட்டுக்கொண்டே வந்தால் அதினுடைய புளிப்புமாறி இனிப்பாயிருக்கும்.

225. தேள்விஷமகலும் வித்தை

தேள் கொட்டிவிஷமேறி அவஸ்தைப்படுகிறவர்களை அருகிலழைத்து எந்தப்பக்கம் தேள்கொட்டியதோ அப்பக்கம் தவடையில் ஓர் அறை கொடுக்க அவ்விஷம் நீங்கிசுகப்படுவார்கள்.

ரப்பர்ஸ்டாம்பு இங்கிகளின்முறை.

226. கருப்பு இங்கிசெய்யும் வித்தை

கிளாக்டானிஸ் 1-அவுன்ஸ் நல்லஜலம் 1-அவுன்ஸ் கிளிஸ்ரையின்1-அவுன்ஸ் இம்மூன்றையும் ஒன்ருகக்கலக்கி புட்டியிலூற்றி வைத்துக்கொண்டு எழுத சாதாரண இங்கியைப்போலெழுதும்.

227. நீல இங்கி செய்யும்வித்தை

பிரசியன் புளு யென்னும் நீலவர்ணத்தை 1-அவுன்ஸ்யெடுத்து தண்ணீர் விட்டு நன்ருகஅரைத்து கலக்கிவைத்துக்கொண்டு எழுதினுல் ரொம்பவும் நன்ருகயெழுதும்.

228. ஊதா இங்கிசெய்யும்வித்தை

அரை அவுன்ஸ் வைலெட் ஊதாபவுடர், 15 அவுன்ஸ் அல்கஹால் கிளிஸ்ரைன் திராவகம் 15 அவுன்ஸ் இம்மூன்றையும் ஒன்ருகக் கலந்து அடுப்பிலிட்டெரிக்க அது சூடேறினவுடன் பொங்க ஆரம்பிக்கும். அந்த சமயம் இறக்கி ஆறவைத்துப் புட்டியிலடைத்துக்கொண்டெழுத ஊதாயிங்கியாகும்.

229. சிகப்பு இங்கி செய்யும் வித்தை

இரண்டு அவுன்ஸ் அமோனியா, கிளிஸ்ரைன் அரிக்கால் அவுன்ஸ் டெக்ஷரைன் அரிக்கால் அவுன்ஸ் இவைகளை ஒன்ருய்க் கலந்துப் பிறகு மஜிண்டா பவுடர் கால் அவுன்ஸ் சேர்த்துக் கலக்கி யெழுத சிகப்பிங்கியாகும். இதுகள் இங்கிகளின் முறை.

230. கறுப்பு இங்கி செய்யும் வித்தை

பதினெட்டு பலம் கடுக்காய்த்தோலை 130-பலம் ஜலத்திலிட்டுப் பொங்கவிட்டுக்கொண்டே, அன்னபேதி 8-பலம் விளாம்பிசின் 7-பலமெடுத்து ஒன்ருக அரைத்து பதினைந்து பலம் ஜலத்தில் கலக்கி முன் கொதிக்கும் ஜலத்தில் கொஞ்சங் கொஞ்சமாக வார்த்துக் கலக்கிப் பிறகு அப்பாத்திரத்தின் வாயைத் துணியால் மூடிக்கட்டி மூன்று நாள் வைத்திருந்து நாலாவது நாளெடுத்து எழுத நன்ருக யெழுதும்.

231. இதுவுமது

மூன்றுபலம் மாசிக்காயை சிவந்த நிறங் கொடுக்கும் வரை வறுத்து இடித்துத் தூளாக்கி, அதில் சூரத்துக்கடுக்காய் பொடி பதினைந்து பலஞ் சேர்த்து 125-பலம் ஜலம் விட்டு வேகவைத்துப் பிறகு 18-பலம் அன்னபேதியை 10-பலம் ஜலம் விட்டரைத்துக் கருவேலம்பிசின் $3\frac{1}{2}$-பலஞ் சேர்த்து, கொஞ்சங் கொஞ்சமாகக் கொதிக்கும்போது விட்டுக் கொதிக்க

வைத்திறக்கி வாய்கட்டி மூன்றுநாள் வைத்திருந்து நாலாநாள் எழுத ரொம்பவும் கருமையாயிருக்கும்.

232. இதுவுமது

கடைகளில் விற்கும் இண்டியன்சேக்கை வாங்கி ஜலத்திலிழைத்தெழுத ரொம்பவும் கறுமையாயிருக்கும் டிராயிங் முதலியவேலைகளுக்குமுதவும் ஆனால் ஜலத்தைமாத்திரம் மிதமாக விடவேண்டும்.

233. இதுவுமது

கடுக்காய்தூள் 11-பலம் அன்னபேதி 8-பலம் ஆல்கஹால் 3-பலம் உயர்ந்த நீலப்பவுடர் 1-பலம் ஜலம் 77-பலம் இதில் நீலப்பவுடரை ஆல்கஹாவில் போட்டு 3-மணிநேரம் ஊறவைக்க அது கரைந்துவிடும் அப்போது அதில் கடுக்காய்த்தூளைப்போட்டு அதன் பிறகு மற்ற சாக்கையும் போட்டு கலக்கி மூடிவைத்து நாலாவது நாள் எடுத்தெழுத ரொம்பவும் கறுப்பாயிருக்கும்.

234. சிகப்பு இங்கிசெய்யும் வித்தை

ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயின் 18½-பலம் மஜிண்டா பவுடர் 1½ பலம் நல்ல ஜலம் 125-பலம் விளாம்பிசினி 7½-பலம் இவைகளில் மஜிண்டாபவுடரை ஸ்பிரிட்டில்போட்டு சற்று வேகவைத்துஇறக்கி இளஞ்சூடாயிருக்கும்போதே விளாம்பிசினியைப் பொடித்துப் போட்டுக்காய்ச்சி வடிகட்டி புட்டியிலடைத்துக்கொண்டெழுத வெகுநன்றாயிருக்கும்.

235. ஊதா இங்கிசெய்யும் வித்தை

மேற்கண்ட விதமே ஊதா இங்கியைச்செய்துக்கொள்ளலாம் ஆனால் மஜிண்டாபவுடருக்குப்பதில் ஊதாபவுடர் சேர்க்கவேண்டும்.

236. நீல இங்கி செய்யும் வித்தை

நீலப்பவுடர் 3-பலம், பிரஷியன்புளு 3-பலம், ஆகஸ்கவிக் ஆசிட் 1-பலம் விளாம்பிசின் 1-பலம் ஜலம் 30-பலம் இதனில் நீலப்பவுடரை ஆசிட்டிற் கலந்துக்கொண்டு மற்றதை முன் சிகப்பிங்கிக்குச் சொல்லியபடி செய்துக் கொள்ளவும். ஆனால் இதிற் கொஞ்சம் அப்பிரகம் சேர்ப்பது மிகவும் விசேஷம்.

237. பச்சை இங்கி செய்யும் வித்தை

ஜங்கா யெசன்ஸ் 2-அவுன்ஸ், (அல்லது பச்சைப்பவுடர்) கிரீப்பூய்டார்டார் 1 அவுன்ஸ், ஜலம் 12-அவுன்ஸ் இவைகளை ஒன்றாகக் கலந்து கொதிக்க வைத்துச் சுண்டிய பின்னிறக்கி வைத்துக்கொண்டு யெழுத ரொம்பவும் தமாஷான பச்சைக்கலராயிருக்கும்.

238. மஞ்சள் இங்கி செய்யும் வித்தை

ஐந்து அவுன்ஸ் வெந்நீரில் 1-அவுன்ஸ் காம்போஜ் போட்டு ஆறியபின் ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயின் கால் அவுன்சு சேர்த்து, புட்டியில் விட்டுக்கொண்டு எழுதிப்பார்த்தால் அசல் மஞ்சள் நிறமாகத் தோற்றும். எந்தக் காலமுங் கெடாது.

239. வெள்ளை இங்கி செய்யும் வித்தை

நன்றாகச் சுத்தஞ் செய்த கோழிமுட்டைத்தோலை, சுத்தமான கல்வத்தில் போட்டு தண்ணீர் விட்டரைத்துத் தூள்செய்து, வெண்மையாகிய அம்

மோனியாக் என்னும் பிசினியை எடுத்து சுத்தமாக அலம்பியபின், அசேடிக் ஆவிட்டில் ஓரிரவு வைத்து, மறுநாள் காலையில் மெல்லிய வஸ்திரத்தில் வடிகட்டி, இதனில் முன் முட்டைத் தூளை வேண்டியது சேர்த்துக் கலக்கி, கறுப்புக் காகிதத்தின்மேலெழுத வெண்மையாயிருக்கும். ஆனால் முட்டைத்தூள் மாத்திரம் நன்றாகக் காயவேண்டும்.

240. வேறு மாதர் வசியம்.

ஒரு பிராமணபிரமசாரிப்பிணம்போகும்போது தலைப்பக்கம் நின்று ஒரு அரை அணாவை விசறிப்போட்டு கால்மாட்டினிடம்போயெடுத்து தகடடித்துத் தாய்த்தைச்செய்து மறுபடியும் பிணத்தின்தலைமாட்டில் நின்று மூன்று சுற்றுசுற்றி, 3 துளி மண்ணெடுத்து அக்குளிசத்தின்வாயிற்போட்டு மறுபடியுங் கால்மாட்டினிடம்போய் நின்று தலைமாட்டினிடம்வந்து மூன்று சுற்று சுற்றி அங்கும் மூன்றுதுளி மண்ணெடுத்து அக்குளிசத்தின்வாயிற்போட்டு ஜலமோடுமிடத்தில் மாரளவுஜலத்தில் குந்தி நிமிர்ந்தவாட்டமாய் பிடித்திருக்க அம்மண்போய்விடும் அதையெடுத்துத் தீட்டில்லாவிடத்தில் பத்திரமாக வைத்திருந்து நமக்கிஷ்டமான ஸ்திரீ போகும்போது அவளுடைய இடதுள்ளங்கால் மண்ணெடுத்து அக்குளிசத்திற்போட்டு வைத்திருக்க அன்றிரவு அவள் நம்மைத்தேடி வருவாள் மறுநாள் காலையில் அம்மண்ணைக்கொட்டிவிட போய்விடுவாள் கொட்டாவிடில் தினந்தோறும் வருவாள் இதேமாதிரி ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணுமாக மாற்றிக்கொள்ளவேண்டும்.

241 தேரிசிங்கி வித்தை.

அக்கினிமண்டலப்பூச்சி தாலகொண்டாசங் வீரம் காடிக்காரம் இச்சரக்குகளை கல்வத்திலிட்டரைத்து கடைசியில் நைட்டிரிக் ஆவிட் விட்டு ஒன்றாய்க் கலந்து எடுத்துப் பகைவர்மேற்றெளிக்க திரேகமாதியந்தமும் இரணமாய்விடும். முறிப்பு:—எருமைச்சாணிப்பாலை உள்ளுக்கேற்றி அதையே மேலுக்குத்தடவ இரணங்களாறி சுகப்படும்.

242. விந்துஸ்தம்பன வித்தை.

செவ்வாய்க்கிழமையதினம் உத்தாமணி வடக்குவேருக்குக் காப்பு கட்டி வேரைப்பிடுங்கிவந்து கன்னிநூற்ற நூல்சுற்றி அதைக்குளிசமாடி அரையிற்கட்டி முன்புறந்தள்ளிப்புணர்ந்தால் விந்து ஸ்தம்பனமும் பின்புறந் தள்ளிப்புணர்ந்தால் விந்துஸ்கலிதமுமாகும் சும்மாயிருந்திடில் விந்து கட்டும்.

243. வீரியஸ்தம்பன வித்தை

ஞாயிற்றுக்கிழமையதினம் உத்தாமணிசெடிக்குக் காப்புகட்டி செவ்வாய்க்கிழமையதினம் வேரைப்பிடுங்கிவந்து கன்னி நூற்ற கயற்றிற்கட்டி அரையிற் கட்டிக்கொள்ள வீரியஸ்தம்பனமாம் பின்புறந்தள்ள கலிதமாம் சும்மாயிருந்திடில் வீரியநஷ்டமாம்.

244. பிரிவினைசெய்யும் வித்தை

வெள்ளிக்கிழமையதினம் செருப்படைச்செடிக்கு தூபதீபங்கொடுத்து பகையாளிகள் யாரார் பிரியவேண்டுமோ அவர்களின் பேரைச்சொல்லி பிரியவென்று ஆணிவேரறுமற் பிடுங்கி பகைவர் வாசற்படியிற்புதைக்க அவர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்துபோவார்கள்.

245. சர்வவசிய வித்தை

வண்ணான் துறையிலிருக்கும் சீலையை வெள்ளைச்சாவலின் இரத்தத்தில் நனைத்துப் பிரட்டிஷூரியபின் காயவைத்து திரியாக்கி அகலிலிட்டு பசு

நெய்விட்டு முக்கல்வைத்த அடுப்பின்மீதுவைத்து அதன்மேற் சட்டியில் கௌதும்பைச்சார் தடவி விளக்கேற்றி மேல்மூடி எரிக்க மையானதுமேல் சட்டியில் பிடிக்கும் அதையெடுத்து நெய்யிலிழைத்துத் திலர்தமிட சகலமும் வசியமாகும்.

246. வங்கவெள்ளி செய்யும் வித்தை.

வெள்ளடம்பு சாற்றில் வெள்ளீயத்தை உருக்கிச்சாய்க்க அது கட்டி வெள்ளியாகும்.

247. பற்களுதிரும் வித்தை

சுண்ணாம்புவைத்திருக்கும் குடுவையை நன்றாகச்சுத்தஞ்செய்துவிட்டு அதில் சர்ப்பம் உரித்த சட்டைத் தோலைப்போட்டு அதின்மேல் சுண்ணாம்பு கல்லைப்போட்டு தாளித்து அச்சுண்ணாம்பைப் பகைவர்களுக்குத்தாம்பூலத்திற் கொடுக்கப் பற்களுதிர்ந்துபோகும்.

248 மாட்டுப்பற்களுதிரும் வித்தை

சர்ப்பத்தின் சட்டையுரித்ததோலைப்புல்லுடன் வைத்து மாட்டுக்குக் கொடுத்தால் அதைத்தின்ற மாட்டுக்கு பல்லுதிர்ந்துவிடும் ஏனையகால்நடைகளுக்கு மப்படியே.

249. தலைமயிருதிரும் வித்தை

10-அல்லது 15-ஈப்புளியைப்பிடித்து அரிதாரங்கொஞ்சஞ் சேர்த்து சீயக்காயுடன்வைத்து அரைத்து தலைமுழுகிக்கொண்டுவந்தால் மயிர்களெல்லாம் சீக்கிரம் உதிர்ந்துவிடும்.

250. மூலிகையின் சாபத்தை நிவர்த்திசெய்யும் வித்தை

எந்த மூலிகையாயிருந்தாலும் அதனருகிற்சென்று சிங்வங் சிவயநம சங்வங் சரஹணபவ என்று ஒருவிசைச்சொல்லி சுண்டுவிரல்களிரண்டும்நகங்கள் பத்தும் அதின்பேரில்படாமல் இலையைக் கிள்ளுகிறதோ செடியைப் பிடுங்குகிறதோ எப்படி செய்துக்கொண்டாலும் வியர்த்தமாகாது பலிக்கும்.

251. இதுவுமது

ஓம் சத்திசாபம் நசி நசி சகல சாபம் நசி நசி சித்தர்கள்சாபம் நசி நசி மூலிகைசாபம் நசி நசி சகல தேவர்கள்சாபம் நசி நசி ஓம் காளி ஓம் பிடாரி ஓம் நசி நசி வய என்று ஒன்பது உருசெபிக்கச் சித்தியாம்.

252. புடங்களின் சாப நிவர்த்தி வித்தை

எவ்விதமான மருந்தைப்புடமிட்டாலும் ஓம் சொர்ணவைரவா சுகமுள்ளவைரவா வாதபித்தத்திற்கு வசமுள்ளவைரவா மூலிகைதனக்கு முன்னோடும்வைரவா நான்வைத்த புடமானது நலங்காமல்நிறக சுவாகாவென்று 108-உரு செபித்து தூபதீபங்காட்டிப் புடமிட வைரவர் துணையிருப்பார்.

253. மூலிகை வித்தை.

புதன்கிழமை சாயங்கால வேளையில் கீழாநெல்லிச்செடியருகில் சுத்தி செய்து மறுநாள் வியாழக்கிழமை காலை கன்னிநூல் காப்புகட்டி தூபதீபங் கொடுத்து வேரைப்பிடுங்கி அதனுடன் நாலைந்துவேர்களைத் தனியாய்ப் பிடுங்கி யாவற்றையுமொன்றாய்ச்சேர்த்து பிறகு குப்பைமேனிச்செடியில்

நாலேந்துவேர்பிடுங்கி எல்லாவற்றையுமொன்றுசேர்த்து வேரைத்தரித்து ஒவ்வொன்றாய்க் குளிசமாடி கட்டிக்கொள்ள வசியமாம்.

254. வேறு மை வித்தை.

மேற்படி இலைகளைக் கறுக்காமல் பொன்வறலாக வறுத்துக் கல்வத்தி விட்டு நெகிழ அரைத்துத் திலர்தமிட வசியமாம் இதற்கு சொர்னபைரவர் மந்திரஞ் செபிக்கவும்.

255. வேறு அஞ்சன வித்தை.

மேற்படி மையைப் பேய், பிசாசு, சூன்யம், புதையல் இதுகளுக்கு வெற்றிலையில், தடவி ஆஞ்சநேயரைப்போற்றி செய்துப் பார்க்க சகலமும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியவரும். இதற்கு சுடலைக்கரு சேர்த்துக் குழப்பிப்பார்க்கவும்.

256. வாந்தியேதிக்கு மந்திரம்.

ஓம் ஹரூம் ஹறீம் ஹறூம் ரூம் விஷ்ணுசக்தியே நமோபகவதி விஷ்ணுசக்தியே ஹேயா எநாய அர அர அன அன பச பச மத மத உச்சந்தியோ உச்சானதயா அரே குரு குரு சுவாகா குரு குரு சுவாகா விடுசிகே இமோந்தம் கெச்சா சிவசிவா சந்திரமண்டலம் க்தோசி சுவாகா யென்று திருநீர் மந்திரித்துக் கொடுத்தாலும்சரி தண்ணீர் ஓதிக் கொடுத்தாலும் சரி வியாதி தீரும்.

257. வேறு சர்வஜன வசிய வித்தை.

புளியமரத்திலிருக்கும் கரும்பல்லியை வின்னப்படாமல் பிடித்துக்கொண்டு ஓர் சட்டியிலிட்டு மேல்சட்டி மூடி ஒருசாதிவிரகாலெரித்து ஞாயற்றுக்கிழமையதினம் பூசைமுகத்தில்வைத்து இளநீர் மல்லிகை முதலிய நைவேத்தியஞ்செய்து சிகப்புத்தலையுள்ள ஒணான் இரத்தத்தில் முன் பஸ்பத்தைப் பிறட்டிக் குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வயநமசியென்று 1128 உரு செபித்து தேவையானபோது முலைப்பாலில் இழைத்து இட்டுக்கொண்டுபோக வசியமாம்.

258. வசிய வித்தைகள்

பாக்கை விந்திலூறவைத்துப் பின் அறணையின் வயிற்றைக் கீறி உள்வைத்து தண்டு யிலையை யரைத்து மேல்கவசஞ் செய்து, ஈச்சன் விறகினால் வாட்டி பதமான பிறகு பாக்கை யெடுத்து வெற்றிலை யருந்தும்போது கொடுக்க வசியமாம்.

259. இதுவுமது

கண்பீளை நாக்கழுக்கு காதுகுரும்பி விந்து இவைகளை ஒன்றுசேர்த்துக் காடை முட்டையிலாகிலும் தின்பண்டங்களிலாகிலுங் கொடுக்க வசியமாம்.

260. இதுவுமது

கோரோசனை மயீரோசனை மின்மினிப்பூச்சி புழுத்தமஞ்சள் பச்சக்கற்பூரம் நல்லபாம்பு நஞ்சு இவைகளை தொட்டால் வாடிச் சாற்றிலரைத்து கொடிமூங்கிலின் கொம்பிற்றடவி பெண்கள்மேற் றடவ வசியமாம்.

261. இதுவுமது

பச்சைக்கற்பூரம் பச்சைப்புனுகு பாம்பு நஞ்சு கோரோசனை பொன்னரிதாரம் இதுகள் சமனெடை ரசம் விராகனெடை ½ மின்மினிப்பூச்சி-11,

சுழல்வண்டு-11, கௌசம்பை நிலத்துத்தி சிறுதுத்தி தொட்டால்வாடி இவைகளைக் காராம்பசு நெய்யிலரைத்துச் சிமிளிலடைத்துக்கொண்டு திலர் தமிட வசியமாம்.

262. இதுவுமது

மின்மினிப்பூச்சி-11 சுழல்வண்டு-11 பச்சைக்கற்பூரம் கோரோசனை வகைக்குப் பண விடை-1 இவைகளைப் புத்துத் தேனிலரைத்துத் திலர்தமிட வசியமாம்.

263. இதுவுமது

கருங்கோழித் தலைமுட்டையிட்டு இருக்கும்போது 3 குஞ்சு பொரித்தவுடன் அம்மூன்றினுடைய தோலையும் எடுத்துக்கொண்டு அதில் கண்பீளை காதுகுரும்பி நாக்கழுக்கு இவைகளைக் கூட்டி அரைத்து குளிகை செய்து டப்பியில் வைத்துக்கொண்டு வேண்டியபோது வெயர்வை நீரிலிழைத்துப் பெண்கள்மேல் தெளிக்க வசியமாம்.

264. இதுவுமது

நமக்கிஷ்டமான பெண்ணின் தீட்டுச்சீலையில் செவ்வாழை மைலும் மைலோசனையும் பொடித்துவைத்துத் திரியாக்கி அத்திரியை விளக்கெரிக்க நாம் நினைத்தபெண் வசியமாவாள்.

265. இதுவுமது

பசு நெய்யில் ஒருகடி இந்துப்பைக்கூட்டி யோனியில் தடவ வசியமாம்.

266. இதுவுமது

விஷ்ணுகாந்தி இரசமும் சந்தனமும் வெற்றிலைச் சாற்றிலரைத்துத் திலர்தமிட வசிமாம்.

267. இதுவுமது

கருங்கோழி முட்டையைத்துளைசெய்து அதில் அரைகழஞ்சு பாதரசம் விட்டு கிடாரிச்சாணியில் பொதிந்துக்காயவைத்து சுட்டு அதிலிருக்கும் மஞ்சள் கருவை யெடுத்து புழுகு கற்பூரங்கூட்டித் திலர்தமிட வசியமாம்.

268. இதுவுமது

செந்தாழம் பூவும் வேலிப்பருத்தியும் ஒன்றாய்க்கலந்து அரைத்துத்திலர் தமிட வசியமாம்.

269. இதுவுமது

குறிஞ்சான் செடிக்கு அமாவாசைக்கு மூன்றுநாள் முன்னதாகக்காப்பு கட்டிவேர்பிடுங்கி உமிழ்நீர் விட்டரைத்து அதில் பச்சைக்கற்பூரம் கோரோசனை பாம்புநஞ்சு கலந்துத்திலதமிட்வெர வசியமாம்.

270. இதுவுமது

பாம்புநஞ்சில் மஞ்சளைவைத்து முத்தெருக்கன் செவிச்சாற்றுலரைத்து திலர்தமிட வசியமாம்.

271. இதுவுமது

பச்சோந்தித்தலையை யறுத்து உலர்த்திப்பொடிசெய்து இந்திரியத்தில் குழப்பி திலர்தமிட வசியமாம்.

272. இதுவுமது

நல்லபாம்பைக்கொன்று வடக்கேதலையும் தெற்கே வாலுமாகக்கிடத்தி தவடையை அறுத்து நாக்கையெடுத்து மோதிரத்திலடைத்து விரலில் அணிந்துக்கொள்ள நினைத்த பெண்வசியமாம்.

273. இதுவுமது

அட்டையைப் பிடித்துத் தாமரை நூலிற் சுற்றி அகலிலிட்டு பசுநெய விட்டெறிந்து, சிரசோடு மூடி மைவாங்கி புனுகு சவ்வாது சேர்த்து மோகினிமந்திரம் 108 செபித்து திலர்தமிட வசியமாம்.

274. இதுவுமது

இந்திரகோபப்பூச்சி-10 விந்து புனுகு பச்சைக்கற்பூரம் கோரோசனை இவைகளைச் சமன்கூட்டி செம்பருத்தம் பூச்சார் விட்டரைத்து, மோகினி மந்திரம் 1008 செபித்து திலர்தமிட பகைவர்முதல் யாவரும் வசியமாவார்கள்.

275. ஸ்தம்பன வித்தைகள்

முருங்கைப்பிஞ்சியை மூன்றுநாளைக்கு கும்பியில் தூங்கிச் சுட்டு கரணை செய்து தின்றுவர விந்து இறங்காது.

276. இதுவுமது

வாழைக்காய்க்குள் ஊமத்தன் விரையைச் செலுத்தி, பிறகு விரையை யெடுத்துத் தின்ன ஸ்தம்பனமாம். மாற்று புளி.

277. இதுவுமது

ஈரவெங்காயத்தைக் குடைந்து உளுந்தளவு அபினியை வைத்து, உமிக் காந்தலிற் புதைத்துச சுட்டுத் தின்றால் ஸ்தம்பனமாம். மாற்று புளி.

278. இதுவுமது

எருக்கன் கிழங்கைக் குடைந்து, அதனுள் மஞ்சள்தோலை வைத்து 6-வது நாளெடுத்து மஞ்சள் தூளையரைத்து பச்சைப்புனுகு கூட்டி தண்டிற்குத் தடவிப் புணர ஸ்தம்பனமாம். மாற்று எலுமிச்சம்பழம்.

279. இதுவுமது

நீர்முள்ளி விரையை வெண்ணெய்யிலரைத்து அதனுடன் குப்பை மேனிச்சார், பச்சைக்கற்பூரம் புனுகு இதுகளை சமயெடைக் கூட்டி அரைத்து லேபனஞ் செய்ய ஸ்தம்பனமாம். மாற்று எலுமிச்சம்பழம்.

280. இதுவுமது

கசகசா ஜாதிக்கா ஜாபத்திரி கஞ்சா இவைகள் வகைக்கு களஞ்சி 1 அபினிகளஞ்சுகால் [illegible]த்த கோழிமுட்டை 5 இவைகளெல்லாம் ஒன்றாய ரைத்து குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு 1 அல்லது 2 குளிகையைத் தின்று வெந்நீரருந்த ஸ்தம்பனமாம்.

281. இதுவுமது

சிறு செருப்படைவேருக்கு ஞாயிற்றுக்கிழமையதினம்காப்புகட்டிவேரறுது பிடுங்கி வந்துக்குளிசமாடி அரையிற்கட்டிக்கொண்டு முன் தள்ளவிந்துவிழாது பின் தள்ள விழும்.

282. இதுவுமது

நீர்முள்ளி விரையைத் தூளாக்கிப் பழச்சாற்றிலூறவைத்து 8-நாள்பொறுத்தெடுத்து செவ்விளநீரிலரைத்துக் குளிகைசெய்து நிழலிலுலர்த்தி ஃகுளியை வாயிற்போட்டுக்கொண்டு புணரவிந்துவிழாது மீழே துப்பவிழும்.

283. இதுவுமது

செவ்வாய்க்கிழமைதினம் உத்தாமணி வேருக்குக்காப்புகட்டி வடக்கே போகும்வேரை அறுமல் பிடுங்கி கன்னிநூல்சுற்றி குளிசமாடி அரையிற் கட்டிக்கொள்ள ஸ்தம்பனமாம். அவிழ்க்க விழுந்துவிடும்.

284. இதுவுமது

பேய்ப்பீர்க்கன்காயைச் செடியில் துளைத்து முக்கால்கழஞ்சு பாதரசத்தைவிட்டு மூடி அது பழுத்தபின்னெடுத்துப்பார்க்க நல்ல குளிகையைப் போலிருக்கும் அதைவாயிலடக்கிக் கொண்டால் விந்து விழாது துப்பினல் விழும்.

285. இதுவுமது

வேலிப்பருத்திப்பாலில் அபின் சாதிக்காய் வகைக்கு விராகனெடைகால் சேர்த்து கலக்கி விழுங்கிவிட ஸ்தம்பிக்கும்.

286. இதுவுமது

வேளைவேரை நன்ருய்க்கழுவி விந்துசேர்த்தரைத்து வாயிலிட்டுக்கொண்டுபுணரவிந்து விழாது.

287. இதுவுமது

நத்தைச்சூரிவேரைக் குளிசமாடி வலதுகால் பெருவிரலிற் போட்டுப் புணர விந்துகட்டும்.

288. இதுவுமது.

வெள்ளைக்காரை வேரை தூபதீபத்துடன் பலிகொடுத்து வேரறுமல் பிடுங்கிக் குளிசமாடிக்கட்டிக்கொள்ள ஸ்தம்பனமாகும்.

289. இதுவுமது.

கால்படிபசும்பாலில் 2 விராகனெடை வெள்ளைக்குந்திரிக்கம் போட்டு வெதுப்பி சாப்பிட விந்து நிற்கும்.

290. இதுவுமது.

ஆதளம் இலையை சீலையிலிட்டுத்திரித்து நீர்த்துவாரத்தில் சற்றுநேரம் வைத்திருந்து பிறகு எடுத்தெறிந்துவிட்டுப் புணர ஸ்தம்பிக்கும்.

291. இதுவுமது.

முருங்கைமரத்தைத்துளைத்து ஓர் சாதிக்காயை உள்வைத்து மேலே முருங்கைப்பட்டையால் மூடி 1 மண்டலஞ்சென்றெடுத்து அரைத்துக் கடலைப்பிரமாணம் உருட்டி சாயங்காலம் 1 மாத்திரை தின்று பால்சாதம் சாப்பிட ஸ்தம்பிக்கும். மாற்று புளி.

292. இதுவுமது

பச்சையாயுள்ள முருங்கைப்பிசினியை மூலைப்பாலிலரைத்து உருட்டி வாயிற்போட்டுக்கொண்டு புணர ஸ்தம்பிக்கும். உமிழ்ந்துவிட ஸ்கலிதமாம்

293 இதுவுமது

1 கோழிமுட்டையையுடைத்து 2 மஞ்சாடி அபினிசேர்த்துக் கலக்கி நல்லெண்ணெய்வார்த்து அடைசுட்டுத் தின்ன ஸ்தம்பனமாகும்.

294. இதுவுமது.

பச்சையாயும் தண்ணீரில் மிதக்கத்தக்கதாயுமுள்ள கெச்சக்காயொன்றை எடுத்து. இரும்புப்படாமல் துளைசெய்து உள்ளிருக்கும் பருப்பை எடுத்துவிட்டு 3 மின்மினிப்பூச்சியை உள்ளேவிட்டு வெள்ளை மெழுகால் வாயை மூடி வாயில்போட்டுக்கொண்டு புணர ஸ்தம்பிக்கும் கீழ்உமிழ விடும்.

295. இதுவுமது.

சாதிக்காய் சாபத்திரி கிராம்பு தேத்தான்கொட்டை அபினி வகைக்கு கழஞ்சி ஒண்ணுகத் தூள்செய்து சிட்டியில் போட்டு மூடி முருங்கைமரத்தின் வடக்குவேரில் பள்ளஞ்செய்து முன்கல்பத்தை வைத்து மூடி 41-ம் நாள் எடுத்துப் பார்க்க மெழுகாயிருக்கும். அதை ஒரு கழஞ்சு வாயிலிட்டுப் புணர ஸ்கலிதமாகாது கீழ்துப்ப ஆகும்.

296. இதுவுமது

நீர்முள்ளி விரையை யரைத்து தண்டிற்குப் பூச ஸ்தம்பிக்கும்.

297. இதுவுமது

பூனைக்காலி நிலப் பனங்கிழங்கு பூமி சர்க்கரைக்கிழங்கு இம்மூன்றையும் அத்திப்பாலிலரைத்துச் சாப்பிட விந்துகட்டும்.

298. லேபனங்களின் வித்தை.

பொன்னூமத்தன் காயைத் துளைத்து, அதில் பெரும்பாகலிலைச்சாறும் சிறு வழுதலையிலைச்சாறும் விட்டு, சற்று நேரங்கழித்து எடுத்துத் தண்டிற்குப் பூச விந்துகட்டி லேபனஞ் செய்யும்.

299. இதுவுமது

பாம்பு உரித்த மேல்தோலை சட்டியிலிட்டுக் கறுக வறுத்து தேன் விட்டரைத்து பச்சைப்புனுகு பச்சைக்கற்பூரஞ் சேர்த்துக் கலந்து செப்புச் சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது குன்றியிடை யெடுத்து லேபனஞ் செய்ய விந்து கட்டும்.

300. இதுவுமது.

பிரண்டைப் பழத்தையும் ஈச்சம்பழத்தையும் ஒன்றாக மத்தித்துப் பூச லேபனமாம்.

301. இதுவுமது

பச்சைப்புழுகும் பச்சைக் கற்பூரமும் ஓர் நிறையாக புத்துத் தேனிலரைத்துப் பூச ஸ்தம்பிக்கும்.

302. இதுவுமது

புளி கொழுப்பை குயவன் திகிரி யெண்ணெயிற் கலந்து பூச லேபனமாம்.

303. இதுவுமது

10-படி பசும்பாலை 9-படிக் காடியில் விட்டு எடுகட்டி அதன்மேல் செவ்வல்லிப்பூ ஒன்று வைத்துக் காய்ச்சி அப்பூவைப் பிசைந்துக் காடியி

விட்டு பாலைக்கடைந்து வெண்ணெ யெடுத்து பச்சைப் புனுகு பச்சை கற்பூ ரங் கலந்துப் பூச லேபனமாகும்.

304. இதுவுமது

கண்போன சிரட்டையில் தேனைத் தடவி வைத்திருக்க அதில் எரும்பு சேரும். அதை அம்மியில் தட்டி அரைத்து புனுகு கற்பூரம் கோரோசனை சேர்த்துக் குழைத்துப் பூச லேபனமாம்.

305. இதுவுமது.

ஊர்க்குருவியைப்பிடித்து உரோமம் முதலாகியவைகளைப் போக்கி மாசிக்காயைப்பொடித்து அதன் வயிற்றில்வைத்து 8-ம் நாள் எடுத்து அரைத்துக் குளிகைசெய்து சாயுங்காலம் 5-மணிக்குச் சாப்பிட்டு இரவு 10-மணிக்குமேல் புணர விந்து விழாது மாற்று - வெற்றிலைக்காம்பு.

306. இதுவுமது.

புளிநரளைக்கிழங்கைக்கீறி அதனுள் கடுகை வைத்து 2-ம் நாளெடுத்து கடுகைமாத்திரமரைத்துப்பூசிப் புணர விந்துவிழாது மாற்று புளி.

3)7. இதுவுமது.

தனியாகநிற்கும் அவுரியின் மேற்கேபோகும் வேரைப்பிடுங்கிக் குளிசமாடி அரையிற்பிகிந்து முன்தள்ள ஸ்தம்பிக்கும் பின்தள்ள விழும்.

308. இதுவுமது.

செவ்வாய்க்கிழமையதினம் முசுட்டைச்செடிக்குக் காப்புகட்டி பலிகொடுத்து வேரைப்பிடுங்கிக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள ஸ்தம்பனமாம்.

309. இதுவுமது.

சந்தனம் தேற்றான்கொட்டை தேங்காய்ப்பால் முருங்கை வடக்குவேறும் அரைத்து குளிகை செய்து சாப்பிட்டால் ஸ்தம்பனமாகும். மாற்று புளி.

310. இதுவுமது

எழுசிலையில் முடிந்த தேள்கொடுக்குக்காயைப் புடம்போட்டு காய்கருகினபின்னெடுத்து உள்ளவைத்த காயைமாத்திரமரைத்து மிளகுப்பிரமாணங் குளிகைசெய்து ஓர்குளிகை சாப்பிட விந்துவிழாது. மாற்று மோர்.

311. இதுவுமது

பாவட்டை இலையை ஆவின்பாலிலரைத்து உட்கொள்ள விந்துகட்டும்.

312. இதுவுமது

ஓரிலைத்தாமரைக்குக் கோழிபலிகொடுத்து ஆ[illegible]ாருமல் பிடுங்கிக் குளிசமாடி அரையிற்கட்டிக்கொள்ள ஸ்தம்பனமாகும்.

313. இதுவுமது.

அத்திப்பால் பசும்பால் மூலைப்பால் முருங்கைப்பூச் சார் இவைகள் வகைக்குப்படி வீசம் சாதிக்காய் சாபத்திரி கிராம்பு கோரைக்கிழங்கு இவைகளை சமயெடையாகத் தூளாக்கி வஸ்திரகாயஞ் செய்து மேற்படி பாலில் சேர்த்து 7 நாள் தின்றுவந்தால் விந்து கட்டும்.

314. இதுவுமது

கருஞ் சாரைப்பாம்பு முதுகெலும்பை யெடுத்துக் கோர்த்து அரையிற் கட்டிக்கொள்ள ஸ்தம்பிக்கும்.

315. இதுவுமது

வெள்ளைமயிரில்லாத கரும்பூனைவாலைத் துண்டித்து வளையமாக்கிக்கட்டிக்கொள்ள ஸ்தம்பனமாம்.

316. இதுவுமது

ஊர்க்குருவி முட்டையைத் துளைத்து அதில் 1 கழஞ்சு பாதரசம்விட்டு வாயை மெழுக்கால் மூடிவைத்துவிட்டு மற்றொரு முட்டை பொரித்தவுடன் எடுத்துப் பார்க்க அதில் இரசம் மணியைப்போல கட்டியிருக்கும். அம் மணியை இடையில் கட்டிக்கொண்டால் விந்து ஸ்தம்பிக்கும்.

317. இதுவுமது

பனையடியிலிருக்கும் அளரி வேருக்கு செவ்வாய்க்கிழமை பலிகொடுத்து வேரைப் பிடுங்கி மணிபோல் நறுக்கி அரையிற் கட்டிக்கொள்ள ஸ்தம்பிக்கும்.

318. இதுவுமது

செவ்வகத்தி தெற்கே போகிற வேரும், முருங்கை வடக்கு வேறும் குளிசமாடி கட்டிக்கொள்ள ஸ்தம்பிக்கும்.

319. இதுவுமது

சதகுப்பை ஓமம் சாதிக்காய் சாபத்திரி அபினி கஞ்சாயிலை, முருங்கைவிரை, சமுத்திரப்பழம், இவைகளை தேங்காய்ப்பாலி லரைத்து சாணியிற் பொதிந்துப் புடமிட்டெடுத்து சிரட்டை நீக்கி அரைத்து சுண்டக்காய்ப் பிரமாணங் குளிகைசெய்து உலர்த்தி வாயிலடக்கிப் புணர ஸ்தம்பிக்கும்.

320. இதுவுமது

வில்வத்தின் வடவேரை மணியாகத் திருத்தி அதை வெள்ளெருக்கன் நாரைக்கொண்டு கட்டி அரையிற் கட்டிக்கொள்ள ஸ்தம்பிக்கும்.

321. இதுவுமது.

விஷ்ணுகிரந்தி, ஓரிலைத்தாமரை கோரோசனை இவைகளையரைத்துப் பூச லேபனமாம்.

322. இதுவுமது.

சின்னகொடுக்கன் சிறுகொடுக்கன் பிடித்துச் சீலையில்மூடி சுட்டு தேனிலரைத்து தண்டிற்பூச லேபனமாம்.

323. இதுவுமது.

வெண்காரத்தை அகத்திச்சாறிலரைத்துப்பூச லேபனமாம்.

524. இதுவுமது.

படிகாரம் வெண்காரம் கற்பூரம் வகைக்குப் பணவெடை 2 எடுத்து எலுமிச்சம்பழ ரசம் முலைப்பால்விட்டரைத்துப்பூச லேபனஞ்செய்யும்.

325. இதுவுமது.

உடும்பின் பிச்சை அரைத்துப் பூசிப்புணர லேபனமாம்.

326. இதுவுமது.

ஜவ்வாது புனுகு சவுக்காரம் லிங்கம் அரிதாரம் காமப்பூ நன்னாரி இவைகளைச் சமயெடையா யெடுத்து ஈசம்பழரசத்தாலரைத்து தண்டிற்குப் பூச லேபனமாம்.

327. இதுவுமது.

நல்லபாம்பின் சட்டையை அரணைக்கொழுப்பிற்சேர்த்து பசுவெண் ணெயிற் குழப்பி இரும்புக்கரண்டியிற் கொதிக்கவைத்துத் தடவ லேபன மாம். மாற்று - காடித்தெளிவில் புளியன் இலை போட்டுக்காய்ச்சி தண்டைக் கழுவ படியும்.

328. இதுவுமது.

குன்றிமணியை அமுரிவிட்டரைத்து ஆமணக்கனிலையில் பொதிந்து ஓர்தட்டில்வைத்து வெய்யலில்வைக்கத் தைலமிறங்கும். அதையும் சுண்டி யிலையில் வாலுழுவையரிசி சேர்த்து காடிவிட்டரைத்து வெய்யலில் வைக்க லேபனஞ்செய்யும்.

329. இதுவுமது.

வெள்ளைத்தாமரையிலையைத் தேனிலரைத்துதண்டிற்பூச லேபனமாம்.

330. இதுவுமது.

வேப்பன்பிசின் வெங்காரம் சிறுவழுதி வடவேர் கோழிமுட்டை வெண்கரு இவைகளையரைத்துப் பூச வேறுமுகம்பாராள்.

331 இதுவுமது.

செவ்வாய்க்கிழமை பொழுதுவிடியுமுன்பருத்திக்கொழுந்தைப்பறித்து அதனோடுகோழிமுட்டைத்தோலைச்சேர்த்து அரைத்துப்பூசலேபனஞ்செய் யும் அரைக்கும்போது ஜலமில்லாவிட்டால் மேற்படி இலைச்சார் விடவும்.

331. இதுவுமது

வெள்ளெருக்கன்வேரையரைத்து சந்தனத்திற் கலந்து தேனிலிழை துப்பூச லேபனமாம்.

332. இதுவுமது

வெள்ளைக்காட்டான் வேரில் கற்பூரத்தைக் கலந்துப்பூச லேபனமாம்.

333. இதுவுமது

கொன்றைப்பழத்தின் மையை பசும்வெண்ணெயிற் குழைத்துப்பூச லேபனமாம்.

334. இதுவுமது

கும்மட்டிப்பழத்தைக் குடைந்து நான்கு விராகனிடை வெண்காரத் தை உள்ளே வைத்துப்பொதிந்து சற்று பொறுத்து[illegible]த்தால் பொங்கி யிற்கும் அதையெடுத்து ரவியிலுலர்த்தி சீலையிற் பொதிந்து மேற்படி காயை கசக்கிப் பிழிந்து நீரைத்தண்டிற்குப்பூச லேபனமாம்.

335. இதுவுமது

ஊர்க்குருவிமுட்டையை எருமைவெண்ணெயிலுடைத்துவிட்டு வேவித் துவலதுள்ளங்காலில் தடவிப் புணர லேபனமாம். மாற்று ஜலம்விட்டுக் கழுவவும்.

336. இதுவுமது

வசம்பை தொட்டால் வாடிச்சாற்றிலரைத்து கையிற்பூசிக்கொண்டு தண்டைப்பிடிக்க ஸ்தம்பிக்கும்.

337. இதுவுமது

புழுகு சவக்காரம் சீனம் வெண்காரம் பொரிகாரம் அதிமதுரம் அகிற்கட்டை திப்பிலி நன்னரி காமப்பூ இவைகளைச் சமனுய்க்கூட்டி ஈச்சம் பழச்சாற்றாலாட்டி இரும்புப்பரணையில் வைத்து தேவையானபோது தண்டிற்குப்பூச லேபனமாம்.

338. உடல் ஊதி வீங்கும் வித்தை

ஒருபடி உப்பை தூள்செய்து சட்டியில்போட்டு அதன்நடுவில் ஒருபலம் பாஷாணத்தை வைத்து மேல் சட்டிமூடி குப்பையிற் புதைத்து 20-நாள் பொறுத்தெடுத்து அந்த உப்பில்கொஞ்சம் உள்ளுக்கேற்றிவிட தின்றவர்களுக்கு உடம்பு ஊதி வீங்கும்.

339. சிலந்திகடி நீங்கும் வித்தை.

ஒருகடையில் நல்லெண்ணெய்யைப் பெயர்சொல்லாமல் வாங்கிவந்து அதைச்சிறியபுட்டியில் விட்டுக்கொண்டு கோழியிறகால் அப்புண்ணின்பேரில் தடவிக்கொண்டேவர அக்கினிமாரியாத்தாள் அக்கி சிலந்தி மற்றுமுள்ள புண்களெல்லாம் ஆறிவிடும்.

340. கக்குவான் வராதிருக்கும் வித்தை.

ஒரு குடும்பத்தில் சிலபிள்ளைகளில் ஒருபிள்ளைக்குக் கக்குவான் வந்து மற்றபிள்ளைகளுக்கு வாராதிருக்க அத்தி ஆல் இலுப்பை பலா இம்மரங்களிலொன்றில் நிழலுள்ளவிடத்தில் ஊசியால் எந்தெந்தப்பிள்ளைகளின் பெயரையெழுதிவைக்கின்றோமோ அப்பிள்ளைகளுக்குக் கக்குவான் வராதிருக்கும்.

341. கற்றாழைநாற்றம் மாறும்வித்தை.

விளக்கெண்ணெயைப் பேர்சொல்லாது வாங்கிவந்து வைத்துக்கொண்டு சாப்பிட்டு படுக்கப்போகும்போது கற்றாழைநாற்றமுள்ளவர்கள் இரண்டு அக்குளிலும் தளும்ப பூசிக்கொண்டு படுத்திருந்து மறுநாள் காலையில் யெழுந்ததும் சீக்காய் அல்லது சோப்பு போட்டுக் கழுவிவிடவும் தீரும் இப்படி மூன்று ஐந்து நாள் செய்யவும்.

342. சதிபுருஷர் பிரியாதிருக்கும் வித்தை,

அண்டங்காக்கைத் தலையை நல்லெண்ணெயிற்போட்டு சிவக்கக் காய்ச்சி இறக்கிவைத்துக்கொண்டு தேவையானபோது புருஷன் பெண்சாதிக்கும் பெண்சாதி புருஷனுக்குமாக உள்ளங்கையில்விட்டு உசசந்தலையிலறக்க வசியமாகிப் பிரியாதிருப்பார்கள்.

343. சாலேசுரம் நீங்கும் வித்தை

சந்தணக்கல்லில் தேன்விட்டு செம்மரத்தை யிழைத்து செம்பு பரணையில் வழித்து சூரியகாந்திபட 6-நாள் வைத்து அதன் பிறகு அதைக் கண்களில் தீட்டிக்கொண்டுவர கண்கள் நன்றாகத் தெரியும் இதனால் தீராதகண் வலியெல்லாந் தீரும் கண்ரோகம் 66-ம் போம் கைகண்டது.

344. நினைத்த காரியத்தை முடிக்கும் வித்தை

ஆலமரத்திலிருக்கும் புல்லுருவியை ரோகணி நக்ஷத்திரத்தில் நேமநிஷ்டையுடன் அறுத்துவந்து தேனிலரைத்துத் திலர்தமிட்டுச்செல்ல சகலகாரியங்களும் நிறைவேறும். அதையே குளிசமாடி வைத்துக்கொள்ள வழக்குகள் வெல்லும் பகையாளிகளும் உறவாடி வணங்குவார்கள் சகல சம்பத்து மதிகரிக்கும்.

345. கர்ப்பமுண்டாகும் வித்தை

அரசமரத்தின்மேலிருக்கும் புல்லுருவியை சுவாதி நக்ஷத்திரத்தில் தூபதீபங் கொடுத்துக்கொண்டுவந்து பசும்பாலிலரைத்துக் கொடுக்க ஆண்குழந்தையும், பசுமோரி லரைத்துக் கொடுக்க பெண்பிள்ளையும் பிறக்கும், ஒரு போதும் தப்பாது. ஆனால் சாப்பிடும் தினத்தில் மாத்திரம் ஒருவேளை சாதமருந்தி விரதமிருக்கவும்.

346. வேறு - சாப நிவர்த்தி வித்தை

ஓம் சக்தி சாபம் நசி நசி சகல சாபம் நசி நசி சித்தர்கள் சாபம் நசி நசி தேவர்கள் சாபம் நசி நசி முத்தர்கள் சாபம் நசி நசி மூலிகை சாபம் நசி நசி பத்தர்கள் சாபம் நசி நசி ஓம் காளி ஓடிவா ஓம் நமசிவய என்று செபித்துப் பிடுங்கினால் சகல காரியங்களும் பலிக்கும்.

347. சத்துரு நாசமாகும் வித்தை

மாமரத்தின்மேலிருக்கும் புல்லுருவியைத் திருவாதிரை நக்ஷத்திரத்தில் தூபதீபங் கொடுத்து கொண்டுவந்து சந்தனமும் லவங்கமுஞ் சேர்த்து அரைத்து உருண்டை செய்துவைத்துக்கொண்டு தேவையானபோது கொத்தான் சாற்றிலரைத்துப் பகைவர்களின் வாசற்படியிற்றெளித்து அதையே அவர்கள்மேற் படும்படி தெளிக்க அவர்கள் நாசமாவார்கள்.

348. படை வெல்லும் வித்தை

புளியமரத்திலிருக்கும் புல்லுருவியை அனுட நக்ஷத்திரத்தில் தூபதீபங் கொடுத்து எலுமிச்சம்பழம் பலி கொடுத்துக்கொண்டு வந்து அதில் புனுகு கற்பூரம் வால்மிளகு இவைகளைச் சேர்த்தரைத்துத் தனது மார்பிற் பூசிக் கொண்டு சண்டைக்குச் செல்ல ஜெயமாகும் மீதியிருக்கின்றதை உருண்டையாக உருட்டிக் காயவைத்துத் தேவையானபோது உபயோகித்துக் கொள்ளவும்.

349. ஆயுதங்கள் முறியும் வித்தை

இலுப்பை மரத்தின்மேலிருக்கும் புல்லுருவியை மூல நக்ஷத்திரத்தில் தூபதீபங்கொடுத்து எலுமிச்சங் கனி பலியுடன் எடுத்துவந்து அதில் சவ்வாது, சந்தனம் ஏலம் சேர்த்தரைத்து ஒரு உருண்டையாக்கி வைத்துக் கொண்டு தேவையானபோது பசும்பாலிலரைத்துக் கைகளிற்பூசிக்கொண்டு படை முகத்திற்குச் செல்ல தன்மேல் வருகிற ஆயுதங்களெல்லாம் முறிந்து விடும்.

350. எதிரிகளை வெல்லும் வித்தை

வேங்கை மரத்தின்மேலிருக்கும் புல்லுருவியை பூராட நக்ஷத்திரத்தில் மூன் செய்தபடி செய்துக்கொண்டுவந்து அதில் கோரோசனை குங்குமப்பூ பச்சைக் கற்பூரஞ் சேர்த்து எலுமிச்சம்பழ ரசத்தா லரைத்துக் குளிகை செய்துவைத்துக்கொண்டு தேவையானபோது தேனிலுரைத்துத் திலர்தமிட்டுச் செல்ல எதிரிகள் வணங்கி வருவார்கள்,

351. எதிரி படைகள் நடுங்கும் வித்தை

எட்டிமரத்தின் புல்லுருவியை சித்திர நக்ஷத்திரத்தில் முன் சொன்ன மாதிரி செய்துக்கொண்டு வந்து கஸ்தூரி மஞ்சள் வசம்பு வெள்ளைப்பூண்டு சேர்த்து பசும்பாலிலரைத்துக் குளிகை செய்துவைத்துக்கொண்டு தேவையானபோது நல்லெண்ணெயிலுரைத்து நெற்றியில் திலர்தமிட்டுக்கொண்டு போக மாற்றான் படைகள் நடுங்கி ஓடிப்போய் விடும்.

352. வேறு ஜனவசிய வித்தை

பாலமரத்துப் புல்லுருவியை ரேவதி நட்சத்திரத்தில் கோழிக்குஞ்சு பலியிட்டு தூபதீபங் கொடுத்துக்கொண்டுவந்து அதில் குங்குமப்பூ கஸ்தூரி ஏலஞ்சேர்த்து எலுமிச்சம்பழ ரசம் விட்டரைத்து வைத்துக்கொண்டு தேவையானபோது பசு நெய்யிலிழைத்து இட்டுக்கொண்டு போக சர்வமும் வசிகரமாகும்.

353. திரிலோக வசிய வித்தை

சந்தனமரத்துப் புல்லுருவியை பூராட நக்ஷத்திரத்தில் எலுமிச்சம்பழங் காவு கொடுத்துக்கொண்டு வந்து புனுகு சவ்வாது பச்சைக் கற்பூரஞ் சேர்த்து பாலிலரைத்துக் குளிகை செய்துவைத்துக்கொண்டு தேவையான போது பன்னீரிலிழைத்துத் திலர்தமிட்டுக்கொண்டுபோக மூன்று லோகத் திலுள்ளவர்களும் வசமாவார்கள்.

354. பாம்புகடிக்கு சிகிச்சைசெய்யும் வித்தை.

ஒருவரைப் பாம்பு கடித்தவுடனே ஒரு உள்ளங்கை சிறுநீர் தன்னதாகிலும் பிறருடையதாகிலும் பிடித்து சாப்பிட்டுவிட விஷமேறுது முறிந்துவிடும் பிராணச்சேதமொன்றுமிராது.

355. பாம்பு உயிர்நிலையறியும் வித்தை

நல்லசாதிப்பாம்பை அடித்துப்போட்டாலும் வெட்டிப்போட்டாலும் குத்திப்போட்டாலும் தலையை நசுக்கிப்போட்டாலும் அது சாகமாட்டாது. அதுசாகவேண்டில் அதன்படத்தின் சூலத்தின் நடுவில் ஓர் சுப்பலைக்கொண்டு குத்த அது தொப்பென்று தரையில் விழுந்திரந்துவிடும். அதைக் கொளுத்தவேண்டியதுமில்லை.

356. பாம்புகடிக்கு மாரணவித்தை

நல்லபாம்பினருகில் கொஞ்சம் வெள்ளைப்பூண்டை நசுக்கிப்போட்டால் அவ்வாசனைபட்டவுடன் அது அப்புரம் இம்புறம் அசையாது மயக்கமெய்தி அங்கேயே விழுந்துகிடக்கும் அடித்தாலும் போகாது பிடித்தாலும் கடிக்காது ஸ்தம்பித்துப்போய்விடும் இவ்வேலைகளைக்கொண்டுதான் சிலர் பாம்புகளைப்பிடிப்பது வழக்கம். நசிக்கிப்போட்ட பூண்டை யெடுத்துவிட்டால் ஓடிவிடும்.

357. பாம்புகள் ஓடிவிடும் வித்தை.

ஏதாவதொரு வீட்டிற்குள் நல்லபாம்புவந்து புகுந்துகொண்டால் சில மந்திரவாதிகள் முன்வந்து நான் உப்பை மந்திரித்து விடுவேனாகில் அது காததூரம் பறந்துவிடாதா என்று வீரியம் பேசுவார்கள் அது சத்தப்பொய் பாம்புவந்து வீட்டிற்குள் புகுந்தது தெரிந்தவுடன் சாதாரண உப்பை மந்திரமின்றி எடுத்துத் தூவிவிட்டால் காததூரம் அப்பாம்பு போய்விடும்.

358. பாம்புக்கு மாரணவித்தை

உப்புப்பானையைத் துணியைப்போட்டுத் துடைத்துவிட்டு அதில் நல்ல பாம்பை வாயைக்கட்டி ஐந்துநிமிஷம் போட்டுவைத்தால் அதுஇறந்துவிடும் மற்றபடி அப்பாம்பு இறக்கவேணுமாகில் நெருப்பைப்போட்டுக் கொளுத்தி ஞலொழிய இறக்காது.

359. ஈ சாகும்வித்தை

ஒரு ஈயை தலைக்கிள்ளிப்போட்டாலும் வயிற்றைக்கிள்ளிப்போட்டா லிம் உயிர்போகாது மறுநாள்தான் சாகும் அதைக் கொல்லவேண்டுமென்று கருத்திருக்கும்பக்ஷத்தில் அதன் இரண்டு இரக்கைகளுக்கும் நடுவில் ஊசி யால் குத்த இறந்துவிடும்.

360. புட்டிக்குள் புஷ்பங்காட்டும் ஜாலம்

வெண்மையாகிய ஓர் கண்ணாடிப்புட்டிக்குள் துத்திநாகத்தகட்டையே னும் கம்பியையேனும் விட்டு அதின்நிறைய ஜலம்வார்த்து அதில் சுகர்லெட் என்னும் பவுடரை போட்டு அசையாது வைத்துவிட்டு மறுநாள் எடுத்துப் பார்த்தால் புஷ்பக்கொத்துகளைப்போன்றுதோன்றும் பார்ப்பவர்கள் ஆச்சரி யப்படுவார்கள்.

361. அயச்செம்பு நீராகும் வித்தை

அயத்தைக் குகையிலிட்டு நாலு துருத்தியைக்கொண்டு காடாக்கினி யாக எட்டுசாமமெரித்தாலும் அந்த அயம் செம்பாகநிறங்கொடுத்து அதைப் பார்க்குந்தோறும் கொத கொதவென்று இருக்குமேயன்றி ஒருபோதுங் கண்விட்டு ஆடாது அந்தசமயம் அதில் ஐந்தாறு நாகப்பூச்சிகளைப் போட்டு உருக்கக் கண்விட்டாடும் அதை யெடுத்து வாதிகள் எந்த வேலையாகிலும் செய்துக்கொள்ளலாம்.

362. சுரைக்காய் செடியில் மாதுளம் விரை காய்க்கும் வித்தை

மாதுளமரத்தினருகில் சுரைக்காய் செடியைப்போட்டு அம்மாதுளமரத் திற்றுளை றுளைத்து சுரைக்கொடியை அதனுள் நுழைத்து சாணிபொதிந்து வைத்திருந்து சிலநாள்பொருத்துக்காய்காய்த்தபின்காயை அறுத்துப்பார்க்க அதனுள் மாதளம் விரைதானிருக்கும் இதுமாதிரியே சில கொடிகளின் காய்களை மரத்தில் விட்டுக்காய்க்கவைத்துக் காண்பிக்க பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்.

363. முருங்கைமரத்தில் கத்தரிக்காய் காயக்கும் ஜாலம்

முத்தித் தேரின முருங்கைக்காய் ஒன்றை யெடுத்துப் பிளந்து அத னுள்ளிருக்கும் சிலபருப்பை யெடுத்துவிட்டு அதற்குப்பதிலாய் கத்தரிக் காய் விரைகளைப்பொதிந்து நட்டுவிட அதுசெடியாகி காய்க்கும்போது இவ் விரையின்கிளை எந்தப்பக்கமிருக்கின்றதோ அப்பக்கம் முருங்கக்கிளையில் கத்தரிக்காய்தான் காய்க்கும் அதைப்பார்த்தவர்களெல்லாம் ரொம்பவும் உன்னை மெசசுவார்கள்.

364. பைத்தியம் பிடிக்கும் வித்தை

அழிஞ்சி செடியின்மேலிருக்கும் புல்லுருவிக்கு அஸ்தநக்ஷத்திரத்தில் தீபதுபத்துடன் கோழிக்குஞ்சு பலிகொடுத்து கொண்டுவந்து அதனுடன் ஊமத்தன்விரையும் நாய்மலமுஞ்சேர்த்து கருஊமத்தன் சார்விண்டரைத்து உருண்டை செய்து உலர்த்திவைத்துக்கொண்டு நெய்யில் கெச்சைக்காயள வுதின்பண்டங்களில் கொடுக்க பைத்தியம் பிடிக்கும். முறிப்பு சர்க்கரை.

365. கண்குருடாகும் வித்தை

இலந்தை மரத்துப் புல்லுரிவிக்கு கேட்டை நக்ஷத்திரத்தில் தூபதீபங் கொடுத்து கொண்டுவந்து மின்னும்பூச்சி ஆறுபுள்ளிவண்டுசேர்த்து தேன் விட்டரைத்து நல்லெண்ணெயிற் கலந்து தீபமேற்றிவைக்க அங்குள்ளவ ரனைவர்களுக்கும் கண்குருடாய்ப்போகும் முறிப்பு சர்க்கரை

366. கூத்தாடும்வித்தை

வாதுமை மரத்துபுல்லுருவியை தூபதீபநைவேத்தியங்கொடுத்து தடவ நக்ஷத்திரத்தில் கொண்டுவந்து அதில் இந்திரகோபம் ஏழிஞ்சிவிரைசேர்த் துசிறுநீர் விட்டரைத்துக் குளிகை செய்து வைத்துக்கொண்டு தேவையான போது பசுநெய்யிலுரைத்து நல்லெண்ணெயிற்கலந்து விளக்கேற்றிவைக்க அங்குள்ளவர்களெல்லாங் கூத்தாடுவார்கள் தீபம்நிற்க கூத்தாடுதல் நிற்கும்.

367. இந்திரியங்கட்டும் வித்தை

நாகமரத்துப்புல்லுருவை சித்திரை நக்ஷத்திரத்தில் கோழிக்குஞ்சுபலி யுடன் தூபதீபங் கொடுத்துக்கொண்டுவந்து அதில் பாதரசம் கட்டுக்கொடி சேர்த்து நாயுருவிச்சார்விட்டரைத்து செம்புத்தாயித்தை அல்லது வெள்ளி தாயித்தையிலடைத்து அதை அரையிற்கட்டி முன்பக்கந்தள்ள விந்து ஸ்தம்பிக்கும் பின்பக்கந்தள்ள ஸ்கலிதமாகும் உடனே பால்சாப்பிடவும்.

368. புருடனை மனைவி பிரியாதிருக்கும் வித்தை

இலவமரத்துப்புல்லுருவியை அனுட நக்ஷத்திரத்தில் நைவேத்தியதூப தீபத்துடன் கொண்டுவந்து புனுகும் அழவணவிரையுஞ்சேர்த்து தேனில ரைத்து உருண்டைசெய்துலர்த்திக்கொண்டு தேவையானபோது தேனிலி ழைத்துத் தண்டிற்குப்பூசிப் புணர புருஷனை மனைவி பிரியமாட்டாள் மூன் றுநாள் விடாது செய்யவேண்டும்.

369. மனைவியை புருடன் பிரியாதிருக்கும் வித்தை

முந்திரிமரத்துப்புல்லுருவியை உத்திராட நக்ஷத்திரத்தில் முன்மாதிரி செய்துக்கொண்டுவந்து கோரோசனை குங்குமப்பூ கடுக்காய் சேர்த்துதேன் விட்டரைத்துக்குளிகைசெய்து தேவையானபோது தேனிலுரைத்து அல்கு லிற்றடவிப் புணர புருடன் எக்காலத்தும் பிரியமாட்டான்.

370. பகைவரைப் பிரிக்கும் வித்தை

வெட்பாலை மரத்துப்புல்லுருவியை அவிட்ட நக்ஷத்திரத்தில் முன் போல் செய்துக்கொண்டுவந்து அதில் ஆடுதின்னாபாளைகொத்தான்சேர்த்து வேப்பெண்ணெய் விட்டரைத்து வேண்டியபொழுது பானை ஓட்டில் பகை வர் பேர்களை தலைமாற்றியெழுதி முன்னரைத்ததை வேப்பெண்ணெயிற் கலந்து அதற்குதடவி பகைவர்தெருவாயற்படியில்புதைக்கப்பிரிந்துபோவர்.

371. பகைவர் உறவாகும் வித்தை

சதய நக்ஷத்திரத்தில் மருதமரத்துப்புல்லுருவியைநைவேத்தியத்துடன் முன்மாதிரி கொண்டுவந்து அதனுடன்இரட்டைப்பிரமிட்டைசீதாசெங்கழு நீர் சேர்த்து பன்னீர்விட்டரைத்துக் குளிகைசெய்து நிழலிலுலர்த்திவைத்துக் கொண்டு தேவையானபோது பகைவர் பெயர்களை ஓலைத்துண்டிலெழுதி இதைத்தேனிலிழைத்து அதற்றடவி பகைவாநடக்கும்வழியிற்புதைக்க உற வாவார்கள்.

372. கண்டவர்வசியமாகும் வித்தை

கடப்பமரத்து புல்லுருவிக்கு விசாக நக்ஷத்திரத்தில் கோழிப்பலியிட்டு தூபதீப நைவேத்தியத்துடன் கொண்டுவந்து அதில் புனுகு சவ்வாது கிராம்புசேர்த்து தேன்விட்டரைத்துக் குளிகைசெய்து வைத்துக்கொண்டு தேவையானபோது அதைப் பசுந்தயிரிலரைத்து நெற்றியில் திலர்தமிட்டுச் செல்ல கண்டவர்களெல்லாம் ரொம்பவும் மரியாதையுடன் கையெடுத்து வணங்குவார்கள்.

373. இராஜவசிய வித்தை

பாதிரிமரத்துப் புல்லுருவிக்கு உத்திராட நக்ஷத்திரத்தில் சிகப்புசாவல் பலிகொடுத்து தூபதீப நைவேத்தியத்துடன் கொண்டுவந்து கோரோசனை குங்குமப்பூ கஸ்தூரி பச்சைக்கற்பூரம் இவைகளைச் சேர்த்து பன்னீர் விட்டரைத்துக் குளிகை செய்து வைத்துக்கொண்டு தேவையானபோது தேனிலுரைத்து நெற்றியிற்றிலர்தமிட்டுக்கொண்டு இராஜாக்களைக்காண வசியமாவார்கள்.

374. புருடவசிய வித்தை

பூரிமரத்திலிருக்கும் புல்லுருவிக்கும் பூராட நக்ஷத்திரத்தில் கோழிபலிகொடுத்து தீபதூபநைவேத்தியங்கொடுத்துகொண்டுவந்து பசுநெய்யிலரைத்து உருண்டை செய்து காயவைத்துக்கொண்டு தேவையானபோது நல்லெண்ணெயிற் குழைத்து திலர்தமிட புருஷவசியமாகும்.

375. ஸ்திரீ புருஷ வசிய வித்தை

கடுக்காய்மரத்துப் புல்லுருவிக்கு ஆயில்ய நக்ஷத்திரத்தில் எலுமிச்சங்கனிகாவு கொடுத்து தீபதூபத்துடன் கொண்டுவந்து தேன்விட்டரைத்து உருண்டைசெய்து வைத்துக்கொண்டு தேவையானபோது நெய்யிலுரைத்துத்திலர்தமிட்டுக்கொண்டு ஸ்திரீ புருடரிருவருஞ்சேர எந்நாளும் பிரியமாட்டார்கள்.

476 விஷங்கள் நீங்கும் வித்தை

சேராங்கொட்டை மரத்துப்புல்லுருவிக்கு கேட்டை நக்ஷத்திரத்தில் கருவூமத்தன் காவுகொடுத்து தீபதூபத்துடன் கொண்டுவந்து பால்விட்டரைத்துருட்டி வேண்டியபோது முருங்கையிலைச்சாற்றிலுரைத்து கடிவாயிற்போட்டு உள்ளுக்குக்கொடுக்க விஷமிறங்கும்.

377. சூன்ய மகலும் வித்தை

ஈரவளிமரத்தின் மேலிருக்கும் புல்லுருவியை பரணிநக்ஷத்திரத்தில் எலுமிச்சம்பழ மறுத்து, தீபதூபங்கொடுத்து நைவேத்தியஞ் செய்து கொண்டு வந்து அதனுடன் ஐங்காயஞ்சேர்த்து, எருமைமூத்திரத்திலரைத்து உருண்டைசெய்து வைத்துக்கொண்டு, தேவையானபோது நெய்யிலிழைத்துத் திலர்தமிட்டு, அவர்கள் வாயற்படியிடம் போட்டுவைக்க தீரும்.

378. வழக்கு வெல்லும் வித்தை

அத்திமரத்துபுல்லுருவிக்கு மிருகசீரிட நக்ஷத்திரத்தில்தூபதீபங்காட்டிக் கொண்டு வந்து அதில் வெண்குன்றிவிரை, மயிரோசனைசேர்த்து, எலுமிச்சம்பழம் சாற்றிலரைதது உருண்டை செய்து, உலர்த்திவைத்துக்கொண்டு தேவையானபோது, தேனிலரைத்துத் திலர்தமிட்டுச் செல்லவழக்குகள் வெல்லும்.

379. சர்வ நோய்களும் தீரும் வித்தை

புங்கமரத்துப் புல்லுருவிக்குப் புனர்வசுசநக்ஷத்திரத்தில், எலுமிச்சங் கனியறுத்து தீபதூபங்கொடுத்துக்கொண்டு வந்து, அதற்குசீதாதேவி செங் கழுநீர்சேர்த்தரைத்துப் பாலிற்கலக்கி கொஞ்சங்குடித்து, மற்றதை உடம் பிற் றடவ, மூன்றுநாள் செய்து வந்தால் உடம்பிலுள்ள ரோகங்களெல் லாமாறும்.

380. பிறிவு செய்யும் வித்தை.

வேப்பம்மரத்துப்புல்லுருவிக்குத் திருவோண நக்ஷத்திரத்தில் தூப தீபங்கொடுத்துக் கொண்டுவந்து, அதனுடன்மேற்படிமரத்திலுள்ள காக் கைக் கூண்டைக் கொளுத்தியகரியுஞ்சேர்த்து, வேப்பெண்ணெய்விட் டரைத்துக் குளிகைசெய்துவைத்துக்கொண்டு, தேவையானபோதுவேப் பெண்ணெயிற் குழைத்து கருவுக்குபதிலாய் இதைச்சேர்த்து எந்த வேலை யைச்செய்தபோதிலும் பிரித்துவிடும்.

381. பேய் பிசாசுகள் ஓடும் வித்தை

சோங்குமரத்தின்மே லிருக்கும் புல்லுருவிக்கு சித்திரைநக்ஷத்திரத்தில் தேங்காயுடைத்து, தூபதீபங்காட்டிக் கொண்டேவந்து, அதில்சடாமாஞ் சில், நரிமிரட்டியைச்சேர்த்து பேய்கரும்பு சார்விட்டரைத்துதனக்குவேண் டியபொழுது சந்தன நீரிலிழைத்துத் திலர்தமிட எவ்வித பேய்பிசாசுகளும் விலகும்.

382. பெரும்பா டுண்டாகும் வித்தை

மாதளமரத்துப் புல்லுருவை பூராடநக்ஷத்திரத்தில் தூபதீபநைவேத்தி யங்கொடுத்துக் கொண்டுவந்த, இந்திரகோபம் மூசாம்பரம்சேர்த்துக் காடி விட்டரைத்து உருண்டை செய்துவைத்துக்கொண்டு தேவையானபோது தேனிலிழைத்து உள்ளுக்குக்கொடுக்க தின்றவர்களுக்கு பெரும்பாடுசாயும் முறிப்பு, அழுக்குத் துணிக்கரியை சீரகத்திலரைத்துக் கொடுக்கவும்.

383. விளைவுகள் பெருகும் வித்தை

நாயுருவிச்செடிக்கு கன்னிநூல் காப்புகட்டி பொங்கலிட்டு, பலியுடன் தூபதீபங்கொடுத்து ஸ்ரீம் என்னும் மந்திரத்தை லட்சத்தெட் டுருஜெபித்து வேரைப்பிடுங்கிவந்து குளிசமாடி பயிருள்ளநிலங்களில் புதைத்துவைக்க விளைவுகள் நன்றாகப் பலிதமாகும்.

384. சிங்கி வித்தை

சொறித்தவளையின்வாயில் தீமுறுகல்பாஷாணத்தைவைத்தடைத்து ஓர் குடுவையில் போட்டுப்புதைத்து 20-நாள்பொறுத்தெடுத்து, எலும்புகளெல் லாவற்றையும் எறிந்துவிட்டு, மற்றதைக்குழித்தைலமிறக்கி பகைவர்மேற் றெளிக்க, திரேகமெங்கும் புண்ணாய்விடும், மாற்று தேன்போலிருக்கும் புல் லும், அதின்வேருமரைத்து உள்ளுக்குக்கொடுத்து. மேலுக்கும் தடவதீரும்.

385. வேறு ஆடையேறும் இரங்கும் வித்தை

ஆதிவாரத்தன்று பச்சைப்பாம்பின்வாயில் பருத்திவிரையைப் போட்டு குழிவெட்டி நேராகநிறுத்திப்புதைத்து, எரிதண்ணீர் விட்டுப்பயிராக்கிக் காய்த்தபிறகு, அக்காயிலிருக்கும் பஞ்சை யெடுத்துத்திரியாக்கி, வேப்பெ ண்ணெயில் திரியைப் போட்டு விளக்கேற்றிப்பார்த்தால், அவ்விளக்குவெ ளிச்சமுள்ளயிடமெல்லாம் பச்சைப்பாம்பாகவேதோன்றும்.

386. பைத்தியம் பிடிக்கும் வித்தை.

ஒரு மூஞ்சூரைப்பிடித்துக்கொன்று நன்ருக உலர்த்திப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து அதில் ஒரு சிட்டிக்கைத் தூளை பலவித தின்பண்டங் களில் வைத்துக் கொடுத்தால் பைத்தியம் பிடிக்கும். குறிப்பு - உலர்ந்த பூனை மலத்தை பனவெல்லத்தில் வைத்து மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

887. வேறு வசிய வித்தை

மனேசிலை காந்தம் மருளூமத்தை புல் அட்டை சுழல்வண்டு மின்மினிப் பூச்சி இந்திரகோபம் குழியானை கெஞ்சா தொட்டால் சிவைங்கி இவைகளை பேய்ப்பீர்க்கன்சாற்றிலரைத்துக் குளிகைசெய்து உள்ளுக்குக்கொடுக்க வசி யமாம். பெண்கள்நாதத்சில் ஊறப்போட்டு ஆணுக்குக்கொடுக்கவும்.

388 இதுவுமது.

காந்தம் கஞ்சா சுழல்வண்டு மின்மினிப்பூச்சி குழியானை இந்திரகோ பம் சிகப்புநிறமுள்ள அட்டை நின்னுசிணுங்கி ஆடையொட்டி பூனைக்காலி யிலை புலிக்காலிவேலம்பூச்சிமருளூமத்தன் இவைகளைப் பேய்க்கருப்பன்சாற் ருலரைத்துக் குளிகைசெய்து ஆணுக்கு நாதத்திலும் பெண்ணுக்குவிந்திலுங் கொடுக்க வசியமாம்.

389. இதுவுமது.

கரிஷணி வரிஷணி அரோநோமி வசியநம என்னும் மந்திரத்தை 13- உருகொடுத்து புல்லாமணக்கன்கிழங்கு மருளூமத்தன்யிலை தொட்டாற்சி ணுங்கியிலை இவைகள் மூன்றையுங் கொண்டுவந்து சுழல்வண்டுசேர்த்து பே ய்க்கருப்பன் சாற்ருலரைத்து குளிகைசெய்து ஆணுக்கு நாதத்திலும் பெண் ணுக்கு விந்திலும்கொடுக்க வசியமாம்.

390. வசிய மை வித்தை

முன்சொல்லிய மந்திரத்தைக் கருவூமத்தன் செடிக்குச் செபித்து வேர்பிடுங்கி அதை வெண்கலக்கிண்ணியைத்திருப்பி அதின்மேல் சாறு பிழிந்து நாகூர் செப்புக்காசினுல் இழைத்து சிமிளில் வைத்துக்கொண்டு அதற்கு ஒரு பகவதி உச்சாடி ஓம் விருபா எரி எரி சுடு சுடு நசி நசி சூ சூ சூ சூ என்று 35 உருகொடுத்து எவள்பேரிலாசையோ அவளை நினைத்து திலர் தமிட வசியம்.

391. நிலவூமத்தன் வசியம்

நிலவூமத்தன் செடிக்கு ஞாயிற்றுக்கிழமைதினங் காப்புகட்டி தூபதீ பங்கொடுத்து தேங்காயுடைத்து நைவேத்தியஞ்செய்து சமூலமும் பிடுங்கி நிழலிலுலர்த்தி புதுப்பாண்டத்தில் போட்டு பச்சைக்கற்பூரம் கால்விராக னெடை சேர்த்து எரித்துக் காராவின் நெய்விட்டு மைபோலரைத்து தான் நினைத்தவள்பேரை 12 தரஞ் செபித்துத் திலர்தமிட வசியமாம்.

392. படுசிங்கி செய்யும் வித்தை

கன்னிக்கோழி முட்டையைக் குத்தித் துளைசெய்து அதில் கால் விராகனெடை இரசம்விட்டு வாயை மெழுக்கால்மூடி பிணம்போகும் வழி யில் பிரதமைதிதித் தினம்புதைத்து பிணம் அதின்பேரில் போனபின்பு மறு பிரதமைத் திதியிலெடுத்துக் கல்வத்திலூற்றி கால்விராகனெடை கெந்தகஞ் சேர்த்தரைத்து டப்பியில் வழித்து வைத்துக்கொண்டு தேவை யானபோது பகையாளிகளின் திரேகத்திற் றடவிவிட திரேகமாதியந்தமும் இரணங்களாகி துன்பப்படுவான்,

393. இதற்கு முறிவு வித்தை

வவ்வால் கருப்பு யீரல் 1-க்கு 1-பலம்மிளகு சேர்த்தரைத்து சுண்டக்காய் பிரமாணம் குளிகை செய்துவைத்துக்கொண்டு வேண்டுமானபோது ஓர் குளிகையை நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி இரணத்தின்மேற் றடவிவர ஆறும்.

394. பாதரசம் கட்டும் வித்தை

வெள்ளைக் கலியாணமுருக்கன் கட்டையைத் துளைத்து அதில் ஒரு விராகனெடை பாதரசத்தைவிட்டுக் கார்க்கடைத்து கம்பியால் நன்றாகப் பிகிந்து சுற்றி அதை சமயலடுப்பில் போட்டுவிட்டு சமையல் செய்துக்கொள்ளவும் அது நன்றாகக் கட்டியிருக்கும் அதையெடுத்து இடுப்பில் கட்டிக்கொள்ளவும் ஸ்தம்பனமாம்.

395. மழைபெய்யச் செய்யும் வித்தை

மழை பெய்யாது அவஸ்தைப்படுங் கிராமத்தில் சில விதவைகள் சேர்ந்துக்கொண்டு ஒரு குடுவையில் அரிசி பழம் தாம்பூலம் கற்பூரம் சாம்பிராணி கோழிக்குஞ்சு இவைகளோடு ஏரியிற்சென்று பொங்கலிட்டு பலி கொடுத்து வைத்துவிட்டு ஆகாயத்தைப் பார்த்து மழைவர ஆராதித்து மாரிழவு மயிரிழவு கொடுத்துத் திரும்பிவந்து விட்டால் மறுநாளைக்குள் மழைபெய்து ஏரி நிறைந்துவிடும்.

396. மழை நிற்கும் வித்தை

மழைபெய்து நிற்காமல் அவஸ்தைப்படும்போது தலைச்சன் பிள்ளையாகயிருப்பவன் அரைநாண்கயர் முதலிய எல்லாவற்றையுங் களைந்து நிர்வாணியாகக் கொள்ளிக்கட்டையை கையிலெடுத்துக்கொண்டுபோய் ஆகாயத்திற் காட்டி மழைநிற்கவென்று பிரார்த்திக்க மழையானது உடனேநின்றுவிடும்.

397. காய்க்காதமரம் காய்க்கும் வித்தை

காய்க்காதமரங்கள் என்னமரமாயிருந்தபோதிலும் கிராணம்பிடித்திருக்கும்போது தலைச்சன்பிள்ளையானவன் கையில் உலக்கையை எடுத்துக்கொண்டுபோய் அம்மரத்தின் அடியில் சுற்றி அவ்வுலக்கையால் குத்திவிட்டுவர அதன்பின் அம்மரமானது காய்க்கும்.

398. நிலக்கடலையை கசக்கவும் இனிக்கவும் செய்யும் வித்தை

ஓர் அகலத்தட்டில் நடு பாதி தடுத்து ஒருபக்கம் உரித்துடைத்த நிலக்கடலைப் பருப்பும் ஒருபக்கம் வேப்பங்கொட்டையை உரித்துடைத்த பருப்பும் போட்டுக்கொண்டு சபையிலிருக்கப்பட்டவர்களைப் பார்த்து இனிக்க வேண்டுமென்று கேட்பவர்களுக்கு நிலக்கடலைப் பருப்பும் கசக்கவேணுமென்று கேட்பவர்களுக்கு வேப்பங்கொட்டைப்பருப்புங் கொடுக்க ரொம்பவும் தமாஷாக யிருக்கும்.

399. சர்க்கரையை கசக்கவும் இனிக்கவும் செய்யும் வித்தை

முன்மாதிரியே ஓர்தட்டில் சர்க்கரையும் இலுப்பைப் புண்ணாக்கையும் வைத்துக்கொண்டு இனிப்புவேண்டுமென்றவர்க்கு சர்க்கரையும் கசப்பு வேண்டுமென்றவர்க்கு இலுப்பைபுண்ணாக்குங் கொடுக்க ஆச்சரியப்படுவார்கள்.

400. மணலை மென்றால் ருசிக்கும் வித்தை

மணலில் குண்டுமணி யிலையை வைத்து மறைத்து ஒருவருக்குந் தெரியாது வாயிற்போட்டு மென்று தின்னச் செய்தால் அது மெல்லும்போது கரகரப்பின்றி ருசிகரமாயிருக்கும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

401. தண்ணீரை பானகமாக்கும் வித்தை

தந்திரமாக குண்டுமணி இலையை மெல்லவைத்துப் பிறகு ஜலங் கொடுத்தால்அவர்கள் சாப்பிடும்போது வாயானது வெல்லத்தைப்போன்று தித்திக்கும் அந்த ருசி சீக்கிரத்தில் மாறாது.

402. வேப்பெண்ணெயில் பணியாரஞ் சுடும் வித்தை

குண்டுமணி யிலையை அரைத்து வைத்துக்கொண்டு வேப்பெண்ணையைக் காய்ச்சி அதில் முன்னரைத்ததை கொஞ்சம் கொஞ்சமாக பிட்டுப் போட்டுக்கொண்டே வந்து நன்றாகக் காய்ந்த பிறகு இறக்கி வடித்துக் கொண்டு அந்த எண்ணெயில் எவ்வித பலகாரங்களைச் சுட்டு சாப்பிட்ட போதிலுங் கசக்காமல் இனிப்பாகவேயிருக்கும்.

403. நெருப்பை மெல்லும் வித்தை

கொப்பரைத் தேங்காயை வாயில்போட்டு மென்று தின்றுவிட்டு உடனே கொஞ்சம் நெருப்பை யெடுத்து வாயில் போட்டு மெல்ல வாய் சுடாது பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாயிருக்கும். ஆனால் இதை நாளாவட்டத்தில் பழக்கிக்கொண்டே வந்து பிறகு பகிரங்கத்திற் செய்யவேண்டும்.

404. மூட்டைப்பூச்சி நசியும் வித்தை

எருமை மூத்திரத்தில் அறுகம் புல்லைப்போட்டு ஓம் எனுத்தூர் நெல்லூர் களியானூர் மைலாப்பூர் ஓலத்தூர் புதுவூர் எண்ணூர் என்பதாய் தோய்த்து தோய்த்து 108 விசை எடுத்து வீட்டை ஒட்டரையடித்து சுத்தஞ் செய்து மேற்படி கோமயத்தைத் தெளிக்க மூட்டைப்பூச்சிகள் மாயும்.

405. இதுவுமது

ஆதிவாரங் காலையில் ஓர் மூட்டைப்பூச்சியைப் பிடித்து தெருவாசற்படி மேல் வைத்துக் கத்தியால் தலையை வெட்டி யெறிந்துவிடவும். இப்படி மூன்று ஆதிவாரஞ் செய்ய அவ்வீட்டிலுள்ள மூட்டைப்பூச்சிகளெல்லாம் மாய மாய் மறைந்துவிடும்.

406. மீன்முள்ளு மெதுவாகும் வித்தை

எவ்வித முறட்டு முள்ளுள்ள மீனுயிருந்தாலும் சமைக்கும்போது கொஞ்சம் ஆமையோட்டை சந்தனக்கல்லிலுரைத்து அக்குழம்பில் விட்டுவிட முள்ளுகளெல்லாம் மெதுவாய்விடும். சாப்பிடும்போது முள்ளுடன் சாப்பிட்டாலும் வாய் நோகாது. வாய் அறுபடாது.

407. சுரக்காயில் மாதளம் விரை காய்க்கும் வித்தை

மாதளமரத்தை அடியில் துளைத்து அதில் சுரைக்கொடியை விட்டு மறு பக்கத்தில் வாங்கிவிட்டு வளர்ந்துக் கொடியேறிக் காய்க்கையில் அக்கொடியிலுள்ளக் காயைப் பிளந்துப் பார்த்தால் கெம்புகளைப்போல் மாதளம்விரையிருக்கும் மற்றக்கொடிகளில் மாத்திரம் சுரவிரையே யிருக்கும்.

408. இடுப்புநோய் தீரும் வித்தை

கனமான புல்லாஞ்சிக் கொம்பை ஓர் மார் நீட்டிற்குத் தரித்து வந்து இரண்டாய் பிளந்து இடுப்பு நோய்க்காரன் இருப்பு இரண்டு பக்கமும் இரண்டு பேர் முனைகளைப் பிடித்துக்கொண்டிருக்க நாம் பட்டு இடுப்பு என்று சொல்லிக்கொண்டே இரும்புகத்தி அல்லது அரிவாளைக்கொண்டு

மந்தரித்து வர இரண்டு முனைகளும் ஒட்டிக்கொள்ளும். மறுபடியும் அதைக் கத்தியினால் அவ்விரு முனைகளையும் அறுத்துவிட, அவ்விடுப்பு நோய் தீரும்.

409. இதுவுமது

முன் செய்த மாதிரி வேலன்கொம்பைப் பிளந்து இரண்டு பக்கமும் இடுப்பில் பிடித்துக்கொண்டு மந்திரிக்க இடுப்பு நோய்விடும்.

410, இதுவுமது

கொறுக்காப்புளி மரக்கொம்பில் முன்மாதிரி செய்து மந்திரஞ் செபிக்க இரண்டு முனைகளும் ஒட்டிக்கொள்ளும் அதையும் அப்படியே அறுத்துத் தரித்துவிட இடுப்பு நோய் விலகும்.

411, இதுவுமது

இடுப்பு நோயுள்ளவனை ஆற்றிலழைத்துக்கொண்டு போய் சித்தாமுட்டி வேரை பட்டு இடுப்பு உருட்டு என்பதாய் 17 விசை ஜெபித்து அவாள் கை யிற் கொடுத்துக் கீழே படுக்கவைத்து நமது காலால் உருட்டி அவனைத் தள்ளிக்கொண்டே போய் அக்கரையிற் சேர்க்க, அங்கொருவனிருந்துக் கொண்டு முன்மாதிரி இக்கரையிற் சேர்க்க நோய் விலகிவிடும்.

412. கண்ணில் மண்ணைக் கட்டிக்கொள்ளும் வித்தை

நத்தைச்சூரி வேரை மென்று வாயிலடக்கிக்கொண்டு பயப்படாமல் கண்களில் மண்ணைக் கொட்டிக்கொள்ள கண்ணருகாது.

413. ஒரு பசு இரண்டுவித பால் கறக்கும் வித்தை

சித்திரமூல வேரை அரைத்து பசுவின் ஒரு கொம்பிற்கு தடவி அப்பக் கம் பால் கறக்க அப்பாலெல்லாம் இரத்தமாகவேயிருக்கும். தடவாத பக் கம் பாலாக இருக்கும். இரண்டுகொம்பிற்குந் தடவினால் முழுதும் இரத்த மாகவே கறக்கும். கழுவிவிட்டால் எப்போதும்போல் கறக்கும்.

414. மரம் உளுக்காமலும் சாகாமலும் இருக்கும் வித்தை

சரிகைத்தூளை அல்லி விதை யெண்ணெயிற் கலந்து காய்ச்சி உத்தி ரங்களுக்கும் மரங்களுக்கும் பூச நெடுநாளைக்குச் சாகாமலும் உளுக்காமலு மிருக்கும். அதை இரும்புக்குச் சமானமாகச் சொல்லலாம்.

415. கோழிமுட்டை பறக்கும் வித்தை

கோழிமுட்டையைத் துளைத்து அம்புலியை யூற்றிவிட்டு அதில் பாத ரசமும் பனித்தண்ணீரும் ஊற்றி துளையை அடைத்து வெய்யலில் வைக்க அது சூடேறினவுடன் ஆகாயத்திலெழும்பும் பார்த்தவர்கள் இது ஆகாய வாணிவசியமென்று சொல்லுவார்கள்.

416. வயலேட்டு இங்கி செய்யும் வித்தை

ஒண்ணரை பயிண்டு ஜலத்தில் நாலவுன்சு சாயக்கட்டியைப் போட்டு முக்கால் பயிண்டு ஆகிறவரைக்கும் காய்ச்சி வடிகட்டி அதில்முக்காலவுன்சு கோந்தும் கால் அவுன்சு படிகாரமுஞ் சேர்க்க வயலெட்டு இங்கியாகும்.

417. பழங்களின் சாரங்களைக்காட்டும் வித்தை

எவ்விதமான பழங்களையும்உரித்து ஆல்கஹால் என்னும் திராவகத்தை விட்டுக் கரைத்து வடிகட்டிப் புட்டியில் வைத்துக்கொண்டு தேவையான

போது எடுத்துக்கொடுக்க பார்ப்பவர் ஆச்சரியப்படுவார்கள். மணம் ருசி முதலியவை போகாது.

418. தைலங்கள் இறக்கும் வித்தை

இலவங்கப்பட்டை அல்லது இலவங்கத்தைப் பொடிசெய்துஅதிற்கொஞ்சம் ஜலசம்பந்தமான ஆல்கஹாலே விட்டு வைத்திருந்து பின்பு கலக்கி வடிகட்டிக்கொண்டு தன்னிஷ்டப்படி கலர்கொடுத்துப் பிரயோகிக்கலாம். இன்னும்தேவையான தைலங்களை இம்மாதிரி தயாரித்துக்கொள்ளவும்.

419. தேள் விஷம் ஏறுதிருக்கும் வித்தை

ஞாயிற்றுக்கிழமையதினம் சூரியோதயத்திற்குமுன் கருங்காலிச் செடிக்கு தூபதீபங்கொடுத்துக் கட்டி சாயுங்காலஞ் சென்று பிடுங்கி வேரைத் தரித்து மோதிரமாயாவது அல்லது வளையமாயாவது செய்து கையில்போட்டுக்கொண்டு தேளைக்கொட்டவிட்டால் விஷமேறாது பார்ப்பவர்கள் அதை கட்டிவிட்டாயென்று சொல்லுவார்கள்.

420. தீப வித்தை

தீமுருகல் பாஷாணம் ஒருபங்கும் ஈதா திராவகம் 6-பங்குமாக ஓர் புட்டியில் போட்டுக் கார்க்கடைத்து வெந்நீரில் 3 மணிநேரம் வைத்திருந்து பிறகு யெடுத்து வெளிச்சம் வேண்டுமானபோதும் கார்க்கைத்திறக்க சூரியப்பிரகாசம்போல் வெளிச்சந் தோன்றும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். கார்க்கை மூடிவிட இருளாகும்.

421 வேறு துணியைக்கொளுத்தினுல் வேகாதிருக்கும் வித்தை.

ஓர் குட்டையை யாவரும் பார்க்க சாராயத்தில் நனைத்துக் கொளுத்த அது பற்றியெறியும் பார்ப்பவர்கள் குட்டை வெந்துவிட்டதென்றே நினைப்பார்கள். அது அணைந்தபின் குட்டையை யெடுத்துக் காண்பிக்க ஆச்சரியப்பட்டு இது அக்கினிதேவன் வசியமென்று புகழ்வார்கள்.

422. நெருப்புப் பிடிக்காத துணி வித்தை

கோழிமுட்டை வெள்ளை அம்புலியும் படிகாரமுஞ்சேர்த்து அரைத்து ஒரு குட்டைக்குப்பூசி உப்புக்கலந்த நீரிற் தோய்த்து உலறவைத்து வைத்திருந்து சபையில் எல்லோரும் பார்க்கக் கொளுத்தினுல் அதில் நெருப்புப் பிடிக்காது.

423. தண்ணீர் ஓடாத துணி வித்தை

மெழுகும் குங்கிலியமும் சரியெடையெடுத்து காய்ச்சி அதில் துணியை நனைத்து உலர்த்தி யெடுத்துக்கொண்டு அதின்பேரில் ஜலத்தைவிட அது சிதரிப்போய்விடுமேயன்றி துணி கிஞ்சிற்றேனும் நனையாது உலர்ந்ததாகவே இருக்கும்.

424. பூனையை எலி வெல்லும் வித்தை

எருக்கம்பாலையும் குப்பைமேனிச்சாறையும் கலந்து ஓர் எலிக்குத் திரேகமாதியந்தமும் பூசி பூனையின் எதிரில் விட்டால் பூனையானது வெறி பிடித்ததைப்போன்று அதைச்சுற்றி சுற்றி வருமேயன்றி அதை ஒன்றுஞ் செய்யாது எலியை எடுத்துப் போட்டுவிட்டால்தான் பூனை விலகும்,

425. நெருப்பில்லாமல் சாதம்வேகும் வித்தை

ஒரு குடுவையில் கொஞ்சம் அரிசிபோட்டு அனைவரும் பார்க்க அதில் ஜலம்விடுவதைப்போல தெரியாது கொஞ்சம் சதுரக்கள்ளிப்பாலேவிட்டு

சற்றுநேரம் மூடிவைத்திருந்து பிறகு திறந்துகாட்ட வெந்த சாதமாக யிருக்கும் பார்த்தவர்கள் அக்கினிதேவன் வசியமென்று சொல்வார்கள்.

426, வேறு ஜலத்தில் தீபமெரியும் வித்தை

குங்கிலியத்தையும் கற்பூரத்தையும் பொடித்துத் தூளாக்கிச் சல்லா துணியில்வைத்துத் திரிதிரித்து ஓர் தடையுள்ள கலயத்தில் ஜலத்தைவிட்டு இவ்வத்தியைப்போட்டுக்கொளுத்திவிட வெகு நன்றாக யெறியும்.

427. இதுவுமது

திருகுகள்ளிப்பாலில் சரியிடை கற்பூரஞ்சேர்த்து அரைத்து மெல்லிய சீலையில் தடவிக்காயவைத்து வத்தியாகத்திரித்துக்கொண்டு யாவரும் பார்க்க முன்மாதிரி கலயத்தில் ஜலம்வார்த்து கொளுத்த விளக்கைப்போலெறியும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்பட்டு இது அக்கினிதேவன் வசியமென்று சொல்வார்கள்.

428. நினைத்த குறி சொல்லும் வித்தை

புனுகு கோஷ்டம் பச்சைக்கற்பூரம் சந்தனம் இவைகளைச் சமன்சேர்த்தரைத்து செப்புத்தகட்டிற்குத் தடவி அதின்மேல் திரிகோணசக்கரமிட்டு அதனுள் ஸ்ரீங்காரமடைத்து ஓம் நமோ பகவதே ஓம் உக்கிரமாகாளி சாமுண்டியாயி வைரவி சாம்பவி யோங்காரி நிமலி மகாசத்திநம சுவாகா வென்று முக்காலமும் நேமநிட்டையுடன் தலைமுழுகி காகத்திற்கு அன்னமிட்டு ஒருவேளையுண்டு துணியிற்படுத்து சத்தியைப் பூசித்துவர ஒருமண்டலத்தில் சித்தியாகும் அதன்பிறகு யார் எதைக்கோறிவந்தார்களோ அதை அவர்கள் கோறினபடியே சொல்லலாம் சரியாயிருக்கும் ஆனால் இதற்கு புகைபிடிக்கக்கூடாது தாம்புலம் போடலாம். குறி சொல்லுகையில் இடதுகையை கன்னத்தில் வைத்துக்கொண்டு வலதுகையை நீட்டிக்கொண்டு குறி சொல்லவும் சரியாயிருக்கும்.

429. நெருப்பில்லாமல் கற்பூரமெரியும் வித்தை

தீமுருகல் பாஷாணத்தைக் கடுகளவு ஒருவருக்குந் தெரியாமல் நிகக்கண்ணிடுக்கில் வைத்துக்கொண்டு கற்புரத்தை அனைவர்களுக்குக் காட்டி இதை நெருப்பில்லாமல் கொளுத்துகிறேன் பாருங்களென்று கீழே வைத்து நிகத்திலிருக்கும் பாஷாணததை அதின்மேல் வைத்துக் குருவை நினைத்து வாயாலூத அது குபீரென்று பற்றி யெறியும்.

430. தவளை நெய் செய்யும் வித்தை

வேண்டுமோன பச்சைத் தவளைகளைக் கொண்டுவந்திடித்து கடாயில் போட்டு வறுத்து அதில் வரும் நெய்யை வழித்து வேறொரு பாண்டத்தில் விட்டுக்கொண்டு ஜாலக்காரனை நினைத்து அனேக ஜாலங்களை செய்யநலம்.

431. காய்ந்த மண்வெட்டியைக் கையிலெடுக்கும் வித்தை

கருமான் உலையில் காயும் மண்வெட்டியைக் கையால் எடுக்கின்றேன் பாருங்களென்று சொல்லி, மேற்படி நெய்யை கையில் தடவிக்கொண்டு எடுக்க அது சுடாது. பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

432 காய்ந்த இரும்புக்குண்டைப் பல்லாற கடித்து எடுக்கும் வித்தை

கருமான் உலையில் காயும் இரும்புக்குண்டை வெளியிலெடுத்து வைத்துக்கொண்டு முன் நெய்யை வாயில் ஊத்திக் குழப்பி குண்டைப் பல்லினல்

கடித்துத் தூக்க பல் சுடாது பார்ப்பவர்கள் சந்தோஷப்பட்டு அக்கினி தேவன் வசியமென்று சொல்வார்கள்.

433. காய்ந்த இரும்புக்கம்பியை வைக்கோலின்மேற் போட வைக்கோல் வேகாத வித்தை

நன்றாகக் காய்ந்த இரும்புக்கம்பியை நெய்யில் தோய்த்து வைக்கோலின்மேற் போட வைக்கோல் வேகாது அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

434, காய்ந்த இரும்பு சங்கிலியைக் கையால் உருவும் வித்தை

ஓர் இரும்புச் சங்கிலியை நன்றாகக் காயவைத்துக் குறடாவினால் தூக்கிப் பிடித்துக்கொண்டு கையை மேற்படி நெய்யில் தோய்த்து சங்கிலியைப் பிடித்து உருவ கை சுடாது. பார்ப்பவர்கள் ரொம்பவும் ஆச்சரியப்படுவார்கள்.

435. நெருப்பின்மேல் நடக்கும் வித்தை

தேவையான மட்டுங் கட்டைகளைப் போட்டுக் கொளுத்தி நெருப்பாக்கி அனைவர்களையும் பார்த்து இந்த நெருப்பின்மேல் நடக்கின்றேன் பாருங்களென்று சொல்லி முன் நெய்யைக் காலில் தடவிக்கொண்டு நெருப்பின்மேல் கூசாது நடக்க கால் சுடாது. அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்,

436. கசகசாவில் மீன் ஜனிக்கும் வித்தை

சூரியன் உதிக்காத முன் வலையில் படும் மீனின் சினையை எடுத்துப் பனியில் வைத்து சூரிய கிரஹணம் படாது நிழலிலுலர்த்தி 15 நாள் சென்று உதிர்த்து கசகசாவில் கலந்துவைத்துக்கொண்டு தேவையான போது அனைவர்களும் பார்க்க ஓர் போகணியில் ஜலம் வார்த்து கசகசாவைப் போட மீன்கள் உற்பத்தியாகி விளையாடும்.

437. இங்கி பவுடர் செய்யும் வித்தை

மாசிக்காய் அவுன்சு-5 காசிகட்டி அவுன்சு-1 அன்னபேதி அவுன்சு-2 கோந்து அவுன்சு அரை சேர்த்துத் தூளாக்கி வைத்துக்கொண்டு தேவையானபோது கொஞ்சமெடுத்துப் புட்டியில்போட்டு தண்ணீர் விட்டெழுத ரொம்பவும் நேர்த்தியாயிருக்கும்.

438. கோழிமுட்டை மேயும் வித்தை

கோழிமுட்டையைத் துவாரஞ் செய்து அதிலிருக்கும் அம்புலியையெடுத்துவிட்டு தண்ணீரிலிருக்கும் அட்டையை அதனுள் விட்டு துவாரந் தெரியாமல் மெல்லிய மெழுகு சீலையால் மூடிவிட்டு, ஜலத்தில் விட முட்டையானது கிறுகிறுவென்று சுழன்று ஜலத்தில் ஓடும். கண்டவர்கள் வியப்படைவார்கள்.

439. பாலு சர்க்கரையாகும் வித்தை

பெருந்துத்தி வேரை தயார் செய்துக்கொண்டு பாலை ஓர் பாத்திரத்தில் விட்டுக் காயும்போது அதை மேற்படி வேரினால் துழாவிக்கொண்டே வந்து சுண்டின பிறகு ஆறவைத்து ஓர் புட்டியில் விட்டு 4 நாள் பொறுத்துப் பார்க்க சக்கரையைப்போல கட்டி உதிரியாயிருக்கும் பார்ப்பவர்களுக்கு மணலைக் காட்டி மறைத்துவிட்டு இதைப் போட்டெடுத்துக் காட்டவும்.

440. மூலிகை வித்தை

வெள்ளிக்கிழமைய தினம் மிளகரணைச் செடிக்குக் காப்பு கட்டி பொங்கலிட்டுப் பலிகொடுத்து தூபதீபத்துடன் பிடுங்கிவந்துக் குளிசமாடி

பொன்தாய்த்துக்குள்போட்டுக் கட்டிக்கொள்ள சகலரும் வசியமாவார்கள். பெண்களும் வசியமாவார்கள்,

441. குருடனாகச் செய்யும் வித்தை

நீரட்டையும் அரசன் பாலும் சீலையில் வைத்துத் திரியாகத் திரித்து எதிரிகளுடைய வீட்டு விளக்கிற் போட்டுக் கொள்ள அவர்களுக்குக் கண்கள் கெட்டுப்போகும்.

442. வேறு ஜாலக்காள் வித்தை

மஞ்சள் கிழங்கில் பெண் பாவை செய்து ஆதிக்கொடி சமூலம் மேலே சுத்தி பூசை செய்து சாகினி டாகினி ஜாலக்காள் தேவி ராராவென்று லக்ஷமுரு செபிக்க சித்தியாகும் நாம் செய்யும் ஜாலமெல்லாம் தடையின்றி சித்தியாகும்.

443. முட்டையின்மேல் சித்திரமெழுதும் வித்தை

கோழிமுட்டையின் அம்புலியைப் போக்கிவிட்டு முன் கண்ணாடிக்குத் தடவ எழுதினதைப்போல் துவாரத்தை அடைத்துவிட்டு ஊசியால் எழுதி ஒயின் சாராயத்தில் மூணறை மணிநேரம் ஊறவைத்து ஜலத்திற்கழுவி சபையிலுள்ளவர்களுக்குக் காண்பிக்க ஆச்சரியப்படுவார்கள்.

444. முகங்கள் விகாரமடையும் வித்தை

ஒரு எனத்தில் ஸ்பிரிட் ஒயின் அரைபயிண்டு வாங்கி கொதிக்கவைத்து அதில் ஒருபிடி உப்பைப்போட 4 கையும் ஜொலிப்பு யெழும்பும் அப்போது அங்குள்ளவர்கள் முகத்தை மற்றவர்கள் பார்த்தால் ஒருவர் முகம் ஒருவருக்கு விகாரமாய்த்தோற்றும் அதை யெடுத்து மறைத்துவிட எப்போதும்போலிருக்கும்.

445. நீரில் தீபவொளிகாட்டும் வித்தை

ஒருசிறிய கிளாசில் ஜலம் விட்டு, அதிற்கொஞ்சம் பொட்டாஷியம்போட்டுக்காண்பித்தால் தீபத்தைப் போலபிரகாசிப்பதுமன்றி வீடுமுழுவதும் வெளிச்சமாயிருக்கும்.

446. புட்டிக்குள் முட்டையைக்காட்டும் வித்தை

கோழிமுட்டையை சீமைக்காடியில்மூன் றுநாள் ஊறவைத்தெடுக்க அது ஜவ்வைப்போல நிகளமாகவரும், அதைவெள்ளைக்கண்ணாடிப் புட்டிக்குள் விட்டு நல்லஜலம்வார்க்க எப்போதும் போல்முட்டையாய்விடும். அதைப் பார்ப்பவர்கள். புட்டிக்குள் முட்டை என்னமாய்புகுந்ததென்று ஆச்சரியப் படுவார்கள்.

447. எட் சணி வசிய வித்தை

ஊமத்தன் வேரின்தூள், மதிமயக்கத்தூள், திசைமயக்கிப்பொடி, பச் சோந்திப்பிச்[illegible]இவைகளைச்சமன்சேர்த்துக்கல்வத்திலிட்டு, ஐங்கோலத்தைலத்தால்மைபோலாட்டி,சிமிளில்வைத்துக்கொண்டு,மோகினியையும் ஜாலக்காளையும் தியானித்து, ஸ்ரீம் ஹ்ரீம், கிலியும், மாயமோகினிநம: என்று 21 நாள் திரிகாலமும் விடாது லட்சமுருசெபித்துவர சித்தியாகும்.

448. நல்லபாம்பு மேயும் வித்தை

நல்லபாம்பின் கொழும்பை துல்லியமானவஸ்திரத்தில் தடவி நிழலிலுலர்த்தி,திரியாக்கிஅகலில்போட்டுமுத்தெண்ணெய்விட்டு தீபமேற்ற,அவ்வெ

ளிச்சம் படுகிற இடமெல்லாம் நல்லபாம்புகள் மேயும் பார்ப்பவர்பயந்து ஆச்சரியப்படுவார்கள்.

449. துடப்பம் நீரில் நிர்க்கும் வித்தை

ஒருகனத்த துடப்பத்தின் அடியில் குண்டூசியை ஒருவருக்குந் தெரியாது நுழைத்துவிட்டு, ஒருதொட்டியில் ஜலம்விட்டு அதில் துடப்பத்தைப் போடசெங்குத்தாகநிற்கும், பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

450. சாணிவுருண்டை நீரில் மிதக்கும் வித்தை

பெருமனுகவுள்ளதக்கையைப் பந்துபோலசீவி, அதன்மேல்சாணியைப் பூசிவைத்துக்கொண்டிருந்து, வேறொருசாணிவுருண்டையை அனைவர்களுக்குங் காண்பித்துஅதைத்தந்திரமாகமறைத்துவிட்டு, மேற்படிவுருண்டையை ஜலத்தில் போடமிதக்கும். அதுஒருவருக்குந் தெரியாதிருக்கவேண்டும்.

451. தவளைகள் மேயும் வித்தை

ஆதிவாரத்தில் தவளைக்கொழுப்பை சல்லாதுணியில்திரட்டி காயவைத்துத் திரியாக்கி ஓர் அகலில் எண்ணெய்ஊற்றி இத்திரியைப்போட்டுத் தீபமேற்ற அத்தீபத்தின் வெளிச்சம் எவ்வளவுதூரம் தெரிகிறதோ அவ்வளவுதூரமும் தவளைகள் மேயுகிறதைப்போல் தெரியும்.

452. சாதம் வேகாத வித்தை

நிலவேம்பு வேரைச்சிறிய துண்டுகளாய் நறுக்கி அறிசிஅறிக்கும் போதாவது உலைப்பானையிலாவது போட்டு விட்டால் அவ்வரிசி மூன்று நாளைக் காணும் வேகாது, அவ்வேரையெடுத்துவிட்டு, வேறு உலைவார்த்து வைத்தால் தான் அரிசி வேகும்.

453. மனிதர்களுக்கு சிரமில்லாம ல்செய்யும் வித்தை

வெட்டுண்ட மனிதனுடைய சிரசைக்கொண்டுவந்து அதில்எலுப்பைத் தீவட்டியில் வைத்துச் சுருட்டி விளக்கெண்ணெய் வாத்து, தீவட்டியைக் கொளுத்தி, மேலே தூக்கிப்பிடிக்க. அங்குள்ளவர்கள் ஒருவரை ஒருவர் பார்க்கத்தலைமுண்டங்களாகத் தோற்றும் யாவரும் பயந்து தங்கள் தங்களுடைய தலைக ளிருக்கின்றதாயென்று தடவிப்பார்த்துக்கொள்வார்கள். இது ரொம்பவும் வேடிக்கையாய்யிருக்கும்.

454. நீரில் வெடிகிளம்பும் வித்தை

ஒருகோழிமுட்டை அம்புலியைப்போக்கி அதில் நிறைய தாளித்தகற் சுண்ணும்பும் கெந்தகமும் சமனுய் ஒவ்வொன்ருயரைத்துப் பிறகுஇரண்டையுங்கலந்துவந்து, முட்டைக்குள் செலுத்தி மெழுகால்வாயைமூடி, தவலை அல்லது மண்குடத்தில் நிறைய ஜலம்விட்டு அதில்மேற்படி முட்டையைப் போட்டுவைக்க வெடிசத்தங்கிளம்பும். இதையே குளங் குட்டைகளில் போட்டுவைத்தாலும் வெடிகிளம்பும்.

455. உலர்ந்த இராமேயும் வித்தை

கிளுவையிலை ரசத்தில் உலர்ந்த இரால்வைப்போட்டு ஊறவைத்து யெடுத்து குளங்குட்டைகளிற்போட உயிர் உள்ளதைப்போல் துடும், கிறுகிறு வென்று சுழலும் பார்ப்பவர்கள் ஆச்சரியப் படுவார்கள்.

456. குளத்தில் முழுகி விபூதி யிடும் வித்தை

கொடிக்கள்ளிப் பாலை திரேகமாதியந்தமும் பட்டை பட்டையாக விபூதியைப்போல் பூசிக்கொண்டு காய்ந்த பிறகு, அனைவர்களும் பார்க்கக்

நீளத்திலிறங்கி ஜந்துவிஷம் தண்ணீரிலிருந்து வெளிக்கிளம்ப பார்ப்பவர் குவதோமந்திரசக்தியினால் விபூதி இட்டுக்கொண்டு வந்ததாகநினைப்பார்கள்

457. விஷங்கள் முறியும் ஜாலம்

எட்டிமரத்தின்பேரில் படர்ந்திருக்கும் புல்லுருவியைக்கேட்டைநக்ஷத்திரமுஞ் செவ்வாய்க்கிழமையுங் கூடிய தினத்தில் கொண்டுவந்து சிறியாநங்கையின் சாறுவிட்டரைத்துக் குளிகைதிரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு விஷந்தீண்டிவந்தவர்களுக்கு ஓர்குளிகை வாயிலிட்டு ஓர் குளிகையில் பாதியை அவர்களின் சிறுநீர்விட்டுக் குழைத்துக் கடிவாயில் தடவ விஷம் நீங்கும்.

458. இதுவுமது

சூரிமரத்தின்பேரிலிருக்கும் புல்லுருவிக்குச் சாப நிவர்த்திசெய்து கன்னிநூல் காப்புகட்டி பொங்கல் பலி தூபதீபங்கொடுத்துக் கொண்டுவந்து கருவங்கப்பட்டையை நாவில் ஒருபாகஞ்சேர்த்து ஆடுதின்னாப்பாளை விட்டரைத்து துவரைபிரமாணங் குளிகைதிரட்டி வைத்துக்கொண்டு விஷக்காலிகளுக்கு ஓர் குளிகையை உள்ளுக்குக் கொடுத்து ஓர்குளிகையைச் சிறுநீரிலுரைத்துப்பூச விஷங்கள் அகலும்.

459. சூன்யங்கள் அகலும் ஜாலம்

வேம்பமரத்தின்பேரிலிருக்கும் புல்லுருவிச் செடிக்கு சித்திரை நக்ஷத்திரத்தில் காப்புகட்டி பொங்கல் பலி தூபதீபங்கொடுத்து கொண்டுவந்து அதனுடன் ஐங்காயஞ் சேர்த்து அரைத்து வைத்துக்கொண்டு தேவையானபோது அதை வெள்ளாட்டு மூத்திரத்திற் குழைத்து தெருவாயற்படியில் தெளித்துவைக்க பில்லி சூன்யம் ஏவல் முதலியவைகள் தீரும்.

490. சகலநோய்களும் விலகும் ஜாலம்.

பூவரசன் மரத்தின்மேலுள்ள புல்லுருவிச் செடிக்கு பூசநக்ஷத்திரமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் காப்புகட்டிக் கொண்டுவந்து அதனுடன் மிளகு சீரகம் பெருங்காயம்இம்மூன்றையுஞ் சமயெடை சேர்த்து எலுமிச்சம்பழச் சாறுவிட்டரைத்துக் குளிகைசெய்து வைத்துக்கொண்டு சகல நோய்களுக்கும் ஒவ்வோர் குளிகையைக் கொடுத்துக்கொண்டுவர சகல வியாதிகளும் விலகும்.

461. வழக்குகள் வெல்லும் ஜாலம்.

அத்திமரத்தின்பேரிலிருக்கும் புல்லிருவிச்செடிக்குக் காப்புகட்டி பொங்கலிட்டு எலுமிச்சங்கனி காவு கொடுத்து தூபதீபங்காட்டி கொண்டுவந்து அதனுடன் கோரோசனை குங்குமப்பூ கஸ்தூரி சேர்த்து மயிர்ச்சிகைப்பூண்டின் சாறுவிட்டரைத்து குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது வெள்ளெருக்கன் சாறுவிட்டுக்குழைத்து நெற்றியில் திலர்தமிட்டுக்கொண்டுபோக கெலிக்காதவழக்குகளெல்லாங் கெலிக்கும்.

462 பிரிவுசெய்யும் ஜாலம்.

எட்டிமரத்தின்பேரில் முளைத்திருக்கும் புல்லுருவிச்செடிக்குச் சாப நிவர்த்திசெய்து உயிர்கொடுத்து மஞ்சள்நூல் காப்புகட்டி கொண்டுவந்து உலர்த்திச் சூரணஞ்செய்து அதற்குச் சமன் வேப்பமரத்தின்பேரிலுள்ள காக்கைக்கூண்டைகொளுத்திய கரியும் சுடலைக்கரியுஞ்சேர்த்து வேப்பெண்ணெய்விட்டரைத்துப் பகைவர்களின்வாயற்படியில் தெளித்துவைக்க

அவ்வீட்டிலுள்ளவர்களைப் பிரிவு செய்து கலைத்துவிடும். அல்லது அதுகளை யெல்லாம் மாதச்சீலையில் வைத்துச் சுருட்டி பகைவர்களின் வாசற்படியில் புதைத்துவைக்க அவர்களை அவ்வூட்டைவிட்டு ஓட்டுவதோடு ஒருவர் மூகத்தில் ஒருவர் விழிக்காமல்படி கலைத்துவிடும்.

463. இதுவுமது

வேப்பமரத்தின்மேல் முளைத்திருக்கும் புல்லுருவிக்குச் சாபநிவர்த்தி செய்து கன்னிநூல்காப்புகட்டி அடுத்த ஞாயிற்றுக்கிழமை பக்ஷீமாரண வேளையில் இரட்டைஊமத்தங்காய் காவுகொடுத்துக்கொண்டு அதனுடன் தீட்டுசீலை சுடலைக்கரி இவைகளைச்சேர்த்து கொத்தான் சாறுவிட்டரைத்து பகையாளிகளின் பேரை ஓர் நறுக்கில்மாறி இதைத்தடவி தூமாதேவி மந்திரத்தை நூற்றியெட்டு செபித்து பகைவர்களின் வாசற்படியில் புதைத்து வைக்க பகைவர்களைப் பிரித்துவிடும்.

464. இதுவுமது

கருங்காலிமரத்தின்பேரில் முளைத்திருக்கும் புல்லுருவிச் செடிக்கு செவ்வாய்க்கிழமையுங் கேட்டை நக்ஷத்திரமுங் கூடியதினத்தில் காப்பு கட்டி பொங்கலிட்டு கறுப்புக்கோழி பலிகொடுத்து வந்துவிடவும் அடுத்த எட்டாநாளாகிய செவ்வாய்க்கிழமையதினம் சென்று அம்மூலிகைக்கு உயிர் கொடுத்து கைவிரல்களின் நகம்படாமல் கொண்டுவந்து அத்துடன் சுடலைக் கரி எதிரிகளின் காலடிமண் நண்டுக்குழிமண் சுடலைச்சாம்பல் இதுகளைச் சேர்த்து வேப்பெண்ணெய்விட்டரைத்து ஓர் சிறிய குடுவையில் எதிரிகளின் மூத்திரக்குழியின்மண்ணைப் போட்டு அதன்பேரில் இதைப்போட்டு அவர்களின் வாயற்படியில் புயைத்து வைக்க அவர்களுக்குத் தீராத வியாதி சம்பவிப்பதுடன் அவர்களை வீட்டைவிட்டு ஒட்டிவிடும்.

465. இதுவுமது.

காட்டாத்திமரத்தின்பேரிலிருக்கும் புல்லுருவியை சித்திரை நக்ஷத்திரமுஞ் செவ்வாய்க்கிழமையுங்கூடிய தினத்தில் காப்புகட்டி பொங்கல் பலி தூபதீபங்கொடுத்துக் கொண்டுவந்து சாறுபிழிந்து சட்டியிற்றடவி அதின பேரில் சந்தனத்தை விஷ்ணுகிரந்தியின் சாற்றில் குழைத்து தடவிக் காய்ந்தபிறகு அதின்பேரில் கஸ்தூரிமஞ்சளை வெள்ளெருக்கன் சாறுவிட்டரைத்துப்பூசி காய்ந்தபிறகு காராவின் நெய்யை அதின்பேரில் பூசி ஓர் அகலில் நெருப்பைப்போட்டு அதின்பேரில் சாம்பிராணியைப் புகைத்து அப்புகையைச் சட்டியில் பிடித்தபிறகு புத்துத்தேனைத் தடவி கற்பூர புகைபிடித்து வழித்துச் சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது திலர்தமிட்டுச் செல்ல பகையாளிகளும் வலிய உறவாடி வசியமாவார்கள்.

466. இராஜவசிய ஜாலம்.

வில்வமரத்தின்பேரிலிருக்கும் புல்லுருவியை விசாக நக்ஷத்திரத்தில் சாபநிவர்த்தி செய்து காப்புகட்டி பொங்கல் பலி தீபதூபங்கொடுத்து இரும்பாலாகிய ஆயுதங்கள் படாமலும் கைவிரல் நகங்கள் படாமலும் பக்குவமாகக் கொண்டுவந்து நிழலிலுலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ்செய்து அதற்குச்சரியெடை கஸ்தூரி குங்குமம் சந்தனம் பச்சைக்கற்பூரம் இவைகளைச்சேர்த்து விஷ்ணுகிரந்தியின் சாறும் நாயுருவிச்சாறும் விட்டரைத்து மாத்திரைகளாகத்திரட்டி நிழலிலுலாத்திவைத்துக்கொண்டு தேவையான போது காராவின்நெய்யில்குழைத்துத்திலர்தமிட்டுச்செல்லஇராஜவசியமாம்.

467. புருஷ வசியம்.

பாதிரிமரத்தில் படர்ந்திருக்கும் புல்லுருவிச் செடிக்கு சித்திரை நக்ஷத்திரமுஞ் சோமவாரமுங் கூடியதினத்தில் காப்புகட்டி தீபதூபங்கொடுத்துக் கொண்டுவந்து உலர்த்திப் பொடியாக்கி வஸ்திரகாயஞ்செய்து அதன்சமன் சந்தனஞ்சேர்ந்து வெள்ளெருக்கன்சாறு விட்டரைத்து மாத்திரைத்திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது காராவின் நெய்யில் குழைத்துத் திலர்தமிட புருடவசியமாகும்.

468. ஸ்திரீ வசியம்.

இலவன்மரத்தின்பேரில் படர்ந்திருக்கும் புல்லுருவிச் செடிக்குச் சாப நிவர்த்தி செய்து மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு மற்றுநாள் காலே செவ்வாய்க்கிழமையதினஞ்சென்று எலுமிச்சங்கனி காவுகொடுத்து இரும்பாயுதம் படாமல் கொண்டுவந்து உலர்த்தி பொடித்து வஸ்திரகாயஞ் செய்து கஸ்தூரி காந்தம் குங்குமப் சவ்வாது சந்தனஞ்சேர்த்துப் பசும்பால் விட்டரைத்து மாத்திரைகள் திரட்டி வைத்துக்கொண்டு தேவையான போது பொன்னுங்கண்ணியின் சாற்றில் குழைத்து திலர்த்தமிட்டு செல்ல ஸ்திரீவசியமாகும்.

469. இதுவுமது

தான்றிமரத்தின் பேரிலிருக்கும் புல்லுருவிச்செடிக்கு ஆதிவாரமும் சுவாதிநக்ஷத்திரமுங் கூடியதினத்தில் காப்பு கட்டி சாபநிவர்த்தி செய்து கொண்டுவந்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள ஸ்திரீவசியமாகும். அதைப் பொங்கல் பலி தீபதூபங்கொடுத்து கொண்டுவந்து நிழலிலுலர்த்தி பொடித்து வஸ்திரகாசஞ்செய்து அத்துடன் கோரோசனையும் சந்தனமுஞ் சேர்த்து தொழுகண்ணிச்சாறுவிட்டரைத்து குளிகைதிரட்டி வைத்துக் கொண்டு தேவையானபோது பேய்க்கருப்பன்சாற்றில்குழைத்துத் திலர்தமிட ஸ்திரீவசியமாகும். நன்னாரிச்சாற்றில் குழைத்து திலர்தமிட புருஷவசியமாகும். அதைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள வியாபாரவசியமாகும்.

470. இதுவுமது

கடுக்காய்மரத்தின்பேரிலிருக்கும் புல்லுருவிச் செடிக்குச் சாபநிவர்த்தி செய்து கன்னிநூல் காப்புகட்டி பொங்கலிட்டு எலுமிச்சங்கனி காவு கொடுத்து குலதேவதையும் குருவையும் மனதில் தியானித்து இரும்பாலாகிய ஆயுதங்கள் படாமலும் கைவிரல்களின் நகங்கள் படாமலுங் கொண்டுவந்து நிழலிலுலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்து எடுத்துக்கொண்டு அதற்குச் சமனெடை கஸ்தூரி குங்குமப்பூ கோரோசனம் இந்நான்கையுஞ் சேர்த்து பசும்பால்விட்டரைத்துக்கொண்டு தேவையானபோது சிதேவி செங்கழுநீர் சாற்றிலிழைத்துத் திலர்தமிட இராஜவசியமும் நன்னாரிச்சாற்றில் புருஷவசியமும் நில்வூமத்தைச் சாற்றில் ஸ்ரீவசியமும் வெள்ளெருக்கன் சாற்றில் திரிலோகவசியமும் நாகமல்லிற்சாற்றில் தெய்வவசியமும் நாயுருவிச் சாற்றில் ஜெகவசியமும் வெள்ளை விஷ்ணுகிரந்திச் சாற்றில் சகலவசியங்களும் வெள்ளைக்குண்டுமணிச்செடியின் சாற்றில் மிருக வசியமும் மயிர்ச்சிகைப் பூண்டின் சாற்றில் குழைத்திட சகலவசியமுஞ் செய்யும் இன்னும் இப்புல்லுவிச்செடியில் அநேககாரியங்களும் கைகூடும் அதுகளெல்லாம் தொழிலாளிகளுக்கு நாம் சொல்லாமலே உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல் தெரியும் ஆனால் ஒவ்வொரு தடவையும் சாபநிவர்த்தி செய்து காப்புகட்டவேண்டும் இல்லாவிடில் பலிதமாகாது.

471. சீட்டு சுழலும் ஜாதம்

காகிதத் துண்டுகளைச் சதுரமாகக் கத்தரித்து பலபேரிடமுங் கொடுத்து ஒன்றை மாத்திரம் நீ கையில் வைத்துக்கொண்டு அவர்களைப் பார்த்து நான் இச்சீட்டில் ஓர் மந்திரத்தை யெழுதி இந்தக் கிணற்றிள் போடுகிறேன் அது சுழலும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி எதாகிலும் ஓர் மந்திரத்தை அச்சீட்டில் யெழுதி அதற்கிரண்டு பக்கமும் காதுகுரும்பியைத் தடவி கிணற்றில்போட அச்சீட்டானது கிறுகிறென்று சுழலும் மற்ற பேர்களின் சீட்டானது சுழலாது அப்படியே இருக்கும்.

472. பேய்கள் ஆடும் ஜாலம்

சொரியாங் தவளையைப் பிடித்து அதின் வாயில் நுழையும்படியான பளிங்கு சாம்பிராணியைத் திருத்தி பின்னங்கால்களைத் தூக்கி மேலே கட்டிவிட்டு நாற்பது நாள் சென்றெடுத்து அதனுடன் தலைமஞ்சங் கொடியைச் சேர்த்து ஓம் என்று சொல்லிக்கொண்டே நெருப்பிலிட்டுப் புகைக்க எப்பேர்ப்பட்ட சண்டி முனியாயிருந்தாலும் அப்புகை பட்ட மாத்திரத்தில் ஓடிப்போகும்.

473. இதுவுமது

சுடுகாட்டெலும்பு கழுதை தந்தம் மாதர் குளிச்சீலை மனிதர் மலம் பன்றி யெலும்பு வெள்ளைக்காக்கட்டான் வேர், சீந்தில் தண்டு குப்பை மேனி இவைகள் வகையொன்றுக்கு ஒரு பலமாக யெடுத்துத் தூளாக்கி அதின் பாதியளவு விரட்டி தூளைச்சேர்த்து நெருபபிலிட்டுப் புகைக்க அப்புகை பட்ட மாத்திரம் பேய் பிசாசு ஜின் முதலிய கொடிய பூதங்களெல்லாம் ஓடிப்போகுமென்று என் குருசுவாமியினுடைய பொற்பாத கமலங்களைத் தொழுது யானுகிய தேவேந்திரநாத் சொல்லுகிறேன்.

474. தேள் கடியிரங்கும் ஜாலம்

கிராணம் பிடித்திருக்கும்போது ஓர் ஆண் கெச்சக்காயைத் துளை செய்து அதிலிருக்கும் பருப்பை யெடுத்துவிட்டு கள்ளிக்காக்கை நாக்கு உடும்புநாக்கு கீழாநெல்லிவேர் இவைகளை வகைக்கு விராகனெடைக்காலாக அதற்குள் செலுத்தி கொசுகின் மெழுகால் மூடிவைத்துக்கொண்டு தேள் கொட்டிவந்தவர்கள் கையில் கொடுத்து அதை இன்னொருவர் கையில் கொடுக்க வாங்கினவர்களுக்கு விஷமானது அவர்களைவிட்டு இவர்களை பற்றும். இப்படி எத்தனை பேர்கள் கையில் கொடுக்கின்ருேமோ அத்தனை பேர்களும் விஷத்தால் துடிப்பார்கள். பிறகு காயைக் கீழே போட்டால் விஷமிறங்கிவிடும்.

475. வியாதிகளைப் போக்கும் ஜாலம்

எந்த நேரமும் விடாது தொந்தரை செய்துக்கொண்டிருக்கும் வியாதியஸ்தர்களுக்கு சுவாமி ஆணை போவென்று பஞ்சாக்ஷாத்தைத் தியானித்துக் கொடுக்க வியாதி நீங்கி சுகமடைவார்கள்.

476. மாஞ்செடி முளைக்கும் ஜாலம்

எமுஞ்சி விதையை பூந்தயிலம் வாங்கி அதில் ஐங்கோலத் தைலத்தைச் சரியிடை கலந்து மரத்திலேயே கனிந்த ஒரு மாங்கொட்டையை நன்ருக யுலர்த்தி மேற்படி தைலத்தில் ஒரு நாள் ஊறவைத்து எடுத்து காயவைத்து மறுபடியும் ஊரவைத்துக் காயவைத்து இம்மாதிரி மூன்று விசை

செய்து காயவைத்தக் கொட்டைய்யை ஜாலமாடும் சபையில் பல பேர்களுக்குங் காட்டி நான் இக்கொட்டையைச் செடியாகச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி பூமியில் மண்ணைத்தோண்டிக் கொட்டையைப் புதைத்து மண்ணை மூடி ஜலந்தெளித்து மறுபடியும் திறந்து ஜலந்தெளித்து மூடி இம்மாதிரி நான்கு விசை மூடி மூடித்திறந்து காண்பிக்க செடி முளைந்து இலை, பூ, காய்களுடன் தென்படும். பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

477. பல்லுதிரும் ஜாலம்

உக்கானைப் பிடித்து பகைவனுடைய தம்பலத்தை அதின் வாயில் செலுத்தி அவன் பேரை யெழுதிக் கருவைச் சேர்த்து அவனுடைய வாசலில் புதைத்துவைக்க நாற்பது நாளைக்குள்ளாக அவனுடைய பற்களெல்லாம் உதிர்ந்துவிடும்.

478. தீவட்டி ஜாலம்

திகைப்பூண்டு பொடியை ஐங்கோலத் தைலத்தாலரைத்து சீலையில் தடவி வெட்டுண் டிறந்துபோனவனுடைய மாமிசத்தையுஞ் சேர்த்து தீவட்டியாகச் சுற்றி வைத்துக்கொண்டு ஜாலமாடுஞ் சபையில் பல பேர்களும் நிறைந்திருக்கும்போது கொளுத்த அவ்வெளிச்சம் பட்ட யாவர்களும் தலையில்லாத முண்டங்களாகவே தென்படுவார்கள்.

479 இதுவுமது

வெட்டுண்டிறந்துபோனவனுடைய தலையெலும்பைக் கொண்டுவந்து தீவட்டியில் வைத்துச் சுருட்டி ஐங்கோலந் தடவிக்கொளுத்த அவ்வெளிச்சம் பட்ட யாவர்களும் தலையில்லா முண்டங்களாகத் தோற்றப்பட்டு ஒருவர்க்கொருவர் தங்கள் தங்களுடைய தலைகளைத் தடவிப் பார்த்துக்கொள்ளுவார்கள் இது ரொம்பவும் வேடிக்கையாயிருக்கும்.

480. செம்பின்மீது நடக்கும் ஜாலம்

ஓர் விபூதிப்பையில் கள்ள அறை வைத்து தைத்து ஒரு அறையில் விபூதியும் ஒரு அறையில் வேலன் பிசினித் தூளும் வைத்துக்கொண்டு சபையில் இரண்டு செம்புகளைக் கொண்டுவந்து வைத்து சபையோர்களைப் பார்த்து நான் இந்த செம்பின்பேரில் ஆதாரமில்லாது நடந்து காட்டுகிறேன் பாருங்களென்று சொல்லி, கண்ணை மூடிக்கொண்டு மந்திரஞ் செபித்து பையிலிருக்கும் பிசினித்தூளை விபூதி போடுகிறபாவனையாக செம்பைக் கவிழ்த்து அதின்பேரில் தூவிக் கால்களைக் கழுவிக்கொண்டு பயபக்தியுடன் கொஞ்ச யீரம் காலில் இருக்கும்போதே செம்பின்பேரில் கால்களை வைத்து அரக்கப் பிசினியானது நன்றாக வொட்டிக்கொள்ளும். அது சமயம் சுவாமியை தியானித்துக்கொண்டே நடக்க யாவரும் ஆச்சரியப்படுவார்கள்.

481. மோடி எடுக்கும் ஜாலம்

சிறிய படிகாரத்துண்டொன்றை ஓர் கல்லின்மீது வைத்து அதின் பேரில் ஓர் நாணயத்தை வைத்து நெருப்பைக் காட்ட படிகாரமானது உருவி நாணயத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும். அந்த சமயம் சபையில் ஒருவரை அனுப்பி அந்நாணயத்தை எடுத்துவரச் சொல்ல அவர்கள் கைக்கு அது வராது அந்த சமயம் நீ கை கால்களை சுத்தி செய்துக்கொண்டு கடவுளைத் துதித்து ஈரக்கையுடன் அந்நாணயத்தை யெடுக்கக் கையோடே வந்துவிடும் சபையிலிருப்பவர்களும் நீ என்னமோ மந்திரஞ் செய்தாயென்று நினைத்துக்கொள்வார்கள்.

482. தீவட்டி குதிக்கும் ஜாலம்

ஓர் சிறிய விரால் குட்டியைப் பிடித்து அதன் தலையிலிருந்து வால் வரைக்கும் துணிக்கர்தையைச் சுருட்டி சபையில் கொண்டுவந்து அனைவர்களுக்குங் காட்டி அதை எண்ணெயில் நனைத்துக் கொளுத்தி கீழே வைக்க அது எகிரி எகிரி குதிக்கும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

483. பேயாடும் ஜாலம்

வயநமசி என்கிற பீஜாக்ஷரத்தின் உட்கருத்தை குரு முகாந்தரமாகத் தெரிந்துக்கொண்டு பின்னர் வெட்பாலை பலகையின்பேரில் அறுகோண சக்கரங் கீறி முருகக் கடவுளைத் தியானித்து எழுபத்தோராயிரம் உரு செபித்தால் அடங்காத கொடிய பேய்களாயிருந்தாலும் இருந்த விடந் தெரியாதோடிவிடும்.

484. இதுவுமது

அரை உளுந்தளவு அபினியை வெற்றிலையில் வைத்துத் தெரியாமல் உள்ளுக்கேற்றிவிட்டால் சற்று நேரத்திற்குள்ளாக எப்பேர்ப்பட்ட பேய், பூதமாயிருந்தாலும் ஊர் பேர் முதலியதைச் சொல்லி முடி கொடுத்துவிட்டு ஓடிப்போய்விடும்.

485. கண் கேடும் ஜாலம்

அட்டை அரசமரத்துப்பால் இவைகளைச் சீலையில் வைத்துத் திரியாக்கி எதிரியின் வீட்டு விளக்கில் போட்டு முப்பத்திரண்டு நாள் எரிக்க அவனுடைய கண்கள் குருடாகிப்போம்.

486 மோடி வைக்கும் ஜாலம்

சிதம்பர சக்கரத்தைக்கீறி அதில் முறைபிசகாது அக்ஷரங்களை அடைத்து ஓம் ஸ்ரீம் கிலிம் அவ்வும் உவ்வும் சவ்வும் நமசிவய சுவஹாவென்று லக்ஷமுருசெபித்து நேமநிஷ்டையுடன் பூசித்து சோடச தானமுஞ் செய்து பெரியோர்களின் பாதத்தையும் குருவின் பாதத்தையுந் தொழுது வணங்கினால் கொடியவியாதிகளும் பேய்பூதமுதலிய கணங்களும்விலகிவிடும் அதன் பிறகு ஓர்பெரிய மைதானத்தில் மோடிவைக்கும்விதம் எப்படியென்றால்:— ஓர் பச்சைப்பந்தலைப்போட்டு அதற்குள் கலச ஸ்தாபனஞ்செய்து எட்டி முளைக்குக்கருவைத்தடவி திக்குபந்தனஞ்செய்து அதன்பிறகு கலசத்திற்கெதிரில் உலக்கையைநாட்டி உலக்கைக்கு முன் ஒரு தேங்காயும் தேங்காய்க்குமுன் குறடாவும், குறடாவுக்குமுன் பாதரக்ஷையும், பாதரக்ஷக்கு முன் விளக்குமாறும், அதற்குமுன் வாழைமரமும் நாட்டி பந்தலுக்குமாவிலைத்தோரணமும் பூமாலையுஞ்சுட்டி திரைகட்டிக் காளியைந்தியானித்து பூசைபலி முதலியவைகளை விசேஷமாகச்செய்து கலசத்திற்குமுன் எழு கோடுகிழித்து திரையை யெடுத்துவிட மோடி எடுப்பவன் வெகு தடபுடலாகவருவான். அப்போது கக்கு கக்கு காளி துர்க்கி அரி உம் ஓம் என்று செபித்துக்கொண்டே கண் கட்டுமையைக் கையில் தடவிக்கொண்டு வேப்பிலையயுருவி அவன்முன்போட அவைகள் அநேகந்தேள்களாகி அவனைக் கொட்டி இம்சைப்படுத்தும் பிறகு ரங் ரங் சூலியென்று செபிக்க அவன் தேகம் எரிச்சலாகி ஓடிவிடுவான் மறுபடியும் அவன் சமாளித்துக்கொண்டு வருவானுகில் வறி வறி மறி சண்டாளி அம் அம் அம் என்று சொல்லி தியானித்து விபூதியைப்போட அவன் கீழே விழுந்து புரளுவான் மறுபடியும் அவன் கோபத்துடன் பலவித திக்கு பந்தனங்களைச் செய்துக்கொண்டு வீராவேசத்துடன் வருவான் அப்போது அம் அம் ரீம் ஓம் என்று செபித்து

வேப்பிலை மண் உளுந்து அரிசி இவைகளை ஓதிப்போட அவன் உதைத்துக் கொண்டு கீழே விழுந்து புரளுவான் வாயிலும் உதிரங்கக்குவான் இவை யெல்லாமும் சமாளித்துக்கொண்டு மறுபடியுமெழுந்து விருதுகூறி வெகு ரோஷத்துடன் ஆங்காரங்கொண்டு வருவான் அச்சமயம் காளியை தியானித்து அக்ஷதையை அவன்மேல் போட அங்கிருக்கும் ஆயுதங்களாகிய உலக்கை முதலானதுகளெல்லாங் கிளம்பி அவன்மேல் விழுந்து சாடும் அப்போது காளியைத்தியானித்தால் அவைகளெல்லாம் எப்போதும்போல் சாந்தமாகி இருப்பிடத்தில் வந்துசேரும்.

487. பேய விலகும் ஜாலம்

அப்பைக்கிழங்கு பேயத்திவேர் பேயாலன்வேர் ஊமத்தன்விரை இவைகளை வகையொன்றுக்குப் பலமொன்றாக எடுத்து நிழலிலுலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ்செய்து பிறகு காளைமாட்டின் சாணியைக் கொளுத்தின சாம்பலைத்தெள்ளி மேற்படி தூளுடன்கலந்து கையிருப்பாக வைத்துக்கொண்டு பேய்பிடித்தவர்கள் எப்படியிருக்கினும் அப்படியே கொண்டுவந்து ஸ்தானமில்லாமலேயே உட்காரவைத்து மேற்படி தூளைக்கையிலெடுத்துக்கொண்டு மந்திரஞ்செபிப்பதைப்போல் மொணமொணவென்று உதட்டையசைத்துக் கொண்டே தூளைச்சிரசில்போட அவர்கள் தலைசுற்றியாடுவதல்லாமல் தன்னுடைய பிறப்புவளர்ப்புகளையெல்லாம் கோர்வையாக சொல்லும் அப்போது அதினுடைய வாய்ப்பிறப்பைக்கேட்டு முடியறுத்துக்கொண்டு ஓட்டிவிடவும்.

488. முடமாக்கும் ஜாலம்

காட்டுமுருக்கமரத்தினால் எதிரியைப்போல ஓர் பதுமைசெய்து அதன் வயற்றில் மூஞ்சூரின் பக்களலும்பும் மலமும் ரோமமும் வைத்து எதிரியின் பெயரை ஓர் நறுக்கிலெழுதிவைத்து அரிசிமாவினால் பதுமையின் வயற்றை மூடி பிறருக்குத்தெரியாமல் பைரவ மந்திரத்தைச்செபித்து பதுமையில் வைத்திருக்கும் எலும்பையெடுத்து எதிரியின் அங்கத்தில் எவ்விடத்திற்குத் துகிறேமோ அவ்விடமானது பிடிப்புநோய் வந்ததைப்போன்று பிடித்துக் கொள்ளும் எதிரியானவன் ரொம்பவும் அவஸ்தைப்படுவான் அந்தசமயம் நீதான் செய்தாயென்று தெரிந்துக்கொண்டு எதிரியானவன் வணங்கி வருவானாகில் பதுமையை எடுத்துக்கழுவிவிட்டு குத்தியிருக்கும் முள்ளைப்பிடுங்கிவிட எதிரி சொஸ்தமடைவான். இதை என்குருவாகிய போகருடைய கிருபையினால் யானாகிய தேவேந்திரநாத் சொல்லுகின்றேன்.

489. பாம்பின் வேடிக்கை ஜாலம்

ஓர் முத்தினதேங்காய்க்குள் ஒரு பச்சைப்பாம்பைப்போட்டு வாயையடைத்துப் புதைத்துவைத்து ஒருமண்டலஞ்சென்றெடுத்துப்பார்க்க தேங்காயும் பாம்புமூழுகி எண்ணெயும் எலும்புமாகயிருக்கும் அதை யெடுத்து எலும்பு முதலியதைத்தள்ளிவிட்டு எண்ணெயைமாத்திரமெடுத்துக்கொண்டு ஏதாகிலும் விசேஷதினத்தில் தமாஷாக ஓர் அகலில் மேற்படி எண்ணெயைவிட்டு திரிபோட்டுக்கொளுத்த அவ்வெளிச்சம் எவ்வளவுதூரம் பரவுகின்றதோ அவ்வளவு தூரமும் பச்சைப்பாம்பாகவே மேயும் பார்ப்பவர்களெல்லாம் பயந்து ஓடுவார்கள் அச்சமயம் அவர்களுக்கு தைரியஞ்சொல்லி நான் இப்பாம்புகளையெல்லாம் என்னுடைய மந்திர சக்தியினால் ஓட்டிவிடுகிறேன் பாருங்களென்றுசொல்லி விளக்கையணைத்து வேறு விளக்கேற்றிவைக்க பாம்புகளெல்லாம் மாயமாகும்.

490. இதுவுமது

இலுப்பக்கொட்டையில் பச்சைப்பாம்பைப் போட்டு எண்ணெயாடி வைத்துக்கொண்டு தேவையானபோது முன்போல் கொளுத்திக்காட்ட பாம்புகள் மேயும்.

491. மாரண ஜாலம்

மாரணச்சக்கிரத்தில் எதிரியின் நீரும் மலமும் காலடிமண்ணுஞ் சேகரித்துக்கருவுடன் பேரையெழுதி அரவத்தின்வாயிலடைத்து தலைகீழாகத் தூக்கிக்கட்டி வேப்பன் எண்ணெயால் தெற்குமுகமா யிருந்துக்கொண்டு மசி நசி என்று தினமொன்றுக்கு ஆயிரத்தெட்டுரு செபிக்க எதிரிமாரணமாவான்.

492. பேதன ஜாலம்

இரட்டை ஊமத்தங்காயைப் பிளந்து அதில் எதிரியின் காலடிமண்ணை வைத்துப்பரப்பி அவன்பேரை யெழுதி மற்றொருபிளப்பை அதின்பேரில் வைத்து நூலினால் மேற்படி இருபிளப்புகளையும் கட்டி பேதனமந்திரத்தைச் செபித்து அவனிருக்கும் ஊரைச்சுற்றி மயானத்திற்கு கொண்டுபோய் கருவைக்கூட்டி புதைத்துவிடவும் உடனே அவனுக்குப் பயித்தியம்தோன்றி ஊரூராக அலைந்து கண்டவர்களையெல்லாம் சண்டைக்கிழுத்துக்கொண்டு அலைவான்.

493. இதுவுமது

சதுரமான வேங்கைப்பலகைக்கு ஒணான்தோலையுரித்துக்கட்டி பேதனசக்கரத்தைப் போட்டு சலாகையினால் சக்கரத்தைச்சுற்றி உள்ளேபதிந்து அடைக்க எதிரிகளெல்லாம் புத்திமயங்கித் தவிப்பார்கள்.

494. இதற்கு சாந்திசெய்யும் ஜாலம்

எதிரியானவன் நீதான் செய்தாயென்று தெரிந்துக்கொண்டு உன்னை வந்து வணங்கினாலுஞ்சரி அல்லது அவனுடைய பந்துமித்திரர்கள் வந்து வணங்கினாலுஞ்சரி நீ முன் செய்ததையெல்லாம் எடுத்து ஆற்றில் கழுவிப் போட எப்போதும்போல சுகமடைவான்.

495. வித்து வேஷண ஜாலம்

வேப்பமரக்காக்கை கூண்டு கழுதைச்சடை அறுத்த தாலிக்கயர் அறுந்துபோன பஞ்சுகொட்டுநரம்பு பன்றிமயிர் பயித்தியக்காரன்நகம் பயித்தியக்காரன்சீலை சலாயனவிறகு இவைகளையெல்லாஞ் சேகரித்துக்கொண்டு முச்சந்தி கூடுமிடத்தில் அடுப்புவைத்து அவ்வடுப்பில் முன் சேகரித்தவைகளையெல்லாம் போட்டு தெற்குமுகமாக நின்றுக்கொண்டு நிர்வாணத்துடன் எரித்து அவைகளெல்லாம் சாம்பலானபிறகு அச்சாம்பலின்மேல் அறுகோணம்போட்டு அதன் நடுவில் தூமசி என்று நாட்டி தூம் தூம் சீ சீ ஓம்நசிமசி என்று ஆயிரத்தியெட்டுவிசை செபித்து எதிரியின் பெயரை நாகலில் எழுதி அச்சாம்பலில் வைத்து மூடி மறைவாக அவனுடைய வீட்டிறப்பில் சொருகிவிட அதை அவன் தாண்டினால் இருவரும் பிரிவார்கள்.

496. மாரண ஜாலம்

பஞ்சுகொட்டுநரம்பு பன்றியெலும்பு பன்றிமயிர் சுடுகாட்டுச்சாம்பல் உடும்புதலை நாய்ப்பல்லு இவைகளைசசேகரித்து எட்டிமரத்தினால் மாடனைப் போல் உருவஞ்செய்து புதியகலசத்தில் போட்டு முன்சேகரித்ததையுங்

கூடப்போட்டு மாடனை மதுமாங்கிஷ பக்ஷணத்துடன் துதிக்க எதிரிமாரணமாவான் அவன் வணங்கி வரும்பக்ஷத்தில் அதுகளையெல்லாம் எடுத்து ஓடுகிற ஜலத்தில் போட்டுக்கழுவிவிட சுகமாகும்.

497. அஷ்ட கர்ம ஜாலம்

தலைமஞ்சங்கொடியில் மாவைப்பூசி உலரவைத்து முப்பூ ரவிபீஜம் மதிபீஜம் இவைகளைச் சேர்த்துத் தைலம்வாங்கி இறீம் கிலீம் ஓம் என்று சொல்லி லக்ஷ்முருசெபிக்கச் சித்தியாகும் இதனால் அஷ்டகர்மமுமாடலாம் ஆகையால் இதைக் குருமுகாந்தரமாகத் தெரிந்து செய்வதேநல்லது.

498. பாதாளமை ஜாலம்

காந்தம், நீலம், ஊமையன் கையின் மஞ்சள், தேவடியாளின்கையிலுண்ண வெற்றிலை, செங்கழுநீரின்வேர் தலை மஞ்சம்மாவு, கோரோசனை, குங்குப்பூ இவைகள் வகையொன்றுக்கு விராகனெடை 1-பொடித்துக்கல்வத்தில்போட்டு, மாடப்புராவின் இரத்தத்தைவிட்டு அரைக்கும் போது சிகப்புநெய் 12 விராகனெடைசேர்த்துப் பதினைந்து ஜாமமரைத்து வழித்து ஓர் செப்புச்சிமிளில்வைத்து காளிகோயிலின் முன்புதைத்து எட்டு நாளானபிறகெடுத்து சவ்வாது, புனுகு வகைக்கு விராகனெடை ஒன்று சேர்த்துக் குழைத்து மறுபடியும் காளி முன்வைத்து ஓம் சர்வலோக வசீகரீ, கிரீம், ஓம் என்று ஆயிரத்தியெட்டுரு செபித்து திலர்தமிடக்கண்ட ஸ்திரீ புருஷர்களெல்லாம் நீ கேட்டதைக்கொடுத்து வணங்குவார்களென்று என்குருநாதரின் அனுக்கிரகத்தினால் யானுகிய வேந்திரநாத் சொல்லுகின்றேன்.

499. இதுவுமது

வேர்ப்பலாக்கொட்டையை நெருப்பிலிட்டுக் கருக்கின அள் பலம் பத்தில் அஞ்சனக்கல் ஒரு விராகனெடை போட்டு விளக்கெண்ணெய் வார்த்தரைத்து மை போலானவுடன் சிமிளில் வைத்துக்கொண்டு முன்மாதிரி காளியைத் தியானித்து பூசைகள்செய்தபிறகு வெற்றிலையில் தடவிப்பார்க்க பூமியிலுள்ள எல்லாப்பொருள்களும் பிரத்தியக்ஷமாகத்தோன்றும். முன்மாதிரியே இதையும் காளிகோயிலின்முன்பாக ஒருவாரம் புதைக்கவும்.

500. நெருப்புண்டாக்கும் ஜாலம்

கடுகளவு சீமுறுகல் பாஷாணத்தை உதட்டிநோரத்தில் வைத்துக் கொண்டு ஜாலமாடு மிடத்தில் வைக்கோலைப்போட்டு அனைவர்களும் பார்க்க இவ்வைக்கோலைக் கொளுத்தி விடுகிறேனென்று சொல்லி காற்றுவாட்டமாக நின்று உதட்டிலிருக்கும் பாஷாணமானது வைக்கோலின் மேல் விழும்படியாக வாயினாலூத வைக்கோல் குபீரென்று பற்றியெரியும் பார்த்தவர்கள் ஆச்சரியப்பட்டு உனக்கு அக்கினி தேவன் வசியமென்று சொல்லுவார்கள்.

501. நெல்லைப்பொறியாக்கும் ஜாலம்

சுண்ணாம்புக்காளவாய் கொளுத்தாதமுன் ஒருபடிநெல்லை காளவாயின் அடியில் புதைத்துவிட்டு, காளவாய் கொளுத்தியவுடன் அதையெடுத்து பத்திரப்படுத்திக்கொண்டு, ஜாலமாகும் சபையில் சனங்களைப்பார்த்து இந்த பச்சை நெல்லை நெருப்பில்லாமல் பொறியாகப் பொறிக்கின்றேன் பாருங்களென்றுசொல்லி ஓர்முறத்தில் கொஞ்சம் நெல்லைப்போட்டு, மந்திரஞ்சொல்லிக்கொண்டே ஜலந் தெளித்துப் பிரட்ட நெல்லானது பள பளவென்று பொறியாகப் பொறியும், பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

502. சோளத்தைப்பொறிக்கும் ஜாலம்

முன்மாதிரியே சோளத்தையும் சுண்ணாம்புக்காளவாய் கொளுத்தாத முன் புதைத்து வைத்துவிட்டுக் காளவாய் கொளுத்தியபின் அதையெடுத்து வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையிலிருக்கும் ஜனங்களைப்பார்த்து இச் சோளத்தை நெருப்பில்லாமல் பொறித்துக் காட்டுகிறேன் பாருங்களென்று சொல்லி முன்போலமுறத்தில் கொஞ்சம் சோளத்தைப்போட்டு, ஓம் காளி, ஓங்காரகாளி, ஐயும், கிலியும், சௌவும் சீக்கிரம் ஓடிவந்து இந்த சோளத்தைப் பொரியாகச் செய்வாயென்று சொல்லிக்கொண்டே தண்ணிதெளித்துப் பிரட்ட சோளமானது பள பளவென்று பொரியும். பார்ப்பவர்கள் உனக்கு அக்கினி தேவன் வசியமென்று சொல்லுவார்கள். ஆனால் ஒவ்வொரு வேலைகளையும் தந்திரமாகவும், சாமார்த்தியமாகவும், சமயத்திற்கு தக்கபடி நடித்துக்காட்டினால் தான் நம்புவார்களென்று உலகோர்களுக்கு என் குருநாதருடையஅருளினால் யானாகிய தேவேந்திரநாத்சொல்லுகிறேன்.

503. கெட்டப்பாரையை விழுங்கும் ஜாலம்

ஓர் கெட்டப்பாரைக்கு மையைத்தடவி சபையோர் களுக்குக்காட்டி இதை விழுங்கி விடுகிறேன் பாருங்களென்றுசொல்லி வாய்க்கு நேர்வைத்து ஜாலக்காளைத்தியானித்துப் பின்புறத்தில் விட்டுவிட பார்ப்பவர்கள் நீகெட்டப்பாரையை விழுங்கி விட்டாயென்றே நினைப்பார்கள்.

504. பட்டணங்கள் தோன்றும் ஜாலம்

ஒருவருங்காணமல்படி இரவு வந்தவுடன் ஊருக்கு வெளியிற் சென்று மையை எடுத்துக் கையிற் பூசிக்கொண்டு மண்ணையள்ளி திசைகளிற்போட யாவர் கண்களுக்கும் ஓர் பெரியபட்டணமாகக் காணப்படுவதுமன்றி வீதிகள், கடைகள், கோயில்கள், குளங்கள் முதலியதுக ளெல்லாங் காணப்படும். யாவரும் சந்தோஷப்படுவார்கள்.

505. ஜனங்கள் ஆடும் ஜாலம்

ஓர் கொடியிலாகிலும், சிறிய கொம்பிலாகிலும், ஜங்கோலத்தையும், சாம்பிராணியையுங் கலந்தரைத்துப்பூசி ந-ம-சி-வ ய ஓம்-கிலீம்-சவ்வும்-ஐயும்-சர்வபசாசு ஆக்ருஷ்ணிஎன்று லக்ஷுருசெபித்துக்கொண்டே நெருப்பில் சாம்பிராணியைப் போட்டுப் புகைக்க அப்புகைப்பட்ட ஜனங்களெல்லாம் ஆடுவார்கள்.

506. கோகர்ண ஜாலம்

ஓம், சவ்வும், உவ்வும், மவ்வும், ஸ்ரீம், இரீம், கிலியும், வயநமசி, ஓம் குறளி வருவாய் வந்து நான் நினைத்த காரியங்களைச் செய்வாய் தாயேயென்று பயபத்தியுடன் லக்ஷுருசெபித்து பலி, பூசைகள்முதலியதை பலமாகச்செய்து மையைவிரலிற்றெட்டு குறளியைத் தியானித்துக்கொண்டே நினைத்த விடத்தில்தொட அவ்விடங்களெல்லாம் பத்தல் பத்தலாகக்கிழியுமென்று என் குருநாதராகிய போகமுனிவரின் கிருபாநோக்கத்தால் யானாகிய தேவேந்திரநாத் சொல்லுகின்றேன்.

507. கேஜகர்ன ஜாலம்

மேற்படி மையை விரலிற் றெட்டுக்கொண்டு குறளியைத்தியானித்து உன்னுடைய காதுகளைத்தொடுவாயானால் உடனே இரண்டு காதுகளும் ஆடுவதைப்போன்று பார்ப்பவர் கண்களுக்குத்தோன்றும்.

508. காளி வசிய ஜாலம்

அரிகாளி, சூலகபாலகாளி, மோடிதேவி, பூமிகாளி, ஓம் காளி, ஓம் பிடாரி, மாகாளி. மோடிகாளி, மந்திரமாகாளி, ஓம், ஆம், கோதண்டரூபி, ஆளிவாகனத்திலேறி சபையோர்கள் மெச்ச இருபக்கமும் குடை, கொடி, சாமரம், பிண்டி, பாலம், 'முதலிய ஆயுதங்களைப்பிடித்துக்கொண்டு வேதாளங்கள்சூழ ஆங்காரசத்திகொண்டு வருவாயென்று லக்ஷமுருசெபித்துஅன்னதானஞ்செய்து பிறகுவெள்ளிக்கிழமைதோறும் பூசித்துவரசித்தியாவாள்.

509. செப்பிடு வித்தை ஜாலம்

செம்பருத்திப் பஞ்சினல் ஐந்து பந்து செய்து, அம்மரத்தினலேயே பந்தடிக்குங்கோல் ஒன்றுசெய்து வைத்துக்கொண்டு சபையில் வந்துக்காளியைத் தியானித்து முன் மையைக் கொஞ்சமெடுத்து பந்துக்களுக்குத்தடவி கோலைக்கொண்டு பந்துகளைத் தட்டி விளையாடினல் பார்ப்பவர்களின்கண்களுக்கு அநேகம் பந்துகள் விளையாடுவதைப்போன்று தெரியும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

510. பார்வைமையின் ஜாலம்

ஆமை-1 சொரியாந்தவளை-1 முதல்யிடும் கோழிமுட்டை-1 தலசன் பிள்ளையைப் புதைத்த பிணத்தின் எலும்பு-2 பலம், புத்தீசல்-2 பலம், நிலவாகைவிரை-2 பலம், மாக்கொடி-3 விராகனெடை இவைகளையெல்லாம் ஓர்பாண்டத்தில் போட்டுக் குழித்தைலம்வாங்கி அத்தைலத்தைக் கல்வத்திவிட்டு அதில் ஒரு விராகனெடை அஞ்சனக்கல்லைப்போட்டு ஆள்காட்டிப் பக்ஷிபின்கடுவைவிட்டு-1 சாமம் மைபோலரைத்து எடுத்து ஓர் செப்புச் சிமிளில் வைத்துக்கொண்டு ஆஞ்சநேயரையும், அஞ்சனதேவியையும் பூசித்து, அன்னதானஞ்செய்து பயபக்தியுடன் வெற்றிலையில் ஓர்குண்டுமணிப் பிரமாணந்தடவிப்பார்க்க களவு, ஏவல், பில்லி, சூன்யம், பூதப்பசாசுகளெல்லாந்தெரியும், கைகண்டது இதனல் நல்ல கீர்த்தியும், பேரும் பிரதிஷ்டையும் உண்டாகும்.

511. பச்சைப் பாம்பாகும் ஜாலம்

ஓர் பச்சைப் பாம்பைக் கொன்று அதின் வாயில் ஆமணக்கன் கொட்டையை ஒன்றின்பின்ஒன்றாய் செலுத்தி பூமியில் புதைத்துவிட்டால் அது சில நாளைக்குள் செடியாகிக் காய் காய்க்கும் அக்காய்களை அறுத்து உலரவைத்து எண்ணெயாடி வைத்துக்கொண்டு தேவையானபோது தமாஷாக அந்த எண்ணெயையூற்றி விளக்கேற்றி வைக்க வீடெல்லாம் பச்சைப் பாம்புகளாகத் தெரியும். பார்த்தவர்களெல்லாம் பயந்து ஓட்டம் பிடிப்பார்கள் விளக்கை அணைத்துவிட ஒன்றுமிருக்காது.

512. இதுவுமது

பச்சைப்பாம்பின் கொழுப்பை எடுத்து உருக்கி வைத்துக்கொண்டு தமாஷாக எதேனும் பிரயோசன காலங்களில் பலபேர்களும் நிறைந்திருக்குஞ் சபையில் ஓர் அகலில் திரிபோட்டு மேற்படி நெய்யையூற்றி விளக்கேற்ற அவ்வெளிச்சம் எவ்வளவு தூரம் தெரிகிறதோ அவ்வளவு தூரமும் பச்சைப் பாம்பாகவே உலாவும். பார்த்தவர்களெல்லாம் பயப்படுவார்கள். விளக்கை அணைத்துவிட பாம்புகள் மறையும்.

513. தவளைகள் மேயும் ஜாலம்

தவளைகளைப் பிடித்து கொழுப்பை யெடுத்து உருக்கி வைத்துக்கொண்டு வேண்டுமானபோது ஓர் அகலில் கொஞ்சம் விட்டு திரிபோட்டுக்

கொளுத்த வீடெல்லாம் தவளைகளாக மேயும் விளக்கை அணைத்துவிட மறையும். இதுமாதிரி இன்னும் எவ்வளவோ முறைகளையெல்லாம் செய்து சந்தோஷிக்கலாம். ஆனால் குருவருளும், தெய்வபக்தியும் புத்தி சாதுரியமும் வேண்டுமென்று என் குருசுவாமியினுடைய அருளினால் யானாகிய தேவேந்திரநாத் சொல்லுகின்றேன்.

514. மணலை மெல்லும் ஜாலம்

குண்டுமணியிலையை மென்று வாயெல்லாம் நன்றாகப் படும்படிக் குதப்பி தாடையில் அடக்கிக்கொண்டு எவ்வளவு மணலையேனும் சவிப்பில்லாது மென்று துப்பிவிடலாம்.

515. ஜாலக்காள் வசிய ஜாலம்

முத்தித் தேரின ஓர் மஞ்சள் கிழங்கில் பெண்ணைப்போல உருவமைத்து அதின்மேல் சித்திரமூலக் கொடியைச் சுற்றி சத்தி பூசையுடன் ஜாகினி டாகினி ஜாலக்காள் ரா ரா ரா என்று எட்டு நாள் விடாது தினமொன்றுக்கு லக்ஷமுரு செபித்துவர ஜாலக்காள் வசியமாகி சதா உன்னுடன் விளையாடிக்கொண்டிருப்பாள்.

516. கண்கட்டு மை ஜாலம்

ஓர் ஊர்க்குருவியின் வாயில் பத்து குன்றியிடை பாதரசமும் கால் கழஞ்சு சங்கு பாஷாணமுஞ் சேர்த்து அடைத்து வாயையும் அபான வாயையுந் தைத்துவிட்டு ஒரு குடுவையில் போட்டு கலப்பில்லாத தென்னங்கள்ளை வார்த்து மூடி ஒரு மரத்து விரகினாலெரித்து எட்டிலொரு பாகம் நீர்சுண்டிய பின்னெடுத்து அஸ்தி ரோம முதலியவைகளைப் போக்கி கல்வத்திலிட்டு பேய்க்கறுப்பஞ் சாற்றால் மைபோலரைத்து வெண்மையாகிய சலவைத்துணியில் தடவி நிழலிலுலர்த்திக் காய்ந்தபிறகு திரியாகத் திரித்து தலைமண்டையோட்டில் ஐங்கோலத் தைலம் வார்த்து மேற்படி திரியைப்போட்டுக் கொளுத்தி மை வாங்கி அம்மையை சிமினில் வைத்துக் கொண்டு எட்டு நாள் விடாது அந்திசந்தி ஜாலக்காளைத் துதித்து வேண்டுமான வித்தைகளை விளையாடிக்கொள்ளவும்.

517. பாம்பாகும் ஜாலம்

கண்கட்டு மையை வைச்கோலில் தடவி ஜாலக்காளைத் தியானித்துப் பாம்பாகவேணுமென்று நினைத்துக் கீழே போட பார்ப்பவர் கண்களுக்குப் பாம்பாகத் தோன்றும்.

518. குளவியாகும் ஜாலம்

புளியன் இலைக்குக் கண்கட்டு மையைத் தடவி குளவியாகவேண்டுமென்று ஜாலக்காளைத் தியானித்துக் கீழே போட பார்ப்பவர் கண்களுக்கு குளவிகளாகத் தோன்றும்.

519. வஸ்திரத்தைக் கொளுத்திக்காட்டும் ஜாலம்

ஜாலமாடும் சபைக்கு வருமுன்னமே அசல் சாராயத்தைத் தயார் செய்துவைத்துக்கொண்டு பின்பு சபையிலிருப்பவர்களிடத்தில் ஓர் கைக்குட்டையை வாங்கி இதைக் கொளுத்தி பின்னமில்லாது காட்டுகிறேன் பாருங்கள் என்று சொல்லி மேற்படி சாராயத்தில் நனைத்துக் கொளுத்திவிட்டு காளியைத் தியானித்துக்கொண்டே யிருக்க பார்ப்பவர்களெல்லாம் குட்டை அக்கினிக்கிரையாகி விட்டதென்றே நினைப்பார்கள். நீ

மாத்திரம் ஜாக்கிரதையாகக் குட்டையை அவித்து எடுத்துக்காட்ட குட்டை பின்னமில்லாதிருக்கும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

520. முள்ளின்பேரில் உட்காரும் வித்தை

ஆதிவாரம் அமிர்தயோகத்தில் ரத்தன்புரூஸ் என்னும் செடிக்கும் செப்புநெருஞ்சிச் செடிக்கும் சாபநிவர்த்தி செய்து காப்பு கட்டி வேர் அறு மல் பிடுங்கிவந்து பொன்தாயத்தில் தலைமாற்றி அடைத்து பூசையில்வைத்து பயபக்தியுடன் நமசிவய என்று ஆயிரத்தெட்டு மந்திரமோதி எடுத்து வாயி லடக்கி வைத்துக்கொண்டு முள்ளின்மீது உட்கார முள் தைக்காது.

521. பந்தங்கொளுத்தி வாயில் வைக்கும் ஜாலம்

இரண்டு குடைக்கம்பியில் நெல்லிக்காயளவு பந்தஞ் சுற்றி எண்ணெ யில் துவைத்து வைத்துக்கொண்டு சபையிலுள்ளவர்களைப் பார்த்து இப்பந் தத்தைக் கொளுத்தி வாயில் வைத்துக்கொள்ளுகிறேன் பாருங்களென்று சொல்லி ஒருவருக்குந் தெரியாமல் ஆலாத்திக கற்பூரத்தைக கொஞ்சம் வாயில் போட்டு மென்று வாயெல்லாம் படும்படியாகக குதப்பிக்கொண்டு பந்தத்தைக் கொளுத்தி இரண்டு கையிலும் பிடித்துக்கொண்டு ஒன்றை மாத்தி ஒன்றை வாயில் வைத்துக்காட்ட வாய் சுடாது பார்ப்பவர்களும் நீ அக்கினியைக் கட்டிவிட்டாயென்று சொல்லிக்கொள்ளுவார்கள்.

522. ஓட்டமாக வோடும் ஜாலம்

விழுதியிலையைக் கொஞ்சம் வாயில் போட்டு மென்று தாடையில் அடக்கிக்கொண்டு எவ்வளவு தூரமானாலும் அலுப்பில்லாது ஓடலாம் நிற்க வேண்டுமாகில் ஏதாகிலும் ஓர் மரத்தை பிடித்துக்கொண்டு தான் நிற்க வேண்டும்.

523. வாட்டிலோடு மெல்லும் ஜாலம்

நாயுருவியிலையை வாயில் போட்டு மென்று நன்றாகக் குழப்பி அடக் கிக்கொண்டு எவ்வளவு வாட்டிலோட்டையேனும் முருக்கைப்போல் தாரா ளமாக மென்று துப்பிவிடலாம். வாயறுக்காது. தூள் உள்ளே போயி ருக்குமென்று சந்தேகமிருக்கும் பக்ஷத்தில் சுடசுட கொஞ்சம் களியை யேனும் சாதத்தையேனும் பிசைந்து மூன்று உருண்டை விழுங்கவும்.

524. கண்களில் மண்ணைக் கொட்டிக்கொள்ளும் ஜாலம்

நத்தைச்சூரி செடிக்கு சாபநிவர்த்தி செய்து காப்புகட்டி பொங்கல், பலி தூபதீபமிட்டு ஆணிவேரறுமல் பிடுங்கிவந்து நறுக்கி ஓர் துண்டை வாயில் போட்டு மென்று தாடையில் அடக்கின பிறகு எவ்வளவு மண்ணை யேனும் கண்களில் கொட்டிக்கொள்ளலாம். கண்ணறுகாது.

525. கரைத்த மஞ்சளை எடுக்கும் ஜாலம்

அரைத்த மஞ்சளை ஜலத்தில் கரைத்துவிட்டு சபையிலிருப்பவர்களுக் குக் காட்டி இதிலிருக்கும் மஞ்சளையெல்லாம் என் மந்திரத்தினால் மறுபடி யும் எடுத்துக் காட்டுகிறேன் பாருங்களென்று சொல்லி நீர்முள்ளி விதைத் தூளை விபூதியில் கலந்து தெரியாது வைத்திருந்து அதில் ஒரு சிட்டிக்கை தூளை எடுத்து மேற்படி ஜலத்தில் போட்டு கையைவிட்டுத் துழாவியெடுக்க மஞ்சளெல்லாம் உருண்டையாகத் திரண்டு கையில் வந்துவிடும். இவ்வித் தையைப் பார்ப்பவர்கள் உனக்குக் கங்காபவானி வசியமென்று சொல்லிக் கொள்ளுவார்கள்.

526. கெச்சக்காய் சண்டை ஜாலம்.

கொஞ்சம் கெச்சக்காயைக்கொண்டுவந்து சபையில் கொட்டி இதுகள் சண்டைசெய்யும் விநோதத்தைப் பாருங்களென்றுசொல்லி கொஞ்சம கண் கட்டுமையைத்தடவி கீழேபோட அதுகள்ஒன்றோடொன்றுதாக்கி சண்டைகள் போடுகிறமாதிரி தோன்றும்.

527. கூழாங்கல் சண்டை ஜாலம்.

முன்போல கூழாங்கல்லுக்கு மையைத்தடவிப்போட அதுகளும் சண்டைபோடுகிறமாதிரி எகிரி எகிரி குதிக்கும் பார்ப்பவர்களுக்கு இதுமஹா வேடிக்கையாயிருக்கும் ஆனால் ஒவ்வொரு வேலைகளுக்கும் ஜாலக்காரனை மாத்திரம் மனதினிடமாகத் தியானிக்கவேண்டும்.

528. புட்டிகளை அறுக்கும் ஜாலம்.

காட்டுமுறுக்கிலைச் சாற்றில் பால்திரட்டு நூலை ஊரவைத்து நன்று, யுலர்த்திக்கொண்டு எந்தபுட்டியையேனும் தாராளமாக அறுக்கலாம்.

529. குட்டை குடைபிடிக்கும் ஜாலம்.

கருவிழுதி யிலைக்குச் சாபநிவர்த்தி செய்து காப்புகட்டி பொங்கல் பலி அபதீபங்கொடுத்து ஆணிவேரறாமல் பிடுங்கிவந்து அவ்வேரை சவுக்கத்தின் ஓர் மூலையில் முடிந்து மேலேயெறிய அது குடையைப்போல் நிழலைக் கொடுத்துக்கொண்டுவரும பார்ப்பவர்களெல்லாம் உன்னை மஹா யோகி யென்று மெச்சிக்கொள்ளுவார்கள்.

530. எலுமிச்சமபழ ஜாலம்.

கழுதைகள் ஒன்றோடொன்று சேரும்போது அவைகளின் வால்மயிரைத் தனித்தனியாக கத்தரித்து ஒன்றோடொன்று சேராமல் தனித்தனியே மோதிரம்போல் சுற்றி ஐங்காயம்பூசி தங்கத்தகட்டை மேலேசுற்றி வலதுகைவிரலில் ஆண்மயிர் மோதிரமும் இடதுகைவிரலில் பெண்மயிர் மோதிரமும் போட்டுக்கொண்டு எலுமிச்சம்பழத்தை துவாரஞ்செய்து அதனுள் பாதரசத்தைவிட்டு வாய்தெரியாமல் வெள்ளை மெழுகை மூடி மூடின வாய்தெரியாமல் அரிதாரம் பூசி வைத்துக்கொண்டு பிறகு சபையோர்களைப் பார்த்து இந்த எலுமிச்சமபழத்தை ஆகாயத்திலெறிகிறேன் அது அந்தரமாக நிற்கும் வேடிக்கையைப பாருஙகளெனறு சொலலி இடதுகையைக் கீழேதொங்கவிட்டு மூடிக்கொணடு வலதுகையினால் எலுமிசசமபழத்தை ஆகாயத்தில் விட்டெறிய அது கீழேவிழாமல ஆகாயததிலேயே நிற்கும் பிறகு சல க்ஷணம் கனியைக் கீழேம்பாவென்று சொல்லி ஜாலக்காரனை நினைத்து இடதுகையைத் தூக்கி கனிக்குநேர் காட்ட கனியானது கீழே விழும்

531. இரும்புக்கம்பியை உடைக்கும் ஜாலம்.

ஓர் இரும்புக்கம்பியை வாழைமரத்தில் சொருகிவைத்து எடுத்துக் கொண்டு அதைச்சபையில்வந்து கொண்டுஒடிக்க ஒடிந்துவிடும்.

532. சங்கிலி ஜாலம்.

இரும்புச் சங்கிலியை கருமான் உலைக்களத்தில் நன்றாகக் காயவைத்து பழுத்தவுடன் அதைக் குறடாவினால் பிடித்துக்கொண்டு தவளைநெய்யில் கையை தோய்த்து சங்கிலியை யுருவ சங்கிலிபற்றி யெறியுமேயொழிய கை

சுடாது பார்ப்பவர்களும் நீ அக்கினியைக் கட்டிவிட்டாயென்று சொல்லு வார்கள்.

533. நெருப்புசட்டியை ஏந்தும் ஜாலம்.

ஓர் கட்டியில் நெருப்பைக்கொட்டி அது கனகனவென்று யிருக்கும் போது தவளை நெய்யைக் கையில் பூசிக்கொண்டு சட்டியைக் கையில் வைத் துக்கொள்ள கைசுடாது.

534. இதுவுமது

ஒரு சட்டியில் பாதிஅளவுக்கு சாம்பலைக்கொட்டி அதின்மேல் கொஞ் சம் நெருப்பைப்போட்டு அதுபுகைகிறசமயம்|கையில்தூக்கி வைத்துக்கொ ண்டு அங்காளயீஸ்வரியைப்போல் வளையங்களையும் நூல்கயறுகளையும் கழு த்தில் மாட்டிக்கொண்டு மஞ்சள் குங்குமம் பொட்டும் பார்ப்பவர்கள் மனது பீதியடையுமாறு வேஷம்போட்டுக்கொண்டு வருவார்கள் இதுவும் ஓர் வித் தையே.

535. பானைகள் உடையும் ஜாலம்.

வெள்வேலன் பட்டைக்குக் கருச்சிலையைச்சுற்றி பூசித்து காளிகோயி லின்முன்பாக புதைத்துவைக்க பானைகளெல்லாம் உடைந்துவிடும் இது அனுபோகமுறையானதால் குருவின் முகாந்திரமாய் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

536. சண்டைகள் நடக்கும் ஜாலம்.

ஈசஞ்செடியின் கீழிருக்கும் காக்கைப்பூண்டும் குரங்குமூலிகையையுஞ் சேகரித்து ஒன்றை ஒருகடையிலும் மற்றொன்றைஒருகடையிலும்தெரியாது வைத்துவிட அண்ணன்தம்பியாயிருந்தாலும் தகப்பன்பிள்ளையாயிருந்தாலும் சண்டைபிடித்துக்கொளுள்வார்கள் அதையெடுத்துவிட்டால்தான் சமாதா னப்படுவார்கள்.

537. இரும்புகுண்டு அந்தரமாக நிற்கு ஜாலம்.

ஆதிவாரமும், கும்பலக்கினமும், சுவாதி நக்ஷத்திரமுங் கூடியதினத் தில் நத்தைச்சூறி செடிக்கு சாபநிவர்த்தி செய்து காப்புகட்டி மறு ஆதிவார தினத்தில் பொங்கல் பலி தூபதீபத்துடன் வேரைக்கொண்டுவந்து குளிச மாடி பொன்னுற்செய்தகடயத்தில் போட்டு வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் சனங்களைப்பார்த்து ஓர் இரும்பு ருண்டை கையிலெடுத்து இந்த இரும்புக்குண்டை ஆகாயத்திலெறிகிறேன் அது அந்தரமாக நிற்கும் வேடிக் கையைப்பாருங்களென்று சொல்லி அனைவர்களும்பார்க்கும்போதே குண் டை ஆகாயத்திலெறிந்து கடயத்தை பூமிமட்டத்திற்குத் தாழ்த்திப்பிடிக்க குண்டு ஆகாயத்திலேயே நிற்கும் பார்ப்பவர்களும் அதிசயிப்பார்கள் மறுபடி யும் கடயத்தை மேலே தூக்கிக்காண்பிக்க குண்டு கீழேவிழும் ஆனல் வேரைமாத்திரம் இரும்புபடாமல் பூமிமட்டத்திற்குத் தரித்துவிட்டு கடயத் திலடைக்கவும்.

438. எக்ஷணி வசிய ஜாலம்.

பச்சோந்திப்பிச்சு திசைமயக்குப்பொடி மதிமயக்குத்தூள் இம்மூன்றை யும் ஐங்கோலத்தாலரைத்து மோகினியையும் ஜாலக்காளையுந் துதித்தப் பூசைகள் செய்து மையை யெடுத்து மோகினியை நினைத்து மாயமோகினி நமஹாவென்று திலர்தமிட்டுச்செல்ல பார்ப்பவர்களின் கண்ணுக்கு நீ ஒரு வாலிபப்பெண்ணைப்போலே தோற்றப்படுவாய் உன்னைக்கண்ட புருஷர்க ளெல்லீம் புத்திதடுமாறி என்னகேட்டாலுங்கொடுத்து உனக்குப் பணி

விடை செய்வார்கள் நீ சமயம்பார்த்துப் பொட்டைக் கலைத்துவிட எப்போதும்போல் மனிதனைகத்தோன்றுவாய் அதுசமயம் முன்மோகித்தவர்களெல்லாம் ஏங்கி உன்னைக் காணுது வருந்துவார்கள்.

539. ஜலத்தை அல்வாசெய்யும் ஜாலம்.

கட்டுக்கொடியைச் சம்பாதித்து சூரணஞ்செய்து வைத்துக்கொண்டு ஜாலமாடுஞ் சபையில ஜனங்களைப்பார்த்து நான் இந்தஜலத்தை அல்வாயாயாகச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி சர்க்கரையில் தெரியாதுமேற்படி தூளைக்கலந்து நீரில்கொட்டிக்கிளரி மூடி வாயைமூடிக்கொண்டு மொண மொணவென்று மந்திரஞ்செபித்துத் திரந்துகாண்பிக்க அது அல்வாயைப்போல் கட்டிக்கொண்டு அதையெடுத்து அறுத்து சனங்களுக்கு தின்னக்கொடுக்கலாம் அவர்களும் உன்மந்திரத்திற்கு மெச்சுவார்கள் இவ்வேலையை இப்போதும் சிலர் சிலஇடங்களில் செய்து காண்பிப்பார்கள்.

540. காசுகள் உண்டாகும் வித்தை.

பானைஓடுகளை வட்டவடிவாகக் காசுகள்போல் நறுக்கிவைத்துக்கொண்டு ஜாலமாடுஞ்சபையில் ஜனங்களைப்பார்த்து இவ்வோடுகளைக் காசுகளாகச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத் தடவி மூடித் திறந்துகாண்பிக்கப் பொற்காசுகளாகத் தெரியும் அனைவரும் சந்தோஷப்படுவார்கள்.

541. அம்மி நடக்கும் ஜாலம்.

ஜாலமாடுஞ்சபையில் ஓர் அம்மியைக்கொண்டுவந்து இது நகர்ந்துபோகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத் தடவ அது பார்ப்பவர்களின் கண்ணுக்கு நகர்ந்துபோகிறமாதிரியே தெரியும் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

542. கிணற்றில் புழுக்கள்மேயும் ஜாலம்

கொஞ்சம் கற்பூரத்தை நகச்சந்துகளில் இடுக்கி வைத்துக்கொண்டு ஓர் தாம்பாளத்தில் விபூதியைப்போட்டு அறுகோணங்கீறி மந்திரம்செபிப்பதுபோல் நடித்து கையில் அடக்கிவைத்திருக்கும் கற்பூரத்தைக்கொஞ்சம் விபூதியுடன் கலந்து கிணற்றில்போட அது புழுக்களைப்போல மாறி மாறி நெளியும்.

543. ஒருபசு இரண்டுவிதமான பால்கறக்கும் ஜாலம்

சித்திரமூலவேரை அரைத்து பசுவின் ஒருபக்கம் கொம்பிற்குத்தடவி ஆறவிட்டு சபையில் கொண்டுவந்து நிறுத்தி பால்கறக்க வேர் பூசியபக்கம் இரத்தமாகவும் வேர்பூசாதபக்கம் சாதாரணமாகவும் கறக்கும் பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள் அப்போது பசுவை மறைவாகக்கொண்டுபோய் கொம்பைக்கழுவிவிட்டுக்கொண்டுவந்து கறக்க சாதாரணமாகவே கறக்கும்.

544. பாம்புகள் உற்பத்தியாகும் ஜாலம்

கன்னிகழியாத இறந்தப்பிணத்தின் வாயில் இரும்பாணியும் மார்பில் வெள்ளி ஆணியும் உந்தியில் செப்பாணியுமாக அடித்து மறுநாள் காடாற்றுமுன் எடுத்துவந்து கொல்லனிடத்தில் கொடுத்து ஒற்றைக்கணுவுள்ள பிரம்பிற்கு இரும்பை ஒருமுனையிலும் செம்பை ஒருமுனையிலும் வெள்ளியை நடுக்கட்டுமாக பூண்கட்டிட்டு ஐங்கோலம்பூசி பூசையில்வைத்து ஜாலக்காளைதியானித்து வைத்துக்கொண்டு சபையில் ஜாலமாகும்போது ஓர்பெட்டி

யைக்கொண்டுவந்து சபைநடுவில்வைத்து சனங்களைப்பார்த்து இப்பெட்டியிலிருந்து பாம்புகள்வரும்வேடிக்கையைப் பாருங்களென்றுசொல்லி செம்புப்பூணிருக்கிறபக்கம் பெட்டியைத்தட்ட கணக்கில்லாத சர்ப்பங்கள்புறப்படும் மறுபடியும் இரும்புப்பூணிருக்கின்ற பக்கம் பிரம்பைத்தட்டிக்காண்பிக்க சர்ப்பங்களெல்லாம் மாயமாய்ப்போகும் சனங்களும் மெச்சுவார்கள்.

545. வியாதியுண்டாகும் ஜாலம்

ஓர் மூஞ்சூரைப்பிடித்து அதன் வயற்றிலிருக்கும் குடல் முதலியவைகளைப்போக்கி எதிரியின் நீரையும் மலத்தையும் அதில்நிரப்பி பஞ்சுகொட்டுங்கயற்றினால் நன்றாக வரிந்துகட்டி ஒருமண்டலம்வரைக்கும் ஓம் நமோ பகவதி காளி ஓம் மோகினியென்று லக்ஷமுருசெபிக்க எதிரியானவன் பல வியாதிகளுக்கும் ஆளாகுவான்.

546. சுமையெடுக்கும் ஜாலம்

கிராணம்பிடித்து விடுகிறதற்குள்ளாக சுமைதாங்கிச்செடிக்குக்காப்பு கட்டி பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து ஆணிவேரராமல் பிடுங்கிக்குளிசமாடி சிரசில்வைத்துக்கொண்டு எவ்வளவு பாரத்தையேனும் சுலபமாக சுமக்கலாம் பளுவுதோன்றாது சுமைதாங்கிசெடியென்பது கொஞ்சியைப்போல நாடுகளில் எங்கும் விசேஷமாகயிருக்கும் அதைக்கண்டுபிடித்து வேரைப் பிடுங்கிச்சுருட்டி அதின்மேல் ஒரு பெரியகல்லை வைத்தால் கல்லானது அப்புறம் நகர்ந்துவிடும் அதுதான் அச்செடிக்குப்பரிக்ஷை.

547. இருட்டில் சூரியனைக் காட்டும் ஜாலம்

ஓர் வீட்டின் சுவற்றில் நீருருகல் பாஷாணத்தைக்கொண்டு சூரியனைப் போலெழுதிவைத்துவிட்டு இருட்டானவுடன் ஜனங்களை வரவழைத்து நான் என்னுடைய மந்திரசக்தியினால் இவ்வீட்டில் சூரியனைவரவழைக்கின்றேன் பாருங்களென்றுசொல்லி தந்திரமாகக் கொஞ்சம் கற்பூரத்தைக் கொளுத்தி தட்டில் வைத்துக்கொண்டு மந்திரம் செபிக்கும் பாவனையாக மொண மொணவென்று வாயை அசைத்துக்கொண்டே கதவைத்திறக்க கற்பூரவெளிச்சத்தினால் அங்கு ஒன்றுமில்லாதிருக்கும் சற்றுநேரமானவுடன் கற்பூரம் நின்றுவிட சுவற்றிலிருக்குஞ் சூரியனானவன் குபீரென்று தெரிவான் பார்ப்பவர்களும் உன்னை மகா மந்திரவாதியென்று மெச்சிக் கொண்டாடுவார்கள் இதைப்போலவே இன்னும் எந்த வேலைகளையேனும் அவரவர் புத்தி சாதுர்யத்தினால் செய்துகாட்டலாம்.

548. பேயோட்டும் ஜாலம்

யங் சிங் வய நமவென்று உருகொடுக்க பிசாசு பூதங்களெல்லாம் ஒன்றாகக்கூடும் மறுபடியும் வங் வங் சிங் சிவயநமசியென்று செபிக்கப் பேய்களெல்லாம் இருந்தவிடந்தெரியாதோடிப்போகும்.

549. இரும்புக்குண்டை பல்லால் தூக்கும் ஜாலம்

உலைக்கடத்தில் நன்றாகக் காய்ந்து சிவப்பேரிய ஓர் இரும்புக்குண்டை பல்லால் கடித்துத்தூக்குகின்றேன் பாருங்களென்று சொல்லி தவளை நெய்யைவாயில் விட்டுக் கொப்பளித்து உமிழ்ந்துவிட்டுக் குண்டை பல்லால் கடித்துத்தூக்க பல் சுடாது பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

550. வைக்கோல் வேகாத ஜாலம்

வைக்கோலில் தவளைநெய்யைப்பிசறி நெருப்பில்போட்டால் வேகாது அதை எடுத்துவிட்டு வேறு வைக்கோலைப் போட்டால் திக்கென்றெரியும்.

551. நெருப்பைக் கையில் அள்ளும் ஜாலம்

இரண்டுகைகளிலும் தவளை நெய்யை தளும்பப்பூசிக்கொண்டு நெருப்பைக் கையிலள்ள கைகள்சுடாது இப்பேர்ப்பட்ட வேலைகளையெல்லாம் குருவின் முகாந்தரமாயறியவேண்டும்.

552. ஜலத்தின்மேல் நடக்கும் ஜாலம்

வெள்ளிக்கிழமையும் சுவாதி நக்ஷத்திரமுங் கும்பலக்கினமுங் கூடிய சுபதினத்தில் ஜலந்திரட்டி மூலிகைக்குச் சாபநிவர்த்தி செய்து பொங்க லிட்டு தூபதீபங் கொடுத்து பிடுங்கிவந்து நிழலிலுர்த்தி தூளாக்கி ஐங்கோலத்தைலமிட்டரைத்து பாதக்குறட்டிற்கு தடவி காயவைத்து அதைக் காலி லணிந்துக் கொண்டு ஜலத்தின்பேரில் நடக்க வெகு ஆச்சரியமாயிருக்கும்.

553. சாதம் வேகாத ஜாலம்

கஞ்சாவிதையில் ஐங்கோலத்தைலத்தைக் கலந்து காயவைத்து அதை உலையரிசியில் போட்டுவிட்டால் எவ்விதத்திலும் சாதம்வேகாது.

554. இதுவுமது.

வெண்காந்திவேரை ஐங்கோலத்தில் நனைத்துக் காயவைத்து உலையரிசியில் போட்டால் சாதமானது வேகாமல் அரிசியாகவேயிருக்கும் மறுபடியும் அதை எடுத்துவிட்டு வேறு உலைவைத்தால்தான் சாதம்வேகும்.

555. நெருப்பில்லாது சாதம் சமைக்கும் ஜாலம்

அரிசியில் கள்ளிப்பாலைக் கலந்து ஓர்பானையில்போட்டு சற்றுமூடி வைத்திருந்துப் பிறகு திறந்துபார்க்க சாதம்போல வெந்திருக்கும் ஆனால் அதைப்புசிக்கக்கூடாது.

556. முட்டை ஓடும் வித்தை

முட்டையிலிருக்கும் அம்புலியை பக்குவமாக எடுத்துவிட்டு குளத்திலிருக்கும் அட்டையை அதற்குள்விட்டு மஞ்சள் குங்குமமிட்டு வாசலில் விட்டுவிட உருண்டுக்கொண்டேயிருக்கும் இதைக் குளங்குட்டைகளிலும் விடலாம் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்.

557. முட்டை மாயமா போகும் ஜாலம்

படிகாரத்தைப் பொரித்து முட்டையைப்போல பக்குவமாகச்சீவி அதைப் பூமியில் புதைத்து கொஞ்சம் ஜலத்தை மந்திரஞ்சொல்லிக்கொண்டே தெளித்து பிறகு பூமியை நோண்டிப்பார்க்க முட்டைமாயமாயிருக்கும்.

558. வாயில் நெருப்பு கக்கும் வித்தை

தீமுறுகல் பாஷாணத்தைப் பயரளவு வாயில்போட்டு உதட்டிலடுக்கிக் கொண்டு ஜாலமாடுஞ்சபையில் கொஞ்சம் இலவம்பஞ்சை கொண்டுவரச் செய்து அதைக் கையில் வைத்துக்கொண்டு காற்றுவாட்டம்பார்த்து வாயிலிருக்கும் பாஷாணம் பஞ்சின்மேல் விழும்படியாக ஊத குபீரென்றெரியும் பார்த்தவர்கள் உனக்கு அக்கினிதேவன் வசியமென்று சொல்லுவார்கள்.

559. நெருப்பின்பேரில் நடக்கும் ஜாலம்

பச்சைத்தவளை நெய்யை கல்களில் தளும்பப்பூசிக்கொண்டு அக்கினி தேவனை மனதிடப்பூசித்து நெருப்பின்பேரில் நடக்க கால்கள் சுடாது.

560. பந்தத்தை வாயில்வைக்கும் ஜாலம்

பச்சைத்தவளைநெய்யைவாயிலூற்றிக்குதப்பிவிட்டு பந்தைக்கொளுத்தி வாயில் வைத்துக்காட்ட யாவரும் ஆச்சரியப்படுவார்கள் வாய்சுடாது.

561. உடுக்கையைக் கட்டும்ஜாலம்

ஐயும் கிலியும் சவ்வும் உடுக்கையைக்கட்டு ஐயும் கிலியும் சுவஹா வென்று செபிக்க உடுக்கையானது கட்டிவிடும்.

562. கள்ளனைப் பிடிக்கும் ஜாலம்.

தலைமஞ்சன்கொடி, மாவு, முப்பூ இவைகளைவகைக்கு விராகனெடை ஒன்று பெரிய நிலவாகை வித்துபலம் பத்து இவைகளையெல்லாம் ஒன்று சேர்த்தரைத்து பில்லைதட்டிக்காயவைத்து ஓர்பாண்டத்தில்போட்டு குழித் தைலம் வாங்கி, ஆள்காட்டி முட்டையைத் தைலமிறக்கி முன்தைலத்தில் விட்டுக்கலக்கி வைத்துக்கொண்டு தேவையானபோது வெற்றிலையில் தடவிப்பார்க்க களவு, சூனயம், ஏவல், பில்லி முதலியவைகளெல்லாம் நன்றாகத் தெரியும்.

563. குறி சொல்லும் ஜாலம்

புனுகு, கோஷ்டம், பச்சைப்பூரம், சந்தனம் இவைகளை வகையொன்றுக்கு விராகனெடை ஒன்றாக யெடுத்து குளிர்ந்த ஜலத்திலைாட்டி குறி மேடையில் பூசி, அதின்பேரில் முக்கோணம் வரைந்து நடுவில் ஸ்ரீம் என்று பதிந்து புஷ்பத்தால் அலங்காரஞ்செய்து காலை, பகல், மாலை மூன்று வேளையும் ஓம் நமோ, பகவதே, ஓம் உக்கிரமாகாளி, சாமுண்டி, ஆயி, வைரவி, சாம்பவி, ஓங்காளி, நிமலி, மஹாசத்தி, நமஹாவென்று லக்ஷத்தியெட்டுரு செபிக்கச்சித்தியாகும், அன்றாடம் ஸ்நானபான நேமநிட்டையுடன் ஒருவேளை புசித்து வஸ்திரத்தில் படுக்கவும், புகை, லாகிரிவஸ்துக்கள் முதலியதை நீக்கி, காகத்திற்கு போசனத்திற்கு முன்னும், பின்னும் அன்னம் வைத்துவர குறியானது பலிதமாகும்.

564. சொக்குத்தூள் ஜாலம்

சொக்குப்பாக்கு, அவ்வைக்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, தாளிவேர், பேயத்திவேர், ஆலம்வேர், குப்பைமேனிவேர், வேளைவேர், கெச்சக்காய் வேர், ஊமத்தன்விரை, நஞ்சுக்கொடி, மாதவிடாய் சீலை பயித்தியக்காரனைக்கொளுத்தியசாம்பல், ஊமையின் மண்டைப்பொடிசெய்து, பேயத்திப்பால், ஆலமபால் இவைகளைவிட்டு அரைத்துக்காயவைத்துப் பொடியாக்கி வைத்துக்கொண்டு ஒருவர்மீது தூவ அவர்கள் உன்னிஷ்டப்படிநடந்து நீ கேட்டதைக்கொடுப்பார்கள். பிறகு கொஞ்சம் ஜலத்தை அவர்கள் மீது தெளிக்க மயக்கந்தெளியும் ஆயினும் இது மஹாகொடிய பாபமானசெய்கையென்று என்குருநாதருடைய அனுக்கிரகத்தினால் யானுகியதேவேந்திரநாத் சொல்லுகிறேன்.

565. வியாதியுண்டாகும் ஜாலம்

கருநாபி, பச்சைநாபி இவைகள் இரண்டையும் சமமாக யெடுத்துக்கொண்டு ஊருக்கு வெளியில் காற்றுவாட்டமாகப்பார்த்து விரட்டி அடுக்கி அதில் இரண்டு சரக்கையும் வைத்துக்கொளுத்தி அப்புகையை ஊரினுள் புகும்படி செய்ய அப்புகைப்பட்ட மனிதர்களெல்லாம் வியாதியால் ரொம்பவும் அவஸ்தைப்படுவார்கள். அதுசமயம் நீ அவ்வூருக்குப்போய் அம்மனிதர்களைப்பார்த்து நான் இவ்வியாதியை ஒரேநாளில் தீர்க்கிறேனென்று

விருதுகூறி நீலிவேர், சிறுகீரைவேர், மிளகு இதுகளைக் கியாழமிட்டுக் கொடுக்க வியாதிகளெல்லாம் நிவர்த்தியாகி எப்போதும் போலாவார்கள்.

566. இதுவுமது

கள்ளிச்சாறு, கார்த்திகைக்கிழங்கு, வெள்ளைப்பாஷாணம், துத்தம், நேர்வாளம், கருநாபி இவைகளையெல்லாம் ஒன்ருக்யிடித்து ஓர்சீலையில் முடிந்து கலயத்தில்போட்டு வாயைக்கட்டி குளத்திலேனும், கிணற்றிலேனும் கழுத்தளவு சலத்தில் விட்டுவிட, அந்நீரையார் குடிக்கின்ருர்களோ அவர்களெல்லாம் வாந்தியும், பேதியுமாக அவஸ்தைப்படுவார்கள். அந்தசமயம் நீ அவ்வூருக்குப்போய் அவர்களைப்பார்த்து இவ்வூரில் ஓர்கொடிய தேவதைவந்து அண்டியிருக்கின்றது. அதினுடைய சேஷ்டைகள் தான் இதுகளெல்லா மென்றுசொல்ல, அவர்களும் உண்மையென்று நம்பி உன்னையே அதை ஓட்டச்சொல்லுவார்கள். நீயும் சரிதானென்று ஒப்புக்கொண்டு முதல் முதல் விநாயகருக்குப் பூசைபோட்டு தான் மற்றவேலைகளைச் செய்யவேண்டுமென்றுசொல்லி, அதற்குத்தகுந்த சாமக்கிரயங்களைச் சேகரித்துக்கொண்டு ஒரு பிள்ளையாரைக்கொண்டு வந்து நீ எங்குமுன் மருந்தைவைத்திருக்கின்ருயோ அங்கு அப்பிள்ளையாரைவைத்து அவருக்கு அபிஷேகமாக வீட்டிற் கொருதவலை ஜலம் மேற்படி கிணற்றிலிருந்து மொண்டு ஊத்தும்படி செய்யவும், அவர்கள் அவ்வேலையைசெய்துக்கொண்டிருக்கும்போதே நீ ஒருவருக்குந்தெரியாமல்கொஞ்சம் நீலிவேரையிடித்துக் கிணற்றில்போட்டு முன் வைத்திருப்பதைப் பக்குவமாகயெடுத்தெரிந்துவிட்டு எல்லோருக்கும் சுவாமி பிரசாதத்துடன் விபூதியையுங் கொடுக்கயாவரும் சொஸ்தமடைந்து உன்னைப்புகழ்ந்துக் கொண்டாடுவார்கள்.

567. முப்பூசெய்யும் ஜாலம்

தலசன்பிள்ளை மண்டையோட்டை சிறியதுண்டுகளாக நறுக்கி அதை உழமண்கரைத்தத்தெளிவில் போட்டு நீர் சுண்டக்காய்ச்சி பிறகு நல்லஜலம் விட்டலம்பி உலரவைத்து அதன்பிறகு நாலுபடி கல்சுண்ணும்பைக்கரைத்துத்தெளிவையிறுத்து ஒருபாண்டத்திலூற்றி முன் உலரவைத்த ஓட்டை அதில்போட்டு நீர் வற்றக்காய்ச்சி எடுத்துக்கல்வத்தில்போட்டு அரைக்கும் போது முன் தெளிவிருத்த நீரைவிட்டரைத்து பில்லைசெய்துக்காயவைத்து கருமானுலையில் வைத்தூத சுண்ணமாகும். அப்படிச்சுண்ணமாகாவிட்டால் மறுபடியும் அரைத்து பில்லைதட்டிக்காயவைத்து கருமானுலையில்வைத்து ஊதிச்சுண்ணமாக்கவும் அப்படிச்சுண்ணமானதை நீரில் கலக்கி அதை சுண்ணும்புக் காரையால் கட்டிய பாத்தியில்விட்டு மறுபடியும் எடுத்து நீரில் கலக்கிபாத்தியில்விட்டு வரளவைக்கவும் இம்மாதிரி ஒன்பது தாஞ்செய்து எடுத்து உலரவைத்துக்கொண்டு பிறகு சுடுகாட்டுப் புழுதிச்சாம்பலைக் கொண்டுவந்து சிறுநீரில் கலக்கி தெளிவையிறுத்து முன்போல ஒன்பது நாள்வரை உலர்த்த உப்பாகும். அதனுடன் முன் உப்பையுஞ்சேர்த்துநாத நீரினல் அரைத்து உலர்த்தி முழப்புடபிட்டு ஆறிய பின்னெடுத்துச்சிமிளில் வைத்துக்கொண்டு சத்திபூசை வலுவாகச்செய்துப்பிறகு இஷ்டதேவதையைத்தொழுது வணங்கி நினைத்தகாரியங்களெல்லாவற்றையும் தடையன்றி முடித்துக்கொள்ளவும் சித்தியாம்.

568. ரசமணி ஜாலம்

குட்டிபோட்டிருக்கும் பன்றியையமாத்திரம் நிறுத்திக்கொண்டு குட்டிகளையெல்லாம் விடியற்காலையில் ஓட்டிவிட்டால் தாய்ப்பன்றிக்குச்சிலநேரத்

திற்கெல்லாம் பாலானது கட்டிக்கொண்டு மூக்குவழியாகச்சிந்தும். அதுசமயம் அப்பாலை ரவொட்டாமல் பிசைந்தழுத்தி, 51-வீராகனெடை சாத்திசெய்த இரசத்தையும், ஒருவிராகனெடை முப்பூவையுங்கலந்து சத்திபூசையுடன் அதின்வாயிலிட்டுத்தைத்து, ஓர் புதியபாண்டத்திலிட்டு மூடி ஒரு மாதஞ்சென்றெடுத்துப்பார்க்க ரசமானது மணியாகக்கட்டியிருக்கும், அந்த ரசமணி எடை ஒன்றும், நாகம் எடை ஒன்றும், தங்கம் எடை ஒன்றுமாக எடுத்து முதலில் தங்கத்தை உருக்கும்போது மற்ற இரண்டு சரக்கையுஞ் சேர்த்து களங்காக்கி வைத்துக்கொண்டு பிறகு தேவையானபோது பத்தெடைசெம்பிற்கு ஒருயெடைக் களங்கைக்கொடுக்க ஒன்பதரை மாற்று காணும். இதை என்குரு நாதருடைய அனுக்கிரகத்தினால் யானாகிய தேவேந்திரநாத் சொல்லிவைத்தேன்.

569. இதுவுமது

சாரைப்பாம்பின்வாயில் சுத்திசெய்த பாதரசத்தைவார்த்து முப்பூ ஒரு கழஞ்சு போட்டு வாயைத்தைத்து மேலே தூக்கிக்கட்டி விட்டுக்கீழே ஒரு சட்டியைவைத்து விட்டால் பாம்பு அழுகிசட்டியில்விழும். அப்போது நாம் செலுத்தின ரசமானது கட்டியிருக்கும். அதையெடுத்துக்கொதிக்கவைத்து செந்தூரித்துக்கொண்டு சகல லோகத்தையும் வேதிக்கலாம்.

570. பாலைக்கடம்பாக்கும் ஜாலம்

கடம்பு பாலை ஓர் மெல்லிய சல்லாத்துணியில் நனைத்துக்காயவைத்துக் கொண்டு ஜாலமாடுஞ்சபையில் ஓர்செம்பில் பாலைக்கொண்டு வரச்செய்து மேற்படி துணியால் வடிகட்டித் துணியையும் செவ்வையாக அதில்பிழிந்துவிட்டு காய்ச்சகடம்பாகும். எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

571. மஞ்சள் சிவக்கும ஜாலம்

வீபூதியில் சங்கு நீரைப்போது மானவரையிலுங் கலந்து முன் ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டு, சபையோர்களைப்பார்த்து அரைத்த மஞ்சளைக்கொண்டு வரச்சொல்லி, எல்லாருக்குங் கேட்கும்படியாக நான் இந்த மஞ்சளைச்சிகப்பாகச்செய்கிறேன் என்மந்திரத்தினுடைய வலுவைப்பாருங்களென்றுசொல்லி, விபூதியைக்கையி லெடுத்துக்கொண்டு மொண மொணவென்று மந்திரஞ்சொல்லிக்கொண்டே மஞ்சளைப்பிசைய அது இரத்தத்தைப்போன்று சிகப்பாகும் பார்ப்பவர்கள் உனக்குக்குட்டிச்சாத்தான் வசியமென்று சொல்லுவார்கள்.

572. சகலவசிய ஜாலம்.

ஓம்றீம் ஐயும் கிலியும் ஸ்ரீம் சவ்வும் இறீம் கிலீம் ஓம் என்று லக்ஷமுரு செபிக்க சித்தியாகி யாவரும வணங்கி கேட்டதைக் கொடுப்பார்கள் இதனால் தரித்திர மெல்லாம் ஒழிந்து சுகமடையலாம.

573. இதுவுமது.

சூரியகாந்தி செங்கழுநீர் முல்லை கோழியவரை வெள்ளைக்காவளைசெவ்வலரி கரியசாலை இதுகளின் பூச்சாற்றை சமயெடையாக எடுத்து கொம்புத்தேன் சமஎடைவிட்டு கோரோசனம் புனுகு பச்சைப்பூரம் இம்மூன்றையும் வகைக்குக் கால்விராகனெடையாகச்சேர்த்து பெண்மதுவைவிட்டு மைபோலரைத்து செப்புச்சிமிளில் வைத்துக்கொண்டு மோகினிமந்திரத்தை ஆயிரந்தடவை செபித்து நெற்றியில் திலர்தமிட யாவரும் வசியமாகி கேட்டதைக் கொடுப்பார்கள்.

574. இதுவுமது

கஸ்தூரிமஞ்சள் ஊசிக்காந்தம் கோரோசனம் லவங்கம் பச்சைக்கற்பூரம் சாதிக்காய் இவைகளை வகைக்குக் கால்விராகனெடையாய் இவைகளைத் துணியில் வைத்துச் சுருட்டி அதின்மேல் தலைபிண்டக்கொடியைச்சுற்றி அதற்குமேம் கருப்புக்கம்பளியைச் சுற்றி தலைமண்டையோட்டில் காராவின் நெய்யூற்றி முன் திரியை அதில்போட்டுக் கொளுத்தி மைவாங்க அம்மையில் புனுகு சவ்வாது சேர்த்துக்கு ழத்துத் திலர்தமிட யாவரும் வ்சியமாகி உன்னிஷ்டம்போல் நடப்பார்கள்.

575. இதுவுமது

அழிஞ்சில்சமூலத்தைத் காயவைத்து சூரணஞ்செய்து மாதச்சீலையில் வைத்துச்சுருட்டி மூன்போல் மண்டையோட்டில் நெய்யூற்றிக் கொளுத்தி மைவாங்கி நெற்றியில் திலர்தமிட யாவரும் வசியமாகி நீ கேட்டதைக்கொடுப்பார்கள்.

376. இதுவுமது

நன்றாகத்தேறின ஆடாதோடைச் செடியைச் சுத்தஞ்செய்து பொங்கல் பலி தூபதீபத்துடன் சாபநிவர்த்திசெய்து பிடுங்கிவந்து மேற்படி பழத்தையுஞ்சேர்த்துப் பிறகு கோரோசனையைக்கூட்டி ஒன்றாக அரைத்துத் திரியாக்கி சாரைப்பாம்பு நெய்யை மண்டையோட்டிலிட்டு மூன் திரியைப் போட்டுகொளுத்தி மைவாங்கி கல்வத்தில்போட்டு புத்துத்தேனைவிட்டு அரைத்தால் அரைக்குங் கல்வமானது வெடித்ததைப்போன்று தெரியும் பயப்படாது அதுசமயம் அதையெடுத்து செப்புப்பரணியில் வைத்துக் கொண்டு கணபதியைப்போற்றி அஞ்சனாதேவி ஆஞ்சநேயர் இவர்களைப் பூசித்துப்பிறகு மசி நசி யென்று தினமொன்றுக்கு ஆயிரத்தெட்டுருவாக எட்டுநாள் விடாது செபித்துக்கண்களில் தீட்ட உலகத்திலுள்ள சகலபொருள்களும் கண்களுக்குத் தெரியும் அதையே நெற்றியில் திலர்தமிட யாவரும் வசியமாவார்கள்.

577. இதுவுமது

ஊமத்தை செம்முள்ளி பொன்னாங்கணி சிகப்புகஞ்சா செங்குவளை பொன்னவாரை புல்லாமணக்கு நாயுருவிவேர் இவைகளின் சாற்றை வகைக்கு விராகனெடை ஒன்றாக யெடுத்து கல்வத்தில்போட்டு கொம்புத்தேன் விட்டரைக்கும்போது புனுகு கோரோசனை சவ்வாது இதுகள் வகைக்கு விராகனெடை ஒன்றும் சிற்றண்டைக்கருவும் காராவின் நெய்யும் சேர்த்து அரைத்து வைத்துக்கொண்டு திலர்தமிட அங்கயீனமுள்ள மாதரா யிருந்தாலுங் கேட்டதைக்கொடுத்து வணங்குவார்கள்.

578. இதுவுமது

வெள்ளிக்கிழமையதினம் தன்னுடைய பக்ஷி அரசாயிருக்கும்போது மிளகுசாறணைச்செடிக்குக் காப்புகட்டி பொங்கல் பலி தூபதீபத்துடன் சாபநிவர்த்திசெய்து உச்சிவேராறுமல் பிடுங்கிவந்து குளிசத்திலடைத்துக் கட்டிக்கொள்ள ஸ்ரீ வசியமாம்.

579. இதுவுமது

விழுதியிலையையும் விழுதிக்கிழங்கையும் பசும்பாலிலரைத்து ஒருமண்டலம் வரைக்கும் அந்தி சந்தி விடாது தின்றுவந்தால் காயசித்தியுண்டாவதுடன் சரீரத்திலுள்ள நோய்களெல்லாம் விலகி யாவரும் வசியமாவார்கள்.

580. இதுவுமது

வெள்ளருகு சமூலத்தை பசும்பாலிலரைத்து அந்தி சந்தியுண்டு வந்தால் நோய்களெல்லாம் விலகி காயசித்தியுண்டாவதுடன் சகலரும் வசியமாவார்கள்.

581. இதுவுமது

கொத்தான்கிழங்கைக் கொண்டுவந்து பசும்பாலிலரைத்து அந்திசந்தி மண்டலமுண்டுவந்தால்சரீரங்கெட்டிப்படுவதுடன்சகலரும்வசியமாவார்கள்.

582. கொத்தான்கிழங்கை எடுக்கும் விதம்

கொத்தான்செடியானது எவ்விடத்தில் படர்ந்திருக்கின்றதோ அவ்விடத்தில் அம்மரத்தைச் சுற்றிலும் கீழே வாருவைக்கோலைப் போட்டுக்கொளுத்த கிழங்கிருக்கின்ற விடமாத்திரம்வேகாது மற்ற இடமெல்லாம்வேகும் அதையறிந்து அவ்விடத்தை நோண்டினால் கிழங்கானது அகப்படும்.

583. இதுவுமது

பொற்சீந்தில் கிழங்கைப் பசும்பாலில் அரைத்து நாற்பதுநாள் வரைக்கும் அந்திசந்தி சாப்பிட்டுவர காயசித்தியுண்டாகி திரேதம் வலுத்து நரை திரைமாறி யாவரும் வசமாவார்கள் இதைச் செய்து அனுபவித்தவர்களே இதனுண்மையை அறிவார்கள்.

584. இதுவுமது

புல்லாமணக்குச்சமூலத்தை வெள்ளைத்துணியில் சுருட்டி மாதவிடாயான மூன்றுநாளும் அல்குலில் வைத்திருந்து நாலாம்நாள் எடுத்து துணியைநீக்கி ஒரு விராகனெடை யெடுத்துக்கொண்டு அதில் பாக்கொடிவிராகனெடை ஒன்றுசேர்த்து முன் நீக்கிய துணியை ஒருவிராகனெடை நிறுத்து மூன்றையும் அவளுடைய சிறுநீரிலரைத்து துவரைப்பிரமாணமுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையான சமயம் தாம்பூலம் பலகாரம் பால் அறுசுவைமுதலியதுகளில் ஒரு மாத்திரை கொடுக்க வசியமாகிக் கேட்டதைக் கொடுப்பார்கள்.

585. இதுவுமது

சிட்டுக்குருவியின் வாயில் ஊசிக்காந்தமும் வெள்ளைப்பாஷாணமுஞ் சேர்த்துப்போட்டு வாயைத்தைத்துவிட்டு ஓர் மண்பாத்திரத்தில் கலப்பில்லாத தென்னங்கள்ளை ஒருபடிவிட்டு முன்குருவியை அதில்போட்டு அடுப்பேற்றி ஓர்மறத்து விறகினலெரித்துச் சுண்டியபின் குருவியை எடுத்து அஸ்தி ரோமமுதலியவைகளைப் போக்கிக் கல்பத்திலிட்டு அதில்மாக்கொடி ஊமத்தன் வித்து சுழல்வண்டு குழியானை மின்மினிப்பூச்சி இந்திரகோபம் தொட்டால் வாடிசமூலம் நாயுருவி பொற்றலைக்கையான் திகைப்பூடுபூச்சி ஆடையொட்டி ஜவிரலிகெஞ்சா ஈப்புலி இவைகளை வகையொன்றுக்குச்சரியிடையாகப்போட்டு பேய்க்கறப்பன் சாற்றாலாட்டி துவரைப்பிரமாணம் குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு இங் இங் சிங் சிங் சுவஹாவென்று லக்ஷத்தியெட்டுரு செபித்து தேவையானபோது ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணுமாக நாதத்திலிழைத்துக்கொடுக்க வசியம்.

586. இதுவுமது

பொன்னுவாரைவேரை நிழலிலுலர்த்திக் குழித்தைலம்வாங்கி அதனுடன் கோழிமுட்டைக்கழு மாக்கொடி புனுகு பச்சைப்பூரம் கோரோசனை

இவைகள் வகைக்கு விராகனெடை ஒன்ருகச் சேர்த்து புத்துத்தேன் விட்டரைத்துத்திலர்தமிட புருடர்கள் வசியமாகிக் கேட்டதை கொடுப்பார்கள்.

587. இதுவுமது

மின்மினிப்பூச்சி சுழல்வண்டு தலைப்பேன் குழியானை இவைகளைப் பேய்க்கருப்பன் சாற்ருலாட்டி பயறளவாக மாத்திரை செய்து நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டு தேவையானபோது நாதத்திலிழைத்துக்கொடுக்க.

588 இதுவுமது

ஓர் புதியபாண்டத்தில் பதக்கு பசுங்கோமயத்தை விட்டு அடுப்பேற்றி ஓர் மறத்துவிரகாலெரித்துச் சுண்டவைத்து உப்பாகத்தேரியபின் அவ்வுப்பையெடுத்து டப்பியில் வைத்துக்கொண்டு தேவையானபோது நாதத்திலிழைத்துக்கொடுக்க வசியமாம்.

589. இதுவுமது

மேற்படி உப்பில் நாதத்தைச் சேர்த்துக்குழைத்து அதில் ஓர் களிப்பாக்கை ஊறவைத்து அதைத்தாம்பூலத்தில் கொடுக்கவும் வசியமாவார்கள்.

590. இதுவுமது

குண்டுமணிப்பருப்பு பேய்ப்புடலம்விரை நாய்ப்பாகல்விரை சாதிக்காய் கோரோசனை காந்தம் இவைகளை பொன்னுவாரைக் குழித்தைலத்தாலாட்டி நன்ருகக்குழைந்து வருஞ்சமயம் கொஞ்சம் வெள்ளைச் சாவலின் இரத்தத்தை விட்டரைத்து செம்புச் சிமிளில் வைத்துக்கொண்டு (வசி) என்ற பீஜாட்சரத்தை ஆயிரத்தி யெட்டுரு கொடுத்து பொட்டிடக் கண்ட மாதரெல்லாம் வசியமாவார்கள்.

591. இதுவுமது

கள்ளிக்கட்டையைத் துளைத்து அதில் களிப்பாக்கை வைத்து அக்கள்ளிக்கட்டையினுலேயே வாய்க்குத் தமரடைத்து மூன்னுாள் வைத்திருந்து நாலாவதுநாள் எடுத்து நாதத்தில் ஊறவைத்துக் காயவைத்து அதை வெற்றிலையுடன் சேர்த்து அருந்தக்கொடுக்க வசியமாம். இம்முறை கெர்ப்பஸ்திரீகளுக்கு ஆகாது தெரியாமல் தவறிக்கொடுத்துவிட்டால் அதைத் தின்றவர்களுக்கு வெள்ளையைப்போல் நீர் வடியும் அதற்கு முறிப்பு எப்படியென்ருல் பாலில் சீரகமிட்டுக் காய்ச்சிக்குடித்து அரை மண்டலம் வரைக்கும் வெந்நீரில் ஸ்நானஞ்செய்து வர நிவர்த்தியாகுமென்று என் குருவாகிய போசுநாதருடைய கிருபையால் தேவேந்திரநாத்தாகிய நான் உலகத்தாருக்காக சொல்லுகின்றேன்.

592. இதுவுமது.

பெற்றலைக்கையான் வெள்ளெருக்கன் விஷ்ணுகிரந்தி இவைகளின் வேரை சமயெடையாக யெடுத்து காராவின் நெய்யில் மைசெய்து திலர்தமிட எவ்வளவு பகையாளியா யிருந்தாலும் வசியமாகிக் கேட்டதைக் கொடுப்பார்கள்.

593. இதுவுமது.

நிண்ணுசிணுங்கி செல்வதத்தி சுழலாவாரை முல்லை கொழுந்தெட்டு கூத்தன் குதம்பை இவைகளைச்சமயெடையாக யெடுத்துப் பந்நீர் விட்டரைத்து திலர்தமிட வசியமாம்.

594. இதுவுமது.

வெள்ளி ஞாயிறு தேனிலும் திங்கள் வியாழம் நெய்யிலும் செவ்வாய் புதன் காராவின்பாலிலும் சனி தயிரிலும் ஆவின் புல்லுருவியைக்குழைத்து திலர்தமிட தேவர்கள்முதல் யாவரும் வசியமாவார்கள்.

595. இதுவுமது.

பாக்கை ஐங்கோலத்தில் நனைத்து யமவநசி சியமவந நமசிவய வமநசிய என்று ஆயிரத்தி யெட்டுரு செபித்துக்கொடுக்க ஸ்ரீகள் வசியமாவார்கள்.

596. இதுவுமது.

சென்னயுருவிவேரில் பல்லைத்தீட்டிவர இலட்சுமிவசியமாவதுடன் நினைத்த காரியங்கைகூடும்.

597. இதுவுமது

ஆலம் விழுதில் பல்லைத்துலக்கிவந்தால் நாபிகுளிர்ச்சியடைவதுடன் இலட்சுமிவசியமாகி செல்வம்பெருகும்.

598. இதுவுமது

புல்லாமணக்கன் விரையைநெய்யில் பொன்வரலாக வறுத்துமாதச்சீலையில் வைத்துச் சுருட்டிஊரியபின்னெடுத்து அறுசுவையில் கொடுக்க புருஷர்கள் வசியமாவார்கள்.

599. இதுவுமது.

பேய்க்கருப்பன் சாற்றில் தீட்டுச்சீலையைக் கசக்கிப் பிழிந்துவிட்டு அதில்களிப்பாக்கைஊரவைத்துகொடுக்க அருந்தினவர்கள் வசமாவார்கள்.

600. இதுவுமது.

செம்பராந்தின் பிச்சில் நெல்லிக்காய் கெந்தகம் பெருங்காயம் நத்தை சூரிவேர் இவைகளை சமயெடையாகச் சேர்த்தரைத்து வேண்டியபேர்களின் கையில் தடவ வசமாவார்கள்.

601. இதுவுமது

கோரோசனை காந்தகம் மனோசிலை ரசம் இவைகள் வகைக்கு விராகனெடை ஒன்றெடுத்து ஆண்சிட்டுகுருவியின் மயிரைப்போக்கி அதின் வாயில் மேற்படி மருந்தைத் துருத்து வாயைத்தைத்து சீலை மண் செய்து கோழிப்புடமிட்டு எடுத்து பிறகு சிற்றகத்தியிலை விராகனெடை ஒன்றும் முன் புடமிட்டதையும் கல்வத்தில் போட்டு பசுவின் வெண்ணெய்யாலரைத்துவேண்டியவர்களுக்கு வெற்றிலையில் தடவி தின்னக்கொடுக்க வசமாவார்.

602. இதுவுமது

மேற்படி மருந்தைப் பெண்ணின்மாதவிடாயில் குழைத்து தனக்கிஷ்டமானவர்களுக்குத் தின்னக் கொடுக்க அவர்கள் அவள் இஷ்டப்படி நடப்பார்கள்.

603. இதுவுமது

ஓம் பகவதி கௌரி பஞ்சாக்ஷரலோக வசீகரி மஹாமோகினி அய்யும் கிலியும் அரவாபரணு கலியாணி நாராயணதேவி வீரலட்சுமி என் வாக்கிலேயும் மனதிலேயும் மோகித்து நிற்க சுவஹா என்ற மந்திரத்தை மல்லிகைப் புஷ்பம் தேங்காய் பழம் எலுமிச்சம்பழம் சம்பிராணி வத்தி முதலியதுகளு

டன் ஆயிரத்தெட்டுரு கொடுக்க சித்தியாம் பிறகு தேவையானபோது தலைவாழையிலையின்மேல் வீபூதி பரப்பி தான் கோரியவளின் பேரை தின்மேலெழுதி சாம்பிராணி தூபமிட்டு மேற்படி மந்திரத்தை இருபத்தியெட்டுதரம்செபித்து மேற்படிவீபூதியை இட்டுக்கொண்டுபோக சித்தியாம் வீபூதி பூசாதவர்களாயிருந்தால்முந்தாணியில் முடிந்துக்கொண்டு போகசித்தியாம்.

604. இதுவுமது

கருங்கோழிமுட்டையைக் கொண்டுவந்து எழுத்தாணியால் குத்தித்துளைசெய்து அரைகழஞ்சு பாதரசத்தை அதில்விட்டு ஈணுக்கிடாரியின் சாணியில் பொதிந்து அச்சாணியினலாகிய விராட்டியிலேயே புடமிட்டுக்கொளுத்தி முட்டையிலிருக்கும் மஞ்சள்கருவையெடுத்து புனுகும், கற்பூரமுங்கூட்டி மைபோலரைத்து சிமிளில்வைத்துக்கொண்டு, முன்மாதிரிபூசையுடன் மந்திரமுஞ்செபித்து வைத்துக்கொண்டு தேவையானபோதுகொஞ்சமெடுத்து நெற்றியில் பொட்டிட்டுக்கொண்டு நமக்கிஷ்டமுள்ள ஸ்திரியின் முகத்தைபபார்த்து (நமசிவய) என்று மூன்றுதரஞ்சொல்லி நாம் முன்னே போக அவன்பின்னே தொடர்ந்துவருவாள். கைகண்டது.

605. இதுவுமது

எருமையைக்கடித்த அட்டையை எடுத்து அதின்பேரில் இரசம்பூசி அதனிடை மாமரம் உளுத்தப்பொடியைச் சேர்த்து பன்னீர்விட்டு மைபோலரைத்து சிமிளில் வழித்து வைத்துக்கொண்டு, தேங்காய், பழம், தூபதீபத்துடன் சாம்பிராணிபுகைத்துவசிவசியென்று ஆயிரத்தியெட்டுஉருகொடுத்து மையை யெடுத்து புருவத்தில் தடவிக்கொண்டு இச்சைப்பட்ட ஸ்திரீயின் முகத்தைப்பார்த்து வசிவசியென்று எழுதரஞ்சொல்லி முன் நடந்துபோக அவள் பின் தொடர்ந்து வருவாள்.

606. இதுவுமது

புளியமரத்தில் இருக்கின்றகரும்பல்லியை அடித்துஉலர்த்தி ஒருமரத்துவிரகினலெரித்துப்பொடியாக்கி தலை சிவந்த ஓணான் இரத்தம்விட்டரைத்து குன்றி மணிப்பிரமாணம் மாத்திரைத்திரட்டி நிழலிலுலர்த்தி, வாழையிலைமேல்வைத்து எலுமிச்சம்பழம், வாழைப்பழம், மல்லிகைப்பூ, இளநீர் இவைகளைவைத்து சாம்பிராணிதூபமிட்டு நமசிவய என்ற மந்திரத்தை ஆயிரத்தியெட்டு செபித்து மாத்திரையையெடுத்து நல்லெண்ணெய்யில் குழைத்து வெற்றிலையில் தடவி வேண்டுமானவர்களுக்குத் தின்னக்கொடுக்க வசியமாவார்கள். இதையே முலைப்பாலிலிழைத்து நெற்றியிற்றிலர்தமிட லோகவசியம். தேனிலுரைத்து மேலே தடவிக்கொண்டுபோக வழக்குவெல்லும்.

607. இதுவுமது

ஈப்புலி, ஈ, ரசம் இம்மூன்றையும் ஜவிரலிச்சாறுவிட்டரைத்து மையாக்கிச் சிமிளில் வைத்துக்கொண்டு, பசும்பால், வாழைப்பழம், மல்லிகைப்பூ, பன்னீர் இவைகளுடன் சாம்பிராணி புகைத்து சுவாகாவென்று ஆயிரத்தியெட்டுரு கொடுத்து வைத்துக்கொண்டு பிறகு ஓர் புதுப்பாண்டத்தில் தன்னுடைய நீரைப்பிடித்து ஓர்மறத்து விரகினலெரித்து உப்பாக்கி அவ்வுப்பில் கொஞ்சமெடுத்து அதற்குப்பாதி முன் மையைச் சேர்த்துக் குழைத்து அறுசுவையிலிட வசியமாம்.

608. இதுவுமது.

புனுகு, சந்தனம் இவையிரண்டையும் பன்னீர்விட்டு மைபோலரைத்து அவள் நீரில் குழப்பிச் சிமிளில் வைத்துக்கொண்டு, மல்லிகைப்பூ வைத்து

சிவநமயவென்று ஆயிரத்தியெட்டுரு கொடுக்கச் சித்தியாம். பிறகு அதை யெடுத்து புருவத்திலிட்டுக்கொண்டுபோக நினைத்தபேர்கள் வசியமாம்.

609. இதுவுமது.

ஞாயிற்றுக்கிழமைய்யதினம் மூலாமென்னிவேரை நமசிவய என்றுசொல் லிப் பிடுங்கிவேரைமட்டும் அவள் மாதவிடாயில் பிரட்டி, அல்லது அவ ளுடைய சிறுநீரில் மூன்றுநாள் ஊறவைத்துப்பிறகு அதை சிரங்கைப் பசு வின் நெய்யில்போட்டு சிவக்கக்காய்ச்சி அந்நெய்யைத்தின்கிற பதார்த்தத் தில் பிரயோ சிக்கச் சீவன் போனாலும் விடான் கைகண்டது.

610. இதுவுமது.

வெள்ளைச் சார்வேளைவேரை அவுரிச்சாற்றிலரைத்து நெற்றியிற்றிலர்த மிட்டுச் செல்லயாவரும் வணங்கி வசியமாவார்கள்.

611. இதுவுமது

குளிக்கும் மஞ்சளில் பெரியதாக ஆறுயெடுத்து நண்டுவளையிற்போட்டு வைக்க அவ்வேளையிலிருக்கும் நண்டானது அதை வெளியில் தள்ளிவிடும். அப்படி தள்ளினதுபோக மீதி உள்ளிருப்பதையெடுத்து நலங்குசாமானின் கூடகலந்து அரைத்து திரேகத்திற் பூசிச்செல்லக் கண்டவர்களெல்லாம் வசியமாம்.

612. இதுவுமது.

பெற்றலெக்கையான் தகரை, மயிர்ச்சிகைப்பூண்டு, கருநாய்நாக்கு, சுழல் வண்டு, இவைகளைச் சமயெடையாக யெடுத்துப்பொடிசெய்து வெள்ளைத் துணியில் வைத்துத் திரிதிரித்து தலசன்பிள்ளை மண்டையோட்டில் காராம் பசுவின் நெய்யூற்றிக்கொளுத்தித் திலர்தமிட்டுச் செல்லயாவரும் வசியமாம்.

613. இதுவுமது

சிறியாநங்கை, பிரமத்தண்டி, பச்சோந்தி, தேவாங்கு இவைகளைச் சம யெடையாக யெடுத்து அதனுடன் ஐம்பலஞ்சேர்த்து அரைத்து சந்தனத் திற் பூச யாவரும் வசியமாம்.

614. இதுவுமது.

சீதாதேவி செங்கழுநீர், வாழை, ஆறுபுள்ளிவண்டு, புராயெச்சம் இவை களில் ஐம்மலஞ்சேர்த்து அரைத்துக் காயவைத்தும் பொடிசெய்து அப் பொடியை வெள்ளைத் துணியில்வைத்து திரியாக்கி, ஓர்புது அகலில் காரா வின் நெய்யூற்றிக்கொளுத்தி மையை புது ஓட்டில் பிடித்து அதை மறுபடி யுங்காராவின் நெய்யில் குழைத்துக் கண்களில் தீட்டிச்செல்ல கண்டவர்க ளெல்லாம் வசிய மாவார்கள்.

615. இதுவுமது

பிரமதண்டிதாளி, கரும்பூனைப் பஞ்சாங்கம், குழியானை இந்நான்கை யும் பொடிசெய்து வெள்ளைத்துணியில் வைத்து திரியாகத்திரித்து, ஓர் அக லில் செம்மறியாடு, பசு, எருமை இதுகளின் நெய்யைவிட்டு, முன்திரியைப் போட்டுக் கொளுத்தி அதில்வரும மையை புது ஓட்டில் பிடித்து சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது நல்லெண்ணெயிற் குழைத்து நெற் றியிலிட்டுச்செல்ல வசியமாம்.

616. இதுவுமது

பேய்த்துமட்டிக்காய், கோரோசனை, பிரமதண்டி, அண்டங்காக்கைத் தலை இதுகளைப்பொடித்து பசுவெண்ணெயிலரைத்து அமிர்தயோகநாளில்

தன்னுடைய வீட்டுவாசற்படியில் புதைத்துவைக்க அதுமுதல் அவ்வீட்டிற்கு வருகிறவர்களெல்லாம் வசியமாகி நீகேட்டதைக் கொடுப்பார்கள்.

617. இதுவுமது

வாழை, முத்தெருக்கன்செவி, வெள்ளாட்டுநாக்கு, ஆதிக்கொடி இவைகள் நான்கையும், நல்ல அமிர்தயோகத்தில் பசுவெண்ணெயைக் கொண்டரைத்து நெருப்பிலிட்டுப் புகைத்து அப்புகையைத் தன்னுடம்பில் ஏற்றிக்கொண்டு செல்ல யாவரும் வசமாகி நம்முடைய சொல்பிரகாரம் நடப்பார்கள்.

618. இதுவுமது

வெள்ளெருக்கு, வாழை, மண்டுகேப்பிச்சு, புராயெச்சம் இவைகளைச்சமயெடையாக யெடுத்துக் கூட தன்னுடைய ஐம்மலமுள்சேர்த்து அரைத்து நல்லநாளில் நாமிருப்பதற் கடுத்தக்குளத்தில் புதைத்துவைக்க அக்குள நீரைக்குடிப்பவர்க ளெல்லோரும் தனக்கு வசமாவார்கள்.

619. இதுவுமது

சீதாதேவி செங்கழுநீர், ஆனைவணங்கி, ஆறுபுள்ளிவண்டு, குழியானை இந்நான்கையும் பொன்னூமத்தன் சார் விட்டரைத்து உடம்பினிற்பூசிச் செல்ல யாவரும் வசிய மாவார்கள். இதனுடன் நம்முடைய ஐம்மலமுஞ் சேர்த்து, பலவிதத்தின் பண்டம், அல்லது அறுசுவையில் கொடுக்க வசியமாவார்கள்.

620. தேளாகும் ஜாலம்

வேப்பிலைக்கு லமையைத்தடவி தேளாகவேண்டுமென்று ஜாலக்காளைத் தியானித்துக் கீழேபோட பார்ப்பவர் கண்களுக்குத் தேளாகத்தோன்றும்.

621. கீரிப்பிள்ளையாகும் ஜாலம்

கீரிப்பிள்ளையின் தோலுக்கு மையைப்பூசி உயிருண்டாக வேண்டுமென்று ஜாலக்காளை தியானித்துக் கீழேபோட உயிருள்ளதைப்போன்று தோன்றும்.

622. பக்ஷிகளாகும் ஜாலம்

எந்த பக்ஷிகளாக வேண்டுமோ அந்தப்பக்ஷிகளின் இரகில் மையைத் தடவி ஜாலக்காளைத் தியானித்துக் கீழேபோட பார்ப்பவர்களின் கண்களுக்கு அந்தப் பக்ஷிகளைப்போலவே தோன்றும். இன்னும் இந்தமையைக் கொண்டு எவ்வளவுவேலைகளை யேனும் செய்துக்காட்டி சந்தோஷப்படுத்தலாம் ஒவ்வொன்றுக்கும் நாம் எதை மனதில் நினைத்து மையைத்தடவிக் கீழே போடுகிறோமோ அது தான் பார்ப்பவர்களின் கண்களுக்குத்தெரியும் ஒவ்வொருவித்தைகளையும் ஜாலக்காளைமனதினுல் துதித்து தான் செய்யவேணும். அப்போதைக்கப்போது ஜாக்கிரதையாக உடனுக்குடன்மறைத்து விடவேணுமென்று தேவேந்திர நாத்தாகியநான் என்குருவினுடைய அனுக்கிரகத்தினுல் சொல்லுகிறேன்.

623. முடமாக்கும் ஜாலம்

கிராணம் பிடிக்கும்போது எட்டிமரத்திற்குச் சாபநிவர்த்தி செய்து காப்பு கட்டி பொங்கல் பலி முதலியதைக் கொடுத்து வேரைப் பிடுங்கிக் கொண்டு, கிராணம் விடும்போது மற்றொருவேரையும் பிடிங்கிக்கொண்டு ஒருவேரில் எதிரியைப்போல் உருவஞ்செய்து, மற்றொருவேரில் கூராகிய

மூளையொன்று செய்து வைத்துக்கொண்டு, ஆதிவாரதினம் ஒருவெள்ளைச் சாவலைப்பிடித்துக்கொண்டு குளத்திற்குப்போய் மேட்டின்பேரில் சாவலை வைத்துவிட்டுக் கழுத்தளவு நீரிலிறங்கி 'ஆ' என்னும் மந்திரத்தை செபித்துக்கொண்டே யிருக்க மேட்டிலிருக்குஞ் சாவலானது இரந்து விடும். அந்த சமயம் நீ கையில் பதுமையை வைத்துக்கொண்டு இன்னொருகையில் மூளையை எடுத்து . எதிரியின் கடவுளைச்சேர்த்து துவாரத்தையெல்லாம் மூளையினால் குத்த முடமாகிப் போவான். அதன் பிறகு எதிரியானவன் வணங்கி வருவானாகில் நீ பதுமைக்குக் குத்தியிருக்கும் மூளைகளைப்பிடுங்கி பதுமையை ஜலத்தில் கழுவிப்போட எப்போதும் போல் சுகமடைவான்.

624. பேன்மாரண ஜாலம்

பேனைப்பிடித்து மூக்குத்தூளில் போட்டுப் பிரட்ட அதுமாரணமாகும்.

625. ஜலத்தில் துடப்பம் நிற்கும் ஜாலம்

ஒருகனத்த துடப்பத்தை யொடித்து அடிமூனையில் குண்டூசியைச் சொருகி டம்ளரில் ஜலத்தை வார்த்து அதில் அத்துடப்பத்தைப் போட துடப்பமானது சாயாமல் செங்குத்தாகவே நிற்கும்.

626. வெற்றிலை சுழலும் ஜாலம்

முதிர்ந்த வெற்றிலை யொன்றைத் திருகலாக முறுக்கி சாணியுருண்டையில் சொருகி அதின்மேல் கொஞ்சம் ஜலத்தைவிட அது சுழலுவது வேடிக்கையாயிருக்கும்.

627. திரேகம் புகைக்கும் ஜாலம்

கந்தகக் குச்சியை ஜலத்தில் நனைத்து திரேகத்தில் பூசிக்கொண்டு இருட்டு வீட்டில் நிற்க திரேகத்திலிருந்து புகைகிளம்பும்.

628. நாகப்பூச்சி உற்பத்தியாகும் ஜாலம்

பூமியில் பாத்திகட்டி அரிசி நொய்யைப்போட்டு ஜலந்தெளித்து மூடிவிட்டு ஐந்தாறுநாள் கழித்துக் கிளரிப்பார்க்க அதில் வெறும் நாகப்பூச்சிகள் ஜனித்திருக்கும்.

629. செங்கல்லில் தேள் உற்பத்தியாகும் ஜாலம்

ஓர்செங்கல்லை ஜலத்திலூறவைத்துக் கையினால் சூடாகும்படி யாகத் தேய்த்து பூமியில் புதைத்து, அதின்மேல் குப்பை செத்தைகளைப்போட்டு நாலைந்து நாள் பொறுத்து கிளறிப்பார்க்க சிறிய தேள்கள் ஜனித்திருக்கும்.

630. மோட்டுப்பூசி சாகும் வித்தை

தாமரையிலையை தொன்னைதைத்து அதில் மோட்டுப்பூச்சிகளைப்பிடித்துப்போட சிலநேரத்திற்குள்ளாக அதுசாகும்.

631. தேங்காய் உருளும் ஜாலம்

ஓர் பெரிய தேங்காயைத் தந்திரமாகக் கண்ணைத்திரந்து அதனுள்ளிருக்கும் ஜலத்தையெல்லாம் ஊற்றிவிட்டு, ஓர் சுண்டெலியைப் பிடித்து அதனுள் விட்டு அதற்கு மஞ்சள், குங்குமமிட்டுப் பூசித்து நடுவாசலில்விட்டுவிட அதுவாசலெல்லாம் உருண்டுக் கொண்டே யிருக்கும்.

632. கற்களைக்கடிக்கும் ஜாலம்

நத்தைச்சூரியன் வேரை வாயி லடக்கிக்கொண்டு எவ்வளவு கல்லையேனும் முருக்கைப்போல் தாராளமாகக் கடித்து விடலாம்.

633. இரத்தப்பனையன் உறபத்தியாகும் ஜாலம்

எள்ளின் காஷ்டத்தைக் குப்பையாகப்போட்டு வைத்துவிட்டு சில தினங்கள் கழிந்தபிறகு கிளரிப்பார்க்க வேண்டுமான இரத்தப்பனையன்கள் உற்பத்தியாகி யிருக்கும்.

634. அவல் மேல்லாத ஜாலம்

ஆழாக்கு அவலுக்கு உழக்கு செய்யைவிட்டுப் பிசிறி ஊறவைத்துஎவர் களுக்கேனும் தின்னக்கொடுக்க அவர்கள் அதைமென்று தின்னமாட்டாமல் விழிப்பார்கள்.

635. வேறு பல்லுதிரும் ஜாலம்

அவல் மென்றுதின்றவர்களுக்கு உடனேகொஞ்சம் கரும்பைக்கொடுக்க அவர்கள் அதைமெல்லும்போது உதிரத்துடன் பற்களும் கழன்றுவிடும்.

636. எலி பூனையை ஏமாற்றும் ஜாலம

ஒரு எலியைப் பிடித்து அதின் மீது குப்பைமேனிச் சாற்றைத் தடவி பூனை முன்போட பூனை அதைக்கடிக்காமல் சுத்திக்கொண்டேசுற்றி வரும்.

637. இதுவுமது

முன்மாதிரி எலியைப் பிடித்து மின்மினிப்பூச்சியை அரைத்து அதின் தேகத்திற் பூசி பூனைமுன்விட பூனை பயந்து ஓடிப்போகும்.

638. மோட்டுப்பூச்சி நாசமாகும் ஜாலம்

காக்கிவெல்லத்தை பாகுபோல் கரைத்துக்கொண்டு மோட்டுப்பூச்சிகளுள்ளவிடங்களில் தெளித்துவைக்க, சிற்றெறும்புகள் மொய்த்துக்கொண்டு மோட்டுப்பூச்சிகளை நாசஞ்செய்யும்.

639. சீட்டு நடக்கும் ஜாலம்

நாயுணியைப் பின்னப்படுத்தாமலெடுத்து அதன் முதுகில் கொஞ்சம் மெழுகை ஒட்டவைத்து ஓர்காகிதத்துண்டை அதின்பேரில் ஒட்டி விட்டுவிட அது நகர்ந்து போகிறது வேடிக்கையாயிருக்கும்.

640. தேகத்தில் அல்பநாத்திருத்தும் ஜாலம்

ஒரு குண்டுமணி காது குரும்பியை தேகத்தில் அரக்கித் தேய்த்து விட்டு அதின்பேரில் அல்பநாத்தியாகிலும், ஊசியாகிலும், அல்லது செடிலாகிலும் குத்தவலியிருக்காது.

641. துடப்பும் நெளியும் ஜாலம்

கனத்த துடப்பத்தை எடுத்து முறுக்கிக் கீழேவைத்து அதின்பேரில் ஜலந்தெளிக்க அது நெளியும், பார்ப்பவர்களும் சந்தோஷப்படுவோர்கள்.

642. கசகசாவில் மீனுண்டாகும் ஜாலம்

மீன்சினையை பனிநீரில் ஊறவைத்து சூரிய கிரஹணப்படாது நிழலிலுலர்த்தி அதனுடன் கசகசாவைக்கலந்து வைத்துக்கொண்டு ஜாலமாகும் போது ஒருபோகணியில் ஜலத்தைவிட்டு இதில் கொஞ்சம்போட்டு மூடி வைத்திருந்து திறந்துக்காண்பிக்க மீன்குஞ்சுகள் மேயும்.

643. ரசகுண்டு பறக்கும் ஜாலம்

காட்டாமணக்கன்பாலை ஓரேனத்தில் கரந்து வைத்துக்கொண்டு ஓர் துடப்பத்தை துவாரஞ்செய்து அதைப்பாலில் நனைத்து வாயில்வைத்தூத ரசகுண்டுகளைப்போல முட்டைகள் கிளம்பும்.

644. உலர்ந்த எருமேயும் ஜாலம்

கிளுவையிலே இரசத்தில் உலர்ந்த இருவைஊறவைத்துக் காயாதமுன் அதைக் கிணற்றிலேனும், குளத்திலேனும்போட அது உயிருள்ளதைப் போன்று சுழன்று ஓடும்.

645 குளிசம் குதிக்கு ஜாலம்

ஓர் செம்புக்குளிசத்தில் பாத ரசத்தைவிட்டு வாயைமூடி வைத்திருந்து ஜாலமாடும்போது அதை யெடுத்து அக்கினியில்போட அது எகிரி எகிரி குதிப்பதைப்பார்த்தால் வெகு ஆச்சரியமாயிருக்கும்.

466. மீன் மாரண வித்தை

குளங்களிலேனும் கிணறுகளிலேனும் மீன்களைப்பிடிக்கவேண்டுமாகில் கள்ளிக் கட்டையைத் துண்டு துண்டாக நறுக்கிப் போட்டு விட்டு மறுநாள் காலையில் போய்பார்க்க மீன்களெல்லாம் மிதந்திருக்கும். அல்லது கொட்டைக்கரந்தையைக் கத்தைகளாகக் கட்டிப்போட்டு வைத்திருந்தாலும் மீன்கள் மிதந்து விடும்.

647. புலியாகும் ஜாலம்.

இருளியென்னும் மூலிகையிருக்குமிடத்தை கண்டுபிடித்து அனுஷ நக்ஷத்திரங்கூடிய ஆதிவாரத்தில் அவ்விடத்தை சுத்திசெய்து பொங்கல் பலி தூபதீபத்துடன் காப்புகட்டி மற ஆதிவாரஞ்சென்று ஆணிவேரறுமல் பிடுங்கிவந்து வேண்டுமானபோது ஜாலமாடுஞ்சபையில் புலியாகவேண்டுமென்று நினைத்துக் காதில்வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்ணிற்கு நீ உண்மையான புலியைப்போல்வே தோன்றுவாய்.

648. கரடியாகும் ஜாலம்.

சுவாதிநக்ஷத்திரங்கூடிய சுக்கிரவாரத்தில் மேற்படி மூலிகையைக் கொண்டுவந்து கரடியாகவேண்டுமென்று நினைத்துக் காதில் வைத்துக் கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு கரடியாகவே தோன்றுவாய்.

649. குரங்காகும் ஜாலம்.

கிருத்திகைகூடிய செவ்வாய்க்கிழமையில் மேற்படி மூலிகையைக் காப்புகட்டிக் கொண்டுவந்து குரங்காகவேண்டுமென்று காதில் வைத்துக்கொண்டால் குரங்கைப்போலவே தோன்றுவாய்.

650. கழுதையாகும் ஜாலம்

பூசநக்ஷத்திரங்கூடிய ஆதிவாரத்தில் பொங்கல்பலியுடன்மூலிகையைக் கொண்டுவந்து காதில்வைத்துக்கொண்டால் பார்ப்பவர்கள் கண்களுக்கு கழுதையைப்போலவே காணப்படுவாய்.

651. கோவேறு கழுதையாகும் ஜாலம்.

கேட்டையும் செவ்வாய்க்கிழமையுங்கூடிய தினத்தில் மூலிகையை வேரறுதுக்கொண்டுவந்து கோவேறுகழுதையாகத் தோன்றவேண்டுமென நினைத்துக் காதில் வைத்துக்கொண்டால் கோவேறுகழுதையாகவே தோன்றப்படுவாய்.

652. ஆனையாகும் ஜாலம்.

ஜாலமாடும் சபையில் வருகிறதற்கு முன்னமே மேற்படி மூலிகையைத் தயாரித்து வைத்துக்கொண்டு சபைக்குவந்ததும் அதைக்காதில் வைத்துக் கொண்டால் பார்ப்பவர்களின் கண்ணிற்கு நீ ஆனையாகவே தோன்றுவாய்

உன்னைப்பார்த்தவர்களெல்லாம் நடுங்கிப்பயப்படுவோர்கள் இதற்கு புனர் பூச நக்ஷத்திரமும் வியாழக்கிழமையும் கைகண்டநாளாகும்.

653. குதிரையாகும் ஜாலம்.

பூசநக்ஷத்திரமுஞ் செவ்வாய்க்கிழமையும் சேர்ந்ததினத்தில் மேற்படி மூலிகையைக் கொண்டுவந்து காதில்வைத்துக்கொண்டால் குதிரையாகவே பார்ப்பவர்களின் கண்ணிற்கு தோன்றுவாய்.

654. சிறுத்தையாகும் ஜாலம்.

கேட்டையும் செவ்வாய்க்கிழமையுஞ் சேர்ந்ததினத்தில் மேற்படி மூலி கையைக் காதில் வைத்துக்கொண்டால் சிறுத்தையாகத்தோன்றுவாய்.

655. கடம்பையாகும் ஜாலம்

ஆயில்யமும் ஆதிவாரமுங்கூடியதினத்தில் மேற்படி மூலிகைக்குக் காப் புகட்டிக் கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் அனைவர்களுக்கும் கடம்பையாகவே தோன்றுவாய்.

656. காட்டெருமையாகும் ஜாலம்.

செவ்வாயும் சுவாதியுங் கூடியதினத்தில் மேற்படி மூலிகையை காதில் வைத்துக்கொண்டால் பார்க்கிறவர்களின் கண்களுக்குக் காட்டெருமையா கவே காணப்படுவாய்.

657. பன்றியாகும் ஜாலம்

பரணியும் வியாழக்கிழமையும் சேர்ந்ததினத்தில் மேற்படி மூலிகை யைக் கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண் களுக்குப் பன்றியாகவே தோற்றப்படுவாய்.

658. முள்ளம்பன்றியாகும் ஜாலம்.

செவ்வாய்க்கிழமையும் சுவாதிநக்ஷத்திரமுங் கூடியதினத்தில் மூலிகை யைக் கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் முள்ளம் பன்றியா கவே காணப்படுவாய்.

659. காட்டுப்பன்றியாகும் ஜாலம்.

ஞாயிற்றுக்கிழமையும் ரேவதிநக்ஷத்திரமுங்கூடியதினத்தில் மூலிகை யைக்கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் எல்லாருக்கும் காட்டுப் பன்றியாகவே காணப்படுவாய்.

660. எருமையாகும் ஜாலம்.

ஆயில்யமும் அமாவாசையுங்கூடிய தினத்தில் மூலிகையைக்கொண்டு வந்து காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு நீ எரு மையைப்போலவே காணப்படுவாய்.

661. காட்டெருமையாகும் ஜாலம்.

மூலநக்ஷத்திரம் ரேவதியுங்கூடியதினத்தில் மேற்படி மூலிகையைக் கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களுக்கு காட்டெரு மையாகவே காணப்படுவாய்.

662. எருதாகும் ஜாலம்.

பூசமும் வியாழக்கிழமையுஞ் சேர்ந்ததினத்தில் மூலிகையைக் கொண் டுவந்து காதில் வைத்துக்கொண்டால் எருதைப்போலவே தோன்றுவாய்.

663. பசுவாகும் ஜாலம்.

ஞாயிற்றுக்கிழமையும் ரோகணியுங்கூடியதினத்தில் மூலிகையைக் கொண்டு காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு பசுவைப்போலவே காணப்படுவாய்.

664. நாயாகும் ஜாலம்.

பூசமும் செவ்வாயுங்கூடியதினத்தில் மூலிகையைக் கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் நாயைப்போலவே தோன்றுவாய்.

665. பூனையாகும் ஜாலம்.

அஸ்வனிநக்ஷத்திரமும் வியாழக்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையை வேரறுத்து கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டு பூனையைப் போல் தோன்றவேண்டுமென மனதில் நினைத்தால் பார்க்கின்றவர்களின் கண்களுக்கு பூனையைப்போலவே காணப்படுவாய்.

666. மானாகும் ஜாலம்.

விசாகநக்ஷத்திரமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் கொண்டுவந்து காதில்வைத்துக்கொண்டால் பார்க்கிறவர்களுக்கு மானைப்போலவே காணப்படுவாய்.

667. ஆடாகும் ஜாலம்.

மகநக்ஷத்திரமும் ஞாயிற்றுக்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு ஆடாக தோன்றவேண்டுமென்று நினைப்பாயாகில் பார்க்கிறவர்களின் கண்களுக்கு நீ ஆட்டைப்போலவே காணப்படுவாய்.

668 மனிதனாகும் ஜாலம்.

சோதி நக்ஷத்திரமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டால் மனிதனைப்போலவே காணப்படுவாய் ஆனால் நீயும் மனிதன்தானே என்று கேட்டால் அம்மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு வேறு எந்தமனிதனைப்போலாகவேண்டுமென்று நினைக்கின்றாயோ அந்த மனிதனைப்போலவே காணப்படுவாய்.

669. பெண்ணாகும் ஜாலம்.

ரோகணியும் வியாழக்கிழமையுங் கூடியதினத்தில் மேற்படி மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டு பெண்ணாகவேண்டுமென்று மனதில் நினைத்தால் பார்க்கிறவர்களின் கண்ணிற்குப் பெண்ணைப்போலவே தோன்றுவாய்.

670. இராஜனாகும் ஜாலம்

சிங்கலக்கினமும் சுவாதியுங்கூடியதினத்தில் மேற்படி மூலிகையைக் காதில் வைத்துக்கொண்டால் அனைவர்களுக்கும் நீ ஒரு இராஜனைப்போலவே தோன்றுவாய்.

671. குருவாகும் ஜாலம்

அஸ்தநக்ஷத்திரமுங் கன்னியாலக்கினமும் குருவாரமுங் கூடியதினத்தில் மேற்படி மூலிகையைக் கொண்டுவந்து குருவாகத்தோற்றவேணுமென்று மனதில் நினைத்து காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு நீ குருவைப்போலவே தோன்றுவாய்.

672. சித்தர்களாகும் ஜாலம்.

ரோகணியும் செவ்வாய்க்கிழமையுஞ் சேர்ந்ததினத்தில் மூலிகையைக் கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டு சித்தர்களாக வேண்டுமென்று

நினைக்கும்பக்ஷத்தில் பார்க்கிறவர்களின் கண்களுக்குச் சித்தர்களாகவே காணப்படுவாய்.

673. மரமாகும் ஜாலம்.

ஆயில்யமும் அருக்கநாளுஞ் சேர்ந்ததினத்தில் மூலிகையைக்கொண்டு வந்து காதில்வைத்துக்கொண்டால் பார்க்கிறவர்களின் கண்களுக்கு மரத்தைப்போலவே காணப்படுவாய்.

674. மலையாகும் ஜாலம்.

அவிட்டமும் அமாவாசையுங்கூடியதினத்தில் மூலிகையைக் கொண்டு வந்து மலையாகத் தோன்றவேண்டுமென்று நினைத்துக் காதில் வைத்துக் கொண்டால் பார்க்கிறவர்களின்கண்களுக்கு நீ மலையாகவேகாணப்படுவாய்.

675. கல்லாகும் ஜாலம்.

விசாகநக்ஷத்திரமும் பருவமுங்கூடிய தினத்தில் மூலிகையைக் கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு கல்லைப்போலவே தோன்றுவாய்.

676. குளமாகும் ஜாலம்.

செவ்வாய்க்கிழமையும் சித்திரைநக்ஷத்திரமுங் கூடியதினத்தில் மூலிகையைக் கொண்டுவந்து குளத்தைப்போலவே இவர்களின் கண்களுக்குத் தோன்றவேணுமென்று நினைத்துக் காதில் வைத்துக்கொண்டால் அவர்களுக்கு குளமாகவே காணப்படுவாய்.

677. கிணராகும் ஜாலம்.

பரணியும் ஞாயிற்றுக்கிழமையுஞ் சேர்ந்ததினத்தில் மூலிகையைக் கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு கிணற்றைப்போலவே காணப்படுவாய்.

678. பக்ஷிகளாகும் ஜாலம்

சித்திரையும் செவ்வாய்க்கிழமையும் சேர்ந்ததினத்தில் மூலிகையைக் கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டு பக்ஷியாக வேண்டுமென்று நினைத்தால் அப்படியே பார்க்கின்றவர்களின் கண்களுக்குத் தோன்றும்.

679. பாம்புகளாகும் ஜாலம்

பரணியும் பருவமுங்கூடியதினத்தில் வேரைக் குளிசமாடி வைத்துக் கொண்டு நினைத்தபோது ஜாலமாடுஞ் சபையில் பாம்பாகத் தோன்றவேணுமென்றுக் காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின்கண்ணிற்கு பாம்பாகவே தோன்றுவாய்.

680. கோயிலாகும் ஜாலம்.

பூராடமும் சுக்கிரவாரமும் வருந்தினத்தில் பலியில்லாது பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து வேரை அருமல் எடுத்துவந்து குளிசமாடி வைத்துக் கொண்டு தேவையானபோது கோயிலாகத் தோன்றவேணுமென்று நினைத்துக்காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு கோயிலாகவே தெரியப்படுவாய் அனைவரும் ஆச்சரியப்படுவார்கள்.

681. வீடாகும் ஜாலம்

விசாகமும் ஞாயிற்றுக்கிழமையுங் கூடியதினத்தில் பொங்கலிட்டு மூலி

கையைக் கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு ஓர் பெரிய மெத்தைவீட்டைப்போலவே காணப்படுவாய்.

682. தானியப்போராகும் ஜாலம்.

மிருகசீரிடமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் மூலிகையைக் காப்புகட்டிக்கொண்டுவந்து காதில்வைத்துக்கொண்டு தானியப்போராகத் தோன்றவேண்டுமென்று நினைத்தால் அப்படியே தோன்றுவாய்.

683. கருடனாகும் ஜாலம்

அனுடமும் ஆதிவாரமுங்கூடியதினத்தில் மூலிகைக்குப் பொங்கல் பலி முதலிய தூபதீபங்கொடுத்துக் கொண்டுவந்து காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு கருடனாகவே தோன்றுவாய்.

684. காக்கையாகும் ஜாலம்.

கிருத்திகைநக்ஷத்திரத்தில் மூலிகையைக் கொண்டுவந்து காதில்வைத்துக்கொண்டால் காக்கையைப்போலவே தென்படுவாய். இதுவரையில் சொல்லிவந்த வேலைகளையெல்லாம் எந்தெந்த வேலைகளை எப்படிச் செய்யச் சொல்லியிருக்கின்றதோ அப்படியே செய்தால்தான் சித்தியடையும் ஒவ்வொரு வேலைகளுக்கும் மூலிகையிருக்குமிடஞ்சென்று அவ்விடத்தை சுத்தி செய்து மூலிகைக்குச் சாபநிவர்த்தி செய்து அதன்பிறகு பொங்கல்முதலியதுடன் காப்புகட்டி மூலிகையைக் கொண்டுவரவேண்டும் பலி சொல்லாததற்குப் பலிவேண்டியதில்லை நாம் எவ்வளவு கிரமமாக மூலிகையைக்கொண்டுவந்து செய்கிறோமோ அப்படி அப்படியே அது நம்மையும் கௌரவப்படுத்தும் இப்பேர்ப்பட்ட மூலிகைகளுக்கெல்லாம் பெரியோர்கள் சாபமுண்டு அச்சாபத்தின் பலனால் இதுகர்மிகளின் கண்களுக்குத் தென்படாது மேற்படி மூலிகையைக் கொண்டுவந்து சார்பிழிந்துக் காற்றுவாட்டம் பார்த்துவைக்கும்பக்ஷத்தில் அது சிலநாழிகைக்குள் கட்டி அசல் வீரமாகும்.

685. சிவந்தபுட்பம் மஞ்சளாகும் ஜாலம்.

ஒரு மலர்ந்த ரோஜா புஷ்பத்தை யெடுத்து கெந்தகக்குச்சியைக் கொளுத்தி அப்புகையைப் புஷ்பத்திற்குக் காட்ட அது மஞ்சள் நிறமாகிவிடும்.

686. தேங்காயில் முட்டையுண்டாகும் ஜாலம்.

ஓர் கோழிமுட்டையைக் காடியிலூரவைத்துக் கையிலெடுத்தால் ஜவ்வைப்பேன்று நிகளமாகவரும் அதை ஓர் தேங்காயின் கண்ணைத்திறந்து அதினுள் விட்டுவிட்டால் எப்போதும்போல் முட்டையாகிவிடும். அதைக் கொண்டுவந்து சபையில் காட்டி நான் இத்தேங்காயையுடைத்து இதனுள் முட்டையைக் காட்டுகிறேன் பாருங்களென்று சொல்லி சபையில் உடைக்க முட்டையானது கீழே உருளும் பார்ப்பவர்கள் உன்னை மகா மந்திரவாதியென்று மெச்சிக்கொள்ளுவார்கள்.

687. புட்டியில் முட்டைகாட்டும் ஜாலம்.

முன்போல் காடியில் ஊரவைத்த முட்டையை ஓர்புட்டிக்குள் செலுத்தி கொஞ்சம் ஜலம்விட அது பழயபடி முட்டையாகிவிடும் அதைக் கொண்டுவந்து சபையில் காட்ட புட்டிக்குள் முட்டை என்னவிதமாக வந்ததென்று ஆச்சரியப்படுவார்கள்.

688. இரகசியகடிதம் எழுதும் ஜாலம்.

படிகாரத்தை ஜலத்தில் கரைத்துப் பேனாவினால் தொட்டுக் கடிதத்தின்பேரில் எழுதவேண்டிய சமாசாரத்தை யெழுதிக் காயவைத்துவிட்டால்

ஒன்றுந் தெரியாது பிறகு அதை ஜலத்தில்தோய்த்துப் பார்க்க நன்ருக இங் கியைப்போல் தெரியும்.

689. கொளுத்திய காகிதத்தில் உருவந்தோன்றும்

அம்மான் பசசரிசியின் பாலைக்கொண்டு ஓர்கடிதத்தில் தேவையான உருவத்தை யெழுதிக் காயவைத்துப் பின் அதைக்கொளுத்த முன் எழுதிய உருவமானது நன்ருகத் தெரியும்.

690. கரைத்த சாம்பலை எடுக்கும் ஜாலம்

நெருஞ்சி முள்ளைப்பொடித்து வஸ்திரகாயஞ் செய்து விபூதியில்கலந்து வைத்துக்கொண்டு ஜாலமாடும் சபையில் ஓர் பாத்திரத்தில் ஜலத்தையூற்றி அதின் சாம்பலைப்போட்டுக் கலக்கிச்சபையோர்களைப் பார்த்து இதில் கலக்கிய சாம்பலை எடுத்துக்காட்டுகிறேன் பாருங்களென்று சொல்லி மொண மொண வென்று மந்திரஞ்செபித்துக் கொண்டே மேற்படி விபூதியைப் போட்டுத் துழாவியெடுக்கச் சாம்பலானது உருண்டையாகத் திரண்டுவரும். எல்லோரும் ஆச்சரியப் படுவார்கள்.

691. சென்னுகுன்னிமேயும் ஜாலம்

வேண்டிய அளவு சென்னுகுன்னியில் கற்பூரப்பொடியைப் போட்டுக் கலந்து வைத்திருந்து சமயம் வரும்போது ஓர் கிணற்றில்போட அது கிறு கிறென்று சுழன்று உள்ளேபோகும் எல்லோரும் ஆச்சரியப் படுவார்கள்.

692. தம்படிநகரும் ஜாலம்

நன்ருக இழைத்த மரத்தின் மீதுவிளக்கெண்ணப்பூசி அதில் ஒருமுனையில் ஓர் காசைவைத்து அதின்மேல் கற்பூரத்தைக் கொளுத்திவைக்க அது நகர்ந்துக் கொண்டே போகும்.

693. பழத்தையறுத்து உதிரங்காட்டும் ஜாலம்

ஒருபேனுகத்தியில் செம்பருத்திப்பூவின் இரத்தத்தைப் பூசிக்காயவைத்துக்கொண்டு சபையில் ஏதேனும் ஒருப்புத்தைக்கொண்டுவரச்செய்து அதை மேற்படி கத்தியால் அறுக்க உதிரமானதுவரும் எல்லோரும் பிரமிப்பார்கள்.

694. அதிகமாக சாப்பிடும் ஜாலம்

கழுதைக் குறத்தியின் மூக்கைக் குட்டையில் முடிந்து வைத்துக் கொண்டு எவ்வளவு சாதத்தையேனும் அதை முகந்துக்கொண்டே தாராளமாகச் சாப்பிடலாம்.

695. கையில் வெற்றிலை சிவக்கும் ஜாலம்

வேலன் கொழுந்தைக் கையில் நன்ருகத்தேய்த்துக் கசக்கிக்கொண்டு வெற்றிலையில் சுண்ணும்பைத் தடவிக் கையில் வைத்துக்கசக்க அது சிவப்பாகும்.

696. கிளிஞ்சல் எற்பத்தியாகுஞ் ஜாலம்

ஊமச்சியைப்பொடித்து ஜலத்தில் கலக்கிவிட்டு சுமார் அரைமணி சாவகாசம் பொருத்துப்பார்க்க கிளிஞ்சல்கள் மேய்ந்துக்கொண்டிருக்கும்.

697. குயவன் சூளையைச் சிதறவைக்கும் ஜாலம்

குயவன் சூளையை அடுக்கித் தீயிடாமுன்னம் அச்சூளை நாற்புறங்களி

லும் கெச்சக்காய்களை வைத்துவிட அவன் தீயிட்டதும் சூளையிலுள்ள பானைகளெல்லாம் உடைந்துவிடும்.

698. கரைத்தமணலை எடுக்கும் ஜாலம்

ஆற்றுமணலுடன் வேலன்பிசினியைப் பொடிசெய்துக் கலந்து அதை ஜலத்தில் கரைத்து சபையில்காட்டி கையைவிட்டுத் துழாவியெடுக்க மணலெல்லாம் உருண்டையாக கையோடுவரும்.

699. சீலையை அவிழ்க்கும் ஜாலம்

கழுதைகள் ஒன்ருேடொன்று சேரும்போது ஆண் கழுதையின் வால் மயிரை கத்தரித்துவந்து கண்ணில்லாத புற்றின்மேல் படர்ந்திருக்கும் கட்டுக்கொடிச்செடிக்கு சாபநிவர்த்திசெய்து கிராணத்தில் காப்புகட்டி தூபதீபங்கொடுத்து வேரை அராமல் பிடுங்கிவந்து வளையமாடி அதின்மேல் மேற்படி கழுதை மயிரைச் சுற்றி ஐங்காயம்பூசி தங்கக்கம்பியும் வெள்ளிக்கம்பியுஞ்சோத்து அதின்மேல்சுற்றிப் பூசையில்வைத்து எட்டுநாள் விடாது காலைமாலை ஜாலக்காளைத் துதித்து கையில் மாட்டிக்கொண்டு மேற்புறந் தள்ள சீலை அவிழும் கீழ்ப்புறந்தள்ள எப்போதும் போலாய்விடும்.

700. எக்காளம் வாசிக்கும் ஜாலம்

நத்தைச்சூரிவேரைக் கொண்டுவந்து ஐங்கோலம்பூசி பூசையில்வைத்து ஜாலக்காளை தியானித்து ஆம் ஓம் சுவஹா வென்று லக்ஷத்தியெட்டுரு செபித்து வைத்துக்கொண்டு தேவையானபோது அவ்வேரைச் சபையிலகொண்டுவந்து முன் செபித்த மந்திரத்தைத் தியானித்து மண்ணையள்ளி எதிரே போட்டு வேரைக்கையில்பிடித்துக்கொண்டு முறுக்கிஞல் எக்காளம் தாரை கர்நாடகமுதலிய வைதியங்களின் சப்தமெல்லாம் நன்ருகக்கேட்கும் எல்லோரும் மகா ஆச்சரியப்படுவார்கள்.

701. சர்வவாத்திய ஜாலம்

பள்ளயர் பள்ளயர் என்று ஒருவகைச் சாதியர்கள் கையில் இரும்புவளையம்போட்டுக்கொண்டு கிராமங்களில் வசிப்பார்கள். அவர்கள் மரணமடைந்தவர்களை கையிலிருக்கும்வளையத்தோடேயே தகனஞ்செய்வார்கள் அதைக் கண்டு பிடித்து மறுநாள் காடாற்றுமுன் அவர்கள்போட்டிருக்கும் இரும்பு வளையத்தை எடுத்து வந்துக் கொல்லனிடத்தில் கொடுத்து பாக்குவெட்டியைப்போல செய்துவைத்துக்கொண்டு பிறகு கிராணம்பிடிக்கும்போது சங்கஞ்செடிக்குச் சாபநிவர்த்தி செய்து பொங்கல் பலிதூபதீப முதலியவைகளைப் பலமாகச்செய்து கிராணம் விடுவதற்குள்ளாக அதின் வடக்கே போகிறவேரை அறுமல்பிடிங்கிக் கொண்டுவந்துப்பூசையில்வைதது ஜாலக்காளைப் பூசித்து ஐங்கோலம் பூசி சபையில் கொண்டுவந்து அதைப் பாக்கு வெட்டியால் வெட்ட சகலவாத்தியத்தினுடை சப்தங்களும் காதுக்கினிமையாகக்கேட்கும். இவ்வேலைகளின் மர்மங்களையெல்லாம் குருமுகாந்தரமாக் கேட்டுச் செய்வதே நல்லது

702. எக்ஷணி ஜாலம்.

ஸ்ரீம், இரீம், கிலீம், அவ்வும், உவ்வும், மவ்வும், நமசிவய ஓம் என்று செபித்து சாதிக்காய், லவங்கம், கிராம்பு, ஏலம், வால் மிளகு, கற்கண்டு, பழம், பால் இதுகள் வேண்டுமென்று எக்ஷணியைத் தியானிக்க சகலமும் வரும் பார்த்தவாகளெல்லாம் உன்னை மஹாவேலைக்காரனென்று மெச்சுவார்கள்.

703. இதுவுமது

தெப்பக்கால் மூலிகைக்கு வெள்ளிக்கிழமையதினம் காப்புகட்டிபொங்கல் தூபதீபங்கொடுத்து மறுவெள்ளிக்கிழமைவரைக்கும் காலைமாலைவிடாது மேற்படி மந்திரத்தைச் செபித்துக் கொண்டேயிருந்து அதன் வடக்கே போகிற வேரை அறுது பிடுங்கிக்கொண்டுவந்து ஐங்கோலம் பூசி, அதற்குமேல் கருச்சீலை சுற்றி தங்கக்கடயத்தில் போட்டு மூன் மந்திரத்தை லக்ஷமுருகொடுக்கச் சித்தியாகும். அதை எடுத்துவைத்துக்கொண்டு ஜாலமாடுஞ் சபையில் முக்காடுபோட்டு குந்திக்கொண்டு எக்ஷணியைத்தியானஞ் செய்தால் எக்ஷணியானவள் சகல தின்பண்டங்களோடும் வருவாள். நீ அதையெல்லாம் வாங்கி சபையிலுள்ளவர்களுக்கெல்லாம் கெடுக்கலாம். நீ மாத்திரம் சாப்பிடக் கூடாது.

704 இதுவுமது

பாம்பு மண்டூகத்தைப் பிடித்துக்கொண்டிருக்கும்போது ஒரேவெட்டில் இரண்டு தலைகளும் ஒன்ருக விடும்படியாய்வெட்டி எடுத்துக்கொண்டு ஐங்கோலத் தைலத்தில் நனைத்து சிகப்புக்கம்பளியில் பைதைத்து அப்பைக்குள் தலைகளைவைத்து வாயைத்தைத்துவிட்டு உரலில்வைத்துக்குத்தினுல் அதன் காற்றுபோய்விடும் அதையெடுத்து பத்திரமாகவைத்துக்கொண்டு நினைத்த வேலைகளையெல்லாம் முடித்துக்கொள்ளலாம்.

705 மணலை அல்வாசெய்யும் ஜாலம்.

பாதம் பிசின் 1-பலம், சீனுகற்கண்டு 1-பலம், குங்குமப்பூ விராகனெடை அரிக்கால் இம்மூன்றையும் மணலைப்போல தூள்செய்து வைத்துக்கொண்டு, ஒரு தட்டில் மணலைப்போட்டு சபையோர்களுக்குக்காட்டி, இம்மணலை அல்வாயாகச் செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி ஒருபெரிய துணியை விரித்துமூடி தந்திரமாக மணலைக் கீழே கொட்டிவிட்டு, கொட்டுண்டது தெரியாமல் கலைத்துவிட்டுமேல் மூடியிருக்கும் துணியில் கள்ள அறை தயார் செய்து அதில் ஒருவருக்குந்தெரியாது மூன் சேகரித்த சாமானை வைத்திருந்து, அதைச் சாக்கிரதையாகத் தட்டில் கொட்டிக்கொண்டு உனக்கு வாயில் வந்த மந்திரத்தைச் சொல்லிககொண்டே துணியைத் திறந்துக்காண்பிக்க தட்டிலிருக்கும் சாமானுனது மணல்போலவே தோன்றும். அதை மறுபடியும் துணியால் மூடி ஜலந்தெளித்துக் கொஞ்சநேரங்கழித்து திறந்துபார்க்க அசல் அல்வாயைப்போலவே கட்டியிருக்கும். ஜலம் விடும்போது நிதானமாகப் பார்த்து அளவுக்குத் தக்கபடி விடவும். அதை அறுத்து எல்லோருக்குங் கொடுத்துச் சாப்பிடச் சொல்லலாம்.

706. இருதலைக்கொள்ளி ஜாலம்.

அக்கினியைத் துணியில்சுருட்டி, சக்கரங்கீறி அதில் சிவ வசி என்னும் எழுத்தையடைத்து ஐங்கோலம், சுடலைக்கருபூசி, எதிரியின் பெயரை மனதில் நினைத்து சிவ வசியென்று லக்ஷத்தியெட்டு செபித்து இருதலைக்கொள்ளி நீ உடனேசென்று என்பகைவனின் வீட்டைக் கொளுத்தென்று சொல்வாயானுல் தவராது கொளுத்திவிடும்.

707. எட்டிமுளை ஜாலம்

கொடி, சீலை, சவத்தைலம், ஐங்கோலதைலம் இவைகளை ஒன்ருய்ச் சேர்த்து உருக்கிக்கொண்டு, கல்வத்தில்வைத்து அரைத்துசசிமிளில் வைத்துக்கொண்டு ய ந ம, யங், வங். சிங், சுவஹாவென்ற லக்ஷத்தியெட்டு செபித்து வைத்துக்கொண்டால் சகலவித்தைகளையும விளையாடலாம்.

708. சேக்கில் எண்ணெய் வராத ஜாலம்

எட்டி முளைக்கு மையைத்தடவி முன் செபித்த மந்திரத்தை 32-உரு கொடுத்து செக்காடு மிடத்தில் புதைத்து விட்டால் செக்கில் கொஞ்ச மேனும் எண்ணெய் வராது.

709. ஆலையில் ரசம்வராத ஜாலம்

கரும்பு ஆலையாடு மிடத்தில் மேற்படி மையை எட்டி முளைக்குத்தடவி 64-உருகொடுத்துவிட கொஞ்சமேனும் இரசமிறங்காது.

710. திராவகங்கள் இறங்காத ஜாலம்.

வாலை வைத்து திராவகங்கள் இறக்கு மிடத்தில் எட்டி முளைக்கு மையைத் தடவி மந்திரத்தை 7-தரஞ் செபித்துப் புதைத்துவிட கொஞ்ச மேனும் திராவகங்கள் இரங்காது.

711. காளவாய் வேகாத ஜாலம்.

சுண்ணும்புக் காளவாய் இருக்குமிடத்தில் மையைத்தடவி மந்திரஞ் செபித்து எட்டிமுளையை அடித்துவிட்டால் காளவாய் வேகாது.

712. கோல்லனுலை வேகாத ஜாலம்

எட்டி முளைக்கு மையைத்தடவி மந்திரத்தை 16-தரஞ் செபித்து கொல்லனுலையில் புதைத்துவிட்டால் கொஞ்சமேனும் உலைக்கடம்வேகாது.

713. சேங்கல்சூளை வேகாத ஜாலம்

முளைக்கு மையைத்தடவி மந்திரத்தை 32-தரஞ்செபித்து செங்கல் சூளையில் புதைத்து விட்டால் சூளையானது வேகாது.

714. வேள்ளாய் வேகாத ஜாலம்

முளைக்கு மையைத்தடவி மந்திரத்தை 64-தரஞ் செபித்து வண்ணன் வெள்ளாயடுப்பில் புதைத்து விட்டால் வெள்ளாய் வேகாது.

715. கடைகளில் வியாபாரமில்லாத ஜாலம்

வியாபாரமாகுங் கடைகளில் மேற்படி எட்டி முளைக்கு மையைத் தடவிப் புதைத்து விட்டால் எவ்வளவு நாளான போதிலும் வியாபாரமாகாது.

716. சாதம் வேகாத ஜாலம்

எந்த அடுப்பில் முளைக்கு மையைத்தடவி புதைத்து விடுகின்றோமோ அந்த அடுப்பில் எவ்வளவு தீயைப்போட்டாலும் சாதமானது வேகாது. இந்த எட்டி முளைவித்தையில் இன்னம் எவ்வளவோ வேலைகளையெல்லாம் செய்யலாம் அதையெல்லாம் குருமுகாந்தரமாகத் தெரிந்துக்கொண்டு செய்யவேண்டும். தவிரநாம் புதைத்திருப்பதை எடுத்துக்கழுவி விட்டு அவ்விடத்தைக் கோமயத்தினுல் சுத்தஞ்செய்யும் பக்ஷத்தில் எப்போதும்போல் அந்தந்தவேலைகளெல்லாம் தாராளமாக நடக்கும்.

717. மாடன் வசிய ஜாலம்

விடந்தின்று இரந்துபோனவனுடைய கரியைக் காடாற்று முன்னெடுத்துவந்து ஐங்கோலம் விட்டரைத்து எதிரியைப்போல உருவமெழுதி அவ்வுருவத்திற்கு முகத்தை மாத்திரம் வீங்கினமாதிரியெழுதி அவன் பேரை அதின் கீழ்யெழுதி ஆகாயமாடன் அந்தரமாடனை மனதில் துதித்து, காரீ

யத்தகட்டில் ஓம் நமோபகதே ஓம் படு சுவஹாவென்று லக்ஷ முருசெபித்து பூசை, பலிமுதலியதுகளைச்செய்துப் பிறகு அத்தகட்டில் எதிரியின்பேரை மாட்டி, ஐங்கோலத்தைப்பூசி, மாடனைத் தியானித்து உன் வசமாக்கிக் கொண்டு ஓ ஆகாயமாடா இந்தா கல்லென்று சொல்லி கல்லைத்தகட்டின் பேரில் வைத்துவிட்டால், அது எவ்வளவுபேர்கள் பார்த்திருந்தாலும் கல்லை யும், மண்ணையும், சேற்றையும், குப்பையையும் வாரி வாரியிறைக்கும். இதல் லாமல் அசங்கியமான வேலைகளையெல்லாம் செய்யும். அப்போது எதிரி யானவன் எங்கு போனாலும் அவனைவிடாது அவன்கூடவேசென்று பலவித இம்சைகளையெல்லால் செய்துக்கொண்டேயிருக்கும் ஐந்து நிமிஷமாகிலும் சும்மாயிருக்காது இதுகளையெல்லாம் பொருக்காமல்படி எதிரியானவன் உன்னை வந்து வணங்குவானாகில், முந்திநீ எழுதிய உருவைக்கலைத்துவிட்டு, மாடனைத்துதித்து பூசைமுதலானதும் பலமாகப்போட்டு மாடனை வணங்கி முந்திவைத்த கல்லை கேட்டு வாங்கிக்கொண்டால் நிவர்த்தியாகுமென்று குருநாதருடைய அருளினால் யானாகிய தேவேந்திரநாத் சொல்லுகின்றேன்.

718. இராஜ வசியம்

ஆனைவணங்கி, நிலப்பனைவேர், அருகு, வெள்ளெருக்கு, காஞ்சோறி, ஆவாரை முசுமுசுக்கை, சுழலாவாரை, பொற்றலைக்கையான், வேம்பு இவை களின் வேரை சமயெடையாக யெடுத்துச் சூரணித்துத்தேனில் குழைத்துத் திலர்தமிட வசியமாம்.

719. ஸ்திரீ வசியம்

தாரம், துருசு, செஞ்சந்தனம், சவ்வாது, கற்பூரம், குப்பைமேனி, கொன்றை இதுகளை சமயெடையாகயெடுத்து தேனிலரைத்துத் திலர்தமிட வசியமாம்.

720. மிருக வசியம்

விஷ்ணுகிரந்திவேர், விஷங்கொல்லி, காடுகட்டி, தொட்டால்சுருங்கி, நாயுருவி, முன்னை, சங்கன்வித்து. அழிஞ்சில் இவைகளை ஓர் நிறையாகத் தேனிலரைத்துத் திலர்தமிட்டுச் செல்ல மிருகங்கள் வசியமாகும்.

721. சர்ப்ப வசியம்

பொற்றலைக்கையான், தும்பைவேர், நிலம்புரண்டி, சிறுகீரை, அவுரி, கரியசாலை, சிகப்புநாயுருவி, காஞ்சொறி, பொற்கொடி, ஆடையொட்டி இவைகளைச் சமயெடையாக யெடுத்து புத்துத் தேனலரைத்து திலர்தமிட் டுச்செல்ல சர்ப்பங்கள் வசியமாகி படமெடுத்தாடும்.

722. சத்துரு வசியம்

பொற்றலைக்கையான், வெள்ளெருக்கு, விஷ்ணுகிரந்தி இவைகளின் வேரை காராவின் நெய்யிலரைத்துத்திலர்தமிட்டுச்செல்ல சத்துருவசியமாம்.

723. லோக வசியம்

நின்றால் சிணுங்கி, செவ்வரத்தி, ஆவாரைமுல்லை, கொழுந்தெட்டு, கூத் தன் குதம்பை இவைகளின் வேரை கொன்றைப் பன்னீர் விட்டரைத்துத் திலர்த மிட்டுச்செல்ல லோகத்திலுள்ளவர்க ளெல்லாம் வசியமாகி கேட் டதைக்கொடுத்து வணங்குவார்கள்.

724. வசியம்

வெள்ளெருக்கு, அழுகண்ணி, கோரோசனை மண்டுகேப்பிச்சு இவைகளை

எருக்கன் பழுப்புச் சாற்ருலரைத்து நமக்கிஷ்ட மானவர்களின்மேற் பூச அவர்கள் வசியமாகி நம்மைவிட்டகல மாட்டார்கள்.

725. இதுவுமது.

பொற்றலைக்கையான் வெள்ளெருக்கு காட்டட்டை, மண்டுகேப்பிச்சு இவைகளில் ஐம்மலஞ் சேர்த்து அரைத்து நமக்கிஷ்டமானவர்களுக்குக் கொடுக்க அவர்கள் நம்மைவிட்டு எந்நாளும் பிரியமாட்டார்கள்.

726. சர்வ மோகனம்

ஆம்பல், அல்லி, அதிமதுரம், கோஷ்டம், ஆலமரப்புல்லுருவி, வெண் குன்றிவிரை இதுகளை முலைப்பாலில் அரைத்துத் திலர்தமிட சர்வமும் மோ கனமாகும்.

727. இராஜ மோகனம்

குங்குமம், புல்லுருவி இவ்விரண்டில் நெய், தேன், ஆலம்பால் இவை களைச் சமன்சேர்த்து அரைத்துத் திலர்தமிட மோகனமாம்.

728. புருட மோகனம்

சிகப்பு ஆமணக்கு சிகப்பகத்தி சிகப்புநாயுருவி சிகப்புமுள்ளி புல்லுருவி மானைத்தேடிச்சென்ருன் இவைகளில் தன்கருவைச்சேர்த்து தேன்விட்ட ரைத்துத் திலர்தமிட புருஷ மோகனமாம்.

729. ஸ்திரீ மோகனம்

குங்குமம், வாழை, அல்லி, அலரி, சந்தனம், நீலி, கோடாசூரி, செங் குன்றி, மண்டுகம் இவைகளையெல்லாம் புத்துத்தேனுலரைத்துத் திலர்தமிட் டுக்கொள்ள ஸ்திரீகள் மோகனமாமென்று என்குருநாதருடைய கிருபை யினுல் யானுகிய தேவேந்திரநாத் சொல்லுகின்றேன்.

730. மிருக மோகனம்

வெண்குன்றி, முத்தக்காசு, கெச்சக்காய், நரிமண்டையோடு இவை களைச் சமயெடையாக யெடுத்து முலைப்பால் விட்டரைத்து திலர்தமிட்டுக் கொள்ள மிருகமோகனமாம்.

731. சொர்ன மோகனம்

மருதன் ஊமத்தை மருவூமத்தை நன்னரி இவைகளின் வேரைவகைக் கிச் சரியிடையாகயெடுத்து வெள்ளுமத்தன் சாற்றிலரைத்துத் திலர்தமிட சொர்ன மோகனம்.

732. சத்துரு மோகனம்

நாயுருவி வெண்குன்றி பொன்னுங்காணி செங்கழுநீர் தூதுவேளை சிறு புன்னை இவைகளைவகைக்குப்பலம் ஒன்ருகயெடுத்துக்கோடா சூரிச்சாற்றி லரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு திலர்தமிட்டுச் செல்ல சத்துருக்கள் மோகன மாவார்கள்.

733. லோக மோகனம்

முல்லை வெண்கொழுஞ்சி காயம் நரிப்பயறு குன்றி நொச்சி கரிசலாங் கண்ணி ஐவிரலிவேர் சோம்பு கெஞ்சா இவைகளைச் சமயெடைத்தூக்கி நன் னரிச் சாற்ருலரைத்துத் திலர்தமிட லோகமோகனமாம்.

734. தம்பனம்

கருங்குன்றி சதுரக்கள்ளி ஆவாரை கறப்புகெஞ்சா ஊமத்தை திகைப்

பூண்டு சுவரொட்டி நிலத்தம்பிஇவைகளைச்சரியெடையாகயெடுத்துக் கொசு
கின் தேனாலரைத்துத் திலர்தமிடத் தம்பனமாகும்.

735. சுக்கிலத் தம்பனம்

விஷ்ணுகிரந்திவேர் விளாம்பிசின் சிவந்த கெஞ்சா ஊமத்தை கருப்பு கெஞ்சா மருவூமத்தன் இவைகளை சமயெடையாக யெடுத்துப் பசு நெய்யி லரைத்துத் திலர்தமிட சுக்கிலஸ்தம்பனமாகும்.

736. ஆயுதத் தம்பனம்

நத்தைச்சூரிவேர் பொன் முசுட்டைவேர் வாழைவேர் பவாழைத் தண்டு பச்சைப்பாம்பு பருத்தி கண்டங்கத்திரி மூங்கிலிலை இவைகளைச் சரி யெடையாக யெடுத்து தேனிலரைத்துத் திலர்தமிட ஆயுதத் தம்பனமாகும்.

737. மிருகத் தம்பனம்

பச்சோந்தி கன்னிமூலம் இருள்மூலிவேர் நன்னாரி பாலை பேய்ப்பீர்க்கு இவைகளை ஓர் நிரையாயெடுத்து பசுநெய்யிலரைத்துத் திலர்தமிட மிருகத் தம்பனமாம்.

738. ஜலஸ் தம்பனம்

நீர்மேல் நெருப்பு வன்னி கட்டுக்கொடி நிண்ணாசுணுங்கி நிலம்புரண்டி பேய்முசுட்டை தூதுளை சீரகம் இருபிரம்பு சுளத்தி முடக்கொத்தான் இது களைச் சமயெடையாகயெடுத்து தேன் விட்டரைத்துத் திலர்தமிட ஜலஸ் தம்பனமாகும்.

739. அக்கினித் தம்பனம்

சங்கன்வேர் கற்றாழைவேர் தாமரைக்கிழங்கு குப்பைமேனிவெள்ளைக் காக்கட்டான் செவ்வரத்தி சுண்டை செங்கொடி வட்டத்துத்தி ஓரிலைத் தாமரை இரசம் இவைகளை அரைத்துத் திலர்தமிட்டுக்கொள்ள அக்கினித் தம்பனமாகும்.

740. தேவ தம்பனம்

கொத்தான் கொளுஞ்சி நிலவாகை ஆலம்வேர் இவைகளைச் சரியெடை யாகப் பாலிலரைத்துத்துத் திலர்தமிட தேவதம்பனமாம்.

741. சர்வ தம்பனம்

சிறியாநங்கை நந்தியாவட்டை சிறுசின்னி பெறுசின்னி முசுமினுக்கி நாகவல்லி ஆத்திவேர் செவ்வாமணக்கு சுவரொட்டி கருங்குன்றி தண்ணீர் விட்டான். இவைகளைச்சரியெடையாக அரைத்துத் திலர்தமிட்டுவர சர்வ மும் தம்பனமாகும்.

742. உச்சாடனம்

தடையத்தான் பாம்புகண்ணி சாத்திரபேதி நத்தைச்சூரி குடியோட்டி நாய்மயிர் கழுதைப்புட்டை அதிவிடையம் இதுகளை ஓரிடையாயெடுத்தந தேனிலரைத்துத் திலர்தமிட சகலமும் உச்சாடனம்.

743. மிருக உச்சாடனம்

நரிமிரட்டி இருவரை மிரட்டி எருமைப்புட்டை புலையரைச் சுட்ட சாம் பல் சீதாதேவி செங்கழுநீர் இவைகளைச் சமயெடையாக தேனிலரைத்துத் திலர்தமிட மிருகங்கள் உச்சாடனமாகும்.

744. சத்துரு உச்சாடனம்

இலைக்கள்ளி வேர் திகைப்பூண்டு அரமுறித்தான் காக்கைக்கூடு வேம்பு பிணஞ்சுட்ட யெலும்பு, தூரச்சீலை இவைகளைச் சேர்த்து சத்துரு உச்சாடனஞ் செய்ய நல்லது.

745. தேவ உச்சாடனம்

காக்கைக்கூண்டு கழுதைப்புட்டை தூரச்சீலை துருசு சடை சுடுகாட்டுச் சாம்பல் இவையெல்லாம் சேர்த்து செய்ய தேவர்கள் உச்சாடனமாவார்கள்.

746. விஷ உச்சாடனம்

நீலி நீர்மேல் நெருப்பு மாவிலிங்கம் விஷ்ணுகிரந்தி இந்நான்கின் வேருடன் பாம்பு பிச்சு நாபி சேர்வாளம் இவைகளைக் கூட்டி அரைத்து லங் மங் கென்று லக்ஷமோதி வைத்துக்கொள்ள விஷ உச்சாடனமாகும்.

747. ஸ்திரீ உச்சாடனம்

பூனை வணங்கி கௌதும்பை பச்சை ஓணான் முதுகெலும்பு வாழை தேள் கொடுக்கிலை தூரச்சீலை திகைப்பூண்டு இவைகளைச் சேர்த்து செய்ய ஸ்திரீகள் உச்சாடனமாவார்கள்.

748. வியாதி உச்சாடனம்

கரந்தை திரிகடுகு சித்திரமூலம் மிளகு சீந்தில் மஞ்சள் மிளகா இவைகளைச சேர்க்க வியாதிகள் உச்சாடனமாகுமென்று மேலோர்கள் சொல்லுவார்கள்.

749. பில்லி, சூன்யம், ஏவல், இவைகளுக்கு சிலகை மந்திரம்.

கொன்றை செங்கழனி கோஷ்டம் வெண்குன்றி மாடப்புறாவெச்சம் விந்து நகம் இவைகளைப் பழச்சாற்றாலரைத்து வைத்துக்கொண்டு ஓம் பரிசினை தெகுதெகு சிங்ரங் சித்திரரூபி சிஷ்ட பரிபாலனி ரங்ரங் வாங்கு வாங்கு உருளு உருளு ஓடுஓடு உங்உங் எங்எங் ஐயும் சுவாஹாவென்று ஆயிரத்தெட்டுருவு செபிக்க எப்படிப்பட்ட பில்லி சூன்யமாயிருந்தாலும் விலகிவிடும்.

750. லேபனம்

குன்றிவிரை நீர்முள்ளிவிரை அரிதாரம் கோஷ்டம் இவைகளைச் சமயெடை யெடுத்து முலைப்பாலி லரைத்து பெண்ணின் தலையிற்றேய்த்து அவளைச் சேர என்னாளும் பிரியமாட்டாள்.

751. ஸ்திரீ லேபனம்

பொன்னுவாரை வசம்பு விஷ்ணுகிரந்தி இவைகளை நல்லெண்ணெயிற் காய்ச்சிப் பூசிக்கலந்தால் என்னாளும் பிரியமாட்டாள்.

752. லேபனமிரண்டிறகும் பொது மந்திரம்

அரி ஓம் லம் லம் சர்வம் வணங்கு மாதங்கி சிங் ஐமோகி மோகி ஔவும் ஸ்ரீயும் நமநமாவென்று ஆயிரத்தெட்டு செபித்துப் பிறகு உபயோகிக்கவும்.

753. ரட்சணை

சொற்றுன் கொழுஞ்சி வண்ணை புன்னை வெள்ளாமணக்கு கருங்

கண்ணி செம்போத்தெச்சம் புராயிறகு தாமரைநூல் ஜாதிலிங்கம் இவைகளைச் சேர்த்து மந்திரமோத ரட்சணையாகும்.

754. இராஜ எடனை

காக்கைப்பூண்டு கருங்குன்றி கொல்லைக்கம்பு நாகத்திஹுண் லிங்கம் அரிதாரம் கோட்டம் இவைகளைச் சேர்த்து மயான பூசை செய்ய இராஜ எடனையாகும்.

755. புருட எடனை

திருகுகள்ளி வெள்ளைக்காக்கட்டான் செம்முள்ளி தகரை கொழுஞ்சி ஆரை கோஷ்டம் சுக்கு இவைகளைச் சேர்த்துச் செய்ய புருட எடனையாகும்.

756. ஸ்திரீ எடனை

சித்திரமூலம் ஆமணக்கு கோஷ்டம் வாழை பூநீர் பாம்பூண் தவளை பூண் இவைகளைச் சேர்த்துச் செய்ய ஸ்திரீ எடனையாகும்.

757. மிருக எடனை

பூனைக்காலி செங்கத்தாரி அறுகன்வேர் முத்தக்காசு இருவரை யொட்டி காஞ்சொறி இவைகளில் நாயூண் கூட்டிச்செய்ய மிருக எடனையாகும்.

758. தேவ எடனை

கருங்காக்கட்டான் திருகுகள்ளி செங்கத்தாரி வெள்ளைக்காக்கட்டான் குப்பைமேனி திகைப்பூண்டு தொட்டால்வாடி பன்றியிரத்தம் நாரைரத்தம் இவைகளைக் கலந்து செய்ய தேவ எடனையாகும்.

759. லோக எடனை

ஆடு தீண்டாப்பாளை வடக்குவேர் கள்ளி கொத்தான் தும்பைபால் பன்றிநெய் இவைகளைக் கூட்டிச்செய்ய லோக எடனையாகும்.

760. பூதப்பசாசு எடனை

கிலுகிலுப்பை ஆடு தீண்டாப்பாளை கீழாநெல்லி சிறுகீரை பொற்றலைக் கையான் பைத்தியம் பிடித்தவன் மண்டையோடு இவைகளைச் சேர்த்துச் செய்ய சகல பூதப் பிசாசுகளும் எடனையாகும்.

761. ஆக்ருஷ்ணம்

கற்றாழை பாதிரி முல்லை காக்கணம் கோழியவரை காக்கணங்குருவி செம்பைவித்து உப்பு சண்டை நாகப்பூச்சி இவைகளைச் சேர்த்துத் தீட்ட ஆக்ருஷ்ணமாகும்.

762. புருட ஆக்ருஷ்ணம்

சிறு புன்னை விஷ்ணுகாந்தி கொத்தான் குறுந்தொட்டி வசம்பு குன்றி மஞ்சள் காக்கைப்பூண்டு விலாமிச்சு வெட்டிவேர் இவைகள் வகைக்கு விராகனெடை ஒன்றாக யெடுத்துத் தீட்ட ஆக்ருஷ்ணமாகும்.

763. இராஜ ஆக்ருஷ்ணம்

தலைச்சுருளி முள்ளி சத்திச்சாட்டரசனை ஆந்தைக்கண் நீர்மேல் நெருப்பு செம்பூலா இவைகளைப் புத்துத்தேனில் தீட்ட இராஜ ஆக்ருஷ்ணமாகும்.

764. ஸ்திரீ ஆக்ருஷ்ணம்

உள்ளொட்டி புன்னை கொன்றை உப்பு செம்போத்துவால் அரணைவால் புராயெச்சம் நாகத்தின் சட்டை இவைகளைக் கூட்டிச் செய்ய ஸ்திரீ ஆக்ருஷ்ணமாகும்.

765. மிருக ஆக்ருஷ்ணம்

நன்னாரி துடரி மேனி சிறுகீரை கொன்றை பொன்னுவாரை முட்டை கஸ்தூரி மஞ்சள் புராயெச்சம் இவைகளைக் கூட்டிச்செய்ய மிருக ஆக்ருஷ்ணமாகும்.

766. தெய்வ ஆக்ருஷ்ணம்

மேனி சிறுபுன்னை பொற்கொன்றை சிவனார் வேம்பு சென்னுபுருவி மருளூமத்தை இவைகளில் மூலைப்பால் சேர்த்துச் செய்ய தெய்வ ஆகருஷ்ணமாகும்.

767. லோக ஆக்ருஷ்ணம்

தொட்டால்வாடி வெள்ளெருக்கு கலப்பைக்கிழங்கு பால்சுரண்டி சிறு புன்னை ஐங்கோலம் புராயிறகு அரச்சீலை இவைகளைச் சேர்த்துச்செய்ய சர்வ லோக ஆக்ருஷ்ணமாகும்.

768. பேதனம்

கோட்டான்முட்டை மடிக்குருவி செம்பருத்தி வெண்கொழுஞ்சி செவ்வாவி கோட்டம் துளசி நெடுவாலம் தலையில்லாடி இவைகளைச் சேர்த்துக்கொட்ட ஒருவர்க்கொருவர் தாபப்பட்டு விலகிடுவர்.

769. இராஜபேதனம்

கோழியவரை காக்கைக்கூண்டு தேள் முதுகெலும்பு சீந்தில் தும்பை முசுட்டை காஞ்சிரை பச்சோந்தி இவைகளைச் சேர்த்துச் செய்ய இராஜ பேதனமாகும்.

770. புருடபேதனம்

ஆடு தீண்டாப்பாளை செளதும்பை நச்சுபல்லி பெருந்தும்பை பகையாளியின் வாய்ச்சோறு இவைகளை மூலைப்பாலிலரைத்துச் செய்ய புருட பேதனமாகும்.

771. ஸ்திரீ பேதனம்

சிதாதேவி செங்கழுநீர் வாழை குடியலைத்தான் பெருந்தும்பை கார்தம் காக்கைக்கூடு கழுதைச்சடை இவைகளைச் சேர்த்துச் செய்ய ஸ்திரீ பேதனமாகும்.

772. மிருக பேதனம்.

சங்கு நருங்குன்றி எட்டி முசுட்டை கழுகொம்பு செம்போத்து கருங்காக்கைமண்டை முசாறுமுட்டை இவைகளைப் பதியலைத்தான் சாற்றிலாட்டி குளிகைசெய்து நிழலிலுலர்த்திப் பிரயோகிக்க மிருகபேதனமாகும்.

773. தேவபேதனம்.

கழுதைக்குளம்பு கழுதைச்சடை புலிக்கொழுப்பு பாதிரி மாவிலங்கு பூதமடைத்தான் ஆடுதீண்டாப்பாளைவித்து சாக்குருவி இவைகளை ஆலம் பாலிலரைத்து உபயோகிக்க தேவபேதனமாகும்.

774. அக்கினி பேதனம்.

தாளி செவ்வகத்தி ஆலங்கொழுந்து சுண்டை வாழைக்கிழங்கு துத்தி சிறியாநங்கை கற்றாழை பச்சோந்தி கொத்தான்விரை குப்பைமேனி சங்கு ஓரிதழ்தாமரை இவைகளைச் சேர்த்துச்செய்ய அக்கினிபேதனமாகும்.

775. லோகபேதனம்.

நச்செலி நச்சுப்பல்லி வேப்பைமர காக்கை கூண்டு பச்சோந்தி இந்திர கோபம் சுண்டை தும்பை ஆவாரம்பூச்சி தூரச்சிலை இவைகளைசேர்த்துச் செய்ய லோகபேதனமாகும்.

776. மலக்குட்டி ஜாலம்.

ஓம் ரீம் வா வா குட்டிச்சாத்தானென்று பூசைசெய்தால் அதுபிரசன்ன மாகும் நீ அப்போது அதைவணங்கி ராஜபலி பூசைசெய்து வைத்துக் கொண்டால் அதனால் உனக்கு அநேக வேலைகளாகும்.

777. சத்தி சிவ ஜாலம்.

இம் உம் கம் ரமாங் சிங் ஆயி டாகினி மாகினி விஷ்ணுசகோதரி சர் வாணி உமைதேவி பராசக்தி நவசியென்று வெள்ளிக்கிழமை பூசநக்ஷத்திர த்தில் லக்ஷத்தியெட்டுரு செபித்து ரீங்காரத்துடன் சத்திசிவ பூசைசெய்து விபூதிபூசி ஏவல் பிசாசு பார்வை பூதமிவைகளுக்கு வேர்பிடுங்கி கருவைத் தடவி சக்கரம்போட்டு ஆட்டினால் எப்பேர்ப்பட்ட பூதப்பசாசா யிருந்தா லும் கதறியோடும். மந்திரத்தைமாத்திரம் செப்புத்தகட்டி லெழுதிக்கட்ட வும்.

778. இதுவுமது.

அமாவாசையும் ஞாயிற்றுக்கிழமையும் கிராணமும் சம்பவிக்குந்தினத் தில் ஒண்டிமூலிகைக்குக் காப்புகட்டி பொங்கல் பலி முதலியதைச்செய்து குளிசமாடி கட்டிக்கொண்டால் பார்வை முதலியது தீரும்.

779. குட்டிச்சாத்தான் வசிய ஜாலம்.

குட்டிச்சாத்தானை வசியஞ்செய்வது எப்படியென்றால் ஒரு தேவாங் கைப்பிடித்து வளர்த்துக்கொண்டேவந்து அதன்கண்ணில் திரளும் பீளை யைத் தினந்தினம் நம்கண்ணிலிட்டுப் பழக்கிக்கொண்டபிறகு மடியில் கொஞ்சம் நெல்லுப்பொரியுடன் தேவாங்கைக் கையிலெடுத்துக்கொண்டு ஊர்மாடுகள் மேய்ந்து வீட்டுக்கு வரும்வழியில் காத்துக்கொண்டிருக்க வேண்டும் அப்போது அந்தமாடுகளில் எந்தமாடு முந்திவருகிறதோ அதன் இரண்டு கொம்புகளுக்கும் மத்தியில் சாத்தானனது குந்திக்கொண்டு வரும் அப்போது நமது கையிலிருக்கும் தேவாங்கானது கண்ணீர்விட்டழுகும் அதையறிந்து நாம் தாமதப்படாது அத்தேவாங்கின் கண்ணிலிருக்கும் பீளையையெடுத்து நம் கண்ணில் தீட்டிக்கொண்டு பார்த்தால் அது குந்திக் கொண்டிருக்கின்றது நன்றாகத் தெரியும் அப்போது மடியிலிருக்கும் பொரி யையெடுத்து பூமியிலிறைத்தால் அதைப்பொறுக்கத் தேவாங்கானது கீழி றங்கும் அதுசமயம் நம்முடையமந்திரத்தினால் அதை வசப்படுத்திக்கொள்ள வேண்டும் அதன்பிறகு எந்தவேலையைச் சொன்னாலும் தவறாது செய்யும்.

780. நெருப்பில்லாமல் சாதம் வேகும் ஜாலம்.

ஓர் குடுவையில் அரிசியைப்போட்டு சபையோர்களுக்குக் காண்பித்து இவை நெருப்பில்லாமல் சாதமாகச் செய்துகாட்டுகிறேன் பாருங்களென்று

சொல்லி தண்ணீர்விடுவதற்குப்பதில் கொஞ்சம் கள்ளிப்பாலை அளவாகவிட்டுக்கலந்து சற்றுநேரம் பொருத்துத் திறந்துபார்க்க அரிசியெல்லாம் சாதமாக வெந்திருக்கும்.

781. தலையில்லா முண்டங்களாகத்தோன்றும் ஜாலம்.

வெட்டுண்டு இறந்துபோனவனுடைய தலையை நாய்முகராதமுன்னெடுத்துவந்து அத்தலையிலிருக்கும் எலும்பை யெடுத்து தீவட்டியில் வைத்துச்சுருட்டி வைத்துக்கொண்டு ஜாலமாடுஞ்சபையில் ஜனங்களைப்பார்த்து இதோ ஓர் வேடிக்கையைச் செய்துகாட்டுகிறேன் பாருங்களென்றுசொல்லி தீவட்டியையெடுத்து எண்ணெயில் துவைத்துக் கொளுத்தி தூக்கிப்பிடிக்க அங்குள்ளவர்களெல்லாம் ஒருவர்க்கொருவர் தங்கள்தங்களுடைய தலைகளைத் தடவிப்பார்த்துக்கொள்ளுவார்கள். இவ்வேடிக்கை மகா அற்புதமாகயிருக்கும்.

782. தீபமேரியும் ஜாலம்.

நீளமாயுள்ள ஓர் மயிலிறகையெடுத்து அதனடியைத் துவாரஞ் செய்துக் கொஞ்சம் பாதரசத்தைவிட்டு வாயைக் களிமண்ணினால் அடைத்துவிட்டு ஒருவர்களுக்குந் தெரியாமல் சலவை வஸ்திரத்துண்டை வத்திலயப்போல் அதன்பேரில் சுற்றி எண்ணெயில் தோய்த்து சபையில் கொண்டுவந்துக்கொளுத்த பலவிதவர்ணங்களாக எரியும். அதைப் பார்த்தவர்களெல்லாம் ரொம்பவும் ஆச்சரியப்படுவார்கள்.

783. தீபம் மஞ்சளாக எரியும் ஜாலம்.

கொஞ்சம் சாராயத்தை ஓர் பாத்திரத்தில் ஊற்றி கொதிக்கவைத்துக் கொஞ்சம் சூடாக யிருக்கும்போதே அதைச் சபையில் கொண்டுவந்து கொஞ்சம் சோத்துப்பைத் தூள்செய்து அதில்போட்டு மறுபடியும் அதைக் கொளுத்த அது மஞ்சள்நிறமாகத் தெரியும் அப்போது சபையிலுள்ளவர்களின் முகத்தை ஒருவர்க்கொருவர் பார்க்க விகாரமாகத் தெரியும்.

784. அஷ்டகர்மக்கரு செய்யும் ஜாலம்

எழுவூர்களிலிருக்கும் பன்றியின் புட்டைகளைக் கொண்டுவந்து ஓர் பாண்டத்தில்போட்டு குருத்தைலமிறக்கி வைத்துக்கொண்டு தூமாதேவியைப் பூசித்து அஷ்டமக்கிரியைகளைச் செய்ய பசுமரத்தாணிபோல் பலிதமாகும். இக்கருவை கோயில்களிலும் வீடுகளிலும் புதைக்க அதுகளெல்லாம் நாசமாகிவிடும் முக்கியமாய் இக்கருவானது எங்கிருக்கின்றதோ அங்கு பேய் பூதம் தேவதைகள் முதலிய யாதொன்றுமிருக்காது.

785. வேறு.

பன்றிப்புட்டை மனிதர்மலம் பூனைமலம் மனிதன் மண்டையோடு இதுகளையெல்லாத் ஓர் பாண்டத்தில்போட்டுக் குழித்தைலமிறக்கி வைத்துக் கொண்டால் பேதன வேலையும் மாரணவேலையும் வித்வேஷண வேலையும் நம்மிஷ்டத்தின்படி நடக்கும் இதையும் எவ்விடத்தில் புதைத்துவைக்கின்றோமோ அவ்விடத்தில் தெய்வம் தேவாதிகளொன்றுமிருக்காது இருந்தாலும் ஓடிப்போய்விடும்.

786. பேய் பிசாசுகள் ஓடும் ஜாலம்

பன்றிப்புட்டை நாய்மலம் மனிதர்மலம் பூனைமலம் குதிரைப்புட்டை இதுகளைக்கொண்டுவந்து குழித்தைலமிறக்கிவைத்துக்கொண்டு தெளித்தா

லும் சரி அல்லது நெருப்பில்போட்டு புகைத்தாலுஞ்சரி அப்புகையின் வாடைபட்ட பேய் பிசாசு தெய்வம் தேவாதிகள் எல்லாம் காதவழி காற்ருய்பறக்கும் எப்பேர்ப்பட்ட ஜடாமுனி சங்கிலிமுனி லாடமுனியாயிருந்தாலும் அத்தைலத்திற்குமுன் நிற்காது.

787. சகலவிஷமுந் தீரும் ஜாலம்.

எட்டிமரத்தைத் துளைசெய்து அத்துளையை பிடிக்கும்படியான கொட்டைகோதுகளில்லாதபழம்புளியைத் துறுத்து எட்டிமரத்தினுலேயே கார்க்கடைத்துவிட்டு வந்துவிடவும். பிறகு அதை மண்டலஞ்சென்று எடுத்து வந்து எட்டிமரச்சிமிளில் வைத்துக்கொண்டு பாம்பு தேள் செய்யான் முதலிய எப்படிப்பட்டவிஷமாயிருந்தாலும் ஓர் துவரையின்பிரமாணம் வெற்றிலையில்வைத்து மடித்து உள்ளுக்குக் கொடுக்கத்தீரும். சாரைச்சர்பம் இதுகளுக்குமாத்திரம் இதுவுதவாது.

788. தேள்விஷந் தீரும் ஜாலம்

எருமைமாட்டின் காதிலிருக்கும் குரும்பியை எடுத்துச் சிமிளில் வைத்துக்கொண்டிருந்து தேள் அல்லது நண்டுதுரக்கா கொட்டி அவஸ்தை படுகின்றவர்களுககு கொஞ்சம் முலைப்பாலில் இழைத்துப்போட விஷமானது உடனே இறங்கிவிடும்.

789. சதிபுருஷர்கள் பிரியாதிருக்கும் சாலம்

ஆணுக்குப்பெண்ணும் பெண்ணுக்குஆணுமாக அண்டங்காக்கை அதாவது பரகாக்கா என்று சொல்வதுண்டு. அதன் தலையை யறுத்து நல்லெண்ணெயிற்போட்டுக்காய்ச்சி முன்சொன்னபிரகாரமே ஆணுக்குப்பெண்ணும் பெண்ணுக்குஆணுமாக தலையிலறக்கித்தேய்க்க ஒருவரைவிட்டொருவர் பிரிய மாட்டார்கள் கைகண்டது.

890. பாம்புகள் சாகுஞ் சாலம்.

பாம்பைக்கொன்று அதைக்கொளுத்தாதுவிட்டுவிட்டால் அது எவ்விதத்திலும் சாகாது. கொளுத்துகிறதற்கு கட்டையேனும் விறட்டியேனும் அகப்படாதசமயத்தில் அதைக்கொல்கிறது எப்படியென்ருல் அதன்படத்திலிருக்கும் சூலத்தின்நடுவின் ஓர் மெல்லிய குச்சைக்கொண்டுகுத்த அது உடனே உயிரிழக்கும். அப்புறம் அதைக்கொளுத்தவேண்டியஅவசியமில்லை.

79.1 குழந்தைகளுக்கு நோய்வராத சாலம்

பிறந்ததே குழந்தையின் தாயாருக்கு நாய்மண்டையோட்டைத் தண்ணீரிலிழைத்து மார்பில்தடவின பிறகு குழந்தைக்குப் பால்கொடுக்கச்செய்தால் அக்குழந்தைக்கு எக்காலத்திலும் நோய்வராது. அப்படி மீறிவந்தாலும் சீக்கிரத்தில் தீருமேயொழிய வலுக்காது.

792. புள்ளைப்பூச்சி சாலம்

சுண்ணும்புகரைத்த நீரில் புள்ளைப்புச்சியைவிட்டால் அதுவுடனே இறந்துபோகும் அதை எல்லோருக்குங்காட்டி பிறகு அதின் தலையில் கீழாநெல்லியின் இரசத்தைப்பிழிய உயிர்வந்து எழுந்தோடிவிடும்.

793. ஜலத்தை அல்வா செய்யும் ஜாலம்

சிறுகட்டுக்கொடியை சாறுபிழிந்து ஓர்பாத்திரத்தில் வைத்துக்கொண்டோர்பாத்திரத்தில் ஜலத்தைவிட்டு சபையோர்களுக்கு காண்பித்து இந்த

ஜலத்தை அல்வாயாகசெய்கிறேன் பாருங்களென்றுசொல்லி அதில் கொஞ்சம் சர்க்கரையைப்போட்டு முன் தயார்செய்த சாற்றையும் அதில்விட்டு சற்றுநேரம் துணியைப் போட்டு மூடிவைத்திருந்து பிறகு திறந்துகாண்பிக்க அது அசல் அல்வாயாகவே கட்டியிருக்கும் அதை அறுத்து எல்லோருக்கும் தின்னக்கொடுக்கலாம் யாதொரு கெடுதலையுஞ்செய்யாது தாதுபுஷ்டியையுண்டாக்கும்.

794. குடம் நீரைக்குடிக்கும் ஜாலம்

குப்பைமேனிவேர் சிறுபூளைவேர் இவ்விரண்டையும் சமயெடையாயெடுத்து வாயில்போட்டு நன்றாகமென்று தாடையிலடக்கிக்கொண்டு ஒரு குடத்து நீரையுங்குடித்துவிடலாம் பார்ப்பவர்கள் இது ஏதோவசியமென்று சொல்லிக்கொள்ளுவார்கள்.

795. ஆடுகள் மேயாத ஜாலம்

ஆதிவாரத்தில் வீட்டிலிருக்கும் மூஞ்சூரைப் பிடித்துக்கொண்டுபோய் ஓடுகின்ற ஜலத்தில்விட்டால் அது ஜலத்தை எதிர்நோக்கியோடும் அதைக் கத்தியினால் ஒரே வெட்டாக வெட்டி தலையைமாத்திரம் எடுத்துக்கொண்டு வந்து ஆட்டுமந்தைகள் இருக்குமிடத்தில் புதைத்துவிட்டால் அவ்வாடுகள் எழுந்து இரைமேயாது நாளெத்தனையானாலும் படுத்த இடத்திலேயே இருக்கும் மறுபடியும் புதைத்ததை எடுத்துவிட்டால் எழுந்து இரைதேடும்.

796. கிணற்றில் ஜலம் மோள்ளாத ஜாலம்

பச்சோந்தியின் கொழுப்பை யெடுத்து ஓர்தோண்டிக்கு அடியில்கனக் கப்பூசிக் காயவைத்தபிறகு அத்தோண்டியைக் கயர்கட்டி கிணற்றில்போட்டால் ஒவ்விதத்திலும் அது ஜலமொள்ளாது வெகு ஆச்சரியமாயிருக்கும்.

797. வெள்ளாய் வேகாத ஜாலம்

ஆவாறை விறகைக்கொண்டுவந்துஎரித்து நெருப்பாக்கி அந்நெருப்பை எருமை மூத்திரம் விட்டவித்து அதை வண்ணானுடைய வெள்ளாயடுப்பில் போட்டுவிட்டால் அவ்வெள்ளாயானது என்னபாடுபட்டாலும்வேகாது மறுபடியும் அதை யெடுத்துவிட்டு அந்த அடுப்பிலுள்ள சாம்பல்முதலியதுகளை யெல்லாம் அடியுடன் அப்புறப்படுத்து பசுங்கோமயத்தை தெளித்து வேறு கட்டைகளைப்போட்டு கொளுத்தினால்தான் வேகும்.

798. வழக்குகள் வெல்லும் ஜாலம்

நெருஞ்சிவேர் மயிரோசனை இவ்விரண்டையும்சமயெடையாகயெடுத்து வாசலை மெழுகி கணேசரைவைத்து அவரெதிரில் இரண்டு சாக்கையும் வைத்துப் பூசித்துப்பணிந்து அதை வாயில்போட்டு அடக்கிக்கொண்டு போனால் எப்படிப்பட்ட வழக்குகளையும் வென்றுவரலாம்.

799. அம்மை வார்க்காத ஜாலம்

தாழம்விழுதைக் கியாழம்வைத்து மூன்றுநாள் கொடுக்க குடித்தவர்களுக்கு எக்காலத்திலும் அம்மைவார்க்காது அப்படி வார்த்தாலும் தொந்தரையில்லாமல் சீக்கிரத்திலேயே தீர்ந்துவிடும்.

800. தேள்மாரண ஜாலம்

ஆதிவாரதினம் அரைநாண்கயர் முதலியதுகளில்லாமல் நிர்வாணமாகயிருந்துக்கொண்டு ஒரு தேளைப்பிடித்து அதன் கொடுக்கில் மூன்றுமணி

வரையிலும் கத்தரித்துக்கொண்டு ஜிம் என்னும் மந்திரத்தை லக்ஷத்தியெட்டுரு செபித்து அதைப்பகைவர்களின் நீர்ககுழியில் புதைத்துவைக்க அவர்கள் மகாபாதைப்படுவார்கள்.

801. வேறு

தேளைப்பிடித்து அதை சுக்கு அல்லது இஞ்சி இதுகளிலெதிலேனும் கொட்டவைத்து முன் மந்திரத்தை ஆயிரத்தெட்டுரு செபித்து அதைப்பகைவர்களின் நீர்க்குழியில் புதைத்துவிட அவர்கள் ரொப்பவும் பாதைப்படுவார்கள் அதையெடுத்து நீரில் கழுவிவிட பாதையானது சாந்தமாகும்.

802. சகல வசிய ஜாலம்

கொண்டலாத்திக்குருவியின் கூண்டைக்கொண்டுவந்து ஓடுகிறஜலத்தில் ஒவ்வொன்ருய்ப்பிரித்துப்போட அதில் எது ஜலத்தை எதிரோக்கி ஓடுகின்றதோ அக்குச்சியையெடுத்துக் குளிசமாடிப் பொன்தாயத்தில்போட்டுக் கையில் கட்டிக்கொண்டாலும்சரி அல்லது அக்குருவியின் மயிரை ஒவ்வொன்ருய்ப்பிரித்து ஜலத்தில்போட அதில் ஜலத்தை எதிர்த்து எம்மயிர் போகின்றதோ அதையெடுத்துக் குளிசமாடிக் கையில் கட்டிக்கொண்டாலும் சரி சகலமானபேர்களும் வசியமாவதுடன் பூதப்பிசாசுகளும் பயந்து நடக்கும்.

803. கண் கட்டுமை

சிறுத்தை விரையைக் குழித்தைலமிறக்கி அதில் தலைமஞ்சங்கொடி மாவு கோழிமுட்டைக்கருவு ஐங்கோலத்தைலம் ஐங்காயம் இவைகளை வகைக்கு விராகனெடை ஒன்ருகச்சேர்த்து அரைத்து அதை வெள்ளைத்துணியில் பூசி நிழலிலுலர்த்தி தலைமண்டையோட்டில் காராவின்நெய்யூற்றி அதில் முன்னுலர்த்தின துணியை திரிதிரித்துப்போட்டு கொளுத்தி அம்மையை நரித்தலையோட்டில் பிடித்து வழித்துக்கொண்டு அதில் கஸ்தூரி கோரோசனை வகைக்கு விராகனெடை ஒன்றுசேர்த்து அரைத்துச் சிமிளியில் வைத்து காளிகோயிலின் எதிரில் ஒரு மண்டலம் புதைத்து எடுத்து பூசையில்வைத்து ஒருமண்டலம் வரைக்கும் ஜாலக்காள் மந்திரத்தை தினமொன்றுக்கு ஆயிரத்தெட்டுரு கொடுத்து எடுத்து வைத்துக்கொண்டு சகலமான வேலைகளையும் செய்துக்காட்டலாம்.

804. சபையில் வாழைப்பழத்தைப் பரிமாறும் விநோதம்

இஷ்டமான ஒருவாழைப் பழத்தை சபையில் ஒருவரிடங்கொடுத்து கத்தியின்றிப் பில்லை பில்லையாக பரிமாறச்சொல்லி அவர்கள் அவ்வாறே பரிமாறுவார்கள் அதைப்பார்த்தவர்கள் உனக்குக்காளிவசியமென்று சொலலுவார்கள் அதற்கு எட்டங்குலமுள்ள ஓர் இரும்புக்கம்பியை டகரம்போல் வளைத்து பழத்தின் காம்பின் புறந்துருத்து திருகிக்கொண்டே முனைவரை செலுத்தி மறுபடியும் அவ்வழியே வெளியில் வாங்கிக்கொள்ளவும்.

805. நினைத்த இடத்திற்கு போகும் விநோதம்

ஆலமரத்தின் கீழிருக்கும் ஆலங்கண்ணுக்கு ஆதிவாரமும் ரோகணி நக்ஷத்திரமும் சித்தயோகமுங் கூடியதினத்தில் தன்னுடைய பக்ஷி அரசாயிருக்கும்போது சாபநிவர்த்தி செய்துககாப்புகட்டி பொஙகலிட்டு தூபதீபங் கொடுத்துவிட்டு வந்துவிடவும் மறுஆதிவாரஞ்சென்று அவ்விடத்தைச்சுத்தி செய்து சாம்பிராணி புகைத்துப் பலிகொடுத்து வேரோருமலும் இரும்பாலாகிய ஆயுதஙகள் படாமலுங்கொணடுவந்து தீட்டுப்படாத இடததில வைத்

திருந்து வெள்ளிக்கிழமையதினம் வீட்டைச் சுத்தமாக மெழுகிப் பிள்ளை யார்பிடித்துவைத்து நேமனிஷ்டையுடன் மேற்படி செடியைப்பிள்ளையாரின் முன்வைத்து தூபதீபமுதலான சோடசோபசாரத்துடன் நைவேத்தியஞ் செய்துப் பணிந்து வேரையெடுத்து தீட்டுப்படாமல் வைத்திருந்து தினந் தினம் இராத்திரிகாலத்தில் நேமனிஷ்டையுடன் ஸ்நானஞ்செய்து இயாபக மாய் நட்சத்திரம் விழுகிறதைப் பார்த்துக்கொண்டேயிருந்து நக்ஷத்திரம் விழும்போது வேரைக் கீழேபோட்டு வலதுகாலால் மிதித்துக்கொண்டு உன்னிஷ்டதேவதையையும் குலதேவதையையுமினைத்து எடுத்துக்கொண் டுஅதை செருப்புக்குள்வைத்து தீட்டில்லாத இடத்தில்வைத்திருந்து தேவை யானபோது அதையெடுத்துக காலில் மாட்டிக்கொண்டு நடந்தால் எத்தனை காதமானாலும் அலுப்பில்லாமலும் இளைப்பு ஆயாசமில்லாமலும் நடக்கலா இச்செருப்பை தீட்டுப்படாமல் பத்திரமாககாப்பாற்றவேண்டியது இதற்கும் மந்திரமில்லை தந்திரந்தான் பெரிது செய்துப்பார்த்தால் உண்மை தெரிய வரும்.

806. சுண்ணம்பு வேகாத ஜாலம்

அழிஞ்சில் மரக்கட்டையைக்கொளுத்தி நெருப்பாக்கி அந்நெருப்பை எருமைமூத்திரம் விட்டவித்து அக்கரியை சுண்ணம்புக்காளவாயில் போட்டு வைக்க சுண்ணம்பு வேகாது எட்டிமரக்கரியிலும் இம்மாதிரி செய்யலாம்.

807. நீரில் முட்டைவெடிக்கும் ஜாலம்

கோழிமுட்டையிலிருக்கும் வெள்ளை அம்புலியைப்போக்கி அதற்குப் பதில் தாளிக்காத கற்சுன்னமும் கெந்தகமும் சமயெடையாகிறப்பி மெழுகி னல் வாயைமூடி தவலையிலாகிலும் குடத்திலாகிலும் அல்லது நீருள்ளகுளம் குட்டைகளிலாகிலும் போட்டுவைக்க கொஞ்சநேரத்திற்குள் பாணத்தைப் போல வெடிசத்தங்கிளம்பும்.

808. முகங்கள் விகாரமாகத் தோன்றும் ஜாலம்

ஓர் பாத்திரத்தில் கொஞ்சம் ஒயின்சாராயத்தை விட்டுக்கொதிக்க வைத்து அதை ஜாலமாடுஞ்சபையில் கொண்டுவந்துவைத்து அதில் கொஞ் சம் சோத்துப்பை அள்ளிபோட அதிலிருந்து புகைகிளம்பும் அந்தசமயம் ஒருவர்முகத்தை ஒருவர் பாக்க விகாரமுகங்களாய் தோன்றும் அதை எடுத் தப்புறப்படுத்திவிட எப்போதும்போல தோன்றும்.

809. விளாம்பழம் உருளும் ஜாலம்

ஓர் பெரிய விளாம்பழத்தை இரண்டாக அறுத்து அதனுள்ளிருக்கு சதையைப்போக்கி அதற்குப்பதில் ஓர் சுண்டெலியை அதனுள்விட்டு இர ண்டுபிளப்பையும் ஒன்றாகப் பொருந்தவைத்து வெட்டுவாய் தெரியாமல் மஞ்சள் குங்குமமிட்டு அதை சபையோர்களுக்குக் காட்டி இது உருளும் விநோதத்தைப்பாருங்களென்று சொல்லி கீழேவிட அது ஓரிடத்திலுந் தங் காமல உருண்டுக்கொண்டேயிருக்கும் பார்ப்பவர்களும் நீ என்னமோ மந்தி ரஞ்செய்தாயென்று சொல்லிக்கொள்ளுவார்கள்.

810. கலைமான் தோல் கலைமானாகும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையில் ஓர் கலைமானின் தோலை யெடுத்து அனைவர் களுக்குங் காண்பித்து இந்தக் கலைமானின் தோல் உயிருள்ள கலைமானாகும் விநோதத்தைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத் தடவி

துணியைப் போட்டு மூடி குட்டிச்சாத்தானை தியானித்து திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள கலைமானைப்போலவே தோன்றும்.

811. நாய்தோல் நாயாகும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையில் தோலைக் கொண்டுவந்து அனைவர்களுக்குங் காண்பித்து இந்த நாயின் தோல் நாயாகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத் தடவி துணியைப் போட்டு மூடி காளியைத் தியானித்து திறந்து காண்பிக்கப் பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள நாயாகவே தோன்றும்.

812. மாட்டுத்தோல் மாடாகும் ஜாலம்

ஓர் மாட்டுத்தோலைக் கொண்டுவந்து ஜாலமாடுஞ் சபையிலிருக்குஞ் சனங்களுக்குக் காண்பித்து இந்த மாட்டுத்தோல் உயிருள்ள மாடாகும் விநோதத்தைப் பாருங்களென்று சொல்லி ஜெகஜால கண்கட்டு மையை அத்தோலுக்குத் தடவி துணியைப் போட்டு மூடி ஜாலக்காளைத் தியானித்து திறந்து காண்பிக்கப் பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள மாட்டைப்போலவே தோன்றும். ஆனால் சிறிய ஜீவன்களுக்கெல்லாம் துணியைப் போட்டு மூடித் திறந்துக்காண்பிக்கவும் பெரிய ஜீவன்களுக்கெல்லாம் திரைவிட்டுத் திறந்துக்காண்பிக்கவும்.

813. எருமைத்தோல் எருமையாகும் ஜாலம்

எருமைத்தோலைக் கொண்டுவந்து ஜாலமாடுஞ் சபையிலிருக்குஞ் சனங்களுக்கெல்லாங் காண்பித்து சபையோர்களே இந்த எருமையின் தோல் உயிருள்ள எருமையாகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத் தடவி காளியைத் தியானித்து துணியைப் போட்டு மூடி ஜாலக்காளைத் துதித்து திறந்துகாண்பிக்க சபையிலுள்ள ஜனங்களுக்கு உயிருள்ள எருமையைப்போலவே தோன்றும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

814. பசுத்தோல் பசுவாகும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையில் பசுத்தோலைக் கொண்டுவந்து அனைவர்களுக்குங் காண்பித்து இந்த பசுத்தோல் உயிருள்ள பசுவாகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத் தடவி துணியைப்போட்டு மூடி ஜாலக்காளைத் தியானித்து திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள பசுவாகவே தோன்றும்.

815. குரங்கு தோல் குரங்காகும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையில் ஓர் குரங்குத்தோலைக் கொண்டுவந்துக் காண்பித்து இந்தக் குரங்குத்தோல் உயிருள்ள குரங்காகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத் தடவி காளியைத் தியானித்து துணியைப் போட்டு மூடி திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள குரங்கைப்போலவே தோன்றும் சபையோர்களெல்லாம் ஆச்சரியப்பட்டு உன்னை மெச்சிக்கொள்ளுவார்கள்.

816. உடும்புத்தோல் உடும்பாகும் ஜாலம்

ஓர் உடும்புத்தோலைக் கொண்டுவந்து ஜாலமாடுஞ் சபையிலிருக்கும் சனங்களுக்குக் காண்பித்து இந்த உடும்புத்தோல் உயிருள்ள உடும்பாகும்

வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி குட்டிச்சாத்தானை தியானஞ் செய்து கண்கட்டு மையைத் தடவி கூடையைப்போட்டு மூடி ஜாலக்காளை துதித்து திறந்துகாண்பிக்க பார்ப்பவர்களின்கண்களுக்கு உயிருள்ளஉடம்பு போலவே தோன்றும்.

817. ஓணன் தோல் ஓணனாகும் ஜாலம்

ஓணன் தோலைக் கொண்டுவந்து ஜாலமாடுஞ் சபையிலிருக்குஞ் சனங்களுக்குக் காண்பித்து இந்த ஓணன் தோலை உயிருள்ள ஓணனாச் செய்கிறேன் இவ்வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையை தடவி காளியைத் தியானித்துக் கூடையைப்போட்டு மூடி ஜாலக்காளை நினைந்து திறந்துகாண்பிக்கப் பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள ஓணனைப்போலவே தோன்றும்.

818. முயல் தோல் முயலாகும் ஜாலம்

ஜாலமாடுஞ்சபையில் முயலின் தோலைக்கொண்டுவந்து சனங்களுக்குக் காண்பித்து இந்த முயலின் தோல் உயிருள்ள முயலாகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத் தடவி கூடையைப்போட்டு மூடி ஜாலக்காளையும் காளியையுந் துதித்து திறந்துகாண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள முயலைப்போலவே தோன்றும்.

819. பூனைத்தோல் பூனையாகும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையில் பூனைத்தோலை யெடுத்து அனைவர்களுக்குங் காண்பித்து இந்தப் பூனையின் தோல் பூனையாகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி ஜாலக்காளை நினைத்து கண்கட்டு மையை தடவி துணியைப்போட்டு மூடி குட்டிச்சாத்தான மந்திரத்தை தியானித்து திறந்துக் காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள பூனையைப்போலவே தோன்றும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

820. கீரிப்பிள்ளையின் தோல் கீரிப்பிள்ளையாகும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையில் ஓர் கீரிப்பிள்ளையின் தோலைக் கொண்டுவந்து அனைவருக்குங் காண்பித்து இந்த கீரிப்பிள்ளையின் தோல் உயிருள்ள கீரிப்பிள்ளையாகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத் தடவி காளியை தியானித்து துணியைப்போட்டு மூடி திறந்துகாண்பிக்கபார்ப்பவர்களின்கண்களுக்குஉயிருள்ளகீரிப்பிள்ளையாகவேதோன்றும் அனைவரும் உன்னை மகா வேலைக்காரனென்று மெச்சிக்கொள்ளுவார்கள்.

821. ஆனைத்தோல் ஆனையாகும ஜாலம்

ஜாலமாடுஞ் சபையில் ஆனையின் தோலை யெடுத்து அனைவர்களுக்குங் காண்பித்து இந்த ஆனையின் தோல் உயிருள்ள ஆனையாகும் வேடிக்கையை பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையையும் இந்திர ஜாலக்கருவையுந் தடவி மாயமோகினியைத் தியானித்து திரையைவிட்டு மூடி ஜாலக்காளை துதித்து திறந்து காண்பிக்க ஆனையானது உயிருள்ள ஆனையைப்போலவே தும்பிக்கையை ஆட்டிக்கொண்டு நிற்கின்றதாக பார்ப்பவர்களின் கண்களுக்குத் தெரியும் எல்லோரும் மகா ஆச்சரியப்படுவார்கள்.

822. புலித்தோல் புலியாகும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையிலிருக்குஞ் சனங்களுக்கு ஓர் புலித்தோலை எடுத்துக் காண்பித்து இந்த புலியின் தோலை உயிருள்ள புலியாகச் செய்கிறேன்

பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத் தடவி துணியைப்போட்டு மூடி காளியையும் ஜாலக்காளையும் தியானித்து திறந்துகாண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள புலியைப்போலவே தோன்றும் பார்ப்பவர்களெல்லாம் ரொம்பவும் உன்னை மெச்சிக்கொண்டாடுவார்கள்.

823. வேங்கைத்தோல் வேங்கையாகும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையில் ஒரு வேங்கையின் தோலைக் கையிலெடுத்து சனங்களுக்குக் காண்பித்து இந்த வேங்கையின் தோல் உயிருள்ள வேங்கையாகும் விநோதத்தைப் பாருங்களென்று சொல்லி மாயஜாலக் கருவையும் கண்கட்டு மையையுந் தடவி துணியைப்போட்டு மூடி ஜாலக்காளைத் துதித்து திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள வேங்கையானது எப்படி பாய்ச்சலுக்கு நிற்குமோ அதைப்போலவே தோன்றும் அங்கிருக்கப்பட்ட ஜனங்களெல்லாம் பயப்பட்டு விலக வழிபார்ப்பார்கள் அதுசமயம் நீ கொஞ்சம் ஜலத்தை அதின்பேரில் தெளித்து துணியைப் போட்டு மறைத்துவிடவும் மாயமாகும்.

824. கரடியின்தோல் கரடியாகும் ஜாலம்

ஜாலமாடுஞ்சபையில் கரடியின்தோலை எடுத்து அனைவருக்குங் காண்பித்து இந்ததோலில் உயிருள்ள கரடியாகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டுமையை தடவி துணிபோட்டு மூடி மாயமோகினியைதியானித்து திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ளகரடியாகவே தோன்றும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

825. பாம்புத்தோல் பாம்பாகும் ஜாலம்

ஓர் பாம்புதோலைக் கொண்டுவந்து ஜாலமாடுஞ்சபையிலிருக்குஞ் சனங்களுக்குக் காண்பித்து இந்த பாம்புதோலை உயிருள்ள பாம்பாகச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி அத்தோலுக்கு கண்கட்டுமையை தடவி துணியைப்போட்டுமூடி ஜாலக்காளை துதித்து திறந்துகாண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள பாம்பாகவேதோன்றும் சபையிலுள்ள சனங்கள் ரொம்பவும் ஆச்சரியப்படுவார்கள்.

826. கடம்பைத்தோல் கடம்பையாகும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையிலிருக்கும் சனங்களுக்கு ஓர் கடம்பையின்தோலை கொண்டுவந்து காண்பித்து இந்தக்கடம்பையின்தோல் உயிருள்ள கடம்பையாகும்வேடிக்கையைப் பாருங்கள் என்றுசொல்லி கண்கட்டு மையைதடவி துணியைப்போட்டுமூடி காளியையும் ஜாலக்காளையுந்தியானித்து திறந்துக் காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள கடம்பையாகவே தோன்றும்.

827. மான்தோல் மானாகும் ஜாலம்

ஜாலமாடும் சபையில் மான்தோலைக் கையிலெடுத்து அனைவர்களுக்குங் காண்பித்து இந்த மான்தோலை உயிருள்ளமானாகச் செய்கிறேன்பாருங்களென்று சொல்லி கொஞ்சம் கண்கட்டு மையையும் கொஞ்சம இந்திரஜால மையையும் அந்தத்தோலில் தடவி துணியைப்போட்டுமூடி மாயமோகினியைதுதித்து திறந்துகாண்பிக்க அங்குள்ள ஜனங்களுக்கு உயிருள்ளமானைப் போலவேதோன்றும் எல்லோரும் ரொம்பவும் வியப்படைவார்கள்.

828. சிறுத்தைத்தோல் சிறுத்தையாகும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையில் சிறுத்தையின் தோலைக்கொண்டுவந்து அங்குள்ள சனங்களுக்குக் காண்பித்து இந்த சிறுத்தையின் தோல உயிருள்ள

சிறுத்தையாகும் வேடிக்கையைப்பாருங்களென்றுசொல்லி கண்கட்டு மையைத்தடவிக் காளியைத் தியானித்து துணியைப்போட்டு மூடி ஜாலக்காரனையும் சாத்தானையுந் தியானித்து திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள சிறுத்தையாகவே தோன்றும்.

829. நரித்தோல் நரியாகும் ஜாலம்

நரித்தோலைக்கொண்டுவந்து ஜாலமாடுஞ் சபையிலிருக்குஞ்சனங்களுக்குக் காண்பித்து இந்தநரித்தோலை உயிருள்ள நரியாகச்செய்கிறேன்பாருங்களென்றுசொல்லி மாய மோகினியைத் தியானஞ்செய்து கண்கட்டுமையைத் தடவி துணியைப்போட்டு மூடி ஜாலக்காரனைத் தியானித்து திறந்து காண்பிக்கப்பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள நரியைப்போலவே தோன்றும் எல்லோரும் ஆச்சரியப்பட்டு உன்னை மகாவேலைக்காரனென்றுமெச்சிக் கொள்ளுவார்கள்.

830. மரநாயின்தோல் மரநாயாகும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையிலிருக்கும் சனங்களுக்கு ஓர் மரநாயின் தோலைக் கொண்டுவந்து காண்பித்து இந்த மரநாயின் தோலை உயிருள்ள மரநாயாகச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத் தடவிக்கூடையைப்போட்டுமூடி ஜாலக்காரனைத் துதித்து திறந்து காண்பிக்கப் பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள மரநாயைப்போலவே தோன்றும் ஜனங்களும் வெகு ஆச்சரியப்படுவார்கள்.

831. காட்டுப்பூனையின்தோல் காட்டுப்பூனையாகும் ஜாலம்

காட்டுப் பூனையின் தோலைக்கொண்டுவந்து ஜாலமாடுஞ் சபையிலிருக்கும் ஜனங்களுக்குக் காண்பித்து இந்தக்காட்டுப்பூனையின்தோலை உயிருள்ள காட்டுப் பூனையாகச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி மாய மோகினியை வணங்கி கண்கட்டுமையைத்தடவி துணியைப்போட்டு மூடி காளியைத் தியானஞ்செய்து திறந்துகாண்பிக்க சபையிலுள்ள சனங்களுக்கெல்லாம் உயிருள்ள காட்டுப்பூனையாகவே தோன்றும் அனைவரும் வெகு சந்தோஷப்படுவார்கள்.

832. ஆட்டுத்தோல் ஆடாகும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையில் ஓர் ஆட்டுத்தோலைக்கொண்டு வந்து அனைவர்களுக்குங்காண்பித்து இந்த ஆட்டுத்தோலை உயிருள்ள ஆடாகச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத்தடவிக் காளியைத்தியானஞ் செய்து துணியைப்போட்டு மூடி திறந்துக்காண்பிக்க பார்ப்பவர்களின்கண்களுக்கு உயிருள்ள ஆடாகவே காணப்படும் பார்ப்பவர்கள் உன்னை மகாவேலைக் காரனென்று சொல்லுவார்கள்

833. பெருச்சாளித்தோல் பெருச்சாளியாகும் ஜாலம்.

பெருச்சாளியின்தோலைக் கொண்டுவந்து அனைவருக்குங்காட்டி இந்த பெருச்சாளியின் தோல் உயிருள்ள பெருச்சாளியாகும் வேடிக்கையைப் பாருங்களென்றுசொல்லி கண்கட்டு மையைத்தடவி காளியைத்தியானித்து கூடையைப்போட்டு மூடி மலையாளபகவதியை மனதி லெண்ணித்திறந்துக் காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள பெருச்சாளியைப் போலவே தோன்றும் எல்லோரும் ஆசசரியப்படுவாாகள்.

834. எலித்தோல் எலியாகும் ஜாலம்

எலியின்தோலைக் கொண்டுவந்து ஜாலமாடுஞ் சபையிலிருக்கும் சனங்களுக்குக்காண்பித்து ஓ சபையோர்களே இந்த எலித்தோல் எலியாகும்

வேடிக்கையைப்பாருங்களென்றுசொல்லி மாயமோகினியையும், மகாமோகினியையுந் தியானித்து கண்கட்டுமையைத் தடவி கூடையைப்போட்டுமூடி ஜாலக்காளைத் துதித்து திறந்துகாண்பிக்கப்பார்ப்பவர்களின் கண்களுக்கு உயிருள்ள எலியைப்போலவே தோன்றும்.

835. விஷங்கள் மீளும் ஜாலம்

சிறியாநங்கை பேய்த்தும்மட்டி அண்டங்காக்கைத்தலை வெள்ளாட்டு நாக்கு யானைக்காலடிமண் குதிரைக்காலடிமண் ஆற்றுமண் இவைகளைச் சமயெடையாயெடுத்து பன்னீர்விட்டரைத்து திரேகத்திற்பூசிக்கொண்டுஇராக் காலங்களில் வழிநடக்க சர்ப்பங்களின் பயமிருக்காது. அப்படி ஒருக்கால் மீறி நேர்ந்தாலும் விஷமேறாது.

836 வேறு.

பேய்த்தும்மட்டி ஆதிக்கொடி அழுகண்ணி கருநாய்நாக்கு இவைகளைச் சமயெடையாயெடுத்து மனிதர் குதிரை கழுதை இம்மூன்று நீரையும் விட்டரைத்து நசியமிட எவ்விதவிஷங்களுந் தீரும்.

837. குலைப்புத்தீரும் ஜாலம்

பிரமதண்டி சிரியாநங்கை சமூலம் ஆதிக்கொடி கரும்பூனைப்பஞ்சாங்கம் ஆனைக்மாலடிமண் இவைகளைச் சமயெடையாக யெடுத்து மனிதரின் சிறுநீர் விட்டரைத்துக் கண்களின் மேலெழுத குலைப்புத்தீரும்.

838. கண்மாறல் தீரும் ஜாலம்

ஆடையொட்டி வாழை மாடப்புராயெச்சம் அண்டங் காக்கைத்தலை இவைகளையெல்லாம் சமயெடையாக யெடுத்து நந்தியாவட்டைப்பூச் சாற்றிலரைத்து வெள்ளைத்துணியிற்றடவி நிழலிலுலர்த்தி உலர்ந்தபிறகு திரியாக்கி அகலில்போட்டு காராவின் நெய்யூற்றி விளக்கேற்றிமைபற்றவைத்து அம்மையை வழித்துச் சிமிளில் வைத்துக்கொண்டு காலை மாலை கண்களில் தீட்டிக்கொண்டுவர கண் மாறலானது தீர்ந்து சௌக்கியபபடும்.

839. பூதப்பசாசுகள் விலகும் ஜாலம்

ஆனைவணங்கி சத்திச்சாட்டரணை இந்திரகோபப்பூச்சி பச்சைத்தவளையின்பிச்சு இவைகளைச்சமயெடையாக யெடுத்து ஊமத்தன்சார் விட்டரைத்து திரேகத்திற் பூசிக்கொள்ள எவ்விதபூதப் பிசாசுகளும் விலகி ஓடிப்போய்விடும்.

840 சத்துருவை ஜெயபண்ணும் ஜாலம்

வெண்கொழுஞ்சி, ஆண்கெச்சக்காய் மயில்பிச்சு காட்டட்டை இவைகளையெல்லாம் சமயெடையாக யெடுத்து தூளாக்கி வைத்துக்கொண்டு தேவையானபோது கொஞ்சமெடுத்து பகைவர்களின் மேற்றூவ அவர்கள் தோல்வியடைந்து வணங்கி வருவார்கள்.

841. இதுவுமது

ஆண்கெச்சக்காய் வெண்கொழுஞ்சி மயில்பிச்சு காட்டட்டை இவைகளைச் சமயெடையாய் எடுத்து தூள்செய்து பனங்குருத்தைக்காயவைத்து தூள்செய்து முன்மருந்திற்குச் சமன் சேர்த்துக் கலந்துவைத்துக்கொண்டு தேவையானபோது பகைவர்களின்மேல்தூவ அவர்கள் நாசமடைவர்.

842. நோய்கள் தீரும் ஜாலம்

சீதாதேவிசெங்கழுநீர் ஆனைவணங்கி அண்டங்காக்கைத்தலைதேவாங்கு கண் ஆனைக்காலடிமண் இவைகள்யாவும் சமயெடையாய் எடுத்துக்கொண்டு

நிழலிலுலர்த்தி தூள்செய்து வைத்துக்கொண்டு தேவையானபோது பேய்பிசாசு பிடித்தவர்களுக்கு நீரிற்கலந்து கொடுக்கத்தீரும்.

843. தீராத வழக்குகள்தீரும் ஜாலம்

ஆண்கெச்சக்காய் சீதாதேவி செங்கழுநீர் கரும்பூனைப் பஞ்சாங்கம் தேவாங்குகண் இவைகளைச் சமயெடையாக எடுத்துக்கொண்டு காராவின் பால் விட்டரைத்துக் குளிகைசெய்துவைத்துக்கொண்டுதேவையானபோது காராவின் நெய்யிலிழைத்துத் திலர்தமிட்டுச்செல்ல எவ்வித வழக்குகளுங் கெலித்து எதிரியானவன் தோல்வியடைவான்.

844. புருடர்களின் திரேகம்பெருகும் ஜாலம்

முத்தெருக்கன்செவி ஆனைவணங்கி அண்டங்காக்கைத்தலை ஆதிக்கொடி மாடப்புராயெச்சம் ஊர்க்குருவியெச்சம் ஆக இவ்வாறு சரக்குகளையும் வகைக்குப்பலமொன்றாகயெடுத்துப் பசும்பாலிலரைத்துப்பூசிக்கொண்டு வர புருடர்களின் தேகமானது பெருத்துவளரும்.

845. நீர்மேல்நடக்கும் ஜாலம்

பேய்த்தும்மட்டி சீதாதேவி செங்கழுநீர்,தேவாங்கு, பச்சோந்தி முள்ளிவேர் இவைகளையெல்லாம் சரியெடையாக யெடுத்துக்கொண்டு பால்விட்டரைத்து இரண்டுபாதங்களிலும் பூசிக்கொண்டு நீர்மேல் நடக்கலாம் ஆனால் குருவின் கடாட்சம் வேண்டும்.

846. குருடு நீங்கும் ஜாலம்

ஆண்கெச்சக்காய் ஆனைவணங்கி ஆதிக்கொடி மாடப்புராவின்யெச்சம் இவைகளையெல்லாம் சமயெடையாகத்தூக்கி இளநீர் விட்டரைத்து மை போலவழித்துச் சிமிளில்வைத்துக்கொண்டு கண் குருடாயிருப்பவர்கட்கு காலை மாலை தீட்டிக்கொண்டு வர கண்குருடுநீங்கிச் சௌக்கியமாகும்.

847. சித்தியுண்டாகும் ஜாலம்

சத்திச்சாட்டரணை ஆனைவணங்கி பச்சைத்தவளையின்பிச்சு இந்திரகோபப்பூச்சி இவைகளையெல்லாம் நிழலிலுலர்த்தி தேன் நெய் இவைகள் இரண்டையுங்கூட்டி அரைத்து வைத்துக்கொண்டு கெச்சக்காய் பிரமாணம் ஒருமண்டலம் புசித்துக்கொண்டுவர சர்வசித்திகளும் உண்டாகும்.

848. இந்திரியங்கட்டும் ஜாலம்

வெள்ளை மயிரில்லாத கரியபூனையின் வலதுபக்க விலாவெலும்பை யெடுத்து துளைசெய்து அதை அரைநாண்கயற்றிற் கட்டிக்கொண்டால் எவ்விதத்திலும் இந்திரிய நஷ்டமாகாது.

849. கேழ்வரகு முளைக்கும் ஜாலம்

ஒருகோழிமுட்டையை யெடுத்து துவாரஞ்செய்து அதிலிருக்கும் அம்புலியையெல்லாம் எடுத்துவிட்டு அதில்முக்கால் பாகம் வரைக்கும் கேழ்வரகைக்கொட்டி அத்துளையைப் பக்குவமாக ஆட்டின் ஜவ்வினால்மூடி அம்முட்டையை அவயம் வைக்கும் முட்டைகளோடுசேர்த்துவைத்து குஞ்சு பொரிக்குஞ்சமயத்தில் ஞாபகமாக அதையெடுத்துவைத்துக்கொண்டு மறுபடியும் கோழிமுட்டைகளை அவயம் வைக்கும்போது அதின்கூட இதை வைத்து எடுத்துக்கொண்டு இப்படிமூன்று விசை அவயம்வைத்து எடுத்துக்கொண்டு நாலாவதுவிசை அதைப்பத்திரமாக எலி முகராமல் படி ஓர்புட்டி

யில் போட்டுவைத்துக்கொண்டு ஜாலமாடுஞ்சபையில் சனங்களைப்பார்த்து இப்போதே பாத்திகட்டி விரைவிரைத்துப் பயிர்செய்கிறேன் பாருங்க ளென்றுசொல்லி மண்ணைக்கிளறிப் பாத்திகட்டி. மேற்படி கேழ்வரகை அதில்விரைத்து ஜலந்தெளித்து துணியைப்போட்டு மூடித்திறந்துக் காண்பிக்க கேழ்வரகெல்லாம் முளையாகிச் செடியாகியிருக்கும் மறுபடியும் துணியைப்போட்டு மூடிதிறந்துகாண்பிக்க பயிராகியிருக்கும் மறுபடியும் மூடிதிறந்து காண்பிக்க கதிராகி காய்த்துக் குலைகுலையாகயிருக்கும் அதை அறுத்து அனைவருக்குங்கொடுக்க ஆச்சரியப்பட்டு உன்னை மகா மந்திரவாதியென்று மெச்சிக்கொள்ளுவார்கள்.

850. எறும்புபுத்து அடங்கும் ஜாலம்

எறும்புகள் அதிகமாகத் தொந்தரைசெய்யும் வீடுகளில் கொஞ்சம் சாம்பலைத்தெள்ளி அப்புத்தின்மேல் போட்டாலுஞ்சரி அல்லது வீட்டில் வைக்கும் ரசத்தின் திப்பியை அள்ளி அதின்மேல் போட்டாலுஞ்சரி அன்றுடன் அப்புத்துகள் ஒழியும்.

851. வேறு விஷமிளும் ஜாலம்

எவரையாகிலும் பாம்புகடித்து விட்டால் உடனே அவர்களுக்குக் கைநிறைய சிறுநீரைப்பிடித்துக் குடிப்பாட்டிவிட்டால் அவ்விஷமானது வலுவு செய்யாது அல்லது கடித்தவுடன் சாக்கிரதையாக ஓர்பளுவுள்ள கல்லை அவர்கள் தலையின்பேரில்வைக்க விஷமேறாது பிறகு மணிமந்திர ஔஷதங்களினால் தீர்த்துக்கொள்ளவும் தீர்க்காது கல்லைக்கீழே போடும்பக்ஷத்தில் விஷமேறி விடும்.

852. சூதுகளை வெல்லும் ஜாலம்.

சுடுகாட்டிலிருக்குங் கையாந்தகரைச் செடியைக் கொண்டுவந்து எருக்கம்பாலிலரைத்து துவரைப்பிரமாணம் மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது அதை முலைப்பாலில் இழைத்து நெற்றியில் திலர்தமிட்டுக்கொண்டு சூது சொக்கட்டான் விளையாட வெல்லுவார்கள்.

853. நாய்கள் குலைக்காதிருக்கும் ஜாலம்

முதலைப்பல் அரிதாரம் இவ்விரண்டையும் ஒன்றாய் முடிபோட்டுக்கொண்டு எந்தநேரத்தில் எவ்விடத்தில் போனாலும் நாய்கள் குலைக்காமலும் கடிக்காமலுமிருக்கும்.

854. விந்து நஷ்டமாகாத ஜாலம்

சிலர் அடிக்கடி இரவில் நித்திரை செய்யும்போது இந்திரியஞ் சோர்வதுண்டு அப்பேர்ப்பட்டவர்கள் காரீயத்தையுருக்கி கெச்சைக்காய் பிரமாணம் உருண்டையாக மணிவார்த்து அதனைத் துளைசெய்து அரையிற் கட்டியிருக்க எவ்விதத்திலும் இந்திரஞ் சோராது.

855. கனவுகாணுத ஜாலம்.

அடிக்கடி சொற்பனங்கண்டு அவஸ்தைப் படுபவர்களெல்லாம் கொஞ்சம் படிகாரத்லை தலையின்கீழ் வைத்துப் படுத்திருக்க அவர்கள் அன்றுமுதல் கனவுகாணமாட்டார்கள் பேய் பிசாசுகளிருந்தாலும் விலகிவிடும்.

856. கடித்தபற்கள் உதிரும் ஜாலம்

எவர்களாகிலும் ஒருவரை ஒருவர் கடிக்கும்பக்ஷத்தில் தாமதமின்றி

உடனே அக்கடிவாயின்பேரில் கோழியின் எச்சத்தைதடவ அவர்கள் கடித்தபல் எத்தனையோ அத்தனையும் உதிர்ந்துவிடும் மறுபடியும் முளைக்காது.

857. நித்திரையில்லாதிருக்கும் ஜாலம்

இரவில் நித்திரையில்லாமலிருக்க வேண்டுமோகில் ஆழாக்குதேன் அப்பட்டமானதாக யெடுத்துக்குடித்துவிட அன்றுமுதல் அவர்களுக்கு இரவில் நித்திரைவராது.

858. விளைவுகள் செழிக்கும் ஜாலம்

நாயுருவிச் செடிக்குச் சாப நிவர்த்திசெய்து காப்பு கட்டிப் பொங்க விட்டு தூபதீபங்கொடுத்து வேரறுமல் பிடுங்கிவந்து குளிசமாடி மா-என்னும் மந்திரத்தை நூற்றியெட்டுவிசைசெபித்து அக்குளிசத்தை வயல்தோட்டக்கால் முதலிய இடங்களில் புதைத்துவைக்க பயிர்கள் செழிப்பாக ஓங்கிவரும்.

859. வேறு.

சிதாதேவி செங்கழுநீருக்குச்சாபநிவர்த்திசெய்து காப்புகட்டிப்பொங்க விட்டு தூபதீபங்கொடுத்துப் பிடுங்கிவந்து குளிசமாட்டி எ-என்னும் அக்ஷரத்தை நூற்றியெட்டுவிசை செபித்து அக்குளிசத்தை யெடுத்துக்கொண்டு போய் புலங்களில் புதைத்துவைக்கப் அப்புலங்கள் தோட்டங்களெல்லாம் நன்றாய்ப் பலிதமாகும்.

860. கோழிமுட்டை கூத்தாடும் ஜாலம்

கோழிமுட்டையிலிருக்கும் அம்பிலியைப்போக்கிவிட்டு அதற்குப்பதில் கெந்தகதிராவகத்தையூற்றி வாயைமூடிக் கீழேவைக்க அதுசும்மாயிராமல் படி குதித்து கூத்தாடிக்கொண்டே யிருக்கும்.

861. முட்டைவிடும் ஜாலம்

காட்டாமணக்கன்பாலை ஓர்கிண்ணத்தில் கரந்து வைத்துக்கொண்டு ஒருகனத்த துடைப்பத்தை துளைத்து அதில் மேற்படிபாலைத் தொட்டுவாயில் வைத்தூத அதிலிருந்து முட்டைகிளம்புவது வெகு அழகாயிருக்கும்.

862. கறந்தபால் கட்டும் ஜாலம்

கறந்தபாலை ஓர் பாத்திரத்தில்விட்டு அதிற்கொஞ்சம் குட்டிப்பலாவின் பாலைவிட சற்றுநேரத்திற்கெல்லாம் கட்டியாகக்கட்டிவிடும்.

863. வேறு

முன்போல் கறந்த பாலில் கொஞ்சம் காட்டுத்தமர்த்தன் ரசமாகிலும் அல்லது அச்செடியின் பாலாகிலும்விடக் கட்டியாகக் கட்டிவிடும்.

864. கோழிகள் மடியும் ஜாலம்

வெங்காயத்தையுரித்து எருக்கம்பாலிற் றோய்த்துக் காயவைத்து அதைக் கோழிகளுக்குப்போட அதைத் தின்ற கோழிகளெல்லாம் பேதி கண்டு இறந்துவிடும்.

865. விளைவு கெடும் ஜாலம்

சித்திரமூலச் செடிக்குச் சாபநிவர்த்தி செய்து காப்புகட்டி பொங்க விட்டு தூபதீபங்கொடுத்து இரும்பாலாகிய ஆயுதங்கள் படாது வேரைக்

கொண்டுவந்து குளிசமாடி அதை விளையும் புலங்களில் புதைத்துவைத்தால், அப்புலங்கள் விளையாது சாவியாகப் போய்விடும்.

866. தேள் உற்பத்தியாகும் ஜாலம்

புதிய செங்கல்லொன்றை யெடுத்து ஜலத்தில் நனைத்து அதைச் சூடெழ நன்ருகக் கையினுலரக்கித் தேய்த்து அப்படியே பூமியில் வைத்து அதின்பேரில் குப்பைசெத்தை வாரிப்போட்டு வைத்து ஐந்தாறு நாள் சென்று பார்க்க அதில் கணக்கில்லாத தேள்கள் உற்பத்தியாகியிருக்கும் கொட்டினுல் விஷமதிகம்.

867. சாராயபுட்டி வெடிக்கும் ஜாலம்

சாராயத்தை ஓர் புட்டியிலூற்றி அதிற் கொஞ்சம் கடுகைப்போட்டு வைக்க சற்று நேரத்திற்கெல்லாம் அப்புட்டியானது சுக்கல் சுக்கலாம் வெடித்துவிடும்.

868. தட்டோடு குலையும் ஜாலம்

குரங்குகள் வாசஞ்செய்யும் ஊரில் பகையாளிகளிருந்தால் அவ்வீட்டின்பேரில் கொஞ்சம் பட்டாணியாகிலும் நெல்லுப்பொரியையாகிலும் போட்டுவைக்க அதைக் கண்டதும் குரங்குகளெல்லாம் ஒன்ருய் சேர்ந்துக் கொண்டு அவ்வோட்டைப் பிரித்து அவ்வீட்டை நாசஞ்செய்யும்.

869. சாவல் சாகும் ஜாலம்

பகையாளிகளின் சாவல்கள் சாகவேண்டுமெனில் செந்தகரையின் வேரை யெடுத்து அச்சாவலின் மூக்கின்மேற்றட்ட அது பட்டவுடனே அச்சாவலானது கீழே இறந்துவிடும்.

870. பால் தண்ணீராகும் ஜாலம்.

தாமரைக்கொட்டையை இடித்துப் பொடியாக்கி பாலில் தூவ பால் எல்லாம் தண்ணீரைப்போலாகிவிடும்.

871. எலிகள் விலகும் ஜாலம்.

வீட்டிலிருக்கும் எலியொன்றைப் பக்குவமாகப் பிடித்து அதின்பேரில் மின்மினிப்பூச்சியை அரைத்துப்பூசி விட்டுவிட அதைக்கண்ட எலிகளெல்லாம் பயந்து ஓடிவிடும்.

872. மோகினி விலகும் ஜாலம்

மோகினியினுல் அவஸ்தைப்படுபவர்கள் உலகத்தில் வெகுபேருண்டு அவர்களுக்கெல்லாம் சொல்லுந்தந்திரமென்னவெனில் அம்மோகினி விலகவேண்டுமாகில் அரைமண்டலம் வரைக்கும் இரவுபோசனஞ்செய்து படுக்கப்போகுஞ்சமயத்தில் இடது உள்ளங்காலில் விளக்கெண்ணெயை தளும்பப்பூசி படுத்துக்கொள்ளும்பக்ஷத்தில் அம்மோகினியானது விலகிவிடும் அப்படி யில்லையாகில் மோகினிபிடித்திருக்கும் சமாச்சாரத்தைச் சொல்லாமலேயே வண்ணுனைச் சிநேகிதஞ் செய்துக்கொண்டு அவன் வீட்டிற்குப் போய் அங்குள்ள அழுக்குவஸ்திரத்தின்பேரில் அரைமண்டலம் படுத்துக் கொண்டிருக்க அம்மோகினியானது இவனைவிட்டு இன்னொருவனை பற்றும்

873. அதிகமாகப் புசிக்கும் ஜாலம்.

கழுதைக்குறத்தியின் மூக்கைக்கொண்டுவந்து கைக்குட்டையில் முடிந்துகொண்டு சாப்பிடும்போது அதை முகர்ந்துகொண்டே சாப்பிட்டால்

எவ்வளவு சாதமேனும் சாப்பிடலாம் அதை முகாமுகா பசியெடுத்துக் கொண்டே யிருக்கும் இதுவுமன்றி சிறுகண்பூளை வேர் குப்பைமேனிவேர் இதுகள் இரண்டையும் மென்று தாடையிலடக்கிக்கொண்டு சாபபிட்டாலும் எவ்வளவு சாதமாகிலும் புசிக்கலாம். பசியும் அதிகமாயெடுக்கும்.

874. நெருப்பில்லாமல் வைக்கோல் எரியும் ஜாலம்.

நீர்மேல்நெருப்பு என்னுஞ் செடியைக்கொண்டுநிழலிலுலர்த்திஇடித்து வஸ்திரகாய்ஞ்செய்து வைத்துக்கொண்டு தேவையானபோது ஜாலமாடுஞ் சபையில் கொஞ்சமெடுத்து வாயிலடக்கிக்கொண்டு நெருப்பில்லாமல் தீப் பற்றும் வேடிக்கையைப்பாருங்களென்றுசொல்லி காஞ்சம் வைக்கோலைக் கொண்டுவந்து போடச்சொல்லி காற்றுவாட்டாமாக நின்றுக்கொண்டு மந்திரஞ்செய்கிற பாவனையாக வாயை மொண மொணவென்று அசைத்துக் கொண்டேயிருந்து குபீலென்று வைக்கோலின் பேரில் வாயிலிருப்பது விழும்படியாக ஊத வைக் கோலானது குபீலென்றெரியும் அல்லது நீமுறு கல்பாஷாணத்தைப் போட்டுக்கொண்டு உமிழ்ந்தாலும் குபீலென்று யெரியும் பார்ப்பவர்களெல்லாம் ஆச்சரியப்படுவார்கள்.

875 அவித்த விளக்கு எரியும் ஜாலம்

எரியும் விளக்கை அவித்துவிட்டு அதின்பேரில் முன் நாள் செய்த பொடியைக் கொஞ்சந்தூவவிளக்கானது எப்போதும்போல்நன்றாகயெரியும்

876. சிவந்தபுஷ்பம் வெள்ளையாகும் ஜாலம்

ஓர்சிவந்த ரோஷாபுஷ்பத்தையெடுத்து கெந்தகக்குச்சியைக்கொளுத்தி அதனுடைய புகையைப் புஷ்பத்திற்குக்காட்ட அது வெண்மை யாகிவிடும் மறுபடியும் கொஞ்சம் வெல்லத்தை நெருப்பின் பேரிலபோட்டு அதன்புகையைக்காட்ட எப்போதும்போல் சிகப்பு நிறமாகிவிடும்.

877. உடம் பேரியும் ஜாலம்.

எதிரியின் காலடிமண் சுடலைமண் சுண்டுக்குழமண் பெருங்காயம் இதுகளில் இருபத்தொரு மிளகு கடையில் வாங்கி சேர்த்து ஓர்பாண்டத்தில் போட்டு வேப்பமரககாக்கைக் கூண்டின்விறகினால் எரிக்க எதிரியின்தேரகமெல்லாம் எரியும் எரிப்பதை நிறுத்த திரேக எரிச்சல் நிற்கும்.

878. சண்டாளக்குருவியின் ஜாலம

கழுதையின் கொழுப்பைக் கொண்டுவந்து சட்டியில்போட்டு காய்ச்சி எண்ணெயாக்கி ஓர் அகலில்விட்டு தீபமேற்ற அவ்விடத்திலுள்ள பேய் பிசாசு தெய்வ முதலியவைகளெல்லாம் சொல்லாம லோடிப்போய் விடும். அதை வாசஞ்செய்யப்பட்ட வீடடிலாகிலும் கோயில்களிலாகிலும் மற்ற எந்த விடங்களிலாகிலும் வைக்க அவ்விடங்களெல்லாம் குட்டிச்சுவராகிவிடும்.

879. பேய் பிசாசுகள் ஓடும் ஜாலம்

கள்ளிச்செடியின்மேலுள்ள ஓணானை வெட்டி தலை வேறு உடல் வேறாக எடுத்துக்கொண்டு அவைகளை சாணிகளிலுருட்டிக் காயவைத்துப் புடம்போட்டு ஆறினபின் அவைகளின்மேல் சிறட்டை நீக்கி உள்ளிருக்கும் சாம்பலை யெடுத்து பத்திரமாக வைத்துக்கொண்டு பேய் பிசாசு பிடித்தவர்களின் தலைமேல் தலையின் சாம்பலைப்போட அவர்கள் தலை சுற்றியாடி வாய்மொழி சொல்லுவார்கள் அதன்பிறகு வால் சாம்பலைப்போட அப்பேய்கள் விலகி ஓடிப்போகும்.

880. சர்வசித்தி ஜாலம்

ஏரழிஞ்சியைக் கொண்டுவந்து கற்பூரத்தோடு சேர்த்து அரைத்து வெய்யலில் வைக்கத் தைலமிறங்கும் அதை யெடுத்துச் சிமிளில் வைத்துக் கொண்டு தேவையானபோது நெற்றியிலிட்டுச் செல்ல சகல காரியங்களுங் கைகூடும். அதையே நெற்றியிலிட்டுக்கொண்டு செபஞ்செய்ய எத்தேவதைகளும் சீக்கிரத்தில் வசியமாகும் ரொம்பவுங் கைகண்டது.

881 வேறு

வெள்ளைச்சார் வேளையின் வடக்கு வேரை அவுரிச் சாற்றில் அரைத்து நெற்றியில் திலர்தமிட்டுக்கொண்டு சென்றாலுஞ்சரி அல்லது புருவத்தின்பேரில் தடவிக்கொண்டு போனாலுஞ்சரி சத்துருக்கள் யாவரும் உன்னைக் கண்டமாத்திரத்தில் வணங்கிவருவார்கள்.

882. பேய்கள் தானாக ஓடும் ஜாலம்

பெருங்கிழங்கின் மேற்றோலை வெதுப்பிப் பொடிசெய்து அதற்குச் சமன் மருளூமத்தன் விரையைச் சூரணஞ்செய்து இரண்டையும் ஒன்றாய்க் கலந்து விபூதியிற் சேர்த்து வைத்துக்கொண்டு பேய்பிடித்தவர்களுக்குக் கொஞ்சமெடுத்து ஜலத்திற்கலக்கி உள்ளுக்குக்கொடுக்க அவர்கள் தலைசுற்றியாடி வாய்மொழி சொல்லி முடியெடுத்துக் கொடுப்பார்கள். அதன் பிறகு நம்மிஷ்டம்போல் செய்துக்கொள்ளலாம்.

883. மறைவுமையின் ஜாலம

சிறுத்தை விரையைக் கொண்டு வந்து குழித் தைலமிறக்கி அதில் ஏரழிஞ்சியின் வடகுவேரைச் சுட்டுக்கரியாக்கிக கலந்து மைசெய்துவைத்துககொண்டு தேவையானபோது நெற்றியிலிட்டுச்செல்ல ஒருவருங்காணமாட்டார்கள். இதைத்தான் மறைப்புமை என்று சொல்கிறது.

884. ஆண் பெண் வசிய ஜாலம்

இரட்டைப்பிரமட்டையிலை ஆணிலை நீட்டாயிருக்கும் பெண்ணிலை குட்டையாயிருக்கும அதைக்கண்டறிந்து ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணுமாக ஐந்தாறு இலையைகள்ளி அதன்கூட வெள்ளைப்பூண்டு திரியை நாலைந்துவைத்து கசக்கி இஷ்டமுள்ளவர்களின் தலையில் பிழிந்து உள்ளங்கையால் அரகைத்தேய்த்துவிட வசியமாகும.

885. முள்ளின்பேரில் நடக்கும் ஜாலம்

ஞாயிற்றுக்கிழமையும் அஷ்ட நக்ஷத்திரமுங்கூடிய நாளில் முத்தெருக்கன் செடிக்கு காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து வேரறுமல் பிடுங்கி வந்து குளிசமாடி வைத்துக்கொண்டு முள்ளின்பேரில் நடக்க முள் காலில் தைக்காது.

886. கண்ணோய் வராத ஜாலம்

எள்ளுப் பூவை வாயில்போட்டுக்கொண்டு பல்லில்படாது விழுங்கும் பக்ஷத்தில பூ ஒன்றுக்கு ஒருவருடம் கண்ணோய் வராது இது சிலருககு நாளது வரையில் அனுபோகமுண்டு.

887. சூனியமகலும் ஜாலம்

வேப்பமரக் காக்கைகூடு வேப்பம்பட்டை எட்டிவிரை பாம்புதோல் ஆமையோடு செக்காடியிடத்தின்மண் காக்கணஞ்செடி குதிரைக்குளம்பு

வெள்ளைப்பூண்டு தீட்டுச்சீலை மஞ்சள் மூஞ்சூரின்தோல் கோழிமுட்டை மாவிலிங்கப்பட்டை குங்கிலியம் சிறகீரைவேர் இவைகளை யெல்லாம் ஒன்றாக யிடித்துச் சட்டியில்போட்டுப் புகைத்து அப்புகையை பேய் பிசாசு சூன்யம் ஏவல் முதலிய துஷ்டதேவதைகளால் வாதைப்படுபவர்களின் முகத்திற் காட்டினால் அதுகளெல்லாம் காதவழிவிலகிவிடும்.

888. வெண்ணெய் தானாக உருகும் ஜாலம்

சுண்ணாம்புக்கல்லை பூமியில் புதைத்துவைத்து ஒருவருக்குந்தெரியாமல் மண்ணைப்போட்டு மூடிவிட்டு ஜாலமாடுஞ்சபையில் சனங்களைப்பார்த்து நெருப்பில்லாமல் வெண்ணெயை உருக்குகின்றேன் பாருங்களென்றுசொல்லி ஓர் கிண்ணத்தில் வெண்ணெயைப்போட்டு சுண்ணாம்பு புதைத்திருக்குமிடத்தில் வைத்து மந்திரஞ்சொல்லிக்கொண்டே கொஞ்சம் ஜலத்தை சுற்றிலும்விட வெண்ணெயானது உருகும் பார்ப்பவர்கள் சந்தோஷப்படுவார்.

889 கல் தானாய் நகருஞ் ஜாலம்

கோபுரந்தாங்கி மூலிகைக்காகிலும் மலைதாங்கிமூலிகைக்காகிலும் சாப நிவர்த்திசெய்து காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து கொண்டுவந்து குளிசமாடி அரையில் கட்டிக்கொண்டு கருங்கல்லை எட்டியுதைக்க அது தூரமாகப்போய் விழுந்துவிடும் அல்லது அம்மூலிகையை வளையமாகச் சுற்றி கீழேவைத்து அதன்பேரில் ஓர் பெரிய பாராங்கல்லை தூக்கி வைக்க அக்கல்லானது நகர்ந்து அப்புறம்போய் விழுந்துவிடும்.

890 தவளைகள் மேயும் ஜாலம்

பச்சைத்தவளையின் கொழுப்பைக்கொண்டுவந்து வெள்ளைத்துணியில் பிரட்டி நிழலிலுலர்த்தி வத்தியாகச்செய்து அவ்வத்தியை அகலில்போட்டு எண்ணெயூற்றி விளக்கேற்ற அங்குள்ள மனிதர்களின்மேலெல்லாம் தவளைகளாகவே மேயும் விளக்கையணைத்துவிட்டால் ஒன்றுமிராது.

891. வசியஞ் செய்யுஞ் ஜாலம்

காஷ்டத்தில் பிணத்தைச் சுற்றிவந்துடைக்கும் தோண்டியின் ஓட்டைக் கொண்டுவந்து அங்கு பிணஞ்சுட்டக் கரியினாலேயே இன்னாருக்கு இன்னாள் வசியமாகவென்று எழுதி அவள்படுக்கும் தலைமாட்டண்டைவைத்துவிட்டால் அவள் தூங்கும்போது அவளுக்கு இவன்மேல் கியாபகத்தையுண்டாக்கும்.

892 கற்றாழைநாற்றம் போகுஞ் ஜாலம்

ஏரண்டத்தெண்ணெயை பெயர் சொல்லாமல் வாங்கிவந்து இராத்திரி போஜனஞ்செய்து படுக்கைக்குப்போகும்போது இரண்டு அக்குளகளிலும் தடவிப்படுத்துக்கொண்டிருந்து மறுநாள் காலையில் இலுப்பைப் புண்ணாக்கேனும் சிகைக்காயேனும் போட்டுக்கழுவிவிட கற்றாழை நாற்றமானது மாறும் இம்மாதிரி ஐந்து அல்லது ஆறுவிசை செய்யவும்.

893. மூட்டு பூச்சிகள் மாளும் ஜாலம்

ஆதிவாரம் சாய்ங்காலம் சூரியன் அஸ்தமிக்கும்வேளையில் ஓர் மூட்டுப்பூச்சியை கையில்பிடித்து தெருவாசற்படியின்பேரில் வைத்து இரண்டு துண்டாக அறுத்து தலைமாற்றி யெரியவும் இப்படி மூன்றுவாரம்வரையில் செய்யும்பக்ஷத்தில் அவ்வீட்டிலுள்ள மூட்டுப் பூச்சிகளெல்லாம் நசியும்.

894 வேறு வசிய ஜாலம்

காந்தம் கெஞ்சா சுழல்வண்டு குழியானை மின்மினிப்பூச்சி இந்திரகோபப் பூச்சிசிகப்பு அட்டை நிண்ணசிணுங்கி ஆடையொட்டி மருளூமத்தன்

இவைகளைப் பேய்க்கருப்பன் சாற்றாலரைத்து துவரைபோல் மாத்திரை யுருட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு ஆணுக்குப்பெண்ணும் பெண் ணுக்கு ஆணுமாக நாதத்திலும் விந்திலுமிழைத்துக் கொடுக்க வசியமாவார்.

895. வேறு

காந்தம் மனோசிலை இந்திரகோபப்பூச்சி ஆறுபுள்ளிவண்டு சுழல்வண்டு குழியானை கெஞ்சா கிண்ணாசிணுங்கி புல் அட்டை களிப்பாக்கு தொட்டாற் சுருங்கி இவைகளையெல்லாம் பேய்க்கருப்பன் சாற்றாலரைத்து துவரைப் பிரமாணங் குளிகைத்திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணுமாக நாதத்திலிழைத்துக்கொடுக்க வசியம்.

896. வேறு

நிலவூமத்தன்செடிக்கு ஆதிவாரஞ் சூரியோதயத்தில் சாபநிவர்த்தி செய்து காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங்கொடுத்து வேரறாமல் பிடுங்கி வந்து ஓர் சட்டியில்போட்டு பச்சைக்கற்பூரமுஞ் சேர்த்துக் கரியாகவறுத்து அதைக்காராவின் நெய்யினால் மைபோலரைத்துச் சிமிளில்வைத்துக்கொண் டுதேவையானபோது இஷ்டப்பட்டவளின் பெயரை மனதில் நினைத்துக் கொண்டு மையை திலர்தமிட்டுக்கொண்டு அவள் முகத்தைப்பார்க்க அவள் வசியமாகுவள்.

897. பந்தயங் கெலிக்குஞ் ஜாலம்

ஊமையன் ஒருவனை அழைத்து அவன்கையில் ஓர் காலணா கொடுத்து சைகைகாட்டி உப்புவாங்கிவரச்செய்து மறுபடியும் அவன் கையிலேயே காசுகொடுத்து சட்டிவாங்கிவரச்செய்து அவ்வுப்பைச் சட்டியில்போட்டு அவனையே வறுக்கச்செய்து கறுக்கி பஸ்பமாக்கி அதற்குச் சரிபாதி விபூதி யைக்கலந்து வேறொரு சட்டியிற்பரப்பவேண்டும் இவ்வளவு வேலைகளையும் அந்த ஊமையின் கையினாலேயே முடித்துக்கொண்டு அவனை அனுப்பி விட்டு அவ்விபூதி பரப்பினதின்பேரில் ஐயும் கிலியும் சவ்வும் சவ்வும் ஐயும் கிலியும் ஆம் ஓம் சுவஹாவென்று எழுதி எதிரில் வைத்துக்கொண்டு அம் மந்திரத்தையே ஆயிரத்தியெட்டுரு செபிக்கச் சித்தியாகும் பிறகு அதை யெடுத்து வைத்துக்கொண்டு சகலமான பந்தயங்களையும் கெலிக்கலாம்.

898. புரு பந்தயங்கெலிக்கும் ஜாலம்

பந்தயங்கெலிக்கும் புருவின்பேரில் விபூதியைப்போட்டு மேற்படிமந் திரத்தை மனதினிடமாக முப்பத்திரண்டுவிசை செபித்து வாயினாற் புரு வைவூதிவிட்டுவிட எவ்வளவு நாழிகையானாலுங் கீழிறங்காது எதிரியின்புரு இறங்கினபிறகுதான் நம்முடைய புரு இறங்கும்.

899. கோழிபந்தயங் கெலிக்கும் ஜாலம்.

பந்தயம்விடும்கோழியின்மேல் விபூதியைப்போட்டு மந்திரத்தை நூற்றி யெட்டுவிசை மனதினிடமாக தியானஞ்செய்து கத்திகட்டி விட்டுவிட எதி ரியின் சாவலானது இச்சாவலைக்கண்டவுடனே யிரண்டு ஓடுகிறதற்கு வழி யைத்தேடும் அப்படியின்றி தைரியமாக நின்றாலும் அறுபட்டுச்சாகுமேயொ ழிய பந்தயங்கெலிக்காது.

900. காடைபந்தயங் கெலிக்கும் ஜாலம்

பந்தயம்விடும் காடைக்கு விபூதியைக் கையிலெடுத்து பதினாறுவிசை மந்திரத்தைத்தியானஞ் செய்துப்போட்டு வாயினால் மூன்றுவிசை யூதிவிட்டு விட பந்தயமானது சீக்கிரங்கெலித்துவிடும்.

901. கௌதாரி பந்தயங்கெலிக்கும் ஜாலம்

விபூதியைக்கையிலெடுத்து மந்திரத்தை எழுதாஞ் செபித்துக் கௌதாரியின்மேல் ஊவி பந்தயத்திற்கு விட்டுவிட எதிரியின் கௌதாரியானது பின்னிடையும் கத்தி கட்டிவிட்டாலும் நம்முடைய கௌதாரிகெலிக்குமே யொழிய எதிரியின் கௌதாரி ஒருக்காலுங் கெலிக்காது.

902. ஆட்டேக்கிடா பந்தய ஜாலம்

சண்டைவிடும் ஆட்டுக்கிடாவின் நெற்றியில் மஞ்சள்பூசி குங்குவமிட்டு மேற்படி விபூதியைக் கையிலெடுத்துக்கொண்டுமந்திரத்தை அறுபத்துநாலு விசை செபித்து அவ்விபூதியை நெற்றியிலிருக்கும் மஞ்சள் பொட்டின் கீழ் பொட்டாகவைத்து மற்றதைக்கடாவின் திரேகத்தில் பூசி சண்டைக்கு விட்டுவிட இக்கடாவைப்பார்த்தும் எதிரியின் கடாவானது மிரண்டுபயந்து ஓடுகிறதற்கு வழியைத்தேடும் அப்படியின்றி எதிர்த்துநிற்கும் பக்ஷத்தில்கட்டாயமாக அக்கடாதோல்வியடையுமே யொழிய ஒருக்காலும் கெலிக்காது,

903. ரேக்லா பந்தய ஜாலம்

ரேக்லா பந்தயம் விடுபவர்கள் பந்தயமாட்டைக் கழுவி அதன்நெற்றியில் மஞ்சள்பூசி குங்குவ மிட்ட பிறகு மேற்சொன்ன விபூதியைக் கையிலெடுத்துக்கொண்டு மந்திரத்தை நூற்றியெட்டுவிசை செபித்துக் கற்பூரங் கொளுத்திப் பணிந்து பின் அவ்விபூதியைத்தங்களுடைநெற்றியில்கணக்க இட்டுக்கொண்டு மீதிவிபூதியைமாட்டின்மேல்தடவிஏறி மந்திரத்தைசெபித்துக்கொண்டே உட்கார்ந்து ஓட்டும்பக்ஷத்தில் எத்தனை மைல்களானுலும் இளைப்பு ஆயாசமின்றி தமாஷாகவே ஓடி பந்தயங்கெலிக்கும் எதிரியினுடைய மாடானது நன்ருக ஓடுகின்ற மாடாயிருந்தாலும் இதைப்பார்த்ததும் பயங்கொண்டு பின்னிடையும் எல்லோரும் உன்னுடைய மாட்டைப் பார்த்து ரொம்பவும் சந்தோஷப்படுவார்கள்.

904. குதிரைப்பந்தயம் ஜாலம்

பந்தயமோடுங்குதிரையைக் குளிப்பாட்டியபிறகு முன்சொன்ன விபூதியைக்கையி லெடுத்துக்கொண்டு அதனெதிரில் உட்கார்ந்து மந்திரத்தை முன் உருவுகொடுத்த பிரகாரமே ஆயிரத்தெட்டுஉருவுகொடுத்து விபூதியை அதன்நெற்றியில் சந்திரபிறையைப்போல் வளைவாகயிட்டு மீதி விபூதியைத் தாங்கள் நெற்றியில் யிட்டுக்கொண்டு ஒருசிட்டிக்கை விபூதியை குதிரைக்குக் குடிப்பாட்டிடும் ஜலத்திலேனும் சாராயத்திலேனும் போட்டுக் குடிப்பாட்டி பந்தயம்விட தவராது கெலிக்கும் எதிரியின்குதிரையானை யைப்போலிருந்து இது பூனையைப்போலிருந்தாலும் தோற்காது விபூதியை ஜலத்தில்போட்டுக் குடிப்பாட்டுகிறதைவிட சாராயத்தில்குடிப்பாட்டுகிறதே ரொம்பவும் மேலானது.

905. செடிகள் உலரும் ஜாலம்.

கோயில்கள் கோபுரங்கள் மெத்தைகள் இதுகளில் முளைத்து அபாயத்தையுண்டாக்கும் செடிகளுக்கு கெந்தகத்தையும் வெள்ளைப் பாஷாணத்தையுஞ் சமயெடையாகக் கலந்துபொடியாக்கி அதை அச்செடிகளின் தாய் வேரில் துளைசெய்துப்போட்டு மூடிவிட அச்செடிகள் கூடிய சீக்கிரத்தில் காய்ந் துயர்ந்து விடும்.

906. சீடைப்புழுக்கள் மடியும் ஜாலம்

செம்புக்கம்பியையும் துத்திநாமக் கம்பியையுஞ்சேர்த்து சீடைப்புழுக்கள் பிடித்த மரத்தடியிற் சுற்றிவைக்க அப்புழுக்களற்று விடும்.

907. பிரசவமாகும் ஜாலம்

பூமியைப்பார்த்து வளர்ந்திருக்கும் கீழாநெல்லிச்செடிக்கு நசி – மசி என்று நூத்தியெட்டு உருசெபித்துப் பிடுங்கிவந்துக் குளிசமாடி கற்பவேதனைப்படும் பெண்களுக்கு நெற்றிமயிரிற் கட்டி தொங்கவிட்டு அதைப்பார்க்கச்சொன்னாலுஞ்சரி உடனே பிரசவமாகும்.

908. பேன் மரண ஜாலம்

பேன்பிடித்தவர்களின் தலையிற்கொஞ்ச மூக்குத்தூளைப்போட்டுப் பிறட்டி மயிரை உதற அப்பேன்களெல்லாம் பலபல வென்று உதிர்ந்து விடும் பிறகு தலைமுழுகிக் கொள்ளவும்.

109. தீபம்பலுக்காத ஜாலம்.

சுடுகாட்டில்பிணத்தை சுற்றிவந்துடைக்கும்தோண்டியில் ஓர்துண்டையெடுத்துவந்துவட்டமாக நறுக்கிப்பதிவிளக்கின் கீழ்வைத்துவிட எவ்விதத்திலும் குறியானதுபலுக்காது பூசாலிகள்பாடு வில விலத்து விடும் இதையே குறிமேடையிலும் வைக்க அங்கு எவ்விதகுறிகளும் நடவாது.

910. தேவஸ்தப்பன ஜாலம்

பன்றியிரைச்சியை நெருப்பில் சுட்டுக் கரியாக்கிப் பன்றியின்மூத்திரப்பையின் நீரைவிட்டு அரைத்து மாத்திரைதிரட்டிவைத்துக்கொண்டு தேவையானபோது ஓர்மாத்திரையை யெடுத்து சிறுநீரிலுறைத்துத் தெய்வமாடும் ஆவேசக்காரர் குறிக்காரர் குறிமேடை இதுகளின்மேல்தட்டிவிட எவ்விதக் குறியும் ஆவேசமும் நடக்காது.

911. செக்கில் எண்ணெய் வராத ஜாலம்

செக்காடுகையில் கொஞ்சம் நீர்முள்ளி விரையை அதில்போட்டுவிட எவ்விதத்திலும் கொஞ்சமேனும் எண்ணெயிறங்காமல் என்ளெல்லாம் பிசறிக்கொண்டு அவஸ்தைப் படுவார்கள்.

912. சாராயம் இரங்காத ஜாலம்

சாராயம் இறக்கும் பட்டியிற்சாராயங்காயும்போது அவ்வடுப்பிற்கொஞ்சம் சிறுகுறிஞ்சான் விறகை போட்டுவிட சாராயமானது கொஞ்சமேனுமிறங்காது அதையெடுத்துவிட்டு எரித்தால் தான் இறங்கும்.

913. நீரைப்பாலாக்கும் ஜாலம்

தேத்தான் கொட்டையைப் பசும்பாலிலரைத்து நிழலிலுலர்த்திக் காயவைத்திருந்து ஜாலமாடும்போது சபையில் அதைக்கொஞ்சமெடுத்து தண்ணீரிற் போட்டுக்காட்ட அதுபாலைப்போலிருக்கும்சபையிலுள்ளவர்கள் ஆச்சரியப்படுவார்கள் மறுபடியும் அதைவெய்யலில் வைத்துக்காட்ட தண்ணீரைப் போலிருக்கும்.

914. பாலைத்தயிராக்கும் ஜாலம்.

கொஞ்சம் பாலையெடுத்து அதில்வாடிக்கிழங்கையுலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ்செய்த தூளில் கொஞ்சம் போட்டுக் கனத்ததயிராகும்.

915. மோர்தயிராகும்ஜாலம்.

விளாங்காயையுலர்த்தி இடித்துப்பொடியாக்கினதூளைக்கொஞ்சமெடுத்து கடைந்தெடுத்தமோரிற்போட்டுகலக்கிச்சற்றுநேரம்வரைக்கத்தயிராக தோய்ந்து விடும்.

916. கோழிகள்சாகும் ஜாலம்.

கொஞ்சம் துருசைத்தூளாக்கி அதைக்கேழ்வரகு களியிலாகிலும் கூழிலாகிலும் வைத்துப்பிரட்டி பகையாளிகளின் கோழி முன்போட அதைத் தின்றதும் அதுகளெல்லாம் சுருண்டு கீழே விழுந்துவிடும்.

917. வலையில்மீன் அகப்படாத ஜாலம்.

பெருங்காயத்தைச் செருப்படைச்சாற்றி லரைத்து அதைச்செம்படவன் வலையிற்றெளித்துவிட அவ்வலையில் எவ்வித மீன்களும் அகப்படாது.

918. விஷமேற்றும் ஜாலம்

பூனைக்காஞ்சொரியிலையை உலர்த்திப் பொடியாக்கி வஸ்திர காயஞ் செய்துவைத்துக் கொண்டிருந்து ஜாலமாடுஞ்சபையில் விபூதியெடுக்கின்ற மாதிரி அதைக் கையிலெடுத்து ஒருவர்மீது தேய்த்து எதுவிஷமென்று சொன்னால் அவர்கள் துள்ளி துள்ளி குதிப்பார்கள் பின்பு கொஞ்சம் சிறுநீர் விட்டுக்கழுவ ஒன்று மிருக்காது.

919. பேயாடும் ஜாலம்

பேய்கள் பிடித்துக்கொண்டு வாய்பிறப்பு சொல்லாமலிருப்பவர்களை அழைத்துவந்து அவர்கள்தலையில் ஜலத்தையூற்றிக் குந்தவைத்து மருவூமத் தங்காயை அவர்கள் தலையில்தேய்க்க அவர்கள்தலைசுற்றியாடி வாய்பிறப்புச் சொல்லுவார்கள் அச்சமயம் செய்யவேண்டி யவைகளைச்செய்து முடியறுத்துக்கொண்டு பிறகு ஜலத்தைவிடத் தெளிந்துபோகும்.

920. நெருப்புச்சட்டிதூக்கும் ஜாலம்

ஒருசட்டியிற் பேர்பாதி சாம்பலைக்கொட்டி தண்ணீர்விட்டுப் பிசறி அதற்குமேல் விறட்டிகட்டைகளைப்போட்டு நெருப்புபற்றவைத்து சட்டிக்கு மஞ்சள் குங்குமமிட்டு கையிலெடுத்துக்கொண்டு என்னேரமானாலும் விளையாடலாம் கைசுடாது பார்ப்பவர்களும் உண்மையான மருளென்றே நினைப்பார்கள்.

921. ஆலம் மஞ்சளாகும் ஜாலம்

ஆலத்தைக்கரைத்து சபையிலுள்ள வர்களுக்குக்காட்டி இதை மஞ்சளாகச் செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி கொஞ்சம் எலுமிச்சம்பழ ரசத்தைவிட மஞ்சளாகும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

922. உயிரிழந்த பிள்ளைப்பூச்சி உயிராகும் ஜாலம்

மஞ்சளை அரைத்துத் தண்ணீரிற்கலக்கி அதில் பிள்ளைப்பூச்சியை விட்டால் அது இறந்துவிடும் பிறகு அதையெடுத்து அதினதலையின்பேரில் கீழாநெல்லியைக் கசக்கிச் சாறுபிழிந்தால் அது தூங்கி யெழுந்ததைப்போன்று உயிர்வந்து ஓடிப்போய்விடும்.

923. காற்றாடிபந்தயங் கெலிக்கும் ஜாலம்

காற்றாடி பந்தயம் விடுபவர்கள் மேற்படி விபூதியை நெற்றியிலிட்டுக் கொண்டு மந்திரத்தை மனதில் தியானஞ்செய்துக்கொண்டே பந்தயம் விடும்பக்ஷத்தில் நம்முடைய ஒருகாற்றாடியினால் எதிரியின் காற்றாடிகள் எத்தனையானாலும் அறந்துவிடும்.

924. வழக்குகள் வெல்லும் ஜாலம்.

மேற்படி விபூதியைக்கையி லெடுத்துக்கொண்டு மந்திரத்தை முப்பத்திரண்டுவிசை மனதிலேயே மனனஞ்செய்து பிறகு அதை நெற்றியிலிட்டுக்

கொண்டு கொஞ்சம் விபூதியைமடித்து மடியில்வைத்துக்கொண்டு போகும் பக்ஷத்தில் எதிரியானவன் வணங்கிவருவான் இல்லையாகில் வழக்கு நம்முடைய பக்ஷமேகெலிக்கும் எதிரிசொல்கிறது உண்மையாயிருந்து நாம் சொல்கிறது சுத்தப்பொய்யாயிருந்தாலும் நியாயாதிபதி நம்முடை சொல்லை நம்புவாரே யொழிய எதிரியின்சொல்லை நம்பமாட்டார்.

925. குத்துச்சண்டை கெலிக்கும் ஜாலம்

குத்துச்சண்டைசெய்யும் பயில்வான்கள் மேற்சொன்ன விபூதியைக் கையிலெடுத்துக்கொண்டு மந்திரத்தை நூற்றியெட்டுவிசைசெபித்து அதை நெற்றியிலிட்டுக்கொண்டு போகும்பக்ஷத்தில் எதிரியானவன் இவன் முகத்தைப்பார்த்ததும் மனவிகார மடைந்து ஒன்றுந்தோன்றாது விழிப்பான். அவன் பலாஷ்டிகனாயிருந்து இவன் பலமற்றவனாகயிருந்தாலும் ஜெயம் இவனுடையதே யொழிய அவன் ஒருக்காலும் ஜெயமடைய மாட்டான்.

926. பாணசண்டை கெலிக்கும் ஜாலம்.

பாணசண்டைசெய்யும் வஸ்தாதிகள் மேற்படி விபூதியைக்கையிலெடுத்துக்கொண்டு மந்திரத்தை நூற்றியெட்டுவிசைசெபித்து அதைநெற்றியிலிட்டுக்கொண்டு போகும்பக்ஷத்தில் எதிரியானவன் இவன் முகத்தைப் பார்த்ததும் இவனை நாம் என்னமாக கெலிக்கப்போகின்றோமென்று மனந்தடுமாறுவான் அப்படியும் மீறி பந்தயஞ்செய்ய வருவானாகில் அவனுக்குக் கைகால்களெல்லாந்தளர்ந்துவிடும் இவனுடைய பாணவருகிறதே அவனுக்குத் தெரியாமல் அடிபடுவான் நெற்றியிலிட்டுக் கொண்டதுபோக மீதிவிபூதியை ஓர் காகிதத்தில் மடித்து மடியில்வைத்துக் கொள்ளவும்.

927. சகலவசிய ஜாலம்.

ஓர் அகலில் காராவின் நெய்யையூற்றி தாமரை நூல்வத்திபோட்டு அப்புகையைத் தேவாங்கின் மண்டையோட்டில்பிடித்து வழித்துச்சிமிளில்வைத்துக்கொண்டு தேவையானபோது அதைக்காராவின் நெய்யிலழைத்துத் திலர்தமிட சகலஜனங்களும் வசிய மாவார்கள்.

928. கோழிகளைப்பிடிக்கும் ஜாலம்.

கேழ்வரகு கூழைக்கட்டியாகயெடுத்து அதில்கொஞ்சம் மூக்குத்தூளை வைத்துமூடிகோழியின் எதிரில்போட அதைத்தின்றதும் அக்கோழியானது சுருண்டு கீழே விழுந்துவிடும் அப்போது அதைச் சுல்பமாக பிடித்துக் கொள்ளலாம்.

929. பால்சுரக்கும் ஜாலம்.

பாலில்லாத பெண்களுக்குப் பால்சுரக்கவேண்டுமாகில் தலையிலிருக்கும் பேன்களில் பத்துபதினைந்துபேன்களைபபிடித்து வெற்றிலையில்வைத்து மடித்து உள்ளுக்குக்கொடுக்கப் பாலானது அபரிமிதமாய்ச் சுரந்துவிடும் அப்படி சுரக்காத பக்ஷத்தில் மறுபடியும் ஓர்விசை கொடுக்கவும்.

930. பாலைத்தயிராக்கும் ஜாலம்

பாலில் கொஞ்சம் பிராயம் பாலையூற்றி வெய்யலில் வைத்தாலுஞ்சரி அல்லது அதனிலையைப்போட்டு வைத்தாலுஞ்சரி சற்றுநேரத்திற்குள் தயிரைப்போல் கட்டியாகக் கட்டிவிடும்.

931. அவல்மெல்லாத ஜாலம்.

கொஞ்சம் அவலையெடுத்து நெய்யிற்கலந்து சற்றுநேரம் ஊறியபின் யாருக்கேனும் தின்னக்கொடுக்க அவர்கள் அதை எவ்வளவு நேரம்மென்று தின்றாலும் கொஞ்சமேனும் அசையாது அவல் அவலாகவேயிருக்கும்.

932 பல்லுதிரும் ஜாலம்

முன்னம் அவலையென்று தின்றவர்களுக்கொஞ்சம் கரும்பைக் கொடுத்துமென்று தின்னச்சொல்ல அவர்கள் அப்படியே அதைமெல்லுவார்களாகில் பல்லுகளிலிருந்து உதிரஞ்சொரிவதுடன் பற்களும் விழுந்து விடும்.

933. சகல நோய்களுந்தீரும் ஜாலம்.

வெள்ளாட்டு மூத்திரத்தில் சீரகத்தையாவது மிளகையாவது ஊறவைத்து எடுத்து வைத்துக்கொண்டு அதை நோயுள்ளவர்களுக்குக் கொடுத்துக் கொண்டுவர எவ்விதநோய்களும் சாந்தமாகும் இரண்டையும் சேர்த்துக் கொடுத்தாலுஞ்சரி அல்லது தனித்தனிகொடுத்தாலும் கொடுக்கலாம்.

934. வேடிக்கை ஜாலம்

பிராமணரில் பிரமசாரியாக இறந்துபோனவனைக் கொளுத்திக் காடாற்று முன்னமே அவனுடைய எலும்பில் ஒன்றைக் கொண்டுவந்து பூசையில் வைத்து அதனுடன் வஸ்து சோ ஒன்று வைத்து உச்சாடன சக்கரத்தை வரைந்து அதனெதிரில் வைத்து அம்மந்திரத்தையே லக்ஷத்தியெட்டுரு கொடுக்கும்பக்ஷத்தில் அதனுடைய மகிமையானது உலகத்தில் யாரை எது கேட்டாலும் தடையன்றி கொடுப்பார்கள். சகல தெய்வங்களும் நீ அழைத்தபோது வந்து உனக்கு வேண்டிய காரியங்களை நிறைவேற்றும்.

935. விஷமேற்றும் ஜாலம்

ஓர் ஆண் கெச்சக்காயைக் கொண்டுவந்து அதனுள்ளிருக்கும் பருப்பை இரும்பினாலாகிய ஆயுதங்கள் படாது எடுத்துவிட்டு சூரியக்கிராணமும் அமாவாசையுங்கூடிய தினத்தில் அக்காய்க்குள் செம்போத்து உடும்பு காக்கை இம்மூன்று ஜீவன்களின் நாக்கும் கீழாநெல்லி வேர் காமப்பால் ஆக இவ்வைந்து சரக்குகளையும் சமயெடையாகச் செலுத்தி துவாரத்தைக் கொசுகின் மெழுகால் மூடி மூடுவாய் தெரியாமல் அரிதாசம் பூசி மையைத் தடவி வைத்துக்கொண்டு தேள் கொட்டிவந்தவர்களுக்கு மந்திரஞ்செய்கிற பாவனையாய் நடித்து அவர்கள் கையில் மேற்படி காயைக்கொடுத்து அதை இன்னொருவர் கையில் கொடுக்கச்சொல்லவும் அதுசமயம் விஷமானது இவரை விட்டு வாங்கினவர்களைப்பற்றும், அதை மறுபடியும் இன்னொருவர் கையில் கொடுக்கச்சொல்ல அவர்களையும் முன்மாதிரியே தொத்தும இப்படி அக்காயை மாற்றிமாற்றி எத்தனை பேர்கள் வரையில் கொடுக்கின்றாரோ அவர்களை யெல்லாம் அப்படியே பாதைப்படுத்தும். வாங்கினவர்களெல்லாம் விஷத்தினால் ரொம்பவும் அவஸ்தைப்படுவார்கள் அதன்பிறகு அக்காயைக் கீழேபோட்டு விடச்சொல்ல அவ்விடமானது பூமியைப்பற்றும்.

936. வராகி வசியம்

சிவன், காளி, கணபதி, கந்தன், வைரவன், விஷ்ணு, அநுமன், ஐயன், கறுப்பன் ஆகிய இவ்வொன்பது பேர்களின்பேரிலிருக்கும் மெழுகுகளை வகை யொன்றுக்கு விராகனெடை இரண்டாக யெடுத்து அத்துடன் ஐங்கோலம் ஐங்காயம் சுடலைக்கரு இம்மூன்றையும் சமயெடை சேர்த்துப் பிசைந்து எதிரியைப்போல உருவஞ்செய்து எதிரில் வைத்துக்கொண்டு மயானருத்திரனைத் தியானித்து யமபம் பம்பம் மயானருத்திரா கட்டு கட்டு குட்டி எரி எரி என்று லக்ஷத்தியெட்டுரு செபித்துப் பிறகு எதிரியின் பெயரை ஓர் நறுக்கில் வரைந்து பதுமை எதிரில் வைத்து மத மாங்கிஷம் முதலிய பொருள்களுடன் மறுபடியும மந்திரத்தை ஆயிரத்தியெட்டுரு செபி

த்துப் பதுமையை எடுத்து ஓர் குப்பியில் மூடக்கிவைக்க எதிரியானவன் மூடமாவான். அதன்பிறகு அப்பதுமையின் கணுவுகளுக்கு வேலன் முள்ளில் ஐங்கோலத்தைத் தொட்டு குத்த எதிரியானவன் சொல்லக்கூடாத துன்பத்தை அனுபவிப்பன். அந்த சமயன் எதிரியேனும் எதிரியின் மனிதரேனும் நீ செய்தாயென்று தெரிந்துக்கொண்டு உன்னை வந்து வணங்கும் பக்ஷத்தில் நீ பதுமைக்குக் குத்தியிருக்கும் முள்ளை யெடுத்துவிட்டு பதுமையை நீரில் கரைத்துவிட எதிரியானவன் பழயபடி சுகத்தையடையான் உனக்கும் பாவஞ் சம்பவிக்காது.

937. மாரண ஜாலம்

வெள்ளை மயிரில்லாத சுத்தக் கறுப்புநாயின் பக்கவிலாவெலும்பு காக்கை நரம்பு, பிணத்தின் சுடர் தைலம், ஐங்கோலம் இவைகளையெல்லாம் சம யெடையாக யெடுத்து கல்வத்தில் போட்டு மையைப்போலரைத்து நாணத்திற் பூசி பூசையில்வைத்து அவல் கடலை மது மாங்கிஷம் இவைகளையும் வைத்து ஓம்-ரீங்-கங்-சங்-ஐயும்-ரீம்-ரங்-லா-லீ-லூ-மங்-சிங்-சிவயநம யென்று லக்ஷத்தியெட்டுரு செபிக்கச் சித்தியாகும். அதன்பிறகு எதிரியின் பெயரை ஓர் நறுக்கிலெழுதி பூசையில் வைத்து அவன் பெயரைத் தியானிக்க எதிரி மாரணமாவான்.

938. வேறு வராகி வசியம்

ஒரு மண்டலம்வரைக்கும் காலை மாலை இருவேளையும் சுத்தி பூசை செய்து ஐயும் கிலியும் சவ்வும் சுவஹாவென்று லக்ஷத்தியெட்டுரு செபிக்க வராகியானவள் வசியமாகி உன்னிஷ்டமான வேலைகளை யெல்லாம் நிறைவேற்றுவாள் இவ்வுலகத்திலுள்ளவர்களும் வசியமாகி நீ கேட்டதைக் கொடுப்பார்கள்.

939 இருதலைக்கொள்ளி வசியம்

ஓர் தகட்டில் சக்கரத்தைக் கீறி எழுத்தை மாறி எதிரியின் பெயரை அதன் கீழ் வரைந்து சுடலைக்கருவையும் ஐங்கோலக்கருவையும் கலந்து தகட்டில் பூசி அதின்பேரில் அக்கினியை ஓர் துணியில் சுற்றிவைத்து சிவ, வசி எனற மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி இருதலைக்கொள்ளி நீ உடனே சென்று என பகையாளியினுடைய வீட்டைக் கொளுத்தென்று சொன்னால் தவராது அக்ஷணமே கொளுத்திவிடும்.

940. வேறு குட்டிச்சாத்தான் ஜாலம்

ஓர் தகட்டை நாற்சதுரமாகத் தயார்செய்து அதில் சக்கரத்தைக்கீறி ஓம், ஆரீம், வா, வா, என்னும பிரணவத்தை அடைத்து எதிரியின் பெயரை அதன்கீழ் வரைந்து ஐங்கோலம், ஐங்காயம், சுடலைக்கரு இம்மூன்றையும் ஒன்றாகக் குழைத்து தகட்டிற்குப் பூசி எதிரில் வைத்துக்கொண்டு மது, மாங்கிஷம் சிவந்த புஷ்பம் சாம்பிராணிவத்தி இதுகளுடன் மூன் சக்கரத்திலடைத்த மந்திரத்தை லக்ஷத்தியெட்டுரு செபித்துப் பூசித்து பலிகொடுத்தால் குட்டிசசாத்தானானது எதிரில் வந்து நிற்கும அதைப் பார்த்து ஓ குட்டிச்சாத்தான் நீ நான இடும கட்டளையை நிறைவேறறவேணுமென்று சொல்லி மலத்தை யெடுதது தகட்டின்பேரில் வைத்து இதைக் கொண்டு போய் உனக்கிஷ்டமான இடத்தில் போடென்று சொல்லிவிட்டால் அது நாம் தகட்டின்பேரில் வரைந்துள்ள நம் எதிரியின் வீட்டில் நிமிஷத்திற்கொருதரம் மலத்தை வாரிவாரி இறைத்து அவனை இம்சைப்படுத்தும். அப்போது உன்னெதிரியானவன் வணங்கிவருவானாகில் நீ உடனே தகட்

டையும் பூசையில் வைத்திருக்கும் மற்ற சாமான் எடுத்துக்கொண்டுபோய் ஆற்றுநீரில் போட்டுக் கழுவிவிட்டு குட்டிச்சாத்தானை யழைத்து அவன் கையிலிருக்கும் மலத்தை வாங்கிக்கொள்வாயானால் எதிரிக்கு யாதொரு துன்பமும் நேரிடாமல் நிவர்த்தியாகும்.

941. சத்திவசிய ஜாலம்

இம்-உம்-கம்-ரமார்ங்-சிங்-ஆயி-டாகினி-மாகினி-விஷ்ணு சகோதரி-சர்வாணி உமை-தேவி-பராசத்தி-ந வ-சியென்றுவெள்ளிக்கிழமையும் பூசநக்ஷத்திரமும் வருகிற தினத்தில் லக்ஷத்தியெட்டுரு செபித்துப் பூசிப்பாயானால் வசியமாகும். அதன்பிறகு விஷ்ணுகிரந்திச் செடிக்குக் காப்புகட்டி பொங்கல் பலி தூபதீபங்கொடுத்து வேரறுமல் பிடுங்கிவந்துக் குளிசமாடி பூசையில் வைத்து வெள்ளைப் புஷ்பத்தினால் சத்தியை அலங்காரஞ்செய்து முன் மந்திரத்தை ஆயிரத்தெட்டுரு கொடுத்து குளிசத்தை யெடுத்துக் கட்டிக் கொண்டால் ஏவல், பேய், பிசாசு, பூதமிவைகளெல்லாம் விலகிவிடும். இதுவுமன்றி ஓர் தகட்டில் விபூதியைப்போட்டு அவ்விபூதியின்பேரில் சத்தியின் சக்கரத்தை வரைந்து மந்திரத்தைச்செபித்து அவ்விபூதியை யெடுத்து தோஷம் சுரமுதலியவைகளால் அவஸ்தைப்படுங் குழந்தைகளுக்கு கொடுக்கும்பக்ஷத்தில் அவைகளெல்லாம் விலகி குழந்தைகள் சொஸ்தமாகும்.

942. வேறு

அருக்கநாளும் அமாவாசையுஞ் சேர்ந்த தினத்தில் ஒண்டி மூலிகை என்னுஞ் செடிக்கு தூபநிவர்த்தி செய்து கன்னி நூல் காப்புகட்டி பொங்கல், பலி, தூபதீபங்கொடுத்து அதின்வேரை இரும்பாலாகிய ஆயுதங்கள் படாதுக்கொண்டு வந்து குளிசமாடிக் கட்டிக்கொள்ளும்பக்ஷத்தில் ஏவல், சூன்யம் பார்வை முதலியவைகள் விலகும்.

943. கார்த்திகைவீரியார்ச்சுன மந்திரம்

நேமநிஷ்டைகள் தவறாது தர்ப்பணம் ஓம முதலிய யாகாதி கருமங்களுடன் ஓம், ஆம், ஸ்ரீம், கிலியும் கார்த்திகை வீரியார்ச்சுன சுவாஹா என்று தினமொன்றுக்கு லக்ஷத்தியெட்டுரு செபிக்கச் சித்தியாகி எக்காரியங்களும் நீ நினைத்தபடியே கைகூடும். வியாபாரங்கள் வலுக்கும், வியாஜ்ஜியங்கள் ஜெலிக்கும். பகையாளிகளெல்லாம் உறவாவார்கள். ஏவல், பில்லி பார்வை முதலிய கொடுமைகளெல்லாம் விலகும். இம்மந்திரத்தைச் செபித்து விபூதியை யெடுத்துக் கொடுக்கும்பக்ஷத்தில் குழந்தைகளுக்கு வரும் மாந்தம், சோக்கம் காற்று தோஷ முதலியவைகளெலலாம் பரக்கும்.

944. மாடன் வசிய ஜாலம்.

விஷந்தின்று இறந்துபோன மனிதனைக் கொளுத்திய கரியைக் காடாற்றுமுன்னமே கொண்டுவந்து அதனுடன் ஐங்கோலம் சேர்த்து அரைத்து அதைக்கொண்டு எதிரியின் சிரசை வீங்கினாற்போல எழுதி அவன்பேரை அதின்கீழ் யெழுதிவைத்துக்கொண்டு ஆகாயமாடன் அந்தரமாடன் சுடலை மாடன் இவர் மூன்றுபேரையும் உள்ளத்தில் தியானித்து லக்ஷத்தியெட்டுரு செபித்து அதன்பின்பு ஓர் சதுரமான காரீயத்தகட்டில் ஓம்நமோபகவதே ஓம் படுசுவஹா என்ற அக்ஷரத்தை வரைந்து அதற்குப் பூச பலி முதலியதுகளைச் செய்து மந்திரஞ்செபித்து வைத்துக்கொண்டு எதிரியின்பெயரைஅத்தகட்டிலேயே ஓர் புறத்திலெழுதி ஐங்கோலத்தைத்தடவி மாடனை தியானஞ்செய்து உன்வசமாககிக்கொண்டு அதன்பிறகு ஓஆகாயமாடா இந்தாகல்என்று சொல்லிக் கல்லைத்தகட்டின்பேரில் வைத்துவிட்டால் அது

ஆயிரம் பேர்கள் பார்த்திருந்தபோதிலும் அவர்கள் கண்களுக்குத் தெரியாமல் கல்லையும் மண்ணையும் சேற்றையும் குப்பைகளையும் வாரி வாரி இறைக்கும் இதுவுமன்றி சொல்லக்கூடாத அசங்கிதமான வேலைகளையெல்லாம் செய்யும் எதிரியானவன் எங்குசென்றாலும் அவனை விடாமல் தொடர்ந்து அவன் போகின்றவிடங்களிலெல்லாம் பலவித இம்சைகளை செய்துக்கொண்டே போகும் ஒரு நிமிஷமாகிலும் அவனை சும்மாவிடாது அப்படி அதனிடத்தில் கஷ்டப்படும் எதிரியானவன் வணங்கி வந்து நீ கேட்ட பொருளைக் கொடுத்து உன்னைப்பணிவானாகில் முந்தி நீ எழுதிய உருவை அழித்துவிட்டு சக்கரத்தை யெடுத்து ஓடுகிற ஜலத்தில் போட்டுக் கழுவி மாடனை வரவழைத்து அவனைப் பணிந்து அவனிடங் கொடுத்த கல்லைக்கேட்டு வாங்கிக்கொண்டு அவன் மனந்திருப்தியடையப் பூசைகள் போடுவாயானால் நிவர்த்தியாகும்.

945. மலக்குட்டி வசிய ஜாலம்

ஓம் இரீம் வா வா யென்று மது மாங்கிஷம் அவல் கடலை முதலியதுகளை வைத்து லக்ஷத்தியெட்டுரு கொடுக்கும்பக்ஷத்தில் மலக்குட்டியானது பிரசன்னமாகும் அப்படிப் பிரசன்னமானதும் அதை உபசாரத்துடன்பணிந்து பலிகொடுத்து வசியஞ்செய்து வைத்துக்கொள்ளும்பக்ஷத்தில் அதனால் உனக்கு அனேகதந்திரமாகிய வேலைகளெல்லாம் நடக்கும்.

946. குட்டிச்சாத்தான் வசிய ஜாலம்

குட்டிச்சாத்தானை வசியஞ்செய்து வைத்துக் கொள்ளவேண்டுமெனில் அதை வெகு எளிதில் செய்யலாம் எப்படியெனில்:—ஓர் தேவாங்கைவாங்கி பழக்கிக்கொண்டே வந்தால் அது நம்மிடத்தில் சாதாரணமாக பழகிவிடும் அந்த சமயம் அதன் கண்ணில் பீளை திரளும் அப்பீளையை யெடுத்து தினந்தினம் நமது கண்களுக்கு மையைப்போல் தீட்டிப் பழக்கம் செய்துக்கொள்ளவேண்டும் அப்பழக்கஞ்செய்துக்கொண்ட பிறகு அதைக் கையில் எடுத்துக்கொண்டு மடியில் கொஞ்சம் அரிசி பொரியையேனும் நெல்லுப் பொரியையேனும் வைத்துக்கொண்டு ஊர்கோடியில் (அதாவது ஊருக்கு வெளியில்) குந்திக்கொண்டு மாடுகள் மேய்ந்துவிட்டு வரும்வழியில் காத்திருக்கவேண்டும் அப்போது மேய்ந்துவிட்டுவரும் அம்மாடுகளில் எந்தக் காளைமாடு முந்திவருகிறதோ அதனுடைய இரண்டு கொம்புகளுக்கும் நடுவில் குட்டிச்சாத்தானனது குந்திக்கொண்டுவரும் அதைப்பார்த்ததும் நம்முடைய கையிலிருக்கும் தேவாங்கானது கண்களில் நீர் விடும் அதைக்கண்டதும் நாம் அதன் கண்ணில் திரண்டிருக்கும் பீளையை யெடுத்து நம் கண்ணில் தீட்டிக்கொண்டு மாட்டைப்பார்க்கும் பக்ஷத்தில் குட்டிச்சாத்தான் குந்திக்கொண்டுவருகிறது நமது கண்களுக்கு நன்றாகத்தெரியும் அப்போது தாமதப்படாமல் நமது மடியிலிருக்கும் பொரியை யெடுத்து பூமியிலிறைத்துவிட்டால் அதைப்பொறுக்கித்தின்ன மேற்படி குட்டிச்சாத்தானனது கீழேயிறங்கிப் பொறுக்கும் அதைப்பார்த்ததும் நம்முடையமந்திரத்தை செபித்து அதை வசப்படுத்தி வைத்துக்கொண்டால் அது நம்முடைய மனதின்படி சொல்லுகின்ற வேலைகளையெல்லாம் தவறாது செய்யும் அதனால் ஆகாத காரியம் ஒன்றுமேயில்லை செய்யக்கூடாத அசங்கிதமான வேலைகளையெல்லாம் செய்து எதிரிகளை இம்சைசெய்யும்.

947. பயிர்கள பெருகும் ஜாலம்

நாயுருவிச் செடிக்கு காப்புகட்டி பொங்கல் தூபங்கொடுத்து ஸ்ரீம் என்றபிரணவத்தை லக்ஷத்தியெட்டுரு செபித்து வேரைக்குளிசமாடி நன்செய்

புஞ்செய் தோட்டக்கால் முதலிய விடங்களில் ஓர் குடுவையில் போட்டுப் புதைத்தாயானல் விசேஷமாகிய பலனைக் கொடுக்கும்.

948. எட்டிமுளை ஜாலம்

மாக்கொடி திட்டுச்சீலை சவத்தைலம் ஐங்கோலத்தைலம் இந்நான்கையும் ஒரு மண்பாண்டத்திலிட்டு கருக்கி கல்வத்தில்வைத்து அரைத்து மைபோலானபிறகு வழித்து செப்புச்சிமிளில் வைத்துக்கொண்டு யாமயங் கிங் சுவஹாவென்று லக்ஷமுரு செபித்து ஜாலக்காளை தியானம்செய்து எட்டி முளையைக் கூருகச்சீவி மையைத்தடவி பூசையில்வைத்து மறுபடியும் முன் செபித்த மந்திரத்தை ஆயிரத்தெட்டுருசெபித்து வைத்துக்கொண்டால் சகல வித்தைகளையும் விளையாடலாம்.

949. செக்கில் எண்ணெய் வராதஜாலம்

செவ்வாய்க்கிழமை கேட்டை நக்ஷத்திரத்தில் எட்டிமுளைக்கு மையை தடவி செக்காடுமிடத்தில் புதைத்துவிட்டால் செக்கில் எண்ணெய்வராது அதை எடுத்தப்புறம்போட்டுவிட்டு அவ்விடத்தைக் கோமயத்தால் சுத்தஞ் செய்தால் சாதாரணமாய் எண்ணெய் வரும்.

950. கரும்பாலையில் ரசமிறங்காத ஜாலம்

ஞாயிற்றுக்கிழமை அவிட்ட நக்ஷத்திரத்தில் திராவகமிரங்குமிடத்தில் எட்டிமுளைக்கு மையைத்தடவிப் புதைத்துவிட்டால் எள்ளளவேனும் திராவகமிரங்காது அதை யெடுத்தெறிந்துவிட்டு அவ்விடத்தைச் சுத்தஞ்செய்தால்தான் வரும்.

951. காளவா வேகாத ஜாலம்.

வியாழக்கிழமை பூராடநக்ஷத்திரத்தில் எட்டிமுளைக்கு மையைத்தடவி காளியைத்தியானித்து சுண்ணும்புக் காளவாயில் புதைத்துவிட்டால் சுண்ணும்புவேகாது அவ்விடத்தையும்முன்போல் சுத்திசெய்து வேகவைக்கவும்.

952. கொல்லனுலை வேகாத ஜாலம்

எட்டிமுளைக்கு மையைத்தடவி ஞாயிற்றுக்கிழமை பூராடநக்ஷத்திரமாகப்பார்த்து கொல்லனுலையில் புதைத்துவிட்டால் அவ்வுலையானது எவ்வளவு கரியைப்போட்டு ஊதினலும் வேகாது.

953. சூளைவேகாத ஜாலம்

மேற்படி எட்டிமுளையை செங்கல் சூளையில் புதைத்துவிட்டால் சூளையானது வேகாமலேயே இருக்கும் அதை எடுத்து ஜலத்தில்கழுவிவிட்டு அவ்விடத்தை கோமயத்தால் சுத்தஞ்செய்யும்பக்ஷத்தில் சூளை நன்ருகவேகும்.

954. வெள்ளாவி வேகாத ஜாலம்

வண்ணுன் வஸ்திரங்களை வெள்ளாவி வைக்கும் அடுப்பில் எட்டி முளைகுமையைத் தடவி புதைத்துவிட்டால் நாள் பத்தானபோதிலும் வெள்ளாவி வேகாது.

955. வியாபாரமாகாத ஜாலம்

துவாதசியும் கேட்டை நக்ஷத்திரமும் செவ்வாய்க்கிழமையும் வருகிற தினத்தில் எட்டிமுளைக்கு மையைத் தடவி வியாபாரமாகுங் கடையில் புதைத்துவிட்டால் அக்கடையில் ஒரு காலணுவேனும் வியாபாரமாகாது

அதை யெடுத்து ஜலத்தில் கழுவி அவ்விடத்தைச் சுத்தஞ்செய்யும்பக்ஷத்தில் வியாபாரமாகும்.

956 சாதம் வேகாத ஜாலம்

சாதம் சமைக்கும் அடுப்பில் மேற்படி முளேக்கு மையைத் தடவி புதைத்துவிட்டால் சாதமானது கொஞ்சமேனும் வேகாமல்படி அவஸ்தைப் படுவார்கள்.

957. வீடு பாழாகும் ஜாலம்.

செவ்வாய்க்கிழமை மூல நக்ஷத்திரத்தில் எட்டிமுளேக்கு மையைத் தடவி பூசையில் வைத்து மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி வாழும்படியான வீட்டில் புதைத்துவிட்டால் அவ்வீடானது கூடியசீக்கிரத்தில் பாழாய்விடும். மறுபடியும் முளேயை எடுத்து ஜலத்தில் கழுவிவிட்டு அவ்வீட்டைச் சுத்தி செய்து ஓமம் வளர்க்கும்பக்ஷத்தில் எப்போதும் விர்த்தியாகும்.

958. கூழாங்கல்லு மாயமாகும் ஜாலம்.

ஜாலமாகுஞ் சபையில் கொஞ்சம் கூழாங் கல்லுகளேக் கொண்டுவந்து எல்லோருக்குங்காண்பித்து இந்தக் கூழாங்கல்லு மாயமாகப்போகும்வேடிக்கையைப் பாருங்களென்றுசொல்லிக் கண்கட்டு மையைத்தடவிக் கூடையைப்போட்டு மூடி திறந்துகாண்பிக்க கூழாங்கல்லு மாயமாயிருக்கும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

959. மணிபர்ஸ் மாயமாகும் ஜாலம்.

சபையிலிருக்கும் சனங்களில் யாரிடத்திலேனும் ஓர்மணிபர்ஸ் வாங்கி இதுமாயமாகப்போகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கொஞ்சம் கண்கட்டு மையைத்தடவி கூடையைப்போட்டு மூடி திறந்து காண்பிக்க மாயமாயிருக்கும்.

960. ரூபா மாயமாகும் ஜாலம்

ரூபாயையெடுத்து அனேவருக்குங்காண்பித்து இந்த ரூபாமாயமாகப் போகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத் தடவி கூடையைப்போட்டு மூடிதிறந்து காண்பிக்க பார்க்கின்றவர்களுக்கு ரூபாய் மாயமாயிருக்கும்.

961. பலவித காசுகள் உண்டாகும் ஜாலம்

பானே ஓட்டைவளேயம் வளேயமாக நறுக்கி வைத்துக் கொண்டிருந்து ஜாலமாகுஞ் சபையில் சனங்களேப்பார்த்து இந்தப்பானே ஓடுகளெல்லாம் நாணயங்களாகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத்தடவி கூடையைப்போட்டுமூடி குட்டிச்சாத்தானே தியானித்து திறந்துக் காண்பிக்க பார்க்கின்றவர்களுக்கு ரூபாயும் பைசாவுமாகத் தெரியும் எல்லோரும் மகா ஆச்சரியப்படுவார்கள்.

962 சவரன்களுண்டாகும் ஜாலம்

கொஞ்சம்சல்லிகளே எடுத்துஜாலமாகுஞ் சபையிலிருக்கும் சனங்களுக்குக் காண்பித்து இந்த சல்லிகளெல்லாம் சவரன்களாகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டுமையைத்தடவிக் கூடையைப்போட்டு மூடிமாய மோகினியைத் தியானித்துத் திறந்துகாண்பிக்கப் பார்க்கின்றவர்களின் கண்களுக்கு சவரன்களாகத்தோன்றும்.

963. கெச்சக்காய் மாயமாகும் ஜாலம்.

கொஞ்சம்கெச்சக்காய்களையெடுத்துச் சபையிலுள்ளவர்களுக்குக்காண்பித்து இந்தக்கெச்சக்காய்கள் மாயமாகும் வேடிக்கையைப்பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத்தடவிக் கூடையைப்போட்டு மூடித்திறந்து காண்பிக்க பார்க்கின்றவர்களின் கண்களுக்கு கெச்சக்காய்கள்மாயமாயிருக்கும் எல்லோரும் இது குட்டிச்சாத்தான் வேலையென்று சொல்லுவார்கள்.

964. பலகரை மாயமாகும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையில் கொஞ்சம் பலகரையையெடுத்து அனைவருக்குங் காட்டி இந்த பலகரை மாயமாகப்போகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத்தடவி காளியைத்தியானித்து கூடையைப் போட்டு மூடித்திறந்து காண்பிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு பலகரை மாயமா யிருக்கும்.

965. புறாமாயமாகும் ஜாலம்.

சபையில் ஓர் புறாவைக்கொண்டுவந்து அனைவருக்குங்காண்பித்து இந்தப் புறாவைக்கூடையில்போட்டு மூடுகிறேன் இதுமாயமாகப்போகும்வேடிக்கையைப் பாருங்களென்றுசொல்லி கொஞ்சம் கண்கட்டு மையை அந்தப் புறாவின் தலையில் தடவிக்கூடையைப்போட்டு மூடித்திறந்துக் காண்பிக்கப் பார்ப்பவர்களின் கண்களுக்கு புறு மாயமாயிருக்கும் எல்லோரும்ரொம்பவும் ஆச்சரியப் படுவார்கள்.

966. கெடியாரம் மாயமாகும் ஜாலம்

ஜாலமாடுஞ்சபையில் ஓர் கெடியாரத்தைவாங்கி அனைவர்களுக்குக் காண்பித்து இந்தகெடியாரம் மாயமாகப்போகும் வேடிக்கையைப் பாருங்களென்றுசொல்லி கண்கட்டு மையைத்தடவி கூடையில் போட்டுமூடி ஜாலக்காளைத் துதித்துத் திறந்துகாண்பிக்க மாயமாயிருக்கும் அனைவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

967. கைகுட்டை மாயமாகும் ஜாலம்.

ஜாலமாடுஞ் சபையில் ஓர் கைக்குட்டையைவாங்கி அனைவர்களுக்குங் காண்பித்து இக்குட்டை மாயமாய்ப்போகும் வேடிக்கையைப் பாருங்களென்றுசொல்லி கண்கட்டுமையைத்தடவி காளியைத்தியானித்து கூடையைப் போட்டு மூடித்திறந்து காண்பிக்கமாயமாயிருக்கும் எல்லோரும் ஆச்சரியப் படுவார்கள்.

968. மீன்படாமல் தடுக்கும் ஜாலம்.

ஒருவன் கொடுத்தமீனை சிறகச் சிறக வெட்டி வேப்பம்பட்டையில் வைத்து மேற்பட்டைமூடி சாதம் சமைக்கும் அடுப்பின்கீழே புதைக்க மீன் படாது.

969. மீன்படும் ஜாலம்

விஷ்ணுகரந்தை குங்கிலியம் சாம்பிராணி இம்மூன்றையும் ஒன்றாகக் கூட்டி இடித்து பசும்பாலில்போட்டு வலையில்தெளித்து வலைவீச மீன்படும்.

970. வேறு.

சுடுகாட்டிலிருக்கும் சங்கிலையை வேருடன்பிடுங்கிவந்து பாலில் அரைத்து வலையில் தெளிக்க மீன்படும்.

971. வேறு

முடக்கொத்தான் சமூலம் அரசன்பட்டைசாம்பிராணி இதுகளைவெள்ளாட்டுப்பாலில் அரைத்து தோணியிலும் வலையிலும் தெளிக்க மீன்படும்.

972. வேறு.

நத்தையோடு குப்பைமேனியிலையும் அரைத்துப்பாலில் கலக்கி தோணியிலும் வலையிலும் தெளிக்க மீன்படும்.

973. வேறு.

நரிப்பீ முயல்புழுக்கை சிறுசெறுப்படி சுடுகோட்டுக்கரி வட்டக் கிலுகிலுப்பை இவைகளைத் தேன் விட்டரைத்து மைபோலாக்கி ஒரு ஏனத்தில் வைத்துக்கொண்டு தேவையானபோது நெற்றியிலிட்டுக் கொண்டுபோக மீன்படும்.

974. ஒடுக்கட்டித்தீரும் ஜாலம்

ஆதிவாரங்காலையில் கோவைச்செடியருகில்போய் ஒடுக்கட்டி வந்திருப்பவன் பெயரைச் சொல்லி சுவாமி உன்னுடைய அருளால் அவ்வொடுக்கட்டியானது மாயமாய் போய்விட வேண்டுமென்று மூன்றிலையைக்கையிலுள்ள நகங்கள்படாமல் கிள்ளி சலவைத்துணியில் வைத்து முடிந்து வலதுக்குயிடதும் இடதுக்கு வலதுமாகக் கட்ட அக்கட்டியானது தீரும்.

975. குன்மநோய்போகும் ஜாலம்

ஆதிவாரங்காலையில் தும்பைச்செடியருகிற் போய் சூரியனைப் பிரதக்ஷணஞ்செய்து அச்செடியின் இலையை இரண்டு கைகளிலும் பரித்து ஓர் பிடியை சூரியனைப்பார்த்துக் கீழேபோட்டுவிட்டு மற்றொரு பிடியைக்கொண்டுவந்து வெள்ளை வெங்காயஞ் சேர்த்தரைத்து கெச்சக்காய் பிரவாணம் உருண்டைகளுருட்டிக் காலைமாலை இருவேளையும் ஒவ்வொரு உருண்டை வீதங் கொள்ள குன்மநோயகலும்.

976. சுரந்தீரும் ஜாலம்

ஒருபிடி உத்தாமணி யிலையைக்கொண்டு வந்து மிளகுவைத்தரைத்து காலை மாலைமத்தியானம் மூன்றுவேளைகளும் கெச்சக்காய் பிரமாணம் உட்கொண்டுவர சுரமானது தீரும்.

977. துணியைக்கொளுத்திக் காட்டும் ஜாலம்

சாராயத்தை துணியில் நனைத்துச் சபையில்கொண்டுவந்து அனைவருக்குங் காண்பித்து இந்த துணியைக்கொளுத்தி பின்ன மில்லாமல் காட்டுகிறேன் பாருங்களென்று சொல்லிக் கீழேவைத்துக்கொளுத்த அது நன்றாகவெரியும் பிறகு துணியையெடுத்துக் காண்பிக்கப்பழுதில்லாமலிருக்கும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

978. பாம்பு சாகும் ஜாலம்

ஓர்பாம்பைப் பிடித்து அதன் இரண்டு கண்களிலும் ஓர்சிட்டிக்லகமூக்குத்தூளைப்போட்டுக் கீழேவிட்டுவிட அது உடனே உயிரை விடும் மறுபடியும்பிழைக்காது.

979. குடத்தில் தண்ணீரை ரொப்பி பட்டாவால்குத்தி தூக்கிக்காட்டும் ஜாலம்

ஒருகுடத்தின் நிறைய ஜலத்தைநிறப்பி மேல் மூடும் சானகியில் கத்தி பூர துவாரஞ்செய்து மேலேமூடி பட்டாக்கத்தியின் முனையில் சிறிய துவா

ரஞ்செய்து சானகியின் துவாரத்திற்குச் சரியாய் எலுமிச்சம் பழம்வைத்து கத்தியை அதில் நுழைத்து கத்தியில் கம்பிகோர்த்து குடத்தின் உள் உதட்டில் தாங்கும்படியாய் ஒருகொம்பைக்கட்டிவிட்டு மேலே தூக்கிகட்டி விடவும் இதற்கு கத்தியடியில் துவாரமாவதுவளையமாவது முன்னுடியேவைக்க வேண்டும்.

980. விலங்கு உடையும் ஜாலம்

கருடன் முட்டையிட்டுக் குஞ்சுபொரித்திருக்கும் விடத்தைப்பார்த்துக் கொண்டிருந்து தாய்ப்பறவையில்லாத சமயம் அம்மரத்திலேறி அக்குஞ்சுகளுக்குக்காலில் இரும்புவளையங்களைப் போட்டுவிட்டு வந்துவிடும் பக்ஷத்தில் அதைபபார்த்ததும் தாய்ப்பறவையானது அந்த இரும்புவளையங்கள் உடையும்படியாய் சஞ்சீவியை எங்கிருந்தாலும் கொண்டுவந்து வைக்கும் அதைநாம் கண் கூடாகப்பார்த்துக்கொண்டிருந்து மறுபடியும் அப்பறவையில்லாதபோது அக்கூண்டையெடுத்துக்கொண்டு வந்து ஓடுகின்ற நீரில்விட்டால் அதிலிருக்கும் சஞ்சீவிப்புல் ஜலத்தினுடன் ஓடாமல் அதையெதிர்த்து ஓடும் அதைக்கண்டுபிடித்து எடுத்துவந்து தீட்டுப்படாமல் வைத்துக்கொண்டிருந்து தேவையானபோது விலங்கின்பேரில் வைத்தால்விலங்கு முறிந்துவிடும் பூட்டியிருக்கும் பூட்டின்பேரில்வைக்க பூட்டு உடைந்துவிடும் இன்னும் எவ்வளவோ வேலைகளையெல்லாம் இச்சஞ்சீவியினால்செய்துக்கொள்ளலாம் அதையெல்லாம் தகுந்த ஆசானின்மூலமாய் தெரிந்துக்கொள்ளவும்.

981. வியாதியுண்டாகும் ஜாலம்

இந்திரகோபப்பூச்சி புறாமுட்டை வல்லூரின்பிச்சு இவைகளில்சுடலைக் கருசேர்த்து அரைத்து காளியின் முன்வைத்து பூசித்துப் பகையாளியின் வீட்டு வாயற்படியில புதைத்துவைக்க அவனுக்கு பலவிதமாகிய வியாதிகளுண்டாகி நாசமடைவான்.

982. சத்துருவணங்கும் ஜாலம்

சுடலைக் கருவைக்கொண்டு கோழி முட்டையின்பேரில் எதிரியைப் போல் உருவமெழுதி காளியைத் தியானித்துப் பூசித்துக் காளிகோயில் மத்தியில் நேரத்தில் புதைத்துவைக்க எதிரியானவன் வணங்கிவருவான்.

983. மீன்படாமை செய்யும் ஜாலம்

கோரோசனை பூலாக்கிழங்கு சவ்வாது கொட்டிக்கிழங்கு வெண்தாழம் பூ வெள்ளைக்குண்டுமணிவேர் கொழுஞ்சிவேர் வெள்ளைக் காக்கணம்வேர் மீனம்பர் வெட்டிவேர் வங்காளப்பச்சை கஸ்தூரி ஒருதுறையில்பிடித்தமீன் இவைகளையெல்லாம் செமபருத்திப்பஞ்சில் சுருட்டி சட்டியில்கருக்கி வெள்ளைத்துணியில் சுருட்டிதிரியாக்கி அகலில்போட்டு தேங்காயெண்ணெய்விட்டுக்கொளுத்தி மைவாங்கிச் சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது கொஞ்சமெடுத்து பசும்பாலில் கரைத்து வலைமேல்தெளித்து வீச தேவையான மீன்கள்படும்.

984. மீன்படவாடை.

கோரோசனை சவ்வாது கொட்டிக்கிழங்குயிலை பூலாக்கிழங்கு இவைகளைப் பசும்பாலிலரைத்து தோணியிலும் வலையிலும் தெளிக்க மீன்படும் கைகண்டது.

985. ஊழிமந்திரம்.

நசி நசி மடி மடி அரங்கு உரங்கு ஓம் பட்மெடி இந்தமந்திரத்தை புதுப் பானை ஓட்டிலெழுதி ஆயிரத்தெட்டு உருகொடுத்துக் கையில்வைத்துக்கொ

ண்டு வலையை இழுத்துக்கொண்டு வருகிறபோது அவர்கள் முன்னால் எரிய மீன்படாது.

986. இரும்பை ஒடித்துக்காட்டும் ஜாலம்

ஓர் இரும்புக்கம்பியை யெடுத்து வாழைமரத்திற்குள் மூன்று நாள் சொருகி நாலாவது நாள் எடுத்துவைத்துக்கொண்டு அனேக ஜாலமாடுஞ் சபையில் கொண்டுவந்து அனேவருக்குங்காட்டி இந்த இரும்புக் கம்பியை தூளாக ஒடித்துக்காட்டுகிறேன் பாருங்களென்று சொல்லி அவர்கள் எதிரில் உடைக்க அது தூளாகப்போய்விடும் எல்லோரும் உன்னுடைய பலத்திற்கு மெச்சிப்புகழ்வார்கள்.

987. மரக்கிளி பரக்கும் ஜாலம்.

லேசாகவுள்ள மரத்தைக் கொண்டுவந்து கிளியைப்போல் உருவஞ் செய்து அதற்கு ரக்கைகள் ஆடும்படியாக இரும்பினால் கீல் முதலானதும் பந்தோபஸ்தாய் செய்து பலவில வர்ணங்களில் அலங்கரித்துத் தயாராக வைத்துக்கொண்டு மேல் தூலத்தில் காந்தம்பதியவைத்த வீட்டிற்குள் இக்கிளியை எடுத்துக்கொண்டுபோய் சனங்களைப் பார்த்து மரத்தினால் செய்த இந்தக்கிளியை என்னுடைய மந்திரசக்தியினால் பரக்கச்செயகிறேன் பாருங்களென்றுசொல்லி மந்திரஞ்செபிக்கிற பாவனையாக வாயை மொணமொண வென்றுஅசைத்துச் சற்றுநேரம் இரண்டுகண்களையும் மூடிக்கொண்டிருந்து பிறகுவிபூதியை யெடுத்து ஓம் வல்லபம் ஔவும் சவ்வும் ஓடிவா குட்டிச்சாத்தான்வந்து இந்தக்கிளியை ஆகாயம்கொண்டுபோவென்று சொல்லிக்கொண்டேகிளியைக் கையிலேந்தி காந்தத்திற்கு நேராகப்பிடிக்கக் கிளியானது அந்தரமாகக் கிளம்பும். அதைப் பார்த்தவர்களெல்லாம் அதிசயப்பட்டு நீ என்ன மோமந்திரஞ்செய்தாய் அதினால குட்டிச்சாத்தான்வந்து கிளியைக்கொண்டு போகிறானென்று சொல்லிக்கொள்வார்கள். ஆனால் இவ்வித கண்கட்டு வேலைகளை யெல்லாம் வெகு சாமர்த்தியமாகச் செய்து காட்டவேண்டும்.

988. குடத்தின்மேல் தேங்காயுடைக்கும் ஜாலம்

குப்பைமேனிசெடிக்கு ஆதிவாரமுங் கும்பலக்கினமுங்கூடிய தினத்தில் காப்புகட்டி சாபநிவர்த்திசெய்து பொங்கல் பலி தூபதீப முதலியவைகளைப் பலமாகச்செய்து மறுவாரஞ்சென்று அதன்வடக்கேபோகிற வேரை இரும்பாலாகிய ஆயுதங்கள் படாமலும் வேரறுமலுங் கொண்டுவந்து குளிசமாடி பானைக்குள்போட்டு அப்பானையைக் கவிழ்த்து வைத்துவிட்டு அதன்மேல் அக்குப்பைமேனிவேரினால் சுற்றிய பிரமணையைவைத்து அதன்மேல் தேங்காயைவைத்து உடைக்க தேங்காயானது சூவா விட்டதைப்போல் தூள்தூளாகப்போய்விடும். பானை உடையாது. ஆனால் இவ்வேலையைச்செய்யும்போது கும்பலக்கினமும் தன்பக்ஷி அரசாயுமிருக்கவேண்டும்.

989. காகிதத்தில் சித்திரங்காட்டும் ஜாலம்.

நீமுறுகல் பாஷாணத்தை எழுதுகின்ற ஸ்டீல் முனையில் குத்திக்கொண்டு வெள்ளைகடிதத்தின்பேரில் நமக்கிஷ்டமான சித்திரத்தைவரைந்து தயார்செய்து வைத்துக்கொண்டு அதை இருட்டறையில் கொண்டுபோய் அங்கு நமக்கிஷ்டமானவர்களை அழைத்துக்காட்ட சித்திரமானது வெகு அழகாய்த்தோன்றும். அதை வெளியில்கொண்டுவந்து வெளிச்சத்தில்பார்த்தால் வெறுங்கடிதமாய் இருக்கும் அதைப்பார்த்தவர்களெல்லாம் வெகு ஆச்சரியப்படுவார்கள்.

990. புட்டியில் தீபங்காட்டும் ஜாலம்

ஓர்வெண்மையாகிய புட்டியில் பயிரளவு நீமுறுகல் பாஷாணத்தைப் போட்டு அதில் ஆளிவிரை எண்ணெய்யைக்காய்ச்சிவிட்டு கார்க்குப்போட்டு மூடினால் தீபம்போல் வெளிச்சமாயிருக்கும் கார்க்கைத்திரந்தால் ஒன்று மிருக்காது.

991. ஜலத்தில் முழுகி கடிதமெழுதும் ஜாலம்

ஒருகிண்ணத்தில் எலுமிச்சம்பழ ரசத்தைப்பிழிந்து அதில்படிகாரத் தைப்போட்டுக்குழைத்து வைத்துக்கொண்டபிறகு வெள்ளைக்காகிதத்தில் மேற்படிரசத்தைப் பேனாவினால் தொட்டு மனம்போனபடி என்னென்ன எழுதவேண்டுமோ அதுகளையெல்லாம் எழுதி அக்காகிதத்தை அனைவர் களுக்குங்காட்டி இக்காகிதத்தை நான் எடுத்துக்கொண்டு நீரில் முழுகி எழு திக்கொண்டு வருகிறேன் பாருங்களென்றுசொல்லி அதையெடுத்துக்கொ ண்டு நீரில் முழுகி சற்றுநேரம் மூச்சைப்பிடித்துக்கொண்டு உள்ளேயே இரு ந்து பிறகுவெளியேவந்துக் காண்பிக்கப் பார்த்தவர்களெல்லாம் ஆச்சரியப் பட்டு இதுகுட்டிச்சாத்தான் வேலையென்று சொல்லி உன்னைக்கொண்டாடு வார்கள்.

992 சாதம்வேகாத ஜாலம்

சிலவேம்புவேரை சிறியதுண்டுகளாகநறுக்கி அரிசி உலையில்போட்டு விட்டால் சாதம்வேகாது. அதையெடுத்துவிட்டு வேறு உலைவார்த்துவைத் தால்தான் வேகும்.

993. வசிய ஜாலம்

சீதாதேவி செங்கழுநீர் அழுகண்ணி மயில்பிச்சு அண்டங்காக்கைத்தலை காதுகுரும்பி கண்பீளை மூக்கழுக்கு இந்திரியம் இவைகளையெல்லாம் சம யெடையாகச் சேகரஞ்செய்து பேய்க்கருப்பன் சாற்றிலரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது பெண்களின் முகத்திற்கு பூச வசிய மாவார்கள்.

994. இதுவுமது.

சத்திச்சாட்டரணை சீதாதேவி செங்கழுநீர் காட்டட்டை கோரோசனை இவைகள் வகை ஒன்றுக்குபலம் ஒன்றாகயெடுத்து அதற்குச்சமன் பொன் னூமத்தன் வேரையிமத்து வஸ்திரகாயஞ்செய்து குங்குமம் சாந்து இவை கள் வகைக்கும் பலம் இரண்டாகச் சேர்த்து பன்னீர் விட்டரைத்து செம் புச் சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது காராவின்வெண்ணெ யிற்குழைத்து நிரேகத்திற் பூசிச்செல்லக் கண்டவர்க ளெல்லாம் வசிய மாவார்கள்.

995. இதுவுமது

வாழை அழுகண்ணி வெள்ளாட்டு நாக்கு அண்டங்காக்கைத்தலை கப்ப மஞ்சள் இதுகளையெல்லாம் சமன்சேர்த்து தூளாக்கி வைத்துக்கொண்டு தேவையானபோது மஞ்சளிற்கலந்து பூசிக்கொண்டுவர எவ்விதமான ஆட வர்களாயிருந்தாலும் வணங்கி வசியமாவார்கள்.

996. இதுவுமது

வெண்கொழுஞ்சி ஆனைவணங்கி மாடப்புராயெச்சம் ஆதிக்கொடி இவைகளைச் சமயெடையாக யெடுத்துஉமிழ்நீர் விட்டரைத்துப்பெண்களின் முகத்திற்பூச அவர்கள் வசியமாகி எந்நாளும் பிரியமாட்டார்கள்.

997. இதுவுமது

ஆனைவணங்கி பேய்த்தும்மட்டி ஆறுபுள்ளிவண்டு அண்டங்காக்கைத் தலை இவைகளைச் சமயெடையாக நிறுத்து நீர்விட்டரைத்து துவரைப்பிரமாணங் குளிகைத்திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது ஒருகுளிகையை யெடுத்து வாயிலடக்கிச்செல்ல வழக்குகள் வெல்வதுடன் சகலமானபேர்களும் வசியமாவார்கள்.

998. இதுவுமது

மயிர்ச்சிகைப்பூண்டு சிறியாநங்கை பச்சைத்தவளைப்பிச்சு சுழல்வண்டு இவைகளையெல்லாம் சமயெடையாக நிழலிலுலர்த்தி தூளாக்கி வைத்துக்கொண்டு தேவையானபோது பிரயோகிக்க வசியமாகும்.

999. இதுவுமது

ஆனைவணங்கி பேய்த்தும்மட்டி அண்டங் காக்கைத்தலை ஆறுபுள்ளி வண்டு காதுகுரும்பி கண்பீளை மூக்கழுக்கு நாக்கழுக்கு இந்திரியம் இவைகளையெல்லாம் ஓர் நிறையாயெடுத்துக்கொண்டு பேய்க் கருப்பஞ் சாற்றாலாட்டி குளிகைதிரட்டி நிழலிலுலர்த்தி ஆணுக்குப்பெண்ணும் பெண்ணுக்கு ஆணுமாக பலவித பலகாரத்திலிட வசியமாம்.

1000. காட்டாமணக்குமரத்தில் உதிரங்காட்டும் ஜாலம்

எழுத்தாணி முனையில் செம்பருத்தியின் பூச்சாற்றைப்பூசி உலரவைத்துக்கொண்டு சபையிலிருப்பவர்களைப்பார்த்து இந்தகாட்டாமணக்கு மரத்தில் உதிரங்காட்டுகின்றேன் பாருங்களென்றுசொல்லி அவ்வெழுத்தாணியைக்கொண்டு மரத்தைக்குத்த அந்தப்பாலானது உதிரத்தைப் போன்று வரும் பார்ப்பவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

தேவேந்திரநாத் மாயாஜாலவிநோதம்

முதற்பாகம் முற்றிற்று.

உ

கணபதிதுணை.

தேவேந்திரநாத்

மாயாஜால விநோதம்.

இரண்டாம் பாகம்.

1. மோட்டுப்பூச்சி நாசமாகும் ஜாலம்

சிறிய சந்துகளிலும் இடுக்கான இடங்களிலும் இருந்துகொண்டு தொந்தரைசெய்யும் மோட்டுப்பூச்சிகள் சாகவேண்டியதற்கு செய்யுந் தந்திரமாவது என்னவென்றால் கொஞ்சம் வெல்லத்தைக்கரைத்து அவ்விடத்தில் தெளித்துவைக்க சிறிய எரும்புகள் சேர்ந்துக்கொண்டு அப்பூச்சிகளையெல்லாம் நாசஞ்செய்யும் அதிலிருந்து மோட்டுப்பூச்சியின் தொந்தரையே நமக்கிருக்காது.

2. உயிரிழந்த ஈ உயிராகும் ஜாலம்.

ஒரு ஈயைப்பிடித்து தண்ணீரிற் போட்டுவைக்க சிறிது நேரத்திற்கெல்லாம் அது உயிரை விட்டுவிடும் மறுபடியும் அதை எடுத்து முட்டைச்சாம்பலில் போட்டு பிரட்டிவைக்க உயிர்பெற்று எழுந்து ஓடிப்போகும்.

3. வாயுஸ்தம்பன ஜாலம்.

வீட்டின் நடு மையத்திலிருக்குந் தூலத்தில் எழுசி பிடிக்கும்படியான காந்தத்தை வைத்து கீழே இரும்புத் தகட்டிற்கு வர்ணம்பூசி அதின்பேரில் குந்திக்கொண்டு ருத்திராக்கமாலைகளையணிந்து சாக்ஷாத் சிவபெருமானே இக்கோலத்துடன் கலியுகத்தில் வந்திருக்கின்றாரென்று சொல்லும்படியாக இரும்புப்பலகையின்பேரில் குந்திக்கொண்டு பூமியில் காலின்பெருவிரலை ஆதாரமாக ஊன்றி யோகத்திலிருப்பவனைப்போல கண்களைமூடிக்கொண்டு உருத்திராக்கமணியை ஒவ்வொன்றாக தள்ளிக்கொண்டேயிருந்து தந்திரமாக கீழேயூன்றி யிருக்கும் பெருவிரலை யெடுக்கப் பலகையானது அந்தரமாகக்கிளம்பும் அங்கிருக்கும் சனங்களெல்லாம் நீ வாயுஸ்தம்பனஞ்செய்துக் கொண்டு ஆகாயத்தில் போகிறாயென்று சொல்லிக்கொள்வார்கள் காந்தம் வைத்திருப்பது தெரியாமலும் இரும்புப்பலகை தெரியாமலும் இருக்கும்படி என்னென்ன வேலைகள் செய்துக்கொள்ள வேண்டுமோ அதுகளையெல்லாம் முன்சாக்கிரதையாகவே செய்துக்கொண்டு நடிக்கவும். இல்லாவிட்டால் யாரும் நம்பமாட்டார்கள்.

4. நெருப்பைக் கையிலள்ளும் ஜாலம்.

கரும்பசலைச்செடிக்குச் சாபநிவர்த்தி செய்து காப்புகட்டி பிடிங்கி வந்து அரைத்துக் கையில் பூசிக்கொண்டு நெருப்பை வார கைசுடாது.

5. எலியும் பூனையும் விளையாடும் ஜாலம்.

குப்பைமேனியிலையையும் வெள்ளைப்பூண்டையும் ஒன்றாக அரைத்து எலியின்திரேகத்திற் பூசி பூனைமுன்போட பூனையானது அதை முகர்ந்த வுடன் அதைச் சுற்றிக்கொண்டிருக்குமே யொழிய அதை ஒன்றுஞ்செய் யாது பார்ப்பவர்களும் அதிசயிப்பார்கள்.

6. பேன் மாரண ஜாலம்.

நெல்லிக்காய் கெந்தகமும் இரசமும் சமயெடையாக எடுத்துக் கல்வத் திலிட்டு அரைத்து கட்டுக்கயற்றிற்றடவி தலையில் முடிந்துவைக்க அவ்வாச னைக்குப் பேன்களெல்லாம் மாரணமாகும்.

7. வீரிய விர்த்தி ஜாலம்.

தினமொன்றுக்கு ஆழாக்கு பசும்பாலைக்கொண்டுவந்து ஜாதிக்காய் தூளைப்போட்டுக் காய்ச்சிக்குடித்துக்கொண்டுவர திரேகம் வலுத்து யானை பலமுண்டாகும்.

8. காதுநோய் தீரும் ஜாலம்.

காதுநோயினால் அவஸ்தைப்படுகிறவர்களுக்கு திருநீற்றுப்பத்திரி என் னும்மூலிகையின்சாற்றை இரண்டு துளி விட்டுக்கொண்டுவர குணமாகும்.

9. சர்ப்பவசிய ஜாலம்.

பொற்றலைக்கையான் தும்பை நிலம்புரண்டி சிறுகீரைகரிசலாங்கண்ணி நாயுருவி தொட்டாற்சுருங்கி பொற்சீந்தல் ஆடையொட்டி இவைகளின் சமூ லத்தை நிழலிலுலர்த்திப் புத்துத்தேனாலாட்டிச் சிமிளில் வைத்துக்கொண்டு வராகியைப்பூசித்துத் திலர்தமிட்டுக்கொண்டுவர சர்ப்பங்களெல்லாம்வசியம்.

10. சத்துருவசிய ஜாலம்.

பொற்றலைக்கையான் வெள்ளெருக்கு விஷ்ணுகிரந்தி இம்மூன்றின் வேர்களையும் சமயெடையாக யெடுத்து நிழலிலுலர்த்திப் பொடிசெய்து திரி திரித்து அகலில்போட்டு காராவின் நெய்யூற்றிக்கொளுத்தி மைவாங்கித் திலர்தமிட பகையாளியாயிருந்தாலும் வணங்கிவருவார்கள்.

11. சர்வவசிய ஜாலம்.

நிண்ணுசிணுங்கி செவ்வகத்தி சுழலாவாரை முல்லை கொழுந்தெட்டு கூத்தன் குதம்பை இதுகளையெல்லாம் சமயெடையாக எடுத்துக் கொன் றைப்பன்னீர் விட்டரைத்து மைசெய்து வைத்துக்கொண்டு திலர்தமிட சக லமானபேர்களும் வசியமாவார்கள்.

12. புட்டியில் புஷ்பங்காட்டும் ஜாலம்.

ஒருவெண்மையாகிய புட்டியில் ஜலத்தையூற்றி கொஞ்சம் சுகர்லட் என்னும் பவுடரைப்போட்டுக் கலக்கி துத்திநாகக்கம்பியை நிகளமாகத் தொங்கவிட்டு கார்க்குமூடி நாலைந்துநாள் வைத்திருந்து பிறகு எடுத்துப் பார்த்தால் புஷ்பங்களைபபோலவே வெகு விநோதமாகயிருக்கும்.

13. தண்ணீரில் பாணவேடிக்கைகாட்டும் ஜாலம்.

ஒருகோப்பையில் ஜலம்வார்த்து மிபாஸ்ரைட் ஆப் லைன் என்னும் மரு ந்தைக் கொஞ்சம்போட்டால் புதைபாணம்போல் கிளம்பும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

14. தீயில் குதிக்கும் ஜாலம்.

சங்கன்செடியின்கீழ் முளைத்திருக்கும் காளானைக்கொண்டுவந்து ஓர் பழையபாண்டத்திலிட்டு வெய்யலில் வைத்தால் உருகி எண்ணெய் வடியும் அந்த எண்ணெய்யை எடுத்து திரேகமாதியந்தமும் பூசிக்கொண்டு தீயில் குதிக்கலாம் தீ சுடாது.

15. ஒருவர்முகம் ஒருவருக்கு விகாரமாகத் தோன்றும் ஜாலம்.

ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் ஒயின் சாராயத்தைக் காய்ச்சிவிட்டு அது சூடாயிருக்கும்போதே சிறிது சோத்துப்பைத் தூள்செய்து அதில் போட்டால் புகையெழும்பும் அப்போது ஒருவர்முகத்தை ஒருவர் பார்க்க விகாரமாய்த்தோன்றும்.

16. நெருப்பைக் கையிலள்ளும் ஜாலம்

தன்னுடைய பக்ஷி அரசாயிருக்கும்போது உத்தாமணி செடிக்குக் காப்புகட்டி பொங்கல்பலி முதலியதுகொடுத்து சமூலமும் பிடுங்கிவந்து வேரையும் கொழுந்தையும் எடுத்து அரைத்துக் கையில் பூசிக்கொண்டு நெருப்பை வார கைசுடாது.

17. விஷமேற்றும் ஜாலம்

முருங்கைமரத்திலிருக்கும் கம்பளிப்பூச்சியின் மயிரும் கொத்தமல்லி விரையும்சாதம்சமைக்கு பாத்திரத்தினடியிலிருக்கும் கரியும் ஒன்றாகச்சேர்த்துமைபோலரைத்து நல்லெண்ணெவிட்டுக் குழைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு ஜாலமாடுஞ்சபையில் ஓர் கல்லையெடுத்து இன்னொருவர் கையில் கொடுக்கிறமாதிரி அதில் கொஞ்சம் மையைத் தடவிக் கொடுத்துவிட்டால் அதை யார் வாங்குகிறார்களோ அவர்களுக்கு தேள்கொட்டினமாதிரி விஷம் ஏறி துடிப்பார்கள் அதைப்பார்த்த சபையார்கள் கல்லிலிருந்து விஷமேறியதென்று சொல்லுவார்கள்.

18. நெருப்புமிதிக்கும் ஜாலம்.

தாளிச்சமூலம் கொத்தான்சமூலம் மருக்காரைப்பூ உப்பு இவைகளைச் சமயெடையாகயெடுத்து பசும்பாலிலரைத்து உள்ளங்காலில் பூசிக்கொண்டு தீ அடங்கியபின் நெருப்பைச் சமமாகப்பரப்பி அதின்மீது சாதாரணமாய் நடக்கலாம் அனல்சுடாது பார்ப்பவர்கள் உனக்கு அக்கினிதேவன் வசியமென்று சொல்லுவார்கள்.

19. உள்ளங்கையில் விளக்கேற்றும் ஜாலம்

ஓர் வெள்ளை சல்லாத்துணியில் அத்திப்பாலை நனைத்துக் காயவைத்து திரியாகத்திரித்து வைத்துக்கொண்டு ஜாலமாடுஞ்சபையில் சனங்களைப் பார்த்து எண்ணெயில்லாமல் உள்ளங்கையில் விளக்கேற்றிக் காண்பிக்கிறேன் பாருங்களென்றுசொல்லி கொஞ்சம் ஜலத்தை உள்ளங்கையிலூற்றி முன்வத்தியைப்போட்டுக் கொளுத்த விளக்கைப்போல் நன்றாகயெறியும் பார்த்தவர்களெல்லாம் உனக்கு காளிவசியமென்று சொல்லுவார்கள்.

20. சுதிகூட்டும் ஜாலம்.

ஒரு தவலையில் கால்பலம் ஜலத்தைவிட்டு அதில் ஒரு முழ நீளமுள்ள பிரம்பைத்தோய்த்து எடுத்து தவலையின்மீது வைத்துக்கொண்டு இருகரங்களாலும் மேலிருந்து கீழ்நோக்கி விழாது உருவிக்கொண்டுவர நாதமுண்டா

கும் முன்காலத்திய சங்கீதஉபாத்தியார்களெல்லாம் இம்மாதிரிதான் செய்துகொண்டு சுதிகூட்டினார்கள்.

21. கோல்சுழட்ட கீதம்பாடும் ஜாலம்.

ஐந்து அல்லது ஆறடி நிகளமுள்ளதும் ஒரு அங்குல உள்வீத்துள்ளதுமான ஒரு போல்குழையைச் சம்பாதித்து அதின் இரண்டு துவாரங்களிலும் பில்லைகளைப் பொருந்தவைத்து மூடி ஒருபுறத்தில்மாத்திம் விரல்நுழையும்படியான துவாரஞ் செய்துவைத்துக்கொண்டு சுழட்டிக்காட்ட வெகு இனிமையாகிய கீதமுண்டாகும்.

22. அணிப்பிள்ளைபோல் கத்தும் ஜாலம்

அரசந்துளிரின் மத்தியிலுள்ள அரும்பைக்கிள்ளி அதின் ஆடையை வாயிலிட்டு முன்பல்லால் இருக்கிப் பிடித்துக்கொண்டு உள்ளுக்கு உருஞ்சஅது அணிப்பிள்ளையைப்போல் கீச்சிடும்,

23. பிறந்த குழந்தைபோல் கத்தும் ஜாலம்.

இளசாகிய வெற்றிலையைக் கிள்ளி இரண்டுகையின் பெருவிரல் இடுக்கில் வைத்து உதட்டைமூடி கையை வாயில் வைத்தூத பிறந்தகுழந்தை கத்துவதுபோல் சத்தங்கேட்கும்.

24. கழுத்தில் கத்திகுத்தும் ஜாலம்.

ஒருகத்தியை இரண்டு துண்டாகவெட்டி அதை கழுத்தில்படிய ஸ்பிரிங் தகட்டில் பத்தவைத்து ஜாலமாடுமிடத்தில் முன்னதாய் ஒருகத்தியைக் காண்பித்து இக்கத்தியால் இவன்கழுத்தில் குத்துகின்றேன் பாருங்களென்று சொல்லி எருவனைப்படுக்கவைத்து அவன்மேலே துணியைப்போட்டு மூடி பத்தவைத்துக்கொண்டுவந்திருக்கும் கத்தியை அவன்கழுத்தில்மாட்டி மற்ற கத்தியை மறைத்துவிட்டு ஆட்டுஇரத்தத்தை துணியில் பிடித்துக் காயவைத்திருந்து அதை ஜாலமாடுமிடத்தில் நனைத்து அவன் கழுத்தில் சுற்றிப் பிழிந்து காண்பிக்கப் பார்ப்பவர்கள் உண்மையான இரத்தமென்றே நம்புவார்கள்.

25. வலைச்சிக்கத்தில் மனிதனைக்கட்டி போட்டியில்போடும் ஜாலம்.

வலைமாதிரி நூல்கயிற்றினால் சிக்கம் ஒன்று செய்து அதற்கு சுருக்கு வைத்துக் கயர்கோர்த்துச் சுருக்கி முடிபோட்டுத் தயாராக வைத்திருந்து ஜாலமாடுஞ் சபையில் அதையெடுத்து அனைவர்களுக்குங்காட்டி இந்த சிக்கத்தில் ஒருமனிதனைக் கட்டிப்போடுகிறேன் பாருங்களென்று சொல்லி அச்சிக்கத்தை விரித்துப்போட்டு ஒருமனிதனை அழைத்து அவன் இரண்டு கைகளையும் கழுத்துடன் சேர்த்துக்கட்டி சிக்கத்தின்மத்தியில் குந்தவைத்து தலைமுதல் திரேகமாதியந்தமும் நன்றாகவளைத்துக்கட்டி கெட்டிமுடிகளாகப்போட்டு அவனை அப்படியே மூன்றடி நிகளமும் ஒன்றரை அடி அகலமும் உள்ள பெட்டியைக்கொண்டுவந்து மேல்மூடியைத்திறந்து அதை ஒருவரைப் பிடிக்கச்சொல்லி அதில் அவனைப்போட்டுவிடவும் அவனுக்கு முன்னதாகச் சொல்லிவைக்கவேண்டியதென்னவென்றால் விரலைமடக்கி இழுத்துக்கொண்டு மேற்படி சிக்கத்தின் அடிசுருக்கையிழுத்தால் சிக்கமானது அடியோடு கழன்றுவிடும் அதைமறுபடியும் சேர்த்துக்கட்டி வெளியில் போடச்சொல்லவும்அவனப்படிச் செய்துவிட்டபிறகு நீ சபையோர்களைப்பார்த்து சிக்கமானது கட்டினபிரகாரமிருக்க அதிலிருந்த ஆளைக்காணோமேயென்று சொல்லஎல்லோரும் ஆச்சரியப்படுவார்கள் மறுபடியும் 8 சபையோர்களைப்பார்த்து சிக்

கத்தில் கட்டி பெட்டியில் போட்ட ஆள் எங்கு போய்விடுவான் ஒருவேளை பெட்டியில் ஒளிந்துக்கொண்டிருந்தாலும் இருக்கலாமென்றுசொல்லி ஆகட்டும் அதையும் பார்த்துவிடுகிறேனென்பதாய் ஒரு கூர்மழுங்கின பட்டாவைக் கையிலெடுத்துப் பெட்டியின் நாலுமூலைகளிலும் குத்தவேண்டும் அப்போது அதிலிருக்கும் ஆளானவன் லகுவாய் சமயத்திற்கேற்றமாதிரி அதற்குள் திரும்பிக்கொண்டே வரவேண்டும். அதன்பிறகு சபையிலிருக்கும் ஜனங்களைப்பார்த்து அய்யா நான் கட்டிப்போட்ட ஆளை நீங்கள் ஆராகிலும் பார்த்தீர்களா எவ்வளவு திருடனையா அவன் கட்டின கட்டு அப்படியே யிருக்க எப்படியோ ஓடிவிட்டானேயென்று பலவிதமாக வார்த்தையாடி பெட்டியின் மேலிருக்கும் துப்பட்டியை யெடுத்துவிட்டு பெட்டியைத் திறக்க அதிலிருந்து ஆள் வெளிவருவான் அதைப்பார்த்த ஜனங்களெல்லாம் ரொம்பவும் சந்தோஷித்து மகாவேலைக்காரனென்று சொல்லிக் கொண்டாடுவார்கள் இவ்வேலைகளையெல்லாம் கண்கட்டு மையைக்கொண்டு செய்கிறதுமுண்டு ஆனால் இவ்வேலைகளைச்செய்யும்போது மகாதந்திரமாகவும் புத்தி சாதுரியமாகவும் செய்யவேண்டும் நம்முடனிருக்கும் கையாளும் பழக்கப் பட்டவனாக யிருக்கவேண்டும்.

26. பூனையாகும் ஜாலம்.

வாகைப்பிசின் அத்திவிரை கரும்பூனை பீஜம் இவைகளை வாழைப்பட்டையின் ரசத்தினாலரைத்து சத்திக்குமுன் வைத்து ஒருமண்டலம் சத்தியின் மந்திரத்தை விடாது செபித்துக்கொண்டிருந்து பிறகு குளிகை திரட்டி வாயில் போட்டுக்கொண்டு சபையோர்களின்முன் நின்றால் அவர்களுக்கு உன் உருவானது பூனையைப்போல தோன்றும்.

27. ஆக்ருஷ்ண திசையறிதல்

வடமேற்கு மூலையாகக் குந்திக்கொண்டு ஆக்ருஷ்ணஞ் செய்ய மெத்தவும் நல்லது.

28. வேறு

வடகிழக்கு மூலையாகக் குந்திக்கொண்டு எவ்வேலையைச் செய்தாலும் பின்னமில்லாது உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல உடனுக்குடன் பலிதமாகும்.

29. வசிய ஆடையறிதல்

சிவந்த பட்டுவஸ்திரமுடுத்திக்கொண்டு வசியமந்திரஞ் செபிக்கத் தாமதமில்லாது உடனே பலிதமாகும்.

30. மோகன ஆடையறிதல்

தனித்த மஞ்சள் பட்டுவஸ்திரமானது மோகன வேலைகளுக்கு மெத்தவும் நல்லது.

31. சகல வேலைகளுக்கும் ஆடையறிதல்

யாதொரு கலப்புமில்லாத தனிப்பட்டு வஸ்திரமானது எல்லா வேலைகளுக்கும் வெகு உத்தமமானதென்று முன்னோர்கள் சொல்லினர்.

32. பேதன ஆடையறிதல்

சாதாரண வெள்ளை வஸ்திரமானது பேதன வேலைகளுக்கு ரொம்பவும் சிலாக்கியமென்று அறியவும்.

33. உச்சாடன ஆடையறிதல்

உச்சாடன வேலைகளுக்கெல்லாம் தனித்த பச்சைப்பட்டு வஸ்திர்மானதே மேலென்று அறியவும்.

34. வசியத்திற்கு எண்ணெயறிதல்

காராவின் நெய்யில் தாமரை நூல்வத்தி போட்டு மந்திரஞ் செய்ய வசியமானது கைகூடும்.

35. ஆக்ருஷ்ணத்திற்கு

ஏரண்டத்தெண்ணெயில் வெள்ளெருக்கனை யுரித்த நாரில் வத்தி திரித்துப்போட்டுச் செபிக்க மெத்தவும் நல்லது.

36. மோகனத்திற்கு

நல்லெண்ணெயில் கன்னிநூல் வத்தியைப்போட்டுச் செபிக்க உடனே கைகூடும்.

37. மாரணத்திற்கு

வேப்பெண்ணெயில் வேலிப் பருத்தியைத் திரிதிரித்துப்போட்டு மந்திரஞ் செபிக்க உடனே சித்தியாகும்.

38. உச்சாடனத்திற்கு

புங்கெண்ணெயில் இலவம்பஞ்சைத் திரித்துப்போட்டுச் செய்யவும்.

39. பேதனத்திறகு

புன்னைக்கொட்டையை எண்ணெயாடி துணிக்கந்தையில் வத்தியைப் போட்டுச்செய்ய பேதனமானது வெகு சுலபத்தில் கைகூடும்.

40. தமபனத்திற்கு

ஆதளைக்கொட்டையை எண்ணெயாடி எவ்வித வத்தியையேனும் போட்டுக்கொளுத்திச் செபிக்கத் தம்பனமாகும்.

41. வித்வேஷணத்திற்கு

பசு, ஆடு, பன்றி இவை மூன்றின் நெய்களையும் ஒன்றாய்க் கலந்து தாமரை நூல்வத்தி போட்டு விளக்கேற்றிச் செய்ய மெத்தவும் சிலாக்கியமானது.

42. சுபகர்ம சமுத்துகள்

வன்னி, ஆல், விளா இந்த சமுத்துகள் சுபகர்மஞ் செய்ய ரொம்பவும் விசேஷமானது.

43. அசுபகர்ம சமுத்துகள்

கள்ளி, எருக்கு, எட்டி, அத்தி இச்சி, விடத்தலை இச்சமுத்துகள் அசுபகர்மத்திற்கு மாகுமென்று பெரியோர்களெல்லாம சொல்லியிருக்கின்றனர்.

44. வசியலோகம்

காரீயத்தகட்டில் வசிய சக்கரங்கீறிச் செய்ய உடனே பலிதமாகும்.

45. மோகனலோகம்

வங்கத்தகட்டில் மோகனச் சக்கரத்தைக் கீறி மந்திரஞ் செபிக்கச் சித்தியாகும்.

46. அழைப்புலோகம்

தங்கத்தால் தகடுசெய்து அதில் சக்காத்தைக் கீறி வெள்ளைப்புஷ்பத்தினால் அர்ச்சனைசெய்து அழைக்கத் தடையில்லாது பலிதமாகும்.

47. தம்பனலோகம்

செப்புத்தகட்டில் சக்கரத்தைக் கீறி சிவந்த புஷ்பத்தாலலங்கரிக்கத் தம்பனமாகும்.

48. உச்சாடனலோகம்

வெள்ளீயத் தகட்டில் சக்கரங்கீறி எருக்கம்பூச்சூடி உச்சாடன மந்திரத்தைச் செபிக்கச் சித்தியாம்.

49. வித்வேஷண லோகம்

குருத்தோலையில் சக்கரங்கீறி வித்வேஷண மந்திரத்தைச் செபிக்கச் சித்தியாகும்.

50. பேதன லோகம்

இரும்புத்தகட்டில் பேதனசக்கரத்தைக் கீறி பேதன மந்திரத்தைச் செபிக்கப் பலிதமாகும்.

51. மாரண லோகம்

வெள்ளித்தகட்டில் மாரண சக்காத்தைக் கீறி ஊமத்த பூவினால் அர்ச்சனை புரிந்து மாரண மந்திரத்தைச் செபிக்கச் சித்தியாகும்.

52. வசியத்திற்கு எழுத்தறிதல்

யநமசிவ என்று செபிக்கும்பக்ஷத்தில் வசியமானது வெகு சீக்கிரத்தில் கைகூடும்.

53. மோகனத்திற்கு எழுத்தறிதல்

மசிவயந என்று நாட்டி செபிக்கும்பக்ஷத்தில் மோகனமானது கைகூடி நல்ல கீர்த்தியைக் கொடுக்கும்.

54. தம்பனத்திற்கு எழுத்தறிதல்

நமசிவய என்ற அக்ஷரத்தைச் செபிக்கும்பக்ஷத்தில் தம்பன வேலையெல்லாம் உள்ளங்கையின் நெல்லிக்கனியைப் 'பால பலிதமாகும்.

55. உச்சாடனத்திற்கு எழுத்தறிதல்

வயநமசி என்று வரைந்து செபிக்கும்பக்ஷத்தில் எப்பேர்ப்பட்ட கொடிய தேவதையாயிருந்தாலும் உச்சாடனமாகும்.

56. மாரணத்திற்கு எழுத்தறிதல்

சிவயநம என்று நாட்டி உருவேத்தும்பக்ஷத்தில் மாரண வேலைகளெல்லாம் பசுமரத்தாணியைப்போல பலிதமாகும்.

57. பேதனத்திற்கு எழுத்தறிதல்

யவசிநம என்ற அக்ஷரத்தை மாறி உருவேற்றும்பக்ஷத்தில் உலகமுதல் யாவும் பேதனமாகும்.

58. ஆக்ருஷ்ணத்திற்கு எழுத்தறிதல்

வசிமயந என்று செபிக்கும்பக்ஷத்தில் சர்வமும் ஆக்ருஷ்ணமாகும்.

59. வித்வேஷணத்திற்கு எழுத்தறிதல்

நயவசிம என்று உருவேற்றிக்கொண்டு வரும்பக்ஷத்தில் சர்வமும் வித்வேஷணமாகும்.

60. வசியத்திற்கு நாளறிதல்

ஞாயிற்றுக்கிழமையதினம் வசியஞ்செய்வதற்கு துடங்கும்பக்ஷத்தில் யாதொரு விக்கினமுமின்றி நிறைவேறும்.

61. மோகனத்திறகு நாளறிதல்

திங்கட்கிழமையதினம் மோகன வேலைகள் செய்வதற்குத் தகுதியான தால் அன்றையதினம் செய்ய மெத்தவும் நல்லது.

62. ஏடனைக்கு நாளறிதல்

செவ்வாய்க்கிழமையதினம் வேண்டிய சாமக்கிரியைகளைத் தயார்செய்துக்கொண்டு ஏடனை செய்யத்தவராது பலிதமாகும்.

63. தம்பனத்திற்கு நாளறிதல்

புதன்கிழமையதினம் கொடிய பாவமாகிய தம்பன வேலைகளைச்செய்ய ஆரம்பிக்கும்பக்ஷத்தில் அதினால் வரும் பாதகங்களுக்கும் எல்லையுண்டோ.

64. உச்சாடன நாளறிதல்

குருவாரமாகிய வியாழக்கிழமையதினம் உச்சாடன வேலையைச் செய்யும்பக்ஷத்தில் தெய்வமாயிருந்தாலும் உச்சாடனமாகிவிடும்.

65. ஆக்ருஷ்ண நாளறிதல்

வெள்ளிக்கிழமையதினம் சாயுங்காலம் ஆறுநாழிக்குமேல் ஆக்ருஷ்ண வேலைகளைத் துவக்கும்பக்ஷத்தில் வெகு சீக்கிரத்தில் கைகூடும்.

66. மாரண நாளறிதல்

சனிக்கிழமையதினம் மாரணவேலைகளைச் செய்ய தகுதியான நாளென்று முன்னோர்களெல்லாங் கூறியிருக்கின்றனர்.

67. வசிய திசையறிதல்

வசியஞ் செய்யவேண்டில் கிழக்குத் திசையாக குந்திக்கொண்டு மனதை ஒருவழிப்படுத்தி தியானித்தால் வெகு சீக்கிரத்தில் வசியங் கைகூடும்.

68. மோகனத்திற்கும் மாரணத்திற்குந் திசையறிதல்

தெற்கு முகமாகக் குந்திக்கொண்டு மோகன வேலையையும் மாரண வேலையையும் செய்யும்பக்ஷத்தில் உடனே பலிதமாகும்.

69. உச்சாடன திசையறிதல்

மேற்குத்திசையாகக் குந்திக்கொண்டு உச்சாடனஞ் செய்யும்பக்ஷத்தில் அப்போதைக்கப்போதே பலிதமாகும்.

70. பேதன திசையறிதல்

வடக்குப்பார்த்த மாதிரி குந்திக்கொண்டு பேதன மந்திரத்தைச்ஜெபிக்கும்பக்ஷத்தில் வெகு சீக்கிரத்தில் பலிதமாகும்,

71. எட்டனைக்கு திசையறிதல்

தென்மேற்கு மூலையாகக் குந்திக்கொண்டு எட்டனையைச் செய்யும்பக்ஷத்தில் பச்சைமரத்திலடித்த ஆணியைப்போல் பலிதமாகும்.

72. தம்பன திசையறிதல்

தென்கிழக்கு மூலையாகக் குந்திக்கொண்டு மனதைப் பூரணத்தில் நிறுத்தி தம்பன மந்திரத்தைச் செபிக்கும்பக்ஷத்தில் அதனாலுண்டாகும் இன்னல்களைச் சொல்லத்தரமல்லவென்று முன்னோர்கள் சொல்லினர்.

73. அந்திரமாக தண்ணீர்நிற்கும் ஜாலம்

நன்றாகப்பழுத்த நறுவிலிப்பழத்தைப் பிசைந்து ஓர்மண்தோண்டியின் உள்புறமெல்லாந் தடவிகாயவைத்துப் பிறகு தோண்டிநிறைய ஜலம்விட்டு உக்கம்போட்டு மேலே தூக்கிக்கட்டிவிட்டு ஓட்டையெல்லாந்தட்டிவிட ஜலமானது அந்தரமாகிவிடும்.

74. சில்லிகுடத்தில் தண்ணீர்நிற்கும் ஜாலம்

ஓர்குடத்தை எழுத்தாணியால் நன்றாகத் துவாரஞ்செய்துவிட்டு துத்தியிலையையும் நறுவிலிப் பழத்தையுஞ்சேர்த்து அரைத்து குடத்தினுள்ளே பூசிக்காயவைத்துப்பிறகு ஜலம்வார்த்துத் தூக்கிக்கட்ட துளி ஜலமேனும் கீழ்விழாது.

75. சாப்பவித்தை.

பொற்றலைக்கையான் தும்பை நிலம்புறண்டி சிறுகீரை கரிசலாங்கண்ணி நாயுருவி தொட்டால்வாடி பொற்சிந்தில் ஆடையொட்டி இதுகளைவகையொன்றிக்கு விராகனெடை ஒன்றாகயெடுத்துப் புத்துத் தேன் விட்டரைத்துத் திலர்தமிட்டக்கண்ட சர்ப்பங்களெல்லாம் வசியமாகும்.

76. வயற்றில் கத்தி குத்தும் ஜாலம்

ஒருங்களமாகிய பட்டாக்கத்தியை நடுபாகத்தில் இரண்டு துண்டாக வெட்டி ஸ்பிரிங்தகட்டை மூன்றாம் பிறைபோல் வளைத்து ஒருபக்கம் அடிகத்தியையும் மற்றொரு பக்கம் முனைகத்தியையும் வைத்து பத்தவைத்துக் கொண்டு ஜாலமாடுஞ் சபையில் வேறொரு பட்டாக்கத்தியைக் கையிலெடுத்துக்காட்டி இக்கத்தியை இப்பையனுடைய வயற்றில் குத்துகிறேன்பாருங்களென்று சொல்லித்திரைவிட்டு பையனைப்படுக்கவைத்து முன் சபையோர்களுக்குக்காட்டி பட்டாவை மறைத்துவிட்டு ஸ்பிரிங்பட்டாவையெடுத்துப் பையனுடைய வலப்பக்கத்திலிருந்து வயிற்றின்பாகம் வரையில் இழுத்துவிட்டு கத்திமுனையில் ஒரு எலுமிச்சம்பழத்தைச் சொருகிசிகப்புச்சாயத்தை வஸ்திரத்தில் நனைத்து கத்தியில்பூசி பையனை பூமியின்மீது படுக்கவைத்து அனைவர்களுக்குங்காட்டவும் அப்படிக்காட்டும்போது கீழேபடுத்துக்கொண்டிருக்கும் ஆளானவன் நாக்கைவெளியில் நீட்டிக்கொண்டும் கண்களைமூடிக்கொண்டும் அசையாது இருக்கும்படியாகத் திட்டஞ்செய்துவிட்டுத் திரையைத் தூக்கி சபையோர்களுக்குக் காண்பித்துவிட்டு மறுபடியும் திரையை விட்டுவிடவும்.

77. ஜலத்தில் தீபமெரியும் ஜாலம்

குங்கிலியத்தையும் கற்பூரத்தையும் பொடியாகச்செய்து வெண்மையாகிய கந்தையில் பரப்பி திரிதிரித்து விளக்கெண்ணெயில்போட்டு நனைத்துக் கொண்டு பிறகு ஓர் தடையுள்ள கலயத்தில்போட்டு தடைக்குக்கொஞ்சங்

குறைவாகவே ஜலம்விட்டுக் கொளுத்தினல் இரண்டுமணி சாவகாசம்வரையில் வெகு பிரகாசமாக யெரியும். அதைப்பார்த்த சபையோர்களும் உனக்கு ரவி வசியமென்று சொல்லிக்கொள்வார்கள்.

78. வேறு

திருகுகள்ளிப்பாலும் கற்பூரமும் ஒன்ருய்க் கலந்து அரைத்துச்சீலையில் தடவி நிழலிலுலர்த்தி திரியாகத் திரித்து மூன்மாதிரி கலசத்தில் போட்டு ஜலத்தைவிட்டுக் கொளுத்த எரியும் சபையோர்களும் ஆச்சரியப்படுவார்.

79. குளத்திலிறங்கி விபூதியிடும் ஜாலம்

கொடிக்கள்ளிப்பாலைக் கறந்து விபூதியைப்பேர்ல் கட்டுகெட்டாக திரேகத்திலிட்டுக்கொண்டு காயவைத்துவிட்டால் அது ஒருவருக்குந்தெரியாது அதன் பிறகு சபையிலிருக்கும் ஜனங்களைப்பார்த்துக் கொஞ்சம் விபூதியை கையிலெடுத்துக்கொண்டு ஓ சபையோர்களே நான் இவ்விபூதியை ஜலத்திற்குள்ளிறங்கி இட்டுக்கொண்டுவரும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி ஜலத்திலிறங்கி பத்து நிமிஷபரியந்தம் ஜலத்திற்குள்ளேயே மூச்சுப்பிடித்துக்கொண்டிருந்து பிறகு வெளியே வரப் பார்த்தவர்களெல்லாம் அதிசயப்பட்டு உன்னை மஹா மந்திரவாதியென்று சொல்லிக்கொள்வார்கள்.

80. ஜலத்தை இரண்டுவிதமாகக்காட்டும் ஜாலம்

ஓர் போகணி நிறைய ஜலத்தையூற்றி சபையோர்களுக்குக் காண்பித்து நான் இந்த ஜலத்தை இரண்டு விதமாகச் செய்யும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லிக்கொண்டே மந்திரஞ் செய்கிறதைப்பே ல மொணமொணவென்று வாயை அசைத்துக்கொண்டே தந்திரமாக விபூதிபோடுகிற பாவனையாக லிட்மஸ் என்னும் பௌடரைக் கொஞ்சம் போட்டால் அது குபீரென்று நீலநிறமாகும். அதை அனைவர்களுக்குங் காட்டி அவர்கள் பார்த்தபின்பு இதை மறுபடியும் சிவந்த நிறமாகச் செய்கிறேன் பாருங்களென்று சொல்லி மந்திரஞ் செபித்துக்கொண்டே கொஞ்சம் கெந்தக திராவகத்தைத் தந்திரமாக விட்டுவிட்டால் ஜலமெல்லாம் சிகப்பாக மாறிவிடும். சபையிலுள்ளவர்களெல்லாம் இது குட்டிச்சாத்தான் வேலையென்று சொல்லுவார்கள்.

81. தலையில் தேங்காயுடைக்கும் ஜாலம்

கருமுள்ளிச்செடியிருக்குமிடத்தைச் சுத்தஞ்செய்து ஆதிவாரஞ் சூரியோதயத்திற்கு முன் சாபநிவர்த்தி செய்து காப்புகட்டி பொங்கல், பலி, தூபதீப முதலியவைகளைச் செய்து ஆணி வேரறுமலும் இரும்பாலாகிய ஆயுதங்கள் படாமலுங் கொண்டுவந்து வாயிலடக்கிக்கொண்டு தேங்காயை ஆகாயத்திலெறிந்து தலையின்பேரில் தாங்கிக்கொள்ள தேங்காயானது சுக்கல் சுக்கலாகப் போய்விடும். தலைநோகாது சாதனம்.

82. ஜடைவளர்க்கும ஜாலம்

ஆலம்பால் அத்திப்பால் அரசன்பால் இம்மூன்றையும் ஒன்ருகக் கலந்து தலைமயிரில் பூசி வேறு பொய்ரோமங்களை ஒட்டவைத்துக்கொண்டே வரும்பக்ஷத்தில் அது நாளாவட்டத்தில் பெரிய ஜடையாகி முப்பாழையுங் கடந்த சந்யாசியைப்போல தோன்றும் இக்காலத்தும் இம்மாதிரி பொய் சன்யாசிகள் இருக்கின்ருர்கள்.

83. பகலில் நக்ஷத்திரங்கள் தோன்றும் ஜாலம்.

ஓர் ஆழமாகிய கிணற்றிலிறங்கி மல்லாந்து படுத்துக்கொண்டுமேனதை

அசையாது நிறுத்தும்பக்ஷத்தில் வானத்திலுள்ள நக்ஷத்திரங்களெல்லாம் கண்களுக்குத் தோன்றும் ஆனால் இதற்கு அனுபவம் வேண்டும்.

84. நெய்பரிமாறும் ஜாலம்

சபையில் நெய்பரிமாறும்போது கொஞ்சம் நெய்யை சூடேறக்காய வைத்து அதில் ஓர் இளநீரின் ஜலத்தைவிட்டு பரிமாறினால் வெகு ருசியாக வும் பரிமளமாகவுமிருக்கும் நெய்யும் தாராளமா யிருக்கும்.

85. புகைமோதிர ஜாலம்.

இரண்டங்குல சதுர அளவுள்ள ஒரு காற்றுப்போகாத அட்டைப்பெட் டியையெடுத்து அதன்பக்கத்தில் சுண்டுவிரல் நுழையும்படியான துவாரஞ் செய்து சுருட்டின் புகையேனும் வேறெவ்வித புகையேனும் உள்ளே செலு த்திக் கீழேவைக்க அதிலிருந்து மோதிரங்களைப்போல வளையம் வளையமாக புகைகள் வெளியே வருகின்றதைப்பார்க்க ஆச்சரியமாயிருக்கும்.

86. கஸ்தூரி செய்யும் ஜாலம்.

இரத்தபாளம் வீரம் வேங்கைமரப்பிசின் பழந்தின்னும் வௌவாலின் எச்சம் இவைகளை வகையொன்றுக்குவிராகனெடை ஆறாகவெடுத்துக் கலை மானின் இரத்தத்தாலரைத்து உருண்டைசெய்து தாழைப்பூவினால் கவசஞ் செய்து சட்டிக்குள்வைத்து மேலே சட்டிமூடி ஒருமண்டலஞ்சென்று எடுத் துப்பார்க்க கஸ்தூரியானது கட்டியிருக்கும் அதையெடுத்து ஜலத்தில் போட்டுப்பார்க்க அசல் இரத்தத்தைப்போலவே தோன்றும்.

87. வேறு

எட்டுபடி காண்டாமிருகத்தின் இரத்தத்தை ஓர் பாத்திரத்தில் ஊற்றி அதில் கருங்காலி பட்டையின் தூள் காசிக்கட்டி கிராம்பு ஏலம் இவைகளை வகையொன்றுக்கு விராகனெடை ஒன்றாகப்போட்டு ஒன்றாய்க்கலந்துஜா யில் போட்டு நிறைய பன்னீர்விட்டுவாய்க்குச்சீலைமண்செய்து மூன்றுநாள் காலாக்கினியாக எரிக்கும்பக்ஷத்தில் சரக்கெல்லாம் ஒன்றாகத்திரண்டு கஸ் தூரியானது கட்டியாகநிற்கும்.

88. வேறு

இரத்தபாளம் கார்போகரிசி வாலுளவை காட்டெருவைப்பால் இவை களையெல்லாஞ் சமயெடையாக வெடுத்து பன்னீர்விட்டு நன்றாக அரைத்து பாண்டத்திலிட்டு வாய்க்குச் சீலைமண்செய்து புவியில் புதைத்து நாற்பது நாள் சென்றெடுத்துப்பார்க்க தண்ணீரெல்லாஞ் சுண்டி கஸ்தூரியானது கட்டியிருக்கும்.

89. வேறு

காசிக்கட்டி, கருவாப்பட்டை இவைகளைச சமயெடையா யெடுத்து சவுரிச்சாற்றாலரைத்து அதை மறுபடியும் ஒட்டகத்தின் இரத்தத்தாலரைத் துப் பிறகு பன்னீராலரைத்துப் பாண்டத்திலிட்டு வாயை மூடிச் சீலை செய்து பூமியில் புதைத்துவைத்து நாற்பதுநாள் சென்றெடுத்துப் பார்க்க கஸ்தூரியானது வெகு உன்னதமாகக் கட்டியிருக்கும். இதுவரையில் சொல்லிவந்த நான்குவகைக் கஸ்தூரிகளும் வைப்புச்சரக்காயிருந்தாலும் எவ்வித வேலைகளுக்கும் உபயோகித்துக்கொள்ளலாம் இதனால் யாதொரு கெடுதியும் நேரிடாது.

90. கண்ணாடி மெல்லும் ஜாலம்

அக்கிராகாரத்தை வாயில் போட்டுமென்று தாடையிலடக்கிக்கொண்டு

கண்ணாடித் துண்டுகளைக் கூச்சமில்லாது மெல்லலாம் வாயறுக்காது. எதாகிலும் பிசிர்கள் உள் சென்றிருக்குமென்று சந்தேகமிருக்கும்பக்ஷத்தில் கொஞ்சம் சுடசுட சாதத்தை மென்று மூன்று உருண்டை விழுங்கவும்.

91. சங்கிலியுருவுஞ் ஜாலம்.

சோற்றுக்கற்றாழைமடலை பில்லை பில்லையாக அறுத்து விளக்கெண்ணெயில் போட்டு நன்றாகக் கலக்கி வைத்துக்கொண்டு ஓர் இரும்பு சங்கிலியை உலைக்கூடத்தில் போட்டுச் சிவக்கும்படி காயவைத்துக் கொக்கிமாட்டிக் கையில் பிடித்துக்கொண்டு ஒரு கையில் எண்ணெயுடன் கற்றாழை சோற்றைவாரி சங்கிலியையுருவ குபீரென்று எரியுமேயொழிய சுடாது பார்ப்பவர்களும் ஆச்சரியப்படுவார்கள். இதல்லாமல் பச்சைத் தவளையின் நெய்யைக் கையில் தடவிக்கொண்டு முன்மாதிரி சங்கிலியைக் காய்ச்சி உருவினாலும் கை சுடாது.

92. வசிய ஜாலம்

பிரமதண்டி தாளி குழியானை கரும்பூனைப்பஞ்சாங்கம் இவைகளையெல்லாம் சமயெடையாகவெடுத்துப் பொடிசெய்து வெள்ளைத் துணியில்வைத்து திரித்து அகலில்போட்டு அதில் செம்மறி ஆடு பசு எருமை இவைகளின் வெண்ணெயையுருக்கிவார்த்து விளக்கேற்றி மைபிடித்து அம்மையை நல்லெண்ணெயிற் குழைத்துச் சிமிளில்வைத்துக்கொண்டு தேவையானபோது நெற்றியிற் றிலர்தமிட்டுச்செல்ல சகலமானபேர்களும் வணங்கி வசியமாவார்கள்.

93. வேறு.

பேய்த்தும்மட்டி பிரமதண்டி கோரோசனை அண்டங்காக்கைத்தலை இவைகளையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து பொடியாக இடித்து அதைக்காராவின் வெண்ணெயிற்குழைத்து ஓர் குடுவையிற்போட்டுவிட்டு வாசற்படியில் புதைத்துவைக்க அதைத்தாண்டிக்கொண்டு அவ்வீட்டிற்குள் யார்வருகின்றார்களோ அவர்களெல்லாம் வசியமாகி நம்மிஷ்டப்படி நடப்பார்கள்.

94. வேறு

வாழை முத்தெருக்கஞ்செவி வெள்ளாட்டுநாக்கு ஆதக்கொடி இவைகளையெல்லாம் சமயெடையாகவெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொண்டு தேவையானபோது அதில் காராவின்வெண்ணெயைப் போட்டுப்பிசரி நெருப்பிலிட்டுப்புகைத்து அப்புகையைத் திரேகத்திற்பிடித்துக்கொண்டுசெல்ல உலகிலுள்ளயாவர்களும் வசியமாவார்கள்.

95. வேறு

வெள்ளெருக்கு வாழை மண்டுகப்பிச்சு புராவெச்சம் காதுகுரும்பிகண்பீளை நாக்கழுக்கு மூக்குச்சளி இந்திரியம் இவைகளையெல்லாம் சரியெடையாகச்சேர்த்து நல்ல அமிர்தயோகவேளையிலிடித்து ஒன்றாக்கி குடுவையில் போட்டுக் குளத்தில் புதைத்துவைக்க அக்குளத்து நீரையார்குடிக்கின்றார்களோ அவர்களெல்லாம் வசியமாவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

96. வேறு.

ஆனைவணங்கி, வாழை பச்சோந்தி ஆறுபுள்ளிவண்டு சக்கரை தேன் இவைகளெல்லாம் சமயெடையாகவெடுத்து ஓர்குடுவையில்போட்டுகொதிக்கவைத்து யார்முகத்திற் பூசுகிறோமோ அவர்களெல்லாம் வசியமாவார்கள்.

97. வேறு.

பிரமதண்டி பேய்த்தும்மட்டி தேவாக்குக்கன் ஆறுபுள்ளிவண்டு வெண் கொழுஞ்சி காட்டட்டை இவையெல்லாம் சமவெடையாக வெடுத்து ஓர் குடுவையில்போட்டு தெருவாயற்படியிற் புதைத்துவைக்க அதைத்தாண்டி வருபவர்களெல்லாம் வசியமாவார்கள்.

98. வேறு

சீதாதேவி செங்கழுநீர் ஆனைவணங்கி ஆறுபுள்ளிவண்டு குழியானை காது குரும்பி கண்பீளை நாக்கழுக்கு இந்திரியம் மூக்குச்சளி இவைகளை யெல்லாம் சமவெடையாகவெடுத்து பொன்னூமத்தஞ்சார் அல்லது பேய்க்கரும் பஞ்சாறு விட்டரைத்து தின்பண்டங்களிலாகிலும் அறுசுவையிலாகிலும் கொடுக்க வசமாகி என்னென்னும் பிரியமாட்டார்கள்.

99. வேறு

சீதாதேவிசெங்கழுநீர் ஆனைவணங்கி ஆறுபுள்ளிவண்டு குழியானை காது குரும்பி மூக்குச்சளிகண்பீளை நாக்கழுக்கு இந்திரியம் வெத்தகம் இவைகளை யெல்லாம் சமவெடையாக வெடுத்து ஆளாக்கி வெள்ளைத்துணியில்வைத்து திரித்து அகலில்போட்டுக் காராவின் நெய்யூற்றி விளக்கேற்றி வைக்க அவ்வீட்டில் இலக்ஷுமியானவள் சதாகாலமும் வாசமாயிருப்பாள்.

100. வேறு.

வெள்ளெருக்கு கோரோசனை அழுகண்ணி மண்டைக்கப்பிச்ச காதுகுரும்பி கண்பீளை நாக்கழுக்கு மூக்குச்சளி இந்திரியம் இவைகளையெல்லாம் சமவெடையாவெடுத்து ஆளாக்கி எருக்கம்பழுப்புச்சார்விட்டரைத்துச் சிமிழில் வைத்துக்கொண்டு யார்மேலில் பூசுகின்றேமோ அவர்களெல்லாம் வசியமாகி நம்மிஷ்டப்படி நடப்பார்கள்.

101. வேறு

ஆண்தெச்சக்காய் பொற்றலைக்கையாந்தகரை புராவெச்சம் கருப்பு நாயின்நாக்கு காதுகுரும்பி கண்பீளை நாக்கழுக்கு மூக்குச்சளி இந்திரியம் இவைகளைச் சரிவெடையாகவெடுத்து அதினகடை சில்லைக்கருக்கிப்போட்டு மையைப்போலரைத்து வைத்துக்கொண்டு தேவையானபோது தூவுரைப்பிரமாணம் அறுசுவையிலேனும் தின்பண்டங்களிலேனும் கலந்துக் கொடுக்க வசியமாம்.

102. வேறு

அழுகண்ணி ஆண்தெச்சக்காய் மாட்டுப்புராவெச்சம் ஆதிக்கொடி இவை யெல்லாம் சமவெடையாவெடுத்து ஆளாக்கிவைத்துக்கொண்டு யார்மேலில் தூவுகின்றேமோ அவர்களெல்லாம் வசியமாவார்கள்.

103. வேறு

வெள்ளெருக்கு பொற்றலைக்கையாந்தகரை காட்டட்டை மண்டைக்கப் பிச்சு காதுகுரும்பி கண்பீளை நாக்கழுக்கு மூக்குச்சளி இந்திரியம் இவைகளை யெல்லாம் சமவெடையாவெடுத்து பேய்க்கரும்பஞ்சாற்றாலரைத்து துவரைப் பிரமாணம் குளிகை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையான போது தின்பண்டங்களிலேனும் பலவித பதார்த்தங்களிலேனும் கொடுக்கத் தின்றவர்கள் வசியமாவார்கள்.

104. வேறு

மயிர்ச்சிகைப்பூண்டு வாழை பச்சோந்திதலை சுழல்வண்டு இவைகளை யெல்லாங்காயவைத்து இடித்துப்பொடியாக்கி அப்பொடியை சீலையில்வைத் துத்திரித்து அகலில்போட்டு நல்லெண்ணெயூற்றிவிளக்கேற்றி அவ்விளக்கு வெளிச்சத்தில் நமக்கிஷ்டபேர்களுடன் வார்த்தையாட அவர்கள் என்னு ளும் பிரியமாட்டார்கள்.

105. வேறு

ஆனைவணங்கி சுத்திச்சாட்டரணை கரும்பூனைப்பஞ்சாங்கம் ஆறுபுள்ளி வண்டு காதுகுரும்பி மூக்குச்சளி கண்பீளை நாக்கழுக்கு இந்திரியம இவை களையெல்லாம் சமயெடையாகயெடுத்து புத்துத்தேன் விட்டரைத்து சிமி ளில் வைத்துக்கொண்டு இஷ்டமான பெண்களின்மேற்பூச அவர்கள் வசிய மாகி நம்மிஷ்டம்போல் நடந்து நாம் கேட்டதைக்கொடுப்பார்கள்.

106. நோய்கள் போகும் ஜாலம்

பிரமதண்டி பொற்றலைக்கையாந்தகரை இந்திரகோபப்பூச்சி பச்சைத் தவளையின் பிச்சுஇந்நான்கையுஞ் சமயெடையாக எடுத்துக்கொண்டு எருமை வெண்ணெயுந்தேனும் விட்டரைத்து வழித்து வைத்துக்கொண்டுநோயுள்ள விடங்களில் தடவ எப்படிப்பட்டநோயாயிருந்தாலும் சூரியனைக்கண்டபனி யைப்போல விலகிவிடும்.

107. கர்ப்பந்தரிக்கும் ஜாலம்.

வெள்ளைக்கொழுஞ்சி சத்திச்சாட்டரணைதேவாங்குகண்பச்சை ஓணன் பிச்சு இவைகளையெல்லாங் கால்பலமாகயெடுத்துப் பாண்டத்தில் போட்டுக் குழித்தைலமிறக்கி வைத்துக்கொண்டு மாதாந்த ருதுகாலத்தில் எடுக்கும் வயிற்றுவலிக்கு வயிற்றின்மேல் தடவிவர அவ்வலியானது நின்று கர்ப்பந் தரிக்கும்.

108. சர்வவிஷங்களுக்கும் ஜாலம்

மயிர்ச்சிகைப்பூண்டு அழுகண்ணி ஆறுபுள்ளிவண்டு பச்சை ஓணன் பிச்சு இவைகளை வகையொன்றுக்குக் கழஞ்சு ஒன்றாக எடுத்துக்கொண்டு கழுதைமூத்திரம் குதிரைமூத்திரம் இவைகளை விட்டரைத்துவைத்துக்கொ ண்டு தேவையானபோது எப்பேர்ப்பட்ட விஷமாயிருந்தாலுங் கடிவாயிற் பூசத்தீரும்.

1 9. வேறு சர்வஜனவசிய ஜாலம்

முத்தெருக்கன்செடி சிறியாநங்கைசமூலம் பச்சோந்திப்பிச்சு சுழல் வண்டு ஆதிக்கொடி இவைகளையெல்லாம் பொன்னூமத்தன்சார்விட்டரைத் துச்சிமிளில்வைத்துக்கொண்டு திலர்தமிட சர்வஜனங்களும் வசியமாவார்கள்

110. சகலநோய்களுந்தீரும் ஜாலம்

பேய்த்தும்மட்டி அழுகண்ணி ஆதிக்கொடி கருநாய்நாக்கு இவைகளை யெல்லாம் அமாவாசையும சூரியகிரணமும் பிடித்திருக்கும்போது பொடித் துத் தூளாக்கி சாதம்வடித்த கஞ்சியும் நெய்யும் விட்டரைத்து உருண்டை யாக்கி ஓர் குடுவையில்போட்டுப் புதைத்துவைத்து அதைத்தாண்டிநடந்துக் கொண்டுவர எவ்வித நோய்களும் விலகும்.

111. சத்துருக்கள் கெடும் ஜாலம்

சீதாதேவி செங்கழுநீர் பேய்த்தும்மட்டி மாடப்புராயெச்சம் காட்டட் டை இவைகளைச் சமயெடையாகயெடுத்து பொடிசெய்து அதின்கூடவேப்ப

மரத்தின்மேலிருக்கும் காக்கையின் கூண்டைக்கொளுத்திய சாம்பல் சரியெடையாகச்சேர்த்து இரண்டையும் ஒன்றாகக்கலக்கி சத்துருவின் வீட்டு வாசற்படியிற் புதைத்துவைக்க அவ்வீடுநாசமாவதுடன் சத்துருவானவன் மனைவிமக்கள் முதலியவர்களைத் துறந்து ஓடிவிடுவான்.

112. இதுவுமது.

பேய்த்தும்மட்டி, அழுகண்ணி மாடப்புராயெச்சம் வெள்ளாட்டுநாக்கு காதுகுரும்பி கண்பீளை நாக்கழுக்கு மூக்குச்சளி இந்திரியம் இவைகளையெல்லாம் சமயெடையாகயெடுத்து அரைத்து எட்டிமூளையைக்கூறாகச்சீவி அதற்குப்பூசி பேதனமந்திரத்தைச்செபித்து எதிரியின் வாசற்படியில் அடித்து வைக்க அவன்குடி கெடுவதுமன்றி அவனைச்சேர்ந்தவர்களுங் கெடுவார்கள்.

113. பேய்கள் விலகும் ஜாலம்

பொற்றலைக்கையாந்தகரை பிரமதண்டி தேவாங்கு சுழல்வண்டு இவைகளையெல்லாம் சரியெடையாகயெடுத்து அரைத்து வீட்டு வாயற்படியில் புதைத்துவைக்க அவ்வீட்டிலுள்ள பூதப்பிசாசுகளெல்லாம் விலகிவிடும்.

114. தீமைகள்விலகும் ஜாலம்

ஆடையொட்டிதாளி கரும்பூனைப்பஞ்சாங்கம் தேவாங்குகள் காது குறும்பி கண்பீளை மூக்குச்சளி நாக்கழுக்கு இந்திரியம் இவைகளையெல்லாம் சமயெடையாக யெடுத்து அரைத்துச்சிமிளில் வைத்துக்கொண்டு பசும்பாலிலிழைத்து திலர்தமிட்டுக்கொண்டுவர சகல தீமைகளும் விலகும்.

115. திகைப்புண்டாகும் ஜாலம்.

ஆனைவணங்கி வெள்ளெருக்கு கரும்பூனைப்பஞ்சாங்கம் மாடப்புராவின் யெச்சம் இவைகளைச் சமயெடையாகயெடுத்து ஊமத்தஞ்சாறையும் எருக்கம்பாலையும் சமனாய் விட்டரைத்து சிமிளில்வைத்துக்கொண்டு தேவையான போது பகைவர்களின் மேற்பூச அவர்கள் ஒன்றுந்தோன்றாது திகைத்துநம் மிஷ்டப்படி நடப்பார்கள்.

116. வெட்டுப்படாத ஜாலம்

பொற்றலைக்கையாந்தகரை மயிர்ச்சிகைப்பூண்டு வெள்ளாட்டு நாக்கு மயிர்ச்சிகைப்பூண்டு இவைகளைச் சமயெடையாகயெடுத்துக் கொஞ்சம்காளி கோயிலின் மண்ணை அதற்குச் சமயெடைசேர்த்து காராவின்பாலை யூற்றி அரைத்து உடம்பிற்குத்தடவ எவ்விதமான ஆயுதங்கள் பட்டாலும் காயமாகாது.

117. முயல்கள் ஓடும் ஜாலம்

பொற்றலைக்கையாந்தகரை வெள்ளெருக்கு கரும்பூனைப் பஞ்சாங்கம் கருநாய்நாக்கு காதுகுரும்பி கண்பீளை நாக்கழுக்கு மூக்கழுக்கு இந்திரியம் இவைகளைச்சேர்த்து அரைத்து பேதன சக்கரத்திற்குப்பூசி மந்திரஞ்செபித்துவைக்க வனத்திலுள்ள முயல்களெல்லாம் ஓடிப்போய்விடும்.

1 8 ஆயுதங்கள்மழுங்கும் ஜாலம்

பொற்றலைக்கையாந்தகரை முத்தெருக்கன்செவி அண்டங்காக்கைத் தலை வெள்ளாட்டுநாக்கு இவைகளைச் சமயெடையாகச்சேர்த்து அரைத்துக் காளியைப்பூசித்து உடம்பிற்பூசிச்செல்ல எவ்வித ஆயுதங்களுந்தையாது அப்படித்தைத்தாலும் கூர்மழுங்குமேயொழிய காயமேற்படாது.

119. வேறு எதிர்கெடும் ஜாலம்

வாசை அழுகண்ணி ஆறுபுள்ளிவண்டு சுழல்வண்டு அத்தர்இவைகளைச் சமவெடையாக எடுத்து பன்னீர் விட்டரைத்து குன்றிப்பிரமாணங் குளிகை யெடுத்து தூளாகசிப்பிட்டு எதிரியின்தலை மேற்றூவ எதிரியானவன் நொந்திடுவான் ரொம்பவுங் கை கண்டது.

120. புட்டியில்முட்டை காட்டும் ஜாலம்

கோழிமுட்டையைக் காடியிலூறப்போட்டு மற்றுநாளெடுத்துப் பார்த்தால் அது ஜவ்வைப்போன்று நிகளமாகவரும் அதை நிகளமாகயிழுத்து ஓர் புட்டிக்குள்விட்டு நல்லஜலத்தைவார்க்க முட்டையானது எப்போதும்போலாகிவிடும் பார்ப்பவர்களும் நீமோதிரவாதியென்று மெச்சுவார்கள்.

121. சாதம் வேகாத ஜாலம்.

அத்திக்கட்டையை யெரித்து நெருப்பாக்கி அந்தநெருப்பைக் கழுதை மூத்திரம் விட்டவித்து அக்கரியை எடுத்து வைத்துக்கொண்டிருந்து சாதம் சமைக்கும் அடுப்பில் போட்டால் சாதமானது வேகாது.

122. வேறு

ஆதிவாரம் சூரியோதயத்தில் எச்செடியைச்சொன்னாலும் செய்யும் நத்தைச் சூரிசெடியிருக்குமிடத்தை நன்றாகச் சுத்திசெய்து செடிக்குச் சாபநிவர்த்தி செய்துப்பொங்கலிட்டுக் கன்னி நூல் காப்புகட்டி வேரை இரும்பாலாகிய ஆயுதங்கள் படாமலும் ஆணிவேரறுமலுங் கொண்டுவந்து வைத்திருந்து சாதம் சமைக்கும் அடுப்பில் கொஞ்சம் போட்டுவிட்டால் சாதமானது எவ்வளவு கட்டையைப் போட்டுக்கொளுத்தினாலும் எரியாது.

123. வேறு

செந்சாவிதையை ஐங்கோலத்தில் நனைத்து சாதங்கொதிக்கும் உலையில்போட்டு விட்டால் சாதம் வேகாது. மறுபடியும் அவ்வுலையை ஊற்றி விட்டு வேறுலைவார்த்து வைத்தால் தான்வேகும்.

124. சாணி உருண்டை ஜலத்தில் மிதக்கும் ஜாலம்

சண்டியை எடுத்து அதின்மேரில் சாணியைப்பூசி ஜலத்தில்போட்டால் அது உள்ளேபோகாமல் மேலேமிதந்துக்கொண்டிருக்கும் பார்ப்பவர்கள் சந்தோஷப் படுவார்கள்.

125. கல்கண்டு செய்யும் ஜாலம்

சர்க்கரையை ஜீராகாய்ச்சி சரியானபக்குவத்தில் மீறக்கிவாயைக்கட்டி அப்படியேவைத்துவிட்டு நாலைந்து தினம் பொறுத்துப்பார்க்க கற்கண்டைப் போல் கட்டியாகக் கட்டியிருக்கும். அதை ஓர் பாயில் போட்டு உலர்த்தி எடுத்துக்கொள்ளவும்.

126. அவித்த நண்டு ஓடும் ஜாலம்.

தேவையான நண்டுகளைப்பிடித்து ஓர்குடுவையில்போட்டு ஜலம்விட்டு மஞ்சள் மஜிண்டாபவுடரைபோட்டு வைத்திருக்க பார்வைக்கு அவித்த நண்டைப்போலிருக்கும் அதையெடுத்துக் கீழேவிட்டால் ஓடும் பார்ப்பதற்கு வெகுவேடிக்கையாயிருக்கும்.

127. செல்லுகள் சிதற ஜாலம்

செல்லுகள் மிகுதியாக உள்ள இடங்களில் நவாச்சாரத்தைக் கப்பிகப்பிகளாகத்துருத்திவிட செல்லுகளெல்லாம் கொஞ்சநாளில் நாசமடையும்.

128 கிணற்றிலிறங்கி சோறாக்கும் ஜாலம்

ஜாலமாடுஞ் சபையில் ஓர்குடுவைக்கொண்டுவரச்சொல்லி அதை அனைவர்களுக்குங்காட்டி அதில் அரிசியைப்போட்டு ஓ சபையோர்களே நான் நெருப்பில்லாமல்படி நீரிலிறங்கி இந்த அரிசியைச் சாதமாகச் சமைத்துக் கொண்டு வருகிறேன் பாருங்களென்று சொல்லிக்குடுவையையும் அரிசியையும் அங்கிருக்கும் ஜனங்களுக்குக் காண்பித்து கிணற்றிலிறங்கி இடுப்பளவு ஜலத்தில் நின்றுக்கொண்டு கொஞ்சம்ஜலத்தை அரிசியில்திட்டமாகவிட்டுக் குடுவையை ஜலத்தின்பேரில்தூக்கிப்பிடித்துக்கொண்டு ஆகாயத்தைப்பார்த்துக்கொண்டு ஏதோ மந்திரஞ்செய்கிறபாவனையாக இருக்கவேண்டும் அதற்குள் குடுவையிலிருக்கும் அரிசியானது சாதமாகிவிடும் மறுபடியும் கிணற்றிலிறங்கிதலைமுழுகிவிட்டு ஈரவஸ்திரத்துடன் மேலேறிவந்துசாதத்தை சபையோர்களுக்குக் காண்பிக்க அவர்கள் ஆச்சரியப்பட்டு உன்னை ரொம்பவும் மெச்சிக்கொண்டு உனக்கு குறளிவசியமென்று கொண்டாடுவார்கள் நீ இவ்வேலையை செய்வதற்கு முன்னம் கொஞ்சம் அரிசியை ஓர்துணியில்மூட்டையாகக்கட்டி சுண்ணாம்புக் காளவாயின் கீழ்வைத்துக் காளவாய்கொளுத்தியவுடன் எடுத்துக்கொள்ளவும் இப்படிமூன்று விசைக்காளவாயில் வைத்தெடுத்த அரிசியைக்கொண்டு சமைத்துக்காட்டவும்.

129. நிலக்கடலை கசக்கும் ஜாலம்

ஓர் அகலதட்டில் ஒருபக்கம் நிலக்கடலை உறித்தபருப்பும் ஒரு பக்கம் வேப்பங்கொட்டையையும் ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டு ஜாலமாடுஞ் சபையில் மேற்படி தட்டைக்கையிலெடுத்துக்கொண்டு ஒருவர்க்கு நிலக்கடலைப்பருப்பையும் ஒருவர்க்கு வேப்பங் கொட்டையையும் கொடுக்கச்சாப்பிட்டவர்கள் ஒருவர்கொட்டை இனிக்குதென்றும் ஒருவர்கொட்டை கசக்குதென்றும் சொல்லுவார்கள் இதுமகாவேடிக்கையா யிருக்கும்.

130. சர்ப்ப ஜாலம்

உம்-எ-ஒ என்று ஆயிரமுருகொடுத்து சித்தியாக்கி வைத்துக்கொண்ட பிறகு ஓடுகின்ற அரவத்தைப்பார்த்து எழுவிசை மந்திரத்தை மனதில் தியானிக்க ஓடாமல் மயங்கி நிற்கும்.

131. வேறு

அம்-எ-ஓ என்று ஆயிரம் உருகொடுத்து சித்தியாக்கிவைத்துக்கொண்டு ஓடுகின்ற அரவத்தைப்பார்த்து மந்திரத்தை மனதில்நினைக்க எப்பேர்ப்பட்டதானாலும் அடங்கி நிற்கும்.

132. வேறு.

நம் கிலி என்று லக்ஷத்தியெட்டுரு கொடுத்துச் சித்தியாக்கி வைத்துக் கொண்டு பிறகு அரவத்தைப் பார்த்து மந்திரத்தை மனதில் நினைக்க சர்ப்பமானது படமெடுத்தாடும்.

133. வேறு.

வம்-யா-யா என்ற அக்ஷரத்தை ஆயிரத்தெட்டோதி சித்தியாக்கி வைத்துக்கொண்டு சபையில் ஜாலமாடும்போது மந்திரத்தைப் பதினாறுவிசை மனதிலேயே தியானிக்க சர்ப்பங்களெல்லாம் எங்கிருந்தாலும் ஓடிவந்து எதிரே நிற்கும் அதைப்பார்த்த சபையோர்களெல்லாம் நடு நடுங்கிப்போவார்கள்.

134. வேறு.

சீ-யநம் என்று செபித்துச் சித்தியாக்கிவைத்துக்கொள்ளும் பக்ஷத்தில் சர்ப்பங்களெல்லாம் நம்மையே சீறி சீறி கடிக்கவரும்.

135. வேறு.

நவ் என்று ஆயிரத்தெட்டுரு செபித்துச் சித்தியாக்கி வைத்துக் கொண்டிருந்து அதுகள் சீறிகடிக்க வரும்போது இம்மந்திரத்தை முப்பத்திரண்டு விசை மனதில் தியானிக்கச் சர்ப்பங்களெல்லாம் பயந்து அடங்கி ஒடுங்கி ஓடிப்போய்விடும்.

136. வேறு.

கிலீம் என்று லக்ஷத்தியெட்டுருகொடுத்து சித்தியாக்கி வைத்துக்கொண்டிருந்து சர்ப்பத்தைப்பார்த்தபோது மேற்படி மந்திரத்தை மனதில் நினைக்க சர்ப்பங்களெல்லாம் வாயில் இரத்தங் கக்கிக்கொண்டிருக்கும்.

137. வேறு.

வா-வா-என்னும் அக்ஷரத்தை ஆயிரத்தோடு சித்தியாக்கி வைத்துக் கொண்டிருந்து சர்ப்பத்தைக் கண்டதும் முன்மந்திரத்தை மனதில் நினைக்கச் சர்ப்பங்களெல்லாம் நடுநடுங்கி பின்னுக்கு நகர்ந்துக்கொண்டேபோகும்.

138. வேறு.

நங்-சிங் கென்னும் பீஜாக்ஷரத்தை ஆயிரத்தோடு சித்தியாக்கிவைத்துக் கொண்டிருந்து யாதாயினுமொரு சந்தர்ப்பத்தில் சர்ப்பத்தைக் கண்டதும் முன்மந்திரத்தை மனதில் நினைக்கச் சர்ப்பங்களெல்லாம் தங்கள் தங்களுடைய விஷங்களையெல்லாம் பூமியில் கக்கிவிட்டு ஓடிவிடும்.

139. வேறு.

அங்-உங் என்னும் பீஜாக்ஷரத்தை லக்ஷமோதி கைவல்ய மாக்கிவைத்துக்கொண்டிருந்து பாம்புகடித்துவந்த பேர்களைப்பார்த்து மேற்படி மந்திரத்தை மனதினால் நினைத்துக்கடிவாயின்பேரில் வாயினாலூத ஏறினவிஷங்களெல்லாம் இறங்கும் இதுவுமன்றி இதுவரையிற் சொல்லிவந்த மந்திரங்களையெல்லாம் முன்னதாகவே செபித்துக் கைவல்யமாக்கி வைத்துக்கொண்டிருந்தால் தான் சமயத்திற்கு உதவும் திடீரென்று நானும்மந்திரக்காரன் தான் இதோ.மந்திரம் போடுகிறேன் பாருங்களென்றுசொல்லி எட்டிலிருக்கும் மந்திரத்தை வாயினால் சொன்னால் யாதொரு பலனுங்கிடையாது ஆகையால் தகுந்த ஆசானைக்கொண்டு ஒவ்வொன்றையும் சரிவரக் கற்றுக்கொண்டால் தான் சமயத்திற்கு நமக்குதவும் இதற்காக வன்றோ "தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வாரா" என்று பெரியோர்களெல்லாம் சொல்லியிருக்கின்றனர் இதை விட்டு விட்டு புத்தகத்திலிருக்கின்றபடி செய்து பார்த்தேன் அதுபலிக்கவில்லையென்று குறை கூறுகின்ற புத்திமான்களும் சிலரிருக்கின்றனர் சர்க்கரை என்று எட்டில் எழுதி அதை நாக்கில் நக்கிப் பார்த்து தித்திக்கவில்லையென்று மனஞ்சலித்துக்கொண்ட பேர் வழிகளில் இவரும் ஒருவரன்றோ !

140. சாப்பிடாமலிருக்கும் ஜாலம்

நீர்முள்ளி விரையை அரைத்துப்பாலில் கலக்கிச்சாப்பிட்டு விட்டால் சுமார் பதினைந்து நாள் அதாவது அரைமண்டலம் வரைக்கும் பசியில்லாமலிருக்கும் அதுசமயம் புத்திசாலியாகில் காலத்தை வீண்போக்காது யோக சாதனையி லீடுபட்டிருப்பது நலம் பிறகு விரோசனமாக மருந்து சாப்பிட்டால் தான் திரேகம் சௌகரியமாகும்.

141. நெருப்புண்டாகும் ஜாலம்

கடுகளவு தீமுறுகல் பாஷாணத்தை உதட்டினிடத்தில் வைத்துக்கொண்டு கொஞ்சம் இலவம் பஞ்சைக்கையில் வைத்துக்கொண்டு சபையோர்

களைப்பார்த்து நான் இப்பஞ்சை நெருப்பில்லாமல் கொளுத்துகிறேன் பாருங்களென்று சொல்லி காற்றுவாட்டம் பார்த்து நின்றுக்கொண்டு வாயிலிருக்கும் பாஷாணமானது பஞ்சின்பேரில்விழும்படியாக ஊத குபீரென்று தீப்பற்றியெரியும் பார்த்தவர்களெல்லாம் இது குட்டிச்சாத்தான் வேலையென்று சொல்லுவார்கள்.

142. பாலைசர்க்கரையாக்கும் ஜாலம்

துத்திவேரைக் கத்தையாகக் கட்டிக்கொண்டு பசும்பாலைப்பாத்திரத்தில் விட்டுக்காய்ச்சி காயும்போது வேரைக்கொண்டு துழாவி அப்படியே மூடிவிட்டுபிறகு நாலைந்து நாள் சென்றதும் எடுத்துப்பார்க்க அது சர்க்கரையைப்போல கட்டியிருக்கும்.

143. கதவில் ஊசிநிற்கும் ஜாலம்

ஓர் ஊசியை எடுத்துக்கதவின்பேரில் சற்று தூரத்திலிருந்து எறியஅது தைக்காது கீழே விழுந்து விடும் மறுபடியும் அதையெடுத்து ஒரு முழம் நூலைக்கோர்த்து எறிய கதவில் தைத்துக்கொள்ளும் இதைப்பார்த்தவர்கள் இது என்னமோ சூக்ஷமென்று சொல்லிக்கொள்வார்கள்.

144. குரியிடும் ஜாலம்

காட்டாமணக்கன்பாலில் துருசைக்கலந்து வைத்துக்கொண்டு துணிகளுக்குக் குரிபோடும்பக்ஷத்தில் எவ்விதத்திலுங் கலையாது.

I44. தும்பலும் குசுவும்விடும்படி செய்யும் ஜாலம்

சுண்டக்காயின்வேரைத் தூள்செய்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு அதற்குச்சமன் ஆனைத்திப்பிலியில் பொடியைக்கூட்டித் தயாராக வைத்துக்கொண்டு ஜாலமாடும்போது சபையில் காற்றுவாட்டம்பார்த்துத் தூவ அவ்வாடைபட்டவர்களெல்லாம் தும்பலுங்குசுவும் விடுவார்கள் பார்ப்பவர்களுக்கு இது மஹாவேடிக்கையாயிருக்கும்.

146. குமிளில்லாத பாதக்குறட்டில் நடக்கும்ஜாலம்

ஓர் குமிளில்லாத பாதக்குரட்டைக்கொண்டுவந்து சபையோர்களுக்குக் காட்டி நான் இதன்பேரில் ஏறிநடக்கின்றேன்பாருங்களென்றுசொல்லி சபையில்வைத்துவிட்டு முன்பாகவே விளாம்பிசினியைத் தயார்செய்து விபூதியில் கலந்து வைத்துக்கொண்டிருந்து அதை விபூதிபோடுகிறபாவனையாக மந்திரஞ்செபித்து பாதக்குரட்டின்பேரில்போட்டு இரண்டுகால்களையும் நன்றாகக்கழுவிவிட்டு கொஞ்சம்யீரமாக இருக்கும்போதே பாதக்குரட்டின்பேரில்வைத்து நன்றாக அரக்க பிசினியின்மகுத்துவத்தினால் பாதக்குறடானது காலிலேயே ஒட்டிக்கொள்ளும் அப்போது நடக்க பார்ப்பவர்களெல்லாம் உன்னை மகாமந்திரவாதியென்று மெச்சிக்கொள்ளுவார்கள்.

147. ஜனங்கூட்டும் ஜாலம்

ஆமையோடுபஸ்பம் மான்கொம்புபஸ்பம் கற்பூரசலாசத்துபஸ்பம் இம்மூன்றையும் ஒன்றாகக்கலந்து வைத்துக்கொண்டு சிறிய வியாதிகளுக்கெல்லாம் அரிசியெடை பசுநெய்யில் கலந்துகொடுக்க சொஸ்தமாகும் ஜனங்களும் உன்னைத் தேடிவருவார்கள்.

148. பசியாதிருக்கும் ஜாலம்.

நாயுருவியை அரைத்துப் பாலில்கலந்து சாப்பிட எத்தனைநாளானபோதிலும் புசியெடுக்காது.

149. சுண்ணாம்பு மெல்லும் ஜாலம்

சங்கம்விரையை மென்று துப்பிவிட்டு எவ்வளவு சுண்ணாம்பையேனும் வாயிலிட்டு மென்றுதின்னலாம் வாய்வேகாது ஒருக்கால் தவறி வாய்வேகும் பக்ஷத்தில் கொஞ்சம் தேங்காயையேனும் மஞ்சளையேனும் மென்றால் சுண்ணாம்பின்வேகந் தணியும்.

150 வேறு வாட்டிலோடு மெல்லுஞ் ஜாலம்.

வேளையின் வடக்கேபோகிறவேரை மென்று வாயிலடக்கிக்கொண்டு எவ்வளவு ஓடுகளையேனும் தாராளமாக முருக்கைப்போல் மென்று துப்பிவிடலாம் வாயறுக்காது கூசாது எதாகிலும் பிசிர் உள்ளேபோயிருக்கு மென்று சந்தேகமிருக்கும் பக்ஷத்தில் கொஞ்சம் கேழ்வரகுகளியை சுட சுட விழுங்கவும்.

151. கோழிமுட்டை உருளும் ஜாலம்

வெண்குன்றி வடவேர் வெள்ளைமாடப்புறாயெச்சம் பொன்னரிதாரம் பாவட்டையிலை இவைகள் நான்கையும் சமயெடையாக யெடுத்தரைத்து முட்டையின்பேரில் தடவிவிட்டுவிட்டால் அது ஒருயிடத்திலும் நிற்காமல் புரண்டுகொண்டேயிருக்கும்.

152. தண்ணீர் விழாத ஜாலம்

கோரைக்கிழங்கு அரசன்வடவேர் நாறுகரந்தைவேர் மயிரோசனை இந் நான்கையுஞ் சமயெடையாக அரைத்து புதுதோண்டிக்குள் பூசிக்காயவைத்து காய்ந்தபிறகு அதில் ஜலத்தைமொண்டுவந்துக் கீழேகவிழ்த்தால் துளி சலங்கூட கீழேவிழாது.

153. வீரியவிர்த்தி ஜாலம்.

நிலப்பனங்கிழங்கு தண்ணீர்விட்டான்கிழங்கு ஆனைநெருஞ்சி வேர் இம்மூன்றையும் சமயெடையாக யெடுத்து அரைத்துப்பாலில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி அந்தி சந்தி குடித்துவர வீரியவிர்த்தியுண்டாகும்.

154. சோதிதீப ஜாலம்

கிரோசன் எண்ணெயில் சாப்பிடும் உப்பைப் பொடித்துப் போட்டு தீப மேற்றிப்பார்க்க வெகு பிரகாசமாக எரியும்.

155. வேறு.

பவர்லைட் லஸ்தர் குளோப் முதலிய விளக்குகளில் கிரோசின் எண்ணெயைவிட்டு கற்பூரத்தைப் பொடித்துக் கலந்து விளக்கேற்ற வெகு பிரகாசமாக எரியும்.

156. ரோஜா அத்தர் செய்யும் ஜாலம்.

ஓர் அகலபாத்திரத்தில் ஜலம்விட்டு ரோஜா புஷ்பத்தின் இதழ்களைப் பிரித்துப்போட்டு பனியில் வைத்துக்கொண்டுவர புஷ்பத்தின் சத்துகளெல்லாம் ஜலத்தில் இறங்கி மிதக்கும் அதைத்துணியிலேனும் மெல்லிய பஞ்சியிலேனுந்தவட்டி புட்டியில் பிழிந்துக்கொள்ளவும்.

157. விரலைக்கொளுத்திக்காட்டும் ஜாலம்

கலப்பில்லாத சாராயத்தில் விரலைநனைத்துக் கொளுத்திக்காண்பிக்க விரல் தீபற்றியெரியுமேயொழிய விரலுக்குச் சூடேறாது பார்ப்பவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

158. ஆட்டுத்தலை கத்தும் ஜாலம்

ஓர் ஆட்டுத்தலையைக்கொண்டுவந்து அதின்தலையிலுள்ள மண்டையோட்டைப்பக்குவமாகத்திறந்து அதிலுள்ளிருக்கும் மூளையையெடுத்துவிட்டு அதற்குப்பதில் ஓர் சொரிபாந்தவளையை அதில்விட்டு எப்போதும்போல மண்டையைப்பிசின்தடவி வெட்டினதுதெரியாமல் மூடிவிட்டு அதைச் சபையில்கொண்டுவந்து அனைவர்களுக்குங் காட்டி சபையோர்களே இந்த ஆட்டுத்தலையானது கத்தும்விநோதத்தைப் பாருங்களென்றுசொல்லி அத்தலைக்கு மஞ்சள்பூசி குங்குமமிட்டு புஷ்பஞ்சூடிச் சபையில்வைத்து அதனெதிரில் குந்திக்கொண்டு மந்திரஞ்செபிக்கும் பாவனையாகச்சற்றுநேரம் நடித்துக்கொண்டிருந்து பிறகு சாம்பிராணியை அத்தலைக்கு நேரே காண்பிக்க புகையானது மூக்கின்வழியாய் மண்டைக்கேறி தவளையின் மூக்கிக்குள் நுழைய தவளையானது கத்தும் சபையோர்களெல்லாம் பிரமித்து இது ஏதோ பிரளயகாலம் இல்லாவிட்டால் உயிரிழந்த ஆட்டுத்தலையானது கத்துமாவென்றுசொல்லி பயப்படுவார்கள். சிலர் உன் மந்திரத்திற்கு மெச்சி நீ காட்டேரியை அத்தலைக்கு ஏவல் செய்ததினால் அது கத்துகிறதென்று சொல்லுவார்கள்.

159. நரைமயிர்கருக்கும் ஜாலம்

ஆதிவாரங்காலையில் தவஸ்முருங்கை என்னுஞ் செடிக்குச்சாபநிவர்த்தி செய்து காப்புகட்டி பொங்கலிட்டு வேரறுமல் கொண்டுவந்து குளிசமாடி கட்டிக்கொள்ள நரைமாறும்.

160. சகலமூலிகைக்கும் சாபங்வர்த்தி செய்யும் ஜாலம்

எவ்விதமான வேலைகளுக்கும் மூலிகையைப் பிடுங்கவேண்டுமாகில் முந்தி மூலிகையிருக்குமிடத்தைச் சுத்தஞ்செய்து அதன்பிறகு காப்புகட்டி பொங்கலிட்டு சாபநிவர்த்திசெய்துதான் பிடுங்கவேண்டும் அப்படி சாபநிவர்த்தி செய்வதெப்படியெனில் ஓம் மூலி சர்வமூலி சர்வசாபம் நசி மசி என்று பதினாறு உரு செபித்து எடுத்துக்கொண்டு எவ்விதவேலைகளுக்கும் பிரயோகிக்க கைவல்யமாகும்.

161. மூலிகைகளுக்கு உயிர்கோடுக்கும் ஜாலம்

மூலிகைகளுக்கு உயிர்கொடுக்க வேண்டுமாகில் தீபதூபமிட்டு தேங்காயையிடைத்து ஓம்மூலி சர்வமூலி உன்னுடையஉயிர் உன்னுடலில்நிற்கச் சுவாஹாவென்று முப்பத்திரண்டுவிசை செபித்துப் பிடுங்கிக்கொள்ளவும்.

162. கோழிப்பந்தய ஜாலம்.

நத்தைச்சூரி செடியைக் கண்டுபிடித்து சாபநிவர்த்திசெய்து பொங்கல் பலி தூபதீபமுதலியவைகளைத் தவறாதுசெய்து வேரைப்பிடுங்கிவந்து ஜலத்தில்போட்டுவைத்திருந்து ஒருமாதஞ்சென்றெடுத்து அரைத்து மாத்திரையாகத்திரட்டி சாவலுக்குக்கொடுத்து சண்டைவிட்டால் தோற்காது எதிரியினுடைய சாவலின் கத்திபட்டாலும் அறுபடாது.

163. ஆடு பின்வரும் ஜாலம்

கோவைச்செடியின் வடக்குவேரும் அதனுடைய இலையையுங்கொண்டுவந்து சிறுநீர்விட்டரைத்து இரண்டு கைகளிலுந் தடவிக்கொண்டு ஆடிருக்கும் இடத்திற்குப்போய் கைகளைத்தட்டி வாவென்றழைத்தால் அது பின்னாலேயே வரும்.

164. ஆடுகள் எழுந்திராத ஜாலம்.

தேவாங்கின்தோலையுரித்து ஆடுகள் படுத்திருக்குமிடத்தில் புதைத்து விட்டால் அங்கு எவ்வளவு ஆடுகள் படுத்திருக்கொண்டிருக்கின்றதோ அவ்வளவு ஆடுகளும் அந்தஇடத்தைவிட்டு அப்புறம்இப்புறம் அசையாது இறையும் எடுக்காது ஆனால் புதைக்கும்போது தன்னுடைய பக்ஷி அரசாகவும் கலை சூரியகலையாகவுமிருக்கவேண்டும்.

165. நெல்லுபோறியும் ஜாலம்

சுண்ணும்புக்காளவாயின்கீழ் கொஞ்சம் பள்ளந்தோண்டி தேவையான வரைக்கும் நெல்லை அப் பள்ளத்தில் போட்டு மேலே மூடிவிட்டு வந்துவிடவும் பிறகு காளவாய் கொளுத்தியபிறகு புதைத்தநெல்லை எடுத்துக்கொண்டு வந்து சபையில் ஓர்முறத்தில் நெல்லைப்போட்டு கொஞ்சம் ஜலந்தெளித்துப் பிறட்ட பள பளவென்று பொரியும் பார்ப்பவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டு இதுவும் குட்டிச்சாத்தான் வேலையென்று சொல்லுவார்கள்.

166. ஜலத்தைக்கோட்டிக்காட்டும் ஜாலம்.

சிறியவாயுள்ள ஓர் செம்பில் ஜலத்தை நிரப்பி அதின்மேல் துணியைப் போட்டுமூடி சபைக்குக்கொண்டுவந்து எல்லோருக்குங்காட்டித் தந்திரமாக கவிழ்க்க ஜலம் கொஞ்சமேனும் கீழ் விழாது அதை ரொம்பவும் சாமார்த்தியமாய் செய்துக்காட்டவேண்டும்.

167. பன்னீர்தெளிக்கும் வித்தை.

ஓர் பாத்திரத்தில் ஜலத்தைநிரப்பி சபையிலுள்ளவர்களுக்குக் காண்பித்துக் கையில்வைத்துக்கொண்டு வானத்தைப்பார்த்து ஓ குட்டிச்சாத்தான் இந்தஜலத்தையெல்லாம் பன்னீராகச்செய்யவேண்டுமென்றுசொல்லி ஏதோ மந்திரஞ்செய்கிற பாவனையாக கண்ணைமூடிக்கொண்டு தந்திரமாக நகக்கணுவிலிருக்கும் ரோஜாஅத்தரைத் தண்ணீரில் விட்டுக் கலக்கி சபையோர்களின்பேரில் தெளிக்க வாசனையானது கமகமவென்று பரிமளிக்கும் இந்தவேலை செய்கிறதற்கு முன்ஜாக்ரதையாக கொஞ்சம் ரோஜா அத்தரை நகக்கணுவில் வைத்திருந்து சமயம்வரும்போது ஜலத்தில் விட்டுவிடவும்.

168. உலக்கைநிற்கும் ஜாலம்

ஓர் அகல போகணியில் ஜலத்தைவிட்டு கீழேவைத்து பூண்கட்டிய உலக்கையை அதன்மத்தில் சரியாக வைத்து அசையாது விட்டுவிட அது அப்படியே நிற்கும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

169. சாருயம் குடிக்கும் ஜாலம்

கொஞ்சம் நெல்லிக்காய் தொக்கை வாயிலிட்டு மென்று ரசத்தை விழுங்கிவிட்டு மற்றபாகத்தை தாடையிலடக்கிக்கொண்டு எவ்வளவு சாராயத்தையேனும் ஜலத்தைப்போல் தாராளமாகக் குடிக்கலாம் அல்லது வாழைப்பட்டையைப் பிழிந்தரசத்தை முன்னதாகக் கொஞ்சம் குடித்துவிட்டு அதின்பேரில் எவ்வளவு சாராயத்தையேனும் குடிக்கலாம் போதையிருது.

170. கருங்கல்லைஉடைக்கும் ஜாலம்

வேலன் முருக்கன் ஆவாரை இம்மூன்று விரகுகளையும் கருங்கல்லின் பேரில் போட்டு நெருப்பிட்டுக்கொளுத்தி அது எரிந்து அவியுஞ்சமயத்தில்

சுண்ணும்புகரைத்த தெளிவு ஜலத்தைவிட்டு அவித்து ஆறினபின்பு லேசா கத்தட்ட உடைந்துவிடும்.

171. வாழைப்பழம் பறிமாறும் ஜாலம்.

6 அல்லது 7. அங்குலமுள்ள இரும்புக்கம்பியை டகரம்போல் வளை த்து வாழைப்பழத்தின் காம்புபுரஞ்சொருகி திருகிக்கொண்டே முனை வரை செலுத்தி மறுபடியும் அவ்வழியே வெளியில்வாங்கி வைத்துக்கொண் டால் அது பார்ப்பவர்களுக்கு முழுபழமாகவே யிருக்கும் அதைச்சபையி லுள்ளவர்களின்கையில்கொடுத்து பில்லை பில்லையாக அறுக்காமல் பரிமா றச்சொல்ல அவர்கள் பரிமாறமுடியாமல் விழிப்பார்கள் அதை நீ வாங்கிக் கொண்டு அவர்கள் பார்க்கும்போதே தோலையுரித்துப் பில்லைபில்லையாக எடுத்துக்கொடுக்கப் பார்த்தவர்களெல்லாம்அதிசயப்பட்டு இது குட்டிச்சாத் தான் வசியத்தினால் நீ செய்தாயென்று சொல்லிக்கொள்வார்கள்.

172. இலுப்பை புண்ணாக்கு இனிக்கும் வித்தை

வேண்டியமட்டும் இலுப்பைபுண்ணாக்கை யிடித்து அதற்குச்சமன் நரி விளாஞ்செடியின் தழையை நையயிடித்து பிசைந்துப் புட்டவித்து வைத் துக்கொண்டு அதை எந்த பதார்த்தத்தில் சேர்த்தாலும் இனிப்பாயிருக்கும் கசக்காது.

173. காகம் திகைக்கும் ஜாலம்

கல்தாரத்தைப் பொடித்து நெய்விட்டரைத்து சாதத்தில் கலந்து காக த்திற்கு வைக்க அதுதின்றவுடன் அவ்விடத்திலேயே மயக்கமாகும் உடனே கொஞ்சம் ஜலத்தை அதன்பேரில் தெளிக்க எழுந்தோடும்.

174. வேறு நரசிங்க வசிய ஜாலம்

தர்ப்பணம் யாகம் அன்னதானம் கோதானம் பூதானம் அதிதிபூசை தேவதாபூசை இதுகளைச்செய்தபிறகு ஓம் சிங்கமுகவா ஓம் ஓம் பிசாசு பேய் கள் பொடிபட்டோட நரசிங்கராஜா ஆணை ஸ்ரீம் கிலீம் சுவஹாவென்றுலக்ஷ த்தி யெட்டுரு செபிக்கச்சித்தியாகி நினைத்த காரியங்களெல்லாங் கைகூடி சகலமான பேர்களும் வசியமாகி வணங்குவார்கள்.

175. இதுவுமது

மேற்படி நரசிங்க மந்திரத்தை தாளிப்பனையோலையில் எழுதி ஆயிரத் தெட்டுருவு கொடுத்து ஐங்காயம்பூசி துஷ்டமிருகங்கள் வாசஞ் செய்யப் பட்ட காட்டில் வைத்தால் அவைகளெல்லாம் அவ்விடத்தில்நில்லாமல் ஓடிப் போய் விடும்.

176. இதுவுமது

மேற்படி மந்திரத்தைச் செபித்து விபூதியை எடுத்துபோகும்பக்ஷத்தில் பேய் பிசாசுகளெல்லாங் கதரியோடும் இதல்லாமல் நரசிங்க மந்திரத்தை யா ரொருவர் பாராயணம் பண்ணுகின்றார்களோ அவர்களைக்கண்டால் துஷ்ட தேவதைகளெல்லாங் கதரியோடும்.

177. கருந்தேள் உற்பத்தியாகும் ஜாலம்.

ஒருபாண்டத்தில் எருமைச் சாணத்தைக் குழம்பாக கரைத்துபோட்டு அதின்மேல் ஒருதட்டைமூடி வாயைச்சீலை மண்செய்து நாற்பதுநாள்வரைக் கும் சமாதிவைத்து எடுத்துப்பார்த்தால் அப்பாண்டத்தின் நிறையகருந்தேள் கள் உற்பத்தியாகியிருக்கும் கொட்டினால் விஷமதிகம்.

178. செந்தேள் உற்பத்தியாகும் ஜாலம்

பசுஞ்சாணத்தைக் குழம்பாக கரைத்துப் பாண்டத்தில் விட்டு வாயை மூடி சீலை மண்செய்து முன்போல நாற்பதுநாள் சென்றெடுத்துப் பார்க்க அதிலும் செந்தேள்கள் உற்பத்தியாகியிருக்கும் அல்லது குப்பை கூளங்களை யெல்லாம் ஒன்றாகச்சேர்த்து ஓர்மூலையில் தள்ளிவைத்திருந்து நாற்பது நாள் சென்ற பிறகு கிளரிப்பார்க்க அதிலும் தேள்கள் ஜனித்திருக்கும் இதுகள் கொட்டினால் விஷமதிகம்.

179. கரும்பாம்பு உற்பத்தியாகும் ஜாலம்

பசு எருமை இவ்விரண்டின் சாணங்களையும் குழம்பாகக்கரைத்து ஓர் பாண்டத்தில்விட்டு கொஞ்சம் கந்தத்துணிகளை விரலகலத்திற்கு துண்டு துண்டாய் கிழித்து அதில்போட்டு வாயைமூடி பூமியில் புதைத்து நாற்பது நாள் சென்றெடுத்துப்பார்க்க ,அதில்மிகுதியாகிய கரும்பாம்புகள் காணப்படும் இதுகள் கடித்தால் விஷந்திரும்பாது.

180. சீலைத்திரையும் ஜாலம்

புடலம்விரையை மங்களவாரதினம் பூமியில் நட்டுப்பயிராக்கி ஒருமுழக் கொடி வளர்ந்தபிறகு மங்களவாரத்தில் கன்னிநூல் காப்புகட்டி மறுமங்கள வாரம் வரை அந்திசந்தி பூசைசெய்து வேரை இரும்பாலாகிய ஆயுதங்கள் படாது கொண்டுவந்துக் குளிசமாடி தன்கையிலிட்டுத்திருப்ப ஆடை அவிழ்ந்து விடும்.

181. ஜலத்தில் விளக்கேரியும ஜாலம்

அத்திப்பாலை வெண்மையாகிய ஓர் சீலைத்துண்டில் தவட்டிநிழலிலுலர்த்தி திரியாக்கி அதை ஓர் அகலிலிட்டுத் தண்ணீரையூற்றி விளக்கேற்றிகாற்றில்லாவிடத்தில்வைக்க அது எண்ணெய்யூற்றின விளக்கைப்போல நன்றாக யெரியும்.

182. பீநாற்றமுண்டாகும் ஜாலம்

எருமுட்டைப்பீ நாறி என்னுஞ்செடியின் விதையையுலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்து பிறகு மேற்படி செடியின் வேரை அரைத்து அதில் சேர்த்துப் பிசைந்து துவரைப்பிரமாணம் மாத்திரைகளாகத்திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு ஜாலமாகும்போது சபையில் ஒரு மாத்திரை எடுத்து ஒருவர்பேரில் தேய்க்க பீநாற்ற முண்டாகும்.

183. சோளம் பொறிக்கும் வித்தை.

தேவையான முழுசோளத்தையெடுத்து சுண்ணம்புக்காளவாயின் அடியில் பள்ளந்தோண்டி புதைத்து விடவும் காளவாய் நெருப்புவைத்து எரித்த பின்பு சென்று நாம்புதைத்த சோளத்தை எடுத்துவந்து வைத்துக்கொண்டு தேவையானபோது சபையில் கொஞ்சம் சோளத்தை ஓர் முறத்தில்போட்டு சபையோர்களுக்குக் காண்பித்து அதின்பேரில் கொஞ்சம் ஜலந்தெளித்துத் துழாவ அது பள பள வென்றுபொறியும் பார்த்தவர்களெல்லாம் இது குட்டிச்சாத்தான் வேலையென்று சொல்லுவார்கள்.

184. பைத்தியம பிடிக்கும் ஜாலம்

நரிவாலில் சுடலைக்கரு சேர்த்து அதில் அரிசியைக் கலந்து நிழலிலுலர்த்தி அன்னஞ்சமைத்துப் பகைவர்களுக்கு இடம்பட்சத்தில் அதைச் சாப்பிட்டதும் அவர்களுக்குப் பைத்தியம்பிடித்து அலைவார்கள். அதற்கு சார்தி

செய்வது எப்படியெனில் தக்காளிச்சாற்றில் மிளகை யரைத்துக் கலக்கி மூன்றுநாள் ஆறுவேளைகொடுத்து உப்பு புளிநீக்கி மூன்றுநாள் மறுபத்தியம் வைத்து ஏழாம்நாள் எண்ணெய்காய்ச்சி ஸ்நானஞ் செய்துவைக்கத்தீரும்.

185. பேயாட்டும் ஜாலம்

பேய் பிடித்தவர்களை ஸ்நானஞ்செய்துவரச்சொல்லி ஈரவஸ்திரத்துடனே குந்தவைத்து அவர்கள் எதிரில் ஓர்தட்டில் விபூதியைப்போட்டு அவ்விபூதியைப்பிசைந்துக்கொண்டே யங் சிங் வய நமவென்று செபித்துக்கொண்டிருக்க எவ்வளவு கொரோமான பேயாயிருந்தாலும் விலகிவிடும் இதன்றி வங் மங் சிங் சிவயநமசி யென்று செபித்தாலும் முன்போல முடியைக் கொடுத்துவிட்டு ஓடிவிடும்.

186. உடுக்கை உடையும் ஜாலம்

ஓம் ஐயுங் கிலியும் சவ்வும் உடுக்கையைக்கட்டு ஐயுங் கிலியும் சுவஹாவென்று உடுக்கை யடிப்பவனெதிரில் குந்திக்கொண்டு செபித்துக்கொண்டிருக்க உடுக்கையானது பளீரென்று உடைந்து விடும்.

187. மலசலமடைக்கும் ஜாலம்

நாபியைச் சுட்ட கோலில் மூளையைச்செதுக்கி அதற்கு ஐங்கோலமும் சுடலைத்தைலமுங் கலந்துபூசி வராகிமந்திரத்தைச்செபித்து எதிரியின் மலத்தில்போட அவனுக்கு மலசலங்களடைத்துவிடும்.

188. விளைவுகள் நஷ்டமாகும் ஜாலம்

ஆதிவாரமும் அஸ்தநக்ஷத்திரமும் வருகிறதினத்தில் சித்திரமூலச்செடிக்குக்காப்பு கட்டி பொங்கல் பலிமுதலியவைகளைக்கொடுத்து தா யென்னும் அக்ஷரத்தை லக்ஷத்தி யெட்டுருசெபித்து வேரை அருமலும் இரும்பாலாகிய ஆயுதங்கள் படாமலும் பிடுங்கி ஓர் குடுவையில்போட்டு அதனுடன் சுடலைக்கருசேர்த்து மூடிவயல்தோட்ட முதலிய விளைவுகளுள்ள இடத்தில்புதைத்து வைத்துவிட்டால் அவ்விடங்களெல்லாம் பலிதமில்லாது நஷ்டமடையும் அதன்பிறகு அதை எடுத்துவிட்டு அவ்விடத்தைச் சுற்றிலும் பசுங்கோமயத்தை மூன்று நாள்விடாது தெளிக்க எப்போதும்போல் பலனைத்தரும்.

189. பிரிவுசெய்யும் ஜாலம்

காடாற்று முன்னெடுத்த மயானச்சாம்பல் குடிபோன வீட்டின் மண் ஆதிவாரமிரவில் கழுதைகள்பிரண்டமண், தச்சன் உளிச்செதில்முச்சந்தி கூடுமிடத்தின் மண், எதிரிகளின் காலடிமண் குடியோட்டிப்பூண்டு இவையெல்லாம் ஒன்றாய்க்கலந்து ஓம் ஸ்ரீம் பிரிய நசி நசியென்று இரண்டு பேருடைய பெயரையும் அம்மண்ணில்யெழுதி மந்திரத்தைச் செபித்துக்கலைத்துவிட்டு மறுபடியும் இருவருடைய பெயரையும் ஓர் ஓட்டில் தலைமாறியெழுதி அதற்கு ஐங்கோலம்பூசி சீலையில்வைத்துக்கட்டி முன்மந்திரத்தை ஆயிரத்தெட்டுருவுசெபித்து ஒருவர்க்குந்தெரியாமல் எதிரியின் வீட்டிறப்பில் சொருக இருவர்களும் பிரிந்து போவார்கள்.

190. வசிய மருந்துகள் முறியும் ஜாலம்

உயிர்போன ஆட்டின் உணியும் விடத்தேர்பட்டையும் சமயெடையாகயெடுத்து ஜலம் விட்டரைத்து துவரைப்பிரமாணங்குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது அறுசுவையில்கொடுக்க எப்பேர்ப்பட்ட மருந்துகளானாலும் அதுகளுடைய வேகம் தணியும்.

191. நீலகண்ட ஜாலம்

ஓம் நீலகண்டமித்ரா மங் சிங் சர்வமனோகண்டா உம் படுசுவஹாவென்று லக்ஷத்தியெட்டுருசெபித்து தர்ப்பணம் தானம் தர்மம் இவைகளைத் தாராளமாகச்செய்து 100-பிராமணர்களுக்குத் திருப்தியாகும்படியாகச் சமாராதனைசெய்து சந்தர்ப்பணாடத்திவைத்தால்மேற்படிநீலகண்டமந்திரமானது சித்தியாகி அதனால் நமக்கு வேண்டிய வேலைகள் நடப்பதுடன் ஸ்தம்பன வேலைகளையும் வெகு சுலபமாகச்செய்யலாம் இதை என் குருநாதருடைய அனுக்கிரகத்தினால் யானாகிய தேவேந்திரநாதானவன் இமோர்க்கிரிச்சாரலில் செய்து அனுபவசித்தி யடைந்தேன்.

192. வேறு

மேற்கண்ட நீலகண்ட மந்திரத்தை செபிக்கும் விதம் எப்படியெனில் உன்னுடைய மனதிலேயே எண்கோணம்போட்டு அதில் அம்-மா-ரோ-என்னும் அக்ஷரத்தை நாட்டி சுவாமியைப் பொன்னிறமாக எண்ணித்துதித்தால் இஷ்டகாமியார்த்தங்க ளெல்லாம் கைகூடும்.

193. வேறு

மேற்படிமந்திரத்தை முன்சொல்லிய பிரகாரஞ்செபித்து தங்கத்தின் நிறத்தைப்போல சுவாமியை எண்ணித்துதிக்கும் பக்ஷத்தில் உன்னைக்கண்ட பேர்களெல்லாம் பணிந்து வணங்குவார்கள்.

194. வேறு

ஓர்தட்டில் விபூதியைப்போட்டு அதில்வட்டமாகச்சக்கரங்கீறி அம்-மா-ரோ-என்றடைத்து எதிரில் வைத்துக்கொண்டு அம்மந்திரத்தையே ஆயிரத்தெட்டுஞ்செபித்து அவ்விபூதியையாருக்குக்கொடுக்கின்றோமோ அவர்களெல்லாம் உன்பின் துடர்ந்து வருவார்கள்.

195. வேறு.

விபூதியைத் தட்டில்போட்டு அதில்முக்கோணங்கீறி அதன்நடுவில் அம்மாரோ என்றடைத்து சுவாமியை சிகப்புநிறமாக மனதிலெண்ணி கிலியும் ரோம் என்று ஆயிரத்தெட்டுருவு செபிக்கும் பக்ஷத்தில் சகலமானபேர்களும் வசியமாகி உன்னிஷ்டப்படி நடப்பார்கள்.

196. வேறு

தட்டில் விபூதியைப்போட்டு அதின்பேரில் பிறையைப்போல சக்கரங்கீறி அம்-மா-ரோ-என்று அதன்மத்தியிலடைத்து சுவாமியைப்பணிங்குநிறத்தைப்போல் மனதிலெண்ணி முன்மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து விபூதியை எடுத்து நெற்றியிலணிந்துக்கொண்டால் சகலபோக பாக்கியங்களும் கைகூடும்.

197. வேறு

ஓர் தட்டில் விபூதியைப்பரப்பி அதில் நாற்கோணங்கீறி அம்-மா-ரோ-என்று அதன்நடுவிலடைத்து எதிரிகளின் பெயரை தென்னமர ஓலையிலெழுதி அதின்பேரில் வைத்து சுவாமியைமேகநிறமாக எண்ணி ஓம் நம ரோம் என்று ஆயிரத்தெட்டுரு செபித்து அவ்வோலையை யெடுத்து எதிரியின் வீட்டிறப்பில் சொருகி வைக்க இருவர்களும் பிரிந்து போவார்கள்.

198. வேறு.

தட்டில்விபூதியைப்போட்டு ஐங்கோணங்கீறி அதில்-யம்-ரோம் என்றெழுதி சுவாமியைப் பொன்னிறமாக மனதில்நினைத்து (அல்லது புகைந்றமாக

னைக்கினும் ஒன்றே) அம்மாரோ என்று ஆயிரத்தெட்டுருவுகொடுத்துவிபூதியை யெடுத்துப்போடும் பக்ஷத்தில் சகலவியாதியுந்தீரும் சகலமானபேய்களும் ஓடிப்போய்விடும்.

199. வேறு.

தட்டில் விபூதியைப் பரப்பி முக்கோணசக்கரங்கீறி ரோம் என்ற அக்ஷரத்தை அதில் வரைந்து விரோதியின் பெயரை தலைமாற்றி அச்சக்கரத்திலேயே பதிந்து சுவாமியைப்பிரளய காலருத்திரமூர்த்தியைப்போல் மனதில் தியானஞ்செய்து ஓர் நறுக்கில் எதிரியின் பெயரையெழுதி அச்சக்கரத்தின் பேரில்வைத்து அம்மாரோ என்ற மந்திரத்தை ஆயிரத்தெட்டுருவுகொடுத்து நறுக்கையெடுத்து அனல்காட்ட எதிரிமாரணமாவான்.

200. வேறு.

விபூதியில் முக்கணைச் சக்கரம்போட்டு அதில் பம் என்ற அக்ஷரத்தை ஸ்தாபித்து சுவாமியைக் கருநிறமாக மனதிலெண்ணி அம்மாரோ என்ற மந்திரத்தை ஆயிரத்தெட்டுரு செபித்து விபூதியையெடுத்து நெற்றியிலணிந்தால் சர்வமும் பேதனமாகும் இதற்குமிஞ்சின மந்திரமில்லை இதை குருமுகாந்தரமாய் சரிவர தெரிந்துகொண்டு செய்தால் ரொம்பவும் சிலாக்யமாகும். இம்மந்திரத்தை யாரொருவர் பழிக்கின்றார்களோ அவர்களெல்லாம் கூன் குருடு செவிடு ஊமை நொண்டி முதலிய அங்கயீனர்களாய் பிறப்பார்களென்று முன்னோர்களெல்லாம் சொல்லியிருக்கின்றனர் அவர்களின் பெண்டுபிள்ளைகள்கூட அவ்விதமேநாசமாவார்கள் இம்மந்திரத்தை செபிக்க ஆரம்பிக்கும்போது நூறு பிராமணர்களுக்கு அன்னதானஞ்செய்து ஆரம்பிக்கும்பக்ஷத்தில் அவர்கள் ஆயிரம்விசைசெய்த பலனைக் கொடுக்கும்.

201. கோழி மாரண ஜாலம்

ஒரு சிட்டிக்கை மூக்குத்தூளை கூழில்வைத்துப் பிரட்டினாலுஞ்சரி அல்லது களியைப்பள்ளஞ்செய்து அதன்நடுவில்வைத்து மூடிப்போட்டாலுஞ்சரி அதைத்தின்றவுடன் கோழியானது மாரணமாகும் உடனே கொஞ்சம் ஜலத்தை அதின்பேரில் தெளிக்க எழுந்து ஓடும்.

202. பாம்புகள் மயங்கும் ஜாலம்

பாம்புகள் தவறி வீட்டிற்குள் விந்துவிடும்பக்ஷத்தில் அதை ஒன்றும் இம்சைசெய்யாமல் கொஞ்சம் உப்பையும் வெள்ளுள்ளியையும் ஒன்றாக நசுக்கி அதின்பேரில் போட அது அப்புறம் இப்புறம் அசையாது தடைப்பட்டுவிடும். அல்லது இது இரண்டும் அகப்படாதபக்ஷத்தில் கருப்புக்கம்பியைப் போட்டாலும் போடலாம்.

203 கடலெண்ணையை நல்லெண்ணையாக்கும் ஜாலம்

ஒருபடி கடலெண்ணெயை ஒருபடி சுத்தஜலத்தில் கலந்துக் கலக்கித் தெளியவைத்து வடித்துக்கொண்டு கொஞ்சம் எள்ளை வறுத்துப் பொடியாக்கி ஓர் வஸ்திரத்தில் முடிந்து முன் எண்ணெயில் ஊறப்போட்டுவைக்க நல்லெண்ணெய் வாசனை வீசும்.

204. புதியனு உற்பத்தியாகும் ஜாலம்

மண்ணைப்பறித்து கல்களில்லாது சித்தஞ்செய்து பாத்திகட்டி வைக்கோலின் கூளத்தைப் பனைவெல்லத்தில் கலந்து ஊறவைத்து அதை மேற்படி பாத்தியில்பரப்பி அதின்பேரில் மேற்படி வெல்லத்தண்ணியைத் தினந்

தினம் தெளித்துவர சிலநாளில் செடியாகி மிளக்கும் இது விரையில்லாமல் தனிபாக உற்பத்தியாகின்றதினுல்தான் இதற்குப் புதியனுயென்று பெயர்

205. தலையில் அடுப்புவைத்து எண்ணெய்காய்ச்சும் ஜாலம்

ஆனைலத்தி சிமட்டி தெள்ளின சாம்பல்பொடி இவைகள் மூன்றையும் ஜலம்விட்டு மைபோலரைத்து அதைப்பாக்குரல்போல் அரையடி உயரமும் நான்கங்குல அகலமுமாக குமிள்வைத்து அடுப்பைப்போல் செய்து நிழலி லுலர்த்தி வைத்துக்கொண்டு ஜாலமாடுஞ்சபையில் ஒருவன் சிரசின்பேரில் மேற்படி அடுப்பைவைத்துக் கட்டையைக் கொளுத்திப்போட்டு அடுப்பின் பேரில் தகரத்தினுல் செய்த கடாய் ஒன்றுவைத்து அதில் கிரோசன் எண் ணெயையூற்றிக் காயவைத்து கொதிஎழும்புஞ்சமயத்தில் கொஞ்சம் ஜலத் தையள்ளி பக்குவமாகத்தெளிக்க அது குபீரென்று பற்றியெறியும் பார்ப்ப வர்களெல்லாம் பயந்து திடுக்கிடுவார்கள் ஆனுல் சபையில் அடுப்பை யார் தலைமீது வைத்துக்காட்டுகிருயோ அவனைச்சுற்றிலும் ஒரு துப்பட்டியால் அடுப்பின் அடிப்பாகத்திலிருந்து காற்றுப்புகாமல் நன்ருக மூடிவிடவேண் டும் இல்லாவிட்டால் நாம் ஜலந்தெளிக்கும்போது எழும்பும் தீயின் சுடா னது ஆள்பேரில் தாவும்

206. மரங்கள் பட்டுப்போகும் ஜாலம்

மரங்கள் பட்டுப்போக வேண்டுமெனில் அதின் ஆணிவேரை ஆக்கரால் துளைசெய்து அத்துளையில் பாதரசத்தைவிட்டு கார்க்கடைத்துவைக்கும் பக்ஷத்தில் சிலநாளைக்குள்ளாக அம்மரம் பட்டுக் காய்ந்துவிடும்.

207. தென்னைமரம் படும் ஜாலம்

தென்னைமரம் பட்டுப்போகவேண்டுமென்ருல் அதனுடைய குருத்தில் ஓர் கடுக்காயைத்துருத்து கொஞ்சம் ஜலம்விட்டுவைக்க சிலநாளைக்குள் பட் டுவிடும்.

208. பனைமரம் படும் ஜாலம்

பனைமரத்தின் குருத்தில் ஒருகடுக்காயும் கொஞ்சம் படிகாரத்தூளும் வைத்து ஜலம்விட்டுவைக்க சிலநாளைக்குள் பட்டுவிடும் ஆனுல் இதற்குமிஞ் சினபாதகம் உலகத்திலில்லை.

209. தீபத்தைப்பார்த்தவுடன் கூத்தாடும் ஜாலம்.

ஆதிவாரத்தில் இரட்டைவால்பல்லியைப்பார்த்ததும் துணிமுதலியவை களை அவிழ்த்துவிட்டு பிறந்தகோலமாக நின்றுக்கொண்டு அதின்வாலைத் துணிக்க அது கீழேவிழுந்து துடிக்கும் அந்தசமயம் நாமும் (ஜிம்) என்ற அக்ஷரத்தைச் சொல்லிக்கொண்டே அதன்கூட நமது இஷ்டம்போல் கூத் தாடி அவ்வாலின் குதிப்படங்கினவுடன் நாமும் நின்று பிறகு துணிமுதலா னதைக்கட்டிக்கொண்டு அவ்வாலை எடுத்து வெள்ளைத்துணியில் வைத்துத் திரிதிரித்து விளக்கில்போட்டுத் தீபமேற்ற அத்தீபத்தைப்பார்த்தவர்களெல் லாம் முந்தி நீ எம்மாதிரி ஆடினுயோ அம்மாதிரியே கூத்தாடுவார்கள்.

210. கத்திரிக்காயில் அம்மிதோங்கும் ஜாலம்

ஒரு அடிநிகளமும் அரைஅங்குல அகலமுமுள்ள இரண்டு பேல்நகடுக ளைச் சம்பாதித்து அதை கத்திகளைப்போல் தயார்செய்து வைத்துக்கொ ண்டு ஐந்தங்குல அகலமுள்ள ஸ்பிரிங்தகட்டைக்கொண்டுவந்து அதன்மத்தி யில் மூன்றங்குல நிகளத்திற்கு காடித்துவாரமெடுத்து அதைக் கத்தரிக்காயி

னுள் பொதித்து முன்தயார் செய்த கத்திகளைத் தலைமாற்றிச்சொருகி ஒரு கத்தியில் உக்கம்போட்டு மேலே உயரத்தில் கட்டிவிட்டு மற்றொருகத்தியில் அம்மிகல்லை உக்கம்போட்டுக் கீழேதொங்கவிட அதுவிழாமல்படி அப்படியே நிற்கும் பார்ப்பவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டு இது குறளியின் வசியத்தினால் ஆகியவேலையென்று மெச்சிக்கொள்ளுவார்கள் ஆனால் இவ்வேலைகளைச் செய்யும்படி நேரிட்டால் சுமார் பத்தடி உயரத்தில் தொங்கவிட வேண்டும் தவிர சிலஊர்களில் உற்சவகாலங்களில் இம்மாதிரிசெய்துக்காட்டுகின்ற பழக்கம் நாளதுவரையிலும் நடைபெறுகின்றன.

211. தாமரைப்பூவில் எந்திரம்தோங்கும ஜாலம்.

தாமரைப்பூவை முன்செய்தபிரகாரம் ஸ்பிரிங்தகட்டில் சொருகி எந்திரத்தைக்கட்டித் தொங்கவிட வெகுஆச்சரியமாயிருக்கும்.

212. சுரைக்காயில் குந்தாணிதோங்கும ஜாலம்.

சுரைக்காயைக்கொண்டுவந்து முன்சொன்னவிதமாகச்செய்து குந்தாணியைக்கட்டித் தொங்கவிட வெகு ஆச்சரியமாயிருக்கும்.

213. பூசினிக்காயில் கருங்கல்தோங்கும ஜாலம்

ஓர் சிறிய பூசினிக்காயைக்கொண்டுவந்து மஞ்சள்குங்குமமிட்டு முன்சொன்னவிதமாகச் செய்துகாட்ட பார்ப்பவர்களெல்லாம் பிர்மிப்பார்கள்.

214. புடலங்காயில் கல்தோங்கும் ஜாலம்.

புடலங்காயை முன்செய்தபிரகாரம் செய்துக் கட்டிவிட்டு கல்லைக் கட்டித்தொங்கவிட எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

215. கத்தரிக்காயில் கல்வந்தோங்கும் ஜாலம்

நிகளமாயுள்ள கத்தரிக்காயை ஸ்பிரிங்தகட்டில் சொருகி முன்போல் கல்வத்தைக்கட்டிக் கத்தியில் தொங்கவிட வேடிக்கையாயிருக்கும்.

216. பீர்க்கங்காயில் அம்மிகுழவி தோங்கும் ஜாலம்

முன்போல் பீர்க்கங்காயைச்சொருகி அதன்கீழ் அம்மிகுழவியைத் தொங்கவிட வெகு அற்புதமாயிருக்கும்.

i27 வாழைக்காயில் தவலைதோங்கும் ஜாலம்

வாழைக்காயைக்கொண்டுவந்து தந்திரமாகத் தகட்டில் சொருகிக் கத்தியை முன்போல் கட்டித்தொங்கவிட்டுத் தவலையைக்கட்டிக் கீழேதொங்கவிட வெகு தமாஷாயிருக்கும்.

218. தோசையில் குண்டுக்கல்தோங்கும் ஜாலம்.

முன்சொருகினபிரகாரம் தோசையைச்சொருகி உயரக்கட்டிவிட்டு ஓர் குண்டுக்கல்லைக்கட்டிக் கீழேதொங்கவிட பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாயிருக்கும்.

219. பணியாரத்தில் பாராங்கல்தோங்கும் ஜாலம்.

பணியாரத்தை முன்செய்தமாதிரிசெய்து அதன்கீழ் பாராங்கல்லைத் தொங்கவிட ஆச்சரியமாயிருக்கும்.

220. வெள்ளரிக்காயில் உலக்கைதோங்கும் ஜாலம்

வெள்ளரிக்காயை முன்செய்தபிரகாரஞ்செய்து தொங்கவிட்டு உலக்கையைக்கட்டி அதன்கீழ்த்தாங்கவிட வெகுவினோதமாயிருக்கும்,

221. வெண்டக்காயில் எந்திரம் தோங்கும் ஜாலம்

வெண்டக்காயை முன்சொன்னபிரகாரம் ஸ்பிரிங்தகட்டில் சொருகிக் கட்டிவிட்டு எந்திரத்தைக்கட்டி கீழேதொங்கவிட அதிசயமாயிருக்கும்.

222. வாழைப்பழத்தில் கருங்கல்தோங்கும் ஜாலம்.

நீளமாயிருக்கும் வாழைப்பழத்தை ஸ்பிரிங்தகட்டில்சொருகி கருங்கல் லைக்கட்டித் தொங்கவிட எல்லோரும் சந்தோஷப்படுவார்கள்.

223. பாவக்காயில் பாக்குரல்தோங்கும் ஜாலம்

நீளமுங்கனமுமாகிய பாவக்காயில் ஸ்பிரிங்தகட்டைசொருகி பாக்குர லைக்கட்டிக் கீழேதொங்கவிட வேடிக்கையாயிருக்கும் இன்னும் இம்மாதிரி வேண்டுமான வேலைகளையெல்லாம் அவரவர்கள் புத்திசாதுரியத்தினால் செய்துகொள்ளவும்.

224. சுக்கிலஸ்தம்பன ஜாலம்

வெள்ளைப்பிரமதண்டி பொற்றலைக்கையாந்தகரை கோரோசனைகருப்பு நாயின் நாக்கு இவைகளையெல்லாம் சரியெடையாக யெடுத்து வெய்யலில் காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துவைத்துக்கொண்டு தேவை யானபோது காராவின் நெய்யிற் கலக்கி உள்ளங்காலில் தடவிக்கொண்டு சேர சுக்கில ஸ்தம்பனமாகும்.

225. வேறு

மயிர்ச்சிகைப்பூண்டு சிறியானங்கைசமூலம் ஆறுபுள்ளிவண்டு வெள் ளாட்டுநாக்கு இவைகளை சமயெடையாக யெடுத்து பொன்னூமத்தன் சாற் றாலரைத்து தேனிற் குழைத்து வெள்ளைத்துணியிற் பூசி நிழலிலுலர்த்தித் திரியாககி அகலில்போட்டு காராவின் நெய்யூற்றி விளக்கேற்றிவைத்துக் கொண்டு சேர சுக்கிலஸ்தம்பனமாகும்.

226. குடிபோட்டும் ஜாலம்

ஆண் கெசசக்காய் பேய்த்தும்மட்டி பச்சோந்திதலை மயில்பிச்சு இவை களையெல்லாம் சமயெடையாக எடுத்துக்கொண்டு எதிராளியின் நீர்க்குழி மண்ணில் அவனைப்போல் பதுமைசெய்து அதன்வயற்றில் மேற்படி மருந்து களைவைத்து கருப்புக்கம்பளியின்மேல் பதுமையை மருந்துடன்வைத்து சுருட்டி கட்டுக்கயிற்றால்கட்டி எதிராளியின் வீட்டில் புதைத்துவைக்க அவனை அவ்வீட்டைவிட்டு ஓட்டிவிடுவதுடன் அவ்வீட்டையும் பாழாகச் செய்யும்.

227. பிரிவு செய்யும் ஜாலம்

ஆடையொட்டி வாழை அண்டங்காக்கைத்தலை மாடப்புறா எச்சம் இ வைகளையெல்லாம் சமயெடையாகயெடுத்து கல்வத்தில்போட்டு வேப்பம் பால் தானறிப்பால் புங்கம்பால் இவைகளை வகையொன்றுக்கு கழஞ்சு இர ண்டாகவிட்டு இலந்தைமரயெண்ணெயிலரைத்து ஓர் புதக்குடுவையிற்போ ட்டு அவர்கள் வீட்டு வாசற்படியிற்புதைத்துவைக்க அவர்கள் அதைத்தாண் டினவுடன் பிரிந்துபோவார்கள் கைகண்டது.

228. மலடு நீங்கும் ஜாலம்

பேய்த்தும்மட்டி ஆறுபுள்ளிவண்டு மண்டைப்பிச்சு அழுகண்ணி இவை களையெல்லாம் சமயெடையாக யெடுத்துக் காராம்பசுவின்பாலில் அரைத்து

வைத்துக்கொண்டு மலடாகிய மாதர்கள் பிரதிதினமும் அதிகாலையில் எழுந்து ஒருவர்கண்களிலும் படாமல் கெச்சக்காய் பிரமாணம் புசித்துவர மலடு நீங்கி.கர்ப்பந்தரிக்கும்.

229. ஸ்ரீகளின் திரேகஞ் சிறுக்குஞ் ஜாலம்

மயிர்ச்சிகைப்பூண்டு சிறியாநங்கைசமூலம் கருப்புநாயின்நாக்குபச்சோந்தியின்தலை பொற்றலைக்கையாந்தகரை வெள்ளாட்டுநாக்கு இவைகளையெல்லாம் சமயெடையாகயெடுத்து கரியசாலையின் சாற்றாலரைத்து ஸ்திரீகளின் திரேகத்திற்பூசிக் குளித்துக்கொண்டுவர அவர்களின்திரேகம்சிறுத்துவிடும்.

230. மேற்படி திரேகம் பெருக்குஞ் ஜாலம்

பொற்றலைக்கையாந்தகரை மயிர்ச்சிகைப்பூண்டுசிறியாநங்கை பச்சோந்திதலை கருப்பு நாயின்நாக்கு வெள்ளாட்டுநாக்கு இவைகளையெல்லாம் சமயெடையாகயெடுத்து பன்னீரும் உமிழ்நீருஞ் சேர்த்து அரைத்து ஸ்திரீகளின் திரேகத்திற் புருஷர்களின்கைகளினாற் றடவ அவர்களின் திரேகம் பெருக்கும்

231. மேற்படி திரேகம் தழைக்கும் ஜாலம்

சிறியாநங்கை சீதாதேவி செங்கழுநீர் இந்திரகோபப்பூச்சி மண்டூகப்பிச்சு இவைகளை சமயெடையாயரைத்துப் பன்னீர் விட்டுக்குழைத்து தடவ ஸ்திரீகளின் திரேகம் தழைக்கும்.

232. சத்துருக்கள் கேடும் ஜாலம்

பேய்த்தும்மட்டி முத்தெருக்கன்செவி காட்டடட்டை கருநாய்நாக்கு இவைகளையெல்லாம் சமயெடையாயெடுத்துக்கொண்டு பேய்க்கொம்மட்டியின் சாறுவிட்டரைத்து சத்துருவைப்போல் பாவைசெய்து அதின் மார்பில் அவன்பேரையெழுதி பனைஓலையில் மாரணச்சக்கரத்தைக்கீறி அதின் பேரில் பாவையை வைத்து பாழடைந்த மனையிலாகிலும் பட்டுப்போன மரத்தடியிலாகிலும் வைக்க எதிரி நாசமாவான்.

233. புண்ணாறும் ஜாலம்

முத்தெருக்கன்செவி பேய்த்தும்மட்டி கருப்புநாயின் நாக்கு காட்டட்டை இவைகளை சமயெடையாக பசுவெண்ணெய் விட்டரைத்து சீலையிற் றடவி ஆராத புண்களின்மேற் போட சீக்கிரமாக ஆறிவிடும்.

234. மயிர் கருக்குஞ் ஜாலம்

வாழை முத்தெருக்கன்செவி ஆறுபுள்ளிவண்டு கருப்புநாயின் நாக்கு இவைகளையெல்லாம் சமயெடையாக யெடுத்து நிழலிலுலர்த்தி பொடியாக்கி நல்லெண்ணெயிற்கலந்து செப்புச் சிமிளில் வைத்து ஒருமண்டலம் வரைக்கும் தானியபுடமிட்டு அதன்பிறகு எடுத்து நரைமயிர்களிற்றடவ கறுப்பாக வளரும்.

235. வேறு

மயிர்ச்சிகைப்பூண்டு வெள்ளெருக்கு காட்டடட்டை ஆதிக்கொடி கருப்புக்கொள்ளு இவைகளையெல்லாஞ் சமயெடையாக யெடுத்து பொடித்து வஸ்திரகாயஞ்செய்து ஓர் தேங்காய்க்குள் போட்டு வாய்க்குத்தமரடைத்து சாக்கடைச்சேற்றில் ஒருமண்டலம் புதைத்துவைத்துப் பிறகெடுத்து நரைமயிரிற்றடவ கறுப்பாகிவிடும்.

236. வேறு சாதம் வேகாத ஜாலம்.

தேள்கொடுக்கிலை மயிர்ச்சிகைப்பூண்டு அண்டங்காக்கைத்தலை பச்சை தவளையின்பிச்சு இவைகளையெல்லாம் வகையொன்றுக்குக்கழஞ்சு ஒன்றாக யெடுத்து பேய்க்கருப்பன் சாறுவிட்டரைத்துக் குளிகைசெய்து வைத்துக் கொண்டு தேவையானபோது பகைவர்களின் வீட்டடுப்பிற் சமயம்பார்த்து ஓர் குளிகை போட்டுவிட அவ்வடுப்பில் எவ்வித கறிவகைகளும் சாதமும் வேகாது அடுப்பிலுள்ள சாம்பல்களையெல்லாம் அடியுடன் வாரிவிட்டு வேறு கட்டையைப்போட்டுக் கொளுத்தினால்தான் வேகும்.

237. லோக வசிய ஜாலம்.

பொற்றலைக்கையாந்தகரை கருநாய்நாக்கு சுழல்வண்டு மயிர்ச்சிகைப் பூண்டு இந்நான்கையும் நன்றாகப்பொடிசெய்து வெள்ளைத்துணியில் வைத்து திரிதிரித்து ஒரு அகலில்போட்டுச் காராவின் நெய்யூற்றி விளக்கேற்றி அம்மையை பிரமணரின் தலைமண்டையோட்டில் பிடித்து வழித்துக்காராவின் நெய்விட்டுக்குழைத்து செப்புச்சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது திலர்தமிட்டுச்செல்ல பகையாளிகளும் வணங்கி வார்த்தையாடுவார்கள்.

238. இதுவுமது

சிறியாநங்கை பிரமதண்டி பச்சோந்திபிச்சு தேவாங்குகண் வாய்நீர் மூக்குச்சளி கண்பீளை காதுகுரும்பி இந்திரியம் இவைகளையெல்லாம் சமயெடையாயெடுத்து அரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது சந்தனத்தில் கலந்துதடவ வசியமாம்.

239. இதுவுமது

சீதாதேவி செங்கழுநீர் வாழை ஆறுபுள்ளி வண்டு புருயெச்சம் மூக்குச்சளி காதுக்குரும்பி கண்பீளை வாய்நீர் இந்திரியம் இவைகளையெல்லாம் சமயெடையாக யெடுத்து அரைத்து வெள்ளைத்துணியில் வைத்து திரியாக்கி அகலில் போட்டு காராவின்நெய்யூற்றி விளக்கேற்றி அம்மையை புது ஓட்டில் பிடித்துவழித்துக் காராவின் நெய்யில் குழைத்து சிமிளில் வைத்துக் கொண்டு தேவையானபோது திலர்தமிட்டுச்செல்ல சகல சனங்களும் வசியமாவார்கள்.

240. இதுவுமது

மயிர்ச்சிகைப்பூண்டு பிரமதண்டி இந்திரகோபப்பூச்சி ஆதிக்கொடி மூக்குச்சளி காதுகுரும்பி இந்திரியம் கண்பீளை வாய் அழுக்கு இவைகளையெல்லாம் வகைக்கு சமயெடையாக யெடுத்து சர்க்கரையும தேனுங்கூட்டி அரைத்து வைத்துக்கொண்டு வெள்ளிக்கிழமைதோறும் நெருப்பிலிட்டுப்புகைக்க இலட்சுமிவாசமும் சகலசம்பத்தும் உண்டாகும்.

241. வெட்டுப்படாத ஜாலம்.

கோரோசனை வெண்கொழுஞ்சி அழுகண்ணி சுழல்வண்டு இவைகளையெல்லாம் சமயெடையாக எடுத்து அரைத்துவைத்துக்கொண்டு போர்முகத்திற்குச்செல்லும் வீரர்கள் ஜலத்திலிழைத்துத் திரேகத்திற் றடவிக்கொண்டு போருக்குச்செல்ல எதிரியின் ஆயுதங்கள் தங்களின்மேல்படாதுந்தவிர எதிரியானவன் தோல்வியடைவான்.

242. படைகள் ஓடும் ஜாலம்

ஆடையொட்டி வாழை பச்சைத் தவளையின்பிச்சு இந்திரகோபப் பூச்சி

இவைகளை யெல்லாம் சமயெடையாகச்சேர்த்து அமாவாசையும் அருக்கனும் ஒன்ருகச் சேர்ந்த தினத்தில் புலித்தோலில் வைத்து கடயத்தைப்போலவளையமாகச் செய்துக் கையில்போட்டுக்கொண்டு சண்டைக்குச்செல்ல எதிரியின் சேனைகளெல்லாம் உன்னைப்பார்த்ததும் விலவிலத்து ஓடிவிடுவார்கள் இதிற் சந்தேகமில்லை.

243. சோக்குத்தூள் ஜாலம்.

மயிர்ச்சிகைப்பூண்டு பேய்த்தும்மட்டி அண்டங்காக்கைத்தலை சுழல் வண்டு பச்சோந்திதலை ஆறுபுள்ளிவண்டின்தலை இவைகளையெல்லாம் சமயெடையாகயெடுத்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்துவைத்துக்கொண்டு தேவையானபோது எதிரிகளின்பேரில் கொஞ்சம் தூவிவிட அவர்கள்புத்திதடுமாறி உன்சொற்படி கேட்டு நீ என்ன கேட்டபோதிலும் கொடுத்துவிடுவார்கள் அதன்பிறகு அவர்களைக்குந்தவைத்து தலையில் ஜலத்தைவிட அத்தியக்கந்தீரும்.

244. இருளில் வாசிக்கும் ஜாலம்

பிரமதண்டி சிறியாநங்கை கரும்பூனைப்பஞ்சாங்கம் ஆதிக்கொடி இவைகளை உலரவைத்து நல்ல அமிர்தயோகமான வேளையில் இடித்துப் பொடியாக்கிச்சீலையில்வைத்துத் திரித்து அகலில் போட்டு காராவின்நெய்யும் நல்லெண்ணெயும் விட்டு விளக்கேற்றி மையைப்பிடித்து காராவின் நெய்யிலிழைத்து சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது இருட்டில் கொஞ்சமெடுத்து கண்களில் தீட்டிக்கொண்டு வாசிக்கக் கண்பட்டம்பகலைப்போலவெளிச்சத்தைக்கொடுக்கும்.

245. சத்துருவை ஜெயம் பண்ணுஞ் ஜாலம்

சீதாதேவி செங்கழுநீர் மயிர்ச்சிகைப்பூண்டு மாடப்புருயெச்சம் ஆதிக்கொடி இந்நான்கையுஞ் சமயெடையாக யெடுத்து அதற்கு நாலிலொருபாகம் பெருங்காயந்தீட்டி பொடியாகத் தூள்செய்து வைத்துக்கொண்டு சமயம் நேர்தபோது பகைவர்களின் தலையின்மேல் கொஞ்சம்தூவ அவர்கள்நமக்கடங்கி நடப்பார்கள்.

246. வழக்குகள் வேல்லும் ஜாலம்.

மயிர்ச்சிகைப்பூண்டு ஆடையொட்டி கரும்பூனை பஞ்சாங்கம் ஆதிக்கொடி இவைகளையெல்லாம் சமயெடையாக யெடுத்து பொன்னூமத்தன் சாற்ருலரைத்து குளிகையாகத் திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது காராவின் நெய்யிலிழைத்துத் திலர்தமிட்டுக்கொண்டு பகையாளிகளின் முன்போக அவர்கள் வணங்கி வருவதுமன்றி வழக்குகளும் ஜெவிக்கும்.

247. சண்டைகள் வேல்லும் ஜாலம்

ஆண் கெச்சக்காய் வெண்கொழுஞ்சிவடவேர் இந்திரகோபப்பூச்சி மாடப்புருயெச்சம் இவைகளை யெல்லாம் ஓர் நிறையாயெடுத்து நிழலிலுலர்த்திபொடியாக்கிப் பொன்னூமத்தன் சாற்றிலரைத்துச் சீலையில்தடவிக் காயவைத்து அகலில்போட்டு ஓரண்டத்தெண்ணெய்யூற்றி விளக்கேற்றி அம்மையை மண்டையோட்டில் வழித்துக் காராவின் நெய்யில்குழைத்து செப்புச்சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது தலைபேறுபெற்றவள் முலைப்பாலில் இழைத்து திலர்தமிட்டுக்கொண்டுபோக எப்படிப்பட்ட சண்டைகளையும் ஜெவித்துக்கொண்டுவரலாம் கைகண்டது.

248. ஒற்றைநம்பர் கணக்கு வித்தை

1 3 5 7 9 11 13 15 17 19 21 23 25 27 29 இந்த நம்பர்களையும் முன்போல் ஒன்றின்கீழொன்றை வரிசைக்கிரமமாக எழுதிப் பார்க்க மொத்தநெம்பர் 15-க்கு அடியிலிருப்பது 29 ஆகையால் இந்த 29-ல்பாதி $14\frac{1}{2}$ அதில் $\frac{1}{2}$ சேர்க்க 15 அந்த மொத்த நம்பர் 15-ல்மாற 10-10-100 10-5-50 5-10-50 5-5-25 ஆகாமொத்தம் 826 என்று சொல்லவும் சரியாயிருக்கும் இவ்வாறே எத்தனை நம்பர்போட்டாலும் சொல்ல அவைகள் ஒன்றேனும் பிசகிடாது.

249. இரட்டைநம்பர் கணக்கு வித்தை.

1 2 4 8 16 32 64 128 256 511 1025 அவ்வாறு நம்பர்களை முன்போல் ஒன்றின்கீழொன்று வரிசைக்கிரமமாய் வரைந்துப்பார்க்க மொத்தநம்பர் 21-க்கு அடியிலிருப்பது 1424 ஆகையால் அந்த 1024-ஐ இரட்டிக்க 2048 அதில் 1-நீக்கவும் 2047 என்று சொல்லவும் சரியாயிரிக்கும் இவ்வாறே எத்தனை நம்பர்போட்டபோதிலும் சொல்ல அவைகள் ஒன்றேனும் பிரசிகிடாது.

250. வட்டித்துகைக் கணக்கு வித்தை

ஒருவன் வாங்கிய துகைக்கு மாதம் 1-க்கு வட்டி வராகன் 1 ஆகவும் அதில் 20 மாதத்திற்கு 40-ரூபாய் வட்டிகொடுத்திட அதற்கு அசல் ரூபா 200-என்பதற்கு அவன்கொடுத்த ரூபா 40க்கும் மாதம் 1க்கு மாற 4 1-40 அதை 100-ல் மாற 1-க்கு 40-400 அதுநிற்க மாதம் 20-க்கும் வட்டி வராகன் 1-க்கு மாற 20-1-20 இதைமுன் 400லீய 200-க்கு 20-400 இதில் அசல் ரூபா 200 என்றுசொல்ல சரியாயிருக்கும்.

251. பொன்மாத்துக்கணக்கு வித்தை.

ஒருவன்கொடுத்த பொன்னில் 10-மாத்துள்ள பொன்னில் வராகனெடை 1, 9-மாத்துள்ள பொன்னில் வராகனெடை 1, 8 மாத்துள்ள பொன்னில் வராகனெடை 1, 6-மாத்துள்ள பொன்னில் வராகனெடை 1, ஆக இந்த 5விதமாகிய பொன்களைச் சேர்த்து உருக்கிடில் அதில் எத்தனை மாத்துத் தேறுமென்பதக்கு பொன்மாத்துகள் 5 க்கும் மாத்துரை 40-க்கும் யீய 30-8-432, 40-$\frac{1}{4}$-10 நீக்கு ஈவு $8\frac{1}{2}$ என்று சொல்லவும் சரியாயிருக்கும்.

252. சாலிவாகனசகாப்தியமறியும் வித்தை.

சதாரணவருஷத்திக்குரியது சாலிவாகனசகாப்தம் 1886 ஆதலால் இதை எப்படிப்பகுத்தறியக் கூடுமெனில் எப்பொழுதும் 20-க்கும் 60-க்கும் பெருக்க 60-க்கு 20 1200 60-3-180 ஆக 1480 மொத்த வருஷம் 60-ம் நிகழும் வரும் 47-ம் சேர 107, அதில் 349-ம் சேர்க்க 1836-ம் வருஷமென்று சாலிவாகன சகாப்தத்தைச்சொல்ல சரியாயிருக்கும் பிரதிவருஷத்திலும் சென்றதுகைபோக நின்றதுகையைச் சேர்த்துக் கூட்டவும்.

253. கலியுகாப்பதமறியும் வித்தை.

இந்த கலியுகத்திற்குரிய வருஷம் 5015-ஆகையால் அதை எப்படிப் பகுத்தரியக்கூடுமெனில் முதல் சாலிவாகனதுகை 1836 அதில் சேர்ப்பது 100 மறுபடியும் அதில் 300 பின்னும் அதின்கூட 79 சேர்க்கவும் 5015 என்று சொல்ல சரியாயிருக்கும் பிரதிவருஷங்கள்தோறும் சாலிவாகன சகாப்தவருஷத்துகையைகொண்டே பெருககிப்பார்க்க கலியுகவருஷக் கணக்கு அதில் சரிப்பட்டுவரும்.

254. சதுர்யுகமறியும் வித்தை.

இந்த கலியுகசகாப்தமொத்தம் 4 லக்ஷத்து 32000த்தை 10-ல் பெருக்கவும் அதில் 42 லக்ஷத்து 20000 என்று சொல்லவும் அதுசரியாயிருக்கும் இப்படியே எப்போதும் பார்த்துக்கொள்ளவும்.

255. கால்நடைக் கணக்கு

ஆனை, குதிரை, ஒட்டை முச்சாதிகளிலும் வாங்கவேண்டியது 100-க்குக் கொடுத்த ரூபா 100-க்குஞ் சரிவர வாங்கும் விபர உதாரணம்.

ஆனை ...	... 18-க்கு	ரூபா.	90	0	0
குதிரை ...	... 2-க்கு	ரூபா.	2	0	0
ஒட்டை ...	... 80-க்கு	ரூபா.	8	0	0

ஆக உருவுகள் 100-க்கு ரூபா 100-சரியாம்.

256. புஷ்பக்கணக்கு

ஒரு சாதி புஷ்பமானது செடியிலிருக்கையில் ஒற்றையாயும் அறுக்குகையில் இரட்டையாயும் சாத்துகையில் சரியாயும் இவ்விதமுள்ள மனோரஞ்சித புஷ்பத்திற் சிலதைக் கொய்து மும்மூர்த்திகளுக்குஞ் சாத்த சரியாய் இருக்குங் கணக்கு விவரம்.

அறுத்தது—7	இரட்டித்தது—14	சாத்தியது—8-ல்
மிகுதி 6	,, 12	,, 8-ல்
,, 4	,, 8	,, 8-ல்

257. கூட்டும் எண் குறிக்குங் கணக்கு

முதல் வேண்டிய இலக்கங்களை வரிசையாய்க் கூட்ட வருந் தொகையை எளிதில் சொல்லுவதெப்படி யெனில் முதல் 10-ம் வரையில் எத்தனையாச்சுதென்றால் 10-10-100, அதிற் பேர்பாதி 50, 10-ல் பேர்பாதி 5, ஆக மொத்தம்-55 இப்படியே யெத்தனை எண்களையாகிலுங் கூட்டிச்சொல்ல சரியாயிருக்கும்.

258. சுமைக்கூடைக் கணக்கு

ஒரு கிழவி கடைக்குச் சுமைக்கூடை முட்டைகளை விற்கப்போகும் வழியில் சில பிள்ளைகள் அக்கூடை முட்டைகளைத் தள்ளிவிட்டனர். இவள் நீதி யதிபரிடம் சொல்ல, அவர் உன் கூடையில் எத்தனை முட்டைகள் இருந்ததென, அவள் எனக்கெண்ணத் தெரியாது. ஆனால் என் கூடையில் முட்டைகளை 2-2-வைததாலும் 1-மீந்தது 3-3-பிரித்தாலும் 1-மீந்தது. இப்படியே 4-5-6 ஆக பிரித்துவைத்தாலும் 1-1-தான் மீந்தது. 7-7-பிரித்தால் 1-ம் மீந்ததில்லையென இதில் கூடையிலுள்ள முட்டைகள் எத்தனையெனில் 3ı என்னவும்.

259. பள்ளிப்பிள்ளைகள் கணக்கு

ஒரு பள்ளிக்கூடத்தில் 1-வது வகுப்பில் பிள்ளைகள் 4 சதுரமாக உட்
3 3 3 காரவைத்து ஒவ்வோர் சதுரத்திலும் எண்ணிப்பார்க்க 9 பிள்ளை
3 3 3 கள் இருந்தார்கள். உபாத்தியாயர் வெளியிற் போய்விட அயல்
3 3 3 பிள்ளைகள் இக்கிளாசில் வந்து உட்கார்ந்தார்கள். உபாத்தியாயர் வந்து பார்த்தபொழுது பக்கத்துக்கு 9-பேர்கள் சரியாயிருந்தார்கள்.

260. வேருெரு விதம்

மறுபடியும் உபாத்தியாயர் சாப்பாட்டிற்குப் போகும்பொழுது இந்த-4
2 5 2 அயல் பிள்ளைகளும் வெளியிற் போய்விட்டபின் உபாத்தியாயர்
5 5 சாப்பிட்டுவந்து கணக்குப் பார்த்தபொழுது பக்கத்துக்கு 9-பேர்
2 5 2 கள் இவ்வாறு சரியாயிருந்தார்கள்.

261. மற்ருெரு விதம்

மறுபடியும் முன்போல் 4-பிள்ளைகள் வந்து சேர்ந்தபொழுது அயலார்
4 1 4 களில் 4-ம் வாசிப்பவர்களில் 4-ம் ஆக எட்டுபேர்களும் போய்
4 1 விட்ட பிறகு இவ்விதமிருந்தார்கள். ஆனல் இதிற்செப்பியபடி
1 1 4 பாடசாலையில் வாசிப்பவர்கட்கன்று மற்றெவ்வித விஷயங்கட்கும்
இதைச் சொல்லவும்.

262. கணித அடுக்குநிலை.

1 2 3 4 5 6 7 8 9 10 11 12-ஞ்சேர்த்து 1-க்குக் கடைசிவரை 2-ம் வரிசையில் 13 காட்டுவது எப்படியெனில்,

1-ம்	12-ம்	கூடியமொத்தம்	13
2-ம்	11-ம்	,,	13
3-ம்	10-ம்	,,	18
4-ம்	9-ம்	,,	13
5-ம்	8-ம்	,,	13
6-ம்	7-ம்	,,	13

இவ்வாறு 6-ம்வரிசையில் 12-எண்களில் 13-வருவதைக் கண்டுணர்க.

263. நெற்படிமரக்கால் கணக்கு.

1-படி நெல்லு 7-அணுவாக 1 வராகனுக்கு எத்தனைமரக்கால் என்பதற்கு விவரம் 1-மரக்காலுக்கு படி 8 ஆகையால் 8-7-56 அணுவாக 4 பேருக்கு வராகன் 1க்கு அணு 56-ஆக இதை 4 பேருக்குக்கொடுக்க வந்த மிச்சம் 4 ஆகையால் 14-மரக்காலென்று சொல்லவும்.

264. இதுவுமது.

ஒரு படி நெல்லு 3 துக்காணியாக வராகனுக்கு எத்தனை மரக்கால் என்பதற்கு விவரம்:—இந்த 3 துக்காணியும் பணமாக்க வறு-க்கு வறு ஆக மரக்காலுக்கும் 8-படியாகையால் அதை வறுக்குமாற பணம் 27, இந்த 27-பேருக்கு வராகன் 1-க்கு சின்னபணம் 45-ஆக இதைக் கொடுக்கவந்த மிச்சம் 18-ஆக, மரக்கால் 18 என்று சொல்லவும்.

265. இதுவுமது

1-படி நெல்லு 3 துக்காணியாக வராகன் 1-க்கு எத்தனை மரக்கால் என்பதற்கு விவரம்:—இந்த 3 துக்காணிக்கு வறு-ஆக 8 படிக்கு பணம் 3 இந்த $2\frac{1}{4}$ பேருக்கு வராகன் 1-க்கு பணம் 45 ஆக இதைக் கொடுக்கவந்த மிச்சம் 20, ஆக மரக்கால் 20 என்று சொல்லவும்.

266. இதுவுமது

1 படி நெல்லு 2 அணுவாக வராகன் 1-க்கு மரக்கால் எத்தனை என்பதற்கு விவரம்:—1 மரக்காலுக்கு படிக்கு அணு 16 ஆக, இந்த 16 பேருக்கு வராகன் 1-க்கு பணம் 45, அணு 56 ஆக இதை முன்னிருத்தின 16-பேருக்குக்கொடுக்கவந்த மிச்சம் நாலரையே அரிக்காலே முக்காணி மரக்காலென்று சொல்லவும்.

267. இதுவுமது

1 படி நெல்லு $1\frac{1}{2}$ பணமாக வராகன் 1-க்கு மரக்கால் எத்தனை என்பதற்கு விவரம்:—மரக்கால் 1-க்கு படி 8-ஆக, இந்த 8-படிக்கும் $1\frac{1}{2}$-பணத்துக்கும் மாறபணம் 1 இந்த 10 பேருக்கு வராகன் 1-க்கு சின்ன பணம் 45 ஆகக் கொடுக்கவந்த மிச்சம் $4\frac{1}{2}$ மரக்கால் என்று சொல்லவும்.

268 இதுவுமது

வராகன் 1-க்கு மரக்கால் $11\frac{1}{2}$ஆக ஐந்தரையேஅரிக்கால் வராகனுக்கு எத்தனைமரக்காலென்பதற்கு விவரம்:—மரக்கால் $11\frac{1}{2}$-க்கும் வராகன் ஐந்தரையேஅர்க்காலுக்குமாற வந்த தொகையே மரக்காலென்று சொல்லவும். இப்படியே மற்ற கணக்கையும் பெருக்கச் சரியாயிருக்கும்.

269. இதுவுமது

வராகன் 1-க்கு மரக்கால் 12 ஆக 160 மூட்டைக்குக் கிரையம் என்னவென்றால் 1 மூட்டைக்குள்ளது எத்தனை மரக்காலென்று அவர்களைக் கேட்டுக்கொண்டு மூட்டை 1-க்கு மரக்கால் 11 ஆகையால் அதன்மேற் கிரையம் பார்த்துச்சொல்லவும்.

270. கிரேதாயுகமரியும் வித்தை

இந்த கலியுகாப்த மொத்தம் 4லக்ஷத்து 3200த்தை 4-ல் பெருக்கவும் அதில் வருந்தொகையானது 17-லக்ஷத்து 28000 என்று சொல்லவும் அது சரியாயிருக்கும் இப்படியே எப்போதும் பார்த்துக்கொள்ளவும்.

271. திரேதாயுகமறியும் வித்தை

இந்த கலியுகாப்த மொத்தம் 3-லக்ஷத்து 32000-த்தை 3-ல் பெருக்கவும், அதில் வருந்தொகையானது 12-லக்ஷத்து 96000 என்று சொல்லவும் அது சரியாயிருக்கும் இப்படியே எப்போதும் பார்த்துக்கொள்ளவும்.

272. துவாபரயுகமறியும் வித்தை

இந்த கலியுகாப்த மொத்தம் 4-லக்ஷத்து 32000த்தை 2-ல் பெருக்கவும், அதில் வருந்தொகையானது 8-லக்ஷத்து 64000 என்று சொல்லவும் அது சரியாயிருக்கும். இப்படியே எப்போதும் பார்த்துக்கொள்ளவும்.

273. கலியுகமறியும் வித்தை

இந்த கலியுகாப்த மொத்தம் 4-லக்ஷத்து 32000த்தை 1-ல் பெருக்கவும், அதில் வருந்தொகையானது 4-லக்ஷத்து 32000மே வரும் இப்படியே எப்போதும் பார்த்துக்கொள்ளவும்.

274. தானியக்கலம் பைசல் கணக்கு

தானியம் கலம் 1-க்கு மரக்கால் 12-ஆகவும் அணு 1-க்கு பை 12-ஆகவும், குறுணி வாய்ப்பாடு படி கூட்டி, இத்தனை மரக்காலென்றும் இத்தனை அணுவென்றும், எவ்வளவு பெருந்தொகைகளும் பார்த்து எளிதிற் சொல்லவும் சரியாயிருக்கும். இவ்வாறே அணு மொத்தத் தொகைக்கும் பார்த்து, ரூபாய் தொகையையும் எச்சுதக்கறிந்துப் பிரித்துச்சொல்ல சரியாயிருக்கும்.

275. அலகு நிலை தொகை சொல்லும் வித்தை

எண்சுவடியிலுள்ள அந்தந்த வாய்ப்பாட்டின் அலகு நிலைத் தொகையை எளிதிற் சொல்லும் விதம். முதல் வாய்ப்பாட்டில் கடைசி நம்பராகிய

100-1-100 என்பதில் அந்த 100-ஐ 6-ல் பெருக்க 100-6-600, அதில் 5-கழிக்க 595 இதற்கு மல்லிகையைந்து மலர்ந்த பூ தொண்ணூறு, கொள்ளுவாரைவர் பறித்து இவ்வாறே மற்றவாய்ப்பாட்டிற்கெல்லாம் சொல்லவும்.

276. நவதானிய மரக்கால் கணக்கு வித்தை.

தான்யம் வராகன் ஒன்றுக்கு மரக்கால் பன்னிரண்டரையாக ஐந்தே கால் ரூபாயிக்கு எத்தனை மரக்கால் என்பதற்கு விவரம்:—இந்த பன்னிரண்டரை மரக்காலுக்கும் முன்கேட்ட ரூபாய் ஐந்தேகாலுக்கும் மாறவும் அறுபத்தைந்து ரூபா பத்தணு இதை வராகன் ஒன்றுக்கு ரூபாய் மூன்றரையாக இந்த மூன்றரை பேருக்கு முன்னிருத்தின தொகையைக் கொடுக்கவும். வந்த யீவு பதினெட்டேமுக்காலாக அளக்கும் நெல்லு மரக்கால் பதினெட்டே முக்கால் என்று சொல்லவும் சரியாயிருக்கும். இவ்வாறே நவதானியம் யாவுக்கும் பார்த்துச் சொல்லவும்.

277. வீசைக்கணக்கு வித்தை.

பாரம் 1-க்கு ரூபா $12\frac{1}{2}$ ஆக $3\frac{1}{2}$ வீசைக்குக் கிரயமென்னவென்பதக்கு விவரம்:—$12\frac{1}{2}$-க்கும் $3\frac{1}{2}$-க்கும் மாறவும் சஙகூ இதை பாரம் வீசை 160 பேருக்குக்கொடுக்க வந்த ஈவுதான் கிரையமென்று சொல்லவும் இப்படியே மற்றதற்கும் சொல்லவும்.

278. பொதிவீசைக்கணக்கு வித்தை.

பொதி ஒன்றுக்கு ரூபா ஆறேகாலாக ஐந்தரை வீசைக்கு கிரயமென்னவென்பதற்கு விவரம் ஆரேகாலுக்கும் ஐந்தரைக்கு மாறவும் முப்பத்திநாலே காலேஅரைக்கால் இதை பொதிக்கு வீசை எண்பதாக இவ்வளவுபேருக்குக் கொடுக்க வந்த ஈவுதான் கிரையமென்று சொல்லவும் இப்படியே மற்றதற்குஞ் சொல்லவும்.

279. பலங்கணக்கு வித்தை.

வீசை ஒன்றுக்கு அணு ஆறேமுக்காலாக நாலரை பலத்துக்குக் கிரயமென்னவென்பதற்கு விபரம:—ஆரேமுக்காலுக்கும், நாலரைக்கும் மாறவும் வந்ததொகை 60 இவ்வளவு பேருக்குக் கொடுக்க வந்த ஈவுதான் இத்தனை அணுவென்று சொல்லவும் இப்படிாய மற்றதற்கும் பார்த்துச் சொலலவும்.

280. படியடிகணக்கு வித்தை.

இப்படியடிகணககு எழுபத்தைந்து பேருக்கு ஏககாலத்தில் மொத்தஞ் சொல்லும் விவரம்.—75-ல் பேர்பாதி முப்பத்திஎழரை அதில் அரை சேர்க்க முப்பத்தியெட்டு இதை எழுபததுஐந்தில் பெருக்கவும் எழுபதிற்கு முப்பது இரண்டாயிரத்துனூறு, ஐம்பத்தெட்டிற்கு நாற்பதாக இரண்டாயிரத்து னூற்றிநாற்பது என்று சொலலவும் சரியாயிருககும இப்படியே எத்தனை அடியடிக்கும் சொல்லவும்.

281. படியடிமாறல் கணக்கு வித்தை.

முன்படியடியில் பதிமூன்று தள்ளி பதிநாலிலிருந்து எழுபத்தைந்துவரையிலுங் கூட்டவும் தள்ளுபடி னூற்றுமுப்பத்தைந்து அதாவது பதிமூன்றில்பாதி ஆறரை அதில் அரைசேர்க்க எழு அதை பத்தால்பெருக்க பைத்தே ழெழுபது மூவேழு இருபத்திஒனறு ஆக தொண்ணூற்றிஒன்று கழிக்கவும் இரண்டாயிரத்து ஐந்து என்று சொல்லவும இப்படியே படியடியில் எவ்வளவு கழித்திடினும் மொத்தத்தொகையில தள்ளிச் சொலலவும்.

282. ஏரிமதுகணக்கு வித்தை.

ஒருஏரியில் மதுவுகளாறுக்கும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாழிகை அதிகமாய்ப்பாயும் இதை ஏககாலத்தில் எல்லாமதுவுகளுந் திறந்துவிட அது எத்தனைநாழிகையில் அவ்வளவுஜலம் பாயுமென்பதற்கு விவரம் மதுவுகள் ஆறுக்கு ஆறு அரை மூன்று அதில் அரை சேர்க்க மூன்றரை அது அறு மூன்று பதினெட்டு ஆறு அரை மூன்று ஆக மொத்தம் இருபத்தொரு நாழிகையில் பாயும் என்றுசொல்ல சரியாயிருக்கும். இப்படியே மற்ற மதுவுகளுக்கும் பார்த்துச்சொல்லவும்.

283. வேறொரு கணக்கு வித்தை.

இதை அறுபதுபேருக்குக் கொடுக்கவும் அறுபத்திக்கால் பதினைந்து அறுபது வீசம் மூணேமுக்கால் பேர்க்கு ஒண்ணேகாலுக்கு எழுபத்தைந்து விநாடி அது அறுவதோண் அறுவது. அறுபத்திக்கால் பதினைந்து ஆக எழுபத்தைந்தேகாலேவீசம் நாழிகைக்கு ஒண்ணேகால் விநாடி இது இருபது விநாடியிற் பாயுமென்றுசொல்ல சரியாயிருக்கும் இப்படியே மற்றதற்கும்பார்த்துச்சொல்லவும்.

284. மற்றொருவித கணக்கு வித்தை

இதை பதிநான்குமுதல் நான்குவரையில் முப்பத்திநாலாக நாநான்கு பதினாறு அதிற்பாதி எட்டு அதில் ½சேர்க்க எட்டரைக்கு நாலெட்டு முப்பத்திரெண்டு நாலரை ரெண்டுக்கு முப்பத்திநாலாகுமென்று சொல்ல சரியாயிருக்கும் இப்படியே அந்தந்தகேள்விகளுக்கு தக்கபடியே பார்த்துச்சொல்லவும்.

285. இன்னொருவித கணக்குவித்தை

இதில் கால்முதல் மூன்றரைக்கு நாமூணுபன்னிரண்டு, நாலரை ரெண்டு ஆக பதிநாலிற்பாதி எழு அதில் அரை சேர்க்க எழரைக்கு பைத்தேழு எழுபது, பைத்தரை ஐந்து ஆக எழுபத்தைந்து அல்லது நாலேழு இருபத்தினலு, நாலரை இரண்டு ஆக நூற்றிஐர்துக்கு நூத்திக்கால் இருபத்தைந்து ஐகால் ஒண்ணேகால் ஆக இருபத்தாறேகால் என்று சொல்லவும் சரியாயிருக்கும் இப்படியே மற்றதற்கும் பார்த்துச்சொல்லவும்.

386. ஈதோரு கணக்குவித்தை.

இதனை நாலிலிருந்து பத்துவரையிற் கேட்க பைத்நான்கு நாற்பது அதிற்பாதி இருபது பின்னும் அரை சேர்க்க இருபதரை இதை நாற்பதுக்கு இருபது எண்ணூறு நாறபதரை இருபது ஆக எண்ணூத்தியிருபது இதை காலால் பெருக்க எண்ணூறுகால் இருநூறு இருபத்திக்கால் ஐந்து ஆக இருநூற்றிஐந்து என்று சொல்ல சரியாயிருக்கும் மற்றதற்கும் இவ்வாறே பார்த்துச்சொல்லவும்.

287. பன்றியின் கணக்கு வித்தை

ஒரு பன்றியானது நாள் ஒன்றுக்கு ஒரு காதமாக பதினெட்டு நாள் பதினெட்டு காதமோடவும் அதற்கு நாழிகை நூற்றிருபத்தைந்தாக நாய் பதினாறு நாளில் பிடிபபதற்கு பதினாறில பாதி எட்டு அதில் அரை சேர்க்க எட்டரை அதை மூன தகையிற் பெருக்க பத்து எட்டு, எண்பது, ஆறு, எட்டு, நாற்பத்தெட்டாக நூற்றிருபத்தெட்டு பதினால் அரை எட்டாக நூற்றிமுப்பத்தாறு நாழிகையிற் பிடிக்குமென்று சொல்லவும்.

288. மா அளவு கணக்கு வித்தை

ஒருமாவுக்கு துட்டு ஐந்து, பை பத்து ஒருமா வராகனுக்கு இரண்டே கால் சின்னபணம் அணு மூன்று பன்னிரண்டேமுக்கால் பலத்துக்கு ஒரு ராத்தல் வீசை ஒன்றுக்கு மூன்றரைக்கால் ராத்தல் மணங்கு ஒன்றுக்கு இருபத்தைந்து ராத்தல், பாரம் ஒன்றுக்கு ஐநூறு ராத்தல், பாரம் ஒன்றுக்கு நூறு வீசை பாரம் ஒன்றுக்கு இருபது மணங்கு இவ்வளவு இடையே யாவற்றிற்குங் கொள்ளவும்.

289. நேல் அளவு கணக்கு வித்தை

தனி நெல் முந்நூற்றருபது கொண்டது செவுடு செவுடு ஐந்துகொண்டது ஆழாக்கு ஆழாக்கு இரண்டுகொண்டது உழக்கு உழக்கு இரண்டு கொண்டது உரி உரி இரண்டு கொண்டது நாழி நாழி இரண்டுகொண்டது குறுணி குறுணி பன்னிரண்டு கொண்டது கலம் ஒன்று.

290 குறிப்பிட்ட தொகைக்கணக்கு வித்தை

முன் நினைத்தது ஐந்து அதை ஐந்தில் பெருக்க ஐந்து-ஐந்து-இருபத்தைந்து அதில் ஒன்று குறைக்க இருபத்திநான்கு அதை நான்கில் பெருக்க நான்கு-நான்கு-பதினாறு முன் இருபத்தைந்தில் பதினாறு போக நீக்கு ஒன்பது அதில் ஒன்று கூட்டவும் பத்து அதிற் பேர்பாதி கழிக்க முன் நினைத்தது ஐந்து என்பதாய்ச் சொல்லரும் சரியாயிருக்கவும்.

291. இதுவுமது

முன் நினைத்தது ஐந்து அதை மூன்றில் பெருக்க மூன்றைந்து பதினைந்து அதில் ஒன்று கூட்ட பதினாறு அதை மூன்றில் பெருக்க மூன்று பத்து முப்பது, மூன்றூறு பதினெட்டாக நாற்பத்தெட்டில் முன் நினைத்தது ஐந்து சேர்க்க ஐம்பத்திமூன்று ஆகிய கடைசி நம்பர் மூன்று தள்ள முன் நினைத்த நம்பர் ஐந்து என்பதாய்ச் சொல்ல சரியாயிருக்கும்.

292. இதுவுமது

முன் நினைத்தது ஐந்தில் பெருக்க ஐந்து-ஐந்து இருபத்தைந்து அந்த இருபத்தைந்தில் ஒன்று சேர்க்க இருபத்தாறு அதைப் பின் நம்பர் ஆறில் பெருக்க ஆறு-ஆறு-முப்பத்தாறு முன் இருபத்தைந்துக்கும் பின் முப்பத்தாறுக்கு முள்ள வித்தியாசம் பதினொன்று அதில் ஒன்று நீக்கி பேர்பாதி கழிக்க முன் நினைத்த நம்பர் ஐந்து என்பதாகச் சொல்ல சரியாயிருக்கும்.

293. இதுவுமது

முன் நினைத்தது ஐந்து அதினோடு ஒன்று கூட்ட ஆறு அதை மூன்றில் பெருக்க மூன்றாறு பதினெட்டு அதில் ஒன்று கூட்ட பத்தொன்பது அதில் முன் நினைத்தது ஐந்து சேர்க்க இருபத்திநான்கு அதில் நான்கு கழிக்க இருபது அதை நான்கில் பெருக்க நான்கு ஐந்து இருபது நீக்கு யீவு முன் நினைத்த நம்பர் ஐந்து என்பதாய் சொல்ல சரியாயிருக்கும்.

294. இதுவுமது

முன் நினைத்தது ஐந்து அதில் ஒன்று கழிக்க நான்கு அதை இரண்டில் பெருக்க இருநான்கு எட்டு அதில் ஒன்று கழிக்க எழு முன் நினைத்தது ஐந்து சேர்க்க பன்னிரண்டு அதோடு மூன்று சேர்க்க பதினைந்து அதை மூன்றில் பெருக்க மூன்றைந்து பதினைந்து நீககு ஈவு முன்னினைத்த நம்பர் ஐந்து என்பதாய்ச் சொல்ல சரியாயிருக்கும்.

295. இதுவுமது

முன் நினைத்தது ஐந்து அதோடு பத்து சேர்க்க பதினைந்து அதை முன்னினைத்த ஐந்தில் பெருக்க ஐந்தைந்து இருபத்தைந்து ஐந்து பத்து ஐம்பது ஆக எழுபத்தைந்து இதல்லாமல் முன் நினைத்த ஐந்தாம் ஐந்தில் பெருக்க ஐந்தைந்து இருபத்தைந்துக்கும் முன் கூறியதற்கும் வித்தியாசம் ஐம்பது அதைப் பத்தில் வகுக்க ஐந்து பத்து ஐம்பது நீக்கு மீவு முன் நினைத்த நம்பர் ஐந்து என்பதாய்ச் சொல்லவும்.

296. இதுவுமது

முன் நினைத்தது ஐந்து அதில் ஒன்று கழிக்க நான்கு முன் நினைத்தது ஐந்தில் ஒன்று சேர்க்க ஆக ஆறும் நான்கு சேர்க்க பத்து அதை இரண்டில் வகுக்க இரண்டைந்து பத்து நீக்கு ஈவு முன் நினைத்த நம்பர் ஐந்து என்பதாய்ச் சொல்லவும் அவை சரியாயிருக்கும். இவ்வாறே இன்னமற்றதையுஞ் சொல்லவும்.

297. இதுவுமது

முன் நினைத்த நம்பர் 5 அதை 2ல் பெருக்க 2-5-10அதை 5ல் பெருக்க 5-10-50ல் கடைசி நம்பர் சுன்னத்தை நீக்கி நீக்குஇருப்பு முன் நினைத்த நம்பர் 5 இதை இவ்வாறு சொல்வதில் மற்றதைப்பார்க்கச் சரியாகவேயிருக்கும்.

298. இதுவுமது

ஒருவன் நினைத்த கணக்கை அத்துகையிலேயே பெருக்கி ஒருபக்கம் வைத்து நினைத்த எண்ணில் ஒன்று குறைவாயிருக்கும் நம்பராலேயே பெருக்கி மற்றொருபக்கம் வைத்து முன் வைத்த துகையைப் பின் வந்த துகையிலிருந்து கழித்தமீதிக்கி ஒன்று கூட்டிப் பேர்பாதி நீக்கிவிடின் முன் நினைத்த கணக்கு சரியாயிருக்கும்.

299. கள்ளர் வர்த்தகர் கணக்கு

இதில் பதினைந்து காய்கள் ஒரு ஜாதி மறு பதினைந்து காய்கள் ஒரு ஜாதி ஆக முப்பது மேற்காட்டியபடி கலந்து வைத்து ஒன்பது ஒன்பதாய் வெட்ட பதினைந்து வெட்டறும் மறு பதினைந்திருக்கும்.

300. பெற்றபிள்ளைகள் கணக்குரைத்தல்

இதில் ஆண் ஒன்று பெண் இரண்டு இறந்தது மூன்றில் முதல் தந்தை தாய் இரண்டாவது பிள்ளை ஒன்று ஆக மூன்று அதை இரட்டிக்க ஆறு அம்மான் ஒன்றுசேர்க்க எழு அதை ஐந்தில் பெருக் முப்பத்தைந்து, அதில் பெண் இரண்டு சேர்க்க முப்பத்தேழு அதை பத்தில் பெருக்க முன்னூற்று எழுபது அதில் இறந்தது மூன்று சேர்க்க முன்னூற்று எழுபத்திமூன்று இத்துகையில் இருநூற்றுஐம்பது கழிக்க நூற்றுஇருபத்து மூன்று ஒருஆண் இரண்டுபெண் மூன்று இறந்ததென்றுரைக்க சரியாயிருக்கும்.

301. சோற்பிழை கணக்கு.

3 8 18 23 28 33 38 43 48 53 58 இந்த நாட்களில் எதையாகிலுஞ் செய்கின்றதாய் அல்லது கொடுக்கின்றதாய் கெடுவுகள் வைத்திடின் அது முடிவாகிறதில்லை. அந்தக் கெடுவுகள் கைவிரலை எண்ணிவரவும் நடுவிரலில் வரும் இலக்கந்தான் முற்காட்டிய இலக்கங்கள் இதில் பிசகே நேரும் காரியமாகாது.

302. வாரம் தேதி மாசம் வருஷஞ் சொல்லல்

வாரம் ஞாயிறு முதல் சனி எழில்தான் நினைத்தது புதன் அது நாலு இரட்டிக்க எட்டு பின்னுள்ளது மூன்று சேர்க்க பதினொன்று அதில் எழு கழிக்க மீக்கு நாலுக்கு புதனென்னவும் இப்படியே தேதிக்கு முப்பதும், மாதத்திற்கு பன்னிரண்டும், வருஷத்திற்கு அறுபது சொல்லவும் மற்ற திதி நக்ஷத்திரம் யோகம் கரணங்களுக்கும் அந்தந்த மொத்தத்துகையை முன் போல கழித்துச்சொல்லவும் சரியாயிருக்கும்.

303. நினைத்த கணக்குறைத்தல்

1—முன்னரை மூன்று
1—பின்னரை இரண்டு
3—ஈரரை ஒன்று
4—ஒன்பது நான்கு

ஒருவன் நினைத்தது ஐந்து அதை மூன்றால் பெருங்க மூவைந்து பதினைந்து, அதில் பாதி நீக்கவும் எழரை, முன்னரையின்றி எழை மூன்றால் பெருக்க மூவேழு இருபத்தியொன்று, அதைப்பாதியாக்க பத்தரை, பின்னரையின்றி ஒன்று ஒன்பதுக்குள்ளது நாலு, இந்த நாலும் இரண்டரையும் சேர ஐந்து, ஆறுக்கு இவ்வாறு வகுத்துக்கழிக்க பின்னரை இரண்டுக்கும் ஒன்பதுக்கும் நாலுசேர ஆறு. எழுக்கு முன்னரை மூன்றுக்கும் ஒன்பதுக்கு நாலும்சேர எழு சரியாயிருக்கும்.

304. இதுவுமது

மூட்டைஒன்றுக்குமரக்கால் 11 ஆக. நூற்றுஅறுபது மூட்டைக்கு ஆயிரத்து எழுநூற்று அறுபது இதைவராகன் ஒன்றுக்கு பன்னிரண்டு மரக்காலாக, அதை பன்னிரண்டு பேருக்குக்கொடுக்க வந்தமிச்சம், நூற்றுநாற்பத்து ஆரறையே அறிக்காலேவீசம் வராகனென்று சொல்லவும் இதற்கு மாற்ற ரூபா, அணா, பை இத்தனை என்று சொல்லவும்.

305. இதுவுமது

வராகன் ஒன்றுக்கு மரக்கால் பதிமூன்று ஆக, நாலரை பணத்துக்கு எத்தனை மரக்கால் என்பதற்கு விவரம்:— வராகன் ஒன்றுக்கு சொன்ன மரக்கால் படி யாக்கவும், நூத்தியெட்டு படி, இதை நாலரை பணத்திற்கு மாறவும் நாநூற்றி எண்பத்தாறு இதை வராகன் ஒன்றுக்கு பணம் நாற்பத்தைந்து இந்த பேருக்கு முன் துகையைக்கொடுக்க, வந்த மிச்சம் பத்தே முக்கால்படி என்னவும். இதை மரக்கால், படி, ஆழாக்கு, இத்தனை என்று சொல்லவும்.

306. இதுவுமது

வராகன் ஒன்றுக்கு மரக்கால் பதினொன்று ஆக ஆறு அணாவுக்குள்ள நெல் எவ்வளவென்பதற்கு விவரம்:— முன் பதினொன்று மரக்காலுக்கு படி எண்பத்தெட்டுக்கும், அணா ஆறுக்கு மாற ஐந்நூற்று இருபத்தைந்து, இதை வராகன் ஒன்றுக்கு அணா அம்பத்தாறு ஆக ஐந்துபேருக்கு முன்னிருத்தின துகையைக்கொடுக்க வந்த மிச்சம் ஆரேகா லவீசம்-படி என்னவும்.

307. துகைப்படுப்புக் கணக்கு

ஒருவன் தன்கையிலுள்ள துகையை எடுத்துக்கொண்டு ஓர் அரண்மனைக்குப்போகையில் முதற்பாரா காரனுக்குக்கொடுத்தது-ஒருபங்குபோக, மறு

படியும் இரண்டாம் பாராகாரனுக்குக் கொடுத்தது ஒருபங்குபோக மறுபடியும் மூன்றும் பாராகாரனுக்குக் கொடுத்தது ஒருபங்கு போக, அதைப்பறிமாறி தன்கையிற் காசில்லாது சும்மாய் வருந் தொகையெவ்வளவெனில் இரண்டு ரூபா பத்து அணா இதில் நபருக்கு முக்காலரிக்கால் ரூபா கொடுத்தது.

308. பெண்கள் தொகைப் பெருங்கணக்கு

ஒருவன் கையிலுள்ள தொகையில் முதற்பெண்வீட்டாருக்குக் கொடுத்தது ரூப்பா-பத்து, இரண்டாவது பெண்வீட்டாருக்குக் கொடுத்தது ரூபா பத்து மூன்றாவது பெண்வீட்டாருக்குக் கொடுத்தது ரூபா பத்து போகத் தான் சும்மாய் வருந் தொகை எவ்வளவெனில் எட்டே முக்கால் இதை இரட்டிக்க பதினேழரையில் ஒன்னுக்கு பத்து போக மீதி ரூபா ஏழரை இதை இரட்டிக்க பதினைந்தில் இரண்டுக்கு பத்துபோக மீதி ஐந்து இதை இரட்டிக்க பத்தும் சரியாய் விட்டது.

309. நடுவிலக்குஞ்சொல் கணக்கு

இந்த ஐந்து லக்கமும் மேலிருந்து கீழும்வலதிலிருந்து இடதுவரையும் நேர் நேர் எண்ணிய மொத்தம் இருபதில் நடுவனை தள்ளி நாலும் கூட்டியது பதினாறு கழிக்க மீதி எட்டுக்கு இரண்டு நாலுக்கு நீக்கு மிச்சம் நாலு நடுவிலிருப்பதென்று சொல்லவும் சரியாயிருக்கும்.

310. 9-ல் நடுவெண்சொல் கணக்கு

இந்தஎட்டு இலக்கங்களை மொத்தங்கூட்டிய நாற்பத்தைந்தில்நடுவனை ஒன்பது தள்ளிய மொத்தம் முப்பத்தாறுக்கு நாலு, ஒன்பது, முப்பத்தாறு, நீக்கு மிச்சம் ஒன்பது நடுவிலிருப்பதென்னவும் சரியாயிருக்கும்.

311. 17-ல் நடுகணக்குரைத்தல்

இதில் பதினேழு, இலக்கங்களை மொத்தங்கூட்டிய எட்டில் நடுவனை இரண்டு தள்ளியமொத்தம் எழுபத்தொன்பதுக்கு முன்தொகையிற் பின்தொகையைக்கழித்து நின்ற சேடத்தை எட்டில் பெருக்கி வந்த மிச்சம் நடுவிலிருக்கின்றதென்று சொல்ல சரியாயிருக்கும்.

312. 4-அறைக்கணக்கு

4	3
6	6

இந்த நாலு அறை இலக்கங்களைக் கூட்டிய மொத்தம் பதினெட்டில் ஒருவது மூன்று, ஐந்து, ஆறுக்கு பதிநாலுபோக நீக்கு நாலு, முதலரையிலிருப்பது இரண்டாவது ஐந்து, ஆறு, நாலுக்கு பதினைந்து போக நீக்கு மூன்று மூன்றாவது ஆறு, நாலு, மூன்றுக்கு பதிமூணு போக நீக்கு ஐந்து, நாலாவது நாலு மூன்று, ஐந்துக்கு பன்னிரண்டுபோக நீக்கு ஆறு என்றுசொல்ல சரியாயிருக்கும்.

313. பஞ்சாக்ஷர யந்திர கணக்கு

ஒன்பது கல்லுகளை எடுத்து ஒவ்வொன்றை ஒவ்வொரு மூனையிலிருந்து ஒன்று, இரண்டு, மூன்று, என்பதாய் எண்ணி அந்த இடங்களில் வைத்து மறுபடியும் ஒன்று, இரண்டு, மூன்று, என்பதாய் எண்ணி முதல் தொட்ட இடத்தில் மற்றொரு காயை வைத்து, இவ்வாறு முன்பு தொட்டெண்ணிய இடத்தில் மறுபடியும் காய்களெல்லாம் வைத்தபின் ஒருமூனைமாத்திரங் காயில்லாது சும்மாயிருக்கும். இவ்வாறு வைக்கும் வரிசைமுதல் ஒன்று ஆறு நாலு இரண்டு எழு மூன்று ஐந்து ஒன்பது எட்டு பூஜ்ம் இது பஞ்சாக்ஷர சக்கரமாம்.

314. சூட்சுமகணக்கு அறியும் வித்தை

ஆயிரம் வீரர்களை வரிசையாய் நிறுத்தி, சேனாதிபதி முதல் நின்றவனுக்கு ஒரு பழமும் இரண்டாவது நின்றவனுக்கு இரண்டு பழமும் இவ்வாறு கடைசியில் நின்றவனுக்கு ஆயிரம், பழமும் அளித்ததில் பின்பெல்லோரும் வாங்கிய பழத்தை ஒரு பெருங்கூடையிற்போட்டுள்ள மொத்தம் எத்தனை பழமெனில் முதல் எண்ணிலிருந்து ஆயிரம் எண்வரையிற் கூட்டிய மொத்தம் விடை கடை என ஆயிரத்தில்பாதி ஐந்நூறும் பெருக்கிவந்த தொகையோடு, பின்பேர்பாதியைக் கூட்டியமொத்தம் கடைசித்தொகை ஆயிரம்அதிற்பாதி ஐந்நூரில் பெருக்கிவந்த தொகை ஐம்பதினாயிரம் இதனுடன் ஆயிரத்தில் பாதி ஐந்நூறு கூட்டவும் ஆகமொத்தம் 500, 500 என்றுசொல்லவும்.

315. கல்லூன்றுங் கணக்கு

இம்மாதிரி சுற்றளவு கோடுகளிழுத்து ஆரில் அவ்வாறாய் எண்ணி இட்ப்புறமடியில் ஒண்ணிலிருந்துவைக்க ஏழாம்வீட்டிலும், இரண்டிலிருந்துவைக்க ஒரும் வீட்லும் மூன்றிலிருந்துவைக்க இரண்டாம் வீட்டிலும் நாலிலிருந்துவைக்க மூன்றும் வீட்டிலும் ஐங்லி லிருந்துவைக்க நாலாம் வீட்டிலும் ஆறி லிருந்துவைக்க ஐந்தாம் வீட்டிலும் நடுசுன்னம் காலியாயிருக்கும்.

316. காரியஞ்சித்தியாகும் ஜாலம்

வேலமரத்தின்மேலிருக்கும் புல்லுருவியைக் கார்த்திகை நக்ஷத்திரமும் செவ்வாய்க்கிழமையுங்கூடியதினத்தில் கொண்டுவந்து அதினுடன் கஸ்தூரியும் குங்குமமுஞ் சேர்த்து அரைத்து மாத்திரைகளாகத்திரட்டி வைத்துக்கொண்டு வேண்டுமானபோது கொசுத்தேனிலிழைத்துத் திலர்தமிட்டுச்செல்ல எக்காரியங்களும் பலிக்கும் வழக்குகள் வெல்லும்.

317. எதிரிகளைவெல்லும் ஜாலம்

புளியமரத்தின்மேலிருக்கும் புல்லுருவியை பூராட நக்ஷத்திரத்தில் காப்புகட்டி பொங்கல்பலி தூபதீபங்கொடுத்துக்கொண்டுவந்து கஸ்தூரி குங்குமம் பச்சைக்கற்பூரம்சேர்த்து குப்பைமேனிசாறுவிட்டரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது சீதாதேவி செங்கழுநீர்விட்டு சந்தனத்திற்கலந்து திரேகத்திற் பூசிக்கொண்டு எதிரிகளிருக்கும்படியான போர்முகத்திற்குச்செல்ல எதிரிகளின்படைகளானது முறிந்து ஓடிப்போகும் அதை மாத்திரையாகத்திரட்டி வைத்துக்கொண்டு தேவையானபோது நெய்யில்குழைத்துத் திலர்தமிட்டுச்செல்ல சகலகாரியங்களுங் கைகூடும். மேற்படிதினத்தில் அவ்வேரை இரும்பினாலாகிய ஆயுதங்கள்படாது கொண்டுவந்து குளிசமாடிக் கட்டிக்கொள்ள ஸ்திரீவசியமாகும் பஞ்சலோகத்தகட்டில் வசியசக்கரத்தைக்கீறி வசியமந்திரத்தை நூற்றியெட்டுரு கொடுத்து வேரை அதில் வைத்துச்சுருட்டி கட்டிக்கொள்ள புருடவசியமாகும்.

318. இதுவுமது.

எட்டிமரத்தின்மேல்முளைத்திருக்கும் புல்லுருவியை மூலநக்ஷத்திரமுஞ் செவ்வாய்க்கிழமையுங்கூடியதினத்தில் காப்புகட்டிக்கொண்டுவந்து அதனுடன் கஸ்தூரிமஞ்சள் கிராம்பு பூண்டுஇவைகளைச்சேர்த்து பேய்க்கருப்பன் சாறுவிட்டரைதது மாத்திரைகளாகத்திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது காராவின் நெய்யில்குழைத்துத்திலர்தமிட்டுச்செல்ல எதிரிகளெல்லாம் வணங்கி சமாதானமாவார்கள்.

319. ஆயுதங்கள் ஒடியும் ஜாலம்.

மேற்படிமரத்தின்மேல் படர்ந்திருக்கும் புல்லுருவியை மகநக்ஷத்திரமும் வியாழக்கிழமையுங்கூடியதினத்தில் காப்புகட்டி பொங்கலிட்டு கருங்

கோழிபலிகொடுத்துக்கொண்டுவந்து அத்துடன் குங்குமம் சவ்வாது பச்சைக்கற்பூரஞ்சேர்த்து அரைத்து மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக்கொண்டு தேவையானபோது காராவின்நெய்யிற்குழைத்துத் திலர்தமிட்டுக்கொண்டுபோனாலுஞ்சரி அல்லது மேற்படி பாலிலிழைத்து திரேகத்திற்பூசிக்கொண்டுபோனாலுஞ்சரி நம்மேல்படுகிற ஆயுதங்கள் எப்பேர்ப்பட்டதாயிருந்தாலும் அதுகளெல்லா மொடிந்துவிடும். அதைக் குளிசமாடிபகையாளியின் வரயற்படியில் கருவைச் சேர்த்து புதைத்துவைக்க அவ்வீடு நாசமடையும்.

320. சர்வஜனவசிய ஜாலம்

வேப்பமரத்தின்பேரிலிருக்கும் புல்லுருவிக்கு அமிர்தயோகமும் குருவாரமும் ரோகணிநக்ஷத்திரமுங்கூடியதினத்தில் காப்புகட்டி பொங்கலிட்டு சூரியனைத்தியானஞ்செய்து தூபதீபங்கொடுத்து வந்துவிடவும் மறு செவ்வாய்க்கிழமைகாலை சூரியோதயத்திற்குமுன்சென்று இரட்டை ஊமத்தங்காயைப் பலிகொடுத்து கொடியுடன் இலையைக்கொண்டு சார்பிழிந்து சட்டியில்தடவிக்காயவைத்து காய்ந்தபிறகு அதின்பேரில் சீதேவி செங்கழுநீர்சார் பொன்னாங்கண்ணிச்சார் இதுகள் இரண்டையுந்தடவி காயவைத்து காய்ந்தபிறகு கஸ்தூரி குங்குமப்பூ பச்சைக்கற்பூரம் இம்மூன்றையுஞ் சமயெடையாகயெடுத்துப் புத்துத்தேன்விட்டரைத்துப்பூசி ஆலாத்திக்கற்பூரத்தைக்கொளுத்தி அப்புகைப்பிடித்து வழித்துச்சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது திலர்தமிட்டுச்செல்ல சர்வஜனங்களும் வசியமாகி உனக்கடங்கிநடப்பார்கள்.

321. இதுவுமது

இலுப்பைமரத்தின்பேரிலிருக்கும் புல்லுருவிச்செடிக்கு சித்திரைநக்ஷத்திரமுஞ் செவ்வாய்க்கிழமையுங்கூடியதினத்தில் சாபநிவர்த்திசெய்து மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கல் பலி தூபதீபங்கொடுத்துக் கொண்டுவந்து சார்பிழிந்து சட்டியில்தடவி அதின்பேரில் கஸ்தூரி கோரோசனம் இவ்விரண்டையும் பசுப்பாலிலரைத்துப்பூசிக் காய்ந்தபிறகு காராவின் வெண்ணெயை அதின்பேரில் தடவி கற்பூரங்கொளுத்திப் புகைபிடித்து அப்புகையைவழித்துச் சிமிளில்வைத்துக்கொண்டு தேவையானபோது நெற்றியில் திலர்தமிட்டுச்செல்ல ஸ்திரீகள்முதல் சகலவசியங்களுமாகும் வழக்குகளெல்லாம்வெல்லும் பகையாளிகளும் உறவாவார்கள்.

322. இவுதுமது

சந்தனமரத்தின்பேரில் தொங்கிக்கொண்டிருக்கும் புல்லுருவியைச் சாபநிவர்த்திசெய்து பூசநக்ஷத்திரத்தில் மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டுவந்துவிடவும அடுததநாள் காலையில் சென்று தீபதூபங்கொடுத்து வெள்ளைச்சாவல் பலியுடன் அதை எடுத்துவந்து சாறுபிழிந்து சட்டியில் தடவி அதின்பேரில் சந்தனத்தை பொன்னாங்கண்ணியின் சாறுவிட்டுக் குழைத்து காயவைத்துக் காய்ந்தபிறகு புத்துத்தேனைத்தடவி கற்பூரப் புகைபிடித்து வழித்துச் சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது கணபதியைநினைத்து திலர்தமிட்டுச் செல்ல தேவர்முதல் மானிடர்கள் வரையில் வசியமாவார்கள். அந்நக்ஷத்திரத்தில் கொண்டுவந்த வேரைக் குளிசமாடிக் கட்டிக்கொள்ள ஸ்திரீவசியமாகும்.

323. சகலகாரியங்களும் கைகூடும் ஜாலம்.

ஆலமரத்தின்மேல் முளைத்திருக்கும் புல்லுருவிச்செடிக்கு சுவாதிநக்ஷத்திரமும் திங்கள்கிழமையுங் கூடியதினத்தில் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி பொங்கல்பலிதூபதீபங்கொடுத்துக்கொண்டுவந்து சார்பிழிந்து அத்து

டன் கஸ்தூரி குங்குமம்பூ கோரோசனம் இவைகளைச் சேர்த்து அரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு திலர்தமிட சகலகாரியங்களும் கைகூடும்.

324. கர்ப்பமுணடாகும் ஜாலம்

அரசமரத்தின்மேல் முளைத்திருக்கும் புல்லுருவிச்செடிக்கு சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி பொங்கலிட்டுக்கொண்டுவந்து அதில் காலைந்து இலைகளையெடுத்து மிளகு காயம் இவைகளைச்சேர்த்து பசும்பாலிலரைத்து காலையில் கெச்சக்காய்பிரமாணம் ஆறுவேளை சாப்பிட கர்ப்பமுண்டாகும்.

325. வசியமாகும் ஜாலம்

வேப்பமரத்தின்மேல் படர்ந்திருக்கும் புல்லுருவிச் செடியை அனுஷநக்ஷத்திரத்தில் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி ரோகணிநக்ஷத்திரத்தில் கொண்டுவந்து சாறுபிழிந்து ஓர்சட்டிக்குத்தடவிக் காய்ந்தபிறகு அதின்மேல் சீதாதேவி செங்கழுநீர் வெள்ளைக்காவாளை நிண்ணுசிணுங்கி இம்மூன்று சாறுகளையும் ஒன்றின்மேல் ஒன்ருகத்தடவி காயவைத்து காராவின் நெய்யில் விளக்கேற்றி அப்புகையை அச்சட்டியில் பிடித்து புத்துத்தேன்விட்டு குழைத்துவைத்துக்கொண்டு வேண்டியபோது திலர்தமிட்டுச்செல்ல சகலவசியங்களும் கைகூடும் பகையாளிகளும் உறவாவார்கள். அவ்வேறைக்குளிசமாடிக் கட்டிக்கொள்ள வழக்குகள்வெல்லும் வியாபாரமும் விர்த்தியாகும்.

326. பகைவர்வணங்கும் ஜாலம்.

பூவரசமரத்தின்மேல் படர்ந்திருக்கும் புல்லுருவிச்செடிக்கு கேட்டைநக்ஷத்திரமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி பொங்கல்பலி தீபதூபமுதலியவைகளைபலமாகச்செய்து இரும்பாலாகிய ஆயுதங்கள் படாமலும் கைநகங்கள்படாமலுங் கொண்டுவந்து அதனுடன் கஸ்தூரிகோரோசனை பச்சைக்கற்பூரஞ்சேர்த்துகாராவின் நெய்யைவிட்டு மைபோலரைத்து வைத்துக் கொண்டு தேவையானபோது கொஞ்சமெடுத்து புருவத்தின்மத்தியில் திலர்தமிட்டுக்கொண்டுபோக பகையாளிகளெல்லாம் வணங்கி இஷ்டப்படி நடப்பார்கள்.

327. பகைவர் நாசமாகும் ஜாலம்

எட்டிமரத்தின்மேல் முளைத்திருக்கும் புல்லுருவிச்செடிக்கு மூலநக்ஷத்திரமும் ஞாயிற்றுக்கிழமையுங்கூடிய தினத்தில் காப்புகட்டி பொங்கல் பலி தீபதூபங்கொடுத்து கொண்டுவந்து காந்தம் கோரோசனை கஸ்தூரிமஞ்சள் இம்மூன்றையுஞ்சேர்த்துச் சீலையில்தடவி நிழலிலுலர்த்தித் திரிதிரித்து அத்திரியை அகலில்போட்டு வேப்பெண்ணெய்விட்டுக்கொளுத்தி அம்மையை பிராமணப்பிள்ளையின் தலைமண்டையோட்டில் பிடித்து வழித்துக்கொண்டு பகையாளிகளின் மூத்திரத்தில் குழைத்து அவர்கள் வாசற்படியில் தெளித்துவைத்தாலுஞ்சரி அல்லது சுடுகாட்டு எலும்பில்தடவி அவர்கள் வாசற்படியில் புதைத்துவைத்தாலுஞ்சரி அவர்கள் நாசமடைவார்கள்.

328. வேறு.

அழிஞ்சிமரத்தின்மேல் படர்ந்திருக்கும் புல்லுருவிச்செடிக்குச் செவ்வாய்க்கிழமையும் கேட்டை நக்ஷத்திரமுங்கூடியதினத்தில் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி பொங்கலிட்டுக் கறுப்புக்கோழி பலிகொடுத்து அந்த இரத்தத்தை புதுச்சட்டிக்குத்தடவி அதின்மேல் மேற்படி சாற்றைத் தடவி சாம்பிராணியை நெருப்பிலிட்டு புகைத்து அப்புகையை அச்சட்டியில்

பிடித்து வழித்துக்கல்வத்தில்போட்டு பகைவர்களின் காலடிமண்சேர்த்து அவர்களின்நீரிஞலரைத்து எட்டிக்கொம்பிற்குத்தடவி மாடன்மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி அவர்களின் வாயற்படியில் புதைத்துவைக்க அவர்கள் நாசமடைவார்கள்.

329. வேறு.

மாடிரத்தின்பேரில் முளைத்திருக்கும் புல்லுருவியைமூலநக்ஷத்திரத்தில் மூன்மாதிரிகொண்டுவந்து அதனுடன் கருவாப்பட்டையும் இலிங்கமுஞ் சேர்த்தரைத்து வைத்துக்கொண்டு தேவையானபோது நீட்டுச்சிலையைக் கசக்கி இதிற்கொஞ்சம் சேர்த்து கொத்தான்சாறும் பேய்க்கருப்பன்சாறும் விட்டுக்குழைத்து பகைவர்களின் வீட்டிலாகிலும் அவர்களின்பேரிலாகிலுந் தெளிக்க அவர்கள் நாசமடைவார்கள்.

330. எதிரிகள் தோற்கும் ஜாலம்

வேங்கைமரத்தின்பேரிலிருக்கும் புல்லுருவிக்கு சித்திரைநக்ஷத்திரமுஞ்செவ்வாய்க்கிழமையுங்கூடிய தினத்தில் காப்புகட்டி பொங்கல் பலி தூபதீபங்கொடுத்துக் கொண்டுவந்து அதனுடன் கோரோசனை குங்குமப்பூ கஸ்தூரிமஞ்சள் பச்சைக்கற்பூரம் முதலிய சரக்குகளைச்சேர்த்து சீதாதேவி செங்கழுநீர் சாறுவிட்டரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது புத்துத்தேனிலரைத்துத் திலர்தமிட்டுச்செல்ல எதிரிகளெல்லாம் வணங்கி சமாதானப்படுவார்கள். அதைக்குளிசமாடிக் கட்டிக்கொள்ள சகல காரியங்களும் கைகூடும்.

36	43	2	7
6	3	40	39
42	37	8	1
4	5	38	41

331. முகவசிய ஜாலம்

இந்தச் சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி பூசையில் வைத்து வசிய மந்திரத்தை ஆயிரத்தெட்டோதிக் குளிசமாடி வைத்துக்கொண்டுபோக இராஜவசிய முதல் சகலவசியங்களும் கைகூடும் சத்துருக்களும் வணங்கி உறவாடுவார்கள்.

28	35	2	7
6	3	32	31
34	29	8	1
4	5	30	33

332. குழந்தைகளின்தோஷங்கள் தீரும் ஜாலம்

இந்தச்சக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி பூசையில்வைத்து தூபதீபத்துடன் கணேச மூர்த்தியைத் துதித்து குழந்தைகளுக்குக் கட்ட சகலபிணிகளுந் தீரும் பதினாறு வயதுவரையிலும் யாதொருதோஷங்களும் அணுகாது எப்பேர்ப்பட்ட கிரகங்களாயிருந்தாலும் விலகி விடும்.

8	15	2	7
6	3	12	11
14	9	8	1
4	5	10	13

333. தாதுபுஷ்டியுண்டாகும் ஜாலம்.

இந்தச்சக்கரத்தைச் செப்புத்தகட்டிலெழுதிப் பூசித்துக் குளிசமாடி கட்டிக்கொள்ள சொர்ப்பனஸ்கலித முதலியவைகள் நிவர்த்தியாகி திரேகந்தழைத்து தாது புஷ்டியைக் கொடுக்கும்.

44	51	2	7
6	4	38	47
50	45	8	1
4	5	46	49

334. காய்ச்சலொழியும் ஜாலம்

இந்தசக்கரத்தைச் செப்புத்ககட்டிலெழுதி விடாத காய்ச்சலுள்ளவர்களுக்குப் பூசித்து அர்ச்சனை செய்து கட்ட எப்பேர்ப்பட்ட காய்ச்சலும் முறைக்காய்ச்சலும் தீராதகாய்ச்சலும் தீரும்.

9	16	2	7
6	3	13	12
15	10	8	1
4	5	11	14

335. பெரும்பாடு தீரும் ஜாலம்

இந்தசக்கரத்தை செப்புத்தகட்டிலெழுதி அர்ச்சனை செய்து பூசித்து பெரும்பாடு கொண்டவர்களுக்குக் கட்ட பெரும்பாடானது தீரும்.

62	69	2	7
6	3	66	65
68	63	8	1
4	5	64	67

336 பைத்தியந்தீரும் ஜாலம்

இதை செப்புத்தகட்டிலெழுதி பூசையில் வைத்து அர்ச்சனைசெய்து பைத்தியம்பிடித்தவர்களுக்குக் கட்டிவிட பைத்தியமானது நிவர்த்தியாகும்.

28	35	2	7
6	3	32	31
34	29	8	1
4	5	30	33

337. குழந்தைகள் சவலைபோவதற்கு ஜாலம்

இதை செப்புத்தகட்டிலெழுதி பூசையில் வைத்துப் பூசித்து சவலைபோகும் குழந்தைகளுக்குக் கட்ட அதுகள் தாட்டியாய் ஓங்கிவளரும் பூசைசெய்யும் போது குளிசத்திற்குக் கருங்கோழி பலிகொடுக்கவும்.

31	38	2	7
6	3	35	34
37	32	8	1
4	5	33	36

338. இதுவுமது

இதை செப்புத்தகட்டிலெழுதிப் பூசையில் வைத்துப் பூசித்துச் குளிசமாடி கட்டிவைக்க குழந்தைகள் தாட்டியாக ஓங்கிவளரும்.

8	15	2	7
6	3	12	11
14	9	8	1
4	5	10	13

339, கர்ப்பந்தரிக்கும் ஜாலம்

இதைச் செப்புத்தகட்டிலெழுதி பூசித்து அர்ச்சனை புரிந்து மலடுள்ள ஸ்திரீகளுக்குக் கட்டிவைக்க மலடு நீங்கி கர்ப்பந்தரிக்கும் கைகண்டது.

340. பேதன ஜாலம்

மஞ்சள்கிழங்கினால் எதிரியைப்போல் உருவஞ்செய்து அவ்வுருவின் கீல்களுக்கெல்லாம் சுடலைக்கருவைத்தொட்டு முள்ளினால் குத்தி பேதன மந்திர.த்தைச் செபித்து ஏதிரியின் மனையைச்சுற்றி எடுத்துக்கொண்டுபோய் சுடலையில்வைக்க எதிரி பயித்தியம்பிடித்தவனைப்போல் அலைவான்.

341. சர்வபேதன ஜாலம்

ஐங்காயம் சுடலைக்கரு ஐங்கோலம் இவைகளைக் கூட்டிவைத்துக்கொண்டு எதிரியின் உருவைச்சுடலையின் மண்ணாற்செய்து நல்லபாம்பின் முள்ளினால் கருவைத்தொட்டு கீல்களுக்குக் குத்தி பேதனமந்திரத்தைச் செபித்து அவன்வீட்டுவாயற்படியில்வைக்க அவன்பிரமைகொண்டு அலைகுவான்.

342. தேவர்களைக் காட்டும் ஜாலம்

சிறு முன்னை யென்கிற செடிக்கு ஆதிவாரதினம் சாபநிவர்த்தி செய்துக் காப்புகட்டி பொங்கலிட்டு தூபதீபங் கொடுத்து ஆணி வேராமல் பிடுங்கிவந்து நிழலிலுலர்த்திப் பொடிசெய்து அதை வெள்ளைத்துணியில் வைத்து திரியாகத் திரித்து ஐங்கோலத் தைலத்தில் நனைத்து ஓர் புது அகலில் போட்டு விளக்கேற்றி வைத்துவிட்டு எந்தத் தேவரை நினைக்கின்றோமோ அந்தத் தேவர்கள் கண்ணுக்குத் தோன்றுவார்கள் பிறகு விளக்கை அணைத்துவிட எல்லாம் மாயமாகப் போகும். பார்ப்பவர்கள் உன்னை மஹா மந்திரவாதி யென்று சொல்லுவார்கள்.

343 அஞ்சன ஜாலம்

கரும்பூனை கீறிப்பிள்ளை, இரட்டைவாலரணை திகைப்பூண்டுபூச்சி பேய்பீர்க்கன் விரை புல்லாமணக்கன் விரை இவைகளை வகையொன்றுக்கு ஓர் பலமாக நிறுத்தெடுத்து யாவையும் ஒன்றாக நறுக்கி பேய்ப்பீர்க்கன் சாற்றில் போட்டு ஒரு சாமம் ஊறவைத்து எடுத்துலர்த்தி மறுபடியும் ஆற்றுத்தும்மட்டிக்காய் சாற்றில் ஒரு சாமம் ஊறவைத்து உலர்த்தி ஓர் பானையில் போட்டுக் குழித்தைலமிறக்கி அதற்குச்சரியெடை ஐங்கோலத் தைலஞ் சேர்த்து பிறகு ரசம், சங்குபாஷாணம் முப்பூ இவைகளை வகையொன்றுக்கு ஒரு கழஞ்சு சேர்த்துக் கல்வத்திலிட்டு மைபோலரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு ஜாலக்காளைத் துதித்து பிறகு ஓம் ஸ்ரீரீம் கிரீம் கிலியும் சவ்வும் ஐயும் அவ்வும் உவ்வும் அவ் கூ கூ நீலகண்டி யென்று எட்டு நாள் விடாது தினமொன்றுக்கு லக்ஷத்தியெட்டுரு செபிக்க அஞ்சனத்திற்கு உயிருண்டாகும். அப்போது அதை யெடுத்துப் பத்திரப்படுத்திக்கொண்டு உன்னிஷ்டத்தைப்போல் எந்த வேலைகளையுஞ் செய்துக்காட்டலாம். பார்ப்பவர்களும் மஹா சந்தோஷப்பட்டு உன்னை மெச்சுவார்கள்.

344. நூலேணி ஜாலம்

ஓர் நூலேணிக்குக் கொஞ்சம் மையைத் தடவி ஓர் முனையை விசறி ஆகாயத்திலெறிய அது பார்ப்பவர் கண்களுக்கு மெத்தைப்படியைப்போலிருக்கும். அது சமயம் கைகளில் மையைப் பூசிக்கொண்டு மண்ணையள்ளி நாலு திக்கிலும்போட பார்ப்பவர் கண்களுக்கு வெகு சேனைகள் வருகின்றதைப்போலிருக்கும். நீலகண்டியம்மா இந்த நூலேணியைக் கைக்கொள்ளென்று சொல்லி ஆகாயத்தில் விட்டெறிய அது அந்தரமாக நிற்கும். மேற்படி நூலேணியைத் தரையில் முளையடித்து ஓர் முனையைக் கட்டிவிட்டு தான் மேலே யெறியவேண்டும் இல்லாவிடில் அது அந்தரமாகவே போய்

விடும். அப்போது ஜனங்களைப் பார்த்து இதோ ஆகாயத்தில் சண்டை நடக்கின்றதையும் ஜனங்கள் போகின்றதையும் பாருங்களென்று சொல்லிக் கொண்டே நீலகண்டியைத் தியானிக்க பார்க்கின்றவர்களுக்கு நீ சொல் லின்ற மாதிரியே தெரியும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

345. மனிதரின் தலைகள் விழும் ஜாலம்

முன் வீசியெறிந்த நூலேணியின் பேரிலேறி வாழைத்தண்டுக்கு மை யைப் பூசி துண்டுதுண்டாக வெட்ட அது மனிதர்களின் தலைகளைப்போல திரள்திரளாக வந்துவிடும்.

346. ஆனைத்தலைகள் விழும் ஜாலம்

முன் மாதிரி சலியாண பூசனிக்காய்க்கு மையைத் தடவி நூலேணி யின் பேரிலேறி வெட்ட ஆனைத்தலைகள் வந்து விழும்.

347. குதிரைத்தலைகள் விழும் ஜாலம்

நூலேணியின் பேரிலேறி நல்ல பூசனிக்காய்க்கு மையைத் தடவி நீல கண்டியைத் தியானித்து வெட்ட பார்ப்பவர் கண்களுக்கு குதிரைத் தலை களைப்போல வந்து விழும்.

348. சேனைகள் வந்து விழும் ஜாலம்

கெச்சக்காய்க்கு மையைத்தடவி எடுத்துக்கொண்டுநூலேணியின்பேரி லேறி வெட்டிக்கீழேபோட பார்ப்பவர்களின் கண்களுக்கு அனேகசேனை கள் சண்டையில் வெட்டுப்பட்டுக் கீழேவிழுந்ததாக நினைத்துக்கொள்வார் கள் மறுபடியும் அதுகளையெல்லாம் ஒன்றுசேர்த்து ஜலந்தெளித்து நீலகண் டியைத் தியானித்துப்போவென்று சொன்னால் யாவும் மாயமாய்ப்போய்வி டும் பார்க்கின்ற ஜனங்களும் உன்னை மஹாவேலைக்காரனென்று மெச்சிக் கொள்ளுவார்கள். இந்த ஜாலமே உலகத்திலுள்ள ஜாலங்களுக்கெல்லாம் மேலான உயர்ந்த இந்திரஜாலமாகுமென்று என் குருசுவாமியினுடைய பா தாரவிந்தங்களைத்தொழுது யானுகிய தேவேந்திரநாத் சொல்லுகிறேன்.

349. மகேந்திர ஜாலம்

ஜாலக்காளைத் தியானித்து மையையெடுத்து இரண்டுகைகளிலும் பூசிக் கொண்டு அஷ்டதிசைகளிலும்போட்டு நீலகண்டியைத்தியானிக்க அஷ்ட குலபர்வதங்கள் மகாமேரு கைலைபொதிகை முதலியமலைகளும் அவைகளில் வாசஞ்செய்யப்பட்ட சித்தர்முதலிய பெரியபெரியதபோதனர்களும் பெரிய விருக்ஷங்களுமாகக் காணப்படுமென்றுபோகருடைய கடாக்ஷத்தினுல்சொல் லுகிறேன்.

350. சமுத்திர ஜாலம்

முன்போல் மையைக்கைகளிற் பூசிக்கொண்டு மண்ணையள்ளி நாலுதி சைகளிலும்போட்டு சமுத்திரமுண்டாகவேணுமென்று ஜாலக்காளையும் நீல கண்டியையும் மனதினிடமாகத் தியானிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு சத்த சமுத்திரங்களும் பட்டு தோணிகளும்தெரியும் அதைக்கண்ட மனிதர் களெல்லாம் பிதுர்கலங்கி நீதேவனே! சித்தனே! வென்று ஐயுறுவார்கள்.

351. சங்கிலியை விழுங்கும ஜாலம்

மையைக்கைகளில் பூசிக்கொண்டு ஓர்பெரிய சங்கிலியையெடுத்து அனை வர்க்குங்காட்டி இதை விழுங்கி விடுகிறேன் பாருங்களென்று சொல்லிவாய்

க்கு நேர்வைத்து பின்புறத்தில் போட்டுவிட பார்ப்பவர்கள் நீசங்கிலியை விழுங்கிவிட்டாயென்றே நினைத்துக்கொள்வார்கள்.

352. கத்தியை விழுங்கும் ஜாலம்

ஓர்பெரிய பட்டாகத்திக்குமையைத்தடவி அனைவர்க்குங்காட்டி இதை விழுங்கிவிடுகிறேன் பாருங்களென்றுசொல்லி கத்தியை வாய்க்குநேர்வைத்து ஜாலக்காளைத்தியானித்துப் பின்புறத்தில்போட்டுவிட எல்லோரும் நீகத்தியை விழுங்கி விட்டாயென்றே நினைத்துக்கொள்வார்கள்.

353. பலவிதஜாலங்களாடுதற்கும் மைசெய்யும்விதம்

அண்ணுதுளுத்தா அடிவணங்கி நிலத்தப்பி சுவராடை அன்றெறிஞ்சான் இவைகள் ஐந்தையும் குழித்தைலமிரக்கி அதில் ஐங்கோலமும் சீலைக்ட்டகரியுஞ்சேர்த்து அரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு வராகியைப் பூசித்து பின்பு காளிகோவிலின் எதிரில் நாற்பது நாள்புதைத்து எடுத்து வைத்துக்கொண்டு பலவித ஜாலங்களும் விளையாடலாம் எப்படியென்றால்.

354. மனிதனுகும் ஜாலம்

ஞாயிற்றுக்கிழமையும் பூராடமுங்கூடிய தினத்தில் ஜாலமாடுஞ்சபையில் இருக்கும் ஜனங்களைப்பார்த்து நான்தமாஷாக ஒருவேடிக்கைசெய்து காட்டுகிறேன் பாருங்களென்றுசொல்லி மேற்படி மையைத்தொட்டு திலர்தமிட்டுக்கொண்டு நிற்க அங்குள்ள ஜனங்களின் கண்களுக்கு அவரவர்களின் மனிதனைப்போலவே அவர்கள் கண்களுக்குத் தோன்றப்படுவாய் அவர்களெல்லாம் ரொம்பவும் ஆச்சரியப்படுவார்கள்.

355. பெண்ணுகும் ஜாலம்

ரோகணி கூடிய செவ்வாய்க்கிழமையில் மேற்படி மையைத்தொட்டு திலர்தமிட்டுக்கொண்டு சபையில் நின்று மாயமோகினியைத் தியானிக்கும் பக்ஷத்தில் அங்குள்ள ஜனங்களின் கண்களுக்கு ஓர் ரூபலாவண்ய முள்ள ஸ்திரீயைப்போலவே காணப்படுவாய் பிறகு பொட்டைக்கலைத்துவிட அங்குள்ளவர்களெல்லாம் ஏமாந்து ஐயோ இங்கிருந்த பெண்ணைக்காணேமே யென்று பரிதாபப்படுவார்கள்.

356. குருவாகும் ஜாலம்

சித்திரை நக்ஷத்திரங்கூடிய வெள்ளிக்கிழமையில் மேற்படி மையைத்தொட்டு திலர்தமிட்டுக்கொண்டு ஜாலக்காளைத்துதித்து சபையில் நிற்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு அவரவர்களின் வம்சகுருவைப் போலவே தோன்றுவாய் அவர்களெல்லாம் இதென்ன ஆச்சரியம் நமதுகுரு இங்கிருக்கின்றாரே என்று ஒவ்வொருவரும் பிரளுவார்கள் அது சமயம் மையைக்கலைத்துவிட அவர்களெல்லாம் ஏமாறுவார்கள்.

357. இராஜனுகும் ஜாலம்

ரோகணி நக்ஷத்திரமும் சோமவாரமுங்கூடிய தினத்தில் மலையாளபகவதியைத் தியானித்து இராஜனுகவேணுமென்று நினைத்து மையைத்தொட்டு திலர்தமிட்டுக்கொண்டு சபையில் நிற்கும்பக்ஷத்தில் அங்கிருக்கும்ஜனங்களின் கண்களுக்கு நீ ஓர் இராஜனைப்போலவே தோன்றுவாய் மையைக்கலைத்துவிட எப்போதும்போல் மனிதனுய்விடுவாய் எல்லோரும் மகா ஆச்சரியப்பட்டு உன்னை மெச்சுவார்கள்.

358. மந்திரியாகும் ஜாலம்

அசுவனி நக்ஷத்திரமும்செவ்வாய்க்கிழமையுங்கூடியதினத்தில் மையை யெடுத்து திலர்தமிட்டுக்கொண்டு குலதெய்வத்தைத்தியானித்துமந்திரியாக வேணுமென்று மனதில் நினைத்து சபையில் நிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு நீமந்திரியைப்போலவே தோற்றப்படுவாய்.

359. சேனபதியாகும் ஜாலம்.

அவிட்ட நக்ஷத்திரமும் ஞாயிற்றுக்கிழமையுங் கூடியதினத்தில் காளியைத்தியானித்து மையையெடுத்துத்திலர்தமிட்டுக்கொண்டு சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு நீ ஓர்சேனதிபதியைப்போலவே தோன்றுவாய்.

360. சேவகனாகும் ஜாலம்

பரணியும் திங்கட்கிழமையுங் கூடியதினத்தில் மலையாளபகவதியைமனதில் நினைத்துமையையெடுத்து திலர்தமிட்டுக்கொண்டு சேவகனைப்போல தோன்றவேண்டுமென்று மனதில் நினைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு சேவகனைப்போலவே தோன்றப்படுவாய்.

361. சித்தர்களாகும் ஜாலம்

சித்திரை நக்ஷத்திரமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் மாயமோகினியைத் தியானித்து மையையெடுத்து திலர்தமிட்டுக்கொண்டு சபையில்வந்து நின்றால் பார்ப்பவர்களின் கண்களுக்கு சித்தர்களைப்போலவே காணப்படுவாய்.

362. ஞானிகளாகும் ஜாலம்

ரேவதிநக்ஷத்திரமும் வியாழக்கிழமையுங்கூடியதினத்தில் ஜாலக்காளை மனதில் நினைத்து மையையெடுத்துப் பொட்டிட்டுக்கொண்டு ஞானியாகவேணுமென்று மனதில் நினைத்துக்கொண்டு சபையில்வந்து நிற்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு மூப்பாழையுங் கடந்த ஞானியைப்போலவே தோன்றும் உன்னைப்பார்ப்பவர்களெல்லாம் நீமகாவேலைக்காரனென்றுசொல்லிக்கொண்டாடுவார்கள்.

363. புலியாகும் ஜாலம்

சுவாதிநக்ஷத்திரமும் ஆதிவாரமுங்கூடியதினத்தில்ஜாலக்காளைமனதில் நினைத்து மையையெடுத்துத்திலர்தமிட்டுக்கொண்டு புலியாகவேணுமென்று மனதில் நினைத்து சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கெல்லாம் நீபுலிமாதிரியே தோன்றுவாய் எல்லோரும்பயப்பட்டுஉன்னை மகாவேலைக்காரனென்று மெச்சிக்கொள்ளுவார்கள்.

364. கரடியாகும் ஜாலம்

அஸ்த நக்ஷத்திரங்கூடிய ஆதிவாரத்தில்மேற்படிமையையெடுத்து ஜாலக்காளைமனதில் தியானித்து திலர்தமிட்டுக்கொண்டு கரடியாகவேணுமென்று சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு நீ கரடியைப்போலவே தோன்றுவாய் ரொம்பவும் ஆச்சரியப்படுவார்கள்.

365. குரங்காகும் ஜாலம்

அனுடநக்ஷத்திரமும் ஆதிவாரமுங்கூடியதினத்தில் மையைத்தொட்டு மோகினியைத் தியானித்துதிலர்தமிட்டுக்கொண்டு குரங்காகவேணுமென்று

மனதில் நினைத்துக்கொள்ளும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு நீ குரங்கைப்போலவே தோன்றுவாய்.

366. கழுதையாகும் ஜாலம்

பூராட நக்ஷத்திரமுஞ் சோமவாரமுஞ் சேர்ந்த தினத்தில் மலையாளபகவதியைத் தியானித்து மையைப்பொட்டிட்டுக்கொண்டு கழுதையாகவேணுமென்று நினைத்துக்கொண்டு சபையில்வந்து நிற்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு நீ கழுதையைப்போலவே தோன்றுவாய்.

367. கோவேறு கழுதையாகும் ஜாலம்

ஆயில்ய நக்ஷத்திரமும் வியாழக்கிழமையுங்கூடியதினத்தில் மாயமோகினியைத்தியானித்து மையைத் திலர்தமிட்டுக்கொண்டு கோவேறுகழுதையைப்போலதோன்றவேணுமென்று நினைத்துச்சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு கோவேறுகழுதையைப்போலவே தோன்றுவாய் எல்லோரும் மகா சந்தோஷப்பட்டு உன்னை மெச்சுவார்கள்.

368. ஆனையாகும் ஜாலம்

ரேவதி நக்ஷத்திரமும் வியாழக்கிழமையுங் கூடிய தினத்தில் மையைத் திலர்தமிட்டுக்கொண்டு ஆனையைப்போல தோன்றவேணுமென்று மனதில் நினைத்து ஜாலக்காளை துதித்து சபையில்வந்து நிற்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு நீ ஆனையைப்போலவே தோன்றுவாய்.

369. குதிரையாகும் ஜாலம்

மகநக்ஷத்திரமும் ஞாயிற்றுக்கிழமையுங் கூடியதினத்தில் குதிரையாகவேணுமென்று மனதில் நினைத்து மாயமோகினியைத் தியானித்துமையைத் திலர்தமிட்டுக்கொண்டு சபையில்வந்து நிற்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு குதிரையைப்போலவே தோன்றுவாய்.

370. சிறுத்தையாகும் ஜாலம்

கேட்டை நக்ஷத்திரமும் செவ்வாய்க்கிழமையுஞ் சேர்ந்ததினத்தில் காளியைத் தியானித்து சிறுத்தையாகவேணுமென்று மனதில்நினைத்துமையைப்பொட்டிட்டுக்கொண்டு சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் அங்குள்ள சனங்களின் கண்களுக்கு நீ சிறுத்தையைப்போலவே காணப்படுவாய்.

371. கடம்பையாகும் ஜாலம்

மிருகசீரிடநக்ஷத்திரமும் ஆதிவாரமுங்கூடியதினத்தில் எக்ஷணியைத்தியானித்து கடம்பையாக வேணுமென்று மனதில் நினைத்து மையைத்திலர்தமிட்டுக்கொண்டு சபையிலுள்ளவர்களின கண்களுக்கெல்லாம்கடம்பையைப்போலவே காணப்படுவாய்.

372. கடம்பையாகும் ஜாலம்.

திருவாதிரை நக்ஷத்திரமும் சனிக்கிழமையுஞ் சேர்ந்ததினத்தில் மையைத் திலர்தமிட்டுக்கொண்டு மோகினியைத்தியானித்து சபையில்வந்துநிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு பன்றியைப்போலவே காணப்படுவாய்.

373. காட்டுப்பன்றியாகும் ஜாலம

அவிட்டநக்ஷத்திரமும் ஆதிவாரமுங்கூடியதினத்தில்காளியைப்போற்றி காட்டுப் பன்றியாகத் தோன்றவேண்டுமென்று மனதில் நினைத்து மையைத்

திலர்தமிட்டுக்கொண்டு சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் அங்கிருப்பவர்களின்கண்களுக்குக் காட்டுப்பன்றியாகவே காணப்படுவாய்.

374. சிவிங்கியாகும் ஜாலம்

திருவோணநக்ஷத்திரமும் வியாழக்கிழமையுங் கூடியதினத்தில் மாயமோகினியைத் தியானித்து மையைத்திலர்தமிட்டுக்கொண்டு சிவிங்கியாகத் தோன்றவேணுமென்று மனதில்நினைத்து சபையில்வந்துநிற்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்குச் சிவிங்கியாகவே தோன்றுவாய் ரொம்பவும் வேடிக்கையாயிருக்கும்.

375. முள்ளம் பன்றியாகும் ஜாலம்.

விசாக நக்ஷத்திரமும் செவ்வாய்க்கிழமையுங்கூடிய தினத்தில்மலையாள பகவதியைத் தியானித்து மையைத்திலர்தமிட்டுக்கொண்டு முள்ளம்பன்றியாகவேணுமென்று மனதில் நினைத்துச்சபையில் வந்து நிற்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு முள்ளம்பன்றியாகவே காணபபடுவாய்.

376. ஒட்டகமாகும் ஜாலம்

சுவாதிநக்ஷத்திரமுஞ்சுக்கிரவாரமுங் கூடியதினத்தில் மையைத்திலர்தமிட்டுக்கொண்டு எக்ஷணியைத் தியானித்து ஒட்டகமாகவேணுமென்றுமனதில் துதித்துசபையில்வந்துநிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு ஒட்டகம்போலவே காணப்படுவாய் எல்லோரும் மகா ஆச்சரியப்படுவார்கள் மையைக்கலைத்துவிட எப்போதும்போல் மனிதனாகக் காணப்படுவாய்.

377. எருமையாகும் ஜாலம்

சுவாதி நக்ஷத்திரமும் சோமவாரமுங்கூடிய தினத்தில் மையைத்திலர்தமிட்டுக்கொண்டு ஜாலக்காளீ தியானித்து எருமையாக வேணுமென்று மனதில் நினைத்து பையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு எருமையைப்போலவே தோன்றுவாய்.

378. எருதாகும் ஜாலம்

ஆயில்யமும் ஆதிவாரமுங் கூடிய தினத்தில் மையைத் திலர்தமிட்டுக்கொண்டு ஜாலக்காளீ மனதில் நினைத்து எருதாகவேண்டுமென்று துதித்து சபையில் வந்துநிற்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு எருதைப் போலவே காணப்படுவாய்.

379. பசுவாகும் ஜாலம்.

பரணி நக்ஷத்திரமும் சுக்கிரவாரமுங் கூடியதினத்தில் ஜாலக்காளீ தியானித்து மையைத் திலர்தமிட்டுக்கொண்டு பசுவாகவேண்டுமென்று சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்குப் பசுவைப் போலவே காணப்படுவாய்.

380. நாயாகும் ஜாலம்

பூசநக்ஷத்திரமும் புதன்கிழமையுஞ் சேர்ந்ததினத்தில் மாயமோகினியைத் துதித்து மையைத்திலர்தமிட்டுக்கொண்டு நாயைப்போலதோன்றவேணுமென்று மனதில் நினைத்துச் சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு நாயைப்போலவே தோன்றுவாய் எல்லோரும் மகா ஆச்சரியப் படுவார்கள்.

381. பூனையாகும் ஜாலம்

கேட்டை நட்சத்திரமும் வியாழக்கிழமையும் வருந்தினத்தில்மையைத் திலர்தமிட்டுக்கொண்டு மோகினியைத்தியானித்து பூனையாகவேணுமென்று மனதில் நினைத்துக்கொண்டே சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு பூனையைப்போலவே காணப்படுவாய்.

382. புனுகுபூனையாகும் ஜாலம்

கார்த்திகை நட்சத்திரமும் சனிக்கிழமையும் வருந்தினத்தில்சாமுண்டியைத் தியானித்து மையைத்திலர்தமிட்டுக்கொண்டு புனுகு பூனையாகத்தெரிய வேணுமென்று நினைத்துக்கொண்டே சபையில்வந்துநிற்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு புனுகுபூனையாகவே காணப்படுவாய்.

383. காட்டுப்பூனையாகும் ஜாலம்

அஸ்வனி நட்சத்திரமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் மையைத் திலர்தமிட்டுக்கொண்டு காளியைத்தியானித்து காட்டுப்பூனையாகவேணுமென்று மனதில்நினைத்துச் சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் அங்கிருக்கப்பட்டவர்களின் கண்களுக்கு நீ பூனையைப்போலவே காணப்படுவாய்.

384. கோழியாகும் ஜாலம்

பூரட்டாதிநட்சத்ரமும் புதன்கிழமையும் சேர்ந்ததினத்தில்கோழியைப்போலவே அனைவர்கண்களுக்குந் தோணவேண்டுமென்று ஜாலக்காளைத்துதித்து மையைத்தொட்டு திலர்தமிட்டுக்கொண்டு சபையில்வந்துநிற்கும்பக்ஷத்தில் அங்கிருக்கப்பட்டவர்களின் கண்களுக்கு நீ கோழியைப் போலவே காணப்படுவாய்.

385. சாவலாகும் ஜாலம்

விசாகநட்சத்திரமும் திங்கட்கிழமையும் சேர்ந்ததினத்தில் சபையோர்களின் கண்களுக்குச் சாவலைப்போலவே தோன்றவேணுமென்று மனதில் நினைத்துக்கொண்டு மலையாளபகவதியை வணங்கி மையைத்தொட்டுதிலர்தமிட்டுக்கொண்டு சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் சாவலைப்போல்தோணும்.

386. மயிலாகும் ஜாலம்

அனுடநட்சத்திரமும் திங்கட்கிழமையுங் கூடியதினத்தில் மயிலாகத் தோன்றவேணுமென்று நினைத்துக்கொண்டு மையைத்திலர்தமிட்டு ஜாலக்காளைத்துதித்து சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின்கண்களுக்கு மயிலைப்போலவே காணப்படுவாய்.

387. வாத்தாகும் ஜாலம்

ரேவதி நட்சத்திரமும் புதன்கிழமையுங் கூடியசினத்தில் மையைத்திலர்தமிட்டுக்கொண்டு வாத்தாகவேணுமென்று மனதில் நினைத்து சாமுண்டீஸ்வரியைத் தியானித்துச் சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு வாத்தைப்போலவே காணப்படுவாய்.

388. மானாகும் ஜாலம்

அஸ்த நக்ஷத்திரங்கூடிய ஆதிவாரத்தில் மையைத் திலர்தமிட்டுக்கொண்டு சாமளாதேவியைத்துதித்து மானாகத்தோற்ற வேணுமென்று மனதில் நினைத்துக்கொண்டு சபையில்வந்துநிற்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின்கண்களுக்கு மானைப்போலவே காணப்படுவாய்

389. ஆடாகும் ஜாலம்

கிருத்திகை நட்சத்திரமும் சோமவாரமுங் கூடியதினத்தில் ஆட்டைப் போலவே எல்லாருக்குந் தோன்றவேணுமென்று மனதில்நினைத்துமையைத் திலர்தமிட்டுக்கொண்டு காளியைத்துதித்துச் சபையில் வந்துநிற்கும் பக்ஷத்தில் அங்கிருக்கும் சனங்களின் கண்களுக்கு ஆட்டைப்போலவே காணப் படுவாய்.

390. மரமாகும் ஜாலம்

மகநட்சத்திரமும் சோமவாரமுங் கூடியதினத்தில் மையைத்தொட்டு திலர்தமிட்டுக்கொண்டு மரமாகவேணுமென்று மனதில்நினைத்து மயானருத்திரியைத் துதித்துக்கொண்டே சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் பார்க்கின்ற சனங்களின் கண்களுக்கெல்லாம் நீமரத்தைப் போலவேதோன்றுவாய் எல்லோரும் ஆச்சரியப்பட்டு உன்னை மகா மந்திரவாதியென்று மெச்சிக் கொள்ளுவார்கள்.

391 மலையாகும் ஜாலம்

பூரநட்சத்திரமும் சனிக்கிழமையுங் கூடியதினத்தில் மலையாகவேணுமென்று மனதில் நினைத்து ஜாலக்காளைத்துதித்து மையையெடுத்து திலர்தமிட்டுக்கொண்டு சபையில் வந்துநின்றால் பார்க்கின்றவர்களின் கண்களுக்கெல்லாம் நீ ஒருபெரிய மலையைப்போலவே காணப்படுவாய்.

392 குளமாகும் ஜாலம்

சித்திரை நட்சத்திரமும் செவ்வாயுங்கூடிய தினத்தில் மையைத்திலர்தமிட்டுக்கொண்டு மோகினியைத்தியானித்துக் குளமாகத்தெரியவேண்டுமென்று சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் எல்லாருடைய கண்களுக்கும் அசல் குளத்தைப்போலவே காணப்படுவாய் பார்ப்பவர்களுக்கும் அதிசயமாயிருக்கும்.

393. கிணறாகும் ஜாலம்

ஆயில்ய நக்ஷத்திரமும் ஆதிவாரமும் கூடியதினத்தில் மையைத்திலர்தமிட்டுக்கொண்டு மாயமோகினியைத் துதித்துப்பார்ப்பவர்களின் கண்களுக்கு கிணறாகத்தெரிய வேணுமென்று நினைத்துக்கொண்டு சபையில்வந்துநிற்கும்பக்ஷத்தில் அங்கிருக்கப்பட்டவர்களின் கண்களுக்கெல்லாம் நீகிணற்றைப் போலவே காணப்படுவாய்.

394. பக்ஷிகளாகும் ஜாலம்

ரேவதிநட்சத்திரமும் வியாழக்கிழமையும் வருந்தினத்தில் மையைத்தொட்டு திலர்தமிட்டுக்கொண்டு மாயமோகினியைத் தியானித்து எவ்வித பக்ஷியாகத் தெரியவேணுமென்று மனதில் நினைத்துக்கொள்ளுகிறாயே அவ்விதப்பக்ஷியாகவே பார்ப்பவர்களின் கண்களுக்குத் தோன்றுவாய்.

395. பாம்புகளாகும் ஜாலம்

அவிட்டநக்ஷத்திரமும் புதன்கிழமையுங் கூடியதினத்தில் மலையாளபகவதியைத் தியானித்து மையையெடுத்து திலர்தமிட்டுக்கொண்டு எவ்விதப் பாம்பாகத்தெரிய வேணுமென்று மனதில் நினைத்துக்கொள்ளுகின்றாயோ அவ்விதப்பாம்பாகவே பார்ப்பவர்களின் கண்களுக்குத் தோன்றுவாய்.

396. தான்யப்போராகும் ஜாலம்

மிருகசீரிட நட்சத்திரமும் வெள்ளிக்கிழமையும் வருகிறதினத்தில் மையைத்திலர்தமிட்டுக்கொண்டு ஜாலக்காளையும் மோகினியையுந் தியானித்து

எவ்விததான்யமாக வேணுமோ அதை மனதில் தியானித்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு அவ்விததான்யமே போராகயிருப்பதைப்போன்றுதெரியும் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள்.

397. பாம்புகளாகும் ஜாலம்

மூலநட்சத்திரமும் ஆதிவாரமுங்கூடியதினத்தில் சாமுண்டீஸ்வரியைத் தியானித்து மையைத்திலர்தமிட்டுக்கொண்டு வைக்கோல் போராகவேணுமென்று மனதில் தியானிக்கப்பார்க்கின்றவர்களின் கண்களுக்குப் பெரிய வைக்கோல் போரைப்போலவே தோன்றுவாய்.

398. கருடனாகும் ஜாலம்

வெள்ளிக்கிழமையும் அஸ்தநக்ஷத்திரமுங் கூடியதினத்தில் மையைத் திலர்தமிட்டுக்கொண்டு மலையாளபகவதியைத் தியானித்துகருடனாகத் தெரியவேணுமென்று நினைத்துச்சபையில்வந்து நிற்கும்பக்ஷத்தில் சபையோர்களின் கண்களுக்குப் கருடனைப்போலவே காணப்படுவாய்.

399. பருந்தாகும் ஜாலம்

சுவாதி நட்சத்திரமும் வியாழக்கிழமையுங் கூடியதினத்தில் மையைத் திலர்தமிட்டுக்கொண்டு காளியைத்தியானித்து பருந்தாகத்தெரியவேணுமென்று நினைத்துக்கொண்டு சபையில்வந்துநிற்கும் பக்ஷத்தில்சபையோர்களின் கண்களுக்குப் பருந்தைப்போலவே காணப்படுவாய்.

400. காக்கையாகும் ஜாலம்

பூசநக்ஷத்திரமும் செவ்வாய்க்கிழமையுங் கூடியதினத்தில் மையைத் திலர்தமிட்டுக்கொண்டு மாயமோகினியைத்துதித்து காக்கையாகத்தெரியவேண்டுமென்று மனதில் நினைத்துக்கொண்டு சபையில்வந்து நிற்கும் பக்ஷத்தில் சபையார்களின் கண்களுக்குக் காக்கையாகவே காணப்படுவாய்.

401. கள்ளிக்காக்கையாகும் ஜாலம்

பரணி நட்சத்திரமும் வியாழக்கிழமையுங் கூடியதினத்தில் மலையாளபகவதியைத் தியானித்து மையைத்திலர்தமிட்டுக்கொண்டு கள்ளிக்காக்கையாகவேணுமென்று மனதில் நினைத்துக்கொண்டு சபையில்வந்து நிற்கும் பக்ஷத்தில் சபையோர்களின் கண்களுக்குக் கள்ளிக்காக்கையாகவேகாணப்படுவாய். இதுவரையில் சொல்லிவந்த ஜாலங்களுக்கெல்லாம் எந்தெந்த நக்ஷத்திரம் எந்தெந்த வேலைகளுக்குச் சொல்லியிருக்கின்றதோ அந்தந்த நக்ஷத்திரத்தில் செய்தால்தான் அதுகள் கைகூடும். ஒவ்வொருவேலைகளுக்கும் திரைவிட்டு அதன்பின்னால் நின்றுக்கொண்டு மையை திலர்தமிட்டுக்கொண்ட பிற்பாடு திரையைத்தூக்கி காண்பித்துவிட்டு மறுபடியும் திரையைவிட்டு மையைக்கலைத்துவிட்டு காண்பிக்க சாதாரண மனிதனாகவே காணப்படுவாய். எல்லாவேலைகளையும் திரைக்குப் பின்னாலிருந்துதான்செய்ய வேண்டும். இன்னும் இம்மையினால் எவ்வளவோ வேலைகளை யெல்லாம் செய்துக்காட்டி சனங்களைச் சந்தோஷப்படுத்தலாம். அவைகளையெல்லாம் இங்கெழுதுகிறது சரியல்ல. ஆகையால்தகுந்த ஆசானைக்கொண்டு அவர் முகாந்தரமாய் மற்ற வேலைகளை யெல்லாம் கண்டுகொள்ளவும் இம்மையைக் கொண்டு தகாத வேலைகளைச்செய்ய ஆரம்பிக்கும் பக்ஷத்தில் அது கைகூடி வராதென்று பெரியோர்களெல்லாம் சொல்லியிருக்கின்றனர். அதைப்பற்றிஜாக்கிரதையாக நடந்துக்கொள்ளவேண்டியது நம்முடைய கடமை.

26

402. மயிரிக்கல்லைத்தூக்கும் ஜாலம்

சிறியகுண்டுமணிப்பிரமாணமுள்ள கூழாங்கல்லொன்றையெடுத்துமண்ணில்லாமல் துடைத்துவிட்டு தலையிலிருக்கும் மயிரில் நீளமாயுள்ள ஓர்மயிரை வேரறுமல் பிடிங்கி அவ்வேரைக் கூழாங்கல்லின்மீது ஒட்டவைத்து சிறிதுநேரம் பொருத்து மயிரைப்பிடித்துத் தூக்கக் கல்லானதுமயிரின்கூடவே வரும்.

403. ஜலத்தில் பாணவேடிக்கைக்காட்டு ஜாலம்

ஓர்கோப்பையில் ஜலம்வார்த்து பாஸ்றைட் ஆப்லைன் என்னும் சீமைமருந்தைக்கொஞ்சம் போட்டுக்கீழே வைத்துவிட்டால் அதிலிருந்து பொதை பாணம் கிளம்பும் பார்ப்பவர்களெல்லாம் வெகு ஆச்சரியப்படுவார்கள்.

404. தீயில்குதிக்கும் ஜாலம்

சங்கன் செடியின்கீழ் மூளைத்திருக்கும் காளானைக்கொண்டுவந்து ஓர் பாண்டத்தில்போட்டு வெய்யலில் வைத்தால் அது உருகி எண்ணெயாகும். அதையெடுத்து திரேகமாதியந்தமும் நன்றாகப் பூசிக்கொண்டு தீயில்குதிக்க தீசுடாது.

405. நெருப்பைக் கையிலள்ளும் ஜாலம்

கரும்பசலைச் செடிக்குச் செவ்வாய்க்கிழமையதினம் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி வேரறுமல் பிடுங்கிவந்து அரைத்துக்கையில் பூசிக்கொண்டு நெருப்பைவார கைகள் சுடாது.

406. இதுவுமது

உத்தாமணிவேரையும் அதனுடைய கொழுந்தையும் காப்புகட்டி கொண்டுவந்து அரைத்து கையில்பூசிக்கொண்டு நெருப்பைவாரக்கைகள்சுடாது.

407. நெருப்புமிதிக்கும் ஜாலம்

தாளிச்செடியின் சமூலம் கொத்தான்சமூலம் மருக்காரைஉப்பு சோத்துப்பு இவைகளையெல்லாம் சமயெடையாக யெடுத்துப் பசும்பாலில் அரைத்து இரண்டு உள்ளங்கால்களிலும் பூசிக்கொண்டு தீக்கொளுத்தி எரிந்து அடங்கியபின் நெருப்பையெல்லாம் சமமாகப்பரப்பி அதன்மீது சாதாரணமாக நடக்கலாம் அனல் கொஞ்சமேனும் சுடாது பார்ப்பவர்களெல்லாம் உனக்கு அக்கினிதேவன் வசியமென்று பேசிக்கொள்ளுவார்கள்.

408. பேய்பிசாசுஅகற்றும் ஜாலம்

ஆனை குதிரை ஒட்டை கழுதை நாய் துலுக்கன் இதுகள் மலத்துடன் வட்டக் கிலுகிலுப்பையைச்சேர்த்து ஓர்சட்டியில் நெருப்பைப்போட்டு அதின்பேரில் இவைகளைப்போட்டு புகைக்க பேய்பிசாசுகளெல்லாம் ஓடிவிடும்.

409. இதுவுமது

வேப்பமரத்தின்மேலிருக்கும் காக்கைக் கூண்டைக் கொண்டுவந்துக் கொளுத்தி அதில் வெள்ளெருக்கன் காய்களைப்போட்டு சுட்டுச்சாம்பலாக்கி அத்துடன் சுடுகாட்டு சாம்பலைக்கலந்து பேய் பிசாசு பிடித்தவர்களின்மேல் போட அவைகள் யாவும் விலகி விடுவதுமன்றி சூன்யம் வைப்பு முதலியவைகளும் விலகும்.

410. வசியமுறிய ஜாலம்

உயிர்போன ஆட்டின்உணியும் விடத்தேர்பட்டையும் தண்ணீரிலரைத்து துவரைபோல் குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையானபோது அறுசுவையில்கொடுக்க எப்படிப்பட்டமருந்தாயிருந்தாலும் அதினுடைய வேகம் முறிந்துபோகும்.

411. இதுவுமது.

சிறுசெருப்படைவேர் நாவல்வேர்பொற்சீந்தில்வேர் இவைகள்மூன்றையும் கழுதைமூத்திரத்தி லரைத்து துவரைபிரமாணம் குளிகைசெய்து வைத்துக்கொண்டு பலபதார்த்தங்களில் கொடுக்க மருந்தின்வேகம் முறிந்துபோகும்.

412. பாலில் நுரைகட்டாத ஜாலம்

ஆடுமாடு எருமை இம்மூன்றில் எந்தபால்களைக்கறந்தாலும் அதுகளின் காம்பில்கொஞ்சம் நெய்யைத்தடவிக்கறக்க கிஞ்சிற்றேனும் நுரைகட்டாது.

413. எறும்புப்புத்து அடங்கும் ஜாலம்

முட்டைச்சாம்பலை நன்ருகத்தெள்ளி எறும்புப்புத்துகளின்பேரில் போட்டுவைக்க அப்புத்திலுள்ள எறும்புகளெல்லாம் வெளியே வராது வேறு இடத்திற்கும் போய்விடும்.

114. இதுவுமது

வீட்டில் வைக்கும் மிளகுநீரின் அடித்திப்பியை வண்டலுடன் எடுத்து அப்புத்தின்பேரில் போட்டுவைக்க அதிலுள்ள எறும்புகளெல்லாம் மாண்டுவிடும்.

415. பால் உதிரமாகக்கறக்கும் ஜாலம்

கறவை மாடுகளுக்குப் போடும்பச்சைப்புல்லில் தம்பலப்பூச்சியைவைத்து உள்ளுக்குக்கொடுத்துவிட அதுகறக்கும்பாலெல்லாம் உதிரமாகவே யிருக்கும் பிறகு அதற்கு தண்ணீர் குடிப்பாட்டும் தொட்டியைநன்ருகச் சுத்தஞ்செய்து அதில் சுக்குத்தூளைப்போட்டுக் குடிப்பாட்ட எப்போதும் போல் கறக்கும்.

416. முருங்கக்காயில்புழுநெளியும் ஜாலம்

முருங்கக்காயின்மேல் சுண்ணும்பைப்பூசி வெய்யலில்வைக்க வெய்யலின் சூடுறைத்ததும் அதிலிருந்து புழுவைப்போன்ற சதைகள் வெளிவரும் பார்வைக்கு அது அசல் புழுமாதிரியே தோன்றும்.

417. கறந்தபால் தயிராகும் ஜாலம்.

வாழைக்கிழங்கை அறுத்து வெய்யலில் போட்டு நன்ருகவுலர்த்தி வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு கறக்கும்பாலில் மிதமாகக்கொஞ்சம் தூளைப்போட்டுக்கலக்கச் சிறிதுநேரத்திற்கெல்லாம் அப்பால் தோய்ந்து தயிராகக் கட்டிவிடும்.

418. இதுவுமது

நாணற்புல்லை வெய்யலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொண்டு முன்போல் கறக்கும்பாலில் போட்டுக்கலக்கத்தயிராகத் திரளும்.

419. மோர்தயிராகும் ஜாலம்

விளாங்காயைக்கொண்டுவந்து வெய்யலில் உலர்த்தி இடித்துவஸ்திர காயஞ் செய்துக்கொண்டு அதைமோரில்கலக்க மோரானது தயிரைப்போல் தோய்ந்துவிடும்.

420. தேங்காய்வெடிக்கும் ஜாலம்

சுண்ணும்புக்காளவாய் கொளுத்தாததற்குமுன் அதற்தடியில் ஓர் தேங் காயைப்புதைத்து வைத்துவிட்டு அக்கால்வாய்கொளுத்தி யானபிறகு நாம் புதைத்த தேங்காயை எடுத்துக்கொண்டுவந்து ஜாலமாகும் சபையில் அதின் பேரில் கொஞ்சந் தண்ணீரைத்தெளித்து கீழேவைக்க அதுசுக்கல் சுக்க லாக உடைந்து விடும்.

421. சாராயம் இறங்காத ஜாலம்

சாராயங் காய்ச்சுகின்ற பட்டியிலுள்ள அடுப்பில் சிறுகுறிஞ்சான் சமூ லத்தை உலரப்போட்டு வைத்துவிட சாராயமானது கொஞ்சமேனும் இறங்காது.

422. தீபம்சிகப்பாக எறியும் ஜாலம்.

இந்திர கோபப் பூச்சியை நன்ருகவுலர்த்திப் பொடிசெய்து அதைப் பஞ்சியிற்கலந்து திரிதிரித்து விளக்கில்போட்டு எண்ணெய்விட்டுக்கொளு த்த அவ்வீடெல்லாம் சிகப்பாக இருக்கும்.

423. கருங்கல் எழும்பும் ஜாலம்

வெள்ளைச்சார்வேளை சிறுபுள்ளடி இவையிரண்டையும் சமயெடையாக அரைத்து சமமாக இருக்கின்ற கருங்கல்லின்பேரில் அப்பி அதின்மேல்வாயு ள்ள ஓர்பித்தளைச் சொம்பாகிலும் செம்புச்சொம்பாகிலும் வைத்து அச்சொ ம்பின் உதட்டைப்பிடித்து அழுத்தி அரக்கித்தூக்க செம்புடன்கல்லும் அந் தரமாகக் கிளம்பும் பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாயிருக்கும்.

424. ஐம்மலக்கடு ஜாலம்

பன்றிமலம் மனிதர்மலம் நாய்மலம் பூனைமலம் தீட்டுச்சீலை இவ்வைந் தையுங் குழித்தைலமிறக்கி அதைநெருப்பில் போட்டுப்புகைக்க அப்புகைப் பட்ட விடங்களிலுள்ள பூதப்பிசாசுகளெல்லாம் வலசைவாங்கும் இதுபட்ட விடம் பாழாகுமேயன்றி ஈடேராது இதைப்பலவேலைகளுக்கும் உபயோ கிக்கலாம்.

425. தலையிற் கல்லுடைக்கும் ஜாலம்

ஆதிவாரம் உதயத்தில் செம்முள்ளிச்செடிக்கு சாபநிவர்த்திசெய்துமஞ் சள் நூல் காப்புகட்டி பொங்கல் பலி தீபதூபங்கொடுத்துக் கொண்டுவந்து குளிசமாடி வாயில்போட்டடக்கிக்கொண்டு செங்கல்லைத்தூக்கித் தலைமேல் போட்டுடைக்க அதுசுக்கல் சுக்கலாகப்போய்விடும் அல்லது தேங்காயை வேண்டுமானாலும் உடைத்துக்காட்டலாம்.

426. சாராயபுட்டி வெடிக்கும் ஜாலம்

சாராயப்புட்டியில் கொஞ்சம் கடுகைப் போட்டுவைக்க அதுகொஞ்ச நேரத்திற்கெல்லாம் வெடித்துவிடும் பெரிய பீப்பாய்களில் போட்டு வைத் தாலும் வெடித்துவிடும்.

427. கோழிமடியும் ஜாலம்

வெங்காயத்தை உரித்து எருக்கம்பாலில் நனைத்துக்காயவைத்த கோழிக்கு முன்போட அதைத்தின்ற கோழியானது பேதி அதிகரித்து மடிந்துவிடும் ஆனுல் வெங்காயத்தை இரண்டு மூன்றுவிசை நனைத்துக்காயவைக்க வேண்டும்.

428. பால்கட்டும் ஜாலம்

கரந்தபாலில்கொஞ்சம் பிராயம்பாலை விட்டாலுஞ்சரி அல்லது அதின் கொம்பை ஒடித்துப்போட்டாலுஞ்சரி அப்பாலானது கட்டிவிடும்.

429. இதுவுமது

கரந்தபாலில் கொஞ்சம் காட்டுத்தமரத்தன் செடியின்பாலைவிட்டுமூடிக் குளிர்ச்சியாகிய விடத்தில் வைக்க அது கட்டிவிடும்.

430. இதுவுமது

மேற்படி பாலில் முயல்கொம்பு ரசத்தைவிட்டு கொஞ்சநேரம் வெய்யல் படாமல் குளிச்சியாகியவிடத்தில் வைத்திருக்கஅப்பாலெல்லாங்கட்டிவிடும்.

431. உடம்பெரியும் ஜாலம்.

நண்டுக்குழிமண் எதிரியின்காலடிமண் சுடலைமண் பெருங்காயம்மிளகு இருபத்தி ஒன்று இவைகள்யாவும் ஓர் சட்டியிற்போட்டு வேப்பன் விரகால் எரிக்க எதிரியின் உடம்பெல்லாம் எரியும் எரிப்பதை நிறுத்த உடம்பெரிவு நீங்கும். அப்படி நிற்காவிடில் புளியன் வேப்பம்பட்டையை நறுக்கிக் கியாழம்வைத்து அதில் சர்க்கரை சேர்த்துச்குடிக்க எரிவு நீற்கும்.

432. சொக்கட்டான்கெலிக்கும் ஜாலம்

சுடலையிலிருக்கும் கையாந்தகரைச்செடிக்குக் காப்புகட்டி சமூலமும் கொண்டுவந்து அதை எருக்கம்பால் விட்டரைத்துக் குளிகைதிரட்டி வைத்துக்கொண்டு தேவையானபோது தலைப்பேறுபெற்றவளின் முலைப்பாலிலரைத்துநெற்றியிற்றிலர்தமிட்டுக்கொண்டு சொக்கட்டான்முதலியது விளையாடும் பக்ஷத்தில்கெலிப்பார்கள் இதையே இட்டுக்கொண்டுபோக எப்பேர்ப்பட்ட வழக்குகளும் கெலிக்கும்.

423. பன்றியைக்குத்தும் ஜாலம்

ஊர்களிலிருக்கும் சாதாரண பன்றியையாவது அல்லது காட்டுப்பன்றியை யாவது முள்ளம் பன்றியையாவது குத்தவேண்டில் முன்னதாகவிஷ்ணுகிரந்திச்செடிக்குக் காப்புகட்டி பொங்கல் பலி முதலியது கொடுத்துக்கொண்டுவந்துக் குளிசமாடி அரையிற் கட்டிக்கொண்டு எவ்விதபன்றிகளைக் குத்தினுலும் அதுகள் மேல்விழாது.

434. சுருக்கல்லின் ஜாலம்

சுறுமீன் தலையில் இரண்டு கற்களுள்ளதை நீக்கிவிட்டு ஒரு கல்லிருப்பதை எடுத்துக்கொண்டு அதைத் தலைச்சன் பிள்ளையைப் பெற்றவளுடைய முலைப்பாலில் அரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது அதை நெற்றியில் திலர்தமிட்டுக்கொண்டு இருட்டில் போக வெளிச்சமாயிருக்கும். அல்லது இருட்டாகயிருக்கும் அறையில் செல்ல வெளிச்சமாயிருக்கும்.

435. இதுவுமது

மேற்படி கல்லில் கோரோசனை சேர்த்து புத்துத்தேன் விட்டரைத்து உள்ளங்காலில் தடவிக்கொண்டுபோக யாவரும் வசியமாவார்கள். பகையாளிகளும் வணங்கி வார்த்தையாடுவார்கள்.

436. இதுவுமது

மேற்படி கல்லில் பொரிகாரஞ்சேர்த்து தலைப்பேறு பெற்றவள் முலைப்பாலில் அரைத்து சந்தனத்திற்குழைத்து மார்பில் தடவிக்கொண்டுபோக யாவரும் பணிந்து வசமாவார்கள் கெலிக்காத வழக்குகளெல்லாம் கெலிக்கும்.

437. இதுவுமது

மேற்படி கல்லில் கோழியின் பிச்சைக்கலந்து அரைத்து நெற்றியிற் றடவிக்கொண்டுபோக உன்னைக் கண்ட பேய் பிசாசுகளெல்லாங் கதறி காதவழியோடும். பேய் பிடித்தவர்களுடைய எதிரில் போய் நின்றாலும் அவைகள் கதறி ஓடிவிடும்.

438. இதுவுமது

ஓர் எலுமிச்சம்பழத்தில் மேற்படி கல்லரைத்ததைத் தடவி பிசாசின் பேரில் எறிந்துவிட்டுதான் திரும்பிப் பார்க்காமல் வீட்டுக்கு வந்து படுத்து நித்திரை செய்யவும் அந்தப் பழமானது தனது தலைமாட்டில் வந்திருக்கும் அதை எடுத்துவைத்துக்கொண்டு தேவையானபோது அதை அறுத்துச் சாப்பிட்டுவிடும் பக்ஷத்தில் தன்னுயுள்வரையும் அப்பசாசானது தனது சொற்படி கேட்டு நாமிட்ட வேலைகளை யெல்லாஞ் செய்துக்கொண்டிருக்கும். நம்மால் ஆகாத காரியங்களையெல்லாம் அதன் கையில் முடித்துக்கொள்ளலாம் நமது சத்துருக்களையும் அடியோடு ஒழித்து நாசஞ்செய்யும்.

439. மீன்கள் படாதிருக்கும் ஜாலம்

ஓர் செம்படவன் கொடுத்த மீனை துண்டுதுண்டாக வெட்டி வேப்பம் பட்டையில் வைத்து மேலே வேப்பம் பட்டையை மூடி அடுப்பின்கீழ் புதைத்துவைத்திருக்க மீன் படாது.

440. மீன்படும் ஜாலம்

விஷ்ணுகரந்தை குங்கிலியம் சாம்பிராணி இம்மூன்றையும் பசும்பாலில் அரைத்து வலையில் தெளித்துவைக்க மீன்கள் மிகுதியாகப்படும்.

441. இதுவுமது

சுடுகாட்டிலிருக்கும் சங்கன் செடிக்குக் காப்பு கட்டிக்கொண்டுவந்து அரைத்து நீரில் கலக்கி வலையில் தெளித்துப்போட மீன்கள் அகப்படும்.

442 இதுவுமது

முடக்கத்தான் செடியைச் சமூலமுங் கொண்டுவந்து அதனுடன் அரசன்பட்டையும் சாம்பிராணியுஞ் சேர்த்து வெள்ளாட்டுப்பால் விட்டரைத்து வலையிலும் தோணியிலும் தெளிக்க மீன்கள் அகப்படும்.

443. இதுவுமது

குப்பைமேனிச்சாற்றில் நத்தையோட்டைக் கலந்து அரைத்து வலையில் தெளித்துவைக்க மீன்கள் மிகுதியாகப்படும்.

444. இதுவுமது

நரிப்பீ, முயல்புழுக்கை சிறு செறுப்படை சுடுகாட்டுக்கரி வட்டக்கிலுகிலுப்பை இதுகளையெல்லாம் தேன்விட்டரைந்து மைபோலானதும் வழித்து ஒரு ஏனத்தில் வைத்துக்கொண்டு பிறகு காரியத்தகட்டில் முக்கோணம்போட்டு அதன் நடுவில் சிவகா என்றெழுதி எதிரில் வைத்துக்கொண்டு மையை அதன் பக்கத்தில் வைத்து பழம் தேங்காய் கடலை பொரி அவல் பானகம் இவைகளையெல்லாம் ஓர் வாழையில் பரப்பிவைத்து தீபதூபத்துடன் ஓம் க்ருபி சண்டமாருதி வருகவருக பட்டுபட்டு சிவா யென்ற மந்திரத்தை ஆயிரத்தெட்டுரு கொடுத்து சித்தியானபின் வலைபோடப் போகும்போது கொஞ்சம் மையை எடுத்து குதிக்காலில் தடவி வலையை மிதிக்க மீன் படும்.

445. இதுவுமது

கோரோசனை சவ்வாது கொட்டிக்கிழங்குயிலை இம்மூன்றையும் பசும்பாலிலரைத்து தோணியிலும் வலையிலும் தெளிக்க மீன்படும்.

446. மீன்படாத ஜாலம்

காட்டிலிருக்கும் அண்டங்காக்கையைக் கொண்டுவந்து கொன்று அதைப் புடம்போட்டு அச்சாம்பலை யெடுத்து வாழையிலையில் பரப்பி தூபமிட்டு நசிநசி யென்று ஆயிரத்தெட்டுரு கொடுத்து வைத்துக்கொண்டு தேவையானபோது அச்சாம்பலில் ஓர் சிட்டிகை யெடுத்து வலையில் தூவிவிட அவ்வலையில் மீன் படாது.

447. பேதன ஜாலம்

ஆதிவாரமும் அமாவாசையும் ஒன்ருய்க் கூடின தினத்தில் ஓர் தேளைப் பிடித்து அதனுடைய வாலின் மணியில் மூன்று மணியை அரை ஞாண்கயர் முதலியதுகளின்றி துண்டித்துப் பூசையில் வைத்து ஜிம் என்னும் மந்திரத்தை நூற்றியெட்டு விசை செபித்து அதைப் பகைவர்களின் மூத்திரக் குழியில் புதைத்துவைக்க அவர்களுக்கு நீரடைத்து வாதைப்படுவார்கள். மறுபடி அதை யெடுத்து நீரில் கழுவிவிட பாதை நிவர்த்தியாகும்.

448. வேறு

தேளைப் பிடித்து அதை சுக்கின்பேரில் கொட்டவைத்துப் பிறகுப் பூசையில் வைத்து முன் மந்திரத்தை ஆயிரத்தெட்டோதிப் பகைவர் நீர்க் குழியில் புதைக்க அவர்களுக்கு நீரடைத்து மகா பாதைப்படுவார்கள். அதையும் முன்மாதிரி நீரில் கரைத்துவிட வாதை குணப்படும். இம்மாதிரி இஞ்சியிலேயும் செய்யலாம்.

449. சூனியமகலும் ஜாலம்

வேப்பமரத்தின் பேரிலிருக்கும் காக்கைக்கூண்டு வேப்பம்பட்டை எட்டிவிரை, பாம்புக்கட்டை ஆமையோடு செக்காடுமிடத்தின் மண் குதிரைக்குளம்பு மாட்டுக்குளம்பு காக்கணஞ் செடி மாதர் சீலை, உளுத்தமஞ்சள் மூஞ்சூரின் தோல் இவைகளையெல்லாம் ஒன்ருக யிடித்துப் புகைபோட பேய் பிசாசு சூன்யங்களெல்லாம் விலகிவிடும்.

450. வேறு

வேப்பமரக் காக்கைக்கூண்டு கழுதைக்குளம்பு கழுதைச்சடை எட்டி விரை எட்டிப்பட்டை குதிரைக்குளம்புமாட்டுக்குளம்பு சிறுகீரைவேர் ஆமை

யோடு நீட்டுச்சிலே இதுகளையெல்லாம் நெருப்பிலிட்டுப்புகைக்க பேய்பிசாசு முதலிய பிரமராட்சதனுயிருந்தாலும் ஓடிவிடுவதுமன்றி சூன்யம் ஏவல் வைப்புமுதலியதெல்லாம் ஓடிவிடும்.

151. கையில்வெற்றிலை சிவக்குஞ் ஜாலம்

கருவேலங் கொழுந்தைக் கொண்டுவந்து கையில்வைத்துக்கசக்கி இரண்டு கைகளிலும் அச்சார் தங்கும்படியாக செய்துக்கொண்டு பிற்குகையை நன்றாக உதறிவிட்டு வெற்றிலையில் சுண்ணும்பைத்தடவி கையில் வைத்துக் கசக்க அதுவெற்றிலைப் பாக்கைப்போல் சிவந்துவிடும்.

452. ஆடுகள் எழுந்திராத ஜாலம்

ஆதிவாரதினம் ஓர் மூஞ்சூரைப்பிடித்து தண்ணீர் ஓடுகின்றகால்வாயில் விட்டால் அம்மூஞ்சூரானது ஜலத்தை எதிர்நோக்கிஓடும் அப்போது அதை ஒரேவெட்டில் இரண்டாகும்படி வெட்டி தலைப்புறத்தை எடுத்து வந்து ஆடுகள் படுத்திருக்கும் இடத்தில் புதைத்துவிட்டால் அங்கிருக்கும் ஆடுகளெல்லாம் எழுந்து இரைமேயாது புதைத்ததை எடுத்தால் தவன் எழுந்து இரை மேயப்போகும்.

453. இதுவுமது

தோவாங்கைக்கொன்று அதின்தோலை ஆடுகள் படுத்திருக்கும் இடத்தில் புதைத்துவிட்டால் அவ்வாடுகளிலொன்றேனும் எழுந்து இறைமேயப் போகாது புதைத்திருப்பதை எடுத்துவிட்டால் தான் அதுகள் எழுந்து இறைதேடப்போகும்.

454. ஆடுகளையழைக்க பின்வரும் ஜாலம்

கோவைச்செடியின் வடக்கேபோகும் வேரையும் அதனுடைய இலையையும்கொண்டுவந்து சிறுநீர்விட்டு நெகிழ அரைத்து இரண்டுகைகளிலுந் தடவிக்கொண்டு ஆடுகள் கூட்டமாகயிருக்கும் இடத்திற்சென்று கையைத் தட்டிவாவென்று அழைக்க அதுகள் நமது பின்னாலேயேவரும்.

455. தேவதைகள் அகலும் ஜாலம்

உந்திக்கொடியையும் நீட்டுச்சிலையையுங்கறுக்கி அதைக் குளிசத்திலடைத்து எடுத்துக்கொண்டுபோய் வாழும்படியாகிய வீட்டில் வைத்தாலுஞ் சரி அல்லது மூர்த்திகரமுள்ள கோயில்களில் வைத்தாலுஞ்சரி அவ்விடம் நாசமாகும் அங்கு ஒருதேவதையும் நிற்காது.

456. மலடாகும் ஜாலம்

ஞாயிற்றுக்கிழமைகளிலாகிலும் வியாழக்கிழமைகளாகிலும் அரசுமாரணவேளையில் ஓர் மூஞ்சூரையடித்து உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ்செய்துக்கொண்டு அதற்குச்சமன் மயானச்சாம்பலும் சுட்டபிணத்தின் எலும்பைத் தூள்செய்த பொடியுஞ்சேர்த்துக் கலந்துவைத்துக்கொண்டு பெண்களின்மேல் தூவ அவர்களுக்கு எக்காலத்திலும் கருவேதரிக்காது.

457. வேறு வசிய ஜாலம்

கொட்டைக்கரந்தை யிலையையும் பேயத்தியின்யிலையையும் சாபங்வர்த்திசெய்துவந்து பேய்க்கறுப்பன்சாறுவிட்டரைத்து கெச்சக்காய்பிரமாணங் குளிகைசெய்து நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டு தேவையானபோது ஆணுக்கு பெண் இடதுகால்பெருவிரல் இரத்தத்திலிழைத்துப் பலவித பழவகை

களில் கலந்துதின்னக்கொடுக்க வசியமாம் பெண்ணுக்கு ஆண் வலதுகால் பெருவிரல் இரத்தத்தில்குழைத்து பலகாரங்களில்வைத்து தின்னக்கொடுக்கவசியமாம் இதுமிகவும் கைகண்டது இம்மூலிகையைக்கிராணம் பிடித்திருக்கும்போதுகொண்டுவந்து செய்கிறது ரொம்பவும் விசேஷம்.

458. இதுவுமது

மார் அழுக்கை குண்டுமணிப்பிரமாணமுருட்டி அதைக்கொட்டைக்கரந்தையின் சாற்றில் மத்தித்து பலவித பலகாரவர்க்கங்களிற்கலந்து தின்னக்கொடுக்க ஸ்திரீ வசியமாகும்.

459. இதுவுமது

கண்டத்தின்மேலுள்ள மூக்குச்சளி, கண்பீளை நாக்கழுக்கு காதுகுரும்பி நெற்றியழுக்கு இவைகளையெல்லாம் சமயெடையாகத்திரட்டி பேய்க்கறுப்பன்சாற்றில் மத்தித்து பலவித பலகாரங்களில் தின்னக்கொடுக்க வசியமாம் பெண்களும் இவ்வாறே செய்யலாம்.

460. இதுவுமது

களிப்பாக்கை மாதவிடாய்நீரில்கலந்துதூளாக்கி அதைதாம்பூலத்தோடு கலந்துக்கொடுக்க புருஷவசியமாகும்.

461. சாதம் அதிகமாகப்புசிக்கும் வித்தை

சாதாரணமாகமனிதன் புசிக்கும் சாதத்திற்கு அதிகமாகப்புசிக்கவேண்டுமெனில் அவன் ஓர் சிறிய துண்டு சிறுகண்பூளைவேரை வாயிலிட்டுமென்று விழுங்கிக்கொஞ்சம் தண்ணீரைக்குடித்துவிட்டு சாப்பிட உட்கார்ந்தானுகில் அவன்குறைந்தது நாலாள் சாதம் சாப்பிடுவான் பார்ப்பவர்களுக்கும் அதிக ஆச்சரியமாயிருக்கும்.

462. இதுவுமது

சிவிங்கியின்மூக்கைக் கைகுட்டையில் முடிந்துவைத்துக்கொண்டு சாதம்புசிக்கும்போது அதைமுகர்ந்துக்கொண்டே எவ்வளவு சாதமானுலும்புசிக்கலாம் ஜீரணமாகிவிடும் பார்ப்பவர்களும் ஆச்சரியப்பட்டு இது குட்டிச்சாத்தான் வசியமென்று சொல்லிக்கொள்வார்கள்.

463. வெற்றிலைசுழலும் ஜாலம்

ஒருமுதிர்ந்த வெற்றிலையை நன்ருகக் குழைபோல்முறுக்கி சாணி உருண்டையில் பொருத்தி அதின்பேரில் சிறிதளவு ஜலம்விட அதுசுழலும்பார்ப்பவர்களுக்கு இதுமகாவேடிக்கையா யிருக்கும்.

464 திரேகம் புகையும் ஜாலம்

கந்தகக்குச்சை ஜலத்தில் குழைத்து திரேகத்தில் பூசிக்கொண்டு இருட்டு வீட்டில்நிற்க திரேகம் புகைக்கும் அங்கிருக்கப்பட்டவர்களும் ஆச்சரியப் படுவார்கள்.

465. நீரின்மேல்மிதக்கும் ஜாலம்

குளம் எரி மடுவு இதுகளில் எதுகளிலாகிலும் இறங்கி வானத்தைப்பார்த்து மல்லாந்து படுத்துக்கொண்டு இருகைகளையும் பின்புரமாகக்கட்டி சுவாசபந்தனஞ்செய்து திரேகத்தை விரைப்பாக்கி மனதை பூரணத்தில் நிறுத்தி

ஒருமண்டலம் கையாளுடன் பழகிக்கொண்டேவந்து பின்பு சுயமாய்ச் செய்தால் பார்ப்பவர்களெல்லாம் உன்னை ஒருயோகியென்றே சொல்லுவார்கள்.

466. ஆண்வெற்றிலை பெண்வெற்றிலையைத்தேடிவரும் ஜாலம்

பூசை செய்யும்போது ஒரு பெண்வெற்றிலையை மல்லாத்தி வைத்துப் பூசை முடிந்தவுடன் ஆண்வெற்றிலையைக் கையில் பிடித்துக்கொண்டு அப்பெண் வெற்றிலையை வாவென்று கூப்பிட அது எகிறிநம்மிடம்வரும் ஆனால் இதற்கு முன்னதாக இரண்டு முழக்கூந்தலையெடுத்து அதின்முனையில் கடுகளவு மெழுகைத்தொடுத்துத் தந்திரமாகப் பெண் வெற்றிலையின் பின்புறம் ஒட்டி மற்றொரு முனையைக் காலின் பெருவிரலிற் பொருத்திநடித்துக்காண்பிக்கவும்.

467. வானவில் தோன்றும் ஜாலம்

சூரியன் புறப்பட்டபின் ஆச்சூரியனுக்கு நேர்முகமாகநின்றுக்கொண்டு வாயில் ஜலத்தையூற்றிக் கொப்பளித்து சிறுகப்பரவலாக விழும்படித்துப்ப அந்தநீரில் பஞ்சவர்ணமுள்ள வில்வடிவந்தோன்றும் பார்ப்பவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

468. பூதக்கண்ணுடி ஜாலம்

ஓர் சிறியதட்டின் நடுவில் ஊசிபுகும்படியான துவாரஞ்செய்து அதைத் தண்ணீரில் தோய்த்துப்பார்க்க எவ்வஸ்துக்களும் பெரிதாகத்தோன்றும்.

469. துணியில் எலுமிச்சம் பழத்தைக்கட்டி துணியறுமல் பழத்தைவெட்டும் ஜாலம்.

ஓர் கைக்குட்டையில் எலுமிச்சங்கனியை வைத்துத்தளர்த்தியாகக்கட்டிமணலைக்குவித்து அதின்பேரில் அம்முடியைவைத்துக்கூறுள்ள பட்டாக்கத்தியால் ஓங்கிவெட்டபழம் இரண்டு துண்டாய்விடும்துணிசேதாரமாகாது

470. கற்களைமெல்லும் ஜாலம்

நத்தைச் சூரிச்செடிக்கு காப்புகட்டி வேரறுதேகொண்டுவந்து வாயில் போட்டுமென்று அடங்கிக்கொண்டு சிறியகற்களை வாயில் போட்டுமெல்ல கற்கள் அவலைப்போல் தூளாகிவிடும் பல்கூசாது.

471. கூத்தாடும் ஜாலம்.

தான்றிமரத்தின்பேரில் படர்ந்திருக்கும் புல்லுருவிச்செடிக்குச் சாப நிவர்த்திசெய்து மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கலிட்டு எலுமிச்சங்கனிகாவுகொடுத்து தீபதூபங்காட்டிக் கொண்டுவந்து ஓழிஞ்சில்விதை ஆவாரைப்பூச்சி இந்திரகோபப்பூச்சிஇதுகளைச் சமயெடையாகச்சேர்த்து நத்தைச்சூரியின் சாறுவிட்டரைத்து வெள்ளைத்துணியில் தடவி நிழலிலுலர்த்தி திரியாகத்திரித்து வைத்துக்கொண்டு தேவையானபோது பலபேர்கள்நிறைந்திருக்குஞ்சபையில் அகலில் எண்ணெயூற்றி இவ்வத்தியைப் போட்டுக்கொளுத்த அங்குள்ளவர்களெல்லாங் கூத்தாடுவார்கள்.

472. தாதுபுஷ்டி உண்டாகுதல்

கொன்றைமரத்தின்பேரில் படர்ந்திருக்கும் புல்லுருவிக்குச் சாபநிவர்த்திசெய்து உயிர்கொடுத்துவியாழக்கிழமையும் சோதியுஞ்சேர்ந்ததினத்தில் கொண்டுவந்து குளிசமாடிக்கட்டிக்கொள்ள வசிபமாகும்மேற்படிதினத்தில்

பொங்கலிட்டு பலிகொடுத்து தீபதூபங்காட்டிக்கொண்டுவந்த செடியின் இலைகளில் நிலப்பனங்கிழங்கு ஆனைநெருஞ்சில் கட்டுக்கொடி இவைகளைச் சேர்த்து தண்ணீர்விட்டான் கிழங்குச்சாற்றினலரைத்து குளிகைசெய்து வைத்துக்கொண்டு காலை மாலை ஓர் குளிகை வீதம் சாப்பிட்டு ஆழாக்குப் பசும்பால் சாப்பிட்டுவர் தாதுபுஷ்டியுண்டாகும்.

473. பகைவர்வணங்கும் ஜாலம்

மாமரத்தின்மேல் படர்ந்திருக்கும் புல்லுருவிச்செடிக்கு சோமவாரமும் சித்திரை நக்ஷத்திரமுங்கூட்டியதினத்தில் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து கை நகங்கள்படாது கொண்டுவந்து கஸ்தூரி குங்குமஞ்சேர்த்து சீதாதேவி செங்கழுநீர் சார் கொன்றைப் பன்னீர் இவ்விரண்டையுஞ் சமயெடையாகச் சேர்த்தரைத்துப் பகையாளியின்பெயரை ஓர் நறுக்கிலெழுதி அவன் வீட்டுவாசற்படியில் புதைத்துவைக்க அவன்வணங்கி வந்து சமாதானமாக வார்த்தையாடுவான்.

474. பேய் பிசாசு விலங்கும் ஜாலம்.

இலவன் மரத்தின்பேரில் படர்ந்திருக்கும் புல்லுருவிச்செடிக்கு சாப நிவர்த்திசெய்து காப்புகட்டி பொங்கல் பலி தீபதூபங்கொடுத்துக் கொண்டு வந்து அதனுடன் நரிமிரட்டியைச் சமன்சேர்த்து பேய்க்கருப்பன்சாறு விட்டரைத்து குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு தேவையான போது பன்னீரிலரைத்து திலர்தமிட்டுக்கொண்டுபோக பேய்பிசாசுகளெல்லாம் விலகியோடிப்போகும் அல்லது அதைப் பேய்ப்பிடித்தவர்களுடைய வீட்டிற்புதைத்து வைக்க அப்பேயானது விலகி விடும்.

475. இதுவு மது.

பேயத்திமரத்தின்பேரில் படர்ந்திருக்கும் புல்லுருவிச்செடிக்குச் சாப நிவர்த்திசெய்து கன்னி நூல் காப்புகட்டி பொங்கலிட்டு எலுமிச்சங்கனிகாவுகொடுத்து தீபதூபத்துடன் கொண்டுவந்து அதனுடன் பேய்மிரட்டி நரிமிரட்டி இவ்விரண்டையுஞ்சேர்த்து பேய்க்கருப்பஞ்சாறுவிட்டரைத்து குளிகைசெய்து வைத்துக்கொண்டு தேவையானபோது ஜலத்திலிழைத்து தீட்டிக்கொள்ள சகலபேய்களும் ஓடிப்போகும்.

476. கிளுவைகளைப் பிடிக்குஞ் ஜாலம்.

ஏரி குளம் மடுவு இதுகளில்மேய்ந்து விளையாடிக்கொண்டிருக்கும் கிளுவைகளைப்பிடிக்குந் தந்திரமாவதெப்படியென்றால்:—ஓர் பெரிய வண்ணான் சாலுக்கு இரண்டு துளை செய்து அச்சாலின்மேல் சுண்ணும்படித்து கருப்பு புள்ளிகளையிட்டு ஜலத்தில்விட்டுவிட இதைப்பார்த்த கிளுவைகளெல்லாம் பயந்து ஓடிப்போகும் மறுபடியும் ஒவ்வொன்றாக பயந்தெளிந்து ஜலத்தில் வந்திறங்கும் அப்போது அச்சாலைத் தலையில்கவிழ்த்துக்கொண்டு தண்ணீரிவிறங்கி மெள்ளமாக நடந்துக்கொண்டே போய் அவைகளை ஒவ்வொன்றாகக்கால்களைப்பிடித்து உள்ளுக்கிழுத்துக் கொள்ளவேண்டும் வெளியில் காட்டக்கூடாது வெளியில் காட்டினால் அதுகளெல்லாம் பயந்து ஓடிப்போகும் இப்படி தந்திரமாக நீர்வாழ்கின்ற எவ்விதப்பக்ஷிகளையும் பிடித்துக் கொள்ளலாம்.

477. ஒரு பசு இரண்டு விதமாக பால் கறக்கும் ஜலாம்.

பால்கறக்கும்படியான கறவைப்பசுவிற்கு சித்திரமூலவேரை அரைத்து ஒருபக்கம் கொம்பிற்குத்தடவிக்காயவைத்து அதைச்சபையில் கொண்டுவர்

து சபையோர்களின் முன்பாகக்கறக்க அது சித்திர மூலவேரைப் பூசினபக்கம் இரத்தமாகவும் பூசாதபக்கம் சாதாரணமாகவும் பால்கறக்கும் அதைப் பார்த்தவர்களெல்லாம் பிரமித்து இது என்னமோ தெய்வத்தின் சேஷ்டையென்று பேசிக்கொள்ளுவார்கள் அப்போது அப்பசுவை மறைவாக இட்டுக்கொண்டுபோய் கொம்மில் பூசியுள்ளவேரைக் கழுவி விட்டுக்கொண்டுவந்து கறக்கச் சாதாரணமாகக் கறக்கும் பார்ப்பவர்களெல்லாம் ஆச்சரியப்படுவார்கள்.

478. சகல ஜீவராசிகளும் வசியமாகும் ஜாலம்

செம்போத்தென்னும் கள்ளிக்காக்கையொன்றைப்பிடித்து ஓடுகின்ற ஜலத்தினருகில் எடுத்துக்கொண்டுபோய் குந்திக்கொண்டு அதன் மயிரை ஒவ்வொன்றாகப் பிடுங்கி அச்சலத்தில் போட்டுக்கொண்டேவர அதில் எந்த மயிர் ஜலத்தின் கூடப்போகாமல் எதிர்த்தேறுகின்றதோ அம்மயிரை யெடுத்து தங்கத்தினால் தாயத்தைசெய்து அதிலதையடைத்துக் கட்டிக்கொள்ள சகல ஜீவராசிகளும் வசியமாகும்.

479. இதுவுமது

கொண்டலாத்திக் குருவியின் கூண்டைக் கொண்டுவந்து முன்போல் ஜலத்தில்விட அதில் எந்தஇறகு அந்தசலத்தை எதிர்த்தோடுகின்றதோ அவ் விறகையெடுத்துக் குளிசமாடித் தன்கையிற் கட்டிக்கொள்ள சகலஜனங்களுடன் பட்சி மிருகராசிகளெல்லாம் வசியமாகும்.

480. இதுவுமது

ஓர் அகலில் காராவின்நெய்விட்டு தாமரைநூல் வத்திபோட்டுக்கொளுத்தி அப்புகையைத் தேவாங்கின் மண்டையோட்டில் பிடித்துச் சிமிளில்வைத்துக்கொண்டு தேவையானபோது அதைப்புத்துத் தேனில்குழைத்துநெற்றியில் திலர்தமிட்டுச்செல்ல சகலஜனங்களும் வசியமாவதுடன் ஸ்திரீகளும் வசிய மாவார்கள்.

481. கண்ணோய்வராத ஜாலம்

மனிதர்களுக்குக்கண்ணோய் வருவது சகஜம் அவ்விதகண்ணோய் வராதிருக்க எள்ளின் பூவை விழுங்கும் பக்ஷத்தில் பூவொன்றுக்கு ஒருவருடம் கண்ணோய் வராது இம்மாதிரி சிலர் செய்கிற பழக்கமுண்டு.

482. மனிதர்கள்கூத்தாடும் ஜாலம்

ஆதிவாரதினம் பிறந்த சொரூபமாக அருணாக்கயர் முதலியதுகளின்றி ஓர் பலலியின் வாலை இரண்டாகவெட்ட அவ்வால் கீழேவிழுந்தவுடன் துள்ளிக்குதிக்கும் அந்த சமயம் நாமும் அத்துடன் நமது மனம்போல் குதித்து அது நின்றவுடன் நாமும்நின்று அவ்வாலை எடுத்துக்கொண்டு ஒருவெள்ளைத் துணியில் வைத்து வத்தியாகத்திரித்து அவ்வத்தியை விளக்கில் போட்டு எண்ணெயூற்றிக் கொளுத்தி பலபேர்கள் நிறைந்த சபையில் வைக்க அங்குள்ளவர்களெல்லாங் கூத்தாடுவார்கள் பார்ப்பவர்களுக்கு அதுமகா வேடிக்கையாயிருக்கும் விளக்கை அணைத்துவிட கூத்தாடுகிறதும் நிற்கும்.

483. நாக்குப்பூச்சிகள் கரையும் ஜாலம்

ஓர் யேனத்தில் கொஞ்சம் நாக்குப்பூச்சிகளைப்பிடித்துப்போட்டு அவைகளின்பேரில் கொஞ்சம் இந்துப்பைத் தூள்செய்துபோட அவைகள் ஜலத்தைப்போல் நீராக கரைந்து விடும்.

484. மீன்கள்மிதக்கும் ஜாலம்

பேன்கொட்டை செஞ்சாவேர்க்கடலை இரு இவைகளையெல்லாம் ஒன்ருக அரைத்து எரி குளம் குட்டை இதுகளில் போட்டுக்கலக்கிவிட அது களிலுள்ள மீன்களெல்லாம் மயக்கமாகி வெளியே மிதந்துவிடும் அப்போது அதை வெகு சுலபமாகப் பிடித்துச் சமைத்துச் சாப்பிடலாம்.

485. இவுதுமது

கொட்டைக் கரந்தைச் செடியைப்பிடுங்கி கத்தை கத்தையாகக்கட்டி எரி குளங்களில் போட்டுவைக்க அதிலுள்ள மீன்களெல்லாம் மிதந்துவிடும் அதைச் சுலபமாகப் பிடித்துக்கொள்ளலாம்.

486 இதுவுமது

கள்ளிக் கட்டையைச் சிறுகச் சிறுகவெட்டிக் குளம் குட்டை எரி இது களில் போட்டுவைக்க அதிலுள்ள மீன்களெல்லாம் மிதந்துவிடும் அதையும் சுலபமாகப் பிடித்துச் சமைத்து சாப்பிட்டு விடலாம்.

487. வாயில் நெருப்புண்டாகும் ஜாலம்

இந்திர கோபப்பூச்சியைக் கொண்டுவந்து வெய்யலில் நன்ருகவுலர்த்தி அதற்குச் சமன் வெள்ளையாகயிருக்கும் கூழாங்கலைப்பொடிசெய்து ஒன்ரு கக் கலந்து வாயிலடக்கிக்கொண்டு நாலுபேர்களின் முன்பாக வாயைத்திற ந்துகக்க வாயிலிருந்து நெருப்புப்பொறிகள் குபீல் குபீலென்று வெளியே விழும் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்.

488. வேறு கண்ணுடி மெல்லும் ஜாலம்

பனிதாங்கியின் வேரைக்கொண்டுவந்து வாயில்போட்டுமென்றுதாடை யிலடிக்கிக்கொண்டு கண்ணுடி ஓட்டைப்போட்டுமெல்ல வாயறுக்காது வாய் கூசாது எவ்வளவாகிலும் முருக்கைப்போல் மென்று துப்பிவிடலாம்.

489. சகல வழக்குகளையும் வெல்லும் ஜாலம்

நெருஞ்சிவேர் மயிரோசனைவேர் இதுகள் இரண்டையும் சமயெடையா கயெடுத்து விநாயகரின் எதிரில் வைத்துப்பூசித்து குலதேவதையை நினை த்து வாயிலடக்கிக்கொண்டுபோய் எதிரில் நிற்கும் எதிரியின் முகத்தை உற் றுநோக்க அவன் பலவிதமாக வார்த்தை குளறிப்பேசுவான்.

490. வெள்ளாய் வேகாத ஜாலம்.

அத்திக்கட்டையைக் கொளுத்தி அந்நெருப்பைக் கழுதையின் மூத்தி ரத்தாலவித்து அக்கரியைக்கொண்டுபோய் வண்ணுனுடைய வெள்ளாயடுப் பில் போட்டுவிட்டால் அவ்வெள்ளாயானது எவ்வளவு கரியைப் போட்டுக் கொளுத்தினுலும் வேகாது அவ்வடுப்பிலுள்ள சாம்பலையெல்லாம் சீராக வாரிவிட்டு வேறு நெருப்பைப்போட்டுக் கொளுத்தினுல்தான் வெள்ளாய் வேகும் இம்மாதிரி ஆவாரஞ்செடியின் விரகிலும் செய்கிறதுண்டு.

491. முள்ளின்பேரில் நடக்கும் ஜாலம்

செப்புநெருஞ்சி வேரையும் ஓரிலைத்தாமரை வேரையும் காப்பு கட்டிக் கொண்டுவந்து தலைமாற்றிக் குளிசத்திலடைத்து வாயில்போட்டுக்கொண்டு எவ்வித முட்களின்பேரில நடந்தாலும் காலில் முள் தைக்காது. பார்ப்ப வர்களெல்லாம் உனக்கு குட்டிச்சாத்தான் வசியமென்று சொல்லுவார்கள்.

492. எதிரிகளை அடக்கும் ஜாலம்

ஓர் பெரிய வெள்ளைப்புட்டியிற் சுமார் பதினைந்து தேள்களைப் பிடித்துப்போட்டு அதன்கூட இரும்புக் கம்பிகளை அங்குல அளவுள்ளதாய் நாலைந்துப்போட்டு அதன்கூட ஓர் பெரிய செய்யானைப் பிடித்துப்போட்டு மூடிவைத்துவிடவும் பிறகு நாலைந்து நாள் சென்று அந்த இரும்புக்கம்பியில் ஒன்றையெடுத்து பகைவர்களின் மூத்திரக்குழியில் புதைத்துவைக்க அவர்கள் சொல்லொணாத பாதையை அனுபவிப்பார்கள்.

493. திரேகத்தில் ஊசி குத்தும் ஜாலம்

குண்டுமணி அளவு காது குரும்பியை எடுத்து திரேகத்தில் எந்த பாகத்தில் ஊசி குத்தவேண்டுமோ அபபாகத்தில் நன்றாக அறக்கித் தேய்த்துவிட்டு ஒரு ஊசியைக் குத்த வலியிருக்காது இம்மாதிரி வேல் முதலியதுகளையும் குத்திக்கொள்ளலாம்.

494. திரேகத்தில் எலுமிச்சம்பழம் தோங்கும் ஜாலம்

முன்மாதிரி காதுகுரும்பியை எங்கெங்குத் தடவவேண்டுமோ அங்கங்குத் தடவித் தேய்த்து சதையை வலித்து நூலினால் கட்டி அதில் எலுமிச்சம்பழத்தைக் கட்டி தொங்கவிட்டாலுஞ் சரி அல்லது அவ்விடங்களில் குண்டூசியைக் குத்தி அதில் கயற்றைக்கட்டி அதில் பழத்தைக்கட்டி தொங்கவிட்டாலும் வலியிராது.

495. மடியில் கட்டிய தேங்காய உடையும் ஜாலம்

ஓர் உரித்த தேங்காயை மடியில் கட்டிக்கொண்டு இருகரங்களையும் கால் பெருவிரலையும் சேர்த்து பின்புறமாகக் கட்டிக்கொண்டு ஓர் அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டு நிஷ்டையிலிருப்பவனைப்போல் இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு சில நாழிகையிருந்து பிறகுத் தந்திரமாகப் பின்புறமிருக்கும் கைகளை வாங்கிக்கொண்டு மடியிலிருக்குந் தேங்காயை அவிழ்த்து சத்தப்படாமல் உடைத்து எப்போதும்போல மடியில் கட்டிக்கொண்டு பழயபடி கையைப் பின்புறம் சேர்த்துக்கொண்டு ஜனங்களையழைத்துக் கதவைத் திறக்கச்சொல்லி தேங்காயைக்காட்ட எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். ஆனல் கால்களை கட்டும் ஆள் நம்மவனாகவும் முடிகளெல்லாம் சுருக்குமுடியாகவும் இருக்கவேண்டும்.

496. வயற்றில் டம்ளர் ஒட்டும் ஜாலம்

ஓர் பித்தளை டம்ளரை யெடுத்து சபையிலுள்ளவர்களுக்குக் காண்பித்து கணேசரைத் துதிப்பதுபோல் அர்ச்சனை முதலியவைகளைச் செய்து கற்பூரத்தை அதிகமாகக் கொளுத்தி அப்புகையை டம்ளர் நிறையப்பிடித்து அதை உடனே வயற்றினடி பாகத்தில் வைத்து அழுத்திவிட்டுவிட அது கீழே விழாது பார்ப்பவர்களும் ஆச்சரியப்படுவார்கள் மறுபடியும் அதை சாய்த்தெடுக்க அது கையோடு வந்துவிடும்.

497. வேப்பிலை அடிக்கும் ஜாலம்

குழந்தைகளுக்கு உண்டாகும் சந்தோஷம் தோஷமுதலியவைகளுக்கு அக்குழந்தையை முன்னே வைத்துக்கொண்டு வேப்பிலையைக் கையிலெடுத்து ஜலத்தில் நன்றாகத் தோய்த்து உதறிவிட்டு நம்மிஷ்ட தேவதையை மனதிலெண்ணி சுமார் பத்து நிமிஷம்வரையில் விடாது அதன் காற்று அக்குழந்தையின்பேரில் படும்படி வீசினல் எப்படிப்பட்ட தோஷங்களும் விலகி

விடும். காற்று கீருப்பாயிருந்தாலும் ஓடிவிடும். இது சாதாரண உலக அனுபவ்மான வேலே.

498. கோழிமுட்டை கண்ணில் ஒட்டும் ஜாலம்

ஓர் கோழிமுட்டையைக் கொண்டுவந்து எழுத்தாணியால் துவாரஞ் செய்து அதிலிருக்கும் அம்புல்லிகளை யெல்லாம் போக்கிவிட்டு அவ்வாயை வெள்ளைப் பிசினியால் மூடி அடைத்தபிறகு ஜாலமாடும் சபையில் அதைக் கையிலெடுத்து அனைவர்க்குங் காண்பித்து இம்முட்டையைக் கண்ணில் ஒட்டவைத்துக்கொள்கிறேன் பாருங்களென்று சொல்லி முட்டையைக் கையில் வைத்துக்கொண்டு சிறிதுநேரம் மந்திரம் செபிப்பதுபோல் கண்களை மூடிக்கொண்டிருந்து பிறகு கண்களைத் திறந்து ஒருமுறை சபையோரைப் பார்த்து சல்மலையாள பகவதி ஒட்டிக்கொள்ளென்று வாயில் வைத்து ஈரஞ் செய்துக்கொண்டு கண்ணில் வைத்து அழுத்திக்காட்ட முட்டையானது விழாது. பார்ப்பவர்களும் ஆச்சரியப்படுவார்கள்.

499. சென்னகுன்னி மேயும் ஜாலம்

தேவையான சென்னகுன்னிகளை யெடுத்து கற்பூரத்தைப் பொடிசெய்துப்போட்டு இரண்டையும்நன்ருகக் கலந்துவைத்துக்கொண்டு சனங்களைப் பார்த்து இந்த சென்னகுன்னிகள் மேயும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி சனங்களை அழைத்துக்கொண்டு போய் ஓர் கிணற்றில் போட அதுகள் கிறுகிறு என்று சுழன்று உள்ளே போகும் பார்ப்பவர்கள் வெகு ஆச்சரியப்படுவார்கள்.

500. அதிக நீரைக் குடிக்கும் ஜாலம்

சிறுபூளைச் செடிக்கும் குப்பைமேனிச்செடிக்கும் காப்புகட்டி சாப நிவர்த்தி செய்துகொண்டுவந்து வாயில்போட்டுமென்று தாடையிலடக்கிக் கொண்டு எவ்வளவு நீரையாஞலும் தாராளமாகக் குடித்துவிடலாம் பார்ப்பவர்களெல்லாம் இது குட்டிச்சாத்தான் தந்திரமென்று சொல்லிக்கொள்வார்கள்.

501. சீட்டு நடக்கும் ஜாலம்

நாய்பேரில் இருக்கும் உணியைப் பின்னப்படுத்தாமல் பிடித்து அதன் முதுகில் குண்டுமணிப் பிரமாணம் வெள்ளைமெழுக்கைத் தடவி அதின் ஓர் காகிதத்தில் தேவையான சமாசாரத்தை யெழுதி அதை அதில் ஒட்டவைத்துக் கீழே விட்டுவிட அது நகர்ந்துபோகின்றதைப் பார்த்தால் மகா வேடிக்கையாயிருக்கும்.

502. சீட்டு சுழலும் ஜாலம்

காகிதத்துண்டில் தேவையான சமாச்சாரத்தை யெழுதி சனங்களுக்குக் காண்பித்து இக்காகிதத்தை ஜலத்தில் போடுகிறேன் இது கிறுகிறுவென்று சுழலும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கொஞ்சம் காதுகுறும்பியை அச்சீட்டின் பின்புறந் தடவி ஜலத்தில்போட அது கிறுகிறுவென்று சுழலுவது வேடிக்கையாயிருக்கும்.

503 தேங்காயைக் கையால் குத்தி உடைக்கும் ஜாலம்

ஆய்த எழுத்து மாதிரி மூன்று பெரிய உப்புக்கல்லைக் கீழே வைத்து அதின்பேரில் உரித்த தேங்காயை வைத்துக் கையினுல் ஓங்கிக் குத்த தேங்காயானது உடைந்துவிடும் ஆனல் சாதகம் வேண்டும்.

504. உலக்கை அந்தரமாக நிறகும் ஜாலம்

ஒரு அகல போகணியில் ஜலத்தைவிட்டு அதை சமமாகிய பூமியில் வைத்து அதன் நடுவில் ஓர் பூண் கட்டிய உலக்கையைச் சமமாக நிறுத்திக் கையை விட்டுவிட அது அசையாது நிற்கும் பார்ப்பவர்களும். சந்தோஷப் படுவார்கள்.

505. கருங்கல்லை உடைக்கும் ஜாலம்

உடைக்கவேண்டிய பெரிய பாரைகளையாகிலும் கருங்கல்லையாகிலும் பார்த்து அதின்பேரில் முருக்கன் விறகு ஆவாறை விறகு வேலன் விறகு இவை மூன்றையும் போட்டு நெருப்பு வைத்துக் கொளுத்தி அது எரிந்து தணியுஞ் சமயத்தில் சுண்ணம்பு கரைத்த தெளிவுநீரை ஊற்றி ஆற்றிவிட்டு இலேசான சம்மட்டியைக் கொண்டு தட்ட உடைந்துவிடும்.

506. பகலில் நக்ஷத்திரங் தோன்றும் ஜாலம்

ஆழமாகிய கிணற்றிலிறங்கி அசையாது மனதைப் பூரணத்தில் நிறுத்தி மல்லாந்துக் கண்களை மூடித் திறந்துபார்க்க ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்கள் தோன்றும். ஆனல் சாதகம் வேண்டும்.

507. நெய் பரிமாறும் ஜாலம்

நமக்குத் தேவையான நெய்யை ஒரு பாத்திரத்தில்விட்டு அதனுடன் இளநீரைவிட்டுக் காய்ச்சி கை பொறுக்கும்படியான சூட்டிலிருக்கும்போதே சபையோர்களுக்குத் தாராளமாக பரிமாரலாம்.

508. திருடு பிடிக்கும் ஜாலம்

திருடுப்போன வீட்டிலிருக்கின்றவர்களுடைய பேர்களை யெல்லாம் தனித்தனியாகச் சீட்டிலெழுதிச் சுருட்டி ஓர் சட்டியில் கொஞ்சம் சாம்பலைக் கொட்டி அச்சாம்பலில் சந்தேகமுள்ள பேர்வழியின் சீட்டை மறைத்துவிட்டு மற்ற சீட்டுகளை யெல்லாம் அச்சாம்பலின்பேரில் போட்டு எல்லோரையும் பார்த்து இந்த சீட்டுகளை யெல்லாம் நெருப்புவைத்துக் கொளுத்திவிடப் போகிறேன் என்று கொளுத்தி எடுக்காதவர்களின் பெயர்களெல்லாம் நெருப்பில் வெந்துபோகும் எடுத்தவர்களுடைய பெயரின் சீட்டு மாத்திரம் வேகாமலிருக்குமென்று சொல்லி அவர்கள் எதிரில் மந்திரங்கள் சொல்லிக்கொண்டேயிருக்க சீட்டுகளானது எரிந்துபோகும். எரிந்துக் கொண்டிருக்கும்போதே அதில் கொஞ்சம் ஜலத்தைவிட்டுத் துழாவி சந்தேகமுள்ளவர்களின் சீட்டை எடுத்து எல்லோருக்குங்காட்ட திருடினவர்கள் பயந்து குட்டிச்சாத்தான் நம்மைக் காண்பித்துவிட்டதென்று பயந்து திருடின சொத்தைக் கொண்டுவந்து போட்டுவிடுவார்கள். இது கைபாகமான தந்திரம்.

509. இதுவுமது

திருடுபோன வீட்டில் நடுவாசலை மெழுகிச் சாணியில் பிள்ளையார் பிடித்துவைத்து அறுகம்புல் சூடி புஷ்பஞ் சாத்தி வெற்றிலைப்பாக்கு பழம் தேங்கா முதலியவைகளை வைத்து பூசை புரிந்து பிறகு ஓர் கோழிமுட்டையைக் கொண்டுவந்து அதற்கு மஞ்சள் குங்குமம் முதலியவைகளையிட்டு அவர் எதிரில் வைத்து சுவாமி கணேச மூர்த்தியே உன்னருளால் யான் இம்முட்டையை மந்தரித்துவிடுகிறேன் யார் நகையை எடுத்தார்களோ அவர்களை நீங்கள்தான் காட்டிக்கொடுக்கவேண்டுமென்று சொல்லி அம்

முட்டைக்கூடை போட்டு மூடி அவ்வாசலில் குடியிருக்கப்பட்டவர்களெல்லாருக்கும் விபூதிப்பிரசாதம் கொடுத்துக்கொண்டேயிருக்க அதற்குள் ஒருவர் கூடைக்குள் இருக்கும் கோழிமுட்டைக்குப்பதிலாக ஓர் வாத்துமுட்டைக்கு மஞ்சள் குங்குமம் முதலியதுகளை கோழிமுட்டைக்குப் பூசின மாதிரி பூசிக்·குடைக்குள் வைத்துவிடவேண்டும். இதற்குள் எல்லோருக்கும் விபூதியைக் கொடுத்துவிட்டு விநாயகரைத் துதித்து சாஷ்டாங்கமாக விழுந்துக் கும்பிட்டு கூடையைத் திறந்து முட்டையை எடுத்துக்காட்டி பார்த்தீர்களா. எடுத்தவர்களின் வயர் இம்முட்டையைப்போலதான் உப்பிவிடும். எடுத்தவர்கள் இந்த வீட்டினிலேயே இருப்பதினுல்தான் விநாயகர் இதை உப்பச்செய்தார் என்று சொல்லிக்காண்பிக்க அங்குள்ளவர்களெல்லாம் இம்முட்டையைப் பார்த்ததும் இது அதற்குமேல் பெரிதாக இருப்பதினுல் பயப்பட்டு ஒருவர்க்கொருவர் வாயில் வந்ததையெல்லாம் பேசிக்கொள்வார்கள். சிலர் மந்திரக்காரன் மகா கெட்டிக்காரனென்றும் அவன் எடுத்தவர்களை லேசாக விடப்போகிறுனு என்றும் சிலர் முட்டையைப் போல அவர்கள் வயிறும் உப்பி வெடிக்கப்போகின்றதென்றும் சொல்லிக் கொள்வார்கள். இதை யெல்லாங் கேட்ட எடுத்தவர்கள் பயந்து நகையைக் கொண்டுவந்து ஒருவருக்குந் தெரியாது போட்டுவிடுவார்கள். இது கை பாகமான தந்திரம்.

510. இதுவுமது

ஓர் அறை வீட்டை மெழுகிச் சுத்தஞ்செய்து அதன் நடுவில் பிள்ளையார் பிடித்துவைத்து அருகம்புல் சூடி பூசை செய்து அவர்க்கெதிரில் தேங்காயுடைத்து வைத்து பழம் வெற்றிலைப்பாக்கு புஷ்பம் வைத்து சாம்பிராணிக் கொளுத்தி அவர் பக்கத்தில் ஓர் மாத்திரைக் கோலுக்குப் பெருங்காயத்தை அரைத்து நன்முகப் பூசி அதன் நடுவில் மஞ்சள் குங்குமமிட்டு புஷ்பஞ் சூட்டி சாத்திவைத்து விநாயக அஷ்டோத்திர மந்திரத்தைச் செபித்துப் பூசித்துக் கற்பூரங் கொளுத்தி விநாயகரே! நாங்களோ ரொம்பவும் ஏழை எங்களால் தங்களுக்கு வேண்டியமட்டும் பூசை போடமுடியாது ஏதோ எங்களாலானவரைக்கும் மலையத்தனை சுவாமிக்குக் கடுகளவு பூசையென்பதாய் செய்தோம் அதைத் தாங்கள் சந்தோஷமாக யேற்றுக்கொண்டு எங்கள் வயற்றில் பாலை வார்க்கவேண்டுமென்பதாய்ச் சொல்லி அங்குள்ளவர்களை யெல்லாம் பார்த்து நீங்கள் ஒவ்வொருவராய் இவ்வீட்டிற்குள்போய் அங்கிருக்கும் மாத்திரைக்கோலைக் கையினுல் பிடித்துக் கும்பிட்டுவிட்டு தட்டிலிருக்கும் விபூதியை யெடுத்து நெற்றியிலிட்டுக்கொண்டு வரவேண்டும். அப்படி நீங்கள் செய்யும்போது எடுத்தவர்களின் கையானது அம்மாத்திரைக் கோலின்பேரில் பட்டால் அது உங்களை சும்மா விடாது. அப்புறம் என்பேரில் நீங்கள் குறை சொல்லவேண்டாமென்று சொல்லி அவ்வறையின் வாயம்படியருகில் குந்திக்கொண்டு ஒவ்வொருத்தராக உள்ளே போய் வாருங்களென்று சொல்லிவிட்டு அவர்கள் போய் வரும்போது அவர்களின் கைகளை முகர்ந்து பார்த்துக்கொண்டே வர, எடுத்தவர்கள் மாத்திரம் அத்தடியைத் தொட்டால் அது என்ன செய்யுமோ என்று பயந்து அதைத் தொடாமல் வந்துவிடுவார்கள். அதை அறிந்து திருடினவர்களைக் கண்டு பிடித்து திருட்டுப்போன சொத்தை பயப்படுத்தி வாங்கிக்கொள்ளவும்.

511. காகங்கள் மயங்கும் ஜாலம்

கல்தாரத்தைப் பொடித்து நெய்விட்டரைத்து அன்னத்துடன் சேர்த்துப் பிசைந்து காகத்திற்கு தின்னவைக்க அதைத் தின்ற காகங்களெல்

லாம் அவ்விடத்திலேயே ஸ்மரணையில்லாது மயங்கும் அப்போது கொஞ்சம் ஜலத்தை யெடுத்து அதின்பேரில் தெளிக்க தெளிந்து எழுந்து ஓடிப் போகும்.

512. சகலவசியங்களுக்கும் போதுமந்திரம்

ஓம் ஆம் ஜெய ஜெய வா வா அவ்வும் உவ்வும் சவ்வும் வசிய வசிய சுவ ஹாவென்று சகல வசியங்களுக்குஞ் செபிக்கச் சீக்கிரம் வசியமாகும்.

513. தீபம் ஜோலிக்கும் ஜாலம்

கிரோசின்எண்ணை விளக்குகளில் சாப்பிடும் உப்பைப்பொடித்துப் போட்டு தீபமேற்ற வெகுபிரகாசமாக எரியும்.

514. இதுவுமது

லேட் லஸ்தர் குளோப் முதலிய விளக்குகளில் கிரோசின் எண்ணையை விட்டு அதில் கற்பூரத்தை பொடித்துப்போட்டுக் கொளுத்த தீபமானது வெகுபிரகாசமாக எரியும்.

515. கோழிசண்டை ஜாலம்

எத்தைச் சொன்னாலுஞ் செய்யும் நத்தைச்சூரிசெடிக்குக் காப்புகட்டி பொங்கல் பலி தூபதீபங்கொடுத்துக் கொண்டுவந்து ஜலத்தில்போட்டு ஒரு மண்டலஞ்சென்றெடுத்து அதைச்சண்டைசாவலுக்குக் கொடுத்து கத்தி கட்டி சண்டைக்குவிட தோற்காது எதிரி சாவலுடைய கத்திபட்டாலும் அறபடாது நமதுசாவலே செலிக்கும்.

516. சபையில் பீ நாற்றமுண்டாகும் ஜாலம்

எருமுட்டைப் பீ நாறிவேரையும் அதின் கிழங்கையும் சமயெடையாக யெடுத்து ஆட்டுமூத்திரத்திலரைத்து மாத்திரைதிரட்டி உலர்த்திவைத்துக் கொண்டு சபையில் ஒருவர்பேரில் ஒரு மாத்திரை யெடுத்துத்தேய்க்கப் பீ நாற்றம்நாறும் அங்குள்ளவர்களெல்லாம் சந்தோஷப்படுவார்கள்.

517. தம்பன ஜாலம்

கல்லுருவிச்செடியின் சமூலத்தைக்கொண்டுவந்து நிழலிலுலர்த்தி அதனுடன் கருங்கழுதைச் சடையைச்சேர்த்து பறைபர்கள் முடித்த கட்டுக் கயற்றில் முடிந்து தெருவாயற்படியில் புதைத்துவைக்க அவ்வீட்டில் விளையாடுகின்ற பேய் பிசாசு பூதம் தெய்வமுதலியதுகளெல்லாம் ஆடாது நின்றுவிடும் அதை எடுத்து எரிந்துவிட்டு அவ்வீட்டைக் கோமயத்தால் சுத்தஞ்செய்து தெய்வமாடுகிறவர்களையோ பேயாடுபவர்களையோ ஸ்நானஞ்செய்துவிட்டு வரச்சொன்னால்தான் மருள்வந்து ஆடும்.

518. இதுவுமது

பன்றி இரைச்சியைக் கொண்டுவந்து நெருப்பில் சுட்டுக்கருக்கி அதை அப்பன்றியின் மூத்திரப்பிச்சியிருக்கும் நீரினாலேயே அரைத்து மாத்திரைகளாகத்திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டிருந்து தேவையானபோது ஓர் மாத்திரையெடுத்து சிறுநீரில் குழைத்து நகச்சந்தில வைத்துக் கொண்டுபோய் தெய்வமாடுபவர்களின்மேலே குறிமேடையின்மீதோ ஆவேசக்காரர்களின்மீதோ படும்படியாகத் தெளித்துவிட அதுபட்ட மாத்திரத்தில் எப்பேர்ப்பட்ட தெய்வமாயிருந்தாலும் விலகிவிடும் ஆடாது குறிமேடைகளில் குறிநடவாது பதிவிளக்கில் தெய்வம் பலுக்காது நின்றுவிடும் அங்

குமறுபடியும்தெய்வமாடி குறிநடக்கவேண்டுமாகில் கோமயங்கொண்டுவந்து சுத்திசெய்து மருளாடுகிறவர்கள் ஸ்நானஞ்செய்து வந்தால்தான் நடக்கும்.

519. இதுவுமது

சுடுகாட்டில் பிணத்தைச்சுற்றிவந்து உடைக்கும் பானையின் ஓட்டை ஓர் தம்பிடியளவு நறுக்கிப் பதிவிளக்கின் கீழிருக்கும் சாணியில் பொதிந்து வைத்துவிட் அவ்விளக்கில் எவ்வித குறிகளும்நடக்காது.

520. இதுவுமது

குறிகள்சொல்லும் வீட்டு வாயற்படியின் இறப்பில் ஒற்றைப்பிரமட்டையைக் கொண்டுவந்துச் சொருகிவைத்துவிட்டால் அவ்வீட்டில் எவ்வித குறிகளும் நடவாது அதை எடுத்துவிட்டால்தான் நடக்கும்.

521. குறிப்போடும் ஜாலம்

காட்டாமணக்கன்பாலில் துருசைக்கலந்து நன்றாகக்குழைத்து புட்டியில்வைத்துக்கொண்டு துணிகளுக்கு மார்க்குப்போட அம்மார்க்குகள் நாள் எத்தனையானாலுங்கலையாது.

522. கோழிமுட்டை நீரைத்தேடும் ஜாலம்

ஓர் கோழிமுட்டையை யெடுத்து அதற்குள்ளிருக்கும் அம்புலியை யெல்லாம் எழுத்தாணியால் குத்திகுத்தித்துளைசெய்து போக்கிவிட்டு அதற்குப் பதில் குளத்திலிருக்கும் அட்டையைப்பிடித்து அதனுள்விட்டு ஆட்டின் ஜவ்வைக்கொண்டோ அதன் வாயைமூடி ஊசிபுகும்படியான துவாரம் விட்டு அம்முட்டையைக் குளத்தின் அருகாமை மேட்டில் விட்டுவிட அது உருண்டுக்கொண்டே நீரிருக்குமிடத்திற்கு நேராகப்போகுமேயன்றி சுற்று அப்புறம் இப்புறம் அசையாது அதைப்பார்ப்பவர்கள் ரொம்பவும் ஆச்சரியப்படுவார்கள்.

523. வசியக்கடகஞ்செய்யும் ஜாலம்

தலைச்சன்பிள்ளையின் உந்திக்கொடியை எடுத்துப் புத்துத்தேனில் ஒரு மண்டலம் அதாவது நாற்பதுநாள் ஊறவைத்து எடுத்துக்காயவைத்து அது நன்றாகக்காய்ந்தபின் பூசையில்வைத்து வெள்ளைப்புஷ்பத்தினால் அர்ச்சனை புரிந்து வசியமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி அதைதங்கம் வெள்ளி செம்பு இம்மூன்றையுஞ் சமயெடைச் சேர்த்துச் செய்த கடயத்தில்போட்டு மறுபடியும் முன் செய்த பூசையைச் செய்துக்கையில் போட்டுக்கொண்டிருக்க மனிதர்முதல் மிருகங்கள்வரையில் வசியமாகும் கைகண்டது.

524. எதிரிகள் அடங்கும் ஜாலம்

ஞாயிற்றுக்கிழமையதினம் காலையில் வட்டக்கிலுகிலுப்பைச் செடிக்கு சாபநிவர்த்திசெய்து பொங்கலிட்டு தீபதூபங்கொடுத்து கன்னிநூல் காப்பு கட்டி அச்செடியை இரும்பாலாகிய ஆயுதங்கள்படாது கொண்டுவந்துபூசையில்வைத்துப் பூசித்து அதைச்சதா தன்கையில் வைத்திருக்க எதிரிகளெல்லாம் வணங்கி யொடுங்கி அடங்கி நடப்பார்கள்.

525. கனவுகாணுதிருக்கும் ஜாலம்

சிலர் பிரதிதினமும் நித்திரையில் கனவுகண்டு அதினால் பயப்பட்டு நித்திரையிலேயே சலவிசர்ச்சனம் செய்கிறதும் நித்திரையில் அலறி எழுந்திருக்கின்றதுமாக அவஸதைப்படுவதுண்டு அப்படிப்பட்டவர்களெல்லாம் கொஞ்

சம் படிகாரத்தை தலைமாட்டின் கீழ் வைத்துப்படுத்துக்கொண்டால் எவ்வி தகனவும் காணமாட்டார்கள் பேய் பிசாசுகளாயிருந்தாலும் விலகிவிடும்.

இதுவுமது

சிலர் நித்திரையில் கனவுகண்டு அதினால் இந்திரியம்சோறுகிறதுண்டு அப்படிப்பட்டவர்கள் காரியத்தை கெச்சக்காய் பிரமாணம் உருக்கி அதை மணியாகவார்ப்படம் வார்த்து துளைசெய்து அரைஞாண்கயற்றில் கட்டியிருக்க அன்றுமுதல் அவர்களுக்குக் கனவில் இந்திரியஞ் சோராது.

526. இராச மோகனம்

ஆலமரத்தின்மேலிருக்கும் புல்லுருவியைக்கருக்கி அதற்குச்சமன்குங்குமஞ்சேர்த்து ஆலம்பால் தேன் காராவின்நெய் இம்மூன்றையுஞ் சேர்த்துக் குழைத்து மைசெய்து சிமிளில்வைத்துக்கொண்டு ஆரே-ஆரே-ஹரி-ஹரி-மோகாய்-மோகாய்-மோகினியே-ஆங்-ஊங்-ல-ல-ல-சுவாஹா என்று நூத்தியெட்டுவிசை மந்திரமோதித் திலர்தமிட இராஜமோகனமாகும்.

527. சுக்கிலத் தம்பனம்

விஷ்ணுகிரந்திவேர் விளாம்பிசின் சிகப்புகஞ்சா கருப்புகஞ்சா ஊமத்தன் மருளூமத்தன் இவைகளைக்கருக்கி காராவின் நெய்யில் குழைத்து சிமிளில் வைத்துக்கொண்டு நிங்-வங்-சிங்-லங்-மங்-மங்-லங்-வங்-யங்-லங்-தம்பாய தம்பாய-அரே-அரே-நிர்சிய-நிர்சிய-நீலகண்டரூபி-சரரூபி-ஆதியானந்தி-தம்பனபாராயணி-ஐயுங்-கிலியுஞ்-சுவாஹாவென்று லக்ஷத்தியெட்டுரு செபித்துத் திலர்தமிட சுக்கிலத் தம்பனமாகும்.

528. மிருக உச்சாடனம்

நரிமிரட்டி இருவரைமிரட்டி எருமைப்புட்டை புலையரைச்சுட்ட சாம்பல் சீதாதேவி செங்கழுநீர் இவைகளையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து ஓர்கலயத்திற்போட்டு ஆம்-ஓம்-ரோங்-அரங் - அரங்-ரா-ரா-சிக்கிர-உச்சாடாய-ஆதிவைரவி-தூளி-தூளி-தூக்கு-தூக்கு-அருணி - அருணி-ஆங்காராட்சி-அகோரரூபி சுவஹாவென்று ஆயிரத்தியெட்டுரு கொடுத்துவைக்க மிருகங்களையெல்லாம் உச்சாடிக்கும்.

529. இராஜ எடனை

காக்கைப்பூண்டு கருங்குன்றி கொல்லைக்கம்பு நாகப்பாம்பினாண் லிங்கம் அரிதாரம் கோஷ்டம் இவைகளையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து பேரை ஓர்நறுக்கி லெழுதி ஓம் காட்டேரி சாமுண்டி ஆத்தாள் காமரூபி அங் அங் நாரி நாரி எந்து எந்துஎகையா எகையா அவடே அவடே அ ரா ரா சிங் சிங் வங் வங் சர்வ எடனை சுவாஹாயென்று லக்ஷத்தியெட்டுரு செபித்து மயானத்திற்புதைத்துவைக்க இராஜ எடனையாகும்.

530. இராஜ ஆக்ருஷ்ணம்.

தலைச்சுருளி முள்ளி சத்திச்சாட்டானை ஆந்தைக்கண் நீர்மேல்நெருப்பு சிகப்பு பூலாயிலை இவைகளையெல்லாம் ஓர் நிறையாகயெடுத்துக் கருக்கி புத்துத் தேன் விட்டரைத்து மையாக்கிச்சிமிளில் வைத்துக்கொண்டு ஓம் மாகாளி வைரவி முக்கண்ணி ஆக்ருஷ்ணதூளி ஆனந்தவல்லி நீலி பகவதி ஜெய ஜெய விஜய விஜய ஆக்ருஷ்ணுபா ரங் சிங் கிலிங் லிங் கிமடி கிருடி யீம் யீம் லா லா லங் நங் பரா பரா ரா ரா சுசீ சுசீ சுவஹாவென்று நூற்றியெட்டு விசை செபித்து திலர்தமிட இராஜ ஆக்ருஷ்ணமாகும்.

531. இராஜ பேதனம்

கோழியவரை காக்கைக்கூண்டு தேள்முதுகெலும்பு சிந்தில் தும்பை பொன் முசுட்டை எட்டி பச்சோந்தி வலியான்முட்டை நாயின்செவி இவைகளையெல்லாம் ஒன்றுகச்சேர்த்து ஓர் குடுவையில்போட்டு அரகரா சிவாய நமா திரிபுரதகனி தேவி அகிலகாரணி செந்தாமரையாத்தாள் ஏரிட்டபார் வையாளே நீலி மூக்கண்ணி பாங் பாங் டுங் டுங் சரரூபி சக்ரரூபி ஆயி பிரத்தியங்கிரே ஜெய் ஜெயு பேதையா பேதையா சிங் சிங் யங் யங் லங் லங் மங் மங் யா யா சுவஹர் வென்று நூற்றியெட்டுரு செபித்துப் புதைத்து வைக்க இராஜபேதனமாகும்.

532. இராஜ மாரணம்

அரசு புரசு அருணி கொங்கன்முளை பிணத்தின்பல் மண்டையோடு இவைகளையெல்லாம் ஒன்று சேர்த்துவைத்து மாரி பகவதி சூலி டாகினி டகினி சாடு சாடு அய்யா அய்யா சர்வமாரணி ஆயி சீ போதேவியென்று நூற்றியெட்டுரு கொடுத்து புதைத்துவிட்டால் இராஜமாரணமாகும்,

533. புருஷ வசியம்

சிகப்பு நாயுருவி சிகப்புமுள்ளி சிகப்புகஞ்சா சிகப்புகுவளை பொன்னுங் கண்ணி திகைப்பூண்டு பூச்சி திகைப்பூண்டு புனுகு நல்லமஞ்சள் இதுகளையெல்லாம் ஒன்றுசேர்த்து பொடியாக்கி சீலையில்வைத்துத் திரித்து அகலில் போட்டு காராவின் நெய்யூற்றிக் கொளுத்தி மைவாங்கிச் சிமிளில் வைத்துக் கொண்டு வசியமந்திரத்தைச் செபித்துத் திலர்தமிட புருஷவசியமாகும்.

534. புருட மோகனம்

சிகப்பு ஆமணக்கு சிகப்பு அகத்தி சிகப்புநாயுருவி சிகப்புமுள்ளி விஷ்ணுகிரந்தி இவைகளின் சாற்றை சமயெடையாக எடுத்து கஸ்தூரி சேர்த்துக்குழைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு மோகனமந்திரத்தை நூற்றியெட்டு விசை செபித்துத் திலர்தமிட புருஷமோகன மாகும்.

535. ஆயுதத் தம்பனம்

நத்தைச்சூரிதேர் சீலை பொன்முசுட்டைவேர் காரியினிணம் பச்சை வாழைவேர் பேயன்தண்டுபச்சைப்பாம்புனினம்பருத்தி செம்பருத்தி இவைகளையெல்லாம் ஒன்றுசேர்த்து அரைத்து தம்பனமந்திரத்தை நூற்றியெட்டு செபித்து பிரயோகிக்க ஆயுதத் தம்பனமாகும்.

536. சத்துரு உச்சாடனம்

மான் செவிக்கள்ளிவேர் திகைப்பூண்டுவேர் அரமுரித்தான்வேர்வேப்ப மரக்காக்கையின்கூடு பிணஞ்சுட்ட சாம்பல் சீலை இவைகளையெல்லாம் ஒன்றுகச்சேர்த்து உச்சாடன மந்திரத்தை நூற்றியெட்டுவிசை செபித்து பிரயோகிக்க சத்துரு உச்சாடனமாவான்.

537. புருஷ ஆக்ருஷணம்

புன்னை விஷ்ணுகிரந்தி கொத்தான் குருந்தொட்டி வசம்பு சுண்டை குளவிந்தம் காக்கைப்பூண்டு விலாமிச்சு வெட்டிவேர் இவைகளையெல்லாம் சமயெடையாக எடுத்துப்பொடித்து சீலையில்வைத்து திரித்து எரண்டத்தெண்ணெயில் மைவாங்கி சிமிளில்வைத்துக்கொண்டு ஆக்ருஷண மந்திரத்தை நூற்றியெட்டுசெபித்துப் பிரயோகிக்க புருட ஆக்ருஷ்ணமாகும்.

538. புருட ஏடனை

திருகுகள்ளி வெள்ளைக்காக்கட்டான் சிகப்புமுள்ளி சிகப்புகொழுஞ்சி தகரை ஆரை இவைகளின்வேரை சமயெடையாக எடுத்துக்கொண்டுகோஷ்டம் சுக்கு இவைகளைச்சேர்த்து முன் ஏடனைக்குச் சொல்லிய மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பிரயோகிக்க புருட ஏடனையாகும்.

539. புருடபேதனம்

ஆடு தீண்டாப்பாளை கௌதும்பை இவைகள் இரண்டையும் இராத்திரி காலத்திற் பிடுங்கிவந்து அதின்கூட நச்சுப்பல்லி குடியோட்டிப்பூண்டு பகையாளியின் வாய்ச்சோறு பெருந்தும்பை இவைகளைச்சேர்த்துபேதனமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பிரயோகிக்கப் புருட பேதனமாகும்.

540. சத்துரு மாரணம்

நஞ்சு புங்கு ஐங்காயம் காதத்தின் மண்டையோடு கொளுஞ்சி பாம்பு விஷம் இவைகளையெல்லாம் ஒன்றாக அதை எட்டிமுளைக்குத்தடவி அதில் சத்துருவின் பெயரைமாறி மாரணமந்திரத்தைச் செபித்து புதைத்துவைக்க சத்துரு மாரணமாவான்.

541. ஸ்திரீ வசியம்

அரிதாரம் துருசி செஞ்சாந்து சந்தனம் சவ்வாது கற்பூரம் குப்பைமேனி திகைப்பூண்டு பூச்சி இவையெல்லாம் சமயெடையாக யெடுத்து புத்துத்தேன் விட்டரைத்து மைசெய்து சிமிளில் வைத்துக்கொண்டு வசியமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி திலர்தமிட ஸ்திரீ வசியமாகும்.

542. ஸ்திரீ மோகனம்

குங்குமம் அரளிவேர் நீர்மேல்நெருப்பு மோகச்சாலைசீவி வீழி மண்டூகம் கோடகசாலை குன்றி இவைகளையெல்லாம் சமயெடையாக யெடுத்துக்காராவின் நெய்யில் மைசெய்து சிமிளில் வைத்துக்கொண்டு மோகனமந்திரத்தை நூற்றியெட்டு செபித்து திலர்தமிட ஸ்திரீ மோகனமாகும்.

643. மிருகத்தம்பனம்

உருமலம் பச்சோந்தியூண் இருள்மூலிவேர் கன்னிசீலை பாலை நன்னாரி பேய்ப்பீர்க்கு இவைகளையெல்லாம சமயெடையாகச்சேர்த்து தம்பனமந்திரத்தை நூற்றியெட்டுவிசை செபித்து பிரயோகிக்க மிருகத்தம்பனமாகும்.

544. ஸதிரீ உச்சாடனம்

குப்பைமேனி கௌதும்பை பச்சோந்தி முதுகெலும்பு வாழை தேள் கொடுக்கு தீட்டுச்சீலை சிகைப்பூண்டு இவைகளையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து கருப்புக் கம்பளியில் வைத்துக்கட்டி உச்சாடன மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி அவர்கள் வீட்டிரப்பில் வைக்க ஸ்திரீ உச்சாடனமாகும.

545. ஸ்திரீ ஏடனை

சித்திரமூலம் ஆமணக்கு பூநீது கோஷ்டம் வாழை நாயூண் பாம்பூண் இவைகளையெல்லாஞ்சேர்த்து ஏடனைமந்திரத்தை நூற்றியெட்டு ஓத ஸ்திரீ ஏடனையாகும்.

546. ஸ்திரீ ஆக்ருஷ்னம்

உள்ளாடை புன்னைகொன்றை ஊமையன்கை உப்பு அரணைவால் மாடப்புறாயெச்சம் நாகத்தின்தோல் இவைகளையெல்லாம ஒன்றாய்சச்சேர்த்து

பேரை ஓர் நறுக்கிலெழுதிவைத்து ஆக்ருஷ்ணமந்திரத்தை ஆயிரத்தெட்டுரு செபிக்க ஸ்திரீ ஆக்ருஷ்ணமாகும்.

547. ஸ்திரீ பேதனம்

சீதாதேவி செங்கழுநீர் வரழை குடியோட்டிப்பூண்டு காந்தல் பெருந்தும்பை காக்கைக்கூண்டு கழுதைச்சடை இவைகளையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து பேதன் மந்திரத்தை நூற்றியெட்டுவிசை செபித்து புதைத்துவைக்க ஸ்திரீகளின் மனத்தைமுறித்து ஓட்டிவிடும்.

548. சர்வ பூதப்பிசாசு மாரணம்

நச்சுப்பல்லி நாக்கழுக்கு கழுதைக்குளம்பு கழுதைக்கண் கடுகுபானைச் சாம்பல் முருங்கைவிரை கழுதைச்சடை பன்றிபுட்டை கருநாபி கள்ளி ஐங்காயம் இவைகளையெல்லாம் ஒன்றாகசசேர்த்து நெருப்பிலிட்டுப் புதைத்துக்கொண்டே மாரணமந்திரத்தைச்செபிக்க சர்வபூதப் பிசாசுகளும் மாரணமாகும்.

549. மிருக வசியம்.

விஷ்ணுகிரந்திவேர் சுறியாநங்கை திகைப்பூண்டு தொட்டால்வாடி நாயுருவி முன்னை சங்கம்விரை எரமுஞ்சி இவைகளையெல்லாம் சமயெடை யெடுத்துப்பொடியாக்கிச் சீலையில்வைத்து திரித்துக்கொளுத்தி மைவாங்கிச்சிமிளில்வைத்துக்கொண்டு வசியமந்திரத்தைச் செபித்து திலர்தமிட்டுக்கொண்டுவர மிருகங்கள் வசியமாகும்.

550. மிருக மோகனம்

வென்குன்றி முத்தக்காசு கெச்சக்காய் நரித்தலையோடு இவைகள்நான்கையும் தலைப்பேறுபெற்றவள் முலைப்பாலிலரைத்துச் சிமிளில்வைத்துக்கொண்டுமோகன மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து திலர்தமிட மிருகங்கள் மோகனமாகும்.

551. ஜலத்தம்பனம்

நீர்மேல்நெருப்பு வன்னி கட்டுக்கொடி நின்றால் சிணுங்கி நிலம்புரண்டி பேய்முசுண்டை கடல்பைத்தான் இருபிரம்பு சுளத்தி வளத்தி சூரை முடக்கொத்தான் இதுகளையெல்லாஞ் சேர்த்து தம்பன மந்திரத்தைச் செபித்துப் பிரயோகிக்க ஜலஸ்தம்பனமாகும்.

552. விஷ உச்சாடனம்

நீலிவேர் நீர்மேல் நெருப்புவேர் மாவிலிங்கன்வேர் பாம்பினாண் நாபி நேர்வாளம் இவைகளையெல்லாம் ஒன்றாய்க்கூட்டி அரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு லங் மங்கென்று ஆயிரத்தெட்டோதிப்பிரயோகிக்க விஷங்கள் உச்சாடனமாகும்.

553. மிருக எடனை

பூனைக்காலி செங்கத்தாரி அறுகன்வேர்முத்தக்காசு இருவரையொட்டி தொட்டி நாயூண் சல்லிவேர் இவைகளையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து வைத்துக்கொண்டு எடனைமந்திரத்தை நூற்றியெட்டுரு செபித்துப் பிரயோகிக்க மிருகங்கள் எடனையாகும்.

554. மிருக ஆக்ருஷ்ணம்

நன்னாரி துடரி குப்பைமேனி சிறுகீரை கொன்றை பொன்னாவாரை முட்டை கஸ்தூரி மஞ்சள் மாடப்புராயெச்சம் இவைகளையெல்லாம் ஒன்றா

ய்க்கூட்டி புத்துத்தேன் விட்டரைத்து சிமிளில்வைத்துக்கொண்டு ஆக்ருஷ்ணமாகும்.

555. மிருகபேதனம்

இசங்கு கருப்புகுண்டுமணி எட்டி மூசுறு முட்டை கடுகொம்பு கூகை மண்டையோடு காக்கைமண்டையோடு மூசுட்டை வௌத்தி இவைகளையெல்லாம் சமயெடையாகயெடுத்து ஒன்று சேர்த்து பதியலத்தாளின் சாற்றுலாட்டி பேதன மந்திரத்தை நூற்றியெட்டு விசை செபித்துப் பிரயோகிக்க மிருகங்க ளெல்லாம் பேதனமாகும்.

556. சர்வஜீவஜெந்து மாரணம்

அலரிவேர் கொம்மட்டி குழந்தைப்பிச்சு குழந்தைநகம் குழந்தையெலும்பு கல்லுநெருக்கி கடுகொட்டி திகைப்பூண்டு கருநாமி சொல்மயமாகி பிணமயக்கி இவைகள் எல்லாவற்றையும் சோத்து மாரணமந்திரத்தைச்செபித்து பிரயோகிக்க சர்வ ஜீவஜெந்துக்களும் மாரணமாகும்.

557. சர்ப்பவசியம்

பொற்றலைக்கையான் தகரைவேர் தும்பைவேர் நிலம்புரண்டிவேர் நீலிவேர் சிறுகீரைவேர் கரியசாலைவேர் நாயுருவிவேர் தொட்டால் வாடிவேர் பொற்கொடிவேர் ஆடையொட்டி இவைகளையெல்லாம் பொடித்து சீலையில் வைத்து திரியாக்கி அகலில்போட்டு காராவின் நெய்யூற்றிக்கொளுத்தி மை வாங்கிச் சிமிளில்வைத்துக்கொண்டு முன்சொல்லிய வசிய மந்திரத்தைச்செபித்து திலர்தமிட சர்ப்பங்கள் வசியமாகும்.

558. சோர்ன மோகனம்

மருதன்வேர் வெள்ளுமத்தன்வேர் நன்னாரிவேர் மருவூமத்தன்வேர் இவைகளையெல்லாம் வெள்ளுமத்தன்சாற்றிலரைத்துக்குளிகை திரட்டிவைத்துக்கொண்டு மோகனமந்திரத்தைச் செபித்துப் பிரயோகிக்க சொர்னமோகனமாகும்.

559. அக்கினித் தம்பனம்

சங்கன்வேர் கற்றாழைவேர் தாமரைக்கிழங்கு குப்பைமேனிவெள்ளைக் காக்கட்டான்வேர் செவ்வகத்தி சுண்டை செங்கொடி வட்டத்துத்தி ஓரிதழ் தாமரை வேலி இவைகளையெல்லாஞ் சேர்த்து தம்பனமந்திரத்தை ஆயிரத்தெட்டுரு செபித்துப் பிரயோகிக்க அக்கினித்தம்பனமாகும்.

560. சகலவியாதி உச்சாடனம்

நாறு கரந்தை திரிகடுகு சித்திரமூலம் மிளகுசீந்தில் மிளகா இவைகளையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து உச்சாடன மந்திரத்தை நூற்றியெட்டு செபித்துப் பிரயோகிக்க சகலவியாதிகளும் உச்சாடனமாகும்.

561. தேவ எடனை

காக்கைக்கூடு திருகுகள்ளி செங்கத்தாரி வெள்ளைக்காட்டான் குப்பைமேனி திகைப்பூண்டு தொட்டால்வாடி பன்றி இரத்தம் நாரை இரத்தம் இவைகளையெல்லாம்சேர்த்து எடனைமந்திரத்தைச்சொல்லிபிரயோகிக்கதேவ எடனையாகும்.

562. தேவ ஆக்ருஷ்ணம்

குப்பைமேனி சிறுபுன்னை சுளத்தி பதியேறி பொற்கொன்றை சிவன்

வேம்பு சிகப்பு நாயுருவி மருவூமத்தன் இவைகளையெல்லாம் முலைப்பால்விட் டரைத்து வைத்துக்கொண்டு ஆக்ருஷ்ணமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பிரயோகிக்க தேவ ஆக்ருஷ்ணமாகும்.

563. தேவ பேதனம்

கழுதைக்குளம்பு கழுதைச்சடை கழுதைப்புட்டை பாதிரிமாவிலிங்கம் பட்டை பூதமண்டைத்தான் சாக்குருவி சிவனிவிரை இவைகளையெல்லாம்சேர்த்து பேதனமந்திரத்தைச்சொல்லி பிரயோகிக்க தேவ பேதனமாகும்.

564. தேவமாரணம்

தலைமண்டையோடு காக்கையெச்சம் பிராவினெச்சம் அரிதாரம் மயிர் மாணிக்கம் சபைமருட்டி தேவாங்குகண் பச்சோந்தி இவைகளையெல்லாம் சமயெடையாக எடுத்துக்கொண்டு காரெள்ளெண்ணெய் விட்டரைத்து மையாக்கிச் சிமிளில்வைத்துக்கொண்டு மாரணமந்திரத்தை நூற்றியெட்டுவிசை செபித்துத் திலர்தந்தீட்ட தேவமாரணமாகும்.

565. சத்துருவசியம்

பொற்றலைக்கையான்வேர் வெள்ளெருக்கன்வேர் விஷ்ணுகிரந்திவேர் இவைகள் மூன்றையும் பொடித்து சீலையில்வைத்து திரியாக்கி அகலில்போட்டு காராவின் நெய்யூற்றிக்கொளுத்தி மைவாங்கி சிமிளில் வைத்துக்கொண்டு வசியமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி திலர்தந்தீட்ட சத்துருக்களெல்லாம் வசியமாவார்கள்.

566. சத்துருமோகனம்

சிகப்புநாயுருவி வெள்ளைக்குன்றி சீதாதேவி செங்கழுநீர் தூதுவேளை சிறுபுன்னை இவைகளின்வேர்கள் ஐந்தையும் வகைக்கு விராகனெடை ஒன்றாக யெடுத்து நிழலிலுலர்த்தித் தூளாக்கி கோடகசாலையின் ரசத்தாலரைத்து மையாகச்செய்து புத்துத்தேன் விட்டுக்குழைத்து சிமிளில்வைத்துக் கொண்டு மோகனமந்திரத்தை நூற்றியெட்டுவிசை செபித்து திலர்தமிடசத் துருக்களெல்லாம் மோகனமாவார்கள்.

567. தேவதம்பனம்

கொத்தான் கொளுஞ்சி நிலவாகை ஆலம்வேர் இவைகளையெல்லாம்சம யெடையாகயெடுத்து ஆவின்பால் விட்டரைத்து சிமிளில்வைத்துக்கொண்டு தம்பனமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பிரயோகிக்க தேவதம்பனமாகும்.

568. தேவ உச்சாடனம்

அரமுறித்தான் மனிதன்மலம் கழுதைப்புட்டை சீலை துருசு சுடுகோட்டுச் சாம்பல் இவைகளையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து உச்சாடன மந்திரத்தைச்செபித்து பிரயோகிக்க தேவ உச்சாடனமாகும்.

569. சர்வபூதங்களின் ஏடனை

கிலுகிலுப்பை ஆடுதீண்டாப்பாளை கீழ்க்காய்நெல்லி சிறுகீரை பொற்றலைக்கையான் வெட்டை வியாதியால் இறந்தவனுடைய மண்டையோடு பல்லு இவைகளையெல்லாம் ஒன்றுசேர்த்து வைத்துக்கொண்டு ஏடனை மந்திரத்தை நூற்றியெட்டு செபித்துப்புகைக்க சர்வபூதங்களும் ஏடனையாகும்.

570. சர்வபூத ஆக்ருஷ்ணம்

வாழை பாதிரி முல்லை காக்கணம் கோழிக்குஞ்சு காக்கணங்குருவி செம்பைவிரை ஊமையன்கை உப்பு சுண்டைவேர் நாகப்பூச்சி இவைகளை யெல்லாம் ஒன்றாகச்சேர்த்து ஆக்ருஷ்ண மந்திரத்தை நூற்றியெட்டு செபித்து பிரயோகிக்க சர்வ பூதங்களும் ஆக்ருஷ்ண்மாகும்.

571. அக்கினிபேதனம்

தாளி செவ்வகத்தி ஆலங்கொழுந்து சுண்டை தாமரைக்கிழங்கு துத்தி கற்றாழை பச்சை ஓணன்பிடித்து கொத்தான்வித்து குப்பைமேனி இசங்கு ஓரிதழ்தாமரை இவைகளையெல்லாஞ் சமயெடையாகச்சேர்த்து பேதன மந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பிரயோகிக்க அக்கினிபேதனமாகும்.

572. சர்வரிஷி மாரணம்

கொத்தான்விரை ஐங்கோலம் மாடப்புறாபிச்சு மாடப்புறாயெச்சம் கருங்குருவி தெள்ளிமருட்டி பகல்மருட்டி குழந்தைப்பிச்சு காக்கை இரத்தம் இவைகளை யெல்லாம் ஓர்நிறையாயெடுத்து அரைத்து மையாக்கிச் சிமிளில் வைத்துக்கொண்டு மாரணமந்திரத்தைச் செபித்து திலர்தமிடில் சர்வரிஷிகளும் மாரணமாவார்கள்.

573. லோகவசியம்

நின்றால் சிணுங்கி செவ்வகத்தி சுழலாவாரை முல்லை கொழுந்தெட்டு கூத்தன் குதம்பை இவைகளையெல்லாம் சரியெடையாகயெடுத்து கொன்றைப் பன்னீர்விட்டு அரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு வசியமந்திரத்தைப் பதினாயிரம் உருகொடுத்துத் திலர்தமிட லோகத்திலுள்ள மனிதர்களெல்லாம் வசியமாவார்கள்.

574. லோகமோகனம்

முல்லை வெண்கொழுஞ்சி காயம் மூவிலைக்குறுந்து நொச்சி கையாந்தகரை ஐவிரலிவேர் சோம்பு கஞ்சா நன்னாரி இவைகளையெல்லாம்சமயெடையாக எடுத்து மைசெய்துச் சிமிளில் வைத்துக்கொண்டு மோகனமந்திரத்தை நூற்றியெட்டுருகொடுத்து திலர்தமிட லோகத்தின்கண் ணுள்ளவர்களெல்லாம் மோகனமாவார்கள்.

575. சர்ப்பத்தம்பனம்

சிறியாநங்கை சிறுசின்னி பெருஞ்சின்னி முகமுனுக்கி நாகவல்லி அத்திவேர் செவ்வாமணக்கு சுவரொட்டி கருங்குன்றி இவைகளையெல்லாம் சரியெடைசேர்த்து தம்பனமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பிரயோகிக்க சர்ப்பங்கள் தம்பனமாகும்.

576. சர்வ உச்சாடனம்

தடையத்தான் பாம்புகண்ணி சாத்திரபேதி நடனசூரி இருவரையோட்டி காலடிமண் நாய்மயிர்கழுதைப்புட்டை இவைகளையெல்லாம் சமபாகமாக சேர்த்து தம்பனமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பிரயோகிக்க சர்ப்பங்கள் தம்பனமாகும்.

577. சர்வ எடனை

கொத்தான் கொழுஞ்சி வண்ணை புன்னை வெள்ளையாமணக்கு கருங்கண்ணி செம்போத்துயெச்சம் புராயிறகு தாமரைநூல் நாயூண் சாதிலிங்கம்

இவைகளெல்லாம் சரியெடையாக எடுத்து ஏடணமந்திரத்தைச் சொல்லி பிரயோகிக்க சர்வமும் ஏடணையாகும்.

578. லோக ஆக்ருஷ்ணம்

தொட்டால்வாடி வெள்ளெருக்கு கலப்பைப்பூண்டு பால்குரண்டி சிறு புன்னை ஐந்கோலம் புருயிறகு தீட்டுச்சீலை இவைகளையெல்லாம் சமபாகமாகச்சேர்த்து ஆக்ருஷ்ணமந்திரத்தை ஆயிரத்தியெட்டுவிசை செயித்துப் பிரயோகிக்க லோக ஆக்ருஷ்ணமாகும்.

579. லோகபேதனம்

நச்செவி நச்சுப்பல்லி வேப்பமரக்காக்கைக்கூண்டு பச்சோந்தி இந்திரகோபப் பூச்சி சுண்டைதும்பை ஆவாரைப்பூச்சி தீட்டுச்சீலை இவைகளையெல்லாம் முன்போல்சேர்த்து பேதனமந்திரத்தை நூற்றியெட்டுவிசை செபித்து பிரயோகிக்க லோகமெல்லாம் பேதனமாகும்.

580. சர்வவிஷ மாரணம்

குப்பைமேனி அவுரி திருகுகள்ளி நேர்வாளம் புலால்நாரி விஷ்ணுகிரந்தி மாவிலங்கு அழிஞ்சி எட்டிகருநொச்சி கார்த்திகைக்கிழங்கு சித்திரமூலம் இவைகளையெல்லாஞ் சேர்த்து மாரண மந்திரத்தைச் செயித்துப் பிரயோகிக்க சர்வவிஷமும் மாரணமாகும்.

581. சர்வஜனவசியம்

ஆலமரத்துப்புல்லுருவியை வெள்ளிக்கிழமை ஞாயிற்றுக்கிழமை தேனிலும் திங்கள்கிழமை வியாழக்கிழமைநெய்யிலும் செவ்வாய்க்கிழமை புதன்கிழமை காராவின் பாலிலும் சனிக்கிழமையதினம் சாதாரணஜலத்திலுங் குழைத்துத் திலர்தமிட இப்பூவுலகில் சர்வஜனங்களும் வசியமாவார்கள் இதற்கும் முன்சொல்லிய வசிய மந்திரமே.

582. சர்வமோகனம்

சிகப்பு ஆம்பல் அல்லி அதிமதுரம் கோஷ்டம் ஆலமரத்தின்மேல் படர்ந்திருக்கும் புல்லுருவி வெள்ளைக்குண்டுமணிவிரை இவைகளையெல்லாம்கறக்கிமுலைப்பால் விட்டரைத்துச் சிமிளில்வைத்துக்கொண்டு மோகனமந்திரத்தை நூற்றியெட்டுவிசை செபித்து திலர்தமிட்டுக்கொண்டு வரகடல் சூழ்ந்த உலகத்தில் சர்வமும் மோகனமாகும்.

583. சர்வதம்பனம்

கருங்குன்றி சதுரக்கள்ளி ஆவாரை கருப்புகஞ்சா ஊமத்தங்காய் நாவடக்கி வழிமரித்தான் சுவராடை நிலத்தம்பி இவைகளையெல்லாம்சரிபெடையாகயெடுத்து அரைத்துச்சிமிளில் வைத்துக்கொண்டு தம்பனமந்திரத்தை ஆயிரத்தெட்டோதி பிரயோகிக்க சர்வமும் தம்பனமாகும்.

584. சர்வ உச்சாடனம்

கழுதைக்கண் கழுதைச்சடை கழுதைநகம் கழுதைப்புட்டை மனிதர்மலம் நாய்மலம் இவைகளையெல்லாம் சேர்த்து உச்சாடன மந்திரத்தை நூற்றியெட்டு செபித்து பிரயோகிக்க சர்வபூதப்பிசாசு தேவதைகளும் உச்சாடனமாகும்.

585. சர்வலோக ஏடணை

சிவனிசெடியின் வடக்குவேர் கள்ளி கொத்தான் தும்பைபாம்பின்விஷை

ப்பை பன்றிநெய் இவைகளெல்லாம் சமன்கூட்டி எடனைக்குரிய மந்திரத்தை நூற்றியெட்டோதி பிரயோகிக்க சர்வமும் எடனையாகும்.

586. சர்வ ஆக்ருஷ்ணம்

கோழியாவாரை சுண்டைவேர் வேளை உள்ளொட்டி சிறுமுள்ளை சிறியாநங்கை வெள்ளெருக்கு இவைகளையெல்லாம் ஒன்றாகயெடுத்துக்கொண்டு ஆக்ருஷ்ண மந்திரத்தை ஆயிரத்தெட்டு செபித்து உபயோகிக்க சகலமும் ஆக்ருஷ்ணமாகும்.

587. சர்வபேதனம்

கோட்டான்முட்டை மடிக்குருவி செம்பருத்தி வெண்கொடுஞ்சி செவ்வாரி நெடுவாலன் தலையிலாடி இவைகளையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து பேதனமந்திரத்தைச் செபித்து பிரயோகிக்க சகலமும் பேதனமாகும்.

588. சர்வ மாரணம்

சிகப்புதும்பை சிவந்தபூச்சி கொம்பேரிமூக்கன் காக்கைமுட்டை கொ. த்தான் ஊமத்தை முச்சந்திகூடுமிடத்தின் மண் முச்சந்திகூடுமிடத்திலுள்ள ஆலம்விறகு இவைகளையெல்லாம் சேர்த்துப் பிரயோகித்து மாரணமந்திரத்தைச் செபிக்க சர்வமும் மாரணமாகும்.

589. அஞ்சன முறைகள் பாதாள அஞ்சனம்

கஸ்தூரிமஞ்சள் சாதிக்காய் வனவித்து தேற்றான்கொட்டை தும்பை பொற்றலைக்கையான் பசுங்கண் இவைகளையெல்லாம் ஒன்றுசேர்த்தரைத்து திரியில்வைத்துத் திரித்து அகலிலபோட்டு ஆமணக்கெண்ணெயூற்றிக் கொளுத்தி மைவாங்கி வைத்துக்கொணடு அஞ்சனதேவியைப்போற்றி வெற்றிலையில் தடவிபார்க்க பாதாளத்திலுள்ள சகல நிதிகளுந்தோன்றும்.

590. பூத அஞ்சனம்

தேற்றான்கொட்டை கௌதும்பை குப்பைக்கீரைவிரை கண்ணீர் பச்சைக்குளவிந்தம் காக்கைக்கண் இவைகளையெல்லாம் அரைத்துச் சீலையில் வைத்து திரிதிரித்துக்காராவின் நெய்யூற்றி விளககேற்றி மைவாங்கிவைத்துக்கொண்டு பார்க்க பூதங்களெல்லாம் கண்ணுக்குத்தோன்றும்.

591. வெகுதூர அஞ்சனம்

நிசலிறகு சிறுகீரை ஆடுதின்னாப்பாளை காக்கையின் நெஞ்சுக்குழி காக்கைப்பிச்சு குரங்குபஞ்சுமண்டை இவைகளையெலலாம் ஒன்றாகச் சேர்த்து மண்டையோட்டில் மைவாங்கிப் பூசித்துப்பார்க்க வெகுதூரத்திலுள்ள பொருள்களெல்லாம் கண்களுக்கு நன்றாகத்தெரியும்.

592. நீர் அஞ்சனம்

பச்சோத்திக்கோசம் பித்து கண் கீழாநெல்லி நரியிரட்டி கையாந்தகரை இவைகளையெல்லாம் அரைத்து மையாக்கி தேன்கூட்டிகலந்து வைத்துக்கொண்டு பார்க்க நீரிலுள்ள சகல பொருள்களுந்தோன்றும்.

593. குறி சொல்லும அஞ்சனம

கூகைக்கண் கூகைப்பித்து கூகையிரைச்சிதக்காளிபுன்னைவாகைவேர் கையாந்தகரை தக்காட்டின்வேர் நாகமழைத்தான் வேர்தும்பை இவைகளையெல்லாம் அரைத்துச்சீலையில்தடவி நிழலிலுலர்த்தி அகலில்போட்டு காரா

வின் நெய்யூற்றிக்கொளுத்தி மைவாங்கி சிமிளில்வைத்துக்கொண்டு தேவை யானபோது போட்டுப்பார்க்க சகலகுறிகளும் உள்ளது உள்ளபடிபலிக்கும்.

594. போது அஞ்சனம்

குப்பைமேனி கிலுகிலுப்பை ஓரிலைத்தாமரை கீழ்க்காய்நெல்லிவிஷ்ணு கிராந்தி ஆடுதீண்டாப்பாளை நீலி தும்பை நீர்விலக்கி தங்கன் கொதுமலை இவைகளையெல்லாம் சரிபாகமாகயெடுத்து அரைத்துச சீலையில்வைத்துதிரி திரித்து அகலில்போட்டு காராவின் நெய்யூற்றிக்கொளுத்தி மைவாங்கிச் சிமிளில்வைத்துக்கொண்டு அஞ்சனாதேவியையும் ஆஞ்சநேயரையுந் துதித்து வெற்றிலையில் தடவிப்பார்க்க நினைத்தவைகளெல்லாம் உள்ளங்கைநெல்லிக் கனிபோல்தெரியும்.

595 பரவை அஞ்சனம்

பிலாக்கொட்டையைக்கருக்கி புத்துத்தேன்விட்டரைத்து மைவாங்கித் திலர்தமிட பரவையஞ்சனமாகும்.

596. போது அஞ்சனம்

காந்தக்கல் அஞ்சாந்தலைப்பிண்டம் இருள்மூலி இவைகளை சூரியகலை யில் அரைத்து மைசெய்து திலர்தமிட சாவமும் தெரியும்:—இதுவரையில் சொல்லிவந்த அஞ்சங்களுக்கெல்லாம் மூலமந்திரமாவது என்னவென்றால்:- ஓம் அஞ்சனாதேவி ஓம் சர்வபேதனி ஓம் இளவாகினி ஓம் வாயுதேவி ஓம் பூதாளி ஓம சர்வஅஞ்சனி ஓம் பிரவஞ்சனி அனுமந்தனைப்பெற்றவளே பாதாளந்தெரியச் சுவாஹாயென்று ஆயிரத்தெட்டுரு செபிக்கச சித்தியாகும் ஆனால் முனசொல்லிவநத மைகளையெல்லாந்தீட்டிப்பார்த்தாலும நன்றாகத் தெரியும.

பலதிரட்டு மூலிகை முறைகள்.

597. மிளகுசாரணை.

வெள்ளிக்கிழமையதினம் மிளகுசாரணையின்வேருக்குத் தன்னுடைய பக்ஷி அரசாயிருக்கும்போது சாபநிவாத்திசெய்து காப்புகட்டிக் கொண்டு வந்து குளிசமாடிக்கட்டிக்கொள்ள பெண்வசியமாகும்.

598. பனிதாங்கி மூலிகை.

பனிதாங்கிமூலிகையென்பது அனேகமாய் மணற்பாங்காயுள்ள விடங் களில்தான் விசேஷமாய்ப்பயிராகும் அது ஒரு கால்ரூபாய் அளவுள்ள கம்ம லின்வட்டத்திற்குச் சரியாய அந்த அளவுள்ளதாயப் பயிராகியிருக்கும் அதன் நடுவில்இருக்கும குறுததில் பனியானது சிறியமுததுக்களைப்போன்று ஜொலிக்கும் அச்செடியைசசுற்றிலும் பனியானது ஊறி சதசதப்பாய் சேற் றைப்போலிருக்கும் அதைககண்டுபிடிதது சாபநிவாத்திசெய்து காப்புகட்டி கொண்டுவந்து கோழியின்தலைமேல்வைத்தால் அககோழியானது சோர்ந் துக்கீழேவிழுந்துவிடும அப்பரிட்சைசெய்துக கொண்டுவந்ததைக கல்வத்தி விட்டு கொஞ்சம பாதரசததைவிட்டு அரைததால அந்த ரசம் கட்டிப்போ கும் அதனபிறகு அந்தரசததை எப்படிவேண்டுமானால பிரயோகிததுக கொள்ளலாம அதை அணியும தலைகுட்டையில வைததுசசுருட்டி தலையில் போட்டுக்கொண்டு சென்றால் எக்காரியங்களும் சித்தியாகும் பகையாளிக ளெல்லாம் வணங்கி உறவாடுவார்கள அதனால ஆகாதகாரியங்கள் ஒன்று மில்லை.

599. இருளி மூலிகை

குருவாரமும் கும்பலக்கினமுங் கூடியவேளையில் தன்னுடையபக்ஷி அரசாயிருக்கும்போது இருளியென்கிற மூலிகையைக்கண்டு பிடித்து அவ்விடத்தைச் சுத்தஞ்செய்து அதன்பிறகு மூலிகைக்குச் சர்பனிவர்த்திசெய்து உயிர்கொடுத்து மஞ்சள் நூல் காப்புகட்டி பொங்கல்பலி தீபதூபமுதலிய கிரியைகளைச்செய்து ஆணிவேரறுமல் பிடுங்கிவந்து தீட்டுப்படாதவிடத்தில் வைத்துக்கொண்டு தேவையானபோது பலபேர்கள் முன்னிலையில் அந்தவேரைக்காதில்வைத்துக்கொண்டு தேவையானபோது நீ என்ன உருவாகப்பிறர்கண்களுக்குத் தோற்றமாவாய் அதனால்:-புலி கரடி சிங்கம் யானை ஒட்டை பன்றி ஆடு குரங்கு எருமை மாடு குதிரை கோழி நாய் பூனை மான் பக்ஷி சாதிகள் மரம் மண் மலை கல் இராஜன் ஆண் பெண்குரு தபசி குளம் கிணறு முதலிய இவ்வுலகத்தில் கண்களுக்குத் தோன்றும்படியான பொருள்கள எவ்வள்விருக்கின்றதோ அவ்வளவையும் நீமனதில் நினைக்கும் பக்ஷத்தில் அதுபோலவே எதிரிகளின் கண்களுக்குத்தோன்றுவாய் இதன்பெருமையை புண்ணிய புருடர்களே யறிவார்களன்றி ஏனையோர்களை அறியமாட்டார்கள். இம்மூலிகையைக் குழித்தைலமிறக்கி காற்றில்வைக்க அசல் வீரமாகக்கட்டிவிடும். இன்னும் இம்மூலிகையினால் ஆகவேண்டிய வேலைகளையெல்லாம் தகுந்த ஆசானின் மூலமாகக் கண்டுகொள்ளவும்.

600. கூத்தன் குதம்பை.

கூத்தன் குதம்பைச்செடிக்கு வியாழக்கிழமையதினம் காப்புகட்டிக் கொண்டுவந்து வாயில்போட்டு மென்று தாடையிலடக்கிக்கொண்டு கண்களில் மணலைக்கொட்டிக்கொள்ள மண் கண்களில் விழாது கண்ணருகாது.

601. கீழ்க்காய் நெல்லி

ஆதிவாரம் கும்பலக்கினத்தில் சூரியகலையாக இருக்கும்போது பூமியை நோக்கியவண்ணம் வளைந்திருக்கும் கீழ்க்காய்நெல்லிச் செடிக்குக் காப்பு கட்டிக்கொண்டுவந்து குளிசமாடி பிரசவிக்காமல் அவஸ்தைப்படும் ஸ்திரீகளுக்கு ரெற்றிமயிரிற் கட்டி தொங்கவிட்டு அதை அந்த ஸ்திரீயைப் பார்க்கச்சொல்ல உடனே பிரசவமாகும். யாதொரு தொந்தரையுமிருக்காது.

602. விழுதியிலை

நல்ல சுபயோகத்தில் விழுதியிலையைக் கொண்டுவந்து வாயில்போட்டு மென்று தாடையில் அடக்கிக்கொண்டு எவ்வளவு காதமானாலும் சலிப்பில்லாது ஓடலாம். கால் வலியிராது நிற்கவேண்டுமாகில் எதாகிலும் ஓர் ஆதாரத்தைப் பிடித்துக்கொண்டுதான் நிற்கவேண்டும் இல்லையாகில் கீழே விழவேண்டி வரும்.

603. சுவர் முள்ளங்கியிலை

சுவர் முள்ளங்கி யென்னும் செடியின் இலையைப் பரித்துவந்து சாற்பிழிந்து அந்த ரசத்தில் வெள்ளை அபிரேக்கைப்போட்டு ஊறவைத்திருந்து மற்றுநாள் காலையில எடுத்து நன்றாக ஜலம் விட்டலம்பி மறுபடியும் முன்போல சாற்றில் ஒருநாள் முழுவதும் ஊறவைத்து எடுத்து அலம்பினால் அபிரேக்கானது வெண்யாக காணப்படும். அதை யெடுத்து நன்றாக அரைத்துப் பொடியாக்கிச் சுண்ணாம்புநீரிற் கலந்து வீட்டுக்கு வெள்ளையடித்து விட்டு அது உலர்ந்த பிறகு அவ்வீட்டில் எதாகிலும் ஒரு பிரகாசமாகிய

விளக்கைக் கொளுத்தி வைத்துவிட்டால் பார்ப்பவர்களுக்கு அவ்வீடு முழுவதும் மகா உன்னதமாகிய பளபளப்பும் ஜொலிஜொலிப்பும் எத்தனையோ விளக்குகள் இருக்கின்றமாதிரி தோன்றும்.

604. நாயுருவி

நாயுருவி வேரில் சுத்தசுத்தி செய்துக்கொண்டு வந்தால் லக்ஷிமி கடாட்சமுண்டாகும். ஆனால் திரேகத்திற்கு அதிக உஷ்ணத்தைக் கொடுக்கும் அதற்கு பசும்பால் சாப்பிட்டுக்கொண்டு வந்தால் மிகவும் நன்மை. இல்லாவிடில் வாயெல்லாம் புண்ணாகிவிடும். அதில் யிலையைப் பறித்து வாயில் போட்டு மென்று நன்றாகக் குதப்பி அடக்கிக்கொண்டு எவ்வளவு கண்ணாடியில்லைகளையேனும் முருக்கைப்போல நறநறவென்று மென்று துப்பிவிடலாம் வாயறுக்காது. பல் கூசாது.

605. நத்தைச்சூரி

எத்தைச் சொன்னாலுஞ் செய்யும் நத்தைச்சூரி செடிக்கு ஆதிவாரமும் சுவாதி நக்ஷத்திரமும் கும்பலக்கினமுங் கூடிய வேளையில் தன்னுடைய பக்ஷி அரசாயிருக்கும்போது அதைச் சுத்திலும் சுத்திசெய்து சாபநிவர்த்தியுடன் உயிர்கொடுத்து பொங்கலிட்டு தீபதூபங் காட்டி வந்துவிட்டு அடுத்த ஆதிவார வாரம் சிங்கலக்கினத்திற் சென்று மறுபடியும் பொங்கலிட்டு தீபதூபங் காட்டி பூசைபோட்டு இரும்பாலாகிய ஆயுதங்கள் படாமலும் ஆணிவேரறாமலும் பிடுங்கிவந்து பொன்னாற்கடயஞ் செய்து அதற்குள் மேற்படி வேரை பூமிமட்டத்திற்கு இரும்புபடாமறறட்டி யெரிந்துவிட்டு மற்றதை அக்கடயத்திற்போட்டு விநாயகரெதிரில்வைத்து பயபக்தி விசுவாசத்துடன் பூசித்து எடுத்துக் கையில் மாட்டிக்கொண்டு ஜாலமாடும் சபையிலோ அல்லது நாலுபேர்கள் கூடியிருக்கும் வேறெவ்வித இடங்களிலோ ஓர் இரும்புக் குண்டை யெடுத்து ஆகாயத்தில் விட்டெறிந்து கையில் போட்டுக்கொண்டிருக்குங் கடயத்தைக் கழட்டி இடதுகையிற் பிடித்து பூமிபக்கம் தாழ்த்திப் பிடிக்க இரும்புகுண்டானது கீழே விழாமல் ஆகாயத்திலேயே நிற்கும். அங்கு பார்ப்பவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டு இது மஹா வேடிக்கையென்று மெச்சிக்கொள்ளுவார்கள். மறுபடியும் குண்டைப் பார்த்து சல் மலையாள பகவதி குண்டைக் கீழே போடென்று சொல்லி இடதுகையில் பிடித்துக்கொண்டிருக்குங் காப்பை வலதுகையில் பிடித்து குண்டுக்கு நேரே தூக்கிக்காண்பிக்கக் குண்டானது கீழே விழும். மேற்படி வேரை மென்று வாயிலடக்கிக்கொண்டு கண்களில் மணலைக்கொட்டிக்கொண்டால் கண்ணருகாது. ஆனால் இச்செடியில் நத்தைச்சூரி யென்றும், நத்தைவாரளி யென்றும் இரண்டு விதமுண்டு. அதின் பரிட்சை எப்படியென்றால் நத்தைச்சூரி செடியின் காற்றுவாட்டத்தில் ஓர் நத்தையை வைக்கும்பக்ஷத்தில் அதன் உட்புறமுள்ள மாமிசங்களெல்லாங் கழன்று வெளியே வந்துவிடும். நத்தைவாரளியின் காற்றுவாட்டத்தில் நத்தையை வைக்கும்பக்ஷத்தில் அந்நத்தையின்மேலுள்ள ஓடுகளெல்லாம் சூரையிட்டதுபோல் உடைந்துவிடும். இது ஆணென்றும் முன்சொன்னது பெண்ணென்று தெரிந்தோர் சொல்லுகின்றனர். நமக்கு வேண்டியது நத்தைச்சூரியேயொழிய நத்தைவாரளியல்ல. இது சாதாரணமாய் தென்தேசங்களில் மிகுதியாகக் காணப்படும்.

606. இரத்தன் புருஸ்

இரத்தன்புருஸ் என்னுஞ்செடியைக் கண்டுபிடித்து ஆதிவாரம் தன்னுடைய பக்ஷி அரசாயிருக்கும்போது சாபநிவர்த்திசெய்து காப்புகட்டிக்கொ

ண்டுவந்து வைத்துக்கொண்டால் அதனால் அனேக வேலைகள் சித்தியாகும் இதைச்சிலர் சூரியகாந்தி என்றுஞ்சொல்லுவார்கள் நம்தேயத்து சாதாரண வைத்தியர்கள் இம்மூலிகையை மேகத்தினாலுண்டாகும் வெள்ளைநோய்க்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

607. செப்பு நெருஞ்சி :

இதையும் முன் சொன்னமாதிரியே காப்புகட்டி கொண்டுவந்து முன் வேரையும் இதையும் ஓர் குளிசத்தில் தலைமாற்றிப்போட்டு பூசையில்வைத்து நமசிவய என்ற பீஜாட்சரத்தை ஆயிரத்தெட்டோதி எடுத்து வாயிலடக்கிக் கொண்டு முள்ளின்பேரில் நடந்தாலும் சரி அல்லது உட்கார்ந்தாலுஞ்சரி சிறிதளவேனும் முள்தைக்காது.

608. குண்டுமணியிலை

குண்டுமணியிலையின் மருத்துவமானது ரொம்பவும் மெச்சத்தகுந்தது எப்படியென்றால் கசப்பிற்கெல்லாம் நான்தான் இராஜனென்று சொல்லும் வேப்பெண்ணெயை ஓர் கடாயில்வார்த்து நன்றாகக்காயவைத்து அது காய்ந்துக்கொண்டிருக்கும்போதே கொஞ்சம் குண்டுமணியிலையை நன்றாக அரைத்து பில்லையாகத்தட்டி அதில் போட்டுக்காய்ந்தபிறகு அப்பில்லையையெடுத்துவிட்டு அந்த எண்ணெயில் எவ்வித பலகாரபக்ஷணங்களைச் செய்துக் கொண்டாலும் கொஞ்சமேனும் கசப்பிராது தின்கிறவர்களும் சந்தோஷப் படுவார்கள் இந்தயிலையில் ஒருபிடியும் மணல் ஒருபிடியுமாக வாயில் போட்டுக்கொண்டு மெல்லும்பக்ஷத்தில் இனிப்பாக இருக்குமேயொழிய மணலின் சாரந் தெரியாது பல்லுங்கூசாது இதைமென்றவுடன் சாதாரண ஜலத்தை வாயிலூற்றிக்கொண்டால் அதுவும் இனிக்குமேயொழிய ஜலத்தின் சாரந் தெரியாது இன்னும் இவ்விலையால் எவ்வளவோ நன்மைகளுண்டு.

609. ஜலந்திரட்டு மூலிகை

ஜலந்திரட்டி மூலிகை என்னுஞ் செடியைக் கண்டுபிடித்து காப்புகட்டி கொண்டுவந்து நிழலிலுலர்த்திப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து அதில் ஐங்கோலத்தையும் விட்டரைத்து பாதக்குறட்டில் பூசிக்கொண்டு ஆறு தவிர மற்ற குளம் குட்டை பெரிய துறவு இதுகளில் அக்குறட்டைப் போட்டுக்கொண்டு தாராளமாக நடக்கலாம். ஆனால் குருவின் அனுக்கிரகம் வேண்டும்.

610. நிலவூமத்தன்

ஆதிவாரமும் ரோகணி நக்ஷத்திரமும் கூடிய தினத்தில் நிலவூமத்தன் செடிக்கு காப்புகட்டி பொங்கல், பலி, தீப, தூபங் கொடுத்துக்கொண்டு வந்து நிழலிலுலர்த்திப் பொடியாக்கிச் சட்டியிற்போட்டு காராவின் நெய் விட்டுக் கருகவறுத்து அதற் பச்சைக்கற்பூரஞ் சேர்த்து மையாக்கிச் சிமிளில் வைத்துக்கொண்டுதான் நினைத்தவள் பெயரை பதின்மூன்று விசை மனதில் நினைத்து திலர்தமிட அவள் வசியமாவாள் தவிர அதைச் சமூலமுங் கொண்டுவந்து நிழலிலுலர்த்திப் பாண்டத்தில் போட்டுக் குழித்தைலமிறக்கி அதற்குப் பாதி பச்சைக்கற்பூரம் போட்டுக் குழைத்து மையாக்கிச் சிமிளில் வைத்துக்கொண்டு வசியமந்திரத்தை ஆயிரத்தெட்டுருவு செபித்துத் திலர்தமிட வசியமாம்.

611. கருவூமத்தன்

ஞாயிற்றுக்கிழமையதினம் தன்னுடைய பக்ஷி அரசாயிருக்கும்போது கருவூமத்தன் செடிக்குச் சாபநிவர்த்தி செய்து காப்புகட்டி பொங்கலிட்டு

ஆணிவேரூமத் தொண்டுவந்து சாறு பிழிந்து அசல் செம்பை அச்சாற்றி விழைத்து வழித்து சிமிளில் வைத்துக்கொண்டு தேவையானபோது நமக் கிஷ்டமானவள் பெயரை நினைத்துத் திலர்தமிட்டுச்செல்ல அவள் வசிய மாவாள். மேற்படி கருவூமத்தன் இரசத்தைவிட்டு பாதரசத்தை அரைத்து அதைப் பொன்னூமத்தன் காய்க்குள் வைத்து அதன்மேல் சீலமண் வலுக் கச்செய்து காடைப் புடம்போட்டெடுக்க இரசமானது மணியாகக் கட்டி யிருக்கும்.

612. பொன்னூமத்தன்

பொன்னூமத்தன் இலையைச் சிறுநீரிலரைத்து வெற்றிலையில் தடவி தான் நினைத்தப் பெண்ணுக்குக் கொடுக்க அவள் வசியமாகுவள் இதுவும் வசிய மூலிகைகளிலொன்று.

613. வெண்ணூமத்தன்

வெண்ணூமத்தையைச் சாபநிவர்த்தி செய்து காப்பு கட்டிக்கொண்டு வந்து குளிசமாடி கட்டிக்கொள்ளச் சகல வசியமுமாகும்.

614. ஊமத்தன்

ஊமத்தன்யிலையை நெருப்பிலிட்டுவாட்டி எரண்டத்தெண்ணெய்விட் டுக்கட்டிகளின்பேரில் போட அக்கட்டிகள் சீக்கிரம் பழுத்துஉடையும். அ தின்விரையைச் சாராயத்திலூறவைத்தெடுத்து அதை அரிசியிற்கலந்து கொடுக்க ஸ்திரீவசியமாகும் அதன்காய் பேய் பிசாசு முதலிய துஷ்டதேவ தைகளின் வேலைக்கு உபயோகப்படும் அதில் இரட்டைக்காயாக இருப்ப தையெடுத்து சரிபாகமாகப்பிளந்து அதில் எதிரியின்காலடிமண்ணை வைத் துப்பரப்பி அம்மண்ணின்பேரில் அவன்பெயரைமாறியெழுதி மற்றொரு பி ளப்பை அதின்மேல்வைத்து இருபிளப்பையும் கம்பளிக்கயிற்றினால் இருகக் கட்டி எதிரில் வைத்துக்கொண்டு பேய்மந்திரத்தை ஆயிரத்தெட்டுரு செ பித்து அக்காயின்பேரில் கருவைத்தடவி எதிரியானவன் வாழும்படியான ஊரைச்சுற்றி எடுத்துக்கொண்டுபோய் மயானத்தில் புதைத்துவைக்க அவ னுக்கு பைத்தியம்பிடித்து ஓரிடத்திலுந் தங்காமல் ஊரூராயலைந்து பலபே ரும் கைகொட்டிநகைக்கச் சுற்றுவான் தன்மனிதரென்றும் பிறமனிதரென் றுந்தோணாது எவ்வித அசுத்தங்களுக்கும் அஞ்சமாட்டான் அதை அவனு டைய பந்துக்கள் தெரிந்துக்கொண்டு நீதான் செய்தாயென்று உன்னை வந்துவணங்கும் பக்ஷத்தில நீ புதைத்திருக்கும் காயையெடுத்து ஆற்றுநீரில் கழுவிப்போட்டுவிட அவனுக்குபிரமையெல்லாம் நீங்கி சுகப்படுவான். ஆனா லிது மகாபாதகமானதொழில்.

615. சிறுமுன்னை

சிறுமுன்னைச்செடியைக் கண்டுபிடித்து சாபநிவர்த்திசெய்து கன்னி நூல்காப்புகட்டி பொங்கல் பலி தீபதூபங்கொடுத்து இரும்பாலாகிய ஆயுதங் கள் படாது கொண்டுவந்து நிழலிலுலர்த்தி பொடிசெய்து வெள்ளைத்துணி யில் பரப்பி திரிதிரித்து ஐங்கோலத்தைலத்தில் நனைத்து அதை ஓர் அகலில் போட்டு காராவின் நெய்விட்டுக்கொளுத்தி வைத்துவிட்டு எத்தேவதைகளை நினைத்து அவ்விளக்கைப்பார்த்தாலும் அத்தேவர்கள் நிஜரூபமாகக் கண் ணுக்குத் தோன்றுவார்கள் விளக்கை அணைத்துவிட அதுகளெல்லாம் மறை ந்துபோகும் இவ்வேரை அஷ்டமி திதியில் குளிசமாடி கட்டிக்கொள்ள இ ராச ஆக்ருஷ்ணமாகும்.

616. ஆடாதோடை

நன்றாக முத்தின ஆடாதோடைச்செடிக்கு சாபநிவர்த்திசெய்து மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கல் பலி தீபதூபங்கொடுத்து கொண்டுவந்து அதனுடன் மேற்படிபழமும் கோரோசனையுஞ் சேர்த்து மைபோலரைத்து வெள்ளைத்துணியில்தடவி நிழலிலுலர்த்தி திரிதிரித்து தலைமண்டையோட்டில்போட்டு சாரைப்பாம்பு நெய்யைவிட்டுக் கொளுத்தி மைவாங்கி அம்மையில் புத்துத்தேனைவிட்டு அரைத்து செப்புச்சிமிழில் வைத்துக்கொண்டு அஞ்சனாதேவியையும் ஆஞ்சநேயரையும் துதித்துப் பிறகு மசி நசி யென்று தினமொன்றுக்கு ஆயிரத்தெட்டுரு வீதம் எட்டுநாள் விடாது செபித்து அதன் பிறகு கண்களில் தீட்டினால் உலகத்திலுள்ள சகல நிதிகளுங் கண்களுக்குத்தோன்றும்.

617. பேய்கள் ஓடுதற்கு கைபாகமான தந்திரம்

அப்பைக்கிழங்கு பேயத்திவேர் பேயாலம்வேர் ஊமத்தன் விரை இந்நான்கையும் சூரியகிரஹணம் படாது நிழலிலுலர்த்தி இடித்துவஸ்திரகாயஞ்செய்து வகைக்குக்கழஞ்சு ஒன்றாக எடுத்துக்கொண்டு காலிமாட்டுப் பசுவின்சாணத்தை உலர்த்திக் கொளுத்திச் சாம்பலாக்கி அச்சாம்பலை மூன்றுக்குச் சரியெடை சேர்த்துக் கலந்து வைத்துக்கொண்டு தேவையான போது ஸ்திரீகளையாகிலும் புருஷர்களையாகிலும் பேய் பிசாசு பூதமிவைகள் பிடித்திருக்குமாகில் அவர்களை ஸ்நானஞ்செய்விக்காமலேயே எப்படியிருக்கிறார்களோ அப்படியே கொண்டுவந்து குந்தவைத்து ஏற்கெனவே தயார் செய்துவைத்திருக்கும் தூளில் ஓர் சிட்டிகை கையில் எடுத்துக்கொண்டு வாயில்வந்த மந்திரங்களை மொண மொணவென்று சொல்லி அவர்கள் சிரசில்தூளைப்போட அவர்கள் தலைசுற்றி ஆடுவதுமல்லாமல் பயந்து நடுக்கத்துடன் வாயைப்பினத்திக்கொண்டு நான் போகிறேன் நான்போகிறேன் அபயம் அபயமென்று கூச்சல்போடுவார்கள் இதுவுமன்றி நாம் வேண்டாமலேயே அவர்கள் தாஞகவே ஊரும்பேரும் சொல்லுவார்கள் அதுசமயம் நாம் ஜாக்கிரதையாக முடியை அறுத்துக்கொண்டு கொஞ்சம் ஜலந்தெளிக்க மயக்கமானது உடனே தெளிந்துவிடும்.

618. நீர்மேல் நெருப்பு.

நீர்மேல்நெருப்பு அல்லது ஆகாயத்தாமரை என்னும் மூலிகையின் பெருமையானது ரொம்பவும் வியக்கத்தக்கது:—எப்படியெனில் அதை நன்றாக உலர்த்திவஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு தேவையானது கொஞ்சமெடுத்து வாயில்போட்டடக்கிக்கொண்டு காற்றுவாட்டமாக வஸ்திரங்களின்பேரிலாவது வைக்கோலின்பேரிலாவது அல்லது உடனே பற்றக்கூடிய எவ்விதவஸ்துக்களின்பேரிலாவது துப்பிவிட அதுகள் உடனே தீப்பற்றியெறியும் அதை எரியும் விளக்கை அணைத்துவிட்டு உடனே அப்புகையின் வாட்டத்தில் ஓர் சிட்டிகைத் தூளைப்போட அணைந்தவிளக்கானது திக்கென்றுபற்றியெறியும்.

6 9. கொத்தான்.

கொத்தான் என்னும் செடியானது பலவித மரங்களின்மீதும் படர்ந்து கொடிகொடியாகத் தொங்கும் அதை இடையர்கள் மோர்கட்டியாகும் பொருட்டு அதில்கலக்குவதுமுண்டு அச்செடியைக் கொஞ்சம் ஒடித்துவந்து எந்தவீட்டில்சொருகி வைக்கின்றோமோ அவ்வீடானது சிலநாளைக்குள் நாசத்தையடையும் அதைப்பற்றியே அதற்கு குடிநாசக்கொத்தான் என்று

பேர்கொடுத்திருக்கின்றார்கள். இது எவ்விடத்தில் இருக்கின்றதோ அவ்விடம் பாழ் இதுழைத்திருக்கும் மரங்களோ செடிகளோ காய்ந்து உலர்ந்து பாழாகத்தானிருக்கும் இதற்கு வேறென்பது கிடையாது ஆனால் எந்தமரத்தில் படர்ந்திருக்கிறதோ அந்தமரத்தின் அடியில் அதனுடைய கிழங்கிருக்கும் அதைக்கண்டுபிடிக்க வேண்டுமென்றால் இரவு நடுநிசியில் பயப்படாது அம்மரத்தண்டைக்குந்திக்கொண்டு ஜாக்கிரதையாக அம்மரத்தையே பார்த்துக்கொண்டிருக்கும்பக்ஷத்தில் அக்கொத்தான்செடியின் தலைக்கொடியானது தன்க்கா-தாரமாகிய தாய்க்கிழங்கு பூமியில் எவ்விடத்திலிருக்கிறதோ அவ்விடத்தை வளைந்துத்தொடும் அப்போது பார்வைக்குப் பூமியிலிருந்து படர்ந்து கொடியேறினதைப்போல் தோன்றும் பிறகு அரைமணி சாவகாசத்திற்கெல்லாம் கொடி எப்போதும்போல் மேலேயே போய்விடும் அதைக் கண்டுபிடித்து அதைநோண்டிப் பார்த்தால் கிழங்ககப்படும். அதுசாத்தியப்படாவிட்டால் அம்மரத்தைச்சுற்றிலும் வாகுவைக்கோலைப்போட்டு கொளுத்தும்பக்ஷத்தில் கிழங்கு எங்கிருக்கின்றதோ அங்குமாத்திரம் வைக்கோல் வேகாது மற்றதெல்லாம் வேகும் அதைக்கண்டு அவ்விடத்தை நோண்டிப் பார்த்தால் கிழங்ககப்படும். அக்கிழங்கை யெடுத்துக் குழித்தைலமிறக்கி அதில வேரில் பழுத்து வெடித்த பலாக்கொட்டையைக் கறுக்கின தூளும் சரிபாகமாகச்சோத்து அரைத்து மையாக்கிச் சிமிளில்வைத்துக்கொண்டு ஆஞ்சநேயர்மந்திரத்தை லக்ஷத்தியெட்டுரு செபிக்க மைக்கு உயிருண்டாகும அப்புறம் அதைஓர் கடலைப் பிரமாணமெடுத்து வெற்றிலையில் தடவிப் பார்க்க சகலமான பொருள்களும் திருடுகளும் நன்றாகத் தெரியும்.

620. இரட்டைப்பிரமட்டை.

இச்செடியின் இலையானது ஆணிலை நீட்டாகவும் பெண்ணிலை குட்டையாகவுமிருக்கும் அதைத்தெரிந்துகொண்டு ஆணுக்குப் பெண்ணிலையும் பெண்ணுக்கு ஆணிலையுமாக ஐந்தாறு இலைகளைக கிள்ளி கையில் வைத்துக் கொண்டு அதன்கூட இரண்டுதிரி வெள்ளைப்பூண்டை வைத்துக் கசக்கி அந்த ரசத்தை அவர்கள் உச்சந்தலையில் தேய்க்க என்னாளும் பிரியமாட்டார்கள்.

621. கட்டுக்கொடி.

கட்டுக்கொடியின் இரசத்தை ஜலத்தில் பிழிந்தால் ஜலங்கட்டிப்போகும் அதை அறுத்து அல்வாயைப்போல் சாதாரணமாக சாப்பிடலாம் இதனால் திரேகத்திற்கு யாதொரு கெடுதலையுங் கிடையாது தாதுபுஷ்டியைத் தரும் இதை பசும்பாலில்கலந்து சாப்பிட பேதிநிற்கும் இதை நல்லவேளையில் காப்புகட்டி பொங்கலிட்டு பலிகொடுத்து தீபதூபங்காட்டிப் பிடுங்கி வந்து குளிசமாடிக் கையில்போட்டுக்கொள்ள பூதப்பிசாசுகளெல்தாம் விலகும் மேற்படி யிலையை சூரணஞ்செய்து வைத்துக்கொண்டு தமாஷாக ஜனங்களைப்பார்த்து நான் நெருப்புமுதலிய கருவிகளில்லாமல் அல்வா செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி கொஞ்சம் ஜலத்தில் சர்க்கரையைப் போட்டுக்கலந்து இந்த தூளையும்போட்டு சுமார் பத்துநிமிஷம்பொறுத்து எடுத்துப்பார்க்க அது அசல் அல்வாபோலவே யிருக்கும் அதைக்கத்தியினலறுத்து எல்லோருக்குங்கொடுக்கலாம் தானும் புசிக்கலாம் தாதுபுஷ்டியாகும் மேகத்தில்சேர்ந்த வெள்ளை நீர்ச்சுருக்கு முதலிய சிலவியாதிகளையுங் கண்டிக்கும்.

622. அழிஞ்சில்.

இதன் சமூலத்தையும் உலர்த்திச் சூரணஞ்செய்து சீலையில் வைத்துத் திரித்து காராவின் நெய்விட்டுக் கொளுத்தி மைவாங்கி திலர்தமிட வசியமா

கும் மேற்படிவிரையும் அதற்குச் சமன் பொன்னுங்காண்ணிச்சமூலமும் சேர்த்தும்பசும்பால்விட்டரைத்து ரசம்பிழிந்து அதற்குச்சமன் காரெள்ளெண்ணெய்விட்டு தைலங்காய்ச்சி இறக்கும்போது கொஞ்சம் பச்சிலேக்கிச்சிலிக்கிழங்கைப்பொடித்துப்போட்டு இறக்கிவைத்துக்கொண்டு ஸ்நானஞ்செய்துவர திரேகத்திற்கு நல்லது.

623. சார்வேளை.

இதில் வெள்ளைச்சார்வேளையாகக்கொண்டுவந்து அவுரிச்சாற்றிலரைத்து சிமிளில் வைத்து மோகினியைத்தியானித்து வைத்துக்கொண்டு தேவையானபோது கொஞ்சமெடுத்துக் காராவின்நெய்யில் குழைத்து திலர்தமிட்டுச்செல்ல சகலகாரியங்களும் கைகூடும் வழக்குகள் கெலிக்கும் இராஜவசிய முதலியதுகள் கைகூடும் அதற்கிணை இதுவேயன்றி வேறொன்றையுஞ் சொல்லமுடியாது.

624. நிலம்புரண்டி.

நிலம்புரண்டியென்னும் மூலிகையானது இதரமூலிகைகளைப்போலவே சாதாரணமாக பூமியிலேயே முளைத்திருக்கும் அது மனிதர்களின் காற்றுவாடைபட்டமாத்திரத்தில் பூமியைச்சுரண்டிக்கொண்டு உள்ளே மறைந்துவிடுவதால் அதற்கு நிலம்புரண்டி என்று பெயர்வந்தது அதைக்கண்டுபிடிக்கவேண்டுமெனில் சில தேற்றான்கொட்டைகளைக்கையில்வைத்துக்கொண்டு போய்க்கொண்டே யிருக்க எங்கு அம்மூலிகை யிருக்கின்றதோ அங்கு நமது கையிலிருக்கும் தேற்றான்கொட்டையானது இரண்டாக வெடிக்கும் அந்தசமயம் நாம் உஷாராக பூமியைப்பார்த்தால் அம்மூலிகை நமது கண்களுக்குத் தெரியும் நம்முடைய கையிலிருக்கும் கொட்டையினுடைய மகிமையினால் அம்மூலிகையும் உள்ளுக்குப்போகாது அப்படிப்பட்ட மூலிகையை ஞாயிறு செவ்வாய் வியாழன் இந்த மூன்று கிழமைகளில் எந்தகிழமையானாலுஞ்சரி அதிகாலை சூரியோதயத்திற்குமுன் சென்று அவ்விடத்தைச் சுத்தஞ்செய்து அச்செடிக்கு சாபநிவர்த்திசெய்து உயிர்கொடுத்துக்காப்புகட்டி பொங்கல்பலி தூபதீபங்கொடுத்துப் பிடுங்கிவந்து குழித்தைலமிரக்கி பச்சைக்கற்பூரம் கோரோசனை சவ்வாது இம்மூன்றையுஞ்சமயெடையாகச் சேர்த்துக் குழைத்து மையாக்கிச் சிமிளில் வைத்துக்கொண்டு ஆஞ்சநேயர் மந்திரத்தை ஆயிரத்தெட்டுவிசையும் அஞ்சனதேவிமந்திரத்தை ஆயிரத்தெட்டுவிசையுஞ் செபித்து மைக்கு உயிருண்டாக்கி வைத்துக்கொண்டு தேவையானபோது ஓர் பயறளவெடுத்து வெற்றிலையில் தடவிப்பார்க்க பாதாளத்திலுள்ள புதையல்களெல்லாம் கண்ணுக்கு நன்றாகத் தெரியும் தவிர அவ்வேரைக்கறுக்கி ஜலத்தில்கரைத்து புதையலிருக்குமென்று சொல்லப்பட்ட இடத்தில் ஊற்றிவிட்டு வந்துவிடவும் மறுநாள் காலையில் போய் பார்க்கும்போது புதையலிருக்கும் இடமாயிருந்தால் அவ்விடம் பத்தலாக வெடித்திருக்கும் இல்லாத யிடமாயிருந்தால் சாதாரணபூமியாக யிருக்கும்.

625. வெள்ளெருக்கன்.

நன்றாக முத்தித்தேறின வெள்ளெருக்கன்செடியைக் கண்டுபிடித்து அவ்விடத்தைச்சுற்றிலும் பசுங்கோமயத்தைக்கொண்டு நன்றாகச் சுத்திசெய்து ஞாயிற்றுக்கிழமையதினம் பூசநக்ஷத்திரமும் பௌர்ணமியுமாகப் பார்த்து சாபநிவர்த்திசெய்து கன்னிநூல் காப்புகட்டி பொங்கல் பலி தீபதூபங்கொடுத்து அஷ்டகர்மமந்திரங்களையும் ஒவ்வொன்றுக்கு நூற்றியெட்டுவிழுக்காடு செபித்து அதன்பிறகு செடியைச்சுற்றிலும் அகலமாக மண்ணைப்பறித்து ஆண்வேறுடன்கொண்டுவந்து குளிசமாடி குழந்தைகளு

க்குநேரிடும் காற்று கறுப்பு சந்து தோஷம் பாலகிரகதோஷம் குளிதோஷம் கனவில்திடுக்கிடல் நித்திரையில் படுக்கையிலேயே மலஜலவிசர்சனஞ் செய்தல் அலறுதல் வீறிட்டழுதல் முதலிய எப்பேர்ப்பட்ட தோஷங்களுக்கும் ஓர் குளிசங்கட்ட அதுகளெல்லாம் சூரியனைக்கண்ட பனியைப்போல விலகிவிடும் தவிர அவ்வெருக்கன்கட்டையினால் பிள்ளையார் உருவஞ் செய்து வைத்துக்கொண்டு காலந்தவறாது நியமத்துடன் பூசித்துக்கொண்டு வரும்பக்ஷத்தில் அஷ்ட ஐஸ்வரியங்களும் தாண்டவமாடும் அதின்கூட சிதம்புரசக்கரத்தையும் தகுந்த ஆசானைக்கொண்டு தயார்செய்துவைத்துக்கொண்டு செபித்துக்கொண்டுவரும்பக்ஷத்தில் அவர்களுக்கு அவ்வுலகத்தில் ஆகாதகாரியங்கள்ஒன்றுமில்லை அப்போப்பட்டவர்களைக்கண்டால் பேய் பிசாசுகளெல்லாம் காதவழி விலகியோடும் அவ்விலையை வதக்கிக் கட்டிகளின்மேல் போட்டால் எப்படிப்பட்ட கட்டிகளும் உடைந்துவிடும் அதில் இருக்கும் நாரையெடுத்துக் கயறாகத்திரித்து இருபத்தொரு முடிகள்போட்டு உச்சாடனமந்திரத்தைச்செபித்து குழந்தைகளுக்குக் கட்டிவைத்திருந்தால் எவ்விதமாகிய பேய்பிசாசுகளும் அணுகாது. ஆனால் மேற்படி விநாயகரைப பூசிக்கும்போது ஆசூசியாகிய காரியங்களைச் செய்துவிட்டு அதைத்தொடும்பக்ஷத்தில் நமக்குத் தீராததரித்திரமும் பலவித இடுக்கண்களும் சம்பவிக்கும் மேற்படி இலையை நிழலிலுலர்த்திப் பொடியாக்கி வெள்ளெலியின் கருவைசசோத்து அரைத்து சீலையில்தடவி காயவைத்து திரியாக்கி அத்திரியை அகலிலபோட்டு வெளவாலின் நெய்யூற்றி விளக்கேற்றி அம்மையை புதுச்சட்டிக்கு ஆலாக்குருவியின் முட்டையையுடைத்து ஊற்றிசூற்றிலுந்தடவிக காயவைதது அதில்பிடித்து வழித்துச் சிமிளில் வைத்துக்கொண்டு ஆஞ்சநேயர் மந்திரத்தை ஆயிரத்தெட்டுருகொடுத்து வெற்றிலையில்போட்டு பாக்க உலகத்தில்நடக்கும சகலகாரியங்களும் நன்றாகத்தெரியும் மேற்படிபலகையில் வசியசக்கரத்தை எழுதி பூசையில் வைத்துப் பூசித்துக்கொண்டுவருமபக்ஷத்தில லட்சுமிகடாட்சமுண்டாவதோடு சகலஜனமும் வசியமாவார்கள். இதன பெருமையானது சொல்லத்தரமல்ல.

626. கோபுரந்தாங்கி.

இம்மூலிகைக்குச் சாபநிவர்த்திசெய்து காப்புகட்டிக்கொண்டுவந்து வாயிலபோட்டு மென்று தாடையிலடக்கிக்கொண்டு எவ்வளவு கண்ணாடித்துண்டையேனும முறுக்கைப்போல மென்று துப்பிவிடலாம் அதைக் குளிசமாடிக காலில கட்டிக்கொண்டு பெரிய பாராங்கல்லை எட்டியுதைக்க அதுபினால் நகர்ந்துபோயவிடும் பொஙகலபலிமுதலியதுகளுடன வேரைக் கொணடுவரவேண்டும்.

627. புழுக்கள் போகும் ஜாலம

சித்திரமூலச்செடிக்கு சாபநிவர்த்தி செய்து மஞ்சள்நூல் காப்புகட்டி பொங்கல் பலி தீபதூபங் கொடுத்துகொண்டு வந்து குளிசமாடி விளையும்படியான புலங்களில புதைத்துவைகக அப்புலம் விளைவிலலாது சாவியாய்ப் போகும்.

628. கரப்பூச்சறு ஜாலம்

ஆடு தீண்டாப்பாளைச் செடிக்கு காப்புகட்டி பொங்கல் பலி முதலியவற்றைச் செய்துகொண்டு ஐயுங்-கிலியுமென்று வுருசெபித்துத் தெளிக்க கரிபூச்சுகள் நாசமாய்ப்போகும்.

629. சகல புழுக்களும் போகும் ஜாலம்

ஆடு தீண்டாபபாளைச் செடியை முன்போல் கொணடுவந்து ஒவ்வொ

ன்று நூற்றியெட்டு உருசெபித்து ஜலம் விட்டரைத்து செடிகளின்பேரில் அள்ளித்தெளிக்க சகல புழுக்களும் நாசமாகும்

630 இதுவுமது

மேற்படி செடியைக் காப்புகட்டி கொண்டுவந்து பூசையில் வைத்து ஏ. நா. என்ற மந்திரத்தை நூற்றியெட்டுச் செபித்துச் செடியில் வைக்க குருத்துப் புழுக்களெல்லாம் ஓடிப்போகும்.

631. இதுவுமது

மேற்படி செடியைக் காப்புகட்டி கொண்டுவந்து பூசையில் வைத்து ஐ-ஆ என்ற மந்திரத்தை நூற்றியெட்டு செபித்து மரத்தின் வேரில் கட்டி வைக்க கோட்டான் புழுக்களெல்லாம் நாசமாய்ப்போகும்.

632. அதிகங்காய்க்கும் ஜாலம்

மேற்படி செடியைக் காப்புகட்டி கொண்டுவந்து ஓம் என்ற மந்திரத்தை நூற்றியெட்டு செபித்து காய்க்காத மரங்களின் வேரில் கட்டி வைக்க அதிகங் காய்க்கும்.

633 பூவாத மரம் பூக்கும் ஜாலம்

மேற்படி செடியைக் காப்புகட்டி கொண்டுவந்து ஐ-எ என்று நூற்றியெட்டு உரு செபித்து பூக்காத மரங்களின் வேரில் கட்டிவைக்கப் பூவாதது பூக்கும்.

634. மரம் உதிர்ந்துபோகும் ஜாலம்

மேற்படி செடியைக் காப்புகட்டி கொண்டுவந்து பூசையில் வைத்து க-கசி என்று நூற்றியெட்டு உரு செபித்து மரத்தின் வேரில் கட்டிவைக்க மரங்காய்ந்து உதிர்ந்துபோகும்.

635. இதுவுமது

மேற்படி செடியைக் காப்புகட்டி பொங்கலிட்டுக்கொண்டு வந்து பூசையில் வைத்து உ-ஆ என்ற நூற்றியெட்டு விசை செபித்து மரத்தின் வேரில் கட்டிவைக்க பூ-தளிர்களெல்லாம் உதிர்ந்துபோகும்

636. மரங்கள் வாடிப்போகும் ஜாலம்

ஓர் செப்புத்தகட்டில் உவ்வும் என்று செபித்து நூற்றியெட்டு உருவானதும் எலுமிச்சங்கனி காவு கொடுத்து எடுத்துச் சுருட்டி செழிப்பாகவுள்ள மரங்களின் வேரில் புதைத்துவைக்க அதுகள் சில நாளில் வாடிப்போகும்.

637. மரங்கள் காய்க்காத ஜாலம்

ஓர் செப்புத்தகட்டில் சிவ்வும்-அவ்வும்-மவ்வும் வவ்வும் என்று எழுதி பூசையில் வைத்து அம்மந்திரத்தையே நூற்றியெட்டு விசை செபித்து மரங்களின் வேரில் புதைக்க அதின் காய்ப்புகளெல்லாம் மாறிவிடும்.

638. மரங்கள் உலர்ந்துபோகும் ஜாலம்

சின்றவிடத் தீஞ்சானுக்கு காப்புகட்டிப் பொங்கலிட்டு கொண்டுவந்து பூசையில் வைத்து மன மந்திரத்தைச் செபித்து மரங்களின் வேரில் புதைத்துவைக்க மரங்கள் உலர்ந்துபோகும்.

639. செல்லுகள் சிதறும் ஜாலம்

வீட்டுகளில் செல்லுகள் இருந்துக்கொண்டு தொந்தரை செய்யுமிடங்களில் தாமரையிலைகளைக் கட்டிவைக்கும் பக்ஷத்தில் அதுகளெல்லாம் சிதறிவிடும்.

640. நெருப்பைக் கையில் வாரும் ஜாலம்

வசம்பை நன்றாகக் கற்றாழைச் சாறுவிட்டரைத்து அக்கற்றாழையிலேயே கலந்து தனது இரண்டு கைகளிலும் பூசிக்கொண்டு நெருப்பை வார கைகள் சுடாது பார்ப்பவர்களெல்லாம் உனக்குக் குட்டிச்சாத்தான் வசியமென்று சொல்லுவார்கள்.

641. இதுவுமது

மிளகையும் குண்டுமணியிலையையும் ஒன்றாக அரைத்து இரண்டு கைகளிலும் பூசிக்கொண்டு நெருப்பை வாரலாம். ஆனால் ஜாக்கிரதையாகச் செய்யவும்.

642. உலை வேகாத ஜாலம்

கடலை, கொள்ளு, அரிசி முதலிய எதுகளிலாகிலும் கொஞ்சம் கஞ்சா விதையைக் கலந்து வேகவைக்கும் பக்ஷத்தில் அது கொஞ்சமேனும் வேகாது. வேறு உலைவார்த்து அவ்விதைகளை யெல்லாம் எடுத்துவிட்டு அடுப்பில் வைத்தால் வேகும்.

643. புரை குத்தும் ஜாலம்

பாலுக்குப் புரை குத்த மோர் அகப்படாவிட்டால் கொஞ்சம் எலுமிச்சம்பழ ரசமாகிலும் அல்லது கொஞ்சம் புளியாவது போட்டுவைக்க அது தயிராகத் தோய்ந்துவிடும்.

644. பல்லுதிரும் ஜாலம்

கடித்த பற்களுதிரவேண்டுமெனில் கடிவாயில் கொஞ்சம் கோழி யெச்சத்தை உமிழ்நீரில் கரைத்துப் பூசிவைக்க கடித்த பற்களுதிர்ந்துவிடும்.

645. பொய்முட்டை பறக்கும் ஜாலம்

ஓர் கோப்பையில் வெள்ளைக் காட்டாமணக்கன் பாலைக் கறந்துக்கொண்டு துடப்பத்தை துவாரஞ் செய்து அதில் வைத்து ஊத அதிலிருந்து முட்டை கிளம்பி பறக்கும் பார்ப்பவர்களுக்கு வெகு ஆச்சரியமாயிருக்கும்.

646. சகல சித்துகளாடும் ஜாலம்

மலைகளிலும் குன்றுகளிலும் இருக்கப்பட்ட இருளியென்னும் மூலிகையைக் கண்டுபிடித்து மங்களவாரதினங் காப்புகட்டி சாபநிவர்த்திசெய்து பொங்கலிட்டு கோழிபலிகொடுத்து கொண்டுவந்து பிறகு நத்தைச்சூரிசெடிக்கு சுக்கிரவாரதினம் சூரியோதயத்தில் சாப நிவர்த்திசெய்து கொண்டுவந்து இரண்டையுங் குளிசமாடி ஓர் செப்புத்தகட்டில் ஐம்பத்தோரட்சரத்தைவரைந்து அதில முன்குளிசத்தை வைத்துச்சுருட்டி 108-விசை ஜெபித்து எடுத்து வைத்துக்கொள்ளவும்.

647. புலியாகும் ஜாலம்

முன்குளிசத்தையெடுத்துக் காதில்வைத்துக்கொண்டு புலியாகவேணுமென்று மனதில் நினைத்து மாயமோகினியைத்தியானித்தால் பார்ப்பவர்க

ளின் கண்களுக்கு புலியாகவே காணப்படுவாய் எல்லோரும் ஆச்சரியப்படு வார்கள்.

648. ஆனையாகும் ஜாலம்

முன் குளிசத்தை எடுத்துக் காதில்வைத்துக்கொண்டு ஆனையாகவே ணுமென்று மனதில் நினைத்துக்கொண்டு மாயமோகினியைத் தியானிக்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு ஆனையாகவே காணப்படுவாய் ரொம்பவும் அதிசயமாயிருக்கும்.

649. சிறுத்தையாகும் ஜாலம்

குளிசத்தைக் காதில் வைத்துக்கொண்டு காளியை துதித்து சிறுத்தை யாகவேணுமென்று மனதில் தியானிக்கப் பார்ப்பவர்களுக்கு நீ சிறுத்தை யைப்போலவே காணப்படுவாய் எல்லேரும் ரொம்பவும் சந்தோஷப்படு வார்கள்.

650. மானாகும் ஜாலம்

குளிசத்தைக் காதில்லவத்துக்கொண்டு குட்டிச்சாத்தானை வணங்கி எல்லோருடைய கண்களுக்கும் மானைப்போலவே தோன்றவேணுமென்று காளியைத் தோத்திரஞ்செய்ய பார்ப்பவர்களின் கண்களுக்கெல்லாம் நீ மா னைப்போலவே காணப்படுவாய் எல்லோரும் அதிக ஆச்சரியப்பட்டு உன்னை மிகவும் கெட்டிக்காரனென்று சொல்லுவார்கள்.

651. நாயாகும் ஜாலம்

குளிசத்தைக்காதில் வைத்துக்கொண்டு சாமுண்டீஸ்வரியைத் துதித் து பார்ப்பவர்களின்கண்களுக்கு நாயைப்போலவே தோன்றவேணுமென்று மனதில் நினைக்க நாயைப்போலவே காணப்படுவாய்

652. ஒட்டையாகும் ஜாலம்

சபையில் குளிசத்தை எடுத்துக் காதில் வைத்துக்கொண்டு ஒட்டகமாக வேணுமென்று மனதில் தியானிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு ஒட்டகத் தைப்போலவே காணப்படுவாய். ஆனால் மயானருத்திரி மந்திரத்தை நூற்றி யெட்டுவிசை செபிக்கவும்.

653. கரடியாகும் ஜாலம்

ஜாலமாடுஞ்சபையில் குளிசத்தையெடுத்துக் காதில் வைத்துக்கொண்டு மலையாளபகவதியைத் தியானித்து பார்ப்பவர்களுக்கு நான் கரடியாகத் தோன்றவேண்டுமென்று மனதில் தியானித்தால் நீ அவர்களின் கண்களுக்குக் கரடியாகவே காணப்படுவாய்.

654. பூனையாகும் ஜாலம்.

குளிசத்தைக்காதில்வைத்துக்கொண்டு பார்ப்பவர்களின் கண்களுக்கு பூனைமாதிரித் தோன்றவேண்டுமென்று காளியைத்தியானிக்க அவர்கள் கண்களுக்கெல்லாம நீ பூனையாகவே காணப்படுவாய் எல்லோரும் மகா ஆச் சரியப்படுவார்கள்.

655. ஆடாகும் ஜாலம்

ஆடாகத்தெரியவேண்டுமென்று மோகினியைத்தியானித்து குளிசத் தையெடுத்துக் காதில்வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக் கெல்லாம் நீ ஆட்டைப்போலவே காணப்படுவாய்,

656. குதிரையாகும் ஜாலம்

பார்ப்பவர்களின் கண்களுக்கெல்லாம் குதிரையாகத் தோன்றவேண்டுமென்று மனதில் எண்ணி மாயாமோகினியைத் தியானிக்க அவர்கள் கண்களுக்கெல்லாம் குதிரையைப்போலவே காணப்படுவாய். எல்லாரும் மகா சந்தோஷப்படுவார்கள்.

657. மாடாகும் ஜாலம்

பார்ப்பவர்களின் கண்களுக்கெல்லாம் மாட்டைப்போலவே தோன்றவேண்டுமென்று மனதில் நினைத்துக்கொண்டு குளிசத்தை யெடுத்து காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கெல்லாம் மாட்டைப் போலவே காணப்புடுவாய்.

658. பசுவாகும் ஜாலம்

சாமுண்டீஸ்வரியைத்தியானித்து குளிசத்தையெடுத்துக்காதில் வைத்துக்கொண்டு சபையிலுள்ளவர்களின் கண்களுக்கு பசுவைப்போல தோன்றவேண்டுமென்று மனதில் நினைக்க அவர்கள் கண்களுக்கெல்லாம் பசுவைப் போலவே காணப்படுவாய் எல்லோரும் மகா சந்தோஷப்படுவார்கள்.

659. எருமையாகும் ஜாலம்

குளிசத்தையெடுத்துக் காதில்வைத்துக்கொண்டு அங்கிருப்பவர்களின் கண்களுக்கு எருமையைப்போலத் தோன்றவேண்டுமென்று மனதில் நினைத்து மலையான பகவதியைத் தியானிக்கப் பார்ப்பவர்களின் கண்களுக்கு எருமையாகவே காணப்படுவாய்.

660. காட்டுப்பூனையாகும் ஜாலம்

காட்டுப்பூனையாகத் தெரியவேண்டுமென்று மனதில் நினைத்துக்கொண்டு குளிசத்தையெடுத்து காதில் வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு காட்டுப்பூனையாகவே காணப்படுவாய்.

661. நரியாகும் ஜாலம்

மோகினிமந்திரத்தை நூற்றியெட்டுவிசை செபித்து நரியாகவேண்டுமென்று மனதில்நினைத்துக் குளிசத்தைக் காதில் வைத்துக்கொள்ளும் பக்ஷத்தில் பார்ப்பவர்களின்கண்களுக்கு நரியாகவே காணப்படுவாய்.

662. குள்ளநரியாகும் ஜாலம்

மாயமோகினியைத்தியானித்து மந்திரத்தைச்செபித்து குளிசத்தைக் காதில் வைத்துக்கொள்ளும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு நீ குள்ளநரியாகவே காணப்படுவாய்.

663. ஓநாயாகும் ஜாலம்

குளிசத்தைக் காதில்வைத்துக்கொண்டு ஓநாயாகப் பார்ப்பவர்களுக்குத் தெரியவேண்டுமென்று மனதில்தியானித்து ஜாலக்காளை வேண்டிக் கொள்ளும்பக்ஷத்தில் பார்ப்பவர்கள் கண்களுக்கு ஓநாயைப்போலவே காணப்படுவாய்.

664. மனிதனாகும் ஜாலம்

குளிசத்தையெடுத்துக்காதில் வைத்துக்கொண்டு மனிதனாகத் தெரியவேண்டுமென்று மனதில் நினைத்து ஜாலக்காளைத் துதிக்கப் பார்ப்பவர்களுக்கெல்லாம் அவரவர்களின் மனிதனைப்போலவே காணப்படுவாய்.

665. கல்லாகும் ஜாலம்

வீரபத்திரியைத் தியானித்துக் கல்லைப்போலக் காணப்படவேண்டு மென்று மனதில் நினைத்து குளிசத்தைக்காதில் வைத்துக்கொண்டால் அங் இருப்பவர்களின் கண்களுக்கு கல்லைப்போலவே காணப்படுவாய்.

666. மலையாகும் ஜாலம்

குளிசத்தைக் காதில் வைத்துக்கொண்டு பார்ப்பவர்களின்கண்களுக்கு மலையைப்போலத் தோற்றவேணுமென்று மனதில் நினைத்து மயானருத்திரி யைதியானிக்க பார்ப்பவர்களின்கண்களுக்கு நீ மலையைப்போலவே காணப் படுவாய்.

667. கழுதையாகும் ஜாலம்.

குளிசத்தையெடுத்துக் காதில் வைத்துக்கொண்டு பார்ப்பவர்களுக்கு கழுதைத் தெரியவேண்டுமென்று மனதில்நினைத்து மலையாள பகவதியைத் துதிக்க பார்ப்பவர்களின்கண்களுக்கு கழுதையைப்போலவே காணப்படும்.

668. கோவேறு கழுதையாகும் ஜாலம்

கோவேறு கழுதையைப்போலத் தெரியவேண்டுமென்று நினைத்துக் கொண்டே சாமுண்டியைத் தியானித்து குளிசத்தைக் காதில்வைத்துக் கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு நீ கோவேறுகழுதையைப் போலவே காணப்படுவாய்.

669. குரங்காகும் ஜாலம்

குரங்கைப்போலவே பார்ப்பவர்களின் கண்களுக்குத் தோன்றவேண்டு மென்று மனதில் நினைத்துக்கொண்டு குளிசத்தையெடுத்துக்காதில்வைத்து மாயமோகினியைத் துதிக்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்குக் குரங்கைப்போலவே காணப்படுவாய்.

670. பெண்ணாகும் ஜாலம்

குளிசத்தைக் காதில் வைத்துக்கொண்டு பெண்ணாகத் தெரியவேண்டு மென்று மனதில் நினைத்துக்கொண்டே சபையில்வந்துநிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின்கண்களுக்கு ஒரு யௌவர்னமான பெண்ணைப்போலவே காணப்படுவாய்.

671. தவசியாகும் ஜாலம்

ஜாலக்காளைத்தியானித்து எல்லாருடைய கண்களுக்கும் தபசியைப் போலவே தோன்றவேண்டுமென்று மனதில் நினைத்து குளிசத்தையெடுத் துக் காதில்வைத்துக்கொள்ளும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின் கண்களுக்கு அசல் தவசியைப்போலவே காணப்படுவாய் எல்லாரும் மகா ஆச்சரியப்படு வார்கள்.

672. குருவாகும் ஜாலம்

மோகினியைத்தியானித்துக் குருவாகத் தோன்றவேணுமென்று மன தில் நினைத்து குளிசத்தைக் காதில் வைத்துக்கொண்டு சபையில் வந்துநின் ருல் பார்ப்பவர்களின் கண்களுக்கு நீ ஒரு பெரிய குருவைப்போலவே காணப்படுவாய். ரொம்பவும் வேடிக்கையாயிருக்கும்.

673. புனுகுபூனையாகும் ஜாலம்

மயானருத்திரியை மனதிலெண்ணி புனுகுபூனையாகப் பார்ப்பவர்களுக்

குத் தெரியவேணுமென்று துதித்துக் குளிசத்தைக் காதில் வைத்துக் கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு புனுகுபூனையாகவே காணப்படுவாய்.

674. கடம்பையாகும் ஜாலம்

பார்ப்பவர்களின்கண்களுக்குக் கடம்பையைப்போலத் தெரியவேண்டுமென்று காளீஸ்யத் தியானித்து குளிசத்தையெடுத்துக் காதில் வைத்துக் கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்கு கடம்பையைப்போலவே காணப்படுவாய்.

675. கழுதைக்குறத்தியாகும் ஜாலம்

பார்ப்பவர்களின் கண்களுக்குக் கழுதைக்குறத்தியாகத் தெரியவேணுமென்று மனதில் நினைத்துக் குளிசத்தையெடுத்துக் காதில்வைத்துக்கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்குக் கழுதைக்குறத்தியாகவே காணப்படுவாய்.

676. முள்ளம்பன்றியாகும் ஜாலம்

முள்ளம்பன்றியைப்போலவே அனைவர்களுக்குந் தெரியவேண்டுமென்று நினைத்துக்கொண்டு குளிசத்தைக் காதில்வைத்து மோகினியைத் தியானிக்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களுக்கு முள்ளம்பன்றியைப்போலவே தோற்றப்படுவாய்.

677. பன்றியாகும் ஜாலம்.

குளிசத்தை எடுத்துக் காதில்வைத்துக்கொண்டு பன்றியாகவேணுமென்று மனதில்நினைத்துக் காளியைத்தியானிக்க பார்ப்பவர்களின் கண்களுக்குப் பன்றியாகவே தோன்றுவாய்.

678. மரநாயாகும் ஜாலம்.

மரநாயாகவேணுமென்று மனதில் நினைத்துக் குளிசத்தைக்காதில் வைத்துக்கொண்டு மாயமோகினியைத்தியானித்தால் பார்ப்பவர்களுக்கு மரநாயாகவே தெரியும்.

679. மரமாகும் ஜாலம்

மயானருத்திரியைத் தியானித்து மரமாகத்தெரியவேணுமென்று மனதில் நினைத்து குளிசத்தைக் காதில் வைத்துக்கொள்ளும்பக்ஷத்தில் அனைவர்கண்களுக்கும் கிளையும் கழிப்புமாக உள்ள ஓர் பெரிய மரத்தைப்போலவே காணப்படுவாய்.

680. இராஜனாகும் ஜாலம்

இராஜனைப்போலவே எல்லாருடைய கண்களுக்கும் தெரியவேண்டுமென்று நினைத்துக்கொண்டு குளிசத்தையெடுத்துக் காதில் வைத்துக்கொண்டு ராஜமோகினியைத் துதித்துக்கொண்டே சபையில்வந்து நிற்கும் பக்ஷத்தில் பார்ப்பவர்களுக்கெல்லாம் ஒரு பெரிய இராஜாவாகவே காணப்படுவாய் எல்லோரும் பார்த்து அதிசயப்படுவார்கள்.

681. மந்திரியாகும் ஜாலம்

குளிசத்தையெடுத்துக் காதில் வைத்துக்கொண்டு பார்ப்பவர்களின் கண்களுக்கு மந்திரியைப்போல் தோன்றவேணுமென்று காளியைத்தியானிக்க மந்திரியாகவே அவர்கள் கண்களுக்குத் தோன்றுவாய்.

682. சேவகனகும் ஜாலம்

குளிசத்தையெடுத்துக் காதில்வைத்துக்கொண்டு சேவகனைப்போல தெரியவேணுமென்று மாயமோகினியைத் தியானிக்க பார்ப்பவர்களின் கண்களுக்கு இராஜாங்க சேவகனைப்போலவே காணப்படுவாய்.

683. குளமாகும் ஜாலம்

குளிசத்தையெடுத்துக் காதில் வைத்துக்கொண்டு குளமாகவேண்டுமென்று நினைத்து ஜாலக்காளைத் துதிக்க பாரப்பவர்களின்கண்களுக்கு நீ குளத்தைப்போலவே காணப்படுவாய். எல்லோரும் உன்னுடைய வேலைக்கு ரொம்பவும் ஆச்சரியப்படுவார்கள்.

684. கிணராகும் ஜாலம்

குளிசத்தை எடுத்துக் காதில் வைத்துக்கொண்டு கிணற்றைப்போலவே தெரியவேண்டுமென்று ஜாலக்காளைத் துதிக்க எல்லாருடைய கண்களுக்கும் கிணற்றைப்போலவே காணப்படுவாய்.

685. பக்ஷிகளாகும் ஜாலம்.

பக்ஷிகளாகவேணுமென்று நினைத்து குளிசத்தைக்காதில் வைத்துக்கொண்டு மயானருத்திரியைத்தியானிக்க நீ எந்தப்பக்ஷியாகவேணுமென்று மனதில் நினைத்தாயோ அப்பக்ஷியாகவே தோன்றுவாய்.

686. பாம்புகளாகும் ஜாலம்.

மோகினியைத்தியானித்துக் குளிசத்தைக் காதில் வைத்துக்கொண்டு என்னபாம்பாகவேண்டுமென்று மனதில் நினைக்கிறாயோ அவ்விதப்பாம்பாகவே எல்லோருடைய கண்களுக்குத் தோன்றுவாய் பார்த்தவர்களெல்லாம் உன்னை மெச்சி மகாவேலைக்காரனென்று புகழ்வார்கள்.

687. காக்கையாகும் ஜாலம்.

மோகினியையுங் காளியையுந் தியானித்துக் குளிசத்தையுங் காதில் வைத்துக்கொண்டு காக்கையாக வேணுமென்று மனதில் நினைத்தால் பார்ப்பவர்களுக்கு நீ காக்கையைப்போலவே தோன்றுவாய்.

688. வீடாகும் ஜாலம்

சாமுண்டீஸ்வரியைத் தொழுதுக் குளிசத்தைக் காதில்வைத்துக்கொண்டு வீட்டைப்போலத் தெரியவேணுமென்று எண்ணிக் குளிசத்தைக் காதில்வைத்துக்கொண்டால் அங்கிருப்பவர்களின் கண்களுக்குப் பெரிய வீட்டைப்போலவே தென்படுவாய்.

689. பூதமாகும் ஜாலம்

அகோரியை மனதினிடமாக பூசைசெய்து சபையிலுள்ளவர்களின் கண்களுக்குப் பூதமாகத்தெரிய வேணுமென்று எண்ணிக் குளிசத்தைக் காதில் வைத்துக்கொண்டால் அங்கிருப்பவர்களின் கண்களுக்குப் பெரிய பூதமே எதிரில் நிற்கிறமாதிரி தெரியும் எல்லாம் பயந்து உன்னை வேண்டிக் கொள்வார்கள்.

690. கள்ளிக்காக்கையாகும் ஜாலம்

மலையாளபகவதியை மனதிலெண்ணி கள்ளிக்காக்கையாக வேண்டுமென்று நினைத்துக் குளிசத்தையெடுத்துக் காதில் வைத்துக்கொண்டு

சபையில் நிற்கும்பக்ஷத்தில் பார்ப்பவர்களின்கண்களுக்கு கள்ளிக்காக்கை யாகவே காணப்படுவாய்.

691. கருடனுருப ஜாலம்

ருத்திரியைத் தோத்திரஞ்செய்து கருடனைப்போலத் தோன்ற வேணுமென்று குளிசத்தைக் காதில் வைத்துக்கொண்டால் எல்லோருடைய கண்களுக்கும் கருடனைப்போலவே காணப்படுவாய்.

692. மாயமாயப்போகும் ஜாலம்

மாயமோகினியைத் தியானித்து இங்கிருக்கப்பட்டவர்களின் கண்களுக்கெல்லாம் நான்தெரியாமலிருக்கவேண்டுமென்று மனதில் எண்ணிக்கொண்டே குளிசத்தை எடுத்துக்காதில் வைத்துக்கொண்டு சபையில நின்றுக்கொண்டால் அவர்கள் கண்களுக்கெல்லாம் நீ தெரியாமலிருப்பாய் அவர்களெல்லாம் அதிசயப்பட்டு இப்போது இங்கே இருந்தவன் இதற்குள் எப்படிப்போய்விட்டானென்று அதிசயப்பட்டு உன்னை மெச்சிக்கொள்வார்.

693. குயவன் பானைகள் சிதறும ஜாலம்

வெள்வேலன்பட்டையைக் கொண்டுவந்து அதின்மேல் கருச்சீலையை சுற்றிக்காளியைப்பூசித்து காளிமுன் புதைத்துவைக்க பானைகளெல்லாம் சிதரிவிடும் காளிகோயிலின் முன்பாக புதைத்துவைக்கவும்.

694. சண்டைகள் நடக்கும ஜாலம்

ஈசஞ்செடியின்கீழ் முளைத்திருக்கும் காக்கைப்பூண்டும் குரங்குமூலிகையென்னும் பூண்டையுஞ் சேகரஞ்செய்து வைத்துக்கொண்டு சமயம் வரும்போது ஒன்றை ஒருகடையிலும் ஒன்றை ஒருகடையிலும் வைத்துவிட்டுவேடிக்கைப்பார்க்க அண்ணன் தம்பிகளாயிருந்தாலும் சண்டைபிடித்துக் கொள்வார்கள் அதை யெடுத்துவிட்டால்தான் சண்டைநிற்கும்.

695. துட்டு எடுக்கும் மோடி

கல்லின் மீது சிறியபடிகாரத்துண்டொன்றை வைத்து அதின்பேரில் ஏதேனுமொரு நாணயத்தை வைத்து ஓர் கட்டை நெருபபை நாணயத்தின் மீதுவைத்தால அதுசூடேறி ஒட்டிக்கொள்ளும் அது சற்றுநேரம் ஆறினபின் சபையிலிருக்கும ஒருவரை அழைத்து அந்நாணயத்தை எடுத்துக்கொண்டுவரச்சொல்ல அவர்களெடுத்தால அது கைக்கு வராது அந்தசமயம் நீ கையில் சலத்தைத்தொட்டுக்கொண்டு மந்திரஞ்செபிப்பதைபபோல வாயை அசைத்துக்கொண்டே யீரக்கையுடன் நாணயத்தைத் தொடும்பக்ஷத்தில் அது கையுடன் வந்துவிடும் எல்லோரும் சந்தோஷப்படுவார்கள்.

696. வயற்றில் நூல் எடுக்கும் ஜாலம்

பலவிதமாகிய வர்ணநூல்களையெல்லாம் வட்டவடிவமாகசுற்றி வயற்றின்மீது வைத்து அதினபேரில் மான் ஜவ்வை ஒட்டவைத்து ஜாலமாடுஞ் சபையில நின்றுக்கொண்டு இதோ பாருங்கள் வயற்றிலிருந்து நூல் எடுக்கிறேன் என்றுசொல்லி கத்தியைக்கொண்டு ஜவ்வைக் கீறி நூலின்முனையை பிடித்து இழுக்க நூல் தினுசு தினுசாகவரும் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

697. துடப்பம நெளியு ஜாலம

நான்கங்குல நீளத்தில் ஓர் கனதத துடப்பத்தை யொடித்து அதைநன்

ருக முறுக்கிக் கீழேவைத்து அதின்பேரில் கொஞ்சம் ஜலத்தைத் தெளிக்க அது பிரளுவது மஹாவியப்பாயிருக்கும்.

698 குளிச குதிக்கும் ஜாலம்

செப்புத்தகட்டில்செய்த குளிசத்தில் கொஞ்சம் சுத்திசெய்தரசத்தை விட்டு வாயைமூடி வைத்துக்கொண்டிருந்து ஜாலமாடும்போது அதை நெருப்பில்போட அது எழும்பி எழும்பி குதிப்பதைப் பார்க்க. வேடிக்கையாயிருக்கும்.

699 காகிதத்தைக்கொளுத்தி உருவம் காட்டும் ஜாலம்

ஓர் வெள்ளைக்காகிதத்தில் நமக்குத் தேவையானஉருவத்தை அம்மான் பச்சரிசிப்பாலால் எழுதிக் காயவைத்துக்கொண்டு அதை ஜாலமாடுஞ்சபையில் நெருப்பிலிட்டுக் கொளுத்த உருவந்தோன்றுகிறது மகாவேடிக்கையாயிருக்கும்.

700. எரு உற்பத்தியாகும ஜாலம்

நீர் வற்றிப்போன குளத்திலிருக்கும் சேற்றைக்குழப்பி கொஞ்சம் வைக்கோலின் கூளத்தைப்போட்டு அமிழ்த்துவைத்துவிட்டு நாலைந்து தினங்கள்சென்றபின்பு போய்ப்பார்க்கப் பொய்க்காலிருக்கள் உற்பத்தியாகியிருக்கும்.

701. தம்படி நகரும் வித்தை

நன்றாகயிழைத்துச் சமமாகவுள்ள ஓர் மரப்பலகையின்மீது விளக்கெண்ணெயை ஓர் பொட்டு வைத்து அதின்பேரில் கொஞ்சம் கற்பூரத்தைதம்படியின் பேரில்வைத்துக் கொளுத்த அது நகர்ந்துவருகிறது வேடிக்கையாயிருக்கும்.

702. கிளிஞ்சல் உற்பத்தியாகும் ஜாலம்

மக்கிப்போன ஊமச்சிகளைப் பொடித்துவைத்துக்கொண்டு ஒரு பாத்திரத்தில் ஜலம்விட்டு தூளை ஒரு சிட்டிகை யெடுத்துத்தூவி பத்து நிமிஷம் பொருத்துப்பார்க்க அதின்நிறைய கிளிஞ்சல்கள்மேய்ந்துக்கொண்டிருக்கும்.

703. பானகம் கொடுக்கும் ஜாலம்

குடத்தின் நிறைய ஜலத்தைக்கொண்டு சபையிலிருக்கப்பட்டவர்களுக்கு கொஞ்சம் ஜலத்தை ஓர் டம்ளரில் ஊற்றிக்கொடுத்து எப்படியிருக்குதென்று கேட்டால் அவர்கள் ஜலமென்று சொல்லுவார்கள் அதிபிறகு விபூதிபோடுகிறமாதிரி கொஞ்சம் சாக்ரீன்பௌடரைப் போட்டுத் துழாவி மொண்டுக்கொடுக்க பானகமென்று சொல்லுவார்கள்.

704. சீடைப்புழுக்கள் போகும் ஜாலம்

சீடைப்புழுக்கள் நிரம்பியுள்ள செடியின் ஆணிவேரின்மேல் இரும்புக்கம்பியையும் செம்புக்கம்பியையும் சுற்றிவைக்க அப்புழுக்களெல்லாம் நசிந்துவிடும்.

705. ரோஜாப்பூ மஞ்சளாகும் வித்தை

சிகப்புவர்ணமுள்ள ரோஜாபூவை யெடுத்து அனைவர்க்குங்காட்டி இதைமஞ்சளாக செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி கெந்தகக் குச்சியைக் கொளுத்தித் தீப்பிடிக்க அது மஞ்சளாய்விடும்.

706. சர்ப்பத்தைக் கட்டும் ஜாலம்

நல்லபாம்பெதிரில் கொஞ்சம வெள்ளைப்பூண்டை நசக்கியெறிய அது மயக்கமாகி அப்புறமும் இப்புறமும் அசையாது நின்றுவிடும் அந்த சமயம் நாம் என்னவேணுமானாலும் செய்துக்கொள்ளலாம்,

707. விளக்கவியாதிருக்கும் ஜாலம்

சலவ்வசெய்த வெள்ளைத்துணியில் கொஞ்சம் உப்புத்தூளை பரப்பிதிரி திரித்து ஆனைத் விளக்கில்போட்டு தீபமேற்றிவைக்க எவ்வித காற்றுவந்தாலும் அவியாது..

708. குளிர்ச்சியாயிருக்கும் ஜாலம்

மழைகாலத்தில் தவளைகள் மிகுதியாகக் குஞ்சுபொரிக்கும் அதில் நாலைந்து குஞ்சுகளைப்பிடித்து அரைத்து வெள்ளைத்துணியில் வைத்துச் சுருட்டி விளக்கில் போட்டுக்கொளுத்தி தீபமேற்றி வைக்க அவ்வீடெல்லாம் குளிர்ச்சியாயிருக்கும்.

709. மோகமறு ஜாலம்

எலுமிச்சம்பழ விரையை தினமொன்றுக்கு பத்து விரைவீதம் அரைமண்டலம் வரைக்கும் அந்தி சந்தி சாப்பிட்டுவந்தால் பெண்களின்மேல் இயாபகமிருக்காது யோகஞ்செய்ய சித்திதரும்.

710. நெருப்பில் விளையாடுதற்கு நெய்செய்யும் ஜாலம்

பச்சைத்தவளைகளைப்பிடித்துக் காயவைத்து இரும்புக்கடாயில்போட்டுவதக்கி நெய்யையெடுத்து புட்டியில்வைத்துக்கொண்டு தேவையானபோது சகல வேலைகளுக்கும் உபயோகித்துக்கொள்ளலாம்.

711. இரும்பைக்காய்ச்சி கையால் உருவுதல்

இரும்பை நன்றாக கன்னான் உலகடத்தில் காயவைத்து அதுசிவப்பேறினதும் மேற்படி தவளைநெய்யைக் கையில் தளும்பபூசிக்கொண்டு காய்ந்திருக்கும் இரும்புகம்பியை கையினாலெடுத்துவந்து சபையில்வைக்க சபையிலுள்ளவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

712. சங்கிலியை உருவும் ஜாலம்

இரும்புச்சங்கிலியை பழுக்கக்காயவைத்து குறடாவினால் தூக்கிப்பிடித்துக்கொண்டு மேற்படிநெய்யை கையில் பூசிக்கொண்டு சங்கிலியை உருவ அது எரியுமேயன்றி கை சுடாது பார்ப்பவர்களும் உனக்கு காளிவசியமென்று சொல்லிக் கொள்வார்கள்.

713 காய்ச்சிய இரும்புக்குண்டை வாயால் எடுத்தல்

ஓர் இரும்புக்குண்டை நன்றாய்க்காயவைத்து எடுத்து தட்டில் வைத்துக்கொண்டு தவளை நெய்யை வாயதட்டில் தளும்ப பூசிக்கொண்டு மேற்படி குண்டை [illegible] மந்திரவ திமென்று [illegible]

714. மணவெட்டியைக்காய்ச்சி காலால் மிதக்கும் ஜாலம்

மண்வெட்டியை நன்றாக காயவைத்து சபையில்கொண்டுவந்துவைத்து இதை கைகளால் எடுக்கிறேன் பாருங்களென்று சொல்லி மேற்படிநெய்யை

கையில் தளும்பப் பூசிக்கொண்டு மண்வெட்டியை எடுக்க கைகள்சுடாது பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

715. வைக்கோல் வேகாத ஜாலம்

வைக்கோலைப் பிரியாகச்சுற்றி தவளை நெய்யில் நனைத்து அதைக்காய்ந்த இரும்புக்கம்பியின்மேல் சுற்ற வைக்கோல் வேகாது அதன்பேரில் வேவேவைக்கோலைப்போட குபீரென்று பற்றியெரியும்.

716. எலிகள் அகலும் ஜாலம்

மின் மினிப் பூச்சியைப்பிடித்து அரைத்து வீட்டிலிருக்கும் எலி ஒன்றைப் பிடித்து அதின்பேரில் பூசி விட்டுவிட அதைக்கண்ட மற்றஎலிகள் எல்லாம்பயந்து விலகிவிடும்.

717. நெருப்பை வாயில் எடுக்கும் ஜாலம்

வாய்நிறைய முன் சொன்ன தவளைநெய்யையூற்றி நன்றாக குதப்பிவிட்டு நெருப்புத்துண்டை வாயினால் தூக்க நெருப்பானது சுடாது பார்ப்பவர்கள் உனக்கு அக்கினிதேவன் வசியமென்று சொல்லுவார்கள்.

718. பாம்புகள் சாகும்ஜாலம்

பாம்புகள் சாகவேண்டுமானால் அதன்வாயில் கொஞ்சம் படிகாரத்தூளைப்போட அது உடனே இறந்துவிடும் இல்லையேல்எவ்விதத்திலும்சாகாது

719. கோழிகளைப் பிடிக்கும் ஜாலம்

கொஞ்சம் சாதத்தை நன்றாகப்பிசைந்து நெச்சக்காய்பிரமாணம் உருண்டைகள்செய்து ஒவ்வொரு உருண்டைகட்கும் நடுவில் ஒருசிட்டிகை மூக்குத்தூளை வைத்து அதைக்கோழிகளுக்குப் போட தின்றவுடன் கோழிகளெல்லாம் மயக்கமெய்தி சுருண்டுவிடும் அப்போதுஅதைச் சுலபமாய் பிடித்துக்கொள்ளலாம்.

720 ஸ்தம்பன மை செய்தல்

கொடி தீட்டுச்சீலைசவத்தின் தைலம் ஐங்கோலத்தைலம் எரழிஞ்சிகுழி தைலம் இவைகளையெல்லாம் சரியெடையாக யெடுத்து கல்வத்தில்போட்டு மைலரைத்து வழித்துச் சிமிளில் வைத்துக்கொண்டு ஓர் செப்புத்தகட்டில் ஸ்தம்பனசக்கரத்தைக் கீறி பூசையில் வைத்து அதன் எதிரில் மேற்படி மைடப்பியை வைத்து யநம யங் வங் சங் சுவஹா வென்று லக்ஷத்தியெட்டுரு செபித்துவைத்துக்கொண்டு வேண்டியவிளையாட்டெல்லாம் விளையாடலாம்.

721. செக்கில் எண்ணெய்வராத ஜாலம்.

எட்டிமுளையைக் கூறாகச்சீவி மேற்படி மையைத்தடவி செக்காடுமிடத்தில் புதைததுவி— அச்செக்கில் கொஞ்சமேனும் எண்ணெய் இரங்காது.

722. ஆலைகளில் இரசம்வராத ஜாலம்

கரும்புகளை ஆலையாடி ரசமெடுக்குமிடததில் மேற்படி எட்டிமுளைக்கு மையைத்தடவி புதைத்துவிட்டால் ஆலையில் கொஞ்சமேனும் இரசம் இறங்காது.

723. திராவகங்கள் இறங்காத ஜாலம்

திராவகங்கள் இரக்குமிடத்தில் எட்டிமுளைக்கு மேற்படி கருவைத்தடவி புதைத்துவிட்டால் நாள் எத்தனையானபோதிலும் கொஞ்சமேனும் திராவகங்கள் இறங்காது.

724. காளவாய் வேகாத ஜாலம்

சுண்ணும்பை சூளைபோட்டுக் கொளுத்துமிடத்தில் மேற்படி மூளைக்கு மையைத்தடவிப் புதைத்துவிட்டால் கொஞ்சமேனும் சுண்ணும்பு வேகாது.

725. சாதம்வேகாத ஜாலம்

சாதம் சமைக்கும் அடுப்பில் எட்டிமூளைக்கு மையைத்தடவி மந்திரஞ் செபித்து புதைத்துவிட்டால் எவ்வளவு கட்டையைப்போட்டுக் கொளுத்தினாலும் சாதம் கிஞ்சிற்றேனும் வேகாது.

726. வேறு

அத்திக்கட்டையைக்கொளுத்தி கழுதைமூத்திரம் நாய்மூத்திரம் விட்டவித்து அக்கரியை அடுப்பில்போட்டுவைத்தால் சாதம் வேகாது.

727. வேறு

ஆவாறைப்பஞ்சாங்கத்தைக் கொளுத்தி அதைஎருதுமூத்திரம்விட்டவித்து அக்கரியைக்கொண்டுபோய் அடுப்பில்போட்டுவைத்தால் அவ்வடுப்பில் எந்தவஸ்துக்களும் வேகாது.

728. வெள்ளாய்வேகாத ஜாதம்

வண்ணனுடைய வெள்ளாயில் மேற்படி மூளையைப் புதைத்துவிட்டால் வெள்ளாயானது எவ்விதத்திலும் வேகாது.

729. கொல்லன் உலை வேகாத ஜாலம்.

கொல்லன் உலையில் மேற்படி மூளைக்கு மையைத் தடவிப் புதைத்துவிட்டால் அவன் எவ்வளவு பிரயாசைப்பட்டு கரியைப்போட்டு ஊதினாலும் இரும்பானது தீபிடித்து வேகாது.

730. சூளைவேகாத ஜாலம்.

செங்கல்லுகளை அடுக்கிச் சூளைபோடுமிடத்தில் எட்டிமூளைக்கு மை மையைத்தடவிக் கொண்டுபோய் புதைத்துவிட்டால் அச்சூளை கொஞ்சமேனும் வேகாது சூளையிலுள்ளதை எடுத்துவிட்டு கோமயங்கொண்டு சுத்தஞ் செய்து மறுபடியும் வேறுகட்டைகளைப்போட்டுக் கொளுத்தினல் வேகும்.

731. கடைகளில் வியாபாரமில்லாத ஜாலம்

வியாபாரமாகுங்கடைகளில் மேற்படி எட்டிமூளைக்கு மையைத்தடவிப் புதைத்துவிட்டால் அக்கடையில் கொஞ்சமேனும் வியாபாரமாகாது முதலாவது போணியில்லாமலேயே யிருக்கும்.

732. வீடுபாழாகும் ஜாலம்.

நன்முக வாழும்படியான வீடுகளில் மேற்படி எட்டிமூளைக்கு மையைத் தவி அவ்வீட்டு வாயற்படியில் புதைத்துவைக்கும்பக்ஷத்தில் அவ்வீடானது சிலநாளைக்குள் பாழாய்விடும்.

733 சண்டைகள் நடக்கு ஜாலம்.

எட்டிமூளைக்கு மையைத்தடவி அதின்மேல் கரிசீலையைச்சுற்றி வீட்டிறப்பில் சொருகி வைத்துவிட அவ்வீட்டில் என்னேரமும் விடாது சண்டை நடந்துகொண்டேயிருக்கும்.

734. பயிர்கள் சாவியாகப்போகும் ஜாலம்.

நன்ருக விளையும்பயிர்களில் எட்டிமுளையைக் கூருகச்சீவி அதற்கு மையைத்தடவி புதைத்துவிட்டால் அப்புலம் பாழாகப்போகுமேயன்றி பலிதமாகாது

735 தோட்டங்கள் பாழாய்ப்போகும் ஜாலம்.

பலவித கனிகள் பலிதமாகும் தோட்டங்களில் எட்டிமுளையைக் கூருகச்சீவி மையைத்தடவி நான்குபக்கங்களிலும் புதைத்துவைத்துவிட்டால் அத்தோட்டத்தில் எவ்விதகாய்கனிகளும் பலிதமாகாது.

736. எதிரிநாசமாகும் ஜாலம்

எட்டிமுளையைக் கூருகச்சீவி மையைத்தடவி எடுத்துக்கொண்டுபோய் எதிரியின்மலத்தில் அழுத்திவைத்து வந்துவிட அவனுக்கு மலசலங்களடைத்து பாதைப்படுவான்.

737. கண்ணுடிமெல்லும் ஜாலம்

அக்கிராகாரத்தை வாயிலிட்டு நன்ருகமென்று வாயெல்லாம் படும்படி குதப்பி தாடையிலடக்கிக்கொண்டு கண்ணுடித்துண்டுகளை கூச்சமில்லாது முருக்கைப்போல மென்று துப்பிவிடலாம் பல்கூசாது வாயறுக்காது.

738. சங்கிலியுருவுஞ் ஜாலம்.

கற்ருழைச்சோற்றை சிறிய துண்டுகளாக அறுத்து எரண்டத்தெண்ணெயில் போட்டு பிசைந்து வைத்துக்கொண்டு பிறகு ஓர் சங்கிலியை உலக்கடத்தில் நன்ருகச் சிவப்பேறும்படியாக வைத்து அதை குரடாவினுல் தூக்கிப்பிடித்துக்கொண்டு முன் கலக்கின எண்ணெயில் கையை தோய்த்து சங்கிலியைப்பிடித்து உருவ சங்கிலி எரியுமேயொழிய கைசுடாது பார்ப்பவர்களும் உனக்கு அக்கினிதேவன் வசியமென்று சொல்லிக்கொள்வார்கள்.

739. ஜலத்தைக்கட்டும் ஜாலம்.

நறுவிலிப்பழத்தை நன்ருகப்பிசைந்து ஓர் புதுதோண்டியின் உட்புறமெல்லாம் தளும்பப்பூசி காயவைத்து பிறகு அத்தோண்டியின் நிறைய ஜலத்தைமொண்டு மேலே தூக்கிக்கட்டிவிட்டு ஓட்டையெல்லாம் மெள்ள உடைத்துவிட ஜலமாத்திரம் அப்படியே நிற்கும் பார்ப்பவர்களும் உனக்கு கங்காபவானி வசியமென்று சொல்லுவார்கள்.

740. சில்லிக்குடத்தில் ஜலம் நிற்கும் ஜாலம்.

ஓர் மண்குடத்தை எழுத்தாணியால் துவாரஞ்செய்து துத்தியிலையையும் நறுவிலிப்பழத்தையும் சேர்த்து ஒன்றிரண்டுமாயரைத்து குடத்திற்குள் பூசி ஆறினபிறகு அதில் தண்ணீர் மொள்ள கொஞ்சமேனும் கீழேவிழாது.

741. குடம் ஜலம்மோவ்ளாத ஜாலம்

ஓர் மண்பாண்டத்தின் அடியில் தவளைநெய்யும் கற்ருழைச்சோற்றையும் கலந்து பூசிக்காயவைத்து பிறகு அதை கயற்றைக்கட்டி கிணற்றில் போட்டால் கொஞ்சமேனும் ஜலத்தைமொள்ளாது பார்ப்பவர்கள் இது ஏதோ விபரீதமென்று சொல்லுவார்கள்.

742. சத்துருக்கள் வணங்கும் ஜாலம்

பொற்றலைக்கையான் வெள்ளெருக்கு விஷ்ணுகிரந்தி இம்மூன்று

வேரையும் சமயெடையாக எடுத்து உலர்த்திப் பொடியாக்கி வெள்ளைத் துணியில் திரிதிரித்து அகலில்போட்டு காராவின் நெய்யூற்றி விளக்கேற்றி மையை ஓர் செப்புத்தகட்டில் பிடித்து வழித்து வைத்துக்கொண்டு திலர்தமிட்டுச்செல்ல, எவ்வளவு பகையாளியாயிருந்தாலும் வணங்கிவருவார்கள்.

743. இதுவுமது.

கிண்ணுசிணுங்கி செவ்வகத்தி சுழலாவாரை முல்லை கொழுந்தெட்டு கூத்தன்குதம்பை இவைகளையெல்லாம் சமூலமுங்கொண்டுவந்து பன்னீர்விட்டரைத்து சார்பிழிந்து அச்சாற்றைப் புதுசட்டிக்குத் தடவிக் காயவைத்து அதின்மேல் காராவின் நெய்தடவி கற்பூரப்புகை பிடித்து வழித்து வைத்துக்கொண்டு திலர்தமிட பகையாளிகளெல்லாம் வசமாவார்கள்.

744. நரசிங்கவசிய ஜாலம்

ஓம் சிங்கமுகவா ஓம் ஐம் பேய்பிசாசுகள் பொடிபட்டோட நரசிங்க ராஜா ஆணை ஐம் கிலீம் சுவஹா யென்று லக்ஷத்தியெட்டுரு கொடுத்து அன்னதானஞ்செய்தால் சித்தியாகும் பிறகு பஞ்சலோகத் தகட்டில் சக்கரங்கீறி எழுத்தை மாறி பூசையில்வைத்து பூசித்துக் குளிசமாடி கட்டிக்கொண்டால் நினைத்த காரியங்கள் கைகூடும்.

745. இதுவுமது.

முன்சொன்னமந்திரத்தைப் பனையோலையில் எழுதி உருசெபித்து துஷ்டமிருகங்கள் வாசஞ்செய்யும்படியான காட்டின்முகப்பில் வைத்துவிட்டால் அம்மிருகங்களெல்லாம் அக்காட்டிவில்லாது ஓடிப்போகும்.

746. இதுவுமது.

முன்மந்திரத்தைச் செப்புத்தகட்டிலெழுதி பூசையில்வைத்து உருகொடுத்துக் குளிசமாடி வைத்துக்கொண்டால் பேய்பிசாசுகளெல்லாம் உன்னைக்கண்டதும் அலறியோடும்.

747. இதுவுமது

செபுப்த்தகட்டில் மந்திரத்தை யெழுதி பூசித்துக் குளிசமாடி தானதர்மங்களைச் செய்து கட்டிக்கொண்டால் வியாபாரவசியமாகும்.

748. இதுவுமது

மேற்படி மந்திரத்தை காரீயத்தகட்டில் வரைந்து பூசையில்வைத்துப் பூசித்துக் கட்டிக்கொண்டால் ஸ்திரீவசியமுடன் சகலவசியங்களும் கைகூடும்.

749. இதுவுமது.

மேற்படிமந்திரத்தை செப்புத்தகட்டிலெழுதி பூசித்து தானதர்மங்கள் செய்து குளிசமாடி கட்டிக்கொண்டால் சகல வழக்குகளும் வெல்லும்.

750. வசிய மை.

செம்பருந்தைப்பிடித்து அதன் பிச்சை யெடுத்துக்கொண்டு நெல்லிக்காய்கெந்தகம் பெருங்காயம் நத்தைச்சூரிவேர் இம்மூன்றும் சமயெடையாக வைத்து டப்பியில் வைத்துக்கொண்டு தேவையானபோது இஷ்டமுள்ளவர்களின் கையில்தடவ அவர்கள் வசியமாவார்கள்.

751. கூழாங்கல்லுமாயமாகும் ஜாலம்

கொஞ்சம் கூழாங்கற்களையெடுத்து சபையிலுள்ளவர்களுக்குக்காண்பித்து இதைமாயமாகப் போகச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி அதின் பேரில் கொஞ்சம் கண்கட்டுமையைத்தடவி கூடையைப்போட்டு மூடிச்சற்றுநேரம்பொருத்து திறந்துகாண்பிக்க மாயமாயிருக்கும் எல்லோரும் அதிக ஆச்சரியப் படுவார்கள்.

752. மணிபர்ஸ்மாயமாகும் ஜாலம்

சபையிலுள்ளவர்களிடத்தில் யாரிடத்திலேனும் ஓர்மணிபர்ஸ்வாங்கி இது மாயமாகப்போகும் வேடிக்கையைப்பாருங்களென்று சொல்லி கொஞ்சங் கண்கட்டுமையைத் தடவிக் கூடையைப்போட்டு மூடி சற்றுநேரம் பொருத்து திறந்துபார்க்க மாயமாயிருக்கும்.

753. கெடியாரம்மாயமாகும் ஜாலம்

சபையிலுள்ள சனங்களிடத்தில் ஓர் கெடியாரத்தைக் கேட்டுவாங்கி அதை அனைவர்களுக்குங்காட்டிநான் இதை மாயமாய்ப்போகச்செய்கிறேன் பாருங்களென்றுசொல்லி கொஞ்சம் கண்கட்டுமையை அதின்பேரில் தடவி திறந்துக்காண்பிக்க மாயமாயிருக்கும்.

754. கைகுட்டை மாயமாகும் ஜாலம்

ஓர்கைகுட்டையை சபையிலுள்ளவர்களிடத்தில்வாங்கி இதுமாயமாய்ப் போகும் வேடிக்கையைப் பாருங்களென்றுசொல்லி கண்கட்டுமையைத்தடவிக் கூடையைப்போட்டு மூடி குட்டிச்சாத்தானை நினைத்துத்திறந்துக்காண்பிக்க கைகுட்டை மாயமாயிருக்கும்.

755. கத்திமாயமாகும் ஜாலம்

யாரிடத்திலேனும் ஓர்பேனாகத்தியைக் கேட்டுவாங்கி அனைவருக்குங் காட்டி இக்கத்திமாயமாகும் வேடிக்கையைப் பாருங்களென்று சொல்லி கொஞ்சம் கண்கட்டு மையைத்தடவிகூடையைப்போட்டு மூடிதிறந்துகாண்பிக்க கத்திமாயமாயிருக்கும் பார்ப்பவர்களெல்லாம் ஆச்சரியப்படுவார்கள்.

756. பென்சல் மாயமாகும் ஜாலம்

ஓர் பென்சலையெடுத்து அதனையாவருக்குங்காண்பித்து இதுமாயமாகும் விநோதத்தைப் பாருங்கள் என்றுசொல்லி கண்கட்டு மையைத்தடவி கூடையைப்போட்டு மூடிதிறந்துகாண்பிக்கயாவர்கண்களுக்கும் மாயமாயிருக்கும்.

757. கேச்சக்காய்மாயமாகும் ஜாலம்

கொஞ்சம் கெச்சக்காய்களை எடுத்து எல்லோருக்குங் காண்பித்து இது மாயமாகும் வேடிக்கையைப் பாருங்களென்றுசொல்லி கண்கட்டு மையைத் தடவி மூடித்திறந்து காண்பிக்க எல்லாருடைய கண்களுக்கும் மாயமாயிருக்கும்.

758. பொடிடப்பிமாயமாகும் ஜாலம்

சபையிலிருக்கப்பட்டவர்களிடத்தில் ஓர் பொடிடப்பிவாங்கி அனைவர்களுக்குங்காட்டி இதைமாயமாகப் போகச்செய்கிறேன் பாருங்களென்று சொல்லி கண்கட்டு மையைத் தடவி கூடையைப்போட்டு மூடிதிறந்து பார்க்க மாயமாயிருக்கும் எல்லோரும் உன்னை மகா மந்திரவாதியென்று சொல்லுவார்கள்.

759. பூதவசிய ஜாலம்

ஓர் தட்டில் விபூதியைப்போட்டு அவ்விபூதியின்மேல் ஓம் ஸ்ரீம் ரீம் ஓம் ரீம் சுவஹாவென்று ஆயிரத்தி யெட்டுருசெபித்து அவ்விபூதியை இட்டுக் கொள்ள சகல பூதங்களும் வசியமாகும்.

760. வராசிவசிய ஜாலம்

தருநாயின் விலாவெலும்பு காக்கைநரம்பு சுடலைக்கரு ஐங் கோலம் இவைகளையெல்லாம் ஒன்ருய்ச் சேர்த்து அரைத்து நாணத்திற்பூசி ஓம் ரீங் கங் சங் ஐயும் ரீம் ரங் லா லீ லூ மங் சிங் சிவயநம என்று லக்ஷமுருசெபித்து பூசை பலி முதலியன செய்து எதிரியின்பேரைத் தியானிக்க எதிரிமாரணமாவான்.

761. இதுவுமது

ஒருமண்டலம் வரையில் அர்த்தி சந்திகளில் சத்திபூசையுடன் ஐயும் கிலியும் சுவாஹாவென்று லக்ஷத்தியெட்டு உருசெபித்தால்வராகியானவள் வசியமாவாள் அதன் பிறகு இவ்வுலகமெல்லாம் வசியமாகி நீகேட்டதைக்கொடுப்பார்கள்.

762. இதுவுமது

மேற்படி பூசையைச் செய்துக்கொண்டே நரிபாலில் அரிசியைக்கலந்து சுடலைக் கருசேர்த்து நிழலிலுலர்த்தி அதை அன்னஞ்சமைத்துப்பகைவனுக்கிட்டால் அவனுக்குப் பைத்தியம் பிடிக்கும் பிறகு அவன் வணங்கி வந்தால் மிளகு தக்காளிச்சாரை ஆறுவேளைக்கொடுத்து ஏழாவது நாள் ஸ்நானஞ்செய்து வைக்கச் சுகமாகும்.

763. பேயாகும் ஜாலம்

பேய்பிடித்தவர்களை குளிப்பாட்டிக்குந்தவைத்து ஓர் தட்டில் விபூதியைப்போட்டு அதில் யங் சிங் வய நமவென்று செபித்தால் எவ்வளவு பேயாயிருந்தாலும் விலகிப்போய்விடும்.

764. நீலகண்ட ஜாலம்

ஓம் நீலகண்ட மித்திரா மங் சிங் சர்வமனோகண்டா உம் மடு சுவாஹா லக்ஷத்தியெட்டுரு செபித்து தர்ப்பண முதலிய தான தர்மங்களைச்செய்து நூறு பிராமணர்களுக்கு அன்னதானஞ்செய்துப் பூசித்தால் மந்திரமானது சித்தியாகும்.

765. இதுவுமது

சுவாமியைத் தங்கநிறமாகயெண்ணி மனதிலேயே எண்கோணம் போட்டுப் பூசித்தால் சகல நன்மைகளு முண்டாகும்.

766. இதுவுமது

சுவாமியை வெண்ணிறமாகயெண்ணி விபூதியில் வட்டமாகக்கீறி ஆயிரத்தெட்டுருசெபித்து அவ்விபூதியை யாருக்குக் கொடுக்கின்ருயோ அவர்களெல்லாம் வசியமாவார்கள்.

767. இதுவுமது

சுவாமியைச் சிகப்புநிறமாக மனதில் நினைத்து விபூதியில் முக்கோணம் போட்டு கிலியும் ரோம் என்று ஆயிரத்தெட்டுரு கொடுத்து விபூதியை அணி

ந்துக்கொள்ள சலபேர்களும் வசியமாவார்கள் அவ்விபூதியை யாருக்கு கொடுக்கின்றாயோ அவர்களும் வணங்கி வருவார்கள்.

768. இதுவுமது

சுவாமியைப் பளிங்கு நிறமாக மனதிலெண்ணி பிறைபோல் சக்கரங்கீறி ஆயிரத்தெட்டுரு கொடுத்து விபூதியை அணிந்துக்கொண்டால் சகல போக பாக்கியங்களும் கிடைக்கும்.

769. இதுவுமது

சுவாமியை மேகநிறமாக மனதிலெண்ணி நாற்கோணங்கீறி அதில் ஓம் ரம் ரோம் என்று நாட்டி தென்ன ஓலையில் எதிரியின் பேரை வரைந்து ஆயிரத்தெட்டுருகொடுத்து அதையெடுத்துக்கொண்டுபோய் எதிரியின் வீட்டிரப்பில்வைக்க அவர்களைப்பிரித்துவிடும்.

770. இதுவுமது

சுவாமியைப்புகை நிறமாகயெண்ணி ஐங்கோணங்கீறி அதில் யம் ரோம் என்றெழுதி ஆயிரத்தெட்டுருகொடுத்து விபூதியையெடுத்துப்போட்டவுடன் சகலபேய்களும் விலகிவிடும்.

771. இதுவுமது

சுவாமியைப் பிரளயகால ருத்திரனைத் தியானஞ்செய்து முக்கோண சக்கரங்கீறி அதில் ரோம் என்று நாட்டி விரோதியின்பெயரை ஓலையில் யெழுதி தணல்காட்ட சகலமும் மாரணமாய்ப்போகும்.

772. இதுவுமது

சுவாமியைக் கருப்பு நிறமாகயெண்ணி முக்கோணங்கீறி பம் என்று அதில் ஸ்தாபித்து ஆயிரத்தெட்டுரு கொடுத்து விபூதியை அணிந்துக்கொள்ள சகலரும் பேதனமாகும்.

773. நீலகண்ட மந்திரம்

ஐயும் நமோ பகவதே ஓம் மகாரூபி மகாமாயி மருத்துவசத்தி சர்வதாரணி சுவஹாவென்று லக்ஷமுரு செபித்து சோடசோப சாரத்துடன் பணிந்து அன்னதானமுதலியவைகளைச் செய்தால் சகல காரியங்களும் சித்தியாகும்.

774. ஆடை அவிழ்க்கும் ஜாலம்

புடலம் விதையை மங்களவாரம் பூமியில் நட்டு ஒருமுழக்கொடியாக வளர்ந்த பிறகு மேற்படி வாரத்திலேயே காப்புகட்டி அடுத்த மங்களவாரம் வரை பூஜைசெய்து வோராமல் எடுத்துக்கொண்டு குளிசத்தி லடைத்துக் கையில் போட்டுத்திருப்ப ஆடை அவிழ்ந்துவிடும்.

775. செம்புஜலத்தை கவிழ்க்கும் ஜாலம்

சிறியவாயுள்ள ஒருசெம்பு நிறைய ஜலத்தை நிரப்பி சல்லாத்துணியை மேல்போட்டு மூடி தலைகீழாகக் கவிழ்க்க ஜலம் கீழேவிழாது.

776. காகங்கள்மயங்கும் ஜாலம்

கல்தாரத்தைப்பொடித்து நெய்விட்டரைத்து அன்னத்துடன் கலந்து பிசைந்து காகத்திற்கு தின்னவைக்க தின்றதும் காகமானது மயக்கமாகி விழுந்துவிடும்.

777. சீசா ஓடுகளைமெல்லு ஜாலம்

கொஞ்சம் அக்கிராகாரத்தை வாயில்போட்டு மென்று அடக்கிக்கொண்டு சீசாவோடுகளைமெல்ல அது முருக்கைப்போல் மாவாகிவிடும்.

778. சங்கிலியுருவுஞ் ஜாலம்

கற்றாழைச் சோற்றை விளக்கெண்ணெயில் கலந்து கைகளில் பூசிக்கொண்டு காய்ந்த சங்கிலியை யுருவகைகள் சுடாது.

779. சகலவசியங்களுக்கும் போதுமந்திரம்

ஓம் ஆம் ஜெய ஜெய வா வா அவ்வும் உவ்வும் வசிய வசிய சுவஹாவென்று ஆயிரத்தெட்டுரு செபிக்க சகல வசியங்களும் விரைவில் சித்தியாகும்.

780. கதவில் ஊசிநிற்கும் ஜாலம்

ஒரு ஊசியில் முழம் நூலக்கோர்த்து கதவிற்கு சற்றுதூரத்தில்நின்று எரிய ஊசியானது கதவில் ஒட்டிக்கொள்ளும் நூல்கோர்க்காமல்போட்டால் தைக்காமல் கீழே விழுந்து விடும்.

781 அவித்தநண்டு ஓடும் ஜாலம்

நண்டுகளைப் பிடித்து பாத்திரத்தில் போட்டு மஞ்சள் மஜிண்டா பௌடரைப்போட்டு ஜலம் சிறுகவிட்டு வைத்திருந்து பிறகு எடுத்து விட ஓடும்.

782. கடலைக்கோட்டை கசக்கும்வித்தை

கடலைக்கொட்டையை ஓர் தட்டில்போட்டு ஒருபக்கமாக தள்ளிக்கொண்டு மற்றொருபக்கம் வேப்பம் பருப்பைப்போட்டு சபையில் கொண்டுவந்து ஒருவருக்கு மணிலாக்கொட்டையும் ஒருவருக்கு வேப்பங்கொட்டையுங்கொடுக்க ஒருவர் கசக்குதென்றும் ஒருவர் இனிக்குதென்றும் சொல்லிக்கொள்வார்கள்.

783. ரூபாய்நகராத ஜாலம்

கொஞ்சம் கற்பூரத்தைக் கொளுத்தி தரையில்வைத்து அதின்மேபரில் கொஞ்சம் படிகாரத்தூளை தூவி ஓர் ரூபாயை வைத்தால் அது கெட்டியாக பிடித்துக்கொள்ளும் எவ்விதம் எடுத்தாலும் வராது கையில் கொஞ்சம்ஜலத்தைத் தொட்டுக்கொண்டு ஈரக்கையுடன் எடுத்தால் வந்து விடும்.

784. நாய்க்கடி மீளும் ஜாலம்

வெள்ளைக் கம்பளியைப்பஞ்சுபோல் நறுக்கி நல்லவெல்லத்தினுள் ஓர் சிட்டிகை வைத்து நசிமசி என்ற மந்திரத்தை நூற்றியெட்டு விசைசெபித்து வாயில்போட நாயின் விஷந்தீரும்.

785. மயிர் உதிரும் ஜாலம்

மயிர்கள் உதிரவேண்டுமாயின் தாளகத்தையும் சுண்ணாம்பையும் சமமாகயெடுத்து அரைத்து உரோமங்கள் போகவேண்டிய இடத்தில் தடவிபடுத்துக்கொள்ளவும் காலையிலெழுந்து வெந்நீர்விட்டுக் கழுவிவி உதிர்ந்துவிடும்.

786. இந்திரியக்கட்டு வித்தை

கரும்பூனையின் வலது விலாவெலும்பை யெடுத்து துளைசெய்து அதை

அரைஞாண் கயற்றிற் கட்டிக்கொண்டு மின் பக்கந்தள்ள இந்திரியம்விழாது பின்பக்கந்தள்ள இந்திரியம்விழும்.

787. நெருப்பில்லாமல்வைக்கோல் எரியும் ஜாலம்

நீர்மேல் நெருப்பையுலர்த்தி வஸ்திரகாயஞ்செய்து வாயில்போட்டு தாடையில் அடக்கிக்கொண்டு காற்றுவாட்டமாய் வைக்கோலின்பேரில் துப்ப குபீலென்று பற்றியெறியும்.

788. எழுத்துகள்மறையும் ஜாலம்

இங்கியில் எழுதிய எழுத்துகள் மறையவேண்டுமாகில் எழுதியவுடன் அதின்பேரில் கொஞ்சம் படிகாரத்தூளைப்படும்படி போட்டுவிட்டு ஐந்தாறு நாள் சென்றபிறகு பார்க்க அவ்வெழுத்துகள் ஒன்றும்தெரியாது.

789. மூலிகை ஜாலம்

ஏரழிஞ்சியின் விரையைக் கற்பூரத்தோடுசேர்த்து அரைத்துப் பீங்கானில் வைத்து சூரியரசிபடும்படிவைக்க அதிலிருந்து தைலமிறங்கும் அதையெடுத்து டப்பியில் வைத்துக்கொண்டு தேவையானபோது திலர்தமிட்டுச் செல்ல சகலகாரியங்களும் கைகூடும்.

790. இதுவுமது

வெள்ளைச் சார்வேளையை அவுரிச் சாற்றிலரைத்து புதுசட்டிக்குத்தடவி கற்பூரத்தைக்கொளுத்தி மைபிடித்து சிமிளில்வைத்துக்கொண்டு திலர்தமிட்டுச்செல்ல சகல காரியங்களும் கைகூடும் பகையாளிகளும் வணங்குவார்கள்.

791. பஞ்சபூதமை

வல்லூறுகண் செம்போத்துகண் தேவாங்குகண் கருங்குருவிகள் பிச்சுஆந்தைக்கண் இவைகளையெல்லாம் வெய்யலிலுலர்த்தி கல்வத்தில் வைத்தரைத்து அதனுடன் கஸ்தூரி புனுகு பச்சைகற்பூரம் கோரோசனை குங்குமப்பூ இவைகளைச்சேர்த்து ஐங்கோலத் தைலம்விட்டரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு சிம் நம் வம் டு டு டு டா டா டா என்ற மந்திரத்தை லட்ச முருசெபித்து வைத்துக்கொண்டால் சகலவசியங்களும் கைகூடும்.

792 ஏரழிஞ்சிமை

ஏரழிஞ்சியைக் குழித்தைலம் வாங்கிச் சிமிளில் வைத்துக்கொண்டு முப்பூ சுன்னம் ஒருகளஞ்சு போட்டுக்கலக்கி வைத்துக்கொண்டால் சகலஜால வித்தைகளில் விளையாடலாம்.

793. இந்திரகோபமை

நாலுதுலாம் இந்திர கோபப்பூச்சியை செந்தியில் கறுக்கிக்கொண்டு அதில் சவ்வாது கஸ்தூரி புனுகு பச்சைக்கற்பூரம் இவைகளைச்சேர்த்து ஐங்கோலத் தைலம்விட்டரைத்து சிமிளில் வைத்துக்கொண்டு ரிங் ரிங் ஓம் சிவய என்று லக்ஷமுருசெபித்து திலர்தமிட்டுச்செல்ல சகலகாரியங்களும் சித்தியாகும்.

794. கேசரிமை

பெண்கழுதையின் வாயில் பாஷாணம் முப்பத்திரண்டையும் போட்டுக் குழித்தைலம்வாங்கி அதில் கோரோசனை கஸ்தூரி குங்குமப்பூ சவ்வாது பு

னுகு இவைகளையெல்லாஞ்சேர்த்து மைபோலரைத்துச் சிமிளில் வைத்துக் கொண்டால் அறுபத்து நான்கு சித்துக்களையும் விளையாடலாம்.

795. தீயணையும் ஜாலம்

நவாச்சாரத்தைத் தண்ணீர்விட்டரைத்து எரிகின்ற தீயின்பேரில் தெளிக்கத் தீ அணைந்துவிடும்.

796. சூரியனைப்பார்க்கும் ஜாலம்

கண்ணாடிப்பில்லையில் கற்பூரப்புகைபிடித்துக்கொண்டு சூரியனைப்பார்க்க சூரியக்கிரணங்கள் நன்றாகத்தெரியும்.

797. நெருப்பின்பேரில்நடக்கும் ஜாலம்

தாளிசமூலம் கொத்தான்சமூலம் இவைகளிரண்டையும் சமமாக வெடுத்து அரைத்துக் கால்களில் தடவிக்கொண்டு நெருப்பின்பேரில் நடக்கக் கால்கள்சுடாது.

798. இதுவுமது

மறுக்காரைப்பூவும் உப்பும் சமமாகக்கலந்து காராவின்பால் விட்டரைத்து உள்ளங்கால்களில் தடவிக்கொண்டு நெருப்பின்பேரில் நடக்கக் கால்கள் சுடாது.

799. நாய்கள்கடிக்காத ஜாலம்

முதலைப்பல் அரிதாரம் இவ்விரண்டையும் ஒன்றாய்ச்சேர்த்து துணியில் முடிந்து மேலேபோட்டுக்கொண்டு எந்த நேரத்தில் எவ்விடஞ் சென்றாலும் நாய்கள் கடிக்காது.

800. முட்டைபறக்கும் ஜாலம்

சவுக்காரத்தைக்கரைத்து கிண்ணத்தில் வைத்துக்கொண்டு அதில் சுட பலைத்தோய்த்து ஊத அதிலிருந்து முட்டைகள் வெகு தமாஷாக பறக்கும்.

801. வெண்ணெய் உற்பத்தியாகும் ஜாலம்

கறந்தபாலில் நெய்யைச்சேர்த்துக் காய்ச்சிப்புரைகுத்தி அதை மறுநாள் கடையும் பக்ஷத்தில் வெண்ணெயானது விசேஷமாகவரும்.

802. மயிர்கறுக்குஞ் ஜாலம்

மாசிக்காயைச்சுட்டு அதற்குச்சமன் தாசனுப் பொடியைச்சேர்த்து அரைத்து வைத்துக்கொண்டு மயிரைநன்றாகச் சோப்பினால் கழுவிவிட்டு இதைப்பூச மயிர்கள் கறுத்துவிடும்.

803. புட்டியில்தீபங்காட்டும் ஜாலம்

ஓர்வெள்ளைப் புட்டியில் தண்ணீரையூற்றி அதில் பயிரளவு திமுறுகல் பாஷாணத்தைப்போட்டு ஆளிவிரையெண்ணெயைக் காய்ச்சிவிட்டு கார்க்குப் பிகிந்துவிட்டால் அப்புட்டிக்குள் தீபமானது பிரகாசிக்கும் கார்க்கைத் திறந்தால் ஒன்றுமிராது.

804. புட்டியில்புஷ்பங்காட்டும் ஜாலம்

முன்போல் புட்டியில் தண்ணீரையூற்றி சுகர்லட்கொஞ்சம் போட்டு துத்தநாகக் கம்பியைக் கயிர்கட்டிவிட்டுவைத்து கார்க்குமூடி நாலைந்துநாள் சென்றுபார்க்க புட்டிக்குள் புஷ்பமானது வெகு தமாஷாகயிருக்கும்.

805. தண்ணீரில் பாணவேடிக்கைகாட்டும் ஜாலம்.

ஒருகோப்பையில் ஜலம்வார்த்து மிபாஸ்ஃபைட் ஆப்லைன் என்னும் மருந்தைக்கொஞ்சம் போட்டால் அதிலிருந்து புதைபாணங்கிளம்புவது ஆச்சரியமாயிருக்கும்.

806. வியாதியுண்டாகும் ஜாலம்

இந்திரகோபப்பூச்சி மாடப்புறாமுட்டை வல்லூறின்விந்து கருவு இவைகளைச்சேர்த்து காளிக்குப் பூசைசெய்து எதிரியின் வீட்டில் வைக்க எதிரியானவன் பலவித வியாதியால் வருந்தி அலைவான்.

807. உருவைமாற்றும் ஜாலம்

வாகைப்பிசின் அத்திவிரை வாழை ரசம் கரும்பூனைபீசம் இதுகளையெல்லாம் ஒன்றாக அரைத்து சத்திக்குப் பூசை செய்து ஒருகுளிகை வாயில் போட்டுக் கொண்டால் பார்ப்பவர்களின் கண்களுக்குப் பூனைமாதிரிகாணப்படுவாய்,

808. சத்துருவைஜெயிக்கும் ஜாலம்

சுடலைக் கருவினால் கோழிமுட்டையின்பேரில் எதிரியின் உருவையெழுதி காளியைத் தியானித்து அவன் வாயற்படியில் புதைத்து வைத்தால் எதிரியானவன் வணங்கி வருவான்.

809. கண்நோய்போகும் ஜாலம்

பசுவின்பாலில் ஆவாரந்தழையைப்போட்டுக்காய்ச்சி அப்புகையை கண்ணுக்கு ஆவிபிடிக்க கண்சிகப்பு நேத்திரவாரி மேகச்சூடு முதலியவைகள் தீரும்.

810. பிரமி மை

செம்புத்தட்டைகவிழ்த்து அதின்பேரில் பசு வெண்ணெய் 1-பலம் போட்டு இழைத்து அதின்பேரில் பிரமியிலையைக் கசக்கிப்பிழிந்து ஒருசாமம் இழைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு கண்களுக்குத் தீட்டினால் கண் படலம் புழுவெட்டு சலமுட்டி குடைச்சல்முதலியவைகள் தீரும் பத்திய மிருக்க வேண்டும்.

811. பொன்னாங்கண்ணி மை

பொன்னாங்காணி ரசம் கம்மாறுவெற்றிலைச்சார் இவைகளைச் சமன்கூட்டி கற்கண்டு போட்டரைத்துச் சிமிளில் வைத்துக்கொண்டு இரண்டுவேளையும் நாற்பதுநாள் கண்ணில்தீட்டிவர சூடு குத்தல் சூலை புகைச்சல் முதலியவைகள் தீரும்.

812. மாலைக்கண்ணுக்கு

அழிஞ்சிக்கொட்டையுள்ளிருக்கும் பருப்பை முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிட்டுக் கொண்டுவர மாலைக்கண்ணு தீரும்.

813. வியாதிநீங்கும் ஜாலம்

நாய்பாலில் பாம்பின்ஊன் கடுகுஇவைகளைச் சமன்சேர்த்து மைபோலரைத்து காளியைத் தியானித்து திலர்தமிட சகல வியாதிகளும் நீங்கும்.

814. வசிய ஜாலம்

புல்லாமணக்கன் விரையை நெய்யில்வருத்து அதைமாதச் சீலையில் ந னைத்து அறுசுவையில் கொடுக்கப்புருஷ வசியமாம்.

815. ஆடுகள்மேயாத ஜாலம்

ஞாயிற்றுக்கிழமைமதினம் வீட்டில்வாழும்படியான மூஞ்சூர் ஒன்றைப் பிடித்து ஓடுகின்றதண்ணீரில் விட்டால் அது எதிர்நோக்கி ஓடும் அது சம யம் அதை ஒரேவெட்டில் இரண்டாக விழும்படிவெட்டி தலையை மாத்திரம் எடுத்துவந்து ஆடுகள் மந்தையாகயிருக்கும் இடத்தில் புதைத்துவிட்டால் அங்கிருக்கும் ஆடுகளெல்லாம் எழுந்து தழைமேயப்போகாது புதைத்ததை எடுத்துவிட்டால் தான் இரையெடுக்கும்.

816. விளக்குபார்க்கும் ஜாலம்

நிகளமாயுள்ள ஓர்மயிலிறகையெடுத்து அதன்கீழ் துவாரஞ்செய்துகொ ஞ்சம் பாதரசத்தைவிட்டு களிமண்ணால் மூடிபிறகு பட்டுக்கந்தையைமேலே சுற்றி நெய்யில் தோய்த்துக் கொளுத்திப்பார்க்க வெகு தமாஷாகயெரியும்.

817. வேறு கோழிமுட்டைவெடிக்கும் ஜாலம்

கோழிமுட்டையின் உள்ளிருக்கும் வெள்ளையம்பிலியை எடுத்துவிட்டு அதின் நிறைய தக்காளிச்சார் கற்சுண்ணும்பு நெல்லிக்காய் கெந்தகம் இம் மூன்றையும் தனித்தனியாக அரைத்து அதற்குமுன்போட்டுவைக்க சிறிது நேரத்திற்கெல்லாம் வெடி சத்தங் கிளம்பும்.

818. காதுநோய்போகும் ஜாலம்

திருநீற்றுப் பத்திரியைக் கசக்கிக் காதுநோயுள்ளவர்களுக்கு இரண்டு மூன்று துளிவிடக் குணமாகும்.

819. தண்ணீர் விழாத ஜாலம்

அரசமரத்து வடக்குவேர் மயிரோசனை நாறுகரந்தை வேர் கோரைக் கிழங்கு இந்நான்கையும் சமயெடையாகயெடுத்து புதுதோண்டிக்குள் பூசிக் காயவைத்துக் காய்ந்தபிறகு ஜலத்தை மொண்டுவந்து சபையில் கவிழ்த்தா ல் ஜலங்கீழே விழாது.

820. சத்துருக்கள் வசியம்

ஓம் ரீங் வசி வசி என்று ஆயிரத்தெட்டு உருகொடுத்து அவ்விபூதியை நெற்றியி விட்டுக்கொண்டுபோக சத்துருக்கள் வசியமாவார்கள்.

821. பீடைகள்விலக

ஓம் றீங் நசி நசி என்று ஆயிரத்தெட்டுருகொடுத்து அவ்விபூதியைநெற் றியிலிட்டுக்கொண்டு போக சகல பீடைகளும் விலகிவிடும்.

822. பாக்கிய முண்டாக

ஓம் றீங் சிவ வசியென்று நூற்றியெட்டுரு செபித்து விபூதியை நெற்றி யிலிட்டுக்கொள்ள சகலபாக்கியங்களும் கைகூடும்.

823 விஷங்கள்தீர

ஓம் றீங் சிவ வசியென்று ஆயிரத்தெட்டுரு செபித்து விபூதியைத்தரித் துக்கொண்டாலும் அல்லது விஷக்காலிகளுக்கு கடிவாயில் போட்டாலும் சகலவிஷங்களும் தீரும்.

824. மிருகங்கள் விலக

ஓம் றீங் அங் வங் என்று ஆயிரத்தெட்டுரு கொடுத்து விபூதியை அணிந்துக்கொள்ள துஷ்டமிருகங்களெல்லாம் விலகி ஓடும்..

825. நரசிங்கவசிய ஜாலம்

ஓம் ஓம் பிசாசு பேய் பொடிபட்டோட நரசிங்க ராஜா ஆணை ஸ்ரீம் கிலீம் சுவஹாவென்று லக்ஷத்தி யெட்டுரு செபிக்கச் சித்தியாகி நினைத்த காரியங்களெல்லாங் கைகூடும்.

826. இதுவுமது

மேற்படி மந்திரத்தை நறுக்கிலெழுதி நூற்றியெட்டு மந்திரஞ்செபித்து துஷ்டமிருகங்கள் வாசஞ்செய்யும் காட்டில் வைத்தால் அவைகளெல்லாம் விலகிவிடும்.

827. இதுவுமது

மேற்படி மந்திரத்தை செப்புதகட்டிலெழுதி ஆயிரத்தெட்டுருகொடுத்து காய்க்கும் மரங்களின் வேரில் புதைத்துவைத்தால் அம்மரங்காய்க்காது.

828. இதுவுமது

மேற்படி மந்திரத்தைஓலையிலெழுதிக் குளிசமாடிக் கட்டிக்கொண்டால் பேய்பிசாசுகளெல்லாம் விலகிவிடும்.

829. இதுவுமது

மேற்படி மந்திரத்தைப் பஞ்சலோகத் தகட்டிலெழுதிக்குளிசமாடி கட்டிக்கொண்டால் வியாபார வசியமாகும்.

830. சபையோர்களுக்குப் பன்னீர்தெளிக்கும் ஜாலம்

ஒரு பாத்திரத்தில் நல்லஜலத்தை யூற்றி சபையிலுள்ளவர்களுக்குக் காண்பிக்க அவர்கள் அதை சுத்த ஜலமென்று சொல்லுவார்கள். அதுசமயம் கொஞ்சம் ரோஜா அத்தரை நகக்கணுவில் வைத்திருந்து அச்சலத்தில் போட்டுக் கலக்கித்தெளிக்கப் பன்னீரைப்போல் வாசனையுண்டாகும்.

தேவேந்திரநாத்

மாயாஜால விநோதம்

இரண்டாம்பாகம்

முற்றிற்று.

ஜெர்மெனி அமெரிக்கா ஆங்கிலநாட்டார் அனுபவமுள்ள நூல்!

ரகசியநூல் வசியநூல் ஆத்மசக்தியுடைய அற்புதநூல்!

அபார விஷயமடங்கியகற்பகநூல்! விசித்திர செய்கைகள் அறியும்

சித்திரநூல்

ஹிப்னுடிஸ மெஸ்மெரிஸமெனும்

(வாய்வுவேக)

மனோவ்சிய சாஸ்திரம்.

மனதை அடக்குவது யோகசித்தி அடைவது நமது இஷ்டம்போல் நடத்துவது ஞானமார்க்கம் கொள்வது வெளிநாட்டில் நடப்பதை இந்நாட்டில் தெரிந்துகொள்வது.

இதை வாசித்துவந்தால் இறந்தகாலம் நிகழ் காலங்களில் நடக்கும் ஒவ்வொரு விஷயமும் அறிந்துக்கொள்ளவும் நமது முன்னோர்களுடன் பேசவும் பிறர் கண்களுக்கு தோற்றப்படாமல் மறைந்துக்கொள்ளவும், நித்திரை வருவித்தல் நோய்களை நீக்கும்வகை ஞானதிருஷ்டி நோக்கம், ஜீவ மின்சாரவிளக்கம், விரலைக்காட்டி தூங்கவைத்தல், தூக்கத்தில்நடக்கும் விநோதக் காக்ஷி இப்னுடிஸ வைத்தியம் கீல்வாய்வு சிகிச்சை, அபினிபழக்கத்தை நிறுத்தல் காந்த வைத்தியம் பிராணாயாம அப்பியாஸம் நீட்டியகையை முட[illegible]கா மல்படி முடக்கியகையை நீட்டாமல்படி மிருகாதிவசியம் அனேக[illegible] முறையில் தூங்கவைப்பது. தூக்கத்தினின்று எழுப்பும் வகைகள் [illegible]த்தழி பாய்தல், பாட்டுக்கச்சேரி, தூரத்திலிருப்பவர்களை வரவழைப்பது உயிர் பிராணிகளை வசியம் செய்தல், ஆஞ்சநேயர் மூலமந்திரமும் உபாசனையும் தரிசனமும், ஆத்மயோக மனோவசியம், ஏகாப்தநிலை கர்மாதி துற்குணங்களை போக்கல் பொதுஜென வஸ்யமுறை, மானிடவஸ்யம், யோகிகளின் திடசித்திமுறை வஸ்யதிருஷ்டி பலவகைகள் ஜெயம்பெறுவதற்கான முக்கியநாமங்கள் வஸ்யத்திற்கு இணங்காதிருக்குமுறை இன்னும் இதைப்போன்ற அனேக அதியற்புத விஷயங்கள் சேர்ந்துள்ளதும் பாமரர்முதல் படித்தமேதாவிகள் வரையில் வாசித்து தெரிந்துக்கொள்ள சுலபமான எளிய செந்தமிழ் நடையில் மணிமந்திராயுத வைத்தியசாலைத் தலைவரும் பூலோக வர்த்தமானி எடிடரும், அநேக நூல்களுக்கு கிரந்த கர்த்தரும் ககோளகிரந்த கனித சாஸ்திரரும், இயந்திர கணிதபரிசோதகரும், சென்னைவாசியும் மெஸ்மெரிஸ இப்னுடிஸ் பராக்கிரமசாலியும் சதாவதானம் செழுமணவை சித்திரக்கவி தேவேந்திரநாத பண்டிதரவர்களால் இயற்றப்பட்டதும் சுமார் 121 மர்ம விஷயங்களடங்கியதும் யாவத்திராளிடத்திலும் இயற்றப்பட்டதுமான வழங்கிய விசித்திர விநோதப்படங்களுடன். 1-க்கு விலை ரூபா 1 8 0

என்னை ஏன் விரும்புகிறார்கள்

என்று உங்களுக்குத் தெரியுமா ?

நான் வெளிவந்த இரண்டு மாதங்களுக் கெல்லாம் என்னுடைய முதற் (பிரவியாகிய) முதற்பதிப்பு முடிந்து இரண்டாம் பதிப்பிற்கு எதிர்ப்பார்க்கின்றது. முந்துவோர்க்கே முதற்பதிப்புக்கிட்டும். சிறியவர், சிறுமியர் கல்யாணமானவர் ஆகாதவர் விருத்தர் பாலர் பத்திரிக்கைக் காரர்களும், என்னைப்பார்த்து புகழ்கிறார்கள் என்றால் இன்னும் உங்களுக்கு வேறு அத்தாக்ஷி என்ன ! முற்காலத்திய பெரியோர்களும் இருடிகளும் தேவர்களும் திருவாய் மலர்ந்தருளிய அரிய பெரிய இல்லற இன்பரகஸ்யத்தை அகத்தடக்கி சதிபதிகளின் மர்மம் அல்லது மானிட ரகசிய சாஸ்திரம் என்று பெயர் பூண்டு சாதிபேதங்களுக்குத் தக்க படங்களமைந்து வெளி வந்தமையால்.

சதி பதிகளின் மர்மம் (அல்லது)

மானிட ரகசிய சாஸ்திரம்.

இதில் முக்கியமாய் வசந்தனுக்கும் சுலோசனாவுக்கும், வினாவிடை தர்க்கங்களாகவே பெண்களைச் சந்தோஷிக்கச் செய்யும் விதமும் சிசு உற்பத்தி நேர்மையும் சிசுவை கவனிக்கவேண்டிய ஏற்பாடும் உண்மையான ஜாதி பேதங்களும், அவைகளின் லட்சணங்களும், ஆண் பெண் இருவர்களும் இ[illegible]ருக்கும் விதங்களும், இன்ன ஸ்திரீயை இன்னவர் விவாகம் செய்யக்கூடும் என்ற விதமும் போகம் செய்யவேண்டிய நாளும், நாழிகையும், இன்னவிதமாக சுகிக்கவேண்டிய கிரமமும், ஆண் பெண் மலடு விவரங்களும், ருதுகாலங்களும், அவைகளின் பலாபலனகளும்மாதர்களுக்கு அமிர்த நிலை எந்தகாலங்களில் எவ்விடத்தில் இருக்கும் என்பதையும். அதை எவ்விதமாய் நிலைபெயர்க்க வேண்டுமென்பதையும் பிரகஸ்பதிபகவான தேவேந்திரனுக்கு அருளிச்செய்த உலோகாயுத சம்மதமுமான சிறப்புப்பொருந்திய விஷயங்கள் அமைந்துளது இன்னும் திரேகத்தை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்வதற்கும், பிணிமுதலியவைகளுக்கும உட்படாமல் நீடூழிகாலம் ஜீவித்திருபதற்கும், அகால சேர்க்கையால் வரும் கெடுதியும் இதைபோன்ற அரியபெரிய மர்மங்கள் நமது நூலில் இனிய செந்தமிழ் நடையில் வெகு தெளிவாயும் விமரிசையாயும பிரசுரித்திருக்கின்றனம. கண்களை கவரும் அழகிய சித்திரபடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வாங்கி வாசிப்போர்க்கே இதன் உண்மை விளங்கும். விலை ரூபா 1.

அஷ்ட பிரபந்தம் இதில் துறைவிளக்கமும், இலக்கண விதியும் அரும்பத உரையும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூபா-1.

9740

சதிபதிகளின் மர்மம் (அல்லது)

மானிடரகசிய சாஸ்திரம்.

இதில் வசந்தனுக்கும் சுலோசனுவுக்கும், விடை தர்க்கங்களாகவே பெண் சந்தோஷிக்கச்செய்யும் விதமும் சிசு உற்பத்தி நேர்மையும் சிசுவை கவனிக்க ண்டிய ஏற்பாடும் உண்மையான ஜாதிபேதங்களும், அவைகளின் லட்சணங்க ், ஆண் பெண் இருவர்களும் இன்புற்றிருக்கும் விதங்களும், இன்னஸ்திரீயை னவர் விவாகம் செய்யக்கூடும் என்றவிதமும் போகம் செய்ய வேண்டிய நாளும், நிலையும், இன்னவிதமாக சுகிக்கவேண்டிய சிரமமும், ஆண் பெண் மலடு விவரங் தும், ருது காலங்களும், அவைகளின் பலாபலன்களும் மாதர்களுக்கு அமிர்தநிலை த காலங்களில் எவ்விடத்தில் இருக்கும் என்பதையும். அதை எவ்விதமாய் நிலை யர்க்க வேண்டுமென்பதையும் பிரகஸ்பதிபகவான் தேவேந்திரனுக்கு அருளிச் ய்த உலோகாயுத சம்மதமுமான விஷயங்கள் அமைந்துளது இன்னும் அகால ர்க்கையால் வரும்கெடுதியும் இதைபோன்ற அதியபெரிய மர்மங்கள் நமது நூலில் லிய செந்தமிழ் நடையில் பிரசுரித்திருக்கின்றனம். கண்களை கவரும் அழகிய சித் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 1 0 0

பூலோகரகசியம் எனும் மதிமோசக் களஞ்சியம்.

முதல் பாகம்.

இப்பிரபஞ்சத்தில் நடக்கும் சகலவித மான மோசங்களுக்கு உட்படாமல் இருப் பதற்கும் சன்மார்க்க வழியில் நடந்து கொள்வதற்கும் நமது செல்வத்தை விரு செய்து கொள்வதற்கும் பூலோக அநுபவங்களை நன்ருய் தெரிந்து கொள் வதற்கும் பெண்டுகள் பிரர்வஞ்சக சொ லை நோவு திருப்பதற்கும் போலி மந்தி ரங்களை நம்பா திருப்பதற்கும் உண்மை ய நன்ருய் கண்டு உணர்வதற்கும் 141 மோசங்களும் அடங்கியது படங்களும் ட்டேகளும். விலை ரூ. 1-0-0

ஆகாயப்புளுகன்.

விலை அணு 6

அவுட்டுச் சிரிப்பு.

விலை அணு 6.

பூலோகரகசியம் எனும் மதிமோசக் களஞ்சியம்.

இரண்டாம் பாகம்.

கடவுள் வழிபாட்டின் மோசம் ஆலய தருமகர்த்தர் மோசம் ஜாதிமதப் போருட்ட மோசம் தாசிகளை ஏமாற்றும் வண்டிகார் மோசம் போலீஸ் சில அம்பக் சேவகர் மோசம் ஜப்பான் ஜர்மன் மோ சம் புருஷனுக்கு மனைவி செய் மோசம் பங்கு பங்காளிகள் மோசம் மனையாட்டி க்கு மணவாளன் செய் மோசம் மாமி மருமகளின் மோசம் இரவில் ஒட்டிகள் மோசம் இப்பாய்கள் மோசம் வக்கீல் லாயர் சுயராஜய ஜஸ்டிஸ் கட்சி மோசம் போலிக்கவிராயர் மோசம் மாடாதிபதி கள் அடாத மோசம் முனிசிபாலிட்டி யின் முழுமோசம் இதை போன்ற மோ சம் 120 அடங்கியது படங்களுடன்.

விலை ரூ 1-0-0

இப்னுடிஸம் மெஸ்மெரிஸ மென்னும் வாய்வுவேக

மனோவசிய சாஸ்திரம்.

ஜர்மெனி அமரிக்கா ஆங்கிலநாட்டார் அனுபவநூல்!

விசித்திர செய்கைகள் அரியும் சித்திர நூல்!

இதை வாசிக்க வல்லதால், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலங்களில் நடக் ம் ஒவ்வொரு விஷயமும் அறிந்து கொள்ளவும், நமது முன்னோர்களுடன் பேச ம், பிறர் கண்களுக்கு தோற்றபடாமல் மறைந்துக்கொள்ளவும் நித்திரை வருவிக்கல் நாய்களை நீக்கும்வகை, ஞான திருஷ்டி நோக்கம், முதலியவைகளை வாசித்து தெரிந்து கொள்ள கூடிய புத்தகம். விலை ரூ. 1-8-0.

ஷண்முகானந்த புத்தகசாலை,

32, நயினியப்ப நாய்க்கன் தெரு, பார்க்டவுன் மதராஸ்.